

# காதலின் சாரலிலே

திருமதி லாவன்யா

முதல் தரமான குடும்ப நாவல்

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : காதலின் சாரலிலே |
| ஆசிரியர் | : திருமதி லாவண்யா |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : பிப்ரவரி, 2012 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 512 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.200.00**

| | |
|---|---|
| னி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14. |


## முன்னுரை

நீண்ட நாட்களாகி விட்டன காதல் கதைகள் படித்து. வயதாகிறது ஒரு காரணமாக இருக்கலாம்.-நண்பர், ஆசிரியர் ஜகநாதன் தன் மருமகள் எழுதியது என 'காதலின் சாரலிலே' என்ற இக் கதையைப் படித்துப் பார்க்குமாறு கொடுத்தார். படித்துப் பார்த்தேன். ஒரு நல்ல, இனிய காதல் கதை!

இந்தப் புதினம் ஆசிரியரின் கன்னி முயற்சி. ஒரு அனுபவம் மிக்க எழுத்தாளரைப் போல தேர்ந்த யுக்திகளைக் கொண்டு கதை சொல்லியிருக்கிற நேர்த்தி மெச்சுதற்குரியது. கதையின் துவக்கத்தில் திருமணமாகாத ஐந்து நண்பர்கள் (கௌதம், பாலா, வசந்த், வருண், தியான்) உல்லாசப் பயணமாக ஊட்டி வருகின்றனர். கதையின் முடிவில் இதே நண்பர்கள் தத்தம் துணைவியர், குழந்தைகளுடன் அதே ஊட்டிக்கு வருகின்றனர். இடைப்பட்ட இரண்டரை ஆண்டுகளில் நடக்கும் சுவாரசியமான சம்பவங்களைச் சுவையாக விவரிக்கிறது இந்தப் புதினம்.

கௌதம் - வர்ஷனா, பாலா - தான்யா ஜோடிகளின் பரிசுத்தமான காதல், சோதனைகள், வேதனைகள், தடைகள், எதிர்ப்புகள், சமூகக் கட்டுப்பாடுகள் போன்றவற்றைத் தாண்டி ஜெயிக்கும் பொழுது நமக்கே காதலின் மீது மரியாதை ஏற்படுகிறது. நட்புக்காகக் காதலைத் தியாகம் செய்யும் கார்த்திக், விதவையைக் கைப்பிடிக்கும் கௌதம், மனநலம் பாதித்த மனைவியைக் கைவிடாத தியான், நகைச்சுவைப் பேச்சால் எல்லோரையும் சந்தோஷப்படுத்தும் பாலா - இப்படி கதாபாத்திரங்களும் நம் மனங்களைக் கவர்கிறார்கள். கதையில் அண்ணன் - தங்கை, தந்தை - தனயன் உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. பெண்மை வெகுவாகப் போற்றப்படுகிறது.

இப்புதினத்தின் ஆசிரியர் திருமதி லாவண்யா கோவை விவசாயப் பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்புப் படித்தவர். தேர்வில் ஒன்பது தங்கப் பதக்கங்கள் வென்றவர். கலிபோர்னியா பலகலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர். தற்போது அமெரிக்காவில் வசித்தாலும், தம் வேர்களை மறக்காமல் தமிழில் புதினம் படைத்திருப்பது பாராட்டுக்கு உரியது. அவருக்கு என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்!

குடும்பக் கதைகளுக்கு என்றே ஒரு பதிப்பகம் உண்டென்றால், அது அருணோதயம் பதிப்பகம் மட்டுமே. இதுவரை இப்பதிப்பகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட பெண் கதாசிரியர்கள் எல்லோரும் இன்று புகழின் உச்சியில் பிரகாசிக்கின்றனர். அந்த வரிசையில் திருமதி லாவண்யாவும் விரைவில் இடம் பெறுவார் என நம்புகிறேன். கறாரும் கனிவும் அன்பும் பொதிந்து கிடக்கும் அருணோதயம் அருணன் அவர்களால் வாழ்க்கையில் ஏற்றமும் புகழும் அடைந்தவர்கள் பலர். நான் உட்பட. இந்த வரிசையில் முதல் படைப்பான 'காதலின் சாரலிலே' நூலாசிரியை திருமதி லாவண்யாவின் படைப்பும் முதன் முதலில் 'அருணோதயம்' மூலம் வெளிவருகிறது. குட்டப்படுவது மோதிரக்கையால். வாழ்த்துக்கள்.

**மு.வேலாயுதம்**

விஜயா பதிப்பகம்

## பதிப்புரை

புதிய எழுத்தாளர்கள் பலர் உருவாவதற்கு வழிகாட்டி யாக காரணமாக இருந்தவர்கள் 'அருணோதயம்' தான் எனப் பலரும் பாராட்டுவதைக் கேட்டு மனம் மகிழ் கிறோம். அந்த வகையில் திருமதி லாவண்யா அவர் களையும் தமிழ் உலகிற்கு அறிமுகப் படுத்துவதிலே பெருமை கொள்கிறோம். இவரது எழுத்துக்கள், கதைப் போக்கு படிக்கப் படிக்க மிகவும் சுவையாக உள்ளது. நீங்களும் படித்து மகிழ்ந்து எழுதுங்கள்.

நாங்கள் வெளியிட்ட அனைத்து நூல்களுமே தர மானவை, மிக உயர்ந்தவை, வாசகர்களின் மனதைக் கவர்ந்தவை என்று பலரும் பாராட்டுவதை அறிந்து மகிழ்கிறோம்.

நல்ல எழுத்துக்கள் எங்கிருந்தாலும் வளர்த்து ஆளாக்கி மேலாக்குவதன் மூலம் அருணோதயமும் புகழ் பெற்றுத் திகழ்கிறது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். நல்ல தரமான எழுத்துக்கள் வளர்வதில் எங்கள் முயற்சி மேலும் மேலும் உற்சாகத்தோடு ஓங்கும்.

இவர்களை எனக்கு அறிமுகப்படுத்தியவர் புகழ் பெற்ற பதிப்பாளர், விற்பனையாளரான கோவை விஜயா பதிப்பக உரிமையாளர் பெரியவர் மு.வேலாயுதம் அவர்கள். அற்புதமாக விரிவாக முன்னுரை எழுதியுள்ளார். இவர் தமிழ் பேசும் உலகெலாம் அறியப்பட்டுப் புகழ் பெற்றவர். இவரது பணிக்கு எனது அன்பு வாழ்த்துக்கள்.

**- அருணோதயம் அருணன்**

# காதலின் சாரலிலே

1

"மனமெனும் நிலத்தை உழுது
நம்பிக்கை விதை விதைத்து
அன்பெனும் நீரூற்றி
பொறாமைகளைக் களைந்து
நட்பெனும் விளைச்சல் எடுப்போம்!"

ஊட்டி! உயிரியல் பூங்காவில் மலர்கள் வர்ணங் களை வாரி இறைத்துக் கொண்டும், மரங்கள் அதைத் தலையாட்டி ரசித்துக் கொண்டும் இருந்தன! அப்போது தான் உதித்த வானவில், இவற்றைப் பொறாமையுடன் பார்த்துக் கொண்டு வளைந்து நின்றது!

பூங்காவிற்கு வந்திருந்த அனைவரும், அந்த ரம்மிய மான தருணத்தை, அவரவர் மனதைப் பொறுத்து, சுவா சித்துக் கொண்டும், வாசித்துக் கொண்டும், நேசித்துக் கொண்டும் இருந்தனர்! அவர்களை எல்லாம் தொந்தரவு செய்யாமல், நாம், நம் கதையின் முக்கியமான ஐந்து

நண்பர்களைக் கவனிக்கச் செல்வோம். இவர்கள் ஐந்து பேரும் எவ்விதத் தொல்லைகளும், கவலைகளும் இல்லாமல் சந்தோசமாக மூன்று நாட்களைக் கழிக்க, உற்சாகத்துடன் ஊட்டிக்கு வந்திருக்கின்றனர்.

கௌதம், வருண் மற்றும் தியான் ஒன்றாகச் சென்னையில் பி.ஈ. படித்து, 'கேம்பஸ் இன்டர்வியூ'வில் தேர்ச்சி பெற்று ஒரு வருடம் பெங்களூருவில் வேலை செய்தனர். பின்னர் கௌதம், அவனின் நீண்ட நாள் கனவான எம்.பி.ஏ. படிக்க, வெளிநாட்டிலிருந்து வாய்ப்பு வர, வேலையை விட்டு விட்டுக் கிளம்பி விட்டான்.

கௌதம் மேற்படிப்பைத் தொடர அமெரிக்கா சென்ற பொழுதுதான், அங்கே வசந்தையும், பாலாஜியையும் சந்தித்து நண்பனானான். கௌதம் மற்றும் பாலாஜி எம்.பி.ஏ. படித்து முடித்து, இரண்டு வருடங்கள் அங்கேயே வேலையில் இருந்தவர்கள், இந்தியா திரும்பி ஒரு வருடமாகிறது. இவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து, கணினி மென்பொருள் நிறுவனம் ஒன்றைக் கோயம்புத்தூரில் நிறுவி, அதைக் கடந்த ஒரு வருடமாக, வெற்றிகரமாக நடத்திக் கொண்டு வருகிறார்கள். வசந்த், மேலும் சில மாதங்கள் வெளிநாட்டிலேயே இருந்துவிட்டுத் திரும்பியவன், தற்போது தன் தந்தையின் கட்டுமானத் தொழிலை, அவன் அண்ணன் மற்றும் அண்ணியுடன் சேர்ந்து, கவனித்துக் கொள்கிறான்.

இவர்களின் இந்த அவசரமான வாழ்க்கையிலிருந்து சில நாட்கள் விடுபட எண்ணி, மூன்று நாள் பயணமாக ஊட்டிக்கு வந்திருந்தனர். அது மட்டும் அல்லாது, வசந்துக்கும் கௌதமின் தங்கைக்கும், இன்னும் பதினைந்து நாட்களில் திருமணம் என்பதால், அவனின் திருமணத்திற்கு முன், 'பேச்சலர்ஸ்' மட்டும் எங்காவது போய்



வரலாம் என்று திட்டமிட்டு இவ்வாறு கிளம்பி விட்டனர். வருணும், தியானும் பெங்களூருவில், இன்னும் அதே பெரிய நிறுவனத்தில் தான் வேலையில் இருக்கின்றனர். இவர்களின் பயணம் பற்றி அறிந்து, அவர்களும் வந்து இணைந்து கொண்டனர்.

''அடடா! என்ன 'கலர்புல்'லா இருக்கு! இதை எல்லாம் பார்க்க ரெண்டு கண்கள் பத்தாதே!'' என்றான் பாலாஜி (நண்பர்களுக்குப் பாலா). அவன் அழகாக, நெளிந்து, வளைந்து நிற்கும் வானவில்லைத் தான் அப்படிச் சொல்கிறான் என்று நினைத்து வருணும், தியானும் தலையாட்டி ஆமோதித்தனர்.

அதைக் கேட்ட வசந்தோ, ''ஏன்டா, இப்படி திருப்பதி சாமி பெயரை வச்சுக்கிட்டு இந்த அழும்பு பண்ணற? நீ அடங்கவே மாட்டியா?'' என்று எரிச்சலைக் காட்டினான். 'ஏன்?' என்பது போல வருணும், தியானும் வசந்தைப் பார்க்க, கௌதம், இவர்கள் பேசுவதைக் கேட்டுப் புன்னகையைச் சிந்திக் கொண்டிருந்தான்.

''அவன் கண்கள் எதைப் பார்க்குதுன்னு பாருங்க. பொண்ணுங்களைப் பார்த்துத் தான் இப்படி ஜொள்ளு விடறான்!'' என்று அவர்களுக்கு விளக்கினான் வசந்த்.

''இவ்வளவு நாள் நாம் அமெரிக்காவில் இருந்தோம். அங்கே எல்லாம் இப்படி தமிழ்ப் பொண்ணுங்களைப் பார்க்க முடிஞ்சதா? எனக்கு இப்பத்தானே சந்தர்ப்பம் கிடைச்சது. அதுதான் பார்க்கறேன். இப்படி அழகா, அடக்க ஒடுக்கமா, பொண்ணுங்களைப் பார்த்து எவ்வளவு நாள் ஆச்சு!'' என்றான் பாலா பதிலுக்கு.

''ஆமா! அதுதான் வந்து ஒரு வருஷம் ஆச்சே. கடந்த ஒரு வருஷமா இதையேதான் சொல்லிகிட்டு இருக்க.

நீ அமெரிக்காவில இருந்தப்போ, 'வெள்ளைக்கார பிகர்'களை இந்தியாவிலா பார்க்க முடியும்? 'ப்ளீஸ்'டா... அதனாலதான் இங்க பார்க்கறேன்!'னு சொன்ன. இங்க வந்து தமிழ்ப் பொண்ணுங்களைப் பார்த்து நாள் ஆச்சுன்னு சொல்லி வெறுப்பேத்தற. எங்களுக்குன்னு வந்து பிரெண்டா சேர்ந்தியே. எங்க குணத்துல பாதி, இல்லை இல்லை, ஒரு பத்து சதவிகிதமாவது உனக்கு இருக்கா?'' என்று நொந்து கொண்டான் வசந்த்.

''அஞ்சு விரலும் ஒரே கையிலதான் இருக்கு. ஆனால், அஞ்சும் அஞ்சு விதமா இல்லையா? ஒரே மாதிரி இருந்தா பார்க்கவும் நல்லா இருக்காது. அது நமக்கு உபயோகமும் படாது. அது மாதிரிதான் நாமெல்லாம் இப்படி ஒரே மாதிரியா இருந்தா, போர் அடிக்காது? அதைத்தான் நான் கொஞ்சம் மாத்த முயற்சி பண்ணறேன். என்னைப் பாராட்டறதை விட்டுட்டு, உனக்கு ஏன்டா பொறாமை?'' என்றான் பாலா.

வசந்த் பதிலளிக்கும் முன், அவனே விடாமல் தொடர்ந்தான். ''உனக்கு என்னனா, சும்மா சும்மா கோபம் வருது. கௌதம் என்னடான்னா, புத்தருக்கு மறுபிறவி மாதிரி அமைதியா இருக்கிறான். நான் இப்படிக் கலகலன்னு இருக்கறதைப் பார்த்து உனக்குப் பொறுக்கலையா? உனக்கு வேணும்னா, நீயும் என்னை மாதிரி இரு. நீயும் பொண்ணுங்களைப் பாரு, கிண்டல் பண்ணு. நான் என்ன வேண்டாம்னா சொன்னேன்?'' என்று அவன் செய்கைக்கு விளக்கம் அளித்து, வசந்துக்கு ஆலோசனையும் வழங்கினான்.

அவனைப் பார்த்து முறைத்த வசந்த், ''இவன் சொல்லறதைக் கேளு கௌதம். இவனை நல்லா நாலு சாத்துச் சாத்தணும். இன்னும் பதினைந்து நாள்ல எனக்குக் கல்யாணம் ஆகப் போகுது. அதுவும் பொண்ணோட அண்ணனான நீ என் பக்கத்துல இருக்கும் போதே எப்படி எல்லாம் பேசறான் பாரு!'' என்று கௌதமிடம், பாலாவைப் பற்றிக் குறைப்பட்டுக் கொண்டான்.



''இது என்னடா உலகம், மகா அநியாயமா இருக்கு! உனக்குக் கல்யாணம்ன்னா நான் பொண்ணுங்களைப் பார்க்கக் கூடாதா? இல்லை, கல்யாணம் ஆகப் போறவங்கதான் பொண்ணுங்களைப் பார்க்கக் கூடாதா?'' என்று கண்ணடித்து, வசந்தை மேலும் வெறுப்பேற்றினான் பாலா.

''இவன் வாயை மூட முடியாது. வாயாடா அது? அகண்ட கால்வாய். அப்படியே ஜொள்ளு கரை புரண்டு ஓடுது!'' என்று மீண்டும், வசந்த் தன் எரிச்சலைப் பாலாவிடம் காட்டினான்.

உடனே பாலா, ''அப்புறம் என்னடா? பசங்க எல்லாம் சேர்ந்து கல்யாணத்துக்கு முன்னாடி, தனியா ஒரு பெங்களூரு இல்லை பாண்டிச்சேரின்னு போறதை விட்டுட்டு நல்லா 'ஹனிமூன் ஸ்பாட்'டைப் பிடிச்சீங்க பாருங்க, உங்களைச் சொல்லணும். ஏதோ இங்க வந்து என்னால செய்ய முடிஞ்சதைச் செய்யறேன்!'' என்றான் சலிப்புடன்.

வசந்தும், பாலாவும் இப்படித்தான் அடிக்கடி செல்லமாகச் சண்டை போட்டுக் கொண்டிருப்பார்கள். கௌதம் அதை ஒரு புன்சிரிப்புடன் கேட்டுக் கொண்டிருப்பான். சில சமயத்தில் அவனும் இடையிட்டுத் தன் கருத்துக்களைச் சொல்வான்.

பாலா சொன்னதைக் கேட்டு, வாயைத் திறந்தான் கௌதம். ''உன்னைக் கோவையிலேயே, 'வ.உ.சி. பார்க்'குக் கூட்டிட்டுப் போயிருக்கணும். இங்க போய்க் கூட்டிட்டு

வந்தோமே, எங்களைச் சொல்லணும். ஏன்டா பாலா, இயற்கையை ரசிக்க வேண்டியதுதானே? அது என்ன எப்பப் பார்த்தாலும் பொண்ணுங்களையே பார்த்துட்டு, கிண்டல் பண்ணிட்டு! நாங்க எவ்வளவு சொன்னாலும், உனக்குப் புரியாது? இரு, ஒரு நாளுன்னாலும் ஒரு நாள், யார் கிட்டயாவது செமத்தியா 'டோஸ்' வாங்கப் போற. அப்பப் புரியும்!'' என்று பாலாவுக்கு நல்லாசி வழங்கினான்.

''வருணும், தியானும் உன்னைப் பத்தி என்ன நினைப் பாங்கன்னு கூட யோசிக்க மாட்டியாடா? உன்னால எங்க மானம் போகுது!'' என்று தலையில் அடித்துக் கொண்டான் வசந்த்.

பாலாவும், ''நானும் இயற்கையைத்தான் ரசிக்கிறேன். பெண்கள் எல்லாம் இயற்கையோட படைப்புகள் ஆச்சே. இல்லேன்னு சொல்லுங்க பார்க்கலாம்?'' என்றான் விடாமல். பின், ''இதுக்குத்தான் நல்லவங்க கூட கூட்டு வச்சுக் கணும். நீங்க இங்கியே கிடங்க, நான் போய் இயற்கையை ரசிச்சிட்டு வரேன்!'' என்று அங்கிருந்து கிளம்பினான்.

இவ்வனைத்தையும் கேட்டுக் கொண்டு இருந்த வருணும், தியானும், பாலாவை நினைத்துச் சிரித்துக் கொண்டிருந்தனர். பாலா இருக்கும் இடத்தில் கலகலப்புக்குக் கொஞ்சம்கூடப் பஞ்சம் வராதபடி பார்த்துக் கொள்வான். 'வாழ்க்கை, சிரித்து வாழவே!' என்று அடிக்கடி சொல்லி, கவலைப்படும் நண்பர்களை உற்சாகப்படுத்தி, சில சமயங்களில் வாங்கியும் கட்டிக் கொள்வான். ஆனால், அவன் செய்வதை மட்டும் நிறுத்தவே மாட்டான்.

என்ன தான் அவன் பெண்களைக் கிண்டல் செய்தாலும், அவனுக்கு, அவன் அகராதியில் பிடிக்காத வார்த்தை, 



'திருமணம்.' திருமணம் செய்பவர்களை எல்லாம் கிண்டல் செய்து, சிறைத் தண்டனை அனுபவிக்க அவசரப்படுவதாகவும், திருமணத்தினால் அவர்கள் சுதந்திரம் பறிக்கப் படுவதாகவும், உயர்ந்த(?) தத்துவங்களை அள்ளி வீசிக் கொண்டிருப்பான். இன்னும் சில மாதங்களில், அவனே இந்தப் பந்தத்தில் சிக்கிக் கொள்ள விரும்பப் போவதை அறியாமல்! இவன் உளறல்களையெல்லாம், அவன் நண்பர்கள் காதிலேயே போட்டுக் கொள்ள மாட்டார்கள் என்பது வேறு விஷயம்.

பாலா என்னவோ செய்து 'லொள்'ளட்டும் என்று மற்ற நான்கு பேரும் வேறு கதை பேச ஆரம்பித்தனர். எதை எதையோ பேசிக் கடைசியில் தங்களுடன் படித்தவர்கள் ஒவ்வொருத்தரைப் பற்றியும் கௌதம், வருணிடமும், தியானிடமும் விசாரித்துக் கொண்டிருந்தான்.

''பேசாம கூட படிச்சவங்களைப் பற்றி எல்லாம் 'ஆல்ப பெடிகல்' வரிசையில கேட்க வேண்டியதுதானே? இப்படி அங்க ஒண்ணு இங்க ஒண்ணுன்னு கேட்டா, அப்புறம் யாராவது 'லிஸ்ட்'ல இருந்து விடுபட்டுப் போயிடுவாங்க. இல்லேன்னா, அரவிந்த்சாமி பாடற மாதிரி 'ஓடக்கார மாரிமுத்து, ஓட்டவாயி மாரிமுத்து'ன்னு, பாட வேண்டியதுதானே?'' என்று இடையிட்ட பாலாவின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்த வசந்தும், கௌதமும் முறைத்தனர்.

வருணும், தியானும் விடாமல், ''எங்களில் யாரு ஓடக்கார மாரிமுத்து, யாரு ஓட்ட வாயி மாரிமுத்து?'' என்று கேட்டுப் பாலாவை அசடு வழிய வைத்தனர்.

வசந்தோ, ''பாட்டுல கூட பொண்ணுங்களைப் பத்தி விசாரிக்கிற பாட்டைத்தான் உதாரணமா சொல்லணுமா? நீ திருந்தவே மாட்டியா?'' என்று கேட்டான்.

கௌதம், ''ஏன்டா பாலா, நீ இன்னும் இங்க இருந்து கிளம்பலையா?'' என்று அவன் பங்கிற்கு ஒன்றைக் கேட்டான்.

மற்றவர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் அளிக்காமல், கௌதமின் கேள்விக்கு மட்டும் பதிலளிக்கும் விதமாக, ''ம்ம்ம்... இயற்கையை ரசிக்கறேன்னு சொன்னா அதையும் திட்டறீங்க. சரி, நல்ல புள்ளையா இருக்கலாம்ன்னு நினைச்சு, நீங்க பேசறதைக் கேட்டாலும் திட்டறீங்க. நல்ல பையன்களுக்கே காலம் இல்லைடா சாமி!'' என்று வானத்தை அண்ணாந்து பார்த்துச் சொன்னான் பாலா.

அவனின் பதிலைக் கேட்டு, மறுபடியும், அவன் என்னமோ செய்து கொள்ளட்டும் என்று அவனைத் தனியே விட்டு விட்டு, அவர்கள் தங்களின் பேச்சைத் தொடர்ந்தனர். கௌதம், அவர்களுடன் படித்த வர்ஷனா என்ற பெண்ணைப் பற்றி விசாரித்தான். அவர்களும், வர்ஷனாவிற்குத் திருமணம் நடந்ததற்குப் பின், அவளிடம் தொடர்பே இல்லை என்றனர். கௌதமும், ''நானும் அவளுக்கு 'மெயில்' அனுப்பிப் பார்த்தேன். அவள் 'செல் நம்பர்'லேயும் தொடர்பு கொள்ள முயற்சித்தேன். ஆனால், ரெண்டுமே வேலை செய்யலை!'' என்றான் வருத்தத்துடன்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த பாலா, ''அவங்க அவங்க பொண்ணுங்களை மடக்க 'பேஸ்புக்', 'ட்விட்டர்'ன்னு போயிட்டு இருக்காங்க. நீங்க இன்னும் புறா விடும் தூது மாதிரி, கூடப் படிச்ச பொண்ணோட நம்பர் கண்டு பிடிக்க முடியலை, 'ஈமெயில்' வேலை செய்யலைன்னு, சின்னப் புள்ளைத்தனமா, காரணம் சொல்



லிட்டு இருக்கீங்க. நீங்க எல்லாம் இன்னும் கற்காலத்துல தான் இருக்கீங்க!'' என்று கிண்டலடித்தான்.

அதற்கு வருண், ''வேலை செய்யற இடத்துல இந்த மாதிரி இணைய தளத்தை எல்லாம் தடை செஞ்சிடுவாங்க. வீட்டுக்கு வந்து 'கம்ப்யூட்டர் ஆன்' செஞ்சு, 'நெட் கனெக்ட்' பண்றதுக்குள்ளேயே, மின்சாரம் தடைப்பட்டு, 'நெட்' வேலை செய்யாம, கடைசியிலே பண்ண வேண்டிய வேலை செய்யறதுக்குள்ள, அவங்கவங்க பசங்களே 'காலேஜு'க்குப் போயிடுவாங்க!'' என்று தன் ஆற்றாமையைத் தெரிவித்தான்.

அதைக் கேட்டுச் சிரித்த கௌதம், ''அது மட்டுமில்ல பாலா. இங்க எல்லாப் பொண்ணுங்களும் கல்யாணம் ஆனவுடனே, அவங்களுக்குக் குடும்பப் பொறுப்பு வந்து, எல்லாத்தையும் கவனிச்சிட்டு குடும்பத்துக்காகக் கஷ்டப்பட்டு உழைக்க ஆரம்பிச்சிடறாங்க. அதுல சில பேர் மட்டும்தான் அவங்களுக்காகக் கொஞ்ச நேரம் ஒதுக்குவாங்க. நிறையப் பேர் அவங்களுக்குன்னு நேரம் ஒதுக்க மாட்டாங்க!'' என்று விளக்கினான்.

அதற்கு வசந்த், ''ரொம்ப சரியாச் சொன்ன, கௌதம். இந்த பாலா, இப்படித்தான் ஏதாவது 'லொட லொட'ன்னு சொல்லிட்டே இருப்பான். இவனை நான் எங்காவது தள்ளிகிட்டுப் போறேன். நீங்களே ரொம்ப நாள் கழிச்சு இப்போதான் பார்க்கறீங்க. கொஞ்ச நேரம் இவன் தொல்லை இல்லாம பேசிக் கொண்டு இருங்க!'' என்று கூறிப் பாலாவின் கையைப் பற்றித் தரதரவென்று இழுத்துச் சென்றான்.

அவர்கள் சென்றபின், சிறிது நேரம் மௌனமாக இருந்த கௌதம், ''கார்த்திக்கும் இப்போ நம்ம கூட இருந்திருந்தா

எவ்வளவு சந்தோசமா இருந்திருக்கும்!'' என்று பெரு மூச்சு விட்டான்.

''ஆமாம் கௌதம்! ஆனால், என்ன பண்ண முடியும்? எதுவுமே நம்ம கையில இல்லையே. நீ இன்னுமா நடந்ததையே நினைச்சிட்டு இருக்க?'' என்றான் வருண்.

''எப்படிடா நடந்ததை மறக்க முடியும்? நினைச்சாலே எனக்கு மனசு வலிக்குது!'' என்று சற்று நேரம் அமைதி யாக இருந்தான் கௌதம். வருணும், தியானும் அவனின் இந்த அமைதியை உடைக்க, தங்கள் வேலை அனுபவங் களைப் பற்றிப் பேசிச் சிரித்து, எனப் பல வழிகளில் போராடிக் கடைசியில் வெற்றியும் பெற்றனர்.

அதன் பின் கால நேரம் தெரியாமல், அவர்கள் மூன்று பேரும் பல இனிமையான நினைவுகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது, அவர்கள் உட்கார்ந் திருந்த இடத்திற்கு அருகில் ஒரு பந்து உருண்டு வந்து விழுந்தது. அதைக் கையில் எடுத்துக் கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தான் கௌதம். ஒரு மூன்று வயதுச் சிறுமி, கௌதமிடம் சென்று, 'வாங்குவதா, வேண்டாமா?' என்று யோசித்தவாறே, முகத்தில் குழப்ப ரேகையுடன் நின்று கொண்டிருந்தாள்.

அவளைப் பார்த்துச் சிரித்த கௌதம், 'வேணுமா?' என்று பந்தை அவள் முன் நீட்டிச் சைகையினால் கேட் டான். அவளும், அவனையே பின்பற்றி, சைகையினா லேயே மெதுவாகத் தலையை மேலும் கீழும் அசைத் தாள். அதைப் பார்த்துச் சிரித்த கௌதம் அவளிடம், ''கிட்ட வந்து உங்க பெயரைச் சொல்லிட்டு இதை வாங் கிட்டுப் போங்க!'' என்றான்.

உடனே குடுகுடுவென்று ஓடிச் சென்று, ''என் பேரு நட்சத்ரா! தேங்க்ஸ்!'' என்று மொழிந்துவிட்டு, அவனிட



மிருந்த பந்தைப் பிடுங்காத குறையாக வாங்கிக் கொண்டு, 'அம்மா'வென, அவளைத் தேடிக் கொண்டு வந்த பெண்ணை நோக்கி ஓடினாள்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த கௌதமின் கண்கள் மலர்ந்து, வாய் ''வர்ஷனா'' என்று முணுமுணுத்தது. அவன் முணுமுணுப்பைக் கேட்டுத் திரும்பிய வருணும், தியானும் ஆச்சர்யமடைந்தார்கள். ஏனெனில், இவர்கள் சற்று முன் பேசிக் கொண்டிருந்த அதே வர்ஷனா்தான், நட்சத்ராவின் அம்மா. வர்ஷனாவோ, இவர்களை எல்லாம் கவனிக்காமல், காரியமே கண்ணாகத் தன் குழந்தையைக் கொஞ்சியவாறே அவளை அள்ளிக் கொண்டு வந்த வழியே திரும்பி நடக்க ஆரம்பித்தாள். வருண் அவள் பெயரை உரக்க அழைத்த பின்புதான் இவர்களைத் திரும்பிப் பார்த்தவள், அதிர்ந்தாள். உடனே முகத்தைச் சரி செய்து கொண்டு, அவர்களைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

அதற்குள் நண்பர்கள் மூவரும் வர்ஷனா அருகில் சென்று, ''உனக்கு நூறு ஆயுசு வர்ஷனா. இப்போதான் கொஞ்ச நேரத்துக்கு முன்னால் உன்னைப் பத்தி பேசிக் கொண்டிருந்தோம்!'' என்றான் தியான். இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே வசந்தும், பாலாவும் அந்த இடத்திற்குத் திரும்பி வந்தனர்.

கௌதம், தியான் மற்றும் வருணைப் பார்த்து, ''உங் களை எல்லாம் இங்கே சந்திப்பேன்னு சத்தியமா நான் நினைக்கக் கூட இல்லை. எனக்கு சந்தோசமா இருக்கு!'' என்ற வர்ஷனாவைப் பார்த்த கௌதம், மனதினுள், 'இவ ளது சந்தோசம், இவள் கண்களை எட்டவில்லையோ?' என்று ஒரு நொடி நினைத்தான். பின், 'அனாவசியமாக எதையும் கற்பனை பண்ணக்கூடாது,' என்று அவசரமாகத் தலையைக் குலுக்கிக் கொண்டு, ''எங்களுக்கும்தான்.

என்ன ஒரு ஸ்வீட் சர்ப்ரைஸ்! நட்சத்ரா உன்னோட பொண்ணா? ரொம்ப அழகா, செம ஸ்வீட்டா இருக்கிறா!'' என்று அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

அவர்கள் ஒருவரை ஒருவர் நலம் விசாரித்து, கௌதம், வசந்தையும், பாலாவையும் அவளுக்கு அறிமுகப் படுத்தினான். அவளும் ஊட்டிக்குத் தன் அண்ணனைப் பார்க்க வந்ததாகவும், இன்னும் ஒரு மாதத்தில் ஊட்டியிலிருந்து சென்னைக்குக் கிளம்பப் போவதாகவும் தெரிவித்தாள்.

கௌதம், தன் தங்கையின் திருமணம் பற்றிக் கூறி, அவளைக் கண்டிப்பாகக் குடும்பத்துடன் திருமணத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்தான். அவளும் வருவதாகக் கூறி விடைபெற்றாள். அவள் செல்லும் முன், கைபேசி எண்ணைப் பரிமாறிக் கொண்டார்கள். நட்சத்ராவும், அவர்களுக்கு அழகாக 'டாட்டா' காட்டிவிட்டுத் தன் தாயுடன் கிளம்பினாள்.

அவர்கள் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்த கௌதமின் மனதினுள், ஏதேதோ எண்ணங்கள் வலம் வரத் தொடங்கின. 'நம்மை ஏன் பெயருக்குக் கூட இவள் வீட்டுக்கு அழைக்கலை?' என்று நினைத்தான். 'மறுபடியும் ஏன் இந்த வேண்டாத ஆசைகள்?' என்று தன் மனதை அடக்கிக் கொண்டு, பாலாவைப் பார்த்து, ''ஏன்டா, இவ்வளவு சீக்கிரமா வந்துட்ட? இயற்கையை ரசிக்கறது எல்லாம் முடிஞ்சதா?'' என்று சீண்டினான்.

பாலாவோ, ''நான் கூட நீங்க என்னோட 'பர்சனாலிட்டி' கூட போட்டி போட முடியலன்னுதான் என்னை அந்தப் பக்கம் அனுப்பிட்டு, இங்க யாருக்கோ 'ரூட்' போடறீங்கன்னு நினைச்சு, பார்க்க வந்தேன். வந்ததுக்கு அப்புறம்தானே தெரிஞ்சது, அவங்க யாருன்னு. ப்ச்!



பேசாம அங்கேயே இருந்திருப்பேன்!'' என்றான் முகத்தைச் சோகமாக வைத்தவாறே.

வசந்த், அவன் முதுகில் ஓங்கி ஒரு அடி வைத்து, ''ஒரு நாளாவது பேசாம இரேன்டா. உனக்குப் புண்ணியமாப் போகும்!'' என்றான். அவன் அடித்த இடத்தைப் பாலா 'ஸ்டைலாகத்' தூசு தட்டுவது போல தட்டிவிட்டு, ''சரி! இருக்கிறேன். ஆனா, ஒரு நிபந்தனை. நீ மதுவை, இன்னும் ஒரு வருஷம் கழிச்சுத் தான் கல்யாணம் பண்ணிக்கணும். அதுக்கு நீ ஒத்துகிட்டா, இதற்கு நான் ஒத்துக் கொள்கிறேன்!'' என்றான் கண்ணடித்து.

''ஆகா! என் தலையிலேயே கை வைக்கிறியே. நீ பேசினா எனக்கு என்ன, பேசலேன்னா எனக்கு என்ன? உனக்காக நான் ஏன் என்னோட கல்யாணத்தைத் தள்ளி வைக்கணும்? நீ எக்கேடோ கெட்டுப் போ!'' என்று அவன் எரிச்சலுடன் கூற, மற்ற அனைவரும் சிரித்தனர்.

இவர்கள் அனைவரும், இனிமையான ஞாபகங்கள் என்று பிற்காலத்தில் நினைவு கூரும் பொழுது, தங்கள் ஊட்டிப் பயணம் கண் முன் விரியும் அளவிற்குக் கலாட்டாவும், கிண்டலுமாகக் கழித்தனர். அதற்குப் பாலா மிகவும் துணை புரிந்தான் என்று சொல்லவும் வேண்டுமோ!

அவர்கள் ஊட்டிக்கு வந்த மூன்றாம் நாள் மதியம், கோவை திரும்பிச் செல்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த பொழுது, பாலா கார் ஓட்டுவதாகக் கூற, வசந்தும் கௌதமும் அலறினர்.

அதைக் கேட்டு வருண் சிரிக்க, தியான், ''அவன் ஓட்டறேன்னு சொன்னவுடனே ஏன் இப்படி அலறநீங்க? இதுக்கு ஏதாவது ஸ்பெஷல் காரணம் இருக்கா? நாங்களும் தெரிஞ்சுக்கலாமா?'' என ஆர்வத்துடன் கேட்டான்.

அவர்களும் பாலாவின், வீர, தீரப் பராக்கிரமச் செயல்களை எவ்விதத் தடங்கலும் இல்லாமல் அவிழ்த்து விட்டனர்.

முதலில் கௌதம் ஆரம்பித்தான். ''இவனுக்கு அமெரிக்காவில் முதல் தடவை 'ட்ரைவிங் லைசென்ஸ்' வாங்கப் போனப்ப இவன் பண்ணின கூத்து இருக்கே! இவனுக்கு வந்த 'இன்ஸ்பெக்டர்', இவன் கார் ஓட்டிக் காமிச்சு முடிச்சவுடன், ஆரம்பிச்ச இடத்துக்கே வந்து நடை பாதைக்குச் சமமா, நேரா காரை நிறுத்தச் சொன்னார். நம்ம பாலா என்ன பண்ணினான் தெரியுமா? அப்படியே அஜித்தாகத் தன்னை மனசுல நினைச்சுக்கிட்டு, 'ஸ்டைலா' போய்க் காரை நிறுத்தினான். எங்க நிறுத்தினான்னு நினைக்கறீங்க? தீ அணைக்கறதுக்குன்னு 'பயர் ஹைட்ரன்ட்' அதாவது ஒரு தண்ணீர்க் குழாய், மஞ்ச கலர்ல 'பெயிண்ட்' அடிச்சு இருக்கும். அதுக்குப் பக்கத்துல, பதினஞ்சு 'மீட்டரு'க்கு எதையும் நிறுத்தக் கூடாது. தீயணைப்புப் படை வந்தா, அவங்களுக்கு இடைஞ்சல் இல்லாம இருக்கறதுக்காக, அப்படி ஒரு சட்டம். ஆனா, இவன் காலியா இருக்கிற இடத்தை எல்லாம் விட்டுட்டு, 'கரெக்டா' அந்தக் குழாய்க்குப் பக்கத்துல போய் நிறுத்தினான்.

''இவன் நிறுத்தின உடனே, அவரும் காரைப் பின்னாடி எடுக்கச் சொல்ல, நம்ம தலைவரும் அப்படியே பின்னாடி எடுத்து, நடைபாதை மேல ஏத்தி, அந்த 'பயர் ஹைட்ரன்டை' இடிச்சி, அதுல இருந்து தண்ணி அப்படியே பிச்சிகிட்டு வந்து காரை எல்லாம் அபிசேகம் பண்ணிடுச்சு. இதைப் பார்த்துட்டு இருந்த எங்களுக்குச் சிரிப்புத் தாங்கலை. அந்த 'இன்ஸ்பெக்டரு'க்கு எப்படி இருந்திருக்கும்ன்னு நினைக்கறீங்க? இவன் பண்ணின கூத்துல இவனுக்கு 'லைசென்ஸ்' கிடைக்கலைங்கறது ஒரு பக்கம்



இருக்க, நாங்க காரைச் சரி பண்ண தண்டச் செலவு வேற செஞ்சோம்!'' எனக் கூற, பாலாவைத் தவிர்த்து மற்றவர்கள் கைகொட்டிச் சிரித்தனர்.

பாலாவோ முகத்தை அழுவது போல வைத்துக் கொண்டு, 'இந்தப் பூனையும் பால் குடிக்குமா?' என்ற பாவனையில், அவர்களைப் பாவமாகப் பார்த்தான்.

கௌதம் நிறுத்தியவுடன், வசந்த், ''அத்தோட விட்டானா? அடுத்த தடவையும் போனப்பவும் இதே மாதிரி வேற ஒரு கூத்து பண்ணினான். முன்ன மாதிரியே கடைசியில் காரை நிறுத்தச் சொன்னவுடனே, இவன் பாட்டுக்கு, 'நாம் தான் ஒரு தப்பும் பண்ணலை'யேன்னு, காரை நிறுத்திட்டு இறங்கிட்டான். இவன் நிறுத்தின இடம் கொஞ்சம் சரிவான இடம். அதனால் கார் முன்னாடி நகர ஆரம்பிச்சுடுச்சு. அதைப் பார்க்காத இவனோ, எங்களைப் பார்த்து சந்தோசமா கையை ஆட்டி, கட்டை விரலை உயர்த்திக் காண்பிச்சான். நாங்க பின்னால பாருன்னு சொன்னதுக்கு அப்புறம்தான், திரும்பிப் பார்த்துத் திரு திருன்னு முழிச்சான்.

''இவன் நிறுத்தினப்போ கையில போடற 'பிரேக்' (Hand Brake) போடாம காரை நிறுத்திட்டு வந்துட்டான். சரிவான இடம் என்கிறதுனால, கார் உருள ஆரம்பிச்சுடுச்சு. அதை விடக் கொடுமை, இது எல்லாம் நடக்கும் போது, அந்த 'இன்ஸ்பெக்டர்' இன்னும் உள்ளேதான் உட்கார்ந்துட்டு இருந்தார். கார் நகர்ந்ததைப் பார்த்து, அவரே 'பிரேக்'கை போட்டுட்டார். அப்பவும் இவனுக்கு 'லைசென்ஸ்' கிடைக்கல. இப்படி பல தடவை கஜினி முகமது மாதிரி படையெடுத்துத்தான், இவன் கார் ஓட்டுறதுக்கு 'லைசென்ஸ்' வாங்கினான். அதனால, இவன்

கார் ஓட்டறேன்னு சொன்னாலே, எங்களுக்கு அப்படியே குலை எல்லாம் நடுங்கும்!" என்று கண்ணடித்தான்.

"அப்புறம் ஒரு வழியா 'லைசென்ஸ்' வாங்கி, ஒரு தடவை வெளியே போகும்போது பாலா ஓட்டிட்டு வந்தான். நாங்க நண்பர்கள் நிறையப் பேர் சேர்ந்து போனதால கொஞ்சம் பெரிய காரை வாடகைக்கு எடுத்தோம். அதை ஓட்டறேன் பேர்வழின்னு ஓட்டிட்டுப் போய் ஒரு மேடான 'சிக்னல்'ல நிறுத்தி, மறுபடியும் எடுக்கும் போது, இவன் 'கியர்' மாத்தறதுக்குள்ள கார் பின்னாடி போக ஆரம்பிச்சுடுச்சு. எங்க காருக்குப் பின்னாடி இருந்தவங்க 'ஹாரன்' அடிச்சு எங்க மானத்தை வாங்க, அப்புறம் ஒரு வழியா கிளப்பிட்டுப் போனான். அதிலிருந்தே இவன் கிட்ட நாங்க கொஞ்சம் ஜாக்கிரதையாதான் இருக்கோம்!" என்று அவர்கள் அலறிய காரணத்தை மிகத் தெளிவாக விளக்கினான் கௌதம்.

"இவனைக் கார் ஓட்டச் சொன்னா, முன்னாடி போக வேண்டிய இடத்துல பின்னாடி போவான், பின்னாடி போக வேண்டிய இடத்துல முன்னாடி போவான். நாம வேற, மலைப்பிரதேசத்துல இருக்கோம். ஒழுங்கா வீடு போய்ச் சேர வேண்டாமா? அதனால நானோ இல்லை கௌதமோ காரை ஓட்டறோம்!" என்று கிண்டலாக முடித்தான் வசந்த்.

அதன் பின் தியானும், வருணும் பாலாவைக் கிண்டலும், கேலியும் செய்து ஒரு வழி செய்து விட்டனர். இதற்கெல்லாம் நம்ம தலைவர் அடங்கிட்டா, அப்புறம் எப்படி?

அவர்கள் இப்படியே ஒவ்வொன்றும் பேசிக் கொண்டே மலையை விட்டு இறங்க ஆரம்பித்தனர். திடீரென்று பாலா, "இந்த வாகனங்கள் எல்லாம் 'ஹார்ன்' அடிக்கும் போது, அது ஏன் 'கி.. கி..' இல்லை 'பேம்... பேம்'ன்னு



சத்தம் போடுது? அது 'வீல்... வீல்..'ன்னு இல்ல, சத்தம் போடணும்?" என்று கேட்டான்.

அவன் என்ன சொல்ல வருகிறான் என்று அனைவரும் முகத்தில் ஒரு கேள்விக் குறியுடன் பாலாவைப் பார்க்க, அவனோ, "பின்னே இந்த கார், பஸ், லாரி, பைக் எல்லாத்துக்குமே 'வீல்' (Wheel) இருக்கே. அப்புறம் அது வீல் வீல்ன்னுதானே கத்தணும்," என்றவுடன் அனைவரின் முகங்களிலும் வந்த மாற்றத்தைச் சொல்லவும் வேண்டுமா?

பாலா சிறிது நேரம் ஒன்றும் பேசாமல் ஏதோ யோசனையுடன் அமைதியாக இருப்பதைப் பார்த்த கௌதம், "பாலா, என்ன ஆச்சு? ஏன் அமைதியா இருக்க?" என்று வாயை விட்டு மாட்டிக் கொண்டான்.

அதற்குப் பாலா, "இல்லை, தீவிரமா ஒரு விசயத்தைப் பத்தி யோசிச்சிட்டு இருந்தேன்," என்றவுடன், வசந்த் அவனிடம், "அப்படி என்ன தீவிரமா யோசிச்ச? சொன்னா நாங்களும் தெரிஞ்சுக்குவோம் இல்லையா?" என்று சிரித்தவாறே கேட்டான்.

"சரி! இப்போ நீங்க கேட்கறதுனாலதான் நான் சொல்றேன். அப்புறம் கடைசியில என்னைத் திட்டக் கூடாது," என்று ஆரம்பித்து, "இல்ல, காபித்தூளுல காபி போடலாம், டீத்தூளுல டீ போடலாம். ஆனா, மரத்தூளுல மரம் போட முடியுமா?" என்றவுடன், அனைவரும் அவனை முறைத்தனர். அவன் அத்தோடு நில்லாமல், "இட்லி மாவுல இட்லி செஞ்சு சாப்பிடலாம், தோசை மாவுல தோசை செஞ்சு சாப்பிடலாம். ஆனா, சத்து மாவுல சத்தைச் செஞ்சு சாப்பிட முடியுமா? இந்த தமிழ் மொழியைப் புரிஞ்சுக்கவே முடியலை. அதுதான் யோசிச்சிட்டு இருந்

தேன்,'' என்று தன் அறிவுப் புலமையை அனைவருக்கும் எடுத்துக் காட்டினான்.

அதற்குக் கௌதம், ''நீ சாப்பாட்ட பத்திப் பேசாத!'' என்று பாலாவிடம் சொன்னவன், ''இவன் சமையலிலே செம கெட்டிக்காரன். ஒரு தடவை நானும் வசந்தும் ஏதோ வேலை காரணமா வெளியில போயிருந்தோம். அப்போ இவன் அரிசி - பருப்பு சாதம் செஞ்சி வைக்கறேன்னு சொன்னான். நாங்களும் சரின்னு சொல்லிட்டு வேலையை முடிச்சு, செம பசியோட வீட்டுக்கு வந்து சாப்பிட உட்கார்ந்தோம். சாப்பாட்ட பாத்ததுக்கப்புறம் எங்களுக்கு கண்ணெல்லாம் கட்டிட்டு வந்துடுச்சு. என்னா, இவன் அரிசி - பருப்புச் சாதத்துல, பருப்பே போடாம செஞ்சு வச்சிருந்தான். அவன்கிட்ட, 'ஏன்டா போடலை?'ன்னு கேட்டதுக்கு, 'பருப்பெல்லாம் போடுவாங்களா என்ன?' என்று எங்களையே திருப்பிக் கேட்டான் பாருங்க... நொந்துட்டோம்!'' என்று தியாணிடமும், வருணிடமும் சொன்னான்.

அவர்கள் பாலாவைப் பார்த்துச் சிரிக்க, வசந்த், ''அதை விடக் கொடுமை இவன் ரசம் வச்சதுதான். நல்லா தண்ணியைக் கொதிக்க வச்சு அதுல நாலு 'ஸ்பூன்' ரசத்தூளைப் போட்டு கலக்கி வச்சிட்டான். நாங்க சாப்பிட்டுப் பார்த்து விட்டு, கேட்டப்போ, 'பின்னே, ரசத்தூள் அப்படின்னு தானே போட்டிருக்கு. தண்ணியைக் கொதிக்க வச்சு, தூளைப் போட்டா ரசம் கிடையாதா? அப்புறம் ரசம் எப்படி வைக்கறது?'ன்னு வேற கேட்டான். அப்போதிருந்து இவனைச் சமையலறைப் பக்கமே நாங்க விடறதில்லை!'' என்று மேலும், பாலாவின் நளபாகத் திறனை நண்பர்களுக்கு எடுத்துரைத்தான்.



அனைவரும் பாலாவைக் கிண்டலடிக்க, பாலா, ''நானா ஏதாவது சொன்னேனா? நீங்கதானே என்னைக் கேட்டீங்க. அதனாலதானே நான் வாயைத் திறந்தேன். இப்போ எதுக்கு என் தலையை உருட்டறீங்க?'' என்று முகத்தை உம்மெனத் தூக்கி வைத்துக் கொண்டான். ஆனாலும், அவன் தன் அறுக்கும் பணியைத் தொடர்ந்து செய்து கொண்டுதான் வந்தான்.

இப்படியே பாலா அவர்களைக் கத்தியில்லாமல் ரத்தம் வராமல் அகிம்சை முறையில்(?) அறுத்துக் கொண்டும், மற்றவர்கள் அவனை அனைகட்டி, கும்மியடித்து இம்சித்துக் கொண்டும், மலையை விட்டுச் சந்தோசமாக இறங்கினர். வரப்போகும் வாழ்க்கையின் சோதனைகளையும், போராட்டங்களையும் பற்றி அறியாமல்!

கோவை வந்தவுடன், வருணும், தியாணும் திருமணத்திற்கு முன்தினம் வருவதாகக் கூறி விடைபெற்றுச் சென்றனர். பாலாவும், ஈரோடிலிருக்கும் தன் தந்தையுடன் சில நாட்கள் தங்கிவிட்டு, மறுபடியும் அவரை அங்கிருந்து கோவைக்குக் கிளப்ப முயற்சி செய்யப் போவதாகவும், அலுவலகத்தில் ஏதாவது பிரச்சனை என்றால், அவன் உடனே கிளம்பி வந்து விடுவதாகவும் கூறி, அன்றே ஈரோடிற்குக் கிளம்பி விட்டான்.

பாலாவும், இங்கே கோவையில் அலுவலகம் ஆரம்பித்ததிலிருந்து தன் தந்தையைப் பல தடவை, பல விதங்களில் அவனுடன் வந்து இருக்குமாறு அழைத்துக் கொண்டு தான் இருக்கிறான். அவன் தந்தை வெங்கடேசன், தன் சொந்த மண்ணை விட்டு வரப் பிரியப்படவில்லை என்று கூறிவிட்டார். பாலாதான் கஜினி முகமது ஆயிற்றே! தன் தந்தையை வழிக்குக் கொண்டு வர மீண்டும், மீண்டும் படை எடுத்துக் கொண்டுதான்

இருந்தான்... அவர் அவரின் ஆசையைப் பற்றி அவனிடம் வெளியிடும் வரை.

## 2

“இதயத்தில் உன்னை
ஓவியமாய் வரைந்தேன்
சிற்பமாய்ச் செதுக்கினேன்
கவிதையாய் வடித்தேன்
ஆனால்
உன்னைப் பார்த்தவுடன்
என் இதயத்தைப்
பறி கொடுத்தேன்!
என்ன விந்தை!
இந்த விந்தைக்குப்
பெயர் தான் காதலோ?”

ஈரோட்டிற்குச் சென்ற பாலாவை வரவேற்ற அவன் தந்தை, அவன் ஊட்டி பயணத்தைப் பற்றியும் மற்ற நண்பர்களைப் பற்றியும் விசாரித்தார். அவருக்குப் பதிலளித்துவிட்டு, போய்க் குளித்துவிட்டு வந்தவன், இரவு உணவின்பொழுது மெதுவாகத் தன் தந்தையிடம் தான் நினைத்து வந்ததைப் பற்றிப் பேச ஆரம்பித்தான்.

“அப்பா! நான் சொன்னதைப் பத்தி யோசிச்சீங்களா? நீங்க ஏன் இங்க தனியா இருக்கீங்க? இவ்வளவு நாளும் நான் படிக்கறதுக்குன்னு வெளியூரிலும், வெளிநாட்டிலும் இருந்தேன். அதனால நீங்க தனியா இருந்தீங்க. இன்னும் என்னப்பா? என்கூட வந்து கோவைல இருங்க!” என்று தான் சொல்ல நினைத்ததை ஒருவாறாகச் சொல்லி முடித்தான்.



“நான் முன்ன சொன்ன மாதிரி என்னால இந்த மண்ணை விட்டு வர முடியாது. உன்னோட அம்மா வாழ்ந்த இந்த இடத்தை விட்டுட்டு நான் அங்க வந்து என்ன பண்ணப் போறேன்? அதுவுமில்லாம நம்ம எண்ணெய் ‘மில்’லை, நிலத்தை எல்லாம் யாரு பார்த்துக்கறது? அது எல்லாம் சரிப்பட்டு வராது!” என்று அவனிடம் முன்பே சொன்னதை நூறாவது தடவையாகச் சொன்னார் அவன் தந்தை.

“அப்பா! அதெல்லாம் பார்த்துக்கறதுக்கு ஒரு நம்பகமான ஆள் தேடிட்டு இருக்கேன். அவரைப் பார்த்துக்கச் சொல்லலாம். நீங்கதான் தினமும் வந்து நேர்ல பார்க்கணும்னு இல்லை. அப்பப்போ நானும் உங்க கூட வந்து எல்லாத்தையும் பார்த்துக்கிறேன். நான் கௌதம் கூட சேர்ந்து ‘கம்பெனி’ ஆரம்பிக்கும்போது என்ன சொன்னீங்க? நான் எங்க வேணும்னாலும் போய், என்ன வேணாலும் பண்ணலாம், கொஞ்ச நாள் கழிச்சு நீங்களும் வந்து என்னோட இருப்பீங்கன்னு சொன்னீங்களா இல்லையா? இப்போ எதுக்கு இப்படிப் பிடிவாதம் பிடிக்கறீங்க?” என்றான் விடாப்பிடியாக.

“அதைப் பத்தி அப்புறம் பேசலாம். நானும் உன்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்னு இருக்கேன். இப்போ பேசாம சாப்பிட்டுட்டுப் போய்த் தூங்கு பாலா. இவ்வளவு தூரம் பயணம் செஞ்சு வந்திருக்க. நாளைக்கு நிதானமாப் பேசலாம்,” என்று எழுந்து கை கழுவச் சென்றார்.

எடுத்தவுடனே அவனின் முயற்சி மறுபடியும் தோல்வி அடைந்தவுடன், “இந்த அப்பாக்கு எவ்வளவுதான் சொன்னாலும் புரியாது. நாளைக்குப் பேசிக்கறேன்,” என்று முணுமுணுத்தவாறே அவனும் கை கழுவச் சென்றான்.

மறுநாள் காலை தூங்கி எழுந்து நிதானமாகக் கீழிறங்கி வந்தவன், காலை உணவருந்திவிட்டுத் தன் தந்தையிடம்

சென்றான். அவர்கள் பண்ணையில் வேலை செய்யும் ஆட்களிடம் பேசிக் கொண்டிருந்தவர், தன் மகனைப் பார்த்ததும் அவர்களை அனுப்பிவிட்டு அவனிடம் பேசத் துவங்கினார்.

''பாலா! உன்கிட்ட நான் ஒரு நல்ல விஷயத்தைப் பத்திப் பேசணும். வா, அப்படியே நடந்துட்டுப் பேசலாம்,'' என்றார் தோப்பில் நடந்தபடி.

அவனும் ஆவலுடன், ''என்னப்பா நீங்க என்னுடன் வந்து இருக்கப் போறீங்களா?'' என்றான் அவசரமாக.

''நான் உன்னோட வந்து இருக்கிறேன். ஆனா, அப்படி நான் உன்கூட வந்து இருக்கணும்ன்னா, நீ உடனே கல்யாணம் பண்ணிக்கணும்,'' என்று ஒரு ஒப்பந்தத்தை அவன் முன் வைத்தார்.

''அப்பா! எனக்குக் கல்யாணம் நடக்கறதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்? போங்கப்பா! எனக்குத்தான் கல்யாணம் பண்ணற 'ஐடியா'வே இல்லைன்னு உங்களுக்குத் தெரியுமே!'' என்றான் சிறிது எரிச்சலுடன்.

''சம்பந்தம் இருக்கே. நீ கல்யாணம் ஆனவுடனே வரிசையா பேரக் குழந்தைகளைப் பெத்துக் கொடு. அவங்களை நான் கொஞ்சி விளையாடியும், பேரக் குழந்தைகளும் என்னை எட்டி எட்டி உதைக்கறதை அனுபவித்தும், நான் சந்தோசமா என்னோட மிச்சக் காலத்தைக் கழிச்சுடுவேன்!'' என்றார் குதூகலத்துடன்.

''ஐயோ அப்பா! உங்களுக்குக் குழந்தைங்க எட்டி எட்டி உதைக்கணும்ன்னா கோவைக்கு வாங்க. அங்க நம்ம வீட்டுக்குப் பக்கத்துல இருக்கிற குழந்தைங்க, நம்ம தோட்டத்துல இருக்கிற மரத்துல, பூவை எட்டி எட்டிப் பறிப்பாங்க. அவங்களைக் கேட்டாலே போதும், நல்லா



எட்டி எட்டி உதைப்பாங்க. அவங்களுக்குத்தான் நிறைய அனுபவம் இருக்கே. அதை விட்டுட்டு நான் ஏன் கல்யாணம் பண்ணிக் குழந்தை பெத்துக் கொடுக்கணும்? போங்கப்பா!'' என்றான் எரிச்சல் மறைந்து சிறு கேலியுடன்.

அவனிடம் இருந்த எரிச்சலைத் தத்தெடுத்துக் கொண்டவர், ''என்னடா கிண்டலா? நான் சொன்னது உன்னோட குழந்தைங்ககூட விளையாடறதைப் பத்தி. அடுத்த வீட்டுக் குழந்தைங்கதான் என்னை எட்டி உதைக்கணும்ன்னா, இங்க குழந்தைங்களுக்கா பஞ்சம்? நான் இங்கேயே இருந்துக்கறேன். நான் எதுக்கு உன்னோட வரணும்?'' என்று கூறி, அவனுக்குத் தான் சிறிதும் சளைத்தவர் இல்லை என்று நிரூபித்தார் அவன் தந்தை.

அவரின் எரிச்சலைப் பார்த்தவன், ''ஆனா, எனக்குத்தான் கல்யாணத்துல இஷ்டம் இல்லையே! எதுக்கு என்னைக் கட்டாயப்படுத்தறீங்க?'' என்று கெஞ்சலில் இறங்கினான்.

''இங்க பாரு, பாலா. உனக்கும் இருபத்தாறு வயசாயிடுச்சு. நான் உன்னோட இஷ்டத்துக்குப் படிக்க விடலையா? இல்லை, தொழில் தான் ஆரம்பிக்க விடலையா? எல்லாப் பெத்தவங்களும் ஆசைப்படறதைத்தானே நானும் ஆசைப்படறேன். ஒருவேளை, யாரையாவது மனசுல வச்சிருக்கியா? அப்படின்னா சொல்லு, உடனே பேசி முடிச்சுடலாம்.''

''மனசுல எல்லாம் யாரையும் வைக்கலைப்பா. ஒரு உருவத்தை வச்சுக்கற அளவுக்கு என்னோட மனசு அவ்வளவு பெருசு இல்லை. ரொம்பச் சின்னது!'' என்று மீண்டும் கேலியாகச் சிரித்தான் மகன்.

''உன்னோட மனசுல யாரும் இல்லேன்னா நான் சொல்லற பொண்ணையாவது கல்யாணம் பண்ணிக்கோ. நமக்குத் தூரத்துச் சொந்தத்துல ஒரு பொண்ணைக் கொஞ்ச

நாளைக்கு முன்னாடி பார்த்தேன். எனக்கும் பொண்ணைப் பிடிச்சிருந்தது. அவங்களையும் ரொம்ப நல்லாத் தெரியும். எந்தப் பிரச்சனையும் வராது. நீயும் வந்து பாரு. பேசி முடிச்சுடலாம். நீ கல்யாணம் பண்ணினதும் இங்க இருக்கிறதையெல்லாம் ஒழுங்கு படுத்திட்டு, கொஞ்ச நாள்ல உங்க கூட வந்துடறேன். எனக்குக் கல்யாணத்தைக் கண் குளிரப் பார்க்கணும்ன்னு ஆசையா இருக்கு, பாலா!'' என்றார் கண்கள் மின்ன.

''அவ்வளவுதானே. இதுக்குப் போயா இத்தனை பேசிக்கிட்டு? இன்னும் பத்து நாள்லதான் வசந்தோட கல்யாணம் வருதே. அதுக்கு வரப் போறீங்கதானே? வந்து அந்தக் கல்யாணத்தை நல்லா கண் குளிரப் பாருங்க. பத்தலேன்னா கண்ணுல வேணா அடிக்கடி 'ஐஸ் வாட்டர்' வச்சி துடைச்சிட்டுப் பாருங்க. அப்படியே 'ஜில்'லுன்னு இருக்கும்!'' என்று நகைத்தவாறே கூறி, அவன் தந்தைக்கு மீண்டும் எரிச்சலூட்டினான்.

அவன் சொன்னதைக் கேட்டு அங்கேயே நின்றவர், ''உனக்கு என்ன லொள்ளா? நான் உன்னோட கல்யாணத்தைப் பார்க்கணும்ன்னு சொன்னா, தமாசு பண்றியா? போதும் உன்னோட விளையாட்டு!'' என்று குரலை உயர்த்தினார்.

''அப்பா! நீங்க ஆசைப்படறதுக்காக எல்லாம் நான் கல்யாணம் பண்ணிட்டு காலம் முழுவதும் அவதிப்பட முடியாது. வேற பேசுங்கப்பா,'' என்றான். அவனும் தன் தந்தைக்குச் சமமாகக் குரலை உயர்த்தி.

''நானும் அம்மாவும் கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோசமா இல்லையா? நாங்க என்ன அவதிப்பட்டோம்? ம்ம்ம்... நமக்குத்தான் கொடுப்பினை இல்லை.



அவ பாதியிலேயே போயிட்டா. கொஞ்சம் யோசி,'' என்று அவனுக்குப் புரிய வைக்க முயன்றார்.

''அது பத்தியெல்லாம் எனக்குத் தெரியாது. கல்யாணம் வேண்டாம்ன்னா வேண்டாம். அவ்வளவுதான். இத்தோட இந்தப் பேச்சை விடுங்க. நீங்க இப்படியே பேசிட்டு இருந்தா, அப்புறம் நான் ஊருக்கே வர மாட்டேன்!'' என்றான் அவரைப் பயமுறுத்தும் நோக்குடன்.

அவரோ, ''உன்னோட நான் வந்து இருக்கணும்ன்னா நீ கல்யாணத்துக்குச் சம்மதிக்கணும். நல்லா யோசிச்சுச் சொல்லு,'' என்று தன் பிடிவாதமான முடிவை அவனிடம் தெரிவித்தார். அதன் பின் வந்த இரண்டு நாட்களும் பாலா எவ்வளவு தான் முயற்சித்தும், அவன் தந்தை அவர் எடுத்த முடிவில் உறுதியாக நின்று அவன் படையெடுப்பை அத்தோடு முறியடித்தார்.

* * *

வசந்த் மற்றும் கௌதம் வீட்டில், திருமணத்திற்கு அழைப்பு விடுப்பது மற்றும் கல்யாண வேலைகளைக் கவனிப்பது என்று, பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர். நாட்கள் யாருக்காகவும் நில்லாமல் வேகமாக ஓடியும், பறந்தும் சென்று அனைவரும் எதிர்பார்ப்புடன் காத்திருந்த திருமணத்திற்கு முந்தைய நாளும் வந்தது.

வெளியூரில் இருக்கும் சுற்றமும், நட்பும் காலையிலிருந்தே வரத் தொடங்கினர். அன்று மாலை, மண்டபத்தில் இரண்டு வீட்டினரும் அவரவர் சொந்தங்களுடனும், வசந்த் அவன் நண்பர்களுடனும், மது அவள் தோழிகளுடனும் அமர்ந்து நீண்ட நாள் கதைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். இடையே இரண்டு வீட்டின் சொந்தங்களுக்கும் சில பல அறிமுகங்களும் நடைபெற்றன.

உணவு நேரத்திற்கு முன், ''கௌதம்! புதுசா அஜித் படம் வந்திருக்கு. சாப்பிட்டுட்டு அந்தப் படத்துக்குப் போகலாமா?'' என்று மெதுவாக ஆரம்பித்தான் பாலா.

வசந்த், அவனைப் பார்த்து முறைத்து, ''டேய்! அடங்குடா! நாளைக்கு எனக்கும் கௌதமோட தங்கச்சிக்கும் கல்யாணம். அது ஞாபகம் இருக்கா?'' என்றான் எரிச்சலாக.

''அது எல்லாம் ஞாபகம் இருக்கு. இப்போ வெட்டியாத்தானே பேசிக்கிட்டு இருக்கோம். அதுக்குப் பதிலா போய் நம்ம தலையோட படத்தைப் பார்த்துட்டு வந்தா நிம்மதியா தூக்கம் வருமே!'' என்றான் அஜித்தின் தீவிர ரசிகனான பாலா.

''அடேய்! எங்க கூடப் பேசறது உனக்கு வெட்டியா இருக்கா? எல்லாம் என் நேரம்டா. உனக்குக் கல்யாணம் நடக்காமலா போகும்? அப்போ வச்சுக்கிறேன் உன்னை!'' என்று வசந்த் சொன்னவுடன், ''அதுக்குத்தான், நான் கல்யாணமே பண்ணிக்கப் போறதில்லையே!'' என்று உறுதியாகக் கூறினான் பாலா.

கௌதம், இவர்களுக்கு இடையில் வந்து சமரசம் செய்து வைத்து, பாலாவை, ''உனக்கு உன் அஜித் படம் பார்க்கணும்ன்னா, கல்யாணம் முடிஞ்சு நாளைக்கு நீ மட்டும் போ. நான் வேண்டாம்ன்னு சொல்லலை. நாளைக்குக் கல்யாணத்தை வச்சுக்கிட்டு எங்களையும் கூப்பிடற பாரு, உனக்கே இது கொஞ்சம் 'ஓவரா'த் தெரியலை?'' என்று கடிந்து கொண்டான்.

அனைவரும் அவனுக்கு எதிராகப் படையெடுப்பதைக் கண்ட பாலா, உடனே, ''இல்ல! நீங்கெல்லாம் இந்தக் கல்யாணத்துல எவ்வளவு மும்முரமா ஆழ்ந்து போயிருக்கீங்கன்னு, நான் உங்களை 'டெஸ்ட்' பண்ணினேன்.



பரவாயில்லை! நான் நினைச்ச மாதிரியேதான் இருக்கீங்க!'' என்று கூசாமல் பொய் சொல்லித் தப்ப முயன்றான்.

வசந்தும், ''ஆஹா! உன்னைப் பத்தி எங்களுக்குத் தெரியாதா? நீ எவ்வளவு பெரிய புளுகன்னு. அஜித் படம்ன்னா உனக்குச் சாப்பாடே வேண்டாமே!'' என்று அவனிடம் சொன்னவன். ''நாங்க எம்.பி.ஏ. படிக்கும் போது, இவனைப் பார்க்க வந்த இவன் 'பிரெண்ட்' எங்களிடம் ஒரு கதையைச் சொன்னான். கேளுங்க! இவன் எப்போதும் இப்படித் தானாம். அஜித்னா உயிரை விடுவான். இவன் கோயம்புத்தூரில் பி.ஈ. படிக்கும் போது நடந்தது இது. ஒரு நாள் அந்த 'பிரெண்டோட பைக்'ல எங்கேயோ போகும்போது அடிபட்டு மயக்கமாயிட்டான். கூட வந்த 'பிரெண்டு'க்கு ஒண்ணும் ஆகலை. அவனும் பயந்து போய், ஒரு ஆட்டோவை நிறுத்தி, இவனை அவசரமா 'ஹாஸ்பிடல்' கூட்டிட்டுப் போயிருக்கான். அங்கிருந்த டாக்டரும் இவனைப் பரிசோதிச்சிட்டு, சீக்கிரமா தியேட்டருக்குக் கூட்டிட்டுப் போங்கன்னு சொல்லியிருக்கிறார். அந்த மயக்கத்துலேயும், இவன், 'அஜித் படமா காட்டறாங்க?'ன்னு கேட்டிருக்கிறான். அதைக் கேட்ட 'டாக்டர்' நொந்துட்டார், பாவம். அதைவிட அந்த 'பிரெண்ட்' பாவம். அவனுக்கு எப்படி இருந்திருக்கும்?'' என்று அஜித்தின் தீவிர ரசிகனான பாலாவின் தீவிர(வாத)த்தை, அங்கிருந்த மற்ற நண்பர்களுக்குப் பறை சாற்றினான்.

அனைவரும் வசந்த் சொன்னதைக் கேட்டுச் சிரித்துக் கொண்டிருந்தபோது, வருண் மட்டும், ''அப்போதிலிருந்தே நீ எதையுமே ஒழுங்கா ஓட்ட மாட்டியா பாலா?'' என்று பாலாவின் வாகனம் ஓட்டும் திறனைப் பற்றிக் கேலி செய்து, காலை வாரினான்.

இப்படியே பாலா செய்ததைப் பற்றிச் சொல்லி, அவன், 'ஏன்தான் சினிமாவுக்குப் போகலாம் என்று கூறினோம்,' என்று நொந்து கொள்ளும் அளவுக்கு, அவனை ஒரு வழி பண்ணி விட்டனர். பாலா செய்த மற்றுமொரு கூத்தைப் பற்றி கௌதம் எடுத்துக் கொடுக்க, வசந்தும் அதைக் கப்பெனப் பிடித்துக் கொண்டான்.

''ஒரு தடவை 'ஸ்கியிங்' பழகலாம்னு நாங்க மூணு பேரும் பயிற்சியாளரிடம் சேர்ந்து பழகிகிட்டு இருந்தோம். அவரும், கொஞ்சம் சரியான இடத்துல வச்சு, சொல்லிக் கொடுத்துட்டு இருந்தார். ஓரளவுக்குக் கற்றுக் கொடுத்த பின்னர், ஒவ்வொருத்தரையா மேல இருந்து வரச் சொன்னார். நாங்களும் அவர் சொன்ன மாதிரி ஒழுங்கா செஞ்சோம். ஆனா, இந்தப் பாலா இருக்கானே, என்னமோ 'ஒலிம்பிக்ஸ்'ல வர மாதிரி, மேலே இருந்து கீழே 'விர்' ரென்று வந்தான். வந்தவனுக்கு நிறுத்த வேண்டிய இடத்துல நிறுத்த முடியலை. அதுக்குப் பதிலா நேராப் போய், பயிற்சியாளர் மேல, கண்ணை மூடிட்டுப் போய் மோதிட்டான்.

அவர் ஒரு வழியா கீழே விழாம ரெண்டு பேரையும் 'பாலன்ஸ்' ப்ண்ணிச் சமாளிச்சிட்டார். எல்லாம் முடிஞ்சு நாங்க திரும்பி வரும்போது அவன்கிட்ட, 'ஏன்டா அப்படி ஆச்சு? மெதுவா வந்திருக்கலாமில்லியா?' என்று கேட்டதுக்கு,

'இல்லை. நம்மளை மட்டும் அது பண்ணு, இது பண்ணுன்னு சொல்றார். பணத்தை வாங்கிட்டு அவர் ஒண்ணும் பண்ணாம நம்மளை மட்டும் வேலை வாங்கினார். அது மட்டுமில்லாம அவருக்கு நிஜமாவே 'ஸ்கியிங்' தெரியுமா, அவரால 'பாலன்ஸ்' பண்ண முடியுமான்னு 'செக் பண்ணினேன்'னு சொன்னான் பாருங்க. போய்



'கண்ட்ரோல்' இல்லாம விழுந்துட்டு அதுக்கு ஒரு சப்பக்கட்டு வேற. இவனால மட்டும்தான் இப்படியெல்லாம் யோசிக்க முடியும்!'' என்று சொல்லிச் சிரித்தான்.

இப்படியாகப் பாலாவைக் கிண்டல் செய்து, பின் மற்ற விஷயங்களுக்குத் தாவி, கடைசியில் அனைவரும் சாப்பிடச் சென்றனர். சாப்பிட்டு விட்டு வந்த பாலாவிடம், ''சாப்பிடற இடத்துல என்னடா சொன்ன அந்தப் பொண்ணுகிட்ட? எதுக்கு உன்னைக் கோவமா திட்டிட்டுப் போனாங்க?'' என்று கேட்டான் கௌதம்.

''இவங்களுக்கு எல்லாம் நான் அறிவாளியா இருந்தா பிடிக்க மாட்டேங்குது. அந்தப் பொண்ணோட அம்மா பேரு சாவித்திரி. அதுதான் அந்தப் பொண்ணுகிட்ட போய், 'உங்க அம்மாவைப் பத்த வச்சா பத்திக்குவாங்களா?'ன்னு கேட்டேன். அதுக்கு அந்தப் பொண்ணுக்கு ஒண்ணும் புரியலை. 'இல்லை உங்க அம்மாவோட பேர்ல 'திரி' இருக்கே. அதுதான் கேட்டேன்'னு தெளிவா விளக்கினதுக்குத்தான் அப்படித் திட்டிட்டுப் போறா. அறிவைப் புகழத் தெரியாதவங்க!'' என்று கூறி, கேள்வி கேட்ட கௌதமையும் மற்ற நண்பர்களையும் தலையில் அடித்துக் கொள்ள வைத்தான்.

''சரி! என்னை விடுங்க. கல்யாண மாப்பிள்ளை வசந்த். அவனைக் கிண்டல் பண்றதை விட்டுவிட்டு, என்னை ஏன் கிண்டல் பண்ணிட்டு இருக்கீங்க?'' என்று அழகாக ஒரு பட்டாசைப் பாலா கொளுத்திப் போட, அதுவும் நன்றாகக் கப்பெனப் பத்தி வெடிக்க ஆரம்பித்தது.

ஒவ்வொருவராக வசந்தைக் கிண்டல் செய்தும், அவனிடம் பல கேள்விகள் கேட்டும் அவனைச் சிவக்க வைத்துக் கொண்டிருந்தனர். ஆனாலும், அவர்களின் கேள்வி

களுக்குச் சளைக்காமல், அலுக்காமல் பதிலளித்துக் கொண்டிருந்தான். அப்போது, வசந்தின் நண்பன் அவனிடம், ''இது காதல் கல்யாணமா இல்லை பெற்றோர்கள் பார்த்துச் செய்து வைக்கற கல்யாணமா?'' என்று கேட்க, வசந்த் என்ன சொல்வது என்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே, கௌதம், முந்திக் கொண்டு, ''காதல் மற்றும் பெற்றோர்கள் பார்த்து வைக்கச் செய்கின்ற கல்யாணம்!'' என்றான் உல்லாசமாக.

கௌதம் சொன்ன பதிலைக் கேட்ட வசந்த், அவனை ஆச்சர்யமாகப் பார்த்து, 'அப்பாவுக்கு மட்டுமே தெரிஞ்ச விஷயம் நான் மதுவை முன்னாடியே 'லவ்' பண்ணியது. இவனுக்கு எப்படித் தெரியும்? இதைப் பத்தி அவனிடம் கண்டிப்பாகக் கேட்கணும்,' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டு, மற்றவர்களிடம் ஒரு புன்னகையை மட்டும் சிந்தினான்.

பேச்சு எங்கெங்கோ சென்று கௌதமின் கல்யாணத்தில் வந்து நின்றது. கௌதமின் நண்பன் ஒருவன் அவனிடம், ''நீ எப்போ கல்யாணம் பண்ணப் போற கௌதம்?'' என்று கேட்க, ஒரு சிரிப்பைப் பதிலாகத் தந்துவிட்டு, சிறிது நேரம் கழித்து, ''இப்போ தானே மதுவுக்கு முடிஞ்சிருக்கு. எனக்கு இன்னும் கொஞ்சம் நாள் போகட்டும்,'' என்றான்.

இப்படியே, ஒவ்வொருவராக அவர்களின் திருமணத்தைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருக்கும் பொழுது, பாலா, ''கல்யாணமே செய்யப் போவதில்லை!'' என்றும், வருண், ''என் தங்கைக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் இப்போதைக்கு இல்லை!'' என்றும், தியான், ''எனக்கு வீட்ல பார்த்துட்டு இருக்காங்க. கூடிய சீக்கிரமா முடிவாகிவிடும்!'' என்றும் கூறினார்கள்.



நண்பர்கள் பேசிக் கொண்டே இருக்க, நேரமாவதைப் பார்த்த கௌதம், வசந்திடம், ''சரிடா! நீ போய்த் தூங்கு. காலையில சீக்கிரமா எழுந்திருக்கணும். ரொம்ப நேரம் கண் முழிச்சா, அப்புறம் 'வீடியோ'விலே, 'போட்டோ'விலே எல்லாம் பார்க்க நல்லா இருக்காது. நாங்களாவது பரவாயில்லை. நீ கல்யாண மாப்பிள்ளை. நானும், எல்லாத்தையும் ஒரு தடவை சரி பார்த்துட்டு, அப்பா - அம்மா கிட்ட சொல்லிட்டு உன்னோட அறைக்கு வரேன்,'' என்றான்.

வசந்தும், 'மதுவுடன் எப்போது பேசுவோம், கௌதம் கூடவே வந்தால் எப்படிப் பேசப் போகிறோம்?' என்று நினைத்துக் கொண்டே இருந்தவன், கௌதம் இவ்வாறு கூறியதும், எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு, தன் அறையை நோக்கிச் சென்றான்.

மற்ற நண்பர்களும் ஒவ்வொருவராக உறங்கச் செல்ல, அப்போது கௌதமின் அத்தை மகள் தீபிகா கௌதமிடம் வந்தாள். தீபிகா, திருமணமாகிப் பெங்களூருவில் இருக்கிறாள். கௌதமை விட ஒரு வயதுதான் பெரியவள். மற்றும் சிறு வயதில் ஒரே இடத்திலே வளர்ந்ததினால், கௌதம் அவளிடம் நல்ல ஒட்டுதலுடனும், பாசத்துடனும் பழகுவதோடு மட்டுமல்லாது, அவன் அவளிடம் எல்லாவற்றையும் மனம் திறந்து கூறுவான். அவன் நண்பர்களுக்கு, பெற்றோர்களுக்கு, ஏன் மதுவுக்குக் கூடத் தெரியாத விஷயத்தை அவளிடம் பகிர்ந்து கொள்வான்.

தீபிகா, கௌதமிடம், ''நான் அப்பவே உன்கிட்ட கேட்கணும்ன்னு நினைச்சேன். யாருடா அந்தப் பச்சைக் கலர் 'சாரி' கட்டின பொண்ணு? உன்னையே சுத்திச் சுத்தி வந்திட்டு இருக்கா!'' என்று கௌதமையே சுத்திச் சுத்தி

வந்து கொண்டிருந்த வசந்தின் தங்கை, ஹர்ஷினியைச் சுட்டிக் காட்டிக் கேட்டாள்.

ஹர்ஷினி, மது-வசந்தின் திருமணம் நிச்சயம் ஆனதிலிருந்தே கௌதம் மேலே ஒரு கண்ணாகத்தான் அலைந்து கொண்டிருக்கிறாள். அவள் மனதில் தான் பணக்காரியாக இருந்தும், இவ்வளவு அழகாக(?) இருந்தும், ஒரு நடுத்தர வர்க்கக் குடும்பத்தைச் சேர்ந்த கௌதம், அவளைச் சுற்றி வராதது அவளுக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை. இதுவரைக்கும் அவனாக அவளிடம் சிரித்துப் பேசியதும் இல்லை. அவள் தோழிகளும் இதைப் பற்றி அவளிடம் உசுப்பேற்றி விட, 'கௌதமைக் கல்யாணம் செய்து காட்டுகிறேன்!' என்று சவால் விட்டிருந்தாள். எப்படியாவது கௌதமைத் தன் காலுக்கடியில் விழ வைத்து, அவனைத் திருமணம் செய்து கொண்டு, அவள் சொன்னபடி அவனை ஆட்டுவிக்கலாம் என்று வேறு நினைத்திருந்தாள். அதற்குக் கௌதமின் அசாத்திய உயரமும், கவர்ச்சியான கண்களும், வசீகரிக்கும் சிரிப்பும், புத்தரின் பொறுமையும் பெரிய தூண்டுகோலாக அமைந்தன. அதனால் இயன்றவரை கௌதம் செல்லும் இடங்களுக்கெல்லாம், கௌதமிற்குச் சந்தேகம் தோன்றாதவாறு, கூடச் சென்று அவனின் மனதைக் கவர முயன்று கொண்டிருந்தாள்.

கௌதம், அவசரமாகச் சுற்று முற்றும் தன் நண்பர்கள் யாராவது அங்கிருக்கிறார்களா என்று பார்த்துவிட்டு, ''தீபி! மெதுவாப் பேசு. எதுக்கு இப்படி 'ஸ்பீக்கரை' முழுங்கின மாதிரி கத்துற. அதுதான் வசந்தோட தங்கச்சி ஹர்ஷினி!'' என்றான் தணிவான குரலில்.

தீபிகாவும், ''ஓ... விஷயம் அப்படிப் போகுதா? நான் நிச்சயத்துக்கு வர முடியாம போனதுல எனக்குத்



தெரியாம போயிடுச்சு. அப்படின்னா உனக்கும் 'லைன் கிளிய'ரா?'' என்று சிரித்தவாறே அவனைச் சீண்டினாள்.

''அவதான் ஏதோ விவரம் புரியாம பண்ணிட்டு இருக்கான்னா, நீயும் ஏன் தீபி இப்படிப் பண்ணற? அவளைப் பார்த்தா ஒரு பிடிவாதமான சின்னக் குழந்தையைப் பார்க்கற மாதிரிதான் இருக்கு. அதுவுமில்லாம, எனக்கு இப்போதைக்குக் கல்யாணம் பண்ணிக்கிற மாதிரி உத்தேசமே இல்லை. ஆளை விடு!'' என்றான் அவசரமாக.

''உனக்கென்ன, வயசு இறங்கிட்டு இருக்குன்னு நினைச்சியா? உனக்கும் இருபத்தேழு ஆச்சு. இப்போதைக்கு இல்லைன்னா அப்புறம் எப்ப பண்ணறதா ஐடியா? நீ இன்னும் பழசை எல்லாம் மறக்கலையா? ஒழுங்கா கல்யாணத்தைப் பண்ணி, வாழ்க்கைல செட்டில் ஆனோமான்னு இல்லாம இதென்னடா தத்துவம் எல்லாம் பேசிட்டு?'' என்றாள் எரிச்சல் கலந்த கவலையுடன்.

''சரி! என் விஷயத்தை அப்புறம் பேசலாம். நாளைக்குச் சீக்கிரமா எழுந்திரிக்கணும். நான் போய் நாளை முகூர்த்தத்துக்கு எல்லாம் தயாரா இருக்கா, இல்லை இன்னும் ஏதாவது செய்யணுமான்னு, அம்மா கிட்ட கேட்டுட்டு தூங்கப் போறேன்,'' என்று அங்கிருந்து நழுவினான்.

'இவனிடம் இதைப் பத்திப் பேசிவிட்டுத் தான் ஊருக்குக் கிளம்ப வேண்டும்,' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டு அவளும் உறங்கச் சென்றாள்.

மறுநாள் காலை... முகூர்த்த நேரம் நெருங்க, மது, அழகிய சிகப்பு வண்ணப் புடவையில், மிதமான ஒப்பனைகளுடனும், நகைகளுடனும், வசந்திற்கு அருகில்

வந்தமர்ந்தாள். வசந்தின் நண்பர்கள் அவனைக் கிண்டல் செய்ய, கௌதம் அவன் தங்கையையும், நண்பனையும் பெருமையுடன் பார்த்துக் கொண்டிருந்தான். அய்யர் சொல்லும் மந்திரங்களை எல்லாம், அவர்களுக்கு என்னவென்று புரியாவிட்டாலும், திருப்பிச் சொல்லி, எல்லாவற்றையும் செவ்வனே செய்து, நல்ல நேரத்தில் அனைவரும் அட்சதை தூவி வாழ்த்த, வசந்த், மாங்கல் யத்தைத் தன்னவளின் கழுத்தில் பரவசத்துடன் அணிவித் தான்.

அதன் பிறகு நேரம் யாருக்காகவும் நிற்காமல், வேக மாகச் சுழன்று கொண்டிருக்க, செய்ய வேண்டிய சடங்கு கள் நடைபெற்று மதிய வேளை உணவு முடிந்து ஒவ் வொருவராக ஊருக்குக் கிளம்ப ஆயத்தமானார்கள்.

கௌதம் சாப்பிடாமல் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருப்பதைப் பார்த்த ஹர்ஷினி, அவனிடம் வந்து, ''கௌ! நீங்க இன்னும் சாப்பிடாமே என்ன பண் ணிட்டு இருக்கீங்க? காலையில இருந்து அலைஞ்சு திரிஞ்சு 'டயர்ட்'டாத் தெரியறீங்க. வாங்க, போய்ச் சாப் பிட்டுட்டு வரலாம். நானும் இன்னும் சாப்பிடலை. பசிக் குது!'' என்று அவனை அழைத்தாள். இவ்வாறு அனை வரும் இருக்கும் இடத்தில் கௌதமுடன் ஒன்றாகச் சுற்றினால், மற்றவர்களின் கண்ணில் பட்டு, உற்றார், உறவினர் மனதில் ஒரு பொறியைக் கிளப்பும் என்ற எண் ணத்துடன்தான் அடிக்கடி கௌதம் இருந்த இடத்தில் சுற்றிக் கொண்டும், அவனுடன் பேசிக் கொண்டும் இருந்தாள்.

காலையிலிருந்தே அவனிடம் ஏதாவது ஒரு கார ணத்தை வைத்துக் கொண்டு, 'கௌ! சேலை அழகா யிருக்கா?', 'என்னோட நெக்லஸ் எப்படி இருக்கு?', 'அது



எப்படி இருக்கு, இது எப்படி இருக்கு?' என்று அவனிடம் கேட்டுக் கேட்டு அவனுக்குத் தலைவலியையே வர வழைத்து விட்டாள். கௌதம், இதையெல்லாம் கண் டும் காணாமல், தன் நண்பனுக்காகவும், தங்கைக்காகவும் பொறுத்துக் கொண்டிருந்தான். அவன் அப்பொழுதே பொங்கி எழுந்திருந்தால் பின்னால் வரும் மனக்கஷ்டங் களைத் தவிர்த்திருக்கலாமோ?

அவளிடம் இருந்து எப்படி தப்பிப்பது என்று யோசித்த அதே நொடியில், கௌதமைத் தேடிக்கொண்டு வந்த தீபிகா, அவனிடம், ''கௌதம், நீ இப்போ ஃப்ரீயா? உன் னோட கொஞ்சம் தனியாப் பேசணும்'' என்றாள்.

கௌதமும், அது தான் சமயம் என்று ஹர்ஷினியைப் போய்ச் சாப்பிடுமாறு கூறிவிட்டு, தீபிகாவுடன் பேசத் திரும்பினான். அதைக் கேட்ட ஹர்ஷினி, வந்த எரிச் சலை அப்பட்டமாக முகத்தில் காட்டிவிட்டு, ஏதோ முணுமுணுத்துக் கொண்டே அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

''கௌதம்! நான் 'நைட்' ஊருக்குக் கிளம்பறேன். நீ அதுக்கு முன்னால என்கிட்ட ஒரு உண்மையைச் சொல்லு. நீ இன்னும் அந்தப் பெண்ணைத்தான் மனசுல நினைச் சிட்டு இருக்கியா? உனக்கே இது சரின்னு படுதா? உன் னைப் பத்தியும் கொஞ்சம் யோசிடா. அத்தையும் மாமா வும் நீ பேசறதைக் கேட்டால் எவ்வளவு சங்கடப்படு வாங்க?'' என்று கேள்விக் கணைகளால் அவனைத் தாக்கிக் கொண்டிருந்தாள்.

தீபிகாவைப் பார்த்துச் சிரித்த கௌதம், ''கொஞ்சம் மூச்சு விட்டுட்டுப் பேசு தீபி. இல்லேன்னா, இரு. போய் ஒரு 'ஜூஸ்' எடுத்துட்டு வரேன். எதுக்கு இப்போ

அரசியல்வாதி மேடைல எதிர்க்கட்சியிடம் கேள்வி கேட்கற மாதிரி கேள்வி கேட்டுட்டு இருக்க?'' என்று அவள் மூச்சு விடாமல் பேசியதைக் கிண்டலடித்தான்.

''விளையாட்டு போதும். நிறுத்து கௌதம். நடந்ததையே நினைச்சுட்டு இருந்தா எப்படி? நீ என்னதான் வெளியில சிரிச்சுப் பேசினாலும் உன்னோட காயத்தோட வலி எனக்குத் தெரியும். நீ மனசுக்குள்ள கஷ்டப்படறதை என்னால பார்க்க முடியல. விஷயம் தெரிஞ்சா உன் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் எப்படி இருக்கும்? சரி, பையன் ஒரு நாள் மனசு மாறிக் கல்யாணம் பண்ணறதுக்கு ஒத்துக் கொள்வான்னு நினைச்சிட்டு இருக்காங்க. மதுவோட கல்யாணத்துக்காகத்தான் உன்னை இத்தனை நாள் தொந்தரவு பண்ணாம இருந்தாங்க. இனி அடுத்து உன் கல்யாணத்தைப் பத்தின பேச்சை எடுப்பாங்க. அதனாலதான் நான் இப்போ உன்கிட்ட இப்படி கத்திட்டு இருக்கேன். நீ கல்யாணம் பண்ணறதுக்குச் சம்மதிக்கணும் கௌதம். நீ சந்தோசமா இருக்கிறதை நான் பார்க்கணும்,'' என்றாள் தீபிகா கண்கள் கலங்கியவாறே.

''ஏய் லூசு! இப்போ எதுக்கு கண் கலங்கற? பார்க்கறவங்க நான்தான் உன்னை ஏதாவது திட்டினேன்னு நினைச்சுக்கப் போறாங்க. சரி! இப்போ என்ன, நான் கல்யாணம் ப்ண்ணிக்கச் சம்மதிக்கணும். அவ்வளவுதானே. எனக்கு ஒரு ஆறு மாசம் 'டைம்' கொடு. எனக்குப் பிடிச்ச பொண்ணைப் பார்த்தேன்னா நானே வந்து உன்கிட்ட சொல்லறேன். அதுக்குள்ளே நானும் என் மனசைப் பக்குவப்படுத்திக்கறேன்,'' என்றான்.

அவன் சொன்னதைக் கேட்டுத் தீபிகா ஏதோ சொல்ல வாயைத் திறக்க, ''இவ்வளவு நாளா பக்குவப்படுத்தலையான்னு கேட்காத. இவ்வளவு நாளும் நான்



கல்யாணத்தைப் பத்தியே யோசிக்கலை. இப்போ நீ கேட்டுக்கிட்டதால யோசிக்கறேன். ஆறு மாசம் கழிச்சு நானே உன்கிட்ட வந்து சொல்லறேன்... சரியா?'' என்று அப்போதைக்கு ஏதோ ஒரு சாக்குச் சொல்லிவிட்டு அவளிடமிருந்து தப்பித்தான். ஆனால், இன்னும் ஐந்தே மாதங்களில், அவளிடம் சென்று அவனுக்குப் பிடித்த பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள, அவன் பெற்றோர்களிடம் வந்து பேசுமாறு கேட்கப் போகிறான் என்று, பாவம்! அப்பொழுது அவன் அறிந்திருக்கவில்லை.

# 3

''இதழ்களோ மென்மை
தோற்றமோ இனிமை
ம(ன)ணமோ சுகந்தம்
முட்களோ (கோபமோ) கவசம்
பெண்ணே,
நீயும் ஒரு ரோஜாதான்
என் கண்களில்!''

ஒரு வாரம் கழித்துச் சனிக்கிழமை மாலை, பாலா தன்னுடன் படித்த கல்லூரித் தோழர்கள், சுரேஷ் மற்றும் சதீஷின் வருகைக்காக 'நீல்கிரி'ஸில் இருக்கும் உணவகத்தில் காத்திருந்தான். அவர்கள் இருவரும் வேறு வேறு ஊரில் வேலையில் இருப்பவர்கள். தற்சமயம் விடுமுறையில் கோவைக்கு வந்திருந்தனர்.

காத்திருக்கும் நேரத்தில் பொறுமையாக உட்கார முடியாமல், சுரேஷைப் பேசியில் அழைத்து, அவர்கள் எப்போது வருவார்கள் என்று கேட்டுக் கொண்டிருந்தான் பாலா. அதற்கு அவனும், சதீஷுடன் கிளம்பி விட்ட

தாகக் கூறவும், அவனிடம் பேசியிலேயே அங்கு நடந்து சென்ற ஒரு பெண்ணைப் பார்த்துக் கிண்டலடித்துக் கொண்டும், வர்ணித்துக் கொண்டும் இருந்தான். அவன் நண்பனும், ''பாலா, நீ இன்னும் அப்படியேதான்டா இருக்க. கொஞ்சமாவது திருந்தி இருப்பேன்னு பார்த்தா, ம்ம்ஹூம்...'' என்று பாலாவின் காலை வாரினான்.

பாலா, சிரித்துக் கொண்டே, ''எப்போதும் ஒரு சொல், ஒரு செயல்ன்னுதான் இருக்கணும். இந்தப் பேச்சு மாறுவது எல்லாம் எனக்குப் பிடிக்காது!'' என்றான்.

பின், ''சரி! அதைவிடு. நான் ஒரு கவிதை சொல்ல றேன் கேள்...

''பெண்ணே,
உன்னைவிட
உன் தங்கையைத்தான்
அதிகம் நினைக்கிறேன்!
ஏனெனில்
அவளே உன்னுடன்
அதிக நேரம் கழிக்கிறாள்!
உன்னுடனான
என் காலத்தை அழிக்கிறாள்!''

எப்படி?'' என்று சத்தமாகக் கூறிப் பலமாகச் சிரித்துக் கொண்டிருந்தான்.

அதைக் கேட்ட சுரேஷ், ''பாலா, போதும்டா! ஆளை விடு. 'போன்'ல எங்களால ஒண்ணும் செய்ய முடியாதுன்னு தானே இப்படிப் பண்ற. இரு. நாங்க நேர்ல வந்து உன்னைக் கவனிச்சுக்கறோம்,'' என்று மிரட்டிவிட்டுக் கைபேசியை வைத்தான்.



அவன் சிரித்தவாறே பேசியை வைத்த அதே நேரம், ''எக்ஸ்கியூஸ் மீ!'' என்று ஒரு பெண்ணின் குரல் கேட்டுத் திரும்பியவன், அதிர்ந்தான். ஏனெனில், அவன் சற்று முன் சுரேஷிடம் கிண்டல் செய்து கொண்டிருந்த பெண் தான். கண்களில் கோபத்துடன், முகம் எல்லாம் சிவந்து போய் நின்று கொண்டிருந்தாள். 'இவ எதுக்கு இங்க வந்து நிக்கறா? நான் 'போன்'ல சுரேஷ்கிட்ட பேசினதைக் கேட்டுட்டாளோ?' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டு, ஒன்றுமே அறியாதவன் போல, ''எஸ்! சொல்லுங்க, என்ன வேணும்?'' என்று அவளிடம் வினவினான்.

ஒன்றுமே தெரியாத பாவனையில் முகத்தை வைத்துக் கொண்டு பாவமாகக் கேட்டவனைப் பார்த்து அவளின் சினம் தலைக்கேறியது. '''போன்'ல பேசினா எனக்கு ஒண்ணும் தெரியாதுன்னு நினைச்சீங்களா? என்ன பெரிய 'ஹீரோ'ன்னு நினைப்பா? வர்ற, போற பொண்ணுங்களைப் பத்தி கிண்டல் பண்ணிட்டு இருக்கறதுக்கு அசிங்கமா இல்லை? உங்களுக்கு வேற வேலை இல்லைன்னா போய் மத்தவங்களுக்கு உபயோகப்படற மாதிரி ஏதாவது செய்ய வேண்டியது தானே? எதுக்கு இங்க வந்து உட்கார்ந்திட்டு வெட்டியா பொழுதைப் போக்கிட்டு இருக்கீங்க?''

அவன் வாய் திறந்து பதிலளிக்கும் முன் அவளே முந்திக் கொண்டு, ''நீங்க சொன்னதை எல்லாம் கேட்டேன். எப்படி? எப்படி? பொண்ணுங்களை 'லுக்' விட்டோமா, கிண்டல் பண்ணினோமா, பேசினோமா, அப்புறம் 'எஸ்கேப்' ஆனோமான்னு இருக்கணுமா? கல்யாணம் பண்ணறது எல்லாம் 'வேஸ்ட்'டா? உங்க கூடப் பிறந்தவங்களையும் இப்படித்தானே எல்லோரும் பேசிட்டு இருப்பாங்க. நீங்க உடனே, 'எனக்குக் கூடப் பிறந்த

அக்கா தங்கச்சியே இல்லை!'ன்னு சொல்லிச் சிரிப்பீங்க. உங்களை மாதிரி மரமண்டைகளுக்கு எங்களை மாதிரி பொண்ணுங்களோட மனசைப் பத்தி என்ன தெரியும்? ச்சே!'' என்று பொரிந்தாள்.

அவளுக்கு என்ன பதில் சொல்வது என்று வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருந்தவனிடம் அவளே தொடர்ந்தாள். ''இதுல 'உன்னை விட உன் தங்கச்சிய பார்க்கிறேன், நினைக்கிறேன்'னு கவிதை வேற சொல்லறீங்களா?

''ஒரு பொண்ணைப் பார்க்கறீங்க, கிண்டல் செய்யறீங்க. சரி! எதுக்கு அவளோட தங்கையை இதுல இழுக்கறீங்க? அவ என்ன பாவம் பண்ணினா? உங்களுக்கு என்ன ஒரு திமிர்! எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு உங்களை அப்படியே அடிக்கணும் போல இருக்கு. ஆனா, உங்களை மாதிரி ஆளோட நிழல் கூட என்மேல படக்கூடாதுன்னு நினைக்கறவ நான். அடிக்கறதுக்காகத் தான் என்றாலும், உங்களைத் தொடணுமேன்னு நினைச்சா அருவருப்பா இருக்கு. உங்களை அடிச்சு அந்தப் பாவத்தை வேற நான் ஏன் சுமக்கணும்?

''உங்களுக்கு உரிமை இல்லாதவங்களைப் பத்தி உங்களுக்கு என்ன கவலை வந்தது?'' என்று மூச்சு விடாமல் பேசிக் கொண்டும், அவனைப் பார்த்து முறைத்துக் கொண்டும் இருந்தவளை, ''தான்யா, நீ இங்க என்ன பண்ணிட்டு இருக்கற? வா.. 'லேட்' ஆயிடுச்சு. போகலாம்,'' என்று அவள் தோழிகள், இழுத்துச் சென்றனர்.

அவள் சென்ற பின் மழை பெய்து ஓய்ந்தது போல இருந்தது பாலாவிற்கு. இதுவரை பெண்கள் அவனை மறைமுகமாக ஏதாவது சொல்லிக் கேட்டிருக்கிறான் தான். அதையெல்லாம் சிரிப்புடன் அவனும் கேட்டுக் கொண்டு வந்திருக்கிறான்தான். ஆனால், இப்படி யாரும்



நேரடியாகத் திட்டியது இல்லை. அதுவும் இவ்வளவு சீற்றத்துடன். இதுதான் முதல் தடவை. அதனாலேயே சற்று வருத்தமடைந்து மனதிற்குள் புலம்ப ஆரம்பித்தான்.

'நான் என்ன சொன்னேன்னு அந்தப் பொண்ணு இப்படி வந்து குதிச்சிட்டுப் போகுது? பொண்ணுங்களைக் கிண்டல் பண்ணறது தப்பா? இந்தக் காலத்துல எல்லோரும் செய்யறதைத்தானே செஞ்சேன். மத்தவங்கெல்லாம் கேட்டுட்டு பேசாமத் தானே போறாங்க. இவளுக்கு மட்டும் என்ன வந்துச்சு?' என்று நினைத்தவுடன், ''ஆமா பின்ன, அவளைப் பத்தி சுரேஷ் கிட்ட என்ன சொன்ன? முகம் பார்க்கறதுக்கு நல்லா லட்சணமாத்தான் இருக்கு. 'பல்ப்' மாதிரி கண்ணு. கத்தி மாதிரி மூக்கு. திறக்காத 'பர்ஸ்' மாதிரி ஒரு வாய். ஆனா, எங்கயோ போய் விழுந்து முகத்துல அங்கங்க நிறைய தழும்பு பண்ணி வச்சிருக்கா. அவ போய் கீழே விழறப்போ எல்லாம் நாம போய்த் தூக்கி நிறுத்த முடியுமா? பத்தாததுக்கு முகத்துல கடுகு போட்டா படபடன்னு பொரியற மாதிரி அத்தனை கோவம். மருந்துக்குக்கூட முகத்துல சிரிப்பு இல்லை. சிரிக்காத பொண்ணு எல்லாம் நமக்கு ஒத்து வர மாட்டான்னு சொல்லலை?

'சும்மா இருந்த பொண்ணைப் பத்தி இப்படி எல்லாம் கிண்டல் பண்ணினா, கேட்டுட்டு எந்தப் பொண்ணு தான் சும்மா இருப்பா? அப்படி அவ சும்மா இருந்தாதான் தப்பு. நீ பேசினது உனக்கே கொஞ்சம் ஓவராத் தெரியலை?' என்று அவனின் மனச்சாட்சி வாதாடியது.

'ஆனா, நான் பேசறதை யாரு ஒட்டுக் கேட்கச் சொன்னது?' என்று மனது நினைத்தது. உடனே, 'ஆமாம், நீ இன்னும் கொஞ்சம் சத்தமாப் பேசி இருந்தா, நேரடி

கேட்டிருக்கும். 'போனே' தேவை யாவே சுரேஷுக்குக் அவன் மனதிற்குள்ளே, அவனுக்கும், இல்லை!' என்று அவன் மாற்றி வாதாடி அவளிடம் தோற் அவளுக்கும் மாற்றி, றுக் கொண்டிருந்தான். அதே சமயம், அவன் மூளையின் ஒரு ஓரமாக, கௌதம் அன்றொரு நாள் சொன்ன, 'ஒரு நாளுன்னாலும் ஒரு நாள் நீ யார்கிட்டயாவது நல்லா 'டோஸ்' வாங்கிக் கட்டிக்கப் போற!' என்ற வாக்கியம் வேறு தேவையில்லாமல் மின்னி மின்னி மறைந்து அவனை இம்சித்தது.

'நான் பேசறதுக்கு ஒரு சந்தர்ப்பம் கூடக் கொடுக் காமல் இப்படி திடீர்னு புயல் மாதிரி வந்து மறைஞ் சிட்டாளே!' என்று எவ்வளவு நேரம் தான் அவளைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தானோ, அவன் நண்பர்கள் ஆர்ப்பாட்டத்துடன் வந்து அவனை உசுப்பி, கலாய்த்து, கிண்டலடித்து என்று என்னென்னவோ செய்தும் அவன் மனது சரியாகவில்லை. ஆனால், தன் நண்பர்களுக்காக, மனதில் இருப்பதை வெளிக்காட்டா மல், முகத்தில் சிரிப்பை முயன்று வரவழைத்துக் கொண்டு ஒரு வழியாகச் சாப்பிட்டு முடித்து, அவர்களிடம் இருந்து விடைபெற்று வீட்டிற்குச் சென்றான்.

வீட்டை அடைந்தவனுக்கு, அந்தப் பெண் சொன்ன தெல்லாம் மீண்டும் மீண்டும் அவன் காதுக்குள் ஒலித்துக் கொண்டிருந்தது. 'ச்சே! யாரோ ஒரு பெண், உன்னைத் திட்டினா, உனக்கு என்ன வந்தது? அதையே நினைச்சுட்டு இருக்காம ஒழுங்கா வேற வேலையைப் பாரு,' என்று அவனின் ஒரு மனம் அவனை மிரட்டியது. ஆனால், அவனின் இன்னொரு மனமோ அதைக் கேட்டு முரண்டியது! ச்சே! ஒரு பொண்ணைப் பார்த்து ரசிக் கறது தப்பா? வந்துட்டா என்னமோ பெரிய இவ மாதிரி.



வேணும்ன்னா அவளும் என்னைக் கிண்டல் செய்யட்டும். நான் என்ன வேண்டாம்ன்னா சொன்னேன்?' என்று அவன் இயல்பான குணம் தலை தூக்க, அதே சமயம் அவனின் கை பேசி ஒலித்தது.

அதை எடுத்து, ''சொல்லு கௌதம்!'' என்றான் குரலில் சிறு தொய்வுடன்.

''உன்னோட 'டின்னெர்' எப்படி இருந்தது? நாம் ஒரு 'கேரியர் எக்ஸ்போ' (Career Expo) நடத்தறதுக்குத் திட்டம் போட்டிருக்கோமே, அதைப் பத்திப் பேசறதுக்காகக் கூப்பிட்டேன். இன்னும் ரெண்டு வாரம்தானே இருக்கு. அது தான்! நீ இப்போ ஃப்ரீயா? இல்லைன்னா நாளைக்குப் பார்க்கலாமா?'' என்றான் கௌதம்.

அவனுக்கிருந்த மனநிலையில் வேலை செய்ய முடியும் என்று தெரியவில்லை. அதனால் கௌதமிடம், ''இல்லை கௌதம்! நான் நாளைக்கு உன்னோட வீட் டுக்கு ஒரு பதினோரு மணியளவில் வரேன். அப்போ பார்க்கலாம்,'' என்று சுருக்கமாக முடித்தான்.

'இவனுக்கு என்ன ஆச்சு? எப்போதுமே வேலைன்னு வந்துட்டா சாப்பாடு, தண்ணி கூட வேண்டாமே இவ னுக்கு. இவனோட சுறுசுறுப்பைப் பார்த்து நானே எத் தனை தடவை அவனை மாதிரி இருக்க முடியலை யேன்னு நினைச்சிருக்கேன். அவனிடமே அதைச் சொல்லியும் இருக்கிறேன். ஒருவேளை உடம்பு கிடம்பு சரியில்லையோ?' என்று மனதுக்குள் நினைத்தவன், ''பாலா! என்ன ஆச்சு? உடம்பு ஏதாவது சரியில்லையா? நான் வேணும்னா கிளம்பி வரட்டுமா?'' என்று அக்கறை யுடன் கேட்டான்.

''ஆஹா! நாம ஏதோ சரியில்லைன்னு கண்டு பிடிச்சிட் டானே. இவன் இவ்வளவு புத்திசாலியா இருக்கக்

கூடாது. இவனுக்கு இப்போ விளக்ம் வேற சொல்ல கூடாது. அவன் இங்க வந்தா அப்பறம் நம்ம வாயி லிருந்து எல்லா விஷயத்தையும் பிடுங்கிடுவான். சரி! அவன் எடுத்துக் கொடுத்ததையே பிடிச்சிட்டு அவன் கிட்ட இருந்து தப்பிக்கலாம்,' என்று மனதுக்குள் அவசர மாக ஒரு ஒத்திகை பார்த்துவிட்டு, சாதாரணமான குரலை வரவழைத்து, ''ஒண்ணுமில்லை கௌதம்! கொஞ்சம் தலைவலிக்குது. அவ்வளவுதான். நல்லாத் தூங்கினா சரியா யிடும். அதனாலதான் சொன்னேன். வேற ஒண்ணும் இல்லை. ஆமா! மதுவும் வசந்தும் மும்பை கிளம்பிட்டாங் களா?'' என்று சாதாரணமாகப் பேச்சைத் தொடர்ந்தான்.

கௌதமும், ''தலைவலியா? மாத்திரை எதாவது போட்டுட்டு தூங்கு. நாளைக்கு வரணும்ன்னு இல்லை. நானே பார்த்துக்குவேன். நீ நல்லா படுத்து 'ரெஸ்ட்' எடு. வசந்தும், மதுவும் அங்க போய் 'போன்' பண்ணினாங்க. இன்றைக்கு 'நைட்' அங்கிருந்து 'செசெல்ஸ்'க்கு (*Seychelles*) ஃபிளைட் பாலா! நான் உன்னை இதுக்கு மேல தொல்லை செய்ய விரும்பலை. போய்ப் படுத்து நல்லாத் தூங்கு,'' என்றான் அவன் நண்பன் மேல் கொண்ட அக்கறையில்.

''கௌதம்! நாளைக்கு நான் கண்டிப்பா வரேன். நல்லா தூங்கி எழுந்திருச்சா சரியாகிவிடும். குட் நைட்!'' என்று பேசியை வைத்தான்.

கௌதமிடம் சொன்னதற்கு எதிர் மறையாக, தூங்காமல் அவன் எண்ணங்களை மறுபடியும் அந்தப் பெண் சீற்றத் துடன் ஆக்கிரமித்துக் கொண்டாள். இரவு வெகு நேரம் கழித்து, அவளைப் பற்றி நினைப்பிலிருந்து அரும்பாடு பட்டு வெளி வந்தவன், நித்திராதேவியிடம் சிறைப்பட்டான்.

* * *



மறுநாள் காலை, தூங்கி எழுந்த பாலாவிற்கு, 'அதைப் பத்தியே நினைத்துக் கொண்டிருந்தால் நீயே உன் சந் தோசத்துக்கு குழி பறித்துக் கொள்வாய். போய் ஒழுங்கா வேலையைக் கவனி,' என்று அவன் புத்தி எச்சரிக்கை செய்ய, அதையே கடைப்பிடிக்க எண்ணி, ஒரு கணம் கூடத் தாமதிக்காமல், கிளம்பிக் கௌதமின் வீட்டிற்குச் சென்றான்.

கௌதமும், அவனை வரவேற்று, அவனின் அறைக்குள் அழைத்துச் சென்று, ''இப்போ எப்படி இருக்கு? நேத்து நல்லா தூங்கினியா? என்னடா ஆச்சு? குடிச்சியா?'' என்று சரமாரியாகக் கேள்விகளைக் கேட்டான்.

பாலா, சிரித்துவிட்டு, ''இல்லடா! நேத்து நான் குடிக்கவேயில்லை. வெயில்னால இருக்கலாம். இப்போ சரி ஆயிடுச்சு. தலைவலி வந்ததுக்கெல்லாமா கவலைப் படுவாங்க? சரி. அதைவிடு! வசந்தும், மதுவும் 'செசெல்ஸ்' போய்ச் சேர்ந்துட்டாங்களா? 'போன்' பண்ணினாங்களா?'' என அவனிடம் பேச்சை மாற்ற முயன்றான்.

''ஆமாம்! இன்னைக்குக் காலையிலதான் பேசி னாங்க. அதோட வசந்த், அவங்க 'ஹனிமூன்'ல இருக்கப் போகும் அடுத்த இரண்டு வாரத்துக்கு 'போன்' செஞ்சு எந்தத் தொல்லையும் செய்யக் கூடாது,'ன்னு வேற சொல்லியிருக்கிறான்,'' என்று கூறிச் சிரித்தான் கௌதம்.

அதன் பின் ஏதோ ஞாபகம் வந்தவனாகக் கௌதம், ''ஆமா! நீ உன்னோட அப்பாவை இங்க கூட்டிட்டு வர்ற தாப் போனியே, என்ன ஆச்சு? கல்யாண வேலைல நானும் அதைப் பத்தி உன்கிட்ட கேட்க மறந்துட்டேன். நீயும் ஒண்ணுமே சொல்லலை. அப்பா என்ன சொன்னார்?'' என்று கேட்டான்.

''அப்பாவா! என்னைச் சிறையில் அடைக்க முயற்சி பண்ணாருடா. நான் கல்யாணம் பண்ணிகிட்டாதான் என்கூட இருப்பாராம். 'கல்யாணத்துக்கும், அவர் வருவதற்கும் என்ன சம்பந்தம்?'ன்னு கேட்டா, நான் அவருக்குச் சீக்கிரமா பேரக் குழந்தைகளைப் பெத்துக் கொடுத்தா அவங்களைப் பார்த்துட்டு சந்தோசமா காலத்தைக் கடத்துவாராம். அதுவும் வரப் போற மருமகள், நான் ஆபீஸ்ல இருந்து வீட்டிற்குத் திரும்பிப் போற வரைக்கும் அவரோட பேச்சுத் துணைக்கு இருப்பாளாம்.

'''சரி! எனக்கு வரப் போறவ வேலைக்குப் போயிட்டா என்ன பண்ணுவீங்க?'ன்னு கேட்டா, வேலைக்குப் போனாலும் என்னை விடச் சீக்கிரமா வீட்டுக்குக் கண்டிப்பா வந்துடுவான்னு, நான் வேலை செய்வதைப் பத்திக் கிண்டல் வேற இந்த அப்பாவுக்கு. தூரத்துச் சொந்தத்துல ஒரு பொண்ணைப் பார்த்து எல்லா ஏற்பாடும் செய்திருக்கிறாராம். நான் சரின்னு சொன்னா உடனே கல்யாணம் தான் அப்படின்னு சொன்னாரு பாரு. அப்படியே அதிர்ச்சி ஆயிட்டேன். அதனால அவர்கிட்ட இப்போதைக்கு அங்கேயே இருங்க. நானும் இனிமேல் ஊருக்கு வர மாட்டேன்னு சொல்லிட்டு வந்துட்டேன்,'' என்றான் எரிச்சலுடன்.

''அப்பா சொல்லற மாதிரி கல்யாணம் பண்ணிக்க வேண்டியதுதானே பாலா? உனக்குப் பொண்ணுங்களைப் பிடிக்காதுன்னு சொல்ல முடியாது. அப்புறம் எதுக்குக் கல்யாணத்துக்கு இப்படி பயந்து நடுங்கற? நானும், இத்தனை நாள், நீ சும்மா விளையாட்டுக்குத்தான் சொல்லறேன்னு நினைச்சேன். நிஜமாத்தான் சொல்லிட்டு இருந்திருக்கிறியா?'' என்றான் கௌதம்.



''எனக்குத் தெரியலைடா. கல்யாணம் பண்ணினா சுதந்திரமா இருக்க முடியாது. நாம அவங்களுக்காகத்தான் எல்லாம் செய்யணும்ன்னு எதிர்பார்ப்பாங்க. இப்போ நான் நினைச்ச உடனே கிளம்பி இங்க வர முடிஞ்சது. கல்யாணம் பண்ணினா அதெல்லாம் முடியாது. எதற்கெடுத்தாலும் அந்தப் பொண்ணுகிட்ட சொல்லிட்டுத் தான் செய்யணும். அது மட்டுமில்லை, அவங்க மட்டும் தான் நமக்கு உலகம் அப்படின்னு நினைக்கணும்ன்னு சொல்லுவாங்க. நமக்கு இருக்கிற உறவுகளை எல்லாம் பிரிச்சிருவாங்க. இதெல்லாம் தேவையா? எனக்கு இப்பவே 'லைப் ஜாலி'யா இருக்கு. நினைச்ச நேரம் நினைச்சதைப் பண்ண முடியுது. அதனால் எதுக்குக் கல்யாணம் பண்ணிக்கணும்?'' என்றான் பாலா.

அதைக் கேட்ட கௌதம், ''எவ்வளவு நாளைக்குடா, நீ இப்படி நினைச்சவுடனே என்னைப் பார்க்க ஓடி வருவதும் மற்ற 'ஃபிரெண்ட்ஸ்' கூட ஊர் சுத்தறதும்? சரி! கல்யாணத்துக்கு அப்புறம் இதைச் செய்ய முடியாதுன்னு யார் சொன்னா? கல்யாணம் பண்ணினவங்க எல்லாம் நீ சொல்லற மாதிரியா உறவுங்களைப் பிரிஞ்சு இருக்காங்க? யாரோ ஒரு வீட்ல நடக்கும். அதைப் பார்த்துட்டு நீ பயப்படறது நியாயமே இல்லை. நீ இப்படி முடிவு பண்ணி ஏன் உன் அப்பாவோட மனசைச் சங்கடப் படுத்தற?'' என்றான்.

சற்று நேரம் அமைதியாக இருந்த பாலா, ''நீ நினைக்கிற மாதிரி யாரோ வீட்ல இல்லை. எங்க வீட்ல நடந்தது. என்னோட அப்பாவுக்குக் கூடப் பிறந்தது ரெண்டு தங்கச்சிங்க. அப்பாவுக்குக் கல்யாணம் ஆனவுடனே என்னோட அம்மா, அப்பாகிட்ட ஏதோ சொல்லி, அத்தைங்க கூட சண்டை போட்டுட்டு அவங்களை வீட்டுக்கு வரவிடாம

பண்ணிட்டாங்க. அம்மா இறந்து போய் எட்டு வருஷம் கழிச்சும், அப்பா அவங்களை வீட்ல சேர்த்துக்கலை.

''நல்லா பாசமா வளர்த்தவங்களை எப்படிப் பிரிக்க மனசு வரும்? எனக்கு ஒரு நல்ல அம்மாவா இருந்தாங்க தான். இல்லைன்னு சொல்லலை. ஆனா, என்னோட அம்மாவே உறவுகளை, சொந்த பந்தங்களைப் பிரிச்சவங் கன்னு நினைக்கிறப்போ கஷ்டமா இருக்கு. அப்பா, அதனாலதானே இப்போ தனிமரமா அங்க ஊர்ல இருக் கிறாரு. அதனாலதான் இது மாதிரி யாரும் என்னை ஆட்டுவிக்கக் கூடாதுன்னு நினைக்கிறேன். எனக்கும் கல்யாணம் ஆனா, வரப்போற பொண்ணு என்னோட பிரெண்ட்ஸ், அப்பா, எல்லோரையும் என்கிட்டே இருந்து பிரிச்சிட்டா...'' என்றான் கவலை தோய்ந்த குரலில்.

''இதுதான் உன்னோட பயமா? சரி! உனக்கு இந்த விஷயம் எல்லாம் எப்படித் தெரியும்? யாரு சொன்னாங்க பாலா? உங்க அப்பாவா?'' என்றவனிடம், ''அப்பா எப்படி என்கிட்டே இதை எல்லாம் சொல்வார்? அவர்தான் இன் னும் என்னோட அத்தைங்க மேலே கோவமா இருக் காரே. என்னோட அத்தைகள்தான் சொன்னாங்க. என்ன தான் அவங்க எங்க வீட்டுக்கு வரலைன்னாலும் சின்ன வயசுல இருந்தே, என்னை ஊர் பார்க்கறப்போ வந்து பாசமாப் பேசுவாங்க.

'''ஸ்கூல்'ல படிக்கறப்ப இவங்க ஏன் நம்ம வீட்டுக்கு வர்றதில்லைன்னு நான் யோசிச்சிருக்கேன். அதையே அவங்ககிட்டேயும் கேட்டேன். அப்போதான் அவங்க இதைச் சொன்னாங்க. அப்பாவிடமும் சொல்ல வேண் டாம், அப்படிச் சொன்னா அப்பாவுக்கு ரொம்பக் கோவம் வரும், அப்புறம், அவங்க என்னிடம் வந்து பேசக்கூட



முடியாதுன்னு சொல்லி அழுதாங்க. அதனாலதான், அப்பா கிட்ட இதைப் பத்தி அப்ப கேட்டதே இல்லை. அதற்கப்புறமும் கேட்கத் தோணலை. இவ்வளவு நல்லா பாசமா இருக்கறவங்களை அம்மா இப்படி பிரிச்சிட் டாங்களேன்னு எனக்குக் கஷ்டமா இருந்தது. அதனால தான், சின்ன வயசுல இருந்தே கல்யாணம் பண்ணிக்கக் கூடாதுன்னு இருக்கேன்!'' என்று தன் நண்பனுக்கு விளக்கினான்.

''எனக்கு என்னமோ, நீ உன்னோட அப்பாகிட்டயும் கேட்கறது நல்லதுன்னு தோணுது. அது எப்படி ஒருத்தர் சொன்னதை மட்டும் வச்சுக்கிட்டு இப்படி முடிவு பண் ணுவ? ஒரு வேளை உன் அத்தைகள் உன்கிட்ட பொய் சொல்லி இருந்தாங்கன்னா? அப்படிப் பாசமா இருக்கற வங்க உன் அப்பாகிட்ட போய்ப் பேச முயற்சி பண்ணி யிருக்கணும். அப்படியில்லாம எதுக்கு உன்னோட அம்மாவைப் பத்தி உன்கிட்டேயே தப்பாச் சொல்றாங்க? உன்னோட அப்பா என்னதான் கோவக்காரரா இருந்தாலும் உன்னோட அத்தைங்க உன்கிட்ட மட்டும், அதுவும் அப்பாவுக்குத் தெரியாமப் பேச முயற்சி செய்யறாங் கன்னா எனக்கு என்னமோ அது சரின்னு படலை.

''ஒருவேளை அவங்க சொன்னது உண்மையா இருந் திருந்தா உன்னோட அப்பாவும் உன்கிட்ட இதைச் சொல்லி இருப்பாங்களே! அதாவது உங்க அம்மா போன பிறகாவது. முதல்லதான் நீ சின்னப் பையனா இருந்த. அப்போ நல்லது எது கெட்டது எதுன்னு யோசிக்கத் தெரியாது. இப்பவாவது யோசி. அவங்க சொன்னதை வச்சுக்கிட்டு உன்னோட வாழ்க்கையைக் கெடுத்துக்காத. கொஞ்சம் யோசிடா!

''நீ 'கம்பெனி'ல எடுக்கிற முடிவுகளைப் பார்த்து நானே அசந்து போயிருக்கிறேன். ஆனா சொந்த 'லைஃப்'ல இப்படி சொதப்பிட்டு இருக்கியே. அடுத்த தடவை ஊருக்குப் போறப்போ அப்பாகிட்ட கேட்டுப் பாரு. அப்புறம் யோசிச்சு ஒரு முடிவு எடு. நீ நினைக்கிற மாதிரி இல்லைடா உன்னோட அம்மா. அப்படி இருந்திருந்தா, உன்னோட அப்பாவோட வாயில இருந்து ஒரு தடவையாவது வந்திருக்கும். எனக்கு என்னமோ வேற ஏதோ நடந்திருக்குன்னு தோணுது. நான் சொல்றதைச் சொல்லிட்டேன். அப்புறம் உன் இஷ்டம்!'' என்று முடித்தான் கௌதம்.

அவனுக்கு இஷ்டம் இல்லையென்றாலும் நண்பன் சொன்னதற்காக, ''சரி! நான் அதைப் பத்தி அப்புறமா யோசிக்கறேன். இப்போதைக்கு அந்தப் பேச்சை விடு. நாம வந்த வேலையைப் பார்ப்போம்,'' என்று கூற, இருவரும் வேலையில் ஆழ்ந்தனர்.

* * *

நடுவில் இருந்த இரண்டு வாரங்களும் படு வேகமாக இறக்கை கட்டிக் கொண்டு பறந்து செல்ல, அவர்கள் வேலைக்கு ஆள் எடுக்கவெனத் திட்டமிட்டிருந்த நாளும் வந்தது. காலை பத்து மணி அளவில், அவினாசி ரோட்டிலுள்ள பத்மாவதி அம்மாள் கல்யாண மண்டபத்தில் நடைபெறுவதாக இருந்த 'கேரியர் எக்ஸ்போ'வுக்குச் செல்ல, நண்பர்கள் இரண்டு பேரும் மிகவும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர். அவர்கள் எல்லாவற்றையும் தயார்ப்படுத்தி எடுத்துக்கொண்டு, மேலும் இரண்டு நபர்களுடன் அங்கே சென்றடைந்தனர். கௌதமும், பாலாவும் அந்த 'கம்பெனி'யை நடத்தி வந்தாலும், அனைவரின் கருத்துக்களைக் கேட்டும், மதித்தும்



வந்ததால், அங்கு வேலை செய்பவர்கள் மனநிறைவுடன் வேலை செய்து வந்தனர்.

காலை பத்து மணியிலிருந்து நிறைய மாணவர்கள், மற்றும் வேலையில் இருப்பவர்கள் என்று கூடம் நிரம்பி வழிய ஆரம்பித்து விட்டது. இவர்களும் அவர்கள் கேட்கும் ஒவ்வொரு கேள்விக்கும் சலிக்காமல் பதில் சொல்லிக் கொண்டிருந்தனர். மதிய உணவு வேளையின் போது, கொஞ்சம் கூட்டம் குறைய பாலாவும், கௌதமும் சற்று ஓய்வெடுத்தனர்.

அப்பொழுது அங்கே வந்த ஹர்ஷினி, கௌதமிடம், 'தான் இப்போது பொழுது போகாமல் வீட்டில் இருப்பதாகவும், அதனால் அவன் 'கம்பெனி'யில் வேலை இருந்தால் அவள் சந்தோஷமாக அதில் சேர விருப்பப்படுவதாகவும்' கூறினாள். அதைக் கேட்ட கௌதம், 'இது என்னடா வம்பாப் போச்சு?' என்று நினைத்துக் கொண்டு, ''ஹர்ஷினி, இப்போதைக்கு இந்த இடங்கள் மட்டும் தான் காலியாக இருக்கு!'' என்று அவன் கணினி மென்பொருளாளர் வேலைகள் சிலவற்றைச் சுட்டிக் காட்டினான். ''உனக்கு இருக்கும் படிப்புத் தகுதிக்கு இதெல்லாம் பண்ண முடியாது. அது தவிர வேற இடங்கள் காலி இல்லை. மேலும், நாங்க ஏதாவது வேணும் என்கிற போது உன்கிட்ட தெரியப்படுத்தறோம்,'' என்றான் நல்லவிதமாகவே.

''ப்ளீஸ்! வீட்டுல 'போர்' அடிச்சிட்டுத்தான் உட்கார்ந்திருக்கேன் கௌ. நான் சும்மா வந்து வேலை செய்யறேன். நீங்க எனக்குச் சம்பளம் எல்லாம் கொடுக்கத் தேவையில்லை!'' என்று மீண்டும் தன் விருப்பத்தைச் சாதிப்பதிலேயே நின்றாள்.

''நான் மட்டும் தனியா முடிவு எடுக்க முடியாது. நான் அப்புறம் பாலா கிட்ட பேசிட்டு, என்ன வேலை கொடுக்கலாம்ன்னு முடிவு பண்ணி உன்கிட்ட சொல்லறேன் ஹர்ஷினி, சரியா?'' என்றான்.

அவள் பதில் சொல்லுமுன், மேலும் நிறையக் கூட்டம் வர ஆரம்பிக்க, ஹர்ஷினி கௌதமிடம், ''சரி! நான் ஷாப்பிங் போயிட்டு இரண்டரைக்கு வரேன். வசந்த்தைக் கூப்பிட 'ஏர்போர்ட்' போகப் போறீங்கதானே? நானும் உங்ககூட வரேன்,'' என்று தெரிவித்துவிட்டு, அவனுடைய பதிலுக்குக் கூடக் காத்திராமல் சென்று விட்டாள்.

மதியம் இரண்டு மணி அளவில், பாலா, அன்று அவனைத் திட்டிய பெண்ணைச் சிறிது தொலைவில் பார்த்தவன், 'இவள் எங்கே இங்கு வந்தாள்? தேடிப் பிடித்துத் திட்டறதுக்கு வந்துட்டாளா? இங்கேயே இருந்தா நமக்கு ஆபத்து. கௌதமிடம் ஏதாவது சொல்லிட்டு இங்கிருந்து கிளம்பிடணும்,' என்று மனதிற்குள் நினைத்தான். நினைத்தபடியே, ''கௌதம், நீ கொஞ்ச நேரம் பார்த்துக்கோ. நான் 'பாத்ரூம்' போயிட்டு வரேன்,'' என்று அவனிடம் இருந்து பதிலை எதிர்பார்க்காமல், அந்த இடத்தைவிட்டு அகன்றான். கௌதமும், வேறு வேலை யில் மும்முரமாக இருந்ததினால் இவனின் அவசரத்தைக் கவனிக்கத் தவறினான்.

தான்யா, கௌதமிடம் வந்து பேசிவிட்டுச் செல்லும் வரை தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த பாலா, அவள் சென்றவுடன் கௌதமிடம் வந்து, ''என்ன கௌதம், நான் போனதுக்கு அப்புறம் நிறையப் பேர் வந்தாங்களா? யாராவது 'அப்ளிகேசன்' தந்தாங்களா?' என்று ஒன்றும் தெரியாதவன் போலத் தூண்டில் போட்டான்.



அந்தத் தூண்டிலில் சிக்கிய கௌதமும், ''இல்லை பாலா! நீ போனதுக்கு அப்புறம் ஒரே ஒரு பொண்ணு தான் வந்து 'அப்ளிகேசன்' கொடுத்தாங்க. அங்கே இருக்கு பாலா,'' என்று எடுத்துக் காண்பித்தான். அது தானே பாலாவுக்கும் வேண்டும். அதை வாங்கி நோட்டம் விட்டவன், 'பொண்ணு பெயர் தான்யலக்ஷ்மி. படிச்சது எல்லாம் சென்னையில். ஆனா, ஏன் படிச்சு முடிக்க இவ்வளவு நாள் ஆகி இருக்கு? சரி! இதைப் பத்தி அப்புறம் பார்க்கலாம். ரொம்ப நேரமா பார்த்தா, கௌதமுக்கு ஏதாவது சந்தேகம் வந்துடப் போகுது!' என்று நினைத்தவன், ''நீ எப்போ 'ஏர்போர்ட்' போகணும்?'' என்றான் கௌதமிடம்.

''இன்னும் கொஞ்ச நேரத்துல கிளம்பணும். ஹர்ஷினி வேறே வர்றேன்னு சொல்லி இருக்கா,'' என்று அவனுக்குப் பதில் சொல்லிக் கொண்டே கண்களைச் சுழற்றியவன், அங்கே சற்றுத் தொலைவில் நின்று கொண்டிருந்த வர்ஷனாவைப் பார்த்தான். 'இவள் எங்கே இங்கு வந்திருக்கிறா?' என்று நினைத்து, ''பாலா, ஒரு நிமிஷம் இரு. என் கூடப் படிச்ச பொண்ணு, நாம ஊட்டியில பார்த்தோமே, இங்க வந்திருக்காங்க. நான் போய்ப் பேசிட்டு வரேன்,'' என்று வர்ஷனாவை நோக்கிச் சென்றான்.

'வர்ஷனா' என்று அவளை யாரோ கூப்பிடுவதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தவள், கௌதமைச் சுத்தமாக அங்கு எதிர்பார்க்கவில்லை என்பதை அவள் கண்கள் அப்பட்டமாக எடுத்துரைத்தன. ஆனால், அவள் வாயோ, ''கௌதம், நல்லா இருக்கீங்களா? சாரி கௌதம்! உங்க 'சிஸ்டரோ'ட கல்யாணத்துக்கு வர முடியலை. வேற வேலை வந்துடுச்சு. கல்யாணம் எல்லாம் நல்லபடியா முடிஞ்சதா? நீங்க எப்படி இங்க?'' என்று மன்னிப்பை வேண்டிவிட்டு, பின் கேள்விகளை அடுக்கினாள்.

''ஓ...! அது பரவாயில்லை. திடீர்னுதானே நானும் வந்து பத்திரிகை கொடுத்தேன். அது சரி! நான் கேட்க வேண்டிய கேள்வியை எல்லாம் எங்க ஊருக்கு வந்து எங்ககிட்டயே கேட்கறீங்க?'' என்று சிரித்தவன், ''நான் நல்லா இருக்கேன்!'' என்று தன் 'கம்பெனி'யைப் பற்றி விவரித்தான். தன் 'கம்பெனி'க்குக் கணினி மென்பொரு ளாளர்கள் தேவைப்படுவதாகவும், அதனால் இங்கே வந்து 'ஸ்டால்' போட்டு இருப்பதாகவும், அவர்களின் 'ஸ்டால்'லைச் சுட்டிக் காட்டினான். அதே சமயம் பாலாவும் அவர்களைப் பார்த்துக் கையசைத்தான்.

பதிலுக்குக் கையசைத்தவள், ''அப்படியா, சந்தோசம். நான் இங்க ஒரு 'ஃபிரெண்டை'ப் பார்க்கக் கோவைக்கு வந்தேன். வீட்டுல பொழுது போகாம இங்க வந்தோம். உங்க 'பிசினஸ்' எல்லாம் எப்படிப் போகுது?'' என்று விசாரித்தாள்.

''பிசினஸ்' எல்லாம் நல்லாப் போயிட்டு இருக்கு. நிறைய வெளிநாட்டு 'ப்ராஜெக்ட்ஸ்' தான். ஆரம்பத்துல கொஞ்சம் கஷ்டமா இருந்தது. பாலாவும் கூட இருக்கிறது னால ஒரு வழியா சமாளிச்சு, இப்போ எல்லாம் சரியா யிடுச்சு!'' என்று இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே, அந்தக் கூடத்திற்கு வந்த ஹர்ஷினி, பாலாவிடம் தொணதொணத்து, கௌதம் எங்கிருக்கிறான் என்று கண்டுபிடித்து, அங்கு வந்து சேர்ந்தாள்.

கௌதம் ஒரு அழகிய இளம் பெண்ணுடன் பேசு வதைக் கண்ட ஹர்ஷினியின் மனம் உலைக்களமானது. 'யார் இந்தப் பொண்ணு? இப்படிப் போய் வழிஞ்சு சிரிச் சுப் பேசிட்டு இருக்கானே! என்கிட்ட ஒரு நாளாவது இப் படிச் சிரிச்சிப் பேசி இருக்கிறானா? நானும் எவ்வளவோ முயற்சி செஞ்சு பார்த்துட்டேன். ஒரு வார்த்தை



பேசறதுக்கே யோசிக்கறான். ஆனா, இந்தப் பொண்ணு கூட இப்படி வழிஞ்சுட்டு இருக்கான். கல்யாணம் ஆகட்டும். இதுக்கு எல்லாம் சேர்த்து வச்சு இவனை உண்டு இல்லைன்னு பண்ணறேன்!' என்று பொருமிக் கொண்டே அருகில் வந்தவளின் காதில் தேனாக வந்து பாய்ந்தது அவன் அந்தப் பெண்ணிடம் கேட்ட கேள்வி.

''உன் பொண்ணு நட்சத்ரா எப்படி இருக்கா? நட்சத் ராவைக் கூட்டிட்டு வரலையா? முடிஞ்சா, நீங்க ஊருக்குப் போறதுக்கு முன்னாடி அவளைக் கூட்டிட்டு எங்க வீட்டுக்கு அவசியம் வரணும்!'' என்று அழைப்பு விடுத் தான். அவன் வர்ஷனாவிடம் அழைப்பு விடுக்கும்போதே, ஹர்ஷினி இவர்கள் பேசிக் கொண்டிருந்த இடத்திற்கு வந்து கௌதமை ஒட்டியவாறு நின்றாள்.

ஹர்ஷினியைப் பார்த்துச் சிநேகமாகப் புன்னகைத்தவள், ''சாரி கௌதம்! நான் இன்னைக்கு 'நைட்' கிளம்பறேன். கட்டாயம் இன்னொரு தரம் வரேன். உங்க தங்கையிடம் என் வாழ்த்துக்களைச் சொல்லிடுங்க. வந்து ரொம்ப நேரமாச்சு. என் 'ஃபிரெண்ட்' என்னைத் தேடுவா. நான் கிளம்பறேன். 'பை'!'' என்று விடை பெற்றவளிடம்,

''இவங்க வசந்தோட தங்கை, ஹர்ஷினி! என் தங்கை மதுவந்தியோட நாத்தனார். இவங்க, வர்ஷனா, என்கூடப் படிச்சவங்க!'' என்று இருவருக்கும் அறிமுகப்படுத்தி விட்டு, ''நாங்களும் கிளம்பணும். கூடிய விரைவில் மறு படியும் சந்திப்போம்,'' என்று அவளிடம் விடைபெற்ற வன், பாலாவிடம் வந்தான்.

பாலாவும், மீதமிருக்கும் வேலையை முடித்துக்கொண்டு வீடு செல்வதாகக் கூற, இரவு வீட்டிற்குச் செல்வதற்கு முன் அவனைச் சந்திப்பதாகக் கூறி, இரண்டு வாரம் கழித்துத் தேனிலவிலிருந்து திரும்பி வரும் தங்கையை

யும், நண்பனையும் பார்க்கும் ஆவலுடன், ஹர்ஷினி யோடு விமான நிலையம் கிளம்பிச் சென்றான்.

4

''கண்ணே,
நீ என் மனதைக்
களவாடியதால்,
என் கண்கள்
உன்னைக் கைது செய்து
களவாடப்பட்ட இதயச் சிறையில்
தள்ளின!
உன் தண்டனை
என் ஆயுட்காலம்!

கோவை விமான நிலையம்! சரியான நேரத்தில் மும்பையிலிருந்து வந்து தரையிறங்கிய விமானத்தில் இருந்து வசந்தும், மதுவும் இறங்கி, கௌதமையும், ஹர்ஷினியையும் பார்த்துக் கையசைத்து, அவர்களின் உடைமைகளை எடுத்துக் கொண்டு வெளியே வந்தனர்.

கௌதம், மதுவின் தலையைப் பாசத்துடன் தடவிய வன், வசந்தைத் தோளோடு அணைத்துக் கொண்டான். மதுவின் முகத்தின் மலர்ச்சியிலிருந்தே அவளைக் கேட் காமலே அவளின் பயணம் மகிழ்ச்சிகரமானதாக இருந் திருக்கிறது என்று அறிந்தாலும், ''உங்க பயணம் எப்படி இருந்தது?'' என்று சும்மாவேனும் கேட்டு வைத்தான்.

வசந்தும், 'நாங்க அதைப் பார்த்தோம், இதைப் பார்த் தோம். அதைப் பண்ணினோம், இதைப் பண்ணினோம், எவ்வளவு அழகா இருந்தது தெரியுமா? எங்களுக்குத் திரும்பி வர மனசே இல்லை. உனக்குத்தான் நாங்க



நன்றி சொல்லணும்', என்று கௌதமுக்கு 'ஐஸ்' வைத்துக் கொண்டிருந்தான். ஏனெனில், கௌதம் தான் அவர்களின் திருமணப் பரிசாக அந்தப் பயணத்தை ஏற்பாடு செய்து கொடுத்திருந்தான்.

''உங்களுக்கு எப்படித் திரும்பி வர மனசு வரும்?'' என்று கௌதம் சிரித்த அதே நேரம், ஹர்ஷினியை யாரும் கண்டு கொள்ளவில்லை. அந்த எரிச்சலில், ''சரி! சரி! உங்க பாச மழையை அப்புறமா வச்சுக்கோங்க. ஒரே வெயிலா இருக்கு. வாங்க, வீட்டுக்குப் போகலாம்,'' என்று அவள் கிண்டலாகக் கூற, அனைவரும் சிரித்த வாறே கிளம்பினர்.

வந்தவர்களை முதலில் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றவன், தன் பெற்றோர்களிடம் சிறிது நேரம் பேசி விட்டுப் பின், அவர்களை வசந்த் வீட்டுக்கு அழைத்துச் சென்றான். அவர்களை இறக்கி விட்ட சிறிது நேரத்தி லேயே, அவர்கள் அசதியாக இருப்பார்கள் என்பதினால் அவர்களைப் போய் ஓய்வெடுக்குமாறு கூறிவிட்டுக் கிளம்ப முயன்றான். ஆனால், வசந்தும் அவன் தந்தை தேவராஜனும் அவனை விட்டால்தானே? வசந்த் அவனுக்கு அசதியாக இல்லை என்றான். தேவராஜனோ, கௌதம் எப்போதாவதுதான் அங்கே வருகிறான், அதனால் இருந்து இரவு உணவை முடித்துக் கொண்டு தான் செல்ல வேண்டும் என்று அன்புக் கட்டளை இட்டு விட்டார். அன்புக் கட்டளையை மீற யாருக்குத் தான் துணிவு வரும்?

ஹர்ஷினி வீட்டில், அவர்கள் மிகப் பெரிய பரம்பரைப் பணக்காரர்கள். சிறு வயதில் இருந்தே ஒரே பெண் என்ப தால் மிகவும் செல்லமாக வளர்ந்தாள். அவள் கேட்டது, பார்த்தது, நினைத்தது என்று அனைத்தும் இதுவரை

கொண்டுதான் இருந்தது. அவள்
யிலும் கிடைத்துக் கொண்டுதான் இருந்தது. அவள்
வளர வளர, அவளின் பிடிவாதமும் கூடவே வளர்ந்தது.
ஹர்ஷினியின் இந்தக் குணத்துக்கு அவளின் தாயும் ஒரு
காரணம். தேவராஜன் எவ்வளவு வசதி படைத்தவராக
இருந்தாலும் பணத்துக்கு முக்கியத்துவம் தர மாட்டார்.
அதனால்தான் தேவராஜன், வசந்த் மதுவைப் பார்த்துப்
பிடித்திருக்கிறது என்று கூறியவுடன் கல்யாணத்திற்கு
ஏற்பாடு செய்து விட்டார்.

ஆனால், அவர் மனைவி பூரணி பணத்திற்குத்தான்
முக்கியத்துவம் தருவார். அவர் ஆட்களைப் பணத்தை
வைத்துத்தான் எடை போடுவார். அதே குணம்தான்
மகளுக்கும். ஆனால், வசந்துக்கு மட்டும் அச்சுப் பிசகாமல்
அவன் தந்தையின் குணம்.

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே, வசந்தின்
அண்ணன் கிஷோரும், அவன் மனைவி நித்யாவும்
அங்கு வர, கலகலப்புக்குக் குறைவில்லாமல் நேரம்
சென்றது. உலக நடப்பு அனைத்தையும் அலசி, ஆராய்ந்து
முடித்து, கடைசியில் அவர்கள் அடுத்தவரின் வியாபாரத்
தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். இரவு உணவு
வேளையின்போது, அனைவரும் ஒன்றாக அமர்ந்து அவ
ரவர்களே போட்டுக் கொண்டு சாப்பிடுவதற்கு, அனைத்
தும் எடுத்து உணவு மேஜையில் வைத்துக் கதையடித்த
வாறே சாப்பிட்டுக் கொண்டு இருந்தனர்.

தேவராஜனும், ''இது மாதிரி எல்லோரும் உட்கார்ந்து
சாப்பிட்டா எவ்வளவு சந்தோசமா கலகலன்னு இருக்கு.
இனிமேல் இது மாதிரி மாசத்துக்கு ஒரு தடவையாவது
செய்யணும். அடுத்த தடவை உங்க அப்பா அம்மாவை
யும் சேர்த்துக்கணும். அப்படியே உங்களோட 'ஃபிரெண்ட்'



பாலாவையும் சேர்த்துக்கோங்க!'' என்றவரை அனைவரும்
ஆமோதித்தனர்.

இவை எல்லாம் பூரணிக்குப் பிடிக்கவில்லை என்
றாலும் தேவராஜனுக்காக ஒன்றும் சொல்லாமல் அனைத்
தையும் பார்த்துக் கொண்டிருந்தார். ஹர்ஷினியும்
கிடைத்தது வாய்ப்பு என்று கௌதமையே கவனியோ
கவனி என்று கவனித்துக் கொண்டிருந்தாள் சாப்பிடும்
பொழுதும் சரி, அதன் பின்னரும் சரி, ஹர்ஷினி கௌதமை
ஒரு நொடிகூட விட்டு விலகவில்லை. போதாததற்கு
அவனைக் 'கௌ... கௌ..' என்று அழைத்து வெறுப்பேற்றிக்
கொண்டிருந்தாள். சாப்பிடும் பொழுது கௌதமிற்கு
'ஸ்வீட்' தருகிறேன் பேர்வழி என்று அவள் ஏற்கெனவே
பாதி கடித்ததை அவள் தட்டிலிருந்து அவன் தட்டிற்கு
இடம் மாற்றம் செய்து, அவனின் பொறுமையைத் தடம்
மாற வைத்தாள். மற்றவர்களுக்காக வேறு வழியில்லா
மல் முகத்தை இயல்பாக வைத்து அவளைச் சகித்துக்
கொண்டிருந்தான்.

வசந்தின் பெற்றோர்கள் சாப்பிட்டுவிட்டுத் தங்களின்
அறைக்குச் சென்றுவிட, சிறியவர்கள் மட்டும் அமர்ந்து
பேசிக் கொண்டிருந்தார்கள். நேரம் போவதே தெரியாமல்
அரட்டை அடித்துக் கொண்டிருந்த கௌதமின் கைபேசி
அழைக்க, அதை எடுத்து, ''சொல்லு பாலா. எல்லாம்
ஒழுங்கா முடிஞ்சதா?'' என்றான்.

''அப்பாடா! இப்பவாவது கேட்கணும்ன்னு தோணிச்சே!
ஏன்டா! அவங்களைக் கோயம்புத்தூர் 'ஏர்போர்ட்ல' இருந்து
கூப்பிடப் போனியா இல்லை மும்பை 'ஏர்போர்ட்'டுக்
குக் கூப்பிடப் போனியா? நானும் நீ கூப்பிடுவ கூப்
பிடுவன்னு 'வெயிட்' பண்ணிப் பண்ணி, எனக்குத் தூக்கமே
வந்திருச்சு. அதுதான் என்ன பண்ணிட்டு இருக்கறேன்னு

கேட்கறதுக்குக் கூப்பிட்டேன். தங்கச்சி வந்தவுடனே என்னை மறந்துடுவியே. மதுவைப் பார்த்ததும், மலர்களைப் போல் தங்கை வந்திறங்கினாள்ன்னு பாட ஆரம்பிச்சிட்டியா?'' என்று பாடிக் காண்பித்து அவனைக் கிண்டல் செய்தான்.

கௌதமும் சிரித்தவாறே, ''சாரிடா பாலா! வசந்த்தோட வீட்லதான் இன்னும் இருக்கேன். பேசிட்டு இருந்ததுல நேரம் போனதே தெரியலை. மன்னிச்சுடுடா! இதோ இப்போ கிளம்பிட்டேன். போற வழில அங்க வந்துட்டுப் போறேன்,'' என்று வைத்தான்.

பேசியை வைத்தவன் மற்றவர்களிடம், ''பாலாவிடம் 'நைட்' வீட்டுக்குப் போறதுக்கு முன்னாடி வந்துட்டுப் போறேன்னு சொல்லி இருந்தேன். சுத்தமா மறந்துட்டேன். கொஞ்சம் வேலை இருக்கு. நான் கிளம்பறேன்,'' என்று கூறி 'ஹர்ஷினி'யிடம் இருந்து தப்பித்தோம், பிழைத்தோம் என்று நினைத்தவாறே கிளம்பினான்.

பாலா அவனை அழைத்ததற்குக் காரணம் இருந்தது. அவன் தான்யாவைப் பற்றிய தகவல்களைத்தான், கூடத்தில் இருந்து திரும்பி வந்ததிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தான். 'படிச்சது சென்னையில. ஆனா, எதுக்கு இங்க வேலைக்கு வந்திருக்கா? அவளோட 'மார்க்ஸ்' எல்லாம் பார்த்தா நல்லா படிக்கற பொண்ணு மாதிரி தான் இருக்கு. அப்படினா ஏன் 'கேம்பஸ் இன்டர்வியூ'ல வேலை கிடைக்கலை? அதுவுமில்லாம படிக்க அஞ்சு வருஷம் எடுத்திருக்கா. அதற்குக் காரணம் 'மெடிக்கல் ரீசன்'ன்னு வேற போட்டிருக்கா. அவளோட உடம்புக்கு ஏதாவது பிரச்சனையா? அதுதான் அவ்வளவு கோவமா இருந்தாளோ?' என்று அவனுக்கு விடை தெரியாத கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தான். பின், அவன்



மனது, அவள் அன்று அவனைத் திட்டியதை மீண்டும் மீண்டும் படமாக ஓட்ட, அவன் மூளை, 'இது ஒண்ணும் சரிப்பட்டு வராது!' என்று தணிக்கை செய்து, கௌதமை அழைக்க வைத்தது.

கௌதமும் விரைவில் வந்துவிட, இருவரும் உடனே செய்து முடிக்க வேண்டிய முக்கிய வேலைகளை வரிசைப்படுத்தி வைத்தனர். அதன் பின் வேலைக்குத் தேர்ந்தெடுப்பவர்களைப் பற்றிக் கலந்தாலோசித்து இன்னும் ஒரே வாரத்தில் முடிவு எடுக்க வேண்டியதனால், மறுநாள் மறுபடியும் அலுவலகத்தில் சந்திப்பதாகக் கூறி அவனிடமிருந்து விடைபெற்றான் கௌதம்.

மறுநாள் காலை! நேரத்தில் எழுந்து, கிளம்பி அலுவலகத்திற்குச் சென்று வேலையில் ஆழ்ந்துவிட்ட கௌதமை, அவனின் கைபேசி அழைத்தது. எடுத்துப் பார்த்தவன், தியானின் எண்ணைப் பார்த்தவுடன் சந்தோசமாக, ''சொல்லு தியான், நல்லாயிருக்கியா? பேசி ரொம்ப நாள் ஆச்சு!'' என்றான்.

''நான் நல்லா இருக்கேன் கௌதம். நீ எப்படி இருக்க? 'ஆபீசில்' இருக்கிறியா? இப்போதான் வீட்டுக்குக் கூப்பிட்டு அப்பா அம்மாகிட்ட பேசினேன். மது, வசந்த் எல்லோரும் நல்லா இருக்காங்களா? அவங்க எப்போ திரும்பி வந்தாங்க?'' என்ற கேள்விகளுக்குப் பதிலளித்த கௌதமிடம், ''ஒரு குட் நியூஸ்! எனக்குக் கல்யாணம் முடிவாயிருக்கு கௌதம். இன்னும் ரெண்டு வாரத்துல சென்னையில கல்யாணம். பொண்ணு வீட்டுல அவசரப்படுத்தறாங்க. அதனால அடுத்து வர்ற முகூர்த்தத்துலேயே கல்யாணத்தை வச்சுட்டாங்க. இன்னும் பத்திரிகை கூட வரலை. வந்தவுடனே உனக்கு அனுப்பி வைக்கறேன். நேர்ல வந்து என்னால கூப்பிட முடியலை. 'ப்ளீஸ்'டா.

தப்பா நினைச்சுக்காதே. ஆனா, நீ கண்டிப்பா என்னோட கல்யாணத்துக்கு வரணும்,'' என்று வேண்டுகோள் விடுத்தான்.

''தியான்! ச்சே! ச்சே! நான் தப்பா எல்லாம் நினைக்கலை. இதுல தப்பா நினைக்க ஒண்ணுமில்லை. கவலைப்படாத. கங்கிராட்ஸ்! பொண்ணு எந்த ஊரு? பேரு என்ன? பேசினியா?'' என்று அவனுக்குச் சமாதானம் சொன்ன பின், கேள்விகளை அடுக்கினான்.

''பொண்ணு பேரு கீதா. சென்னைதான் சொந்த ஊர். ஆனா, இப்போ திருநெல்வேலில இருக்காங்க. பொண்ணு பார்க்கப் போனப்பவும் சரியா பேச முடியலை. நான் போன்ல கூப்பிட்டுப் பேசினாலும் அநியாயத்துக்குப் பொண்ணு வெட்கப்படறாப் போல. ஒண்ணு ரெண்டு வார்த்தைக்கு மேல பேச மாட்டேங்கிறா. இன்னும் 'போட்டோ'வைப் பார்த்துத்தான் பேசிட்டு இருக்கேன். கல்யாணம் பண்ணினதுக்கு அப்புறம் தான் நல்லா பேசணும்!'' என்று ஏக்கப் பெருமூச்சு விட்டான்.

''பாந்து... பார்த்து, நீ விடற பெருமூச்சுல, நான் இந்தப் பக்கம் பறந்துடப் போறேன். இன்னும் என்ன ரெண்டு வாரம்தானே? அப்புறம் வாழ்க்கை முழுக்கப் பேசலாம். உன்னை யாரும் எதுவும் சொல்லவும் மாட்டாங்க, கேட்கவும் மாட்டாங்க. நான் என்னோட 'காலெண்டர்'ல குறிச்சி வச்சுக்கிட்டேன். நான் முன்தினமே வந்துடறேன். சரியா?'' என்று வாக்குக் கொடுத்தவன், ''ஆமா, நீ எங்க இருக்க? பெங்களூருவில்தான் இன்னும் இருக்கியா?'' என வினவினான்.

''ஆமாம் கௌதம்! திடீர்னு முடிவானதுனால, அடுத்த வாரத்துல இருந்துதான் 'லீவ்' கிடைச்சது. அதனாலதான்



நேர்ல வந்து கூப்பிட முடியலை!'' என்று மீண்டும் தன் புலம்பலை ஆரம்பித்தான்.

''பாலாகிட்டேயும், வசந்த்கிட்டேயும் சொல்லு கௌதம். அவங்களுக்கும் பத்திரிகையை அனுப்பி வைக்கறேன். மறக்காம கொடுத்துடு. அப்படியே வசந்தோட நம்பர் கொடுக்கறியா?'' என்று வேண்டியவற்றை வாங்கியவன், ''பாலா அங்க இருக்கிறானா? இருந்தா அவன்கிட்ட கொடு,'' என்றதும் பேசி கைமாறியது.

விஷயத்தைக் கேட்ட பாலா, ''நான் சொல்லச் சொல்ல கேட்காம நீ இப்படி அவசரப்படற? பரவாயில்லை. வாழ்த்துகள்! சின்னப் பையன் பேச்சுக்கு எல்லாம் மதிப்புக் கொடுக்கறதா? ம்ம்ம்... ஆபீசில் எப்படி நிலைமை இருக்குன்னு பார்த்துட்டு நான் வருவதற்கு முயற்சி பண்றேன்,'' என்று புலம்பிவிட்டு வைத்தவன் கௌதமிடம் சென்றான்.

''கௌதம்! கல்யாணத்திற்கு நீ மட்டும் போயிட்டு வா. நாம இங்க புதுசா வர்றவங்களுக்கு 'ட்ரெயினிங்' கொடுக்கணும் இல்லியா? அவங்க வந்து 'ஜாயின்' பண்ணுற நேரம், நாம ரெண்டு பேரும் இல்லைன்னா கஷ்டம். இதுவரைக்கும் இருந்தவங்களுக்கு நம்மைப் பத்தி நல்லாவே தெரியும். அதனால நாம தைரியமா விட்டுட்டுப் போகலாம். ஆனா, புதுசா வர்றவங்களுக்கு நம்மைப் பத்தி ஒண்ணுமே தெரியாதே. நாம ரெண்டு பேரும் போயிட்டா, வர்றவங்க நம்மளைப் பத்தி என்ன நினைப்பாங்க? என்ன நான் சொல்லறது? - நான் கல்யாணத்துக்குப் போயிட்டா, அப்புறம் இந்தப் பொண்ணு 'செலக்ட்' ஆகி வேலைக்கு வரும்போது, நான் இல்லாமல் போனா நல்லா இருக்காதே. நீ சொன்ன மாதிரி ஒண்ணும் நான் வேலை வெட்டி இல்லாம இல்ல. நானும் ஒரு 'கம்பெனி' வச்சு நடத்தறேன்னு சொல்லாம

சொல்லி. நானும் ஒரு நல்ல பொறுப்பான பிள்ளைன்னு காமிக்க வேண்டாம்?'' என்று இதுவரை அவர்கள் வடிகட்டி வைத்த விண்ணப்பப் படிவத்தில் தான்யாவினதும் இருப்பதைப் பார்த்த பாலா, மனதுக்குள் இத்தனை நேரம் நினைத்துக் கொண்டிருந்ததைக் கௌதமிடம் தெரிவித்தான்.

''நீ சொல்லறது 'கரெக்ட்'தான். ஆனா, கல்யாணம் ஞாயிறன்று. அன்னைக்கு நீ யாருக்கு 'ட்ரெயினிங்' கொடுக்கப் போற?'' என்றான் கௌதம் சிரித்தவாறே.

இவனும் அசடு வழிய, ''ஓ...! அப்படியா? அப்படினா சரி,'' என்று பதில் கூறியவன், 'ச்சே! அந்தப் பொண்ணு நம்மைப் பத்தி என்ன நினைச்சா நமக்கு என்ன வந்தது? முதல்ல அவளுக்கு நேர்முகத் தேர்வு நடத்தணும். அப்புறம்தானே அவள் இங்கே வேலைக்கு வருவாளா இல்லையான்னு தெரியும். இப்படி அசடு மாதிரி வழிய வச்சுட்டாளே. ஆனா, எதுக்கும் நேர்முகத் தேர்வு நடக்கும்போது அவள் கண்ணில் படக்கூடாது. இல்லைனா உன் வேலையும் வேண்டாம், ஒண்ணும் வேண்டாம்னு ஓடினாலும் ஓடிடுவா!' என்று கைகள் வேலை செய்தாலும், மனம் அதன் பாட்டில் அவளை நினைக்கும் வேலையைச் செய்து கொண்டிருந்தது.

நேர்முகத் தேர்விற்கு அழைப்பவர்களுக்கான விவரத்தை நாளை தபாலில் சேர்த்து விடுவதாகக் கௌதம் கூற, மீதமிருந்த வேலைகளை முடித்து வீட்டிற்குக் கிளம்பினர்.

நேர்முகத் தேர்விற்கு அழைத்திருந்தவர்களில் பெண்கள் ஐந்து பேர். ஆண்கள் மூன்று பேர். நேர்முகத் தேர்வன்று அனைவரையும், கௌதம், பாலா மற்றும் இரண்டு பேர் சேர்ந்த குழு, கேள்விகள் கேட்டு அவர்களின் அறிவுப் புலமையையும், பேசும் திறனையும் பரிசோதித்துக்



கொண்டிருந்தனர். தான்யாவின் முறை வரும் பொழுது, பாலா ஏதோ ஒரு அவசரமான வேலையை முடிக்காமல் வந்து விட்டதாகக் கூறி அங்கிருந்து நழுவினான். கௌதமும் இது போலே அடிக்கடி நடப்பதுதான் என்பதனால் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல், அவனும் மற்ற இருவரும் அவளுக்குத் தேர்வை நடத்தி முடித்தனர்.

தேர்வின் முடிவில், அவர்கள் அனைவரும் விவாதித்து ஐந்து பேரைத் தேர்வு செய்தார்கள். அதில் அந்த தான்யலக்ஷ்மியும் அடக்கம். அதைப் பார்த்த பாலாவுக்கு, இது வரை புரியாத ஏதோ ஒரு புது உணர்வு மனதில் பிரசவித்தது. 'வேலைக்குச் சேர்ந்து, நம்மைப் பார்த்து என்ன சொல்லப் போறா? அவளுக்கு அதிர்ச்சியாத்தான் இருக்கும். எதுக்கும் கொஞ்ச நாளைக்கு அவ முன்னாடி நல்ல பையன் மாதிரி நடந்துக்கணும்!' என்று படபடப்புடன் நினைத்துக் கொண்டிருந்தான். 'ச்சே! நான் ஏன் அந்தப் பெண்ணைப் பத்தியே யோசித்துக் கொண்டிருக்கிறேன்?' என்று சிறிது நேரம் அதைப் பற்றி யோசித்தவன், விடை கிடைக்காமல் குழம்பி, அதை ஒதுக்கி வைத்துவிட்டு வேலைக்குள் புதைந்தான்.

* * *

தியானின் திருமண நாளும் வந்தது. கௌதம், பாலாவுடன் சென்னை சென்று தியானின் திருமணம் முடியும் வரை இருந்துவிட்டுத் திரும்பினான். வசந்த், அவர்களின் 'கம்பெனி' விஷயத்திற்காக அவசரமாக டெல்லி சென்றதால், அவனால் தியானின் கல்யாணத்திற்குச் செல்ல முடியாமல் போனது.

சென்னை சென்றவர்களை அழைத்துச் செல்ல வந்திருந்த வருண், அவர்களை அவனின் வீட்டில் தங்குமாறு எவ்வளவோ வற்புறுத்தியும், கௌதம் அதை

மறுத்துவிட்டு 'ஹோட்டல்' அறையில் தங்கிக் கொண்டான். அதைப் பார்த்த பாலா, 'ஹோட்டல்' சென்றடைந்த பின், 'ஏன்?' என்று வினவ, இவனும், ''வருணோட தங்கை, வர்ணாவுக்குக் கல்யாணம் முடிவாகற மாதிரி இருக்குடா பாலா. அவன் நம்மை நம்பித் தங்க வச்சாலும் நாளைக்கு வரப் போறவங்க ஏதாவது சொல்லிட்டா, அப்புறம் அவங்களுக்குத்தானே கஷ்டம். அதனால தான்!'' என்றவனைப் பார்த்த பாலா, யோசனையுடன் -

''ஏன்டா! நான் மத்த பொண்ணுங்களைக் கிண்டல் செய்யற மாதிரி வர்ணாவையும் ஏதாவது சொல்லிடு வேன்னுதானே நீ இப்படிப் பண்ணின? உண்மையைச் சொல்லு!'' என்று இதுவரை கௌதம் பார்க்காத பாலாவாகிக் கொதித்தான்.

பாலா இவ்வாறு கேட்டதற்குக் காரணம் தான்யாவைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்? அன்று தான்யா அவனைத் திட்டி விட்டுச் சென்றதிலிருந்து அவன் பெண்களைப் பார்ப்பதே இல்லை. இது அவனாக அறிந்து நடந்ததா இல்லை அறியாமல் நடந்ததா என்பது அவனுக்கே வெளிச்சம். அவள் சொன்னதையே நினைத்து மனதுக்குள் உழன்று கொண்டிருந்தவனுக்குத் தன்னால் தான் கௌதமும் இவ்வாறு செய்கிறான் என்ற குற்ற மனப்பான்மை தலைதூக்க, கௌதமிடம் இவ்வாறு கேட்க வைத்தது.

இவன் கேட்டதைப் பார்த்துத் திகைத்த கௌதம், 'இவனுக்கு என்ன ஆச்சு? நிஜமாகவே நான் அப்படிச் சொல்லி இருந்தாலும் அதுக்கும் ஏதாவது 'ஜோக்' அடிச்சிட்டுப் போகிறவன், இன்று இப்படிக் கேட்கறான்னா ஏதோ நடந்திருக்கு. அதனாலதான் இவன் ஒரு மாசமே ஆளே சரியில்லையோ? நாம் நினைச்சது சரிதான் போல!'



என்று மனதுக்குள் நினைத்தவன், ''பாலா! உனக்கு என்ன ஆச்சு? ஏன் இப்படித் தேவையில்லாம கேள்வி கேட்டுட்டு இருக்குற? நீ என்ன கேட்கிறேன்னு புரிஞ்சு தான் கேட்கறியா?'' என்று அவன் கேள்விக்குப் பதிலளிக்காமல் அவனையே கேள்விகளால் திணறடித்தான்.

''நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாம ஏன் மழுப்பற கௌதம்? உண்மையைச் சொல்லு. நீ மனசுல அப்படி நினைச்சுத்தானே வருண் வீட்ல இருக்காம இங்க கூட்டிட்டு வந்த?'' என்று அவன் கண்டுபிடிப்பை உறுதிப்படுத்துவதிலேயே உறுதியாக நின்றான்.

''பாலா! இவ்வளவு நாள் என் கூடப் பழகியும் இப்படிக் கேட்கத் தோணுதா? என்னடா நீ? நான் அப்படின்னு நினைச்சிருந்தா முதல்ல உன்னை மதுவோட பழக விட்டிருப்பேனா? ச்சே! என்னைப் போய் இப்படி நினைச்சுட்டியே? நல்லா கேட்டுக்கோ, நான் ஏன் அது மாதிரி சொன்னேன்னு. வர்ணா கூட வேலை செய்யற பையனை 'லவ்' பண்ணி அவங்க வீட்ல இருந்து கல்யாணம் பேச வரப்போறாங்க. பையனோட அப்பாவுக்கு இதுல கொஞ்சம் கூட இஷ்டம் இல்லைன்னாலும் பையனுக்காக, நாலு இடத்துல பொண்ணைப் பத்தி விசாரிச்சிட்டு பொண்ணு நல்ல ஒழுக்கமான பொண்ணா இருந்தா தான் இதற்குச் சம்மதிப்பாராம்.

''இந்த மாதிரி கறாராப் பேசறவர், நாளைக்கு அக்கம் பக்கம் வந்து விசாரிக்கறப்போ நாம அங்க போய் இருக்கறது நல்லாவா இருக்கும்? அதனாலதான் இங்க வந்து தங்கலாம்ன்னு முடிவு பண்ணினேன். சரியா பாலா? அப்படியே நான் அது மாதிரி நினைச்சிருந்தாலும் உன்கிட்ட நேரடியா இல்லே சொல்லி இருப்பேன். நான் எப்போவாவது உன் கிட்ட மறைமுகமா உணர்த்த

முயற்சி செஞ்சிருக்கேனா? ச்சே... போடா!'' என்று கையை உதறியவன், குளியலறைக்குள் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டான்.

அவன் குளியலறைக்குள் சென்றதும், பாலா தன்னையே நொந்து கொண்டு, 'ச்சே! அந்தப் பொண்ணு திட்டினதுல இருந்து நான் நானாகவே இல்லை. போயும் போயும் கௌதமைப் போய்த் தப்பாக நினைச்சிட்டேனே. முதல்ல அவன்கிட்ட மன்னிப்பு கேட்கணும். அப்புறம், அந்தப் பொண்ணு திட்டினதையும் சொல்லணும். இல்லை. வேண்டாம்! வேண்டாம்! அந்தப் பொண்ணு யாருன்னு தெரிஞ்சா அப்புறம் வேலை செய்யற இடத்துல ஏதாவது பிரச்சனை ஆயிடும்ன்னு அவனுக்கும் வீணா கவலையாயிடும். இல்லாட்டி, நடந்ததை மட்டும் சொல்லிட்டு, யாரு அந்தப் பொண்ணுன்னு சொல்லாம விட்டுடலாம். எல்லாம் அந்தப் பொண்ணால வந்தது. ச்சே!'' என்று மனதிற்குள் திட்டமிட்டுக் கொண்டிருந்தான்.

வெகு நேரமாகியும் கௌதம் வெளியில் வராததினால், அவன் இன்னும் கோபமாய் இருக்கிறான் என்று பாலா நினைத்தான். சிறிது நேரம் அங்கும் இங்கும் உலவியவன், பொறுமையில்லாமல் குளியலறையின் கதவைத் தட்டினான். பதிலில்லாமல் போகவே, மறுபடியும் தட்ட அவன் கை ஓங்கும் போது, கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த கௌதம், அவனிடம் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் கிளம்புவதற்காகத் தன் பையிலிருந்து உடையை எடுத்துக் கொண்டிருந்தான்.

இதைப் பார்த்த பாலாவிற்குக் கோபம் வர, போய் அவன் பையைப் பறித்து அங்கிருந்த மேஜையின் மேல் வைத்தவன், ''நீ ஏன் இப்போ என்கிட்டே பேச மாட்டேங்கிற?'' என்று அவன் அருகில் சென்றான்.



அப்பொழுதும் ஒன்றுமே பேசாமல் அவனை உறுத்து விழித்த நண்பனைப் பார்த்த பாலா, அவன் கைகளைப் பற்றிக் கொண்டு, ''கௌதம், சாரிடா! உன்னைப் பத்தித் தெரிஞ்சிருந்தும் நான் இப்படிக் கேட்டது தப்புதான். நிஜமாவே கேட்கிறேன். என்னை மன்னிச்சிடுடா!'' என்று கோபத்தை விடுத்து மன்னிப்பை வேண்டினான்.

யாரிடமும் அதிக நேரம் கோபத்தை நீடிக்கத் தெரியாத கௌதமும், பாலா இவ்வாறு கூறியதும், ''எதுக்குடா மன்னிப்பெல்லாம் கேட்டுட்டு? போ... போய்ச் சீக்கிரம் கிளம்பி வா. நாம 'லேட்'டாப் போனா அப்புறம் தியான் கிட்ட வேற வாங்கிக் கட்டிக்கணும்!'' என்று கூறி, நிலைமையை இயல்பாக்க முயன்றான்.

அவன் சொன்னதைக் கேட்டுச் சற்று நிம்மதியடைந்த பாலா, ''கௌதம், நான் ஏன் அப்படிக் கேட்டேன்னா...'' என்று தொடங்கும் முன்னர், ''நான் கேட்கலை பாலா. உனக்கா சொல்லணும்ன்னு இருந்தா, சொல்லு. ஆனா, இப்போ இல்லை. நாம கார்ல போகும்போது சொல்லு. இப்போ போய்க் கிளம்பி வா,'' என்று அவனைத் துரத்தினான்.

அவர்கள் இருவரும் கிளம்பிக் காரில் செல்லும் போது, பாலா கௌதமிடம் அன்று உணவகத்தில் நடந்ததை எடுத்துச் சொல்லி, அவனுக்குக் குற்ற மனப்பான்மையினால்தான் அவ்வாறு கேட்டதாகக் கூறவும், கௌதம் கட்டுப்படுத்த முடியாமல் சிரித்துவிட்டு, ''சொல்லறவங்க சொன்னாதான் உன் மண்டையில ஏறும் போல இருக்கு. நாங்களும் எவ்வளவு நாளா சொல்லிட்டு இருக்கோம். நீ ஏதாவது கேட்டியா? ஒரு பொண்ணு சொன்னதும் உனக்கு ரோஷம் வந்துடுச்சா. வசந்த் கேட்டா ரொம்ப சந்தோஷப்படுவான். ஆமா, யாரு அந்தப் பொண்ணு?'' என்றான்.

“யாருன்னு தெரியலை. அவள மட்டும் நான் மறுபடியும் பார்த்தா...” என்று அவளைப் பார்த்து ஒளிந்து கொண்டதை மறைத்து வீர வசனம் பேசிக் கொண்டு போனவனை, “என்ன பண்ணியிருப்ப? போய் ஓடி ஒளிஞ்சுக்குவியா?” என்று கிண்டல் செய்தான் கௌதம்.

அவன் சொன்னதைக் கேட்டு மனதிற்குள், ‘ஆஹா! நம்மை இவ்வளவு நல்லா புரிஞ்சி வச்சிருக்கானே!’ என்று நினைத்த பாலா, “உனக்கு ஆனாலும் இவ்வளவு கிண்டல் ஆகாது கௌதம். என்னைப் பத்தி இப்படியா நினைப்பே?” என்றான். அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே மண்டபம் வர, காரிலிருந்து இறங்கி, உள்ளே சென்றனர்.

சிறிது நேரத்தில் வருணும் வந்து சேர, நண்பர்கள் அனைவரும் கூடி தியானின் புலம்பலான ‘கீதா கூட பேசவே முடியலை’யைக் கேட்டு, அவனைக் கிண்டல் செய்து கொண்டிருந்தனர். எப்பொழுதையும் விட அன்று கொஞ்சம் அமைதியாக இருந்த பாலாவைப் பார்த்த தியான், “என்ன ஆச்சு பாலா, நாங்க போன தடவை பார்த்ததுக்கு இந்தத் தடவை இவ்வளவு அமைதியா இருக்க!” என்று ஆச்சர்யமாகக் கேட்டு முடிக்கும் முன், வருண், “ஐயோ! அப்புறம் அவன் மரத்தூள், டீத்தூள்ன்னு ஏதாவது சொல்லப் போறான். கொஞ்சம் சும்மா இருடா தியான்!” என்று அலறினான். கௌதமிற்கு அவன் மாற்றத்திற்கான .காரணம் தெரிந்ததினால் அமைதியாகச் சிரித்துக் கொண்டான்.

“அவ்வளவுதானே. இப்போ பேசிட்டாப் போச்சு. சரி! ‘கம்ப்யூட்டர்’கிட்ட ‘டூ’ விட்டா என்ன பண்ணும் சொல்லுங்க?” என்று சிறிது கலகலப்புக்குத் தாவினான் பாலா.



“நான்தான் அப்பவே சொன்னேன் தியான். இப்போ பார் அவன் வாயைக் கிளறிட்டு. நீயே சொல்லிடு பாலா,” என்றான் வருண். “அது அன்டூ பண்ணிடும்!” என்று அவன் சிரிக்க, மற்றவர்கள் முறைக்க, என நேரம் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தது.

“சரி! இதுக்காவது பதில் சொல்லுங்க பார்ப்போம். புலி ஏன் பச்சை மாமிசத்தைச் சாப்பிடுதுன்னு உங்களுக்குத் தெரியுமா?” எனப் பாலா கேட்க, மற்றவர்கள் பரிதாபமாக அவனைப் பார்த்தனர். “ம்ம்ம்... நானே சொல்லிடறேன். ஏன்னா, அதுக்கு சமைச்சி சாப்பிடத் தெரியாது!” என்றதும், “அதாவது உன்னை மாதிரி!” என்று அவனை வம்புக்கு இழுத்தான் வருண்.

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் பொழுது, அவர்கள் அருகே வந்த ஒருவன், “நீங்க கௌதம், தியான், வருண் தானே? உங்களைப் பார்த்து எவ்வளவு நாளாச்சு!” என்றான். “யார் நீ?” என்று மூவரும் அவனைப் பார்த்தனர்.

“என்னைத் தெரியலையா? நான் தான் உங்கள் ‘ஜூனியர் சிவா!” என்று அவர்களுக்கு நினைவு படுத்தினான் அந்தப் புதியவன். அவர்களும், புருவத்தைச் சுருக்கி யோசித்து விட்டு ஞாபகம் வந்ததற்கு அறிகுறியாக, அவனைப் பார்த்துச் சிரித்தனர்.

“சிவா, நீயா? எவ்வளவு நாள் ஆச்சு உன்னைப் பார்த்து! ஆளே அடையாளம் தெரியலை. ஆமா, இங்க எப்படி நீ? பொண்ணு வீட்ல இருந்து அழைப்பா?” எனக் கேட்ட தியானிடம், “ஆமாங்க தியான்! பொண்ணோட அப்பாவுக்கு எங்க அப்பாவை எப்படியோ தெரியும் போல. அவசரமா முடிவு செஞ்சதுனால அப்பாவினால வர முடியலை. நான் இங்கேயே சென்னைல வேலைக்கு இருக்கறதுனால அப்பா என்னையாவது போயிட்டு வரச்

சொன்னாரு. யாருன்னே தெரியாத கல்யாணத்துக்குப் போகணுமான்னு யோசிச்சிட்டேதான் வந்தேன். பார்த்தா இது உங்க கல்யாணம். உங்களை எல்லாம் மறுபடியும் சந்திக்கறதுல எனக்குச் சந்தோசம்!'' என்றான் சிவா.

அதன்பின் நண்பர்கள் அனைவரும் நேரம் போவது தெரியாமல் அரட்டை அடித்துவிட்டு உறங்கச் சென்றனர்.

மறுநாள் காலையில் திருமணம் நன்கு நடந்தேற, பாலாவும், கௌதமும் மணமக்களை வாழ்த்தி, விடை பெற்றுக் கொண்டு, கிளம்பித் தங்கள் அறைக்குத் திரும்பினர்.

அவர்களின் விமானம் பலமணி நேரம் தாமதம் என்று அறிந்து கௌதம், 'என்ன செய்யலாம்?' என்று யோசித்தான். உடனே, 'இவ்வளவு தூரம் வந்து விட்டோம். வர்ஷனாவை அழைத்துப் பேசிப் பார்த்தால் என்ன?' என்ற முடிவிற்கு வந்தான்.

நினைத்ததைச் செயல்படுத்த எண்ணிப் பாலாவிடம் தெரிவித்துவிட்டு, வர்ஷனாவின் எண்ணிற்கு அழைத்தான். நீண்ட நேரம் கழித்துப் பேசியை எடுத்த வர்ஷனாவின் குரல், ''ஹலோ!'' என்றது.

''வர்ஷனா! நான் கௌதம் பேசறேன். எப்படி இருக்க?'' என்று வழக்கமான விசாரிப்புகளுடன் ஆரம்பித்தான்.

''நான் நல்லா இருக்கேன். நீங்க எப்படி இருக்கீங்க? என்ன திடீர்னு கூப்பிட்டிருக்கீங்க?''

''நானும் நல்லாதான் இருக்கேன். நீ சென்னையில எங்க இருக்க? நான் இங்க ஒரு 'ஃபிரெண்டோட' கல்யாண விஷயமா வந்தேன். கிளம்பறதுக்கு இன்னும் கொஞ்ச நேரம் இருக்கு. அதுதான் முடிஞ்சா உன்னைப் பார்க்கலாம்ன்னு நினைச்சுக் கூப்பிட்டேன்,'' என்று அழைத்த விஷயத்தைக் கூறினான்.



அதைக் கேட்ட வர்ஷனாவோ, ''ஓஹ்! அப்படியா? வாங்க! வாங்க! நீங்க எங்க வீட்டுக்கு வந்தா ரொம்ப சந்தோசப்படுவேன். ஆனா, இப்போ நாங்க ஒரு கல்யாணத்துக்காகச் செங்கல்பட்டு வந்திருக்கோம். வீடு திரும்ப இராத்திரி ஆயிடும். சாரி கௌதம்!'' என்றாள் வருத்தத்துடன்.

''ஓஹ்! அதனால என்ன? பரவாயில்லை. 'டைம்' நிறையா இருந்தது. அதனாலதான் சும்மா பார்க்கலாம்ன்னு கேட்டேன். அடுத்த தடவை வரும் போது கண்டிப்பா பார்க்கலாம். நட்சத்ராவையும், உன் கணவரையும் கேட்டேன்னு சொல்லு,'' என்று பேசிவிட்டு வைத்தான்.

செய்வதற்கு ஒன்றுமில்லாததால், இருவரும் கிளம்பிச் சற்று நேரம் இலக்கில்லாமல் சுற்றிவிட்டு, விமான நிலையம் அடைந்தனர்.

## 5

''தொடர்ந்து வா,
என்னை நெருங்காதே!
நெருங்கி வா,
மனதைத் தொடாதே!
தொட்டு விடு,
உயிரைப் பறிக்காதே!
பறித்து விடு,
என்னை மறவாதே!
மறந்து விடு,
என்னை மறந்துவிடு
என்று மட்டும் சொல்லாதே...!''

புதிதாக வேலையில் சேர்ந்தவர்களுக்கு 'ப்ராஜெக்ட் லீடர்' பயிற்சி கொடுக்க, கௌதமும், பாலாவும் மேற்

பார்வை செய்தனர். பாலா முடிந்தவரை ஒன்றிரண்டு வாரங்கள் தான்யாவிடம் இருந்து ஒளிந்து தாக்குப் பிடித்தவன், ஒரு நாள் மாலை வீட்டிற்குச் செல்லும் முன், தான்யாவின் கண்களில் அகப்பட்டு விட்டான். அவனைப் பார்த்த தான்யாவிற்கோ, 'இந்தக் கடங்காரன் இங்க எங்கே வந்தான்? ஒரு வேளை கௌதம் 'சாரோ'ட 'ஃபிரெண்டா' இருப்பானோ? நம்ம 'பாஸு'க்கு இவனெல்லாம் ஒரு பிரெண்ட்!' என்று கௌதமைப் பற்றி நல்ல அபிப்ராயம் கொண்டிருந்தவள், மனதிற்குள் பாலாவை அர்ச்சனை செய்து கொண்டு, அவனைப் பார்த்து முறைத்துவிட்டுச் சென்றாள்.

மறுநாளும் அலுவலகத்தில் அவனைக் கண்டவள், "ஒரு வேளை இவன்தான் அந்த இன்னொரு 'பாஸ்' பாலாஜியா இருக்குமோ?' என்று யோசித்தவளை, 'குட் மார்னிங் சார்!' என்று வணக்கம் கூறி, அவன்தான் 'பாஸ்' என்று உறுதிப்படுத்தினாள் அவளுடன் வேலைக்குச் சேர்ந்த சுவாதி.

தான்யா, 'ச்சே! ஒளிஞ்சிருந்து நம்மை இப்படி ஏமாத்தியிருக்கிறானே. அதனாலதான் நம்மை அறிமுகப்படுத்தி வைக்கும் போது கூட இவன் வரலையா? என்ன ஒரு ஏமாத்துக்காரன். இவன் இருக்கிற இடத்துல எப்படி வேலை செய்யறது? வேலைக்குச் சேர்ந்து ஒப்பந்தம் போட்ட பிறகு இப்போ வேலையையும் விட முடியாதே. அப்படியே வேலையை விட்டாலும் உடனே யாரு வேலை கொடுப்பா? இப்படிக் கழுத்து அறுத்துட்டானே, கடங்காரன்! இவன் என்ன பண்ணினாலும் நம்ம வாயும், கையும் சும்மா இருக்குமா? அதுவும் இல்லாம கௌதம் 'சார்' கிட்ட சொல்லிடலாம்,' என்று மனதுக்குள் நினைத்தவளின் வெறுப்பு பாலாவின் மேல் பன்மடங்காக உயர்ந்து விட்டிருந்தது.



அவன் யாரென்று தெரிந்தும், தான்யா அவனைக் கண்டு கொள்ளவில்லை என்பதை அறிந்த பாலா, அவனால் தான் அவள் இப்படி நடந்து கொள்கிறாள் என்பதை மறந்து, 'இவளுக்கு எவ்வளவு கொழுப்பு இருக்கும்! இரு இரு... உன்னை வச்சுக்கறேன்!' என்று திட்டம் தீட்டி அவளை ஒரு 'ப்ராஜெக்ட்' பற்றிப் பேசுவதற்காக அவனின் அறைக்கு அழைத்தான்.

உள்ளே வந்தவளைச் சும்மா ஒரு மிரட்டு மிரட்டினால் பயந்து விடுவாள் என்று நினைத்து, "வசமா வந்து என்கிட்டே மாட்டிக்கிட்ட பாரு. அன்னைக்கு இவனை ஏன் தான் திட்டினோம்ன்னு இப்போ ரொம்ப ஃபீல் பண்ணறியா?" என்று இவன் சினிமாவில் வரும் வில்லன் நம்பியார் மாதிரி பேச, அவளோ, "ச்சே! நீங்க மனுசனா இருந்தா இந்நேரத்துக்குத் திருந்தி இருப்பீங்க. ஆனா, நீங்க மனுசங்க ஜாதியிலேயே இல்லை போல. 'ப்ராஜெக்ட்' பத்தி பேசறதா இருந்தா மட்டும் பேசுங்க, இல்லேன்னா நான் போறேன். எனக்கு நிறையா வேலை இருக்கு. உங்களை மாதிரி வெட்டியா பொழுது போகாம நான் வேலைக்கு வரலை!" என்று பொழிந்து விட்டுப் புயலென வெளியேறினாள்.

'இவள் வாயைத் திறந்தாலே உனக்கு வாயிலிருந்து ஒரு வார்த்தை கூட வர மாட்டேங்குது பாலா. உன் 'பிளான்' ஊத்திகிச்சு. சும்மா இருந்த சங்கை எடுத்து ஊதிக் கெடுத்த மாதிரி, இப்போ அவளைக் கூப்பிட்டு எதுக்குத் தேவை இல்லாம பயமுறுத்த முயற்சி பண்ணின? இப்போ அவ உன்னை மனுசங்களோடயே சேர்த்துக்கலை பாரு. உனக்கு இது தேவையா?' என்று அவன் மனம் அவனையே பார்த்துக் கெக்கலிட்டுச் சிரித்தது.

அது மட்டும் போதாதென்று,

'உன் அதரம் மலர்ந்ததில்
என் வார்த்தை மரித்தது!
கண்கள் விரிந்ததில்
பார்வை விழுந்தது!
கோபம் பூத்ததில்
சுயம் தொலைந்து
காதல் ஜனித்தது!'

அவன் மனது வைரமுத்துவின் அளவிற்கு இல்லை என்றாலும், ஒரு நல்லமுத்து அளவிற்குக் கவிஞனாக மாற முயன்றது.

தறிகெட்டு ஓடும் மனதின் எண்ணத்தை அடக்கியவன், உடனே பதறினான். 'ஐய்யோ! கௌதமுக்குத் தெரிஞ்சா அவன்கிட்ட வேற திட்டு வாங்கணுமே. அப்புறம் அவனுக்கும் உண்மை தெரிஞ்சிடும். இந்தப் பொண்ணு என்ன நினைச்சா நமக்கு என்னன்னு விட்டுட்டு சும்மா இருந்திருக்கணும். இப்போ எனக்கு இது தேவையா? சரி! இனிமேல் ஒழுங்கா இருக்கலாம்,' என்று முடிவு செய்து, அதையே கடைப்பிடிக்கவும் செய்தான்.

தான்யாவோ, அங்கிருக்கும் எல்லோரிடமும் சகஜமாகச் சிரித்துப் பேசிப் பழகியவள், அவனை மட்டும் 'துஷ்டனைக் கண்டால் தூர விலகு' என்பதற்கு ஏற்றவாறு அவன் இருக்கும் இடத்திலிருந்து எட்டியே நின்றாள். வேலை விஷயமாக அவன் வந்து பேசினாலும் அவனை ஒரு புழுவைப் போலப் பார்த்தவள், அவளாக அவனிடம் இன்றுவரை ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. இதை எல்லாம் பார்த்த பாலா, சிறிது காலம் மிகவும் கவலைப் பட்டான். பின், அவஸ்தைப்பட்டான். விரைவிலேயே



அவளை ஒரு நாள் பார்க்கவில்லை என்றாலும் துடிக்க ஆரம்பித்தான். கடைசியில்தான் அவன் மூளைக்கு எட்டியது - அவன் மனது அவளை மனமார விரும்புவதை.

இது எப்படி, எப்பொழுது, எங்கே நிகழ்ந்தது என்று அவனுக்கே புரியவில்லை. ஆனால், அவளைப் பார்க்கும் பொழுது அவன் மனதில் ஊற்றெடுக்கும் உணர்வுகளை, வாழ்க்கை முழுவதும் அனுபவிக்கத் தவித்தான். 'முதலில் அவள்கிட்ட இதை எப்படிச் சொல்லுவது? சும்மாவே நம்ம மேல கோவமா இருக்கா. இப்போ போய் இதைச் சொன்னா வேற வினையே வேண்டாம்.' இவ்வாறு குழம்பித் தவித்தவன், தனிமையை விரும்பி, வீம்பை விட்டு விட்டுத் தன் தந்தையைப் பார்த்துவிட்டு வருவதாகச் சொல்லி அந்த வாரக் கடைசியில் ஈரோட்டிற்குக் கிளம்பினான்.

* * *

பாலா ஈரோட்டிற்குச் சென்ற அந்தச் சனிக்கிழமை, கௌதம் தனியாக அவன் அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருந்தான். அப்போது, அவன் கைபேசி அழைக்க, அதை எடுத்துப் பார்த்தவன், 'இவ எதுக்கு இப்போ கூப்பிடறா?' என்று நினைத்து, வேறு வழியில்லாமல் பேசியை எடுத்து ''ஹலோ!'' என்றான்.

''கௌ! எங்க இருக்கறீங்க? நான் உங்ககிட்ட கேட்டது என்ன ஆச்சு? பாலா கிட்ட கேட்டுச் சொல்லறேன்னு சொன்னீங்க. அதுக்கப்புறம் ஆளையே காணோம்!'' என்று கேட்டவள் வேறு யாருமல்ல, ஹர்ஷினியேதான்.

''ஹர்ஷினி! நான் 'ஆபீஸ்'ல ஒரு முக்கியமான வேலை செஞ்சிட்டு இருக்கேன். உன்னோட வேலையைப் பத்தி பாலாகிட்ட பேசினேன். ஆனா, இப்போதைக்கு

உனக்குப் பயிற்சி கொடுக்கக் கூட ஆள் இல்லை. இப்போதான் புதுசா அஞ்சு பேர் வேற சேர்ந்திருக்காங்க. அவங்களைப் பார்த்துக்கறதுக்கே ஆள் பத்த மாட்டேங்குது. இப்போ கொஞ்சம் 'பிஸி'யா வேற இருக்கிறோம். நான் கூடிய சீக்கிரம் ஒரு 'போஸ்ட் ரெடி' பண்ணிட்டு உன்னைக் கூப்பிடறேன்,'' என்று பாலாவிடம் பேசாமலேயே, கூசாமல் பொய் சொன்னான்.

''நீங்க சும்மா ஒண்ணும் சொல்லலையே? நீங்க இன்னும் கொஞ்ச நாள்ல சொல்லலைன்னா நானே வந்து அங்க உட்கார்ந்துகிட்டு, எனக்குத் தெரிஞ்சதைச் செய்ய ஆரம்பிச்சுடுவேன். இப்பவே சொல்லிட்டேன்!'' என்று அவனைப் பயமுறுத்திவிட்டு, ''சரி! அதை விடுங்க. நீங்க வேலை முடிஞ்சதும் எப்போ வீட்டுக்குப் போவீங்க? நாம எங்காவது சாப்பிடப் போகலாமா? வீட்ல யாருமே இல்லை. எல்லோரும் 'ஆபீஸு'க்குப் போயிருக்காங்க. அம்மாவும் அப்பாவும் ஊருக்குப் போயிட்டாங்க. நான் மட்டும் 'போர்' அடிச்சிட்டு வீட்ல தனியா இருக்கேன். 'ஃபிரெண்ட்ஸ்' வேற யாரும் ஊர்ல இல்லை. ஒரு 'ஃபிரெண்டா' நினைச்சுக் கேட்கறேன். 'ப்ளீஸ்' கௌதம், முடியாதுன்னு சொல்லாதீங்க!'' என்று கெ(கொ)ஞ்சினாள்.

'ச்சே! இவள் ஏன் இப்படி இம்சைப் படுத்தறா? வசந்துக்காகப் பார்க்க வேண்டி இருக்கு!'' என்று நினைத்தவன், ''அதுக்குள்ள வேலை முடிஞ்சிடுமான்னு தெரியலை ஹர்ஷினி. ம்ம்ம்... சரி. நான் மதியத்துக்கு மேல 'போன்' பண்ணிச் சொல்லறேன்,'' என்று பட்டும் படாமல் பதில் சொல்லிப் 'பேசி'யை வைக்கப் போனவனை, ''பரவாயில்லை. உங்க வேலை முடியற வரைக்கும் நான் வந்து அங்கு காத்துட்டு இருக்கேன். அதுக்கப்புறம் நாம முடிவு பண்ணலாம். 'பை'!'' என்று தெரிவித்து, அதிர்ச்சிக்குள்ளாக்கினாள்.



பேசியை வைத்தவன், சிறிது நேரம் யோசித்துவிட்டு, வசந்தை அழைத்தான். ''வசந்த்! நாம எல்லோரும் இன்னைக்கு 'நைட்' 'டின்னர்' போயிட்டு, அப்படியே ஏதாவது சினிமாவுக்குப் போயிட்டு வரலாமா? அண்ணா - அண்ணிகிட்டேயும் கேளு,'' என்றான்.

வசந்தும், மறுபடியும் அழைப்பதாகக் கூறி, அவர்களிடம் பேசிவிட்டு மிக விரைவிலேயே அவனை அழைத்துச் சம்மதம் தெரிவித்தான். ''அப்படியே, ஹர்ஷினிக்கும் சொல்லிட்டேன் கௌதம். அவள்தான் உன் கிட்ட கேட்டாப் போல?'' என்றான்.

கௌதம், ''ஆமாம் வசந்த்! நானே 'டிக்கெட் ரிசர்வ்' பண்ணிடறேன். சாயந்திரம் ஒரு எட்டு மணிக்குப் பார்க்கலாம். ம்ம்ம்... பாலா இருந்திருந்தா இன்னும் நல்லா இருக்கும். அவன் வந்தா அவனை விட்டுட்டுப் போனதுக்காக நல்லா சண்டை போடப் போறான். பரவாயில்லை. அவன் இருக்கும் பொழுது இன்னொரு தரம் போகலாம்!'' என்று பேசியை வைத்தவன், ஆவன செய்து முடிக்கவும், ஹர்ஷினி அவனை அழைக்கவும் சரியாக இருந்தது.

அவன் திட்டத்தை வசந்திடமிருந்து கேள்விப்பட்டு, 'சரியான தத்தி!' என்று அவனை மனதிற்குள் திட்டிக் கொண்டே பலமுறை அவனின் எண்ணிற்கு முயற்சி செய்து கொண்டிருந்தாள். அவன் பேசியை எடுத்தவுடன், ''கௌ! எனக்காக நீங்க சிரமப்பட்டுப் பண்ணறதுக்கு, ரொம்ப 'தேங்க்ஸ்.' எனக்காகத்தானே நீங்க வசந்திடம் பேசினீங்க. 'யு ஆர் சோ ஸ்வீட்!'' என்று மறுபடியும் கொஞ்சினாள்.

''இல்லை, ஹர்ஷினி! வசந்தையும், மதுவையும் பார்த்து ரொம்ப நாளாச்சேன்னுதான் வெளியில போகலாமான்னு

கேட்டேன். சரி. எனக்கு வேலை இருக்கிறது,'' என்று கைபேசியை வைத்தவன், 'அப்பாடா! எப்படியோ இந்தத் தடவை தப்பிச்சாச்சு!' என்று ஒரு பெருமூச்சை விட்டான்.

* * *

திங்கள் காலை, ஈரோட்டிலிருந்து திரும்பி வந்த பாலா, கௌதமிடம், ''உனக்கு யாராவது 'டாக்டர் 'பிரெண்ட்' இருக்காங்களா?'' என வினவினான்.

''ஆமாம். இருக்காங்க. ஆனா, யாருக்கு உடம்புக்கு என்ன ஆச்சு?'' என்றான் கௌதம்.

''ஒண்ணுமில்ல. சும்மா ஒரு கேள்வி கேட்கணும். கொஞ்சம் தெளிவுபடுத்திக்க வேண்டியது இருக்கு. நீ ஃப்ரீயா இருந்து, அவங்களும் ப்ரீயா இருந்தா கொஞ்ச நேரம் மீட் பண்ணலாம்ன்னுதான்,'' என்றான் பாலா.

''ஓ! அதனால என்ன? நானும் அவளைப் பார்த்து ரொம்ப நாள் ஆச்சு. வேண்ணா, வீட்டுக்குப் போறதுக்கு முன்னாடி அவளோட 'கிளினிக்'லேயே பார்க்கலாம். அவள் எப்போ 'ஃப்ரீ'ன்னு கேட்டுச் சொல்லறேன். அது சரி! அப்பா எப்படி இருக்கறாரு?''

''அப்பா ரொம்ப நல்லா இருக்கறாரு!'' என்று சுருக்கமாக முடித்துவிட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

'இவனுக்கு என்ன ஆச்சு? ஒரு வேளை மறுபடியும் கல்யாணத்தைப் பத்தி பேசி 'மூட் அவுட்' பண்ணிட்டாரோ? சரி! அவனே வந்து சொல்லட்டும்,' என்று நினைத்த கௌதம், தன் தோழியை அழைத்தான்.

அவளிடம், அவர்கள் வருவதைப் பற்றித் தெரிவித்து, அவளுக்கு எந்த நேரம் சரிப்படும் என்று கேட்டுக் கொண்டு அதன்படி பாலாவுடன் சென்றவன், அவன்



தோழியிடம் பாலா கேட்ட கேள்வியைக் கேட்டு நொந்து விட்டான்.

கௌதமின் பள்ளித் தோழி, நிரஞ்சனியின் 'கிளினிக்'குக்குச் சென்று, பாலாவை அறிமுகப்படுத்திவிட்டு, சிறிது நேரம் நலம் விசாரித்துப் பொதுவாகப் பேசியவன், பாலாவிடம், ''நீ ஏதோ கேட்கணும்ன்னு சொன்னியே? கேளு பாலா,'' என்றான்.

''என்னோட 'சிம்ப்டம்ஸ்' எல்லாம் சொல்றேன். கேட்டுட்டு எனக்கு என்ன நோய் வந்திருக்குன்னு நீங்க தான் சொல்லணும்,'' என்றவன், ''வயிற்றுக்குள்ள பட்டாம்பூச்சி பறக்கற மாதிரி இருக்கு... அடுத்து, எப்போதுமே தலைக்குள்ள வண்டு குடையற மாதிரி இருக்கு... அப்புறம், இதயத்துக்குள்ள மின்மினிப் பூச்சி 'லைட்' அடிக்கற மாதிரி இருக்கு... இப்படியெல்லாம் இருந்தா, எனக்கு வந்திருக்கற நோய்க்குப் பேரு என்னங்க 'மேடம்?''' என்றான் இறுக்கமாக முகத்தை வைத்துக் கொண்டு.

கௌதமும், 'நீ நிஜமா இந்தக் கேள்வியைக் கேட்கத்தான் வந்தியா?' என்ற கேள்வியை அவன் பார்வையில் தேக்கி, தன் நண்பனைப் பார்த்தான். நிரஞ்சனியோ, பாலா சொன்னதைக் கேட்டுச் சிரித்தவள், ''நீங்க காதலிக்கிற பொண்ணுகிட்ட போய்ச் சொல்ல வேண்டியதை எல்லாம் 'டாக்டர்'கிட்ட வந்து சொல்லறீங்க பாலா. யாரு அந்தப் பொண்ணு?'' என்று சரியாக 'பாயிண்டை'ப் பிடித்தாள்.

கௌதம், பாலாவை முறைத்தவாறே, ''சாரி நிரஞ்சனி! நான் கூட இவன் ஏதோ சீரியசாகக் கேட்கப் போறான்னு பார்த்தா, இப்படி வெட்டியா வந்து என்னமோ 'ஜோக்' அடிச்சிட்டு இருக்கான். இவன் இப்படிப் பண்ணுவான்னு

தெரிஞ்சிருந்தா, நான் இவனைக் கூட்டிட்டு வந்திருக்க மாட்டேன். ஏன்டா! இதைக் கேட்கவா இங்க வந்த? உன்னோட விளையாட்டுத் தனத்துக்கு அளவே இல்லாமப் போச்சு. எதுக்கு இப்படி வந்து மானத்தை வாங்கறே? நீ வெளில வாடா உனக்கு இருக்கு!'' என்று நிரஞ்சனியிடம் மன்னிப்புடன் ஆரம்பித்து, இறுதியில் பாலாவிடம் மிரட்டலில் முடித்தான்.

''பாருங்க 'மேடம்!' நான் 'சீரியஸா' பேசினா, இவன் என்னை நம்ப மாட்டேங்கறான். அதனால்தான் உங்க கிட்ட வந்தேன். இவனுக்குக் காதல்ன்னா என்னன்னு கூடத் தெரியாது. இவன் கிட்ட நான் என் காதலைப் பத்திச் சொன்னா, இவன் எப்படிப் புரிஞ்சுக்குவான் என்று நீங்களே சொல்லுங்க. அதான் ஒரு 'டாக்ட'ரின் துணையோட என்னோட மனசை இவனுக்குப் புரிய வைக்கலாம்ன்னு இங்க வந்தேன்!'' என்று அவளிடம் விளக்கினான்.

பாலா சொன்னதைக் கேட்ட கௌதம் வியப்புடன், ''நீ என்னடா சொல்லற பாலா? உனக்குத்தான் காதல், கல்யாணம் எல்லாம் பிடிக்காதே. எப்படி இப்படி மாறின?'' என்றான் முகத்தில் இருந்த எரிச்சலை நாடு கடத்தியவனாக.

''தெரியலை கௌதம். காதல் எல்லாம் சொல்லிட்டா வரும்?'' என்றவனைப் பார்த்துச் சிரித்த நிரஞ்சனி, ''பாலா! நீங்க போய் முதலில் அந்தப் பொண்ணுகிட்ட உங்களோட காதலைச் சொல்லுங்க. அப்புறம் உங்களுக்குத் தலைக்குள்ள வண்டு எல்லாம் குடையாது!'' என்று புன்னகைத்தாள்.

''என்னை மன்னிச்சிடுங்க மேடம். உங்க நேரத்தையும் நான் 'வேஸ்ட்' பண்ணிட்டேன். ஆனா, இவனை நம்ப



வைக்க எனக்கு வேற வழி தெரியலை!'' என்றான் பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு.

''ச்சே! ச்சே! நீங்க வேஸ்ட் பண்ணறதா? உங்களை மாதிரி ஒருத்தரை நான் சந்திச்சதுல எனக்குத்தான் சந்தோசம். உங்க காதல் வெற்றி அடைய என் வாழ்த்துகள்!'' என்று கையைப் பிடித்துக் குலுக்கியவள், ''அப்புறம் இன்னொரு விஷயம். நீங்களும் கௌதம் மாதிரியே என்னை நிரஞ்சனின்னே கூப்பிடுங்க!'' என்றாள்.

''தேங்க்ஸ் நிரஞ்சனி! நாங்களும் கிளம்பறோம். என் கூட கொஞ்ச நேரம் செலவழிச்சு, என்னைப் பொறுத்துக்கிட்டதுக்கு ரொம்ப தேங்க்ஸ்!'' என்று அவளின் கையைக் குலுக்கியவாறே எழுந்தான்.

நிரஞ்சனியிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியில் வந்த கௌதம், காரில் ஏறியதுமே, ''பாலா! நீ இப்போ சொன்னது எல்லாம் நிஜமா? என்னால இன்னும் நம்ப முடியலை. ஆமா, யாரு அந்தப் பொண்ணு?'' என்று தன் நண்பனின் காதலைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆவலில் மடமடவென்று கேள்விகளை அடுக்கினான்.

''பார்த்தியா, நான் சொன்னா நம்ப மாட்டேங்கறே இல்லை. அதனாலதான் இங்க கூட்டிட்டு வந்தேன். நான் சொன்னதெல்லாம் நிஜம்தான், கௌதம். எப்போதிலிருந்துன்னு எனக்கே சரியாத் தெரியலை. ஆனா, அவள் இல்லாமல் என்னால் இருக்க முடியாதுன்னு புரிஞ்சிடுச்சு. இன்னும் அந்தப் பொண்ணுகிட்ட கூடச் சொல்லலை. உன்கிட்டே சொன்னேனே, ஒரு பொண்ணு என்னைத் திட்டினான்னு, அந்தப் பொண்ணுதான்!'' என்று நிறுத்திக் கௌதமைப் பார்த்தான்.

''என்னது? உன்னைத் திட்டின பொண்ணா! 'ஹ ஹ ஹா..'' என்று சிரித்துவிட்டு, ''ஊடலில் ஆரம்பித்ததா?

மறுபடியும் அந்தப் பொண்ணை எங்க பார்த்த?'' என்றான்.

''உனக்கும் அந்தப் பொண்ணை நல்லாத் தெரியும். நீ தான் அந்தப் பொண்ணுகிட்ட என் காதலைச் சொல்லி ஒத்துக்க வைக்கணும். 'ப்ளீஸ்'டா... முடியாதுன்னு சொல்லிடாத!'' என்று இதுவரை எதற்காகவும் யாரிடமும் கெஞ்சாதவன், தன் நண்பனிடம் கெஞ்சிக் கொண்டிருந்தான்.

பாலா கேட்டதற்கு, ஒன்றுமே பதில் கூறாமல், ஏதோ ஒரு யோசனையில் இருந்தவன், காரை ஒரு 'ஹோட்டலி'ன் முன் நிறுத்தி, அவனையும் இறங்கச் சொல்லி உள்ளே அழைத்துச் சென்றான்.

தங்களுக்கு வேண்டியவற்றை சர்வரிடம் சொல்லிவிட்டு, ''காதல்ல எல்லாம் தூதுவிடக் கூடாது பாலா. உன்னோட உண்மையான காதலை அந்தப் பொண்ணுகிட்ட சொல்ல உனக்குத் தைரியம் இல்லைன்னா, அப்புறம் பின்னாடி பிரச்சனைன்னு ஒண்ணு வந்தா எப்படி சமாளிப்ப? அந்தப் பொண்ணுக்குத்தான் உன் மேல எப்படி நம்பிக்கை வரும்? உன்னோட காதலை நீதான் அவளிடம் சொல்லணும். ஆனா, உன் காதலுக்கு நான் முழுக்க 'சப்போர்ட்' பண்ணுகிறேன்,'' என்றான் கௌதம்.

''ஆனா, அந்தப் பொண்ணுதான் என்னுடன் பேசவே மாட்டேங்கிறாளே. அப்புறம் நான் எப்படிப் போய்ப் பேசிப் புரிய வைக்க முடியும்? அதுதான் யோசிச்சு, உன்னைப் பேசச் சொன்னேன்!'' என்று கௌதமின் உதவியை நாடியதன் காரணத்தை விளக்கினான்.

''சரி! அதை அப்புறம் பார்க்கலாம். பொண்ணு யாருன்னு முதல்ல சொல்லு,'' என்றவனிடம், ''நம்ம 'ஆபீஸ்'ல



புதுசா வேலைக்குச் சேர்ந்திருக்காளே, தான்யா. அவதான் அது!'' என்றவுடன், ''பாலா. என்ன விளையாடறியா? ஆபீஸுக்கு வேலை செய்ய வர்றவங்களை நாமே இப்படிப் பண்ணினா, யாருடா நம்மை நம்பி வேலைக்கு வருவாங்க? அப்புறம் நமக்குக் கீழே வேலை செய்யறவங்க நம்மளைப் பத்தி என்ன நினைப்பாங்க?'' என்று 'கம்பெனி'யின் தலைவனாக மாறிப் பதறினான்.

''இல்லை கௌதம்! எனக்குத் தெரியலையே, அவள் நம்மகிட்ட வந்து வேலை செய்யப் போறான்னு. அதுவுமில்லாம யார் மேல எப்போ காதல் வரும்ன்னு மனசுக்கு மட்டும்தானே தெரியும். நான் என்ன பண்ணட்டும்? உனக்கு அது புரியாது. காதலிச்சாத்தான் தெரியும். ஆனா, அவள் இல்லாமல் என்னால வாழ முடியாதுன்னு மட்டும் தெரியுது. அவளுக்கு என்னைக் கண்டாலே பிடிக்கலேன்னு நல்லாவே தெரியும். அவள் என்கிட்டே இருந்து ஒதுங்க, ஒதுங்கத் தான் அவள் மேல இருக்கும் காதல் எனக்கு அதிகமாச்சுன்னு நினைக்கறேன். 'ப்ளீஸ்' கௌதம்! நீதான் எனக்கு 'ஹெல்ப்' பண்ணணும்!'' என்றான் அப்பாவியாக.

அவன் கூறியதைக் கேட்டு, நண்பனாக மாறி மனம் இளகியவன், சிறு முறுவலுடன், ''இப்போவே அவங்ககிட்ட போய் உன் 'லவ்'வைச் சொல்லி, அவங்க இங்கிருந்து முறுக்கிக்கிட்டுப் போயிட்டா, அப்புறம் ரொம்ப கஷ்டம். தான்யா இப்போதான் வேலைக்குச் சேர்ந்திருக்காங்க. அவங்களை உடனே போய்ப் பயமுறுத்தாம கொஞ்ச நாள் பொறுமையா இரு. நீ காதலிக்கறேன்னு சொன்னதும் எவ்வளவு சந்தோஷப்பட்டேன். ஆனா, அதுல இப்படி ஒரு சிக்கல் இருக்கும்ன்னு நான் கொஞ்சம் கூட நினைக்

கலை. சரி, இதை எப்படித் தீர்க்கலாம்ன்னு நிதானமா
யோசிக்கலாம். இப்போ சாப்பிடு. அதுக்காக ரொம்ப நாள்
எல்லாம் காத்திருக்கக் கூடாது. அப்புறம் நடக்கக் கூடா
தது எல்லாம் நடந்துடும்!'' என்று ஏதோ யோசனையில்
ஆழ்ந்தான்.

கௌதம் யோசனையில் ஆழ்ந்து விட்டதைக் கவ
னிக்காதவன், ''ஆமா கௌதம்! அதைப் பத்தி நான்
யோசிக்கவே இல்லை. நீ சொல்லறதும் சரிதான். உன்
கிட்டயாவது என்னோட காதலைப் பத்தி சொல்லிட்
டேன்னு எனக்குக் கொஞ்சம் நிம்மதியா இருக்கு. கூடிய
சீக்கிரமா இதைத் தான்யா கிட்டேயும் சொல்லும் நேரம்
வரும்!'' என்று கௌதமிடம் பேசுவது போல அவன்
மனதிற்கே சமாதானம் செய்து கொண்டான் பாலா.

பின், ''ஆனா, முதல்ல புரியாதது எல்லாம் இப்போ
புரியுது. என்னை ஒரு பொண்ணு திட்டினவுடனேயே
என்னால தாங்க முடியலையே, அப்போ நான் பொண்
ணுங்களைக் கிண்டல் பண்ணினப்போ எல்லோருக்கும்
மனசு எவ்வளவு சங்கடப்பட்டிருக்கும். நினைச்சா
ரொம்பக் கஷ்டமா இருக்கு!'' என்றான் கவலையுடன்.

தன் எண்ணங்களிலிருந்து வெளிவந்த கௌதம்,
''பாலா! அதெல்லாம் நடந்து முடிஞ்சது. அதைப் பத்தி
கவலைப்படாம இனி நடக்க வேண்டியதைப் பார்ப்
போம்!'' என்று நண்பனை ஆறுதல் படுத்திவிட்டு, ''அது
எப்படி பாலா உனக்கு மட்டும் இப்படி எல்லாம் யோசிக்
கத் தோணுது? 'டாக்டர் கிட்ட கூட்டிட்டு வந்து உன்
காதலைப் பத்திச் சொல்றது!'' என்று பாலாவை மெச்சிக்
கொண்டே அங்கிருந்து அழைத்துச் சென்றான்.

* * *



கௌதமிடம் பேசிய பின்பு மனதின் பாரம் சிறிது
குறைந்து விட்டதைப் போல உணர்ந்த பாலா, அவன்
சொன்னதைப் போலவே, சிறிது காலம் அமைதி காக்க
முயன்றான். அவளைப் பார்ப்பது மட்டும் போதும் என்று
அதற்காகவே தினமும் தவமிருந்தான். அவள் இருந்த
பக்கமே போகாமல், ஏதாவது வேலை என்றாலும் மற்ற
வர்களை விட்டே அவளிடம் பேசிக் கொண்டிருந்தவ
னின் செயலைப் பார்த்த தான்யாவோ, 'இவன் நல்ல
வனா நடிக்க முயற்சி பண்றானா? இதுக்கெல்லாம்
யாரும் மசிய மாட்டோம்!'' என்று எண்ணிக் கொண்டாள்.

பாலாவின் காதலைப் பற்றிக் கேள்விப்பட்ட வசந்த்,
அவனைக் கிண்டல் செய்து ஒரு வழி பண்ணிய பின்பு
தான் மறுவேலையைப் பார்த்தான். அவனின் காதலைப்
பற்றி வசந்தின் மூலம் அறிந்த மதுவும், பாலாவைச்
சந்திக்கலாம், அத்தோடு தான்யாவையும் பார்க்கலாம்
என்று நினைத்து தன் அண்ணனின் அலுவலகத்திற்கு
ஒரு நாள் மாலை வந்தாள். அவள் சென்ற நேரம், கௌதம்
யாருடனோ மும்முரமாகத் தொலைபேசியில் பேசிக்
கொண்டிருந்ததால் அவனைத் தொந்தரவு செய்யாமல்
நேராகப் பாலாவிடம் சென்றாள் மது.

மதுவைப் பார்த்துச் சிரித்தவன், ''வா மது. எப்படி
இருக்க? ம்ம்ம்... கல்யாணம் ஆனதும் எங்களை எல்லாம்
மறந்துட்ட போல. நீ பெங்களூரில் இருந்தப்பவாவது
அடிக்கடி பேசுவ. இப்போ பக்கத்துல இருந்தும் பேசக்
கூட மாட்டேங்கிற. ஆனாலும் இந்தப் பொண்ணுங்க
கல்யாணத்துக்கு அப்புறம் ரொம்பத்தான் மாறிடறாங்க...
பரவாயில்லை... பரவாயில்லை...'' என்று அவளைக்
கேலி செய்தான். அவளோ அவன் கேட்டதற்கு ஒன்றும்
சொல்லாமல் அவனைக் குறுகுறுவெனப் பார்த்தாள்.

பதில் சொல்லத் தெரியாமல் முழிக்கிறாள் என்று நினைத்தவன், ''என்ன மது! ஒண்ணுமே பேசாம என்னை அப்படிப் பார்க்கற? சரி... சரி! போனாப் போகுது... உன்னை மன்னிச்சு விட்டுடறேன். சரி, உங்க 'கம்பெனி'யிலேயே வேலைக்குப் போறியே, அது எப்படிப் போகுது?'' என்று பெரிய மனது பண்ணி அவளை மன்னிக்க, அவளோ,

''வேலையெல்லாம் நல்லபடியாப் போகுது. அதை விடுங்க பாலாண்ணா! யாரு யாரை மன்னிக்கறது? நீங்க உங்க காதலைப் பத்தி என்கிட்டே சொல்லாம மறைச்சிட்டு எனக்கே மன்னிப்பு வேறயா? நீங்க என்ன தான் சொல்லுங்க, என்கிட்டே சொல்லாம இருந்தது தப்பு தான். அதுக்குச் சண்டை போடலாம்ன்னுதான் வந்தேன். ஆனா, அதைவிட உங்க காதல் விஷயம் முக்கியம் என்கிறதுனால அதை விட்டுடறேன். நீங்க இப்படி காதல்ல போய் விழுவீங்கன்னு நான் சத்தியமா எதிர்பார்க்கலை. சரி! சொல்லுங்க. பொண்ணு யாரு?'' என்று கேட்டாள், தான்யாவைப் பார்க்கும் ஆவலில்...

பாலாவை அறிந்த நாளில் இருந்தே மதுவும், பாலாவுடன் தன் அண்ணனைப் போலவே இன்னொரு அண்ணன் என்கிற பாசத்தில்தான் பழகி வந்தாள். பாலாவும், மதுவைத் தன் தங்கை போல நினைத்துப் பழகினான். அவளிடம் எல்லா விஷயத்தையும் பகிர்ந்து கொள்வான். ஆனால், தான்யாவிடமே இன்னும் தன் காதலைச் சொல்லவில்லை. அதனால், வசந்திடமும், கௌதமிடமும், யாரிடமும் இதைப் பற்றிச் சொல்ல வேண்டாம் என்று கூறி இருந்தான். வசந்த் கேட்டால்தானே.

''உனக்கும் தெரிஞ்சிடுச்சா. இந்த வசந்த்கிட்ட சொல்லும் போதே யார் கிட்டேயும் சொல்லாதடான்னு



சொல்லித்தான் சொன்னேன். 'கரெக்டா' நான் சொன்னதைக் காத்துல பறக்க விட்டுட்டு உன்கிட்ட சொல்லிட்டானா? முந்திரிக்கொட்டை! அவனை நான் அப்புறமா வச்சுக்கறேன்!'' என்று அசடு வழிந்தான்.

அவன் சொன்னதைக் கேட்டவள் சிரித்தவாறே, ''உங்க பிரெண்ட்கிட்ட சொல்லாதேன்னு சொன்னா, அவர் அதைத்தானே முதல்ல சொல்லுவாரு. நான் இங்க வந்ததுக்குக் காரணமே உங்களை வாழ்த்தத்தான். வாழ்த்துகள் அண்ணா! எனக்கு இந்த விஷயத்தைக் கேட்டு எவ்வளவு சந்தோஷமா இருந்தது தெரியுமா? நீங்க எங்கே கல்யாணமே பண்ணிக்க மாட்டீங்களோன்னு கௌதம் அண்ணாவும், வசந்தும் ரொம்பக் கவலைப்பட்டுட்டு இருந்தாங்க. நல்ல வேளை, உங்களுக்கும் கல்யாணம் பண்ணணும்னு தோணுச்சே!'' என்று அவன் கையைப் பிடித்து வாழ்த்துத் தெரிவித்தாள்.

மது, பாலாவின் அறைக்குச் சென்றதைப் பார்த்த தான்யா, 'யாரு இந்தப் பொண்ணு? எங்கோ பார்த்த முகமா இருக்கே?' என்று நினைத்தவள், கௌதமின் முகத்தைச் சுத்தமாக நினைவுக்குக் கொண்டு வரவில்லை. 'ஆனா, இந்த அழகான பொண்ணு இவனை ஏன் பார்க்க வந்தா?' என்று தலையை உயர்த்தி அவன் அறை இருந்த பக்கம் பார்த்தவளின் கண்களில், மது, பாலாவின் கையைப் பற்றிக் குலுக்குவது கண்ணில் பட, 'ச்சே! ஒரு பொண்ணையும் விட மாட்டான் போல. அதுவும் வேலை செய்யற இடத்துல!' என்று எரிச்சலுடன் தன் வேலையில் மீண்டும் ஆழ்ந்தாள். அதன் பின், கௌதம் பாலாவின் அறைக்குச் சென்றதையோ அவர்கள் மூவரும் சிரித்துப்

பேசிக் கொண்டிருந்ததையோ கவனிக்காதவள், மாலையில் தன் வேலை முடிந்தவுடன் வீட்டிற்குக் கிளம்பி விட்டாள்.

தான்யா தலை குனிந்து காரியத்தின் மேல் கண்ணாக இருந்த அதே சமயம், மது மற்றும் பாலாவின் கண்கள் அவள் மேல்தான் இருந்தன. மது, பாலாவிடம் அவன் காதலிக்கும் பெண் யாரென்று கேட்டு, அவன் கைகாட்டிய தான்யாவைப் பார்த்தவள், ''ரொம்ப அழகா உங்களுக்குப் பொருத்தமா இருக்காங்க. ரொம்ப நாள் காத்திருக்காம சீக்கிரமா அவங்ககிட்ட சொல்லிடுங்க. அப்புறம் கல்யாணத்துக்கு நிறையா வேலையிருக்குமே!'' என்றாள்.

''நானும் சொல்லணும்ன்னுதான் நினைக்கறேன். ஆனா, அவதான் என் மேல 'டன்' கணக்குல வெறுப்பை வச்சிருக்காளே. பத்தாததுக்கு கௌதம் வேற கொஞ்ச நாள் பொறுமையா இருக்கச் சொன்னான். அவன் சொல்றதுலேயும் நியாயம் இருக்கே. பார்க்கலாம். எனக்குக் கூடிய விரைவில் அந்த நல்ல நேரம் வரும்ன்னு நம்புவோம்!'' என்று முடித்தான். கூடிய விரைவிலேயே அவன் காதலை அவளிடம் தெரிவிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால், அவளிடம் காதலைத் தெரிவித்த சந்தர்ப்பம் தான் அவன் எதிர்பாராத தருணத்தில் அமைந்து அவனை மேலும் சங்கடப்பட வைத்தது.

மதுவும் அவனுக்கு மீண்டும் வாழ்த்துத் தெரிவித்து விட்டு, தன் அண்ணனிடம் சொல்லிக் கொண்டு, தான்யாவின் மனதில் ஒரு புயலைக் கிளப்பி விட்டதை அறியாமல், தன் வீட்டை நோக்கிச் சென்றாள்.



## 6

''கண்களால் படையெடுத்தாய்,
வீழ்ந்ததென்னவோ பார்வை!
பேச்சால் போர் தொடுத்தாய்,
சுருண்டதென்னவோ வார்த்தை!
சிரிப்பால் கொள்ளையடித்தாய்,
அடைக்கலமானதென்னவோ நெஞ்சம்!
அகத்தால் யுத்தம் செய்தாய்,
வேறு வழியில்லை
சரணடைவதைத் தவிர!''

அதே வாரத்தில் ஒரு நாள் மாலை, கௌதமின் அறைக்குள் சென்ற பாலா, ''கௌதம், வேலை முடிஞ்சு வீட்டுக்குப் போறதுக்கு முன்னாடி உன்கூட கொஞ்சம் பேசணும். டைம் இருக்குமா? என்று கேள்வி கேட்டுக் கொண்டே வந்தவனைப் பார்த்து, ''நீ ரொம்ப மாறிட்ட பாலா. எப்பயிருந்து என்கிட்டே 'டைம்' இருக்குமான்னு கேள்வி எல்லாம் கேட்க ஆரம்பிச்ச?'' என்று அவனைக் கடிந்து கொண்டான். அவன் முகம் சோர்வுடன் இருப்பதைப் பார்த்து, ''என்ன பாலா ஏதாவது பிரச்சனையா?'' என்று நண்பனுக்கே உரிய அக்கறையுடன் வினவினான்.

''ஆமா, இருக்கிற பிரச்சனை பத்தாதா? உனக்கு இன்னும் வேற பிரச்சனை வேணுமா? உன்கிட்ட என் அப்பாவைப் பத்திக் கொஞ்சம் பேசணும்.''

'தாராளமா. வேலை முடிஞ்சு வெளியே எங்காவது 'காபி ஷாப்'ல போய் உட்கார்ந்து பேசலாம்,'' என்றவன், சொன்னதைப் போலவே வேலையை முடித்துக் கொண்டு பாலாவை அழைத்துச் சென்றான்.

‘காபி ஷாப்’பின் உள்ளே சென்றவன் ஆளுக்கு ஒரு காபி சொல்லிவிட்டு, ‘‘சொல்லு பாலா! என்ன விஷயம்? ஏன் இப்படி ‘டல்’லா இருக்க?’’ எனக் கேட்டான்.

‘‘அது வேற ஒண்ணுமில்லை கௌதம்! தான்யாவை நான் மனசார விரும்பறேன்னு எனக்குப் புரியறதுக்கு முன்னாடி, அவள் மேல இருக்கிறது காதலா இல்லையான்னு மனசைப் போட்டுக் குழப்பிக்கிட்டு, தெளிவில்லாமல் ஒரு முடிவுக்கு வர முடியாம இருந்தேன். அப்போதான் உறவுகளைப் பத்தி யோசிக்க ஆரம்பிச்சேன். இந்த காதல், கல்யாணம், குடும்பம் எல்லாம் எனக்குச் சரியா வருமான்னு நினைச்சேன். அப்படிக் குழம்பிட்டு இருந்தப்போதான் நீ அன்னைக்கு, என்னோட அத்தைங்க சொல்றதை நம்பறதுக்கு முன்னாடி, அப்பாகிட்டேயும் ஒரு வார்த்தை கேட்கச் சொன்னியே, அதே மாதிரி, நான் போன தடவை ஊருக்குப் போனப்போ, அப்பாகிட்ட போய் என்னோட அத்தைகளைப் பத்தி விசாரிச்சேன்.’’

‘‘அப்பாகிட்ட பேசினியா? என்ன சொன்னார்?’’ என்றான் கௌதம் ஒரு எதிர்பார்ப்புடன்.

‘‘கடைசியில நீ சொன்னதுதான் சரி கௌதம். அப்பாவோட வீட்ல வசதி ரொம்பக் குறைவு. அப்பாதான் கஷ்டப்பட்டு வேலை செஞ்சு ரெண்டு தங்கச்சிங்களையும் படிக்க வச்சு, நல்ல இடத்துல அண்ணன் - தம்பிக்கே கல்யாணமும் பண்ணிக் கொடுத்திருக்காரு. அப்பாவோட நல்ல பாசமான குணத்தைப் பார்த்துத்தான் வசதி படைச்சவரா இருந்தாலும் அம்மாவோட அப்பா, அதாவது என்னோட தாத்தா, அம்மாவை அப்பாவுக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்திருக்காரு. கல்யாணமான



கொஞ்ச நாளிலேயே, அந்த தாத்தாவும் இறந்து போயிட்டார். அம்மாவும் ஒரே பொண்ணுங்கறதுனால எல்லாச் சொத்தும் அம்மாவுக்கே வந்திடுச்சு.

‘‘இதை எல்லாம் பார்த்துப் பொறுக்காத எங்க அத்தைங்க, அண்ணனுக்கு மட்டும் எப்படி இவ்வளவு வசதி வரலாம்னு பொருமியிருக்காங்க. அதனால அடிக்கடி, அப்பாகிட்ட வந்து சண்டை வேற போட்டிருக்காங்க. அதாவது, அவங்களுக்கு மட்டும் ஒரு வசதியில்லாத குடும்பத்துல இருந்து மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணம் பண்ணி வச்சிட்டு, அவர் மட்டும் நல்லா ஒரு பணக்காரப் பொண்ணாப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கிட்டார்ன்னு. அதே சமயம், ஏதாவது பேசி, ஏதோ ஒரு காரணம் சொல்லி, அழுது கொஞ்சம் கொஞ்சமா பணம் வாங்கிட்டும் போயிருக்காங்க. ஒவ்வொரு தடவையும் அப்பாவும், அவங்க மனசு புண்படக் கூடாதுன்னு அவங்களுக்குப் பணம் கொடுத்துட்டுதான் இருந்திருக்கிறார். இது எல்லாம் அம்மாவுக்குத் தெரிஞ்சாலும் ஒரு வார்த்தை ஒண்ணுமே சொன்னதே இல்லையாம். ஆனாலும், அத்தைங்களுக்கு இதெல்லாம் பத்தலை. சொத்து முழுவதும் சுருட்ட எத்தனையோ திட்டம் போட்டிருக்காங்க.

‘‘ரொம்ப நாளா குழந்தையே இல்லாம அம்மாவும், அப்பாவும் இருந்தப்போ, ‘வாரிசே இல்லேன்னா சொத்து அவங்களுக்குத்தானே அப்பா கொடுப்பார்’ன்னு நினைச்சு, அத்தைங்க ரொம்ப சந்தோசப்பட்டாங்க. ஆனா, நான் பொறந்ததும் அவங்களுக்கு ஒரு பெரிய அதிர்ச்சி. நான் பிறந்தவுடனேயே என்னைக் கொல்ல முயற்சி செஞ்சிருக்காங்க போல. ஒரு நாள், இது எல்லாத்தையும் பத்தி, அவங்களே பேசிக்கிட்டதைக் கேட்டுட்டுத்தான்,

சண்டை போட்டு அவங்களை வீட்டுக்கு வரக் கூடா
துன்னு துரத்தி இருக்கிறார் அப்பா.

''பெரியவங்க இருந்திருந்தா ஏதாவது சொல்லி இருப்
பாங்க. அவங்களும் இல்லையா, இப்போதான் அப்பா
கிட்ட கேட்டதுக்கு அப்புறம் எல்லா உண்மையும் தெரிஞ்
சது. ஊர்லேயும் விசாரிச்சப்போதான் என் அத்தைங்
களோட குணம் பத்தியும் தெரிஞ்சது. அத்தைகளுக்கு
ஆளுக்கு ஒரு பொண்ணு வேற. அதுல யாரையாவது
நான் கல்யாணம் செய்துகிட்டா, சொத்தைப் பாதி பாதி
பிரிச்சி எடுத்துக்கலாம்ன்னு நினைச்சுதான், வேற
வழியில்லாம, சின்ன வயசுல இருந்தே என்கிட்ட பாசமா
இருக்கிற மாதிரி நடந்திருக்காங்க.

''அதுவில்லாம எங்கே நான் அப்பாகிட்ட கேட்டிடு
வேன்னு நினைச்சுதான் 'அப்பாவுக்குத் தெரிஞ்சா
திட்டுவார், அது பண்ணுவார்... இது பண்ணுவார்ன்னு',
என்கிட்டயும் அழுதிருக்காங்க போல. சின்ன வயசுல
இருந்தே என் அம்மாவைப் பத்திச் சொல்லிச் சொல்லி
என்னோட மனசைக் கலைச்சிட்டதுனால, பெரியவனாகி
யும் அதைப் பத்தி கொஞ்சம் கூட யோசிக்காம விட்டுட்
டேன். அவங்க சொன்னதுதான் உண்மைன்னு நம்பி
நானும் இத்தனை நாள் அப்பாகிட்ட கேட்கவே இல்லை.
ச்சே!

''இதை எல்லாம் கேட்டா சிரிப்பா வருது. சொத்துக்காக
எப்படி இப்படி எல்லாம் நடந்துக்கறாங்க பாரு. இந்த லட்
சணத்துல நான் அம்மாவை வேற தப்பா நினைச்சுக்
கிட்டு முட்டாளா இருந்திருக்கிறேன். அதுவுமில்லாம
நான் சின்னப் பையன்னு அப்பாவும் என்கிட்ட இது நாள்
வரைக்கும் ஒண்ணுமே சொல்லலை. என்னோட அத்தைங்



களைப் பத்தி எந்த ஒரு தப்பான எண்ணத்தையும் சின்ன
வயசுல என்னோட மனசுல விதைக்கக் கூடாதுன்னு
அப்பா நினைச்சாராம்.

''தப்பு பண்ணினவங்களைப் பத்திக் கூட நான் தப்பா
நினைக்கக் கூடாதுன்னு நினைக்கற என்னோட அப்பா
எங்க, தப்பே பண்ணாத அம்மாவைப் பத்தித் தப்புத்
தப்பாச் சொன்ன என்னோட அத்தைகள் எங்க! அப்பாவை
நினைச்சா எனக்குப் பெருமையா இருக்குடா. அப்பா
முன்னாடியே சொல்லி இருந்தா இவ்வளவு நாள் தவறா
நினைச்சிட்டு இருந்ததைத் தவிர்த்திருக்கலாமே. நான்
கேட்டதுக்கு அப்புறம் அப்பா எல்லாத்தையும் சொல்
லிட்டு அழுதாரு பாரு, மனசுக்குக் கஷ்டமா இருந்தது
கௌதம். இப்படிப்பட்ட ஒரு நல்ல அண்ணனை, அத்
தைங்க இழந்துட்டாங்க!'' என்று சொல்லிப் பெருமூச்சு
விட்டான் பாலா.

''சாரிடா பாலா! எனக்கு என்ன சொல்றதுன்னே தெரி
யலை. இப்பவாவது உனக்கு உண்மை தெரிஞ்சதே.
அப்பா இத்தனை நாளா இவ்வளவையும் மனசுல
வச்சுட்டு எவ்வளவு கஷ்டப்பட்டு இருப்பார். பாவம்டா
அவர்! அவரை நீ சீக்கிரமா இங்க கூட்டிட்டு வந்து நல்லா
கவனிச்சுக்கோடா!'' என்ற கௌதமைப் பார்த்து விரக்தி
யாகச் சிரித்தவன்,

''நான் என்ன மாட்டேன்னா சொல்றேன். கல்யாணம்
முடிஞ்சாதான் அவர் வருவேன்னு சொல்லறார். நான்
கல்யாணம் பண்ணணும்னு நினைக்கற பொண்ணுக்கு
என்னைக் கண்டாலே பிடிக்க மாட்டேங்குது!'' என்றவ
னின் கைகளைக் கௌதம் பற்றி, தட்டிக் கொடுத்து,
''கவலையே படாதே பாலா. எல்லாம் நல்லபடியா

நடக்கும்!'' என்று தன் நண்பனுக்கு ஆறுதல் அளித்தான்.

''அது சரி! அப்பாகிட்ட நீ தான்யாவை விரும்பறதைப் பத்தி சொல்லிட்டியா?''

''இன்னும் இல்லை. முதல்ல தான்யாகிட்ட சொல்லிட்டு அப்புறமா அப்பாகிட்ட சொல்லலாம்ன்னு இருந்தேன். இப்போவே அப்பாகிட்ட சொல்லி, அப்புறம் கடைசியில தான்யா ஒத்துக்கலைன்னா, அப்பாவை வீணா கவலைப்பட வைக்க வேண்டாம்ன்னுதான்!'' என்றான் கரகரத்த குரலில்.

''பாலா! இப்போ என்ன ஆச்சுன்னு கவலைப்படற? எல்லாம் நல்லதாவே நடக்கும்ன்னு நினை,'' என்று அவனுக்குத் தைரியமளித்து அங்கிருந்து அவனையும் கிளப்பி வீட்டுக்குச் சென்றான்.

* * *

கௌதம் - பாலாவின் அலுவலகத்தில், முக்கியமான ஒரு 'ப்ராஜெக்ட்'டை அந்த வாரத்தில் முடிக்க வேண்டி பாலா, தான்யா மற்றும் சுவாதி மும்முரமாக வேலை செய்து கொண்டிருந்தார்கள். ஒரு நாள் இரவு அதை வெற்றிகரமாக முடித்துவிட்டு வீடு திரும்ப இரவு எட்டு மணியாகி விட்டது. அதனால் சாப்பிடவென்று, நேரம் கழித்து வேலை செய்த எட்டுப் பேரும் அருகிலிருந்த உணவகத்திற்குச் சென்றனர். தான்யா அவர்களுடன் வரவில்லை என்று எவ்வளவோ மறுத்தும் கௌதம்தான் அவளை வற்புறுத்தி அழைத்துச் சென்றான்.

பாலாவிற்கு, தான் தான்யாவின் நினைப்பில் தாழ்ந்து போவதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதனால் இன்று ஏதாவது செய்து, எப்படியாவது



தான்யாவிடம் நல்ல பெயரை வாங்கிவிட வேண்டும் என்று மனதில் நினைத்துக் கொண்டு, அவர்களுடன் கிளம்பிச் சென்றான். அனைவரும் உள்ளே சென்று அமர, இவனும் கனகச்சிதமாகத் தான்யாவிற்கு அருகில் இருந்த சேரில் அமர்ந்து கொண்டான். அவளோ இவனைப் பார்த்து முறைத்தவள், ஒருவருக்கும் சந்தேகம் வராதபடி கிடைத்த சந்தர்ப்பத்தில் இடம் மாறி உட்கார்ந்து கொண்டாள்.

அனைவரும் சாப்பிடும் பொழுது எதையோ சலசலத்துக் கொண்டிருந்தனர். பாலா மட்டும் தான்யாவின் செய்கையை நினைத்து மனதிற்குள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தான். 'ச்சே! இவ ஏன் என்னை எப்பவுமே தப்பாவே பார்க்கறா? நான் தான் இப்போ அவளை ஒண்ணுமே சொல்லறது இல்லையே!' என்று யோசித்துக் கலங்கினான். அப்பொழுது கௌதமை யாரோ கைபேசியில் அழைக்க, அவனும் அங்கிருந்து எழுந்து சென்றான்.

சாப்பிட்டு முடித்து, மற்றவர்கள் கைகழுவி வர, சர்வர் இவர்களுக்கான ரசீதைத் தந்தார். மற்றவர்கள் எவ்வளவோ தடுத்தும், பாலாவே அனைவருக்கும் சேர்த்துப் பணம் கொடுத்தான். அவர்களும் இவனுக்கு நன்றி தெரிவித்து விட்டு ஒவ்வொருவராகக் கிளம்பினர்.

கௌதம் பேசிவிட்டு வருவதற்காக உணவகத்தின் வெளியே காத்திருந்த பாலாவிடம், அவசரம் அவசரமாக வந்த தான்யாவோ, அவள் சாப்பிட்டதற்கான பணத்தை அவனிடம் தந்துவிட்டு, ''எனக்கு யாரும் தெரியாதவங்க சும்மா கொடுத்தா வாங்கிக்கப் பிடிக்காது. இனிமேல் இது மாதிரி எல்லாம் செய்ய வேண்டாம்!'' என்று கூறி, அவன் முகத்தில் இருந்த சிரிப்பைக் கொன்றாள்.

'எல்லோரும் பேசாம போனாங்கதானே? இவளுக்கு மட்டும் என்ன வந்துச்சு? என்னை இவளுக்குத் தெரியலையா? சரி, ஒரு 'ஃபிரெண்டா' நினைக்கலைன்னாலும் பரவாயில்லை. 'அட்லீஸ்ட்'கூட வேலை செய்யறவன் என்றாவது நினைச்சிருக்கலாமே!' என்று கௌதம் வந்து அவனை அழைத்துச் செல்லும்வரை, அவளை உதாசீனப்படுத்தியதை எண்ணிக் கலங்கித் தவித்தான் அந்தக் காதலன்.

* * *

ஒரு 'ப்ராஜெக்ட்' விஷயமாக கௌதம் அல்லது பாலா யாராவது ஒருவர், ஒரு மாதத்திற்கு அமெரிக்கா செல்ல வேண்டும் என்பதைப் பற்றிப் பேச்சு எழுந்தது. பாலா, தான் அங்கே சென்றால் இங்கிருக்கும் தன்னவளைப் பார்க்க முடியாதே என்று குழம்பினான். எதைக் காரணம் காட்டிக் கௌதமைப் போகச் சொல்வது என்று சிந்தித்துக் கொண்டிருந்தான்.

அதே நேரம், கௌதம் தன் அறையில் மும்முரமாக எதையோ செய்து கொண்டிருந்ததால், ஒரு சந்தேகத்தைக் கேட்க வேறு வழியில்லாமல் பாலாவின் அறைக்குள் வந்தாள் தான்யா. அவளை அங்கு எதிர்பார்க்காத பாலா, அவளிடம் என்னவென்று கேட்க, அவளும் ஒரு வழியாக வந்த விஷயத்தைக் கூறி வேலையை முடித்துக் கொண்டு கிளம்பினாள்.

ஆனால், கிளம்பும் முன் பாலா அவளிடம், ''வேற ஏதாவது வேண்டுமா?'' என்று சாதாரணமாகக் கேட்க, எதேச்சையாக அவனையும் அறியாமல் அவனின் இரண்டு விரல்கள் அவன் உதட்டின் மேலிருப்பதைப் பார்த்தாள். அவன் வேண்டும் என்றே தன்னை வம்புக்கு இழுக்கிறான்



என்று நினைத்து, அவளின் கோபம் தலைக்கேறியது. ''அதை யாராவது உங்களைத் தேடி வரும் பொண்ணுங்க கிட்ட போய்க் கேளுங்க!'' என்று வெடித்தாள்.

''வேலை செய்யறதைப் பத்திக் கேட்டா நீங்க என்ன சொல்லறீங்க, தான்யா?'' என்று அவனும் கோபமாகக் கேட்டான். 'தப்புப் பண்ணறவனே கோபப்படும் பொழுது நான் கோபப்படறதுல தப்பே இல்ல!' என்று முடிவு பண்ணியவள், ''நீங்க செஞ்சதைத்தான் சொன்னேன். உங்க 'ஆபீஸு'க்கு மூணு நாளைக்கு முன்னாடி ஒரு பொண்ணு வந்தாங்களே, அவங்ககிட்ட கேளுங்க. உங்களுக்கு வேணுங்கறது கிடைக்கும். ஆனா, அவங்ககிட்டேயும், நீங்க எப்படிப்பட்ட ஆளுன்னு உங்களைப் பத்தி முழுசா சொன்னதுக்கு அப்புறம் கேட்டா நல்லா கன்னத்துல அறை கொடுப்பாங்க!'' என்று அதுவரையில் அவள் மனதிற்குள் உறுத்திக் கொண்டிருந்ததைச் சொல்லி முடித்தாள்.

இதைக் கேட்டுத் தன் இருக்கையிலிருந்து கோபமாக எழுந்தவன், ''ஏய்! என்ன பேசறேன்னு தெரிஞ்சுதான் பேசறியா? நான் எது பண்ணினாலும் தப்பாத்தான் இருக்கும்ன்னு நீயா மனசுல நினைச்சுட்டு எதுக்கு இப்படி வாய்க்கு வந்ததெல்லாம் பேசற? ச்சே! நீ எது பேசினாலும் நான் கேட்டுட்டு சும்மா இருப்பேன்னு நினைச்சியா?'' என்றவன், கௌதம் சொன்ன 'கொஞ்ச நாள் பொறுமையா இரு' என்ற வாக்கியத்தைத் தூக்கிலிட்டுக் கொன்றான்.

''நல்லாக் கேட்டுக்கோ! உன்னைப் பார்த்த நாளில் இருந்து நான் எந்தப் பொண்ணையும் ஏறெடுத்துப் பார்த்தது கூட இல்லை. அது ஏன்னு எனக்கு அப்போ புரியலை. ஆனா, இப்போ நல்லா, தெளிவாப் புரிஞ்சிடுச்சு.

அதற்கு முன்னால பொண்ணுங்களைக் கிண்டல் செஞ்சுட்டுதான் இருந்தேன். இல்லைன்னு சொல்லலை. ஆனா, இப்போ இல்லை. நான் அன்னைக்கி உன்னைப் பத்தி பேசினதுக்கு, உன்கிட்ட இன்னும் மன்னிப்புக் கேட் கலை. அதையும் இப்போ கேட்கறேன். என்னை மன் னிச்சிடு! அது நான் தெரியாம பண்ணினது. நானும் ஒரு சராசரி மனுஷன்தான். மகாத்மா இல்லை. தப்பே பண்ணாததுக்கு, அன்னைக்கி பேசாமப் போக வேண் டியதுதானே. திட்டறேன்னு சும்மா இருந்தவன் மனசுல ஒரு பொறியைக் கிளப்பிட்டு நீ பாட்டுக்குப் போயிட்ட. அது இப்போ பத்தி என் மனசு முழுக்க பரவிடுச்சு. நானே நினைச்சாலும் என்னால கட்டுப்படுத்த முடியலை.

''உன்னைப் பார்த்த நாளிலிருந்தா இல்லை அதுக்கப் புறமான்னு சரியாத் தெரியலை, உன்னை நான் மனசாரக் காதலிக்க ஆரம்பிச்சுட்டேன். உன்கிட்ட எப்படிச் சொல் லறதுன்னு தெரியாமத்தான் தவிச்சுட்டு இருக்கிறேன். என்னைப் போய் இப்படிக் கேட்கறியே? எனக்கு இந்த ஜென்மம் மட்டும் இல்லை, இனி எந்த ஜென்மத்திலும் நீதான் வேணும். நீ மட்டும் எனக்குப் போதும்,'' என்று நிறுத்தாமல் பேசியவனை இடையிட்டு, ''அது இந்த ஜென்மத்துலேயே நடக்காது. அப்புறம் எப்படி இனி வரும் எந்த ஜென்மத்திலும் நடக்கும்?'' என்று கிண்டலாகச் சிரித்தாள்.

அவள் பேசவே இல்லை என்பதுபோல், ''உனக்கு என் மேல நிறையா வெறுப்பு இருக்கும்ன்னு தெரியும். ஆனா, என்னை இவ்வளவு கீழ்த்தரமா நினைப்பேன்னு நான் கொஞ்சம் கூட நினைக்கலை.

''என்னை விடு. மதுவைப் போய் இப்படி தப்பாப் பேச றியே. மது யாருன்னு உனக்குத் தெரியுமா? கௌதமோட



தங்கச்சி! மது எனக்கும் ஒரு தங்கச்சிதான். அவளுக்குக் கல்யாணம் வேற ஆயிடுச்சு. மது இதைக் கேட்டா, அவள் மனசு எவ்வளவு பாடுபடும்? நீ என்னை என்ன வேணா சொல்லிக்கோ. அதுக்கு உனக்கு முழு உரிமை யும் இருக்கு. ஆனா, எங்களோட மதுவை ஏதாவது சொன்ன, அப்புறம் நடக்கறதே வேறே. ச்சே! இதை உன் கிட்ட இருந்து நான் சுத்தமா எதிர்பார்க்கலை. என்னைத் தப்பு சொல்றதுக்காக நீ இவ்வளவு கீழே இறங்கி வந் திருக்க வேண்டாம். இனி நான் ஒரு வார்த்தை உன்கிட்ட பேசினா அப்புறம் என்னன்னு கேளு!'' என்று கூறி விட்டு, விடுவிடுவென அவன் அறையிலிருந்து வெளி யேறினான். அவன் பேசியதைக் கேட்டு முதல் முறை யாகத் தான்யா வாயடைத்துப் போனாள்.

பாலாவை மட்டும் குதறும் நோக்கத்துடன்தான் அவள் அவ்வாறு சொன்னாள். ஆனால், ஒரு பெண்ணைப் போய், அதுவும் கௌதமின் தங்கையை இவ்வாறு கூறிவிட்டோமே என்று அவள் மனதே அவளைக் கேள்வி கேட்க ஆரம்பித்தது. 'எல்லாம் இவனால் வந்தது' என்று அந்தத் தப்பையும் தயங்காமல் பாலாவின் தலை மேல் ஏற்றினாள்.

'இப்போ என்னைக் காதலிக்க வேற செய்யறானா? இதை நான் நம்பணுமா? இவன் சொன்ன உடனே இவன் பின்னாடி நாய்க்குட்டி வாலாட்டிட்டுப் போற மாதிரி போயிடுவாங்களா? கௌதம் 'சாரோ'ட முகத்துக்காகப் பார்க்கறேன். இல்லேன்னா இவனை உண்டு இல்லைன்னு செஞ்சிடுவேன்!' என்று மனதிற்குள் கறுவியவள், அடுத்துக் கிடைத்த சந்தர்ப்பத்தில், பாலாவிடம் அவள் மதுவைத் தப்பாகப் பேசியதற்கு மன்னிப்புக் கோர வேண்டும்

என்று நினைத்திருந்தாள். ஆனால், தான்யாவின் கண்களில் படாமலேயே, அடுத்து வந்த வாரத்தில், பாலா, கௌதமிடம் அவனே செல்வதாகக் கூறி அமெரிக்கா சென்று விட்டதனால் அவளால் மன்னிப்பைக் கேட்க முடியாமல் தவித்துப் போனாள்.

'போயும் போயும் கௌதம் 'சாரோ'ட தங்கையைப் போய் இப்படிச் சொல்லிட்டோமே. பாலா 'சார்' கிட்ட மன்னிப்புக் கேட்கலாம்ன்னு பார்த்தா அவரும் ஊர்ல இல்லை. இனி எப்போ வருவாரோ? அதுவரை இந்தக் குற்ற உணர்வுடன் என்னால நிம்மதியா வேலை செய்ய முடியாது. மனசை உறுத்திட்டேதான் இருக்கும். என்ன பண்ணலாம்?' என்று யோசித்தவள், ஒரு முடிவுடன் பாலாவுக்கு மின்னஞ்சல் ஒன்றை அனுப்பி மன்னிப்புக் கோரினாள். ஆனால், இந்த ஒரு காரணத்துக்காக அவன் மேலிருக்கும் நல்லெண்ணத்தை(?) மாற்றிக் கொள்ள விரும்பவில்லை என்றும், அவனைக் காதலிக்க முடியாது என்றும் தெரிவித்திருந்தாள். உடனே அவளுக்குப் பதிலும் கிடைத்தது. அதில், 'மன்னிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகிறது!' என்று மட்டும் அனுப்பி இருந்தான்.

அதைப் பார்த்தவள், 'அப்படின்னா திரும்பி வந்து என்னைக் காதலிக்கறேன்னு மறுபடியும் தொல்லைப்படுத்தப் போறான்னு அர்த்தமா? அதைப் பத்தி ஒண்ணுமே சொல்லலை!' என்று குழம்பியவள், 'சரி! வரும் போது பார்த்துக் கொள்ளலாம்' என்று அதை ஒதுக்கினாள். ஆனால், அவன் வந்த பின்னும், அவளிடம் அதைப் பற்றி ஒன்றுமே கேட்கப் போவதில்லை என்பதை அவள் அறியவில்லை.

* * *



இரண்டு வாரங்கள் கழித்து, ஒரு ஞாயிறு அன்று மெதுவாக எழுந்து வீட்டில் செய்தித் தாள் வாசித்துக் கொண்டிருந்த கௌதமை, அவனின் கைபேசி அழைக்க, மகிழ்ச்சியுடன் அதை எடுத்தவன், ''சொல்லு தியான், எப்படி இருக்கிறே? புது மாப்பிள்ளையைத் தொந்தரவு பண்ணக் கூடாதுன்னுதான் நான் 'போன்' பண்ணலை. சொல்லு. உன்னோட கல்யாண வாழ்க்கை எப்படிப் போகுது? கீதா எப்படி இருக்காங்க?'' என்று தன் நண்பனிடம் இத்தனை நாள் பேசாத சந்தோஷத்தில் சரமாரியாகக் கேள்விகளை அடுக்கினான்.

''நான் நல்லா இருக்கிறேன் கௌதம். நீ எப்படி இருக்கிற?'' என்று கேட்டவன், அவன் பதிலை எதிர்பார்க்காமல், ''நீ இப்போ 'ஃப்ரீ'யா இருக்கியா? உன்கூட கொஞ்சம் பேசணும்,'' என்றான் சுரத்தே இல்லாத குரலில்.

''நான் சும்மாதான் இருக்கேன். சொல்லு. ஏன் இப்படி 'டல்லா' பேசற? உடம்புக்கு ஒண்ணும் இல்லையே?'' என்றான் கவலையுடன்.

''இல்லை கௌதம்! என் உடம்புக்கு எல்லாம் நல்லாதான் இருக்கு. என் கல்யாண வாழ்க்கை... தா... தான்...'' என்று இடைவெளி விட்டு, ''எனக்கு இதை எப்படி ஆரம்பிக்கறதுன்னே தெரியலை. இதை உன்கிட்ட சொன்னா எனக்குக் கொஞ்சம் மனப்பாரம் குறையும்ன்னுதான் உன்னைக் கூப்பிட்டேன். வருண் வேற அவனோட தங்கை கல்யாணத்துல 'பிஸி'யா இருக்கான். அதான்... 'ப்ளீஸ்'டா. என்னைத் தப்பா நினைக்காத!'' என்று பீடிகையுடன் ஆரம்பித்தான்.

அவன் உடம்புக்கு ஒன்றும் இல்லை என்று அறிந்தபின், ''தப்பா நினைக்கலை தியான். சொல்லு. உனக்கு என்ன

கஷ்டம்? என்கிட்டே சொல்லறதுல உன்னோட மனைவி சரி ஆச்சுன்னா எனக்கு சந்தோசம்தான்..'' என்று நண்பனை ஊக்குவித்தான்.

சிறிது தயங்கியவன், ''கௌதம்! என்னோட மனைவி கீதா இருக்கா இல்ல.. அவ அப்பப்போ வித்தியாசமா நடந்துக்கறா. அப்புறம், கல்யாணமான நாள்ல இருந்து என்னைப் பக்கத்துலேயே நெருங்க விடமாட்டேங்கறா. என்னைப் பார்த்தாலே ஏதோ ஒரு எதிரியைப் பார்க்கிற மாதிரி பார்க்கிறா!'' என்றவனை இடைமறித்து, ''என்ன தியான்? கீதாவோட சம்மதத்தோடதானே இந்தக் கல்யாணம் நடந்தது? அப்புறம் ஏன்?'' என்றான் அவனும் குழப்பத்துடன்.

''அப்படித்தான் அவங்க வீட்ல சொன்னாங்க. என்னை எங்க பேச விட்டாங்க. அவளுக்கு இந்த மாதிரி பிரச்சனை சின்ன வயசுல இருந்தே இருக்கிறது போல. அதுக்கு தினமும் மாத்திரை சாப்பிட்டுட்டு இருக்கறா!'' என்று பெருமூச்சு விட்டான்.

''எதுக்கு மாத்திரை? அவங்க உடம்புக்கு என்ன? கீதாவோட அப்பா - அம்மாகிட்ட கேட்டியா? அவங்க என்ன சொன்னாங்க?''

''அவங்க நேரடியா என்கிட்டே எதுவும் சொல்ல மாட்டேங்கிறாங்க. கீதா சாப்பிடற மாத்திரையை எடுத்துட்டுப் போய் 'டாக்டர்'கிட்ட கேட்டேன். அவர் இது 'டிப்ரசனு'க்கு சாப்பிடறதுன்னு சொன்னார். அப்புறம் இதைப் பத்தி விசாரிச்சதுலதான் தெரிஞ்சது. இவளுக்கு கொஞ்ச நாளாவே இது மாதிரி இருந்திருக்கும் போல. கல்யாணம் பண்ணி வச்சா சரியாப் போகும்ன்னு யாரோ சொன்னாங்கன்னு எங்ககிட்ட இதைப் பத்தி ஒரு



வார்த்தை கூடச் சொல்லாமலே மறைச்சுக் கல்யாணம் பண்ணி வச்சுட்டாங்கடா. எனக்கு இப்போ என்ன பண்ணறதுன்னே தெரியலை. எங்கேயும் வெளியே கூட்டிட்டுக் கூட போக முடியலை. எந்த நேரத்துல என்ன பண்ணப் போறாளோன்னு பயமா இருக்கு!'' என்றான் கவலையுடன்.

அவன் கவலையைப் பொறுக்க மாட்டாமல், ''நீ எதுக்கும் வேற 'டாக்டரி'டம் கூட்டிட்டுப் போய்க் காமிக்கறது தானே தியான். அவர் என்ன சொல்லறாருன்னு பார்ப்போம்,'' என்று அவனை அமைதிப்படுத்த முயன்றான்.

''பெங்களூரிலேயே முயற்சி செய்தேன் கௌதம். நான் எங்க கூப்பிட்டாலும் வர மாட்டேங்கிறா. ரொம்பவும் வற்புறுத்திக் கூப்பிட்டா, கண்ணு மண்ணு தெரியாம கத்தி, கைக்குக் கிடைக்கற பொருட்களை எல்லாம் தூக்கி எறிய ஆரம்பிச்சுடறா. அவள் மாத்திரை சாப்பிட்டா மட்டும்தான் ஒழுங்கா இருக்கா. அதுவும் பாதி நேரம் தூங்கிட்டே இருக்கா. நானும் இந்த ரெண்டு மாசமா போராடிகிட்டுத்தான் இருக்கேன்.

''அவங்க வீட்டுக்கு 'போன்'ல கூப்பிட்டாக் கூட இதைப் பத்திப் பேச மாட்டேங்கறாங்க. அப்படியே பேசினாலும் அவங்களுக்கும் இதுக்கும் சம்பந்தமில்லைன்னு சொல்லறாங்க. தனியா ஒண்ணும் பண்ண முடியாததுனாலதான் எப்படியோ அப்பாவையும் அம்மாவையும் வச்சு கீதாவைச் சென்னைக்குக் கூட்டிட்டு வந்துட்டேன்.

''நான் ஒரு தெரிஞ்ச 'டாக்டர்'கிட்ட அடுத்த வாரம் 'அப்பாயின்ட்மெண்ட்' வாங்கி வச்சிருக்கிறேன். ஆனா, இவதான் எந்த ரகளையும் பண்ணாம வருவாளோன்னு பயமா இருக்கு!'' என்று கலங்கியவாறு கூறினான்.

''கல்யாணத்தன்னைக்கி எப்படி ரகளை இல்லாம இருந்தாங்க? அது மாதிரி ஏதாவது செஞ்சு கூப்பிட்டு போக வேண்டியதுதானே தியான்?'' என்று தன் சந்தேகத்தைக் கேட்டான் கௌதம்.

''கல்யாணத்தன்னைக்கி நிறைய மாத்திரையைக் கொடுத்து சுற்றுப்புறம் எதுவுமே தெரியாத மாதிரி வச்சிருந்தாங்க போல. கல்யாண 'டென்ஷன்'ல யாரும் அதைச் சரியா கவனிக்கலை. அது மாதிரிதான் ஏதாவது பண்ணணும். கௌதம்! உன்கிட்ட ஒரு பெரிய உதவி கேட்கப் போறேன். செய்வியா?'' என்று அவன் நண்பனிடம் வேண்டுகோள் விடுத்தான்.

''கௌதம்! செய்யுடான்னு சொன்னா செய்யப் போறேன். அதுக்கு எதுக்கு இப்படி எல்லாம் கேட்டுட்டு. சொல்லு தியான், என்ன செய்யணும்?'' என்று தன் நண்பனின் கவலையைப் போக்க முயன்றான்.

''நீ அடுத்த வாரம் வர்ணாவோட கல்யாணத்துக்கு இங்கே சென்னைக்கு வருவதானே? அப்போ நான் கீதாவை டாக்டரிடம் கூட்டிட்டுப் போகும் போது என் கூட வர முடியுமா? 'ப்ளீஸ்!' கல்யாணம் முடிஞ்சவுடனே 'டாக்டர்'கிட்ட போற மாதிரிதான் 'அப்பாயின்ட்மெண்ட்' வாங்கி இருக்கேன். உனக்கு ஒரு தொந்தரவும் இல்லாமல் நீ நினைச்ச மாதிரியே கோவைக்குக் கிளம்பிடலாம். நீ வந்தா கொஞ்சம் தைரியமா இருக்கும். அதனாலதான். 'ப்ளீஸ்!''' என்று தயங்கித் தயங்கி வேண்டினான்.

அவன் கலக்கத்தைத் துடைக்க எண்ணிய கௌதம், ''கண்டிப்பா வரேன் தியான். இதைத்தான் பெரிய உதவின்னு சொல்லிட்டு இருந்தியா? போடா! இதைக் கூட நான் செய்யலைன்னா அப்புறம் உனக்கு 'ஃபிரெண்டா' இருக்கிறதுக்கு அர்த்தமே இல்லை. கவலைப்படாம



தைரியமா இரு. எந்தப் பிரச்சனையும் தீர்க்கக் கூடியது தான்!'' என்று தன் நண்பனுக்குத் தைரியமூட்டி, பேசியை வைத்தான்.

# 7

''வானத் தூரிகையில்,
மேகங்கள்
தீட்டிய ஓவியங்கள்
போல
என் மனதில்
உன் எண்ணங்கள்
தீட்டிய வண்ணங்கள்
பல வடிவங்களில்...''

மறுவாரம், சென்னைக்குக் கிளம்பிச் சென்ற கௌதம், முதலில் தியானைச் சென்று பார்த்தான். நண்பனைப் பார்த்ததும் மடைதிறந்த வெள்ளமாக, அவன் கேட்காமலேயே கீதாவைப் பற்றிக் கொட்டித் தீர்த்தான்.

''கௌதம், கல்யாணமானதிலிருந்து அங்க இங்கன்னு போயிட்டே இருந்ததுனால கீதாவுக்கு இப்படி இருக்குன்னு எனக்குத் தெரியாம போயிடுச்சு. நான் கிட்ட நெருங்கினாலே பயப்பட ஆரம்பிச்சுட்டா. நான் கூட முதல்ல, கல்யாண வாழ்க்கையை நினைச்சுத்தான் பயப்படறான்னு நினைச்சேன். கொஞ்ச நாள் போனா சரியாப் போயிடும்னு நினைச்சேன்.

''கல்யாணம் முடிஞ்சு கொஞ்ச நாள் அவளோட பெற்றோர்களும் எங்ககூட பெங்களூருக்கு வந்து இருந்தாங்க. அவங்க இருந்தப்போ தினமும் அவளுக்கு நேரத்துக்கு மாத்திரை சாப்பிடக் கொடுத்திருக்காங்க போல.

பொண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தாச்சு, ஒரு மாசமும் ஆயிடுச்சு. இனி எங்களால ஒண்ணும் பண்ண முடியாதுன்னு நினைச்சு அவங்க ஊருக்குக் கிளம்பிட்டாங்க. அவங்க போனதுக்கு அப்புறம்தான் எனக்குப் புரிய ஆரம்பிச்சது. அவள் சில சமயம் மருந்து சாப்பிட மறந்துடுவா. அப்போ அவளோட நடவடிக்கைகளைப் பார்த்துப் பயந்துட்டேன்.

''எப்பவுமே எதையோ பறிகொடுத்த மாதிரி உட்கார்ந்துட்டு இருப்பா. சரியா சாப்பிட மாட்டா. காரணமே இல்லாம அழுவா. தேவையில்லாம கோவப்படுவா. அவள் சிரிச்சு நான் பார்த்ததே இல்லை. அவள்கிட்ட பேசிப் பார்க்கலாம்ன்னா என்கிட்ட வாயே திறக்க மாட்டா. ஒரு நாள் நான் எதையோ தேடிட்டு இருந்தப்போ, அவளோட 'கப்போர்ட்'ல நிறைய மாத்திரைகளைக் குவிச்சு வச்சிருந்ததைப் பார்த்துப் பயந்துட்டேன். அவள்கிட்ட கேட்டா ஒழுங்கா பதில் சொல்லுவாளான்னு எனக்குத் தெரியலை. 'டாக்டர்'கிட்ட எடுத்துட்டுப் போய்க் காட்டின பிறகுதான் கீதாவுக்கு இப்படி இருக்குதுன்னு எனக்குப் புரிஞ்சுது!'' என்றான் தியான்.

''சரி தியான்! நாமதான் 'டாக்டர்'கிட்ட கூட்டிட்டுப் போறோமே, அவர் என்ன சொல்லறாருன்னு பார்க்கலாம். இப்போ வா, மண்டபத்துக்குப் போகலாம்,'' என்று அவனை வர்ணாவின் கல்யாணம் நடக்கும் மண்டபத்திற்கு அழைத்துச் சென்றான். கல்யாணம் முடிந்தவுடன், வருணிடம் விடைபெற்றுக் கொண்டு, தியானும், கௌதமும் கீதாவை மருத்துவரிடம் அழைத்துச் சென்றனர்.

தியானிடமிருந்து விவரத்தை அறிந்துகொண்டு, அவனிடம் பல கேள்விகளைக் கேட்டார் டாக்டர். அவன் தந்த பதில்களையெல்லாம் கேட்டுக் கொண்ட பின்,



கீதாவுடன் தனிமையில் பேச வேண்டுமென்பதால் அவர்கள் இருவரையும் சிறிது நேரம் வெளியே காத்திருக்கச் சொன்னார். அவரும் கீதாவிடம் பேசித் தெளிவுபடுத்திக் கொண்டு, மேற்கொண்டு செய்ய வேண்டிய பரிசோதனைகளைச் செய்து வருமாறு அனுப்பினார். அவர்களும் கீதாவை அருகிலிருந்த 'லேப்'பிற்கு அழைத்துச் சென்று, பரிசோதனை செய்து, முடிவுகளை வாங்கிக் கொண்டு மறுபடியும் மருத்துவரைச் சந்தித்தனர்.

''பாருங்க தியான், 'டிப்ரசன்' எல்லோருக்கும் பல காரணங்களால வரும். அதுவும் நம்ம நாட்ல பெண்கள், எதையும் வெளிக்காட்டாம, மனசுக்குள்ளேயே வச்சிருக்கறதுனால நிறைய அவஸ்தைப்படறாங்க. அவங்களும் அதை வெளிக்காட்ட ஒரு சந்தர்ப்பம் கூடக் கிடைக்க மாட்டேங்குது. எல்லோருக்கும் அப்படி இருக்கும்ன்னு சொல்லலை. ஆனா, அப்படி இருக்கிறவங்க நிறையப் பேர் இருக்காங்க. சின்ன வயசுல ஏதாவது மனசைப் பாதிச்சிருந்தா, கடைசில இப்படித்தான் வெளியில வரும். நீங்க கவலைப்படாதீங்க. எல்லாமே தீர்க்கக் கூடியதுதான். உங்க ஒத்துழைப்பும் இதுல ரொம்ப முக்கியம்.

''இவங்க வளர்ந்த சூழ்நிலை கூட ஒரு காரணமா இருக்கலாம். அவங்க இப்போ சாப்பிடற மாத்திரை அவங்களைக் குணப்படுத்தற மாதிரி தெரியலை. நல்லாத் தூக்கம் மட்டும்தான் வரும். அதனால நான் இப்போ எழுதிக் கொடுக்கும் மாத்திரைகளைக் கொடுங்க,'' என்று மாற்றி எழுதித் தந்தார்.

''அதுவுமில்லாம, சில சமயங்களில், சாப்பிடும் மாத்திரைகளால் எந்த முன்னேற்றம் இல்லைன்னா, வேறு விதமான மாத்திரைகளை மாற்றிக் கொடுக்கத் தான் முதலில் மருத்துவர்கள் பரிந்துரை செய்வார்கள். ஒரு

வருஷமாகியும், இந்த மாற்று மருந்தை ஏன் இத்தனை நாளா இவங்களுக்குத் தரலைன்னு எனக்குப் புரியலை?'' என்றார்.

''சரி. அதை விடுங்க. இப்பவாவது உங்களுக்குத் தெரிஞ்சதே. அப்புறம், உங்க மனைவி உங்க மேல பொருட்களை எறிஞ்சதாச் சொன்னீங்க. அது எல்லோரும் கோவத்துல, இயலாமையினால பண்ணறது தான். அவங்களுக்கு உங்களைக் காயப்படுத்திப் பார்க்கணும்னு ஆசை இல்லை. நீங்க வெளியாள் அப்படிங்கற எண்ணம்தான் அவங்க அடி மனசுல பதிஞ்சு போயிருக்கு. அதையும் மாத்த முயற்சி பண்ணுங்க. நான் சொன்ன மாதிரி ஒரு மாசம் சாப்பிட்டுட்டு, அடுத்த மாச்ம் அவங்களைக் கூட்டிட்டு வாங்க. ஏதாவது முன்னேற்றம் தெரியுதான்னு பார்க்கலாம்,'' என்றார்.

அதைக் கேட்ட தியான், ''டாக்டர்! நான் இப்போ பெங்களூருவில் வேலையில் இருக்கிறேன். மாசத்துக்கு ஒரு தடவை இங்கே வர முடியுமான்னு தெரியலை. உங்களுக்குத் தெரிஞ்சவங்க யாராவது அங்கே இருந்தா சொல்லுங்க. அங்கே போய் அவரைப் பார்க்கிறோம். அப்புறம் சென்னை வரும்போது உங்ககிட்ட கூட்டிட்டு வரோம்,'' என்றான்.

''அப்படியா?'' என்றவர், சிறிது யோசித்து விட்டுத் தனக்குத் தெரிந்த ஒரு மனநல மருத்துவரைப் பரிந்துரை செய்தார். ''அப்புறம் மருந்து மாத்திரையோட நிற்காமல், 'சைக்கோதெரபி'யையும் நீங்க முயற்சி செய்யலாம். இது மாதிரி 'டிப்ரஷன்' இருக்கிறவங்களுக்கு, அவங்களோட யாராவது மனம் திறந்து பேசினா, உள்ளே இருக்கிறதையெல்லாம் வெளில கொட்டுவாங்க. 'ஆல் த பெஸ்ட் மிஸ்டர்' தியான்!'' என்று முடித்தார் டாக்டர்.



பரிசோதனை முடிந்து கீதாவை வீட்டிற்கு அழைத்து வந்த பின், தியான் கௌதமிடம், ''ரொம்ப நன்றி கௌதம்! நாளைக்கே கீதாவைப் பெங்களூருக்குக் கூட்டிட்டுப் போகப் போறேன். எவ்வளவு நாள்தான் 'லீவ்' கொடுப்பாங்க,'' என்றான்.

''எப்படிக் கூட்டிட்டுப் போவ? நானும் வேணா கூட வரட்டுமா?'' என்ற கௌதமிடம் மறுப்பாக, ''வேண்டாம் கௌதம். நீ இவ்வளவு தூரம் வந்ததே பெருசு. அம்மாவை மட்டும் கொஞ்ச நாளைக்கு அங்க கூட்டிட்டுப் போய் வச்சிருக்கப் போறேன்.

''அம்மா கீதாவை இங்கேயே விட்டுட்டுப் போகத்தான் சொன்னாங்க. அதெப்படி நான் கீதாவை விட்டுட்டுப் போறது? அதுவுமில்லாம அப்பாவையும் அம்மாவையும் எதுக்குக் கஷ்டப்படுத்தணும்? அவங்களுக்கு ஒரே குற்ற மனப்பான்மையா இருக்குதுன்னு புலம்பறாங்க. அவங்களாலதான் என் வாழ்க்கை இப்படி ஆயிடுச்சுன்னு கவலைப்படறாங்க. இது மாதிரி ஆனதுக்கு அவங்க என்ன பண்ண முடியும்ன்னு, நான்தான் சமாதானப் படுத்தி வச்சிருக்கேன்,'' என்றான் தியான்.

''உனக்கு எப்போ என்ன தேவைன்னாலும் தயங்காம என்கிட்ட சொல்லு. அப்புறம் என்னோட அத்தை பொண்ணு தீபிகா, ஞாபகம் இருக்கா? அவங்க இன்னும் பெங்களூரில்தான் இருக்காங்க. அவள்கிட்டேயும் சொல்லி வைக்கறேன். நீ ஏதாவது உதவி வேணும்ன்னாலும் அவகிட்ட தயங்காம கேளு. சரியா?'' என்றவனிடம், ''சரி கௌதம்! அப்புறம் இன்னொரு விஷயம். நீ அப்பப்போ அம்மாவுக்கும், அப்பாவுக்கும் கூப்பிட்டுப் பேசுவியா? அவங்களால எனக்கு இது மாதிரி ஆகலைன்னு எடுத்துச் சொல்லுவியா?'' எனக் கேட்டான்.

கௌதமும், ''கண்டிப்பா கூப்பிட்டுப் பேசறேன். நீ தைரியமா இரு. மனசைத் தளர விடாதே!'' என்று தியானுக்குத் தைரியமளித்தான்.

''ரொம்ப 'தேங்க்ஸ்' கௌதம்! உனக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே எனக்குத் தெரியலை!'' என்று கண் கலங்கினான் தியான்.

''போடா! எனக்கு நன்றி சொல்லறது இருக்கட்டும், போய் ஆக வேண்டியதைக் கவனி. மறந்துட்டேன் பாரு. நான் என்னோட 'பிரெண்ட்' நிரஞ்சனிகிட்ட இந்த 'டிப்ரசனை'ப் பத்தி விசாரிச்சேன். அவ ஒரு குழந்தை நல மருத்துவர். அவளும் அவளுக்குத் தெரிஞ்ச 'டாக்டர்ஸ்'கிட்டப் பேசி, அதைப் பத்தின நிறைய விபரங்களையும், உபயோகப்படற இணைய தளங்களையும் தந்திருக்கா. படிச்சுப் பாரு!'' என்று அவன் பையிலிருந்து ஒரு கவரை எடுத்துக் கொடுத்தான். பின், ''சரி! எனக்கும் நேரமாகுது. நானும் கிளம்பறேன்,'' என்று விடைபெற்றுக் கோவைக்குக் கிளம்பினான்.

அவன் ரயில் நிலையம் செல்லும் வழியிலேயே தீபிகாவை அழைத்து விஷயத்தைச் சொன்னான். அவளும், ''எதுன்னாலும் கூப்பிடச் சொல்லு கௌதம். ஆனா, வேலை விஷயமா ஒரு 'ட்ரெய்னிங்'க்காக, நான் மட்டும் ஒரு மாசம் சிங்கப்பூர் போறேன். இன்னும் ரெண்டு மூணு நாள்ல கிளம்பணும்,'' என்றாள்.

''அப்படியா? சரி. அவனிடம் நான் சொல்லிக்கறேன். நீ போறதுக்கு முன்னாடி கூப்பிடறேன்,'' என்று பேசியை வைத்தான்.

சென்னை ரயில் நிலையத்தில், கோவை செல்லும் வண்டிக்காகக் காத்திருந்த கௌதமின் அருகில் வந்தவனைப் பார்த்ததும், ''சிவா! நீயா? எப்படி இருக்க சிவா?'' என்று கேட்டான்.



''கௌதம்! நீங்களா? நான் நல்லா இருக்கேன். இங்க ஒரு 'பிரெண்டை 'ட்ரெய்ன்' ஏத்தி விட வந்தேன். நீங்க எப்படி இருக்கீங்க? சென்னைக்கு ஏதாவது முக்கிய விஷயமா வந்தீங்களா?'' என்றவனிடம்,

''நான் நல்லா இருக்கேன். ஆமா, ஒரு வேலை விஷயமா வந்தேன்,'' என்று தியானின் குடும்ப விவரத்தைப் பற்றி அவனிடம் சொல்லாமல் மேலோட்டமாகச் சொல்லி மழுப்பினான்.

வழக்கமான விசாரிப்புகள் முடிந்து, சிவாவும் தன்னுடன் படித்த 'சீனியரை'ப் பார்த்த சந்தோஷத்தில் மற்ற விஷயங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தான்.

இருவரும் சற்று நேரம் அரட்டை அடித்துக் கொண்டிருந்தவர்கள், கௌதமிற்கு நேரமாவதை உணர்ந்ததும் சிவா விடைபெற்றான். அத்தோடு முடிந்திருந்தால் கௌதமும் சஞ்சலம் இல்லாமல் ஊருக்குக் கிளம்பி இருப்பான். ஆனால், அவன் கிளம்பும் முன் சிவா அவன் தலையில் ஓர் இடியை இறக்கி வைத்துத்தான் அனுப்பி வைத்தான்.

* * *

சென்னையிலிருந்து வந்த மூன்றாம் நாள், அலுவலகத்தில் தன் வேலையில் மும்முரமாக இருந்த கௌதமின் அறைக் கதவை மெதுவாகத் தட்டிவிட்டு அவன் பதில் சொல்லுமுன், அறைக்குள் நுழைந்து, அவனின் எரிச்சலுக்கு ஆளானாள் ஹர்ஷினி.

அவனின் எரிச்சலைப் பொருட்படுத்தாது அவனுக்கு முன் நாற்காலியில் வசதியாக உட்கார்ந்து கொண்டு, ''கௌ! நீங்க எனக்கு வேலை கொடுக்கறேன்னு சொல்லி

எவ்வளவு நாள் ஆச்சு? அதனாலதான் நானே இங்க வந்துட்டேன். நான் இனிமேல் 'டெய்லி'யும் இங்க வரப் போறேன். என்னால முடிஞ்ச சின்னச் சின்ன வேலைகளை உங்கள் கூடவே இருந்து செய்யப் போறேன்,'' என்று அவனது எரிச்சலை இன்னும் கூட்டினாள்.

''ஹர்ஷினி! நான் 'பிஸி'யா இருக்கேன். எனக்கு அவசரமா ஒரு 'ப்ராஜெக்'டை முடிக்க வேண்டி இருக்கு. பாலா வேற இல்லை. 'ப்ளீஸ்' ஹர்ஷினி. இதைப் பத்தி நாம அப்புறம் பேசலாமா?'' என்றான் பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு.

''போங்க கௌ! நான் எப்போ கேட்டாலும் இதையே தான் சொல்றீங்க!'' என்று சிணுங்கலில் ஆரம்பித்து, ''இன்னிக்கு உங்களுக்கு உதவி செய்யாம இங்கிருந்து நான் போக மாட்டேன்,'' என்று அடாவடியாகச் சொல்லி முடித்தாள்.

ஏற்கெனவே வேதனையில் உழன்று கொண்டிருந்தவனுக்கு வேலைப் பளுவும் சேர, ஹர்ஷினி இவ்வாறு கூறியவுடன், கோபம் மடமடவெனப் பெருகியது.

''ஹர்ஷினி! நான்தான் ஏற்கெனவே சொல்லிட்டேனே. நீ படிச்சதுக்கு இங்க வேலை எல்லாம் கிடையாது. சும்மா வந்து என்னைத் தொந்தரவு செய்யாத. நானே இந்த 'ப்ராஜெக்'டைச் சரியான நேரத்துல முடிக்க முடியுமா முடியாதான்னு 'டென்சன்'ல இருக்கேன். நீ வேற வந்து இப்படி அடிக்கடி இம்சைப் படுத்திட்டு இருக்கற. நீ இப்போ கிளம்பறியா? எனக்கு நிறைய வேலை இருக்கு. நானும் போனாப் போகுதுன்னு பொறுத்துப் பொறுத்துப் பார்த்தா, ரொம்பத்தான் தொந்தரவு பண்ணற!'' என்று எரிந்து விழுந்தான்.



சற்று நிதானித்துவிட்டு, ''அது என்ன என்னை எப்பப் பார்த்தாலும் சும்மா 'கௌ! கௌ!'ன்னு கூப்பிட்டுட்டு இருக்க? நீ என்னை அப்படிக் கூப்பிட்டா நான் பூம், பூம் மாடு மாதிரி தலையை ஆட்டிட்டு வந்துடுவேன்னு நினைச்சியா? அதுக்கு வேற ஆளைப் பாரு. இனிமேல் என்னை அப்படிக் கூப்பிடாதே. என் பேரு கௌதம்!'' என்று அன்றுவரை மனதில் வைத்திருந்ததை மடை திறந்தது போலக் கொட்டினான்.

அவனின் இந்த திடீர்த் தாக்குதலை எதிர்பார்க்காத ஹர்ஷினி அவனை முறைத்துவிட்டு, விடுவிடுவென்று அந்த அறையை விட்டு வெளியேறினாள். அங்கிருந்து கிளம்பியவள் முதல் வேலையாகத் தன் சின்ன அண்ணன், வசந்திடம் சென்று கண்ணைக் கசக்கிக் கொண்டு நின்றாள். இதுவரை அவள் எதற்கும் அழுது பார்க்காத வசந்த், என்னவோ ஏதோவென்று பதறினான்.

''ஹர்ஷினி! என்ன ஆச்சு? ஏன் இப்போ அழற?''

சிறிது நேரம் கண்ணைக் கசக்கிக் கொண்டிருந்தவள் வசந்திடம் கோபமாக, ''மதுவோட அண்ணா கௌதம் என்னதான் நினைச்சுக்கிட்டு இருக்கிறார்? நான் தெரியாமத்தான் கேட்கிறேன். அவர் 'கம்பெனி'ல ஒரு வேலை கேட்டதுக்கு என்னமா குதிக்கறார். இருக்கு இல்லைன்னு சொல்ல வேண்டியதுதானே, அதை விட்டுட்டு என் மேல எரிஞ்சு விழுந்து அங்கிருந்து வெளியே வேற போகச் சொல்லறார்,'' என்று அவள் மேலே ஒரு தப்பும் இல்லாதவாறு சொன்னாள்.

'கௌதம் ஏன் இப்படிப் பண்ணினான்?' என்று யோசித்தவாறே, ''ஹர்ஷினி! அவன் ஏதாவது 'பிஸி'யா இருந்திருப்பான். அதனாலதான் அப்படிச் சொல்லி

இருப்பான்,'' என்று அவன் நண்பனை விட்டுக் கொடுக்காமல் பேசி முடிக்கும் முன்னரே, ''வசந்த்! நீ ஒன்னும் மதுவோட அண்ணனுக்கு 'சப்போர்ட்' பண்ணிப் பேச வேண்டாம். நானும் அவர் நமக்கு உறவுமுறை என்கிறதுனாலேதானே போய்ப் பேசினேன். அவர் நாம உறவுன்னு நினைச்சிருந்தா அப்படி எல்லாம் பேசி இருப்பாரா? அவருக்கு என்னைச் சுத்தமா பிடிக்கலை!'' என்று மறுபடியும் விசும்பினாள்.

ஹர்ஷினிக்கு என்னவென்றால், கௌதம் அவளை உறவாக எண்ணவில்லை என்றும் தன்னைப் பிடிக்கவில்லை என்றும் தன் அண்ணனிடம் சொன்னால், அவன் கௌதமிடம் பேசி ஏதாவது செய்வான் என்று நம்பினாள். அதனால்தான் நேராக கௌதமின் அலுவலகத்தில் இருந்து இங்கே வந்து தன் அண்ணனிடம் கௌதமைப் பற்றிக் குற்றம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

''சரிம்மா! அதுக்காக யாராவது அழுவாங்களா? அழாதே. நான் அவனிடம் பேசறேன்,'' என்று தங்கையைச் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தவன், 'யார் என்ன சொன்னாலும் அதைப் பற்றிக் கவலைப்படாத ஹர்ஷினி இப்படி அழுகிறாள் என்றால் அவன் நிஜமாவே ஏதாவது சொல்லி இருப்பானோ? கௌதமிடம் இதைப் பத்தி பேசணும்,' என்று நினைத்தவாறே செய்து கொண்டிருந்த வேலையில் ஆழ்ந்தான்.

* * *

கௌதம் அன்று மாலை வேலை முடிந்து வீடு சென்றவன் அவசர அவசரமாகச் சாப்பிட்டுவிட்டு வேலை இருக்கிறது என்று தன் தாயிடம் கூறித் தன் அறைக்குள் சென்று அடைந்து கொண்டான். அவனது அறையில் அமர்ந்து, சிவா அன்று சென்னையில் சொன்னதைப்



பற்றியே மீண்டும் மீண்டும் மனதிலும் மூளையிலும் படமாக ஓட்டிக் கொண்டிருந்தான். அவன் சென்னையில் இருந்து கிளம்பியதிலிருந்தே இதுதான் அவனுள் உழன்று கொண்டிருந்தது.

'ச்சே! இது மாதிரி எல்லாம் நடப்பதற்கு யாரை நோவது? சிவா நம்மிடம் இந்த விஷயம் சொல்லாமல் இருந்திருந்தால் இன்னுமே நமக்குத் தெரிஞ்சிருக்காது. இவ்வளவு நாளும் வேறு யாரும் இந்தத் துன்பத்தை என்கிட்டே பகிர்ந்துக்காததால், நானும் ஒண்ணுமே தெரியாம இருந்துட்டேன். எல்லோரும் சந்தோசமா இருந்தா போதும் என்று மனசைக் கட்டுப்படுத்திக்கிட்டு சந்தோசமா இருந்திருக்கேன். என்ன பண்ணலாம்? பேசிப் பார்க்கலாமா இல்லை வேண்டாமா? என்னன்னு கேட்பது?' என்று தெளிவில்லாமல் குழம்பியவாறே அமர்ந்திருந்தான்.

அவன் குழம்பி இருந்த அதே சமயதில் சுமார் ஒன்பது மணியளவில் அவனின் அருமைத் தங்கை மது அவனைப் பேசியில் அழைத்துச் சரமாரியாக வசவு மழையைப் பொழிய ஆரம்பித்தாள்.

''அண்ணா! நீ சென்னையில இருந்து வந்து என்னைக் கூப்பிட்டுப் பேசுவேன்னு பார்த்தா, மூணு நாளா ஆளையே காணோம். சரி! நீ 'பிஸி'யா இருப்ப, நானும் உன்னைத் தொந்தரவு பண்ண வேண்டாம்ன்னு பார்த்தா, இப்படி ஒரேயடியாவா உன் தங்கையை மறந்துடுவ?'' என்று கோபத்துடன் ஆரம்பித்துச் சிணுங்கலில் முடித்தாள்.

கடந்த மூன்று நாட்களாகச் சென்னையில் சிவா கொடுத்த அதிர்ச்சியைத் தாங்க முடியாமல் தவித்த கௌதம், எங்கே தன் தங்கையுடன் பேசினால் அவள்

தன் குரலை வைத்தே அவன் நிலையைக் கண்டு பிடித்து
விடுவாளோ அன்று அவளுடன் பேசுவதைத் தவிர்த்து
வந்தான். ஏற்கெனவே வீட்டில் வேறு அவன் அம்மா, 'நீ
சென்னை போயிட்டு வந்ததுல இருந்து ஒழுங்காகவே
இல்லை!' என்று அடிக்கடி சலித்துக் கொண்டார்.

'தங்கைக்கு உண்மை தெரிந்தால் அவ்வளவுதான்.
இன்னும் தானே எடுத்த முடிவைப் பற்றி தெளிவு பெறா
மல் இருக்கும் ஒரு விஷயத்தை என்னவென்று அவ
ளிடம் கூறுவது? தனியாக எங்காவது சென்று யாருடைய
தொல்லையும் இல்லாமல் கொஞ்ச நாட்கள் இருக்கலாம்
என்றால் அதற்கும் வழி இல்லை. 'கம்பெனி'யைக் கவ
னித்துக் கொள்ள வேண்டி இருக்கிறது. பாலா இருந்
திருந்தாலாவது, அவனிடம் சொல்லிவிட்டுக் கிளம்பி
இருக்கலாம்.' அதனால் தங்கையிடம் உண்மையைக் கூற
முடியாமலும், அவளுடன் ஐந்து நாட்களாகப் பேசாமலும்
இருந்த குற்ற மனப்பான்மையில் தவித்தவன் அவளிடம்,
''சாரிம்மா மது! கொஞ்சம் வேலை ஜாஸ்தி. பாலா வேற
இங்க இல்லையா, அதுதான். கோவிச்சுக்காதடா...''
என்று தன் தங்கையைக் கரகரத்த குரலில் சமாதானப்
படுத்த முயன்றான்.

தன் அண்ணன் பேசினாலே கோபத்தைத் தூக்கிக்
குப்பையில் போடுபவள் அவன் இப்படி கரகரத்த குரலில்
'சாரி' சொன்னதும், கோபம் என்ற வார்த்தையைத் தன் அண்
ணனுக்காக அவசர அவசரமாக அவளுடைய அகராதி
யில் இருந்தே நீக்கி விட்டாள்.

''ஐயோ! அண்ணா! நான் சும்மா உன்கிட்ட வம்பு செஞ்
சேன். அதுக்கு நீ இவ்வளவு விளக்கமா எனக்குப் பதில்
வேற சொல்லணுமா? எனக்குத் தெரியாதா, என்னோட
அண்ணனைப் பத்தி. ரொம்ப டயர்டா இருந்தியா?



'சாரி'ண்ணா. கல்யாணம் எல்லாம் நல்ல படியா நடந்ததா?''
என்று பேச்சை சகஜமாக்க முயன்றாள். அவளுடன்
சிறிது நேரம் வேறு விஷயங்களைப் பற்றிப் பேசி வைத்த
வனுக்கு மனது லேசானதைப் போல இருந்தது. அப்
படியே அன்றிரவு உறங்கி விட்டான்.

* * *

ஒரு மாதம் வேலை விஷயமாக அமெரிக்கா சென்
றிருந்த பாலா, வேலையை வெற்றிகரமாக முடித்து விட்டுத்
திரும்பி வந்தான். அவனை அழைத்து வரக் கோவை
விமான நிலையத்திற்குச் சென்றிருந்த கௌதம், அவனைப்
பார்த்து அதிர்ந்து போனான். இவ்வளவு நாட்கள் எந்த
விதக் கவலையும் இல்லாமல் தன் போக்கில் வாழ்ந்து
கொண்டிருந்தவன், இப்போது இப்படி ஆகி விட்டானே
என்று வருத்தப்பட்டான் கௌதம்.

தன் உடைமைகளை எடுத்துக் கொண்டு வந்த
பாலாவைப் பார்த்தவன், ''ஏன்டா, உன்னை அமெரிக்கா
வுக்குத்தானே அனுப்பி வச்சேன். மியூசியத்திற்கு
இல்லையே. இப்படி 'ஸ்பெசிமென்' மாதிரி வந்து நிக்கற!''
என்று எரிச்சலுடன் கேட்டான். அவன் பதில் சொல்லாமல்
இருக்க, ''பாலா, ஏன்டா இப்படி இருக்கிற? என்ன ஆச்சு?
ஏன் இப்படி ஆள் பாதியா ஆயிட்ட?'' என்றான் வருத்
தத்துடன்.

பாலா அமெரிக்காவிற்குச் சென்றதில் இருந்து, அவன்
எது செய்தாலும் தான்யாவின் முகம்தான் அவன் கண்
முன்னால் வந்து நின்றது. அதோடு அவள் அன்று பேசிய
தும் அவன் காதில் திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்
டிருந்தது. 'அவளின் மனதை என்ன சொல்லி மாற்றுவது?
எப்படித் தன் காதலை அவளுக்குப் புரிய வைப்பது? எதற்

கெடுத்தாலும் தப்பா நினைக்கறாளே!' என்று மீண்டும் மீண்டும் யோசித்து விடை தெரியாமல் முழித்தான். மனதில் இருந்த கவலையை மறக்க இரவு பகல் என்று பாராமல் உழைக்க ஆரம்பித்தான்.

அவ்வாறு ஓயாது வேலை செய்தவன், சில சமயங்களில் சாப்பிடவும் மறந்து போனான். அவனின் இந்த ஆகாரமில்லாத, தூக்கமில்லாத உழைப்பின் வெற்றி அவனின் உடம்பில் தெளிவாகத் தெரிந்தது. ஆளே அடையாளமில்லாத அளவுக்கு மெலிந்து கண்களில் ஒரு மலர்ச்சியில்லாமல் வந்து சேர்ந்தான்.

கௌதமைப் பார்த்து, ஒரு புன்னகை சிந்திவிட்டு, ''ஒண்ணும் இல்லை கௌதம்! நான் நல்லாத்தான் இருக்கேன். சும்மா 'ஜெட் லேக்' அவ்வளவுதான்,'' என்று ஒன்றுமே நடக்காதது போலப் பதிலளித்தான்.

அவன் கூறியதைக் கேட்டு அவனை முறைத்த கௌதம், 'இவனிடம் இப்போதைக்கு ஒண்ணும் பேசக்கூடாது. வீட்டுக்குக் கூட்டிட்டுப் போய் நல்லாத் திட்டணும்!' என்று முடிவு செய்து, ''அப்படியா? அப்படின்னா சரிதான்,'' என்று 'அப்படின்னா'வில் அழுத்தம் கொடுத்து முடித்தான்.

பாலாவை அவனின் வீட்டிற்கு அழைத்துச் சென்றதும், ''பாலா, நீ உன் மனசுல என்னதான் நினைச்சிட்டு இருக்க? இப்போ ஏன் இப்படி உன்னையே வருத்திக்கிற? நீ இன்னுமே தான்யா கிட்ட உன்னோட காதலைச் சொல்லலை. அதுக்குள்ளே என்ன இந்தக் கோலம்?'' என்று அவனின் நலனில் அக்கறை கொண்டு கோபமாகக் கேட்டான் கௌதம்.

பதில் சொல்லாமல் தயங்கி நின்ற பாலாவின் தோளில் கை போட்ட கௌதம், ''பாலா! உன் நல்லதுக்காகத்தானே



சொல்றேன். உன்னைப் பத்தி தான்யா தெரிஞ்சிக்கட்டும்னுதான் நீ ஊருக்குப் போறதுக்கு முன்னால எனக்கு நிறையா வேலை இருக்கற மாதிரி காமிச்சு, எல்லாத்துக்கும் அவங்களை உன்கிட்ட அனுப்பி வச்சேன். இனிமேலும் அதையே பண்ணறேன். கொஞ்ச நாள்ல அவங்க உன்னைப் பத்தி புரிஞ்சுக்குவாங்க. அதுக்காக இப்படி எல்லாமா நீ கவலைப்படறது?'' என்று அவனுக்கு ஆறுதலாகப் பேசினான்.

கௌதம் சொன்னதைக் கேட்ட பாலா தயக்கத்துடன், ''எனக்காக நீ இவ்வளவு செஞ்சதுக்கு 'தேங்க்ஸ்' கௌதம். ஆனா... நீ சொன்னதைக் கேட்காம, பொறுமையா இல்லாம நான் அப்பவே தான்யாகிட்ட என்னோட காதலைச் சொல்லிட்டேன். 'ப்ளீஸ்'டா. நான் இப்படி அவசரப்பட்டதுக்காக என் மேல கோவப்படாத!'' என்று அவனிடம் கெஞ்சினான்.

அவன் சொன்னதைக் கேட்டவன், ''வாட்?' நீ தான்யாகிட்ட உன் காதலைச் சொல்லிட்டியா? என்னடா சொல்லற? இருக்கிற பிரச்சனையையே எப்படி அணுகுவதுன்னு தெரியாம முழிச்சிட்டு இருக்கேன். நீ வேற இப்படி சொதப்பிட்டியே! அதுக்கு தான்யா என்ன சொன்னாங்க?'' என்று, 'எங்கே அவள் வேண்டாம் என்று சொல்லி விட்டாளோ... அதனாலதான் இவன் இப்படி ஆகிவிட்டானோ... இதை எப்படித் தீர்ப்பது?' என்ற பதைப்புடன் கேட்டான்.

''ப்ளீஸ்டா கௌதம்! நான் சொல்றதை முதல்ல கேளு. அப்புறமா என்னைத் திட்டு!'' என்று அன்று நடந்ததை அப்படியே அவனிடம் தெரிவித்தான். ''கௌதம், இதை அன்னைக்கே உன்கிட்ட சொல்லணும்னுதான் நினைச்சேன். ஆனா, நம்ம மதுவைப் பத்தி தப்பாச் சொன்னதை

நீ எப்படி எடுத்துப்பியோன்னுதான், சொல்லலை. அதோட நீ சொன்னதையும் மீறி நான் தான்யாவிடம் என்னோட காதலைச் சொல்லிவிட்டேன் என்ற குறுகுறுப்பு வேற சேர்ந்துடுச்சு. அப்புறம் நீ தான்யாவைப் பத்தியும் தப்பா நினைச்சுக்கக் கூடாதுன்னுதான்...'' என்று இழுத்தான்.

அவன் சொன்னதைக் கேட்டுச் சிரித்தவன், ''சரிடா! உனக்காவது சீக்கிரமா உன்னோட காதலைச் சொல்ல முடிஞ்சதே. அதை எல்லாம் விடு. நான் தான்யாவைத் தப்பா நினைக்கலை. அவங்களோட கண்ணோட்டத்துல அவங்களுக்கு அப்படித் தெரிஞ்சிருக்கு. எனக்கு நீ எப்படின்னு தெரியும். தான்யாவிற்குக் கோவம் இருந்திருந்தா என்கிட்டே வந்து 'கம்ப்ளைன்ட்' பண்ணி இருப்பாங்க. அது மாதிரி ஒண்ணும் நடக்கலை. ஆனா, ஏன்டா நீ எது செஞ்சாலும் அது தப்பு தப்பாவே தான்யாவுக்குத் தெரியுது? ம்ம்... பாவம்டா நீ! சரி. அதை எல்லாம் சரி செஞ்சிடலாம். ஆனா, நீ இப்படி உடம்பைக் கெடுத்துக் கிட்டா எனக்குக் கெட்ட கோபம் வரும், சொல்லிட்டேன். உன்னோட அப்பாவைப் பத்தி கொஞ்சமாவது நினைச்சுப் பார்த்தியா? உனக்காகவே அவர் உயிர் வாழ்ந்துட்டு இருக்கிறார், அவர் இப்போ உன்னைப் பார்த்தா எவ்வளவு சங்கடப்படுவார். கொஞ்சம் யோசிடா!'' என்று தன் நண்பனின் நலனுக்காக வருந்தினான்.

ஒன்றும் பேசாமல் மௌனமாக நின்று கொண்டிருந்தவனைப் பார்த்த கௌதம், ''ஏன்டா ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கிற? ஏதாவது பேசு,'' என்றான்.

''சரி கௌதம்! இனித்தான் நான் இங்க வந்துட்டேன். நீயே என்னைப் பார்த்துக்கோ. என்னைப் பத்தி பேசினது போதும். நீ எப்படி இருக்கிற? மதுவும் வசந்தும் எப்படி இருக்காங்க?'' என்று வேறு பேச்சிற்குத் தாவினான்.



கௌதமும் அவன் கேட்ட கேள்விகளுக்குப் பதில் அளித்துவிட்டு, ''பாலா, நான் கிளம்புகிறேன். நீ படுத்துத் தூங்கு. நாளைக்கு உன்னை 'ஆபீஸ்'ல பார்க்கறேன். நாளைக்கும் அசதியா இருந்தா, நாளைக்குச் சாயந்திரம் வீட்டிற்கு வர்றேன்,'' என்று கிளம்ப முயன்றான்.

''எங்க ஓடற கௌதம்? இரு. நான் உன்கூட கொஞ்சம் பேசணும். இப்படி வந்து கொஞ்ச நேரம் உட்காரு. நான் ஒரு சின்னக் குளியல் போட்டுட்டு வந்துடறேன்.'' என்று தொலைக்காட்சிப் பெட்டிக்கு உயிர் கொடுத்துவிட்டுச் சென்றான். விரைவிலேயே குளித்து முடித்து வந்த பாலா கேட்ட கேள்வி, கௌதமை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

வெளியில் வந்த பாலா தொலைக்காட்சி ஓடிக் கொண்டிருந்தாலும் நண்பனின் சிந்தனை வேறெங்கோ இருப்பதைப் பார்த்தவன், தொலைக்காட்சிப் பெட்டிக்கு ஓய்வு கொடுத்துவிட்டு, ''இப்போ சொல்லு கௌதம். உனக்கு என்ன கவலைன்னு? உன் முகம் ஏன் இப்படிச் சிரிப்பைத் தொலைச்சுட்டு வாடியிருக்கு? என்ன நடந்தது?'' என்று கேட்டான்.

''எனக்கு என்ன கவலை? அதெல்லாம் ஒண்ணும் இல்லைடா. சும்மா கொஞ்சம் 'ஸ்ட்ரெஸ்.' அவ்வளவு தான்,'' என்று மழுப்பினான் கௌதம்.

''நீ சொன்னதை நான் நம்பிட்டேன்!'' என்று கிண்டலாகக் கூறிய பாலா, ''நீ வர்ணாவோட கல்யாணத்தன்னைக்கு என்னைக் கூப்பிட்டுப் பேசியது. அதுக்கப்புறமா நீயா என்னோட பேசவே இல்லை. நானாக் கூப்பிட்டாலும் 'ஆபீஸ்' விஷயத்தைப் பத்தி மட்டும் ஒன்றிரண்டு

வார்த்தைகள் பேசிட்டு வச்சிட்ட. எனக்கு உன்னைக் கடந்த அஞ்சு வருஷமா தெரியும், கௌதம். நீ இப்படி இருந்து நான் பார்த்ததே இல்லை. நீ பேசும் போதெல்லாம் உன் குரலிலே தெரியும் அந்த வெறுமை உன்னைக் காட்டிக் கொடுத்துடுச்சு. என் மேல உனக்கு எவ்வளவு அக்கறை இருக்கோ அதுல கொஞ்சம் கூடவா எனக்கு உன் மேல இருக்காது? நீ என்னை உன் 'ஃப்ரெண்ட்'ன்னு நினைச்சிருந்தா நான் கேட்காமலேயே சொல்லி இருப்ப. நீ சொல்லலைன்னா பரவாயில்லை...'' என்று எங்கு அடிக்க வேண்டுமோ அங்கே அடித்துக் கௌதமைப் பதற வைத்தான்.

''அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லை பாலா. ஏன்டா இப்படி எல்லாம் சொல்லற? நான் நல்லாதான் இருக்கேன்!'' என்று மழுப்பினான்.

''பொய் சொல்லாத கௌதம்! எனக்குத் தெரியும். என்னமோ நடந்திருக்கு. நான் வந்தவுடனேயே என்னைத் திட்டறேன் பேர்வழின்னு, 'ஏற்கெனவே இருக்கிற பிரச்சனையைத் தீர்க்க வழி தெரியாம முழிச்சிட்டு இருக்கேன்', அப்படின்னு கேட்டு நீயே உன்னைக் காட்டிக் கொடுத்துட்ட. அதுவுமில்லாம, 'சரி உனக்காவது சீக்கிரமா உன்னோட காதலைச் சொல்ல முடிஞ்சதே!' அப்படின்னு வேற சொன்ன. சொல்லு என்ன ஆச்சு?'' என்று ஒரு வழக்கறிஞராக மாறி அவனிடம் இருந்து பதில் வாங்குவதிலேயே முனைப்பாக இருந்தான் பாலா.

சிறிது நேரம் மௌனமாக இருந்தவன், ''நான் சொல்லறதைக் கேட்டு நீ என்னைத் தப்பா நினைச்சுக்காத. நான் உன்கிட்ட இதைப் பத்தி முன்னாடியே சொல்லாததுக்குக் காரணம் இருக்கு. இவ்வளவு நாள் பழகியும்



என்னை நம்பலையான்னு நீ நினைச்சுக்கக் கூடாது. சரியா?'' என்றான் கௌதம்.

''ச்சே! உன்னைப் போய்த் தப்பா நினைப்பேனா? ஒரு தடவை ஏதோ கோபத்துல உன்கிட்ட நான் கேள்வி கேட்டதுக்கே இதுவரைக்கும் வருத்தப்பட்டுட்டு இருக்கேன். இனியும் அப்படி நினைச்சேன்னா அப்புறம் வாழ் நாள் முழுவதுக்குமே நான் கஷ்டப்படணுமா? உனக்கு ஏன் இந்த நல்ல மனசு?'' என்று கௌதமின் மனநிலைமையைச் சீர் செய்ய முனைந்தவன், கௌதம் சிரிப்பதைப் பார்த்து, ''நீ மனசு விட்டுப் பேசினா உன்னோட மனப் பாரம் குறையும்ன்னுதான் கேட்டேன். இப்போ சொல்லு, என்ன ஆச்சு?'' என்றான்.

''இப்போவே ரொம்ப நேரம் ஆயிடுச்சு. நீ நல்லாப் படுத்துத் தூங்கு. நாளைக்கு, இல்லை சனிக்கிழமை வீட்டுக்கு வரேன். அப்போ வெளியே எங்காவது போய்ப் பேசலாம். இல்லை... உன் வீட்ல வச்சே பேசலாம். அதுக்கு முன்னாடி எனக்கு மதுகிட்ட ஒண்ணு தெளிவு படுத்திக்கணும். 'ப்ளீஸ்' பாலா. என்னைப் புரிஞ்சுக்கோ!'' என்று கரகரத்த குரலில் சொன்னான்.

''நீ சொல்லறதும் சரிதான். இப்போப் பேசினா என்னால யோசிக்க முடியுமான்னு தெரியலை. சனிக்கிழமை பேசலாம். ஆனா, அன்னைக்கும் ஏதாவது சாக்குப் போக்குச் சொன்னா, எனக்குக் கெட்ட கோபம் வரும்... சொல்லிட்டேன்,'' என்று கௌதமை மிரட்டினான்.

''இல்லை. இல்லை. கண்டிப்பா இது ஒரு நாள் சொல்ல வேண்டிய விஷயம்தான். இனி எவ்வளவு நாளைக்கு இதை மறைக்க முடியும்? உன் கிட்ட கண்டிப்பாச் சொல்லறேன். சரி! அம்மா கொடுத்து விட்ட 'டிபன்' இருக்கு. அதுல இருக்கறதைச் சாப்பிட்டுட்டுப் படுத்துத் தூங்கு.

'பை... குட்நைட்!''' என்று அவனிடமிருந்து விடை பெற்றான் கௌதம்.

வீட்டிற்குச் செல்லும் வழியில் மதுவின் கைபேசிக்கு அழைத்தான். மது எடுத்து, ''அண்ணா! எப்படி இருக்கீங்க? இப்போதான் உங்களைப் பத்தி நினைச்சுட்டு இருந்தேன்,'' என்றாள்.

அவளின் கேள்விக்குப் பதிலளித்துவிட்டு, ''மது, நீ இப்போ என்ன பண்ணிட்டு இருக்கற? 'பிஸியா' இருக்கியா? வசந்த் எங்கே? வீட்ல யார் இருக்கா?'' என்று கேட்டான்.

''வசந்த் ஏதோ வெளியில போயிருக்கிறார். கிஷோர் மாமா, அவரோட 'ஃபிரெண்டோ'ட கல்யாணத்துக்குப் போயிருக்கிறார். அதனால அவரோட ஏதோ ஒரு முக்கிய மான வேலையைப் பார்க்கத்தான் வசந்த் போயிருக் கிறார். அத்தையும் மாமாவும்தான் 'டூர்' போயிருக்கறது உனக்குத் தெரியுமே... ஹர்ஷினியும் வீட்ல இல்லை. 'ஃபிரெண்ட்'ஸோட சினிமாவுக்குப் போயிருக்கா. நான் மட்டும்தான் வீட்ல இருக்கேன். ஒண்ணும் 'பிஸி'யா எல்லாம் இல்லை. சொல்லுங்க. அண்ணா... என்ன விஷயம்?'' என்று அவனை வினவினாள்.

''அப்படியா? உன்கூட கொஞ்சம் பேசணும். வீட்ல யாரும் இல்லாதது நல்லதுக்குத்தான். இப்போ பத்து நிமிஷத்துல அங்க இருக்கேன். 'பை'!'' என்று பேசியை வைத்தவன் சொன்னபடியே பத்து நிமிடத்தில் மதுவின் வீட்டில் இருந்தான்.

தன் அண்ணனைப் பார்த்த சந்தோஷத்தில், ''வாங்க அண்ணா! எப்படி இருக்கீங்க? ஏதாவது சாப்பிடறீங்களா?'' என்று கேள்விகளை அடுக்கினாள்.



''நான் நல்லா இருக்கேன். இப்போதானே 'ஃபோன்ல' கேட்ட. அதையே மறுபடியும் கேட்கணுமா? என் தங் கைக்குக் கல்யாணத்துக்கு அப்புறம் ஞாபக மறதி அதிக மாயிடுச்சு போல. எல்லாம் வசந்தைச் சொல்லணும்!'' என்று பேச வந்ததை எப்படி ஆரம்பிப்பது என்று தெரி யாமல் சுற்றி வளைத்துக் கொண்டிருந்தான்.

''நீங்க இப்போ என்னோட ஞாபக சக்தியைப் பத்தி பேசவா இவ்வளவு தூரம் வந்திருக்கீங்க? வந்த விஷ யத்தைச் சொல்லுங்க. அதுக்கு முன்னாடி... சாப்பிட ஏதா வது கொண்டு வரேன்,'' என்று அவள் சமையலறையை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

அவள் கையைப் பற்றி இழுத்து சோபாவில் அமர வைத்தவன், ''சாப்பிடறது இருக்கட்டும். எனக்கு இப்போ ஒண்ணும் வேண்டாம். நான் சொல்லறதை முதல்ல கேளு. அப்பறம் நிதானமா யோசிச்சுச் சொல்லு,'' என்று சற்றுத் தயங்கியவன், பின் அவன் கேட்க நினைத்த கேள் வியைக் கேட்டான். அதற்கு அவள் அளித்த பதிலில் ஆச்சர்யமடைந்து, ஒரு வழியாக அவளிடம் எல்லாவற் றையும் தெளிவு படுத்திக் கொண்டு அங்கிருந்து கிளம்பினான்.

யாரும் வீட்டில் இல்லை என்று நினைத்துத்தான் கௌதம் மதுவிடம் அவன் கேட்க நினைத்ததைக் கேட்டான். ஆனால், மது 'பாத்ரூம்' சென்றிருந்த போதே வீட்டிற்கு வந்த ஹர்ஷினி தன் அறைக்குச் சென்று விட்டாள். அவள் வீட்டிற்கு வந்ததை அறியாத மதுவும் தன் அண்ணன் கேட்ட பொழுது, தான் மட்டும் வீட்டில் இருப்பதாகக் கூறி அவனை வரச் சொன்னாள். கௌதம் வீட்டிற்கு வந்த சத்தத்தைக் கேட்டு ஹர்ஷினி ஜன்னல் வழியாகப் பார்த்துவிட்டு, முகம் நிறைய 'மேக் அப்'பை

அப்பிக் கொண்டு சந்தோசமாகக் கீழே இறங்கி வந்தாள். வந்தவளின் தலையில் இடியை இறக்கினான் கௌதம்.

இவர்கள் பேச ஆரம்பிக்கும் முன்னரே அங்கு வந்த ஹர்ஷினி, இவர்கள் பேசியதைக் கேட்டு விட்டாள். அவளின் மனம் எரிமலையாகக் குமுறியது. 'இத்தனை நாள் காத்திருந்தது இதற்குத் தானா? இதுக்கு இன்றே ஒரு முடிவு கட்ட வேண்டும். இல்லைன்னா 'இளிச்ச வாயி' மாதிரி ஆயிடும் என்னோட நிலைமை. அப்புறம் என்னோட 'ஃபிரெண்ட்ஸ்' யாருமே என்னை மதிக்க மாட்டார்கள். அண்ணன் வரட்டும். இன்னிக்கு ரெண்டுல ஒரு முடிவு கட்டுவோம்,' என்று தீப் பிழம்பாகி மனதிற்குள் கக்கிக் கொண்டிருந்தாள்.

**8**

**''உன் பார்வைகளைக் கோர்த்தேன்,**
**என் பாதை தெரிந்தது!**
**உன் புன்னகையைச் சேகரித்தேன்,**
**என் வசந்தம் பூத்தது!**
**உன் வார்த்தைகளைச் சேமித்தேன்,**
**என் வாழ்க்கை இனித்தது!**
**உன் சுவாசத்தை வாசித்தேன்,**
**என் உயிர் வாழ்ந்தது!''**

கௌதம், மதுவிடம் வந்து பேசிச் சென்ற இரவு, வசந்தும், மதுவும் அவர்களின் அறையில் தனித்திருந்த பொழுது, ஹர்ஷினி நாசூக்காகக் கூடக் கதவைத் தட்டாமல் படாரென்று திறந்து கொண்டு உள்ளே சென்றவள், மது இருப்பதையும் பொருட்படுத்தாது, ''வசந்த்! எனக்கு உன்னோட கொஞ்சம் தனியாப் பேசணும். வர்றியா?'' என்று இங்கிதம் இல்லாமல் அவனை அழைத்தாள்.



மதுவைச் சங்கடமாகப் பார்த்த வசந்த், ''எதுவா இருந்தாலும் இங்கேயே சொல்லு ஹர்ஷினி. நம்ம மதுதானே!'' என்றான்.

''இல்லை வசந்த்! எனக்கு உன்னோடதான் பேசணும். இது என்னோட வாழ்க்கை சம்பந்தப்பட்டது. இன்னும் நான் அப்பா - அம்மாகிட்டேயே சொல்லலை. அதனால் தான் வா...'' என்று அவன் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு வெளியே சென்றாள்.

''ஹர்ஷினி! இது என்ன பிடிவாதம்? கையை விடு. நானே வரேன்,'' என்று அவளிடமிருந்து கையை உருவியவன் மதுவைப் பார்த்தான். ஆனால், இத்தனை நாட்களில் ஹர்ஷினியின் குணத்தைப் பற்றி அறிந்திருந்த மதுவோ, அதைப் பொருட்படுத்தாமல் தொலைக்காட்சிப் பெட்டியை உயிர்ப்பித்தாள்.

தனியே சென்றபின், ''சொல்லு. அப்படி என்ன தலை போகிற விஷயம்?'' என்றான் வசந்த் எரிச்சலுடன்.

''தலை போகிற விஷயம்தான். நானும் எவ்வளவோ முறை என்னோட காதலைப் புரிய வைக்க முயற்சி செஞ்சேன். ஆனால், கொஞ்சம் கூட அதைப் புரிஞ்சிக்காம ஒவ்வொரு தடவையும் என்னை உதாசீனப்படுத்தறதே வேலையாப் போச்சு!'' என்று தலையும் இல்லாமல் வாலும் இல்லாமல் ஆரம்பித்தாள்.

''என்னது உன்னோட காதலா? நீ 'லவ்' பண்ணறியா? யாரை?'' என்றான் திகைப்புடன்.

''நான் கௌதமை மனமார நேசிக்கறேன். ஒவ்வொரு தடவையும் என்னால முடிஞ்ச வரைக்கும் அதைக் கௌதம் கிட்ட சொல்ல முயற்சி பண்ணினேன். ஆனால், அவன் அதைக் கொஞ்சம் கூடப் பொருட்படுத்தின மாதிரி

தெரியலை. அதனால் நீதான் உன்னோட 'ஃப்ரெண்ட்' கிட்டப் பேசி எனக்குச் சம்மதம் வாங்கித் தரணும். அப்பாவுக்கும் - அம்மாவுக்கும் இதிலே சம்மதமாத்தான் இருக்கும்!'' என்று தன் காதலுக்குத் தன் அண்ணனையே அவன் நண்பனிடம் தூது அனுப்ப முனைந்தாள்.

'இவ என்ன சொல்லறா? கௌதமை விரும்பறாளா? இது உலக அதிசயமா இல்லை இருக்குது! ஹர்ஷினி ஒருத்தரை விரும்பறாளா? அதுவும் கௌதமை. இவளோட குணத்துக்கு கௌதம் மாதிரி ஒரு ஆள்தான் சரியாக இருப்பான். ஆனா, கௌதம் என்ன நினைச்சிட்டு இருக்கானோ? அவன் மட்டும் சரி சொன்னா இதை விட சந்தோசம் வேற என்ன இருக்க முடியும்? சரி. அவனிடம் பேசிப் பார்க்கலாம்,' என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

''என்ன வசந்த், ஒண்ணுமே பேசாமல் சும்மா இருக்கிற? என்ன ஆனாலும் சரி. எனக்கு கௌதம்தான் வேணும்... சொல்லிட்டேன். எனக்குக் கல்யாணம்ன்னு ஒண்ணு நடந்தா அது அவனோடதான்!'' என்று ஏதோ கௌதம் கடையில் கிடைக்கும் மிட்டாய் போல நினைத்துப் பேசினாள்.

'இது என்ன பிடிவாதம்? ஒரு வேளை அவன் வேண்டாம்ன்னு சொன்னா என்ன பண்ணறது? சரி. கௌதம் கிட்ட பேசிப் பார்க்கலாம்,' என்று நினைத்தவன், ''சரி ஹர்ஷினி! நான் கௌதமிடம் பேசறேன். அவன் என்ன சொல்றான்னு பார்க்கலாம். நீ கவலைப்படாதே!'' என்றவுடன், ''அது என்ன பேசிப் பார்க்கிறேன். போய் அவனிடம் சொல்லிக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லு. என்னைக் கல்யாணம் பண்ண அவனுக்கு என்ன கசக்குதாக்கும்? அப்பா - அம்மாகிட்டச் சொல்லி அவங்க வீட்ல பேசச் சொல்லு. அப்போதான் இது சரியா வரும்!''



என்று தன் ஆசை ஒன்றே குறியாகத் தன் அண்ணனிடம் படபடவெனப் பொரிந்தாள்.

''ச்சே! ச்சே! அவன்கிட்ட பேசாம எப்படி சம்பந்தம் பேசச் சொல்லறது? நான் அவன்கிட்ட நாளைக்குப் போய்க் கேட்கிறேன். எல்லாம் நல்லபடியா நடக்கும். நீ போய்த் தூங்கு...'' என்று தங்கையைச் சமாதானப்படுத்தித் தூங்க அனுப்பி வைத்தான். 'மதுகிட்ட சொல்லலாமா இல்லை நான் போய் முதல்ல கௌதமோட மனசுல என்ன இருக்குதுன்னு தெரிஞ்சிட்டு அப்புறம் சொல்லலாமா?' என்று யோசித்துக் கொண்டே அறைக்குச் சென்றவன், மது தொலைக்காட்சி பார்த்தவாறே உறங்கி விட்டதைக் கண்டான். 'சரி! கௌதமிடம் நேரடியாகப் பேசிப் பார்க்கலாம்,' என்று முடிவு செய்து, 'இது மட்டும் நடந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். ஹர்ஷினியும் சந்தோசமாக இருப்பாள். கௌதமிற்கும் ஹர்ஷினியைப் பிடிச்சுத் தான் இருக்கும். அன்னைக்குக்கூட அவன் ஹர்ஷினிக்காகத் தானே, சினிமாவுக்கு எல்லாம் கூட்டிட்டுப் போனான் என்று ஹர்ஷினி சொன்னாளே!' என்று நினைத்தவாறே தொலைக்காட்சிப் பெட்டியை அணைத்துவிட்டு உறங்கப் போனான்.

அவன் அப்போதே மதுவிடம் இந்த விஷயத்தைப் பற்றிக் கூறி இருந்தால் பின்னால் வரும் பல சங்கடங்களைத் தவிர்த்து இருக்கலாமோ?

* * *

அமெரிக்காவில் இருந்து வந்த மறுநாள், அதிகாலையே சுறுசுறுப்பாக எழுந்து, குளித்து ஒரு மாதமாகப் பார்க்காத தன்னவளைப் பார்க்கப் பரவசத்துடன் கிளம்பினான் பாலா. அலுவலகத்துக்குச் சென்றவன் ஒரு மாதமாக அங்கு

இல்லாததால் செய்ய வேண்டிய வேலைகளை வரிசைப் படுத்திவிட்டுப் படபடப்புடன் தான்யாவின் வருகைக் காகக் காத்திருந்தான். பாலா வேலை செய்தாலும் அவனின் கண்கள் இரண்டும் தான்யாவின் வருகைக்காக வாசலையே அடிக்கடி தழுவி நின்றன.

அவன் அதிகாலையிலேயே கிளம்பி வருவதைப் பார்த்த கௌதம், அவன் தங்கையிடம் பேசித் தெளிவு படுத்திக் கொண்டதால், லேசான மனதுடனும், சிரிப் புடனும் வந்து அவனிடம், ''காத்திருக்க முடியலை?'' என்று கிண்டலடித்துவிட்டு அவன் வேலையைக் கவனிக்க ஆரம்பித்து விட்டான்.

பாலாவும் அசடு வழிய, ''போடா!'' என்றவன் கண்கள் செய்து கொண்டிருந்த வேலையை மட்டும் நிறுத்த வில்லை.

ஒவ்வொருத்தராக வேலைக்கு வர ஆரம்பிக்க, பாலா வின் வருகையை அறிந்த அனைவரும் அவனிடம் வந்து இயல்பாகப் பேசிவிட்டு, அவனின் உடம்பைப் பார்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தி விட்டுச் சென்றனர். அவன் தவிப்பை நீண்ட நேரம் நீடிக்க வைக்காமல் அலுவலகத் துக்கு வந்த தான்யா, சுவாதியைப் பார்த்து முறுவலித்து விட்டு ஏதோ பேசிக் கொண்டிருந்தாள். அப்படிப் பேசிக் கொண்டிருந்தவளின் புன்னகை சிறிது நேரத்தில் சுத்த மாக அவள் முகத்தில் இருந்து விடை பெற்றிருந்தது.

இதைப் பார்த்த பாலா, 'நல்லா சந்தோசமா தானே வந்தா? இப்போ என்ன ஆச்சு இவளுக்கு திடீர்ன்னு? ஒரு வேளை நான் திரும்பி வந்ததைத்தான் சுவாதி அவள்கிட்டச் சொல்லி இருப்பாளோ? அதுதான் இந்தக் கடுப்புக்குக் காரணமா?' என்று யோசித்துக் கொண்டிருந்தான்.



காலையில் சிரித்த முகத்துடன் வந்தவன் சுவாதியுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருக்கும்போதுதான் சுவாதி அவளிடம் புலம்பிக் கொண்டிருந்தாள்.

''ச்சே! எப்படி இருந்த பாலா சார் இந்த ஒரு மாசத்துல இப்படி எலும்புக் கூடு மாதிரி வந்து நிக்கறார். பாவம் அவர். அங்க என்னத்தைச் சாப்பிட்டாரோ என்னவோ. கண்ணால அவரைப் பார்க்க முடியலை. ஏன்தான் தனியா அமெரிக்கா போனாரோ?'' என்று உருகினாள்.

அதைக் கேட்ட தான்யா, 'இந்த ஒரு மாதமாக நானும் எதுவுமே சொல்லலைதானே? அவருக்கு அப்படி என்ன பிரச்சனை? ஒரு வேளை என்னாலதான் இப்படி இருக் கிறாரோ?' என்று கலக்கத்துடன் நினைத்தாள். நினைத்த வுடனே அவசரமாக இது மாதிரி நினைத்துக் கொண்ட தற்குத் தன்னையே கடிந்து கொண்டாள். 'வேலையைப் பார்ப்பதை விட்டுட்டு இது என்ன வேண்டாத யோசனை? யார் எப்படி இருந்தா உனக்கு என்ன வந்தது?' என்று தலையைக் குலுக்கிக் கொண்டு தன் வேலையில் மூழ்கி னாள்.

ஆனால், சுவாதி விட்டால் அல்லவா அவள் வேலை யில் மூழ்க முடியும்? ''தான்யா! நீயே போய் அவரைப் பார்த்துட்டு வந்து சொல்லு - நான் சொன்னது நிஜமா இல்லையான்னு!'' என்று தொணதொணத்தாள். 'இவள் வாயை மூடிக் கொண்டு சும்மா இருந்தால் தேவலாம்,' என்று நினைத்தாள் தான்யா.

சுவாதி அவளை நச்சரித்தாலும், 'வேலை இருக்கிறது' என்று அவளிடம் கூறிவிட்டு பாலாவைப் பார்க்கச் செல்ல வில்லை தான்யா. ஆனால், மதியம் சாப்பிடச் சென்ற வனைப் பார்த்த தான்யா திகைத்துத்தான் போனாள். 'சுவாதி சொன்ன மாதிரி இது என்ன கோலம்? இப்படியா

உடம்பைக் கெடுத்துக்குவார். இவருக்கு இப்போ என்ன கவலை?' என்று இளக ஆரம்பித்த மனதை, 'ஒரு வேளை நம்மை மயக்கத்தான் இப்படி வேஷம் போடறாரோ என்னவோ?' என்று மறுபடியும் முறுக்கிக் கொண்டு முருங்கை மரம் ஏறினாள்.

பாலாவிடம் என்னதான் மின்னஞ்சல் வழியாக மன்னிப்புக் கேட்டிருந்தாலும், அதை நேரில் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமே என்று சென்ற ஒரு மாதமாக உறுத்திக் கொண்டேதான் இருந்தது தான்யாவிற்கு. அவனிடம் சென்று பேசுவதா வேண்டாமா என்று மாலை வரை மனதிற்குள் பட்டிமன்றம் நடத்தி, கோபத்தைக் குற்றமனப்பான்மை வென்றுவிட, வீட்டிற்குச் செல்லுமுன் வேலை சம்பந்தமாகப் பேச வேண்டும் என்று அவனை அவன் அறையில் சென்று சந்தித்தாள்.

அவள் வந்து பேசவில்லை என்ற சோகத்தில் இருந்தவன், அவள் அறைக்கு வந்ததைப் பார்த்து, 'இப்போ எதுக்கு வந்திருப்பா? ஏதாவது வேலை விஷயமா வந்திருப்பாளா... இருக்கும்,' என்று நினைத்தவாறே, ''வாங்க தான்யா! உட்காருங்க. என்ன விஷயம், சொல்லுங்க?'' என்று முகத்தில் எந்த உணர்ச்சியையும் காட்டாமல் அவனெதிரே இருந்த நாற்காலியைக் காட்டினான்.

அவன் அறைக்குள் சென்ற தான்யா அவனிடம் எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்று தயங்கிக் கொண்டிருந்தவள், இருக்கையில் அமர்ந்தவாறே யோசித்து, ''எப்போ வந்தீங்க? 'ப்ராஜெக்ட்' எல்லாம் நல்லபடியா முடிஞ்சதா? அங்க ரொம்ப வேலையோ?'' என்று, 'ஏன் இப்படி இருக்கிறீர்கள்?' என்று நேரடியாக விசாரிக்காமல் சுற்றி வளைத்துக் கேட்டாள்.



அதைக் கேட்டு இனிமையாக அதிர்ந்தவன், 'இவளுக்கு என்ன ஆச்சு இன்னைக்கு? நம்மளை விசாரிக்கவெல்லாம் செய்யறா. ஒருவேளை இந்த ஒரு மாசத்துல நான் யாருன்னு மறந்துடுச்சோ? இல்லை, நான் கனவு எதுவும் காண்கிறேனோ?' என்று நினைத்து மனதிற்குள் துள்ளினான்.

''நேற்றுச் சாயங்காலம்தான் வந்தேன் தான்யா. தேங்க்ஸ்! 'ப்ராஜெக்ட்' எல்லாம் நல்லபடியா முடிஞ்சது!'' என்று பட்டும் படாமல் பதில் சொன்னான். அவனுக்கும் ஆசைதான், 'உன்னோட நினைப்பு தான் என்னை வாட்டி வதைத்து விட்டது!' என்று சொல்ல. ஆனால், அதன் பின் வரும் விளைவுகளை வேறு சந்திக்க வேண்டுமே... ஏற்கெனவே அவன் மேல் இருக்கும் நல்லெண்ணம் வேறு அப்படியே இருக்கிறதே, என்று நினைத்து, வாய் மூடி ஊமையாகிப் போனான்.

அவளின் கேள்விக்கு அவனும் நேரடியாகப் பதில் சொல்லாமல் போக, ''அங்க சாப்பிட நேரம் கிடைக்கலையா இல்லை உங்களுக்குச் சமைக்கத் தெரியாதா? ஏன் இப்படி இளைச்சிட்டீங்க?'' என்று கேட்க நினைத்ததைக் கேட்டாள்.

'அடடா! நான் சமைக்கிற லட்சணத்தைப் பத்தி இவளுக்குத் தெரிஞ்சிடுச்சா?' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டு, ''அது எல்லாம் ரொம்ப நல்லா சமையல் செய்வேன். கொஞ்சம் 'டயட்'ல இருந்தேன். அவ்வளவு தான்,'' என்று ஒரு முழுப் பூசணிக்காயை எடுத்துச் சோற்றில் மறைத்தான்.

''ஓஹ்! அப்படியா? உங்களுக்கு 'ஜெட் லேக்' எல்லாம் இல்லையா?'' என்று வேறு கேட்டு அவனை மீண்டும் விண்வெளியில் பறக்க வைத்தாள்.

பறந்தால் அவளுக்குப் பதில் சொல்ல முடியாதே. அப்புறம் மீண்டும் 'ஜெட் லேக்' வந்துவிடும் என்று நினைத்துக் கஷ்டப்பட்டுத் தன் சிறகுகளை அடக்கி வைத்தவன், ''ஜெட் லேக்' எல்லாம் ஒண்ணுமில்லை. நேத்து 'நைட்'டே நல்லாத்தான் தூங்கினேன்!'' என்றான். 'ஜெட் லேக்' இருந்திருந்தாலும் அவளைப் பார்க்க ஓடோடி வந்திருப்பான் என்று அவனுக்கு மட்டும்தானே தெரியும்.

''சார்! நான் அன்னைக்கி அப்படிப் பேசினது ரொம்பத் தப்பு. என்னை மன்னிச்சுடுங்க!'' என்று அதுவரையில் தொண்டைக்குள் அடைத்துக் கொண்டிருந்த விஷயத்தைச் சொல்லி முடித்தாள்.

அவள் எதைப் பற்றிச் சொல்கிறாள் என்று தெரிந்திருந்தும், ''என்ன பேசினீங்க? எதுக்கு மன்னிக்கணும்?'' என்று ஒன்றும் புரியாத பாவனையில் அவளிடம் கேட்டான்.

''அது... வந்து... நான், நான்... மதுவைப் பற்றி தப்பா பேசினதுக்கு... அதுதான்... நான் அவங்களைப் பத்தி அப்படி பேசியிருக்கக் கூடாதுதான்... ஏதோ ஒரு கோபத்துல அப்படிச் சொல்லிட்டேன் சார்! நான் வேணா அவங்ககிட்ட மன்னிப்புக் கேட்கட்டுமா?'' என்று இழுத்தாள்.

'இவள் என்ன சின்னக் குழந்தை மாதிரி பேசறா? என்கிட்ட சொன்னதுக்கு மதுகிட்ட மன்னிப்புக் கேட்கப் போகிறாளா?' என்று நினைத்துச் சிரித்தவன், 'ஓஹ்..! அதுவா...? அதைப் பத்தி நான் அப்பவே மறந்துட்டேன். தெரியாமல்தானே சொன்னீங்க. ஆனா, மதுகிட்ட மன்னிப்புக் கேட்கப் போறீங்களா? எப்படி? என்னன்னு போய்ச் சொல்லுவீங்க? பாலாகிட்ட உங்களைத் தப்பா



நினைச்சுப் பேசினதுக்கு என்னை மன்னிச்சுடுங்கன்னா? மது சிரிக்கப் போறா. என்கிட்டத் தானே சொன்னீங்க. என்கிட்டேயும் மன்னிப்பும் கேட்டுட்டீங்க. அது போதும்.

''ஆனால், இனிமேல் யாரைப் பத்தியாவது எந்த முடிவெடுப்பதா இருந்தாலும் நல்லா யோசிச்சு எடுங்க. சரியா?'' என்று அவளுக்குத் தன்னைப் புரிய வைக்கும் முயற்சியுடன், வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவதைப் போல ஏற்றிக் கூறியவன், ''சரி, அதை விடுங்க! இப்போ என்ன விஷயமா வந்திருக்கீங்க?'' என்று அவள் வந்த விஷயத்திற்குத் தாவினான்.

சற்றுத் தயங்கியவள், ''உங்களைப் பத்தி சொன்னதற்கும் என்னை மன்னிச்சுடுங்க!'' என்று கூறிவிட்டு அவசரமாக வேலை சம்பந்தப்பட்டதைப் பற்றிப் பேச ஆரம்பிக்க, அவளை விசித்திரமாகப் பார்த்தவன் பின் வேலைக்குள் ஆழ்ந்தான். அவள் கிளம்பிச் செல்லுமுன் அவன் அமெரிக்காவில் இருந்து வாங்கி வந்த இரண்டு 'சாக்லேட் 'பாரை' எடுத்து அவளிடம் நீட்டி எடுத்துக் கொள்ளச் சொன்னான். அவன் அங்கு வேலை செய்யும் அனைவருக்கும் காலையிலேயே கொடுத்து விட்டான். இவள்தான் இதுவரை அவனைப் பார்க்க வரவில்லையே. அதனால் இப்பொழுதுதான் அதைக் கொடுக்க அவனுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவளும் தயங்காமல் எடுத்துக் கொண்டு நன்றி கூறிவிட்டு வெளியேறினாள்.

உடனே பாலாவின் உள்ளம், ஏதோ அவள் இவன் மனதையே வாங்கிவிட்டது போல 'சால்சா' நடனமாட ஆரம்பித்தது. ஆனால், அதெல்லாம் அவன் வெளியே சென்று அந்த 'சாக்லேட்'டை சுவாதி சாப்பிடுவதைப் பார்க்கும் வரைதான் நீடித்தது. அதன் பின் ஓய்ந்து போய் மறுபடியும் மூலையில் முடங்கியது. பாவம், அவன்

அறியாதது, தான்யாவின் கையிலிருந்ததை சுவாதிதான் அபகரித்துக் கொண்டாள் என்பது.

அன்று மாலையில், பாலாவைப் பார்க்க வந்த வசந்த் அப்படியே தன் தங்கையைப் பற்றி கௌதமிடமும் பேசலாம் என்று நினைத்தான். முதலில் பாலாவைப் பார்த்து, “ஏன்டா, அமெரிக்காவில இருந்து இந்தியாவுக்கு ஏதாவது பாத யாத்திரையா வந்தியா என்ன?” என்று கேட்டு, அவன் பங்கிற்கு நன்றாக வசவுமழை பொழிந்து விட்டு, பிறகுதான் கௌதமைப் பார்க்கச் சென்றான்.

வசந்தைப் பார்த்த கௌதம், “வா வசந்த்! பாலாவைப் பார்த்தியா? எப்படி இருக்கான் பாரு?” என்றான் வருத்தத்துடன்.

“ஆமா கௌதம்! இப்போதான் அவனை நல்லா திட்டிட்டு வரேன்,” என்று அவன் கேட்ட கேள்விக்குப் பதிலளித்துவிட்டு, சற்றுத் தயங்கியவன், “கௌதம்! உன்னிடம் ஒரு விஷயம் பேசணும்,” என்று நிறுத்தினான்.

“என்ன? சொல்லு வசந்த்.”

“நீ... நீ ஹர்ஷினியைப் பத்தி என்ன நினைக்கற?” என்று மொட்டையாக ஆரம்பித்தான்.

‘இவன் என்ன கேட்கிறான்?’ என்று யோசித்த கௌதம், “ஏன் வசந்த்? அவ நல்ல பொண்ணு. இப்போ எதுக்கு கேட்கிற? என்ன விஷயம்?” என்றான் குழப்பத்துடன்.

“ஹர்ஷினி நல்ல பொண்ணுதானே? உனக்கு அவளைப் பிடிக்கும்தானே?” என்றான் அவசரத்துடன் பதில் தெரிந்து கொள்ளும் ஆவலில்.

கௌதமின் மண்டைக்குள் அபாய மணி அடிக்க, “நீ என்ன கேட்கிற வசந்த்? கொஞ்சம் தெளிவாக் கேளு,” என்றான்.



“சரி கௌதம்! நான் நேரடியா விஷயத்திற்கு வரேன். நீ ஹர்ஷினியைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா நாங்க எல்லோரும் ரொம்ப சந்தோஷப்படுவோம். அவளுக்கும் உன்னை ரொம்பப் புடிச்சிருக்கு. அப்பா - அம்மாகிட்ட இதைப் பத்தி பேசட்டுமா?” என்று படாரென்று போட்டு உடைத்தான்.

அதைக் கேட்டவன் திகைத்து, “என்னது? ஹர்ஷினியை நான் கல்யாணம் பண்ணிக்கணுமா? எனக்கு அந்த மாதிரி எண்ணம் எல்லாம் இல்லை வசந்த். ‘ப்ளீஸ்’... தப்பா எடுத்துக்காத!” என்றான் அவசரமாக.

“இதுவரைக்கும் இல்லை. சரி! இனிமேல் வரலாம் இல்லையா? ‘ப்ளீஸ்’டா... யோசிச்சுச் சொல்லு. உன்னை விட ஒரு நல்ல மாப்பிள்ளை ஹர்ஷினிக்குக் கிடைக்க மாட்டான். உன்னோட குணத்துக்கு நீ அவளை ரொம்ப சந்தோசமா வச்சுக்குவேன்னு எனக்குத் தெரியும். அதுவுமில்லாம என்னோட ஃபிரெண்டே என் தங்கைக்குக் கணவனா வந்தா எவ்வளவு நல்லா இருக்கும்! நீ அதை அனுபவிக்கறேயே. என்னையும் அதை அனுபவிக்க விடுடா...” என்று தன் தங்கைக்காக வாதாடி, இடையே தன் விருப்பத்தையும் தெரிவித்தான்.

“வசந்த்! இந்தப் பேச்சை இத்தோட விட்டுடு. எனக்கு இதுல இஷ்டம் இல்லை!” என்றான் முடிவாக.

“ஹர்ஷினிக்கு என்னடா குறை? அவளை ஏன் வேண்டாம்னு சொல்லற? அதுக்கு ஒரு காரணம் சொல்லு. நான் கிளம்பறேன்,” என்று ஹர்ஷினியைப் பிடிக்காததற்கான காரணத்தை அறிய முனைந்தான் வசந்த்.

அப்பொழுது கௌதமிடம் வேலை சம்பந்தமாகப் பேசவென அங்கு வேலை செய்யும் ஒருவர் எட்டிப்

பார்த்துவிட்டுச் செல்ல. 'இவனுக்கு என்ன சொல்லிப் புரிய வைக்கிறது? அதுவும் இப்போ 'ஆபீஸ்ல வச்சு' என்று யோசித்தவன், ''ஹர்ஷினியை பிடிக்கலைன்னு இல்லை. எனக்கு அவளைக் கல்யாணம் பண்ணிக்கற எண்ணம்தான் இல்லைன்னு சொன்னேன். 'ப்ளீஸ்...' புரிஞ்சுக்கோ. 'ஆபீஸ்'ல வச்சு வேண்டாமே. இதைப் பத்தி நாம அப்புறமா பேசலாமா? நானே உன்கிட்ட இதைப் பத்தி பேசணும்னு நினைச்சிட்டு இருந்தேன்,'' என்றான் அவனுக்குப் புரிய வைக்கும் அவசரத்துடன்.

அவன் கடைசியில் கூறியதை எல்லாம் ஒதுக்கிவிட்டு, ''அப்படின்னா நீ அவளைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டியா? ஒருவேளை வசதியைக் காரணம் காட்டி வேண்டாம்ன்னு சொல்லறியா? அப்படி இருந்தா, அதெல்லாம் ஒரு பிரச்சனையே இல்லைடா... ப்ளீஸ்... மறுபடியும் யோசிச்சுப் பாரு...'' என்றான்.

''வசந்த்! அதெல்லாம் ஒண்ணும் இல்லை. நாம் இதைப் பத்தி இந்த வாரக் கடைசியில பேசலாமா? ப்ளீஸ்... புரிஞ்சுக்கோ.''

''ம்ம்... நான் ஹர்ஷினிக்கு என்ன பதில் சொல்லறது?'' என்று சத்தமாக யோசித்துக் கொண்டு, ''சரி! உன்னிடம் இதைப் பத்தி கொஞ்ச நாள் கழிச்சு வந்து பேசறேன். அது வரைக்கும் யோசி... நான் வரேன்,'' என்று கிளம்பினான் வசந்த்.

வசந்த் சென்றதும், கௌதம் தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான். 'இது என்னடா புதுத் தலைவலி? ஹர்ஷினிக்கு என்னைப் பிடிச்சிருக்கா? இதற்குத்தான் அவளை முன்னாடியே தள்ளி நிறுத்தி இருக்கணும். முதல்ல நாம் எடுத்த முடிவைப் பத்தி வசந்



திற்குச் சொல்லணும். அப்படிச் சொல்லிட்டா, அப்புறம் புரிஞ்சிக்குவான். நாளைக்கு அவனும் 'ஃப்ரீயா' இருந்தா பாலாவிடம் பேசும்போது அவனிடமும் பேசிடலாம்,' என்று முடிவெடுத்த பின்தான் அவனால் வேலையில் கவனம் செலுத்த முடிந்தது.

அவன் தலையில் கை வைத்து உட்கார்ந்து கொண்டிருந்த அதே சமயம், அவனைப் பார்க்க வந்த பாலா, ''கௌதம், என்ன ஆச்சு?'' என்றான்.

''ஒண்ணுமில்லை பாலா. தலை வலிக்குது. அதான்.''

''மாத்திரை வேணுமா கௌதம்? என்கிட்டே இருக்கு!'' என்று அவன் பதிலை எதிர்பார்க்காமல் அவன் அறைக்குச் சென்று அதை எடுத்து வந்து கொடுத்தான். அவன் மாத்திரையைச் சாப்பிட்டபின், ''தேங்க்ஸ் பாலா. கொஞ்ச நேரத்துல சரியாயிடும். இன்னும் கொஞ்ச வேலைதான் பாக்கி இருக்கு. அதுவும் சீக்கிரமா முடிஞ்சிடும். முடிஞ்சதும் வீட்டிற்குக் கிளம்பிடுவேன்,'' என்றான்.

''நானும் இப்போ கிளம்பறேன். எனக்கும் 'டயர்ட்டா' தான் இருக்கு. தலைவலியை இன்னைக்கே சரி பண்ணிக்கோ. நாளைக்கு வந்து என்கிட்டே தலைவலிக்குதுன்னு சொல்லித் தப்பிக்க முடியாது... சொல்லிட்டேன். அப்புறம் நாளைக்கு மதியம் 'லஞ்ச்' நானே செஞ்சு வைக்கிறேன்,'' என்றான்.

மற்ற சமயத்தில் என்றால், 'ஐயோ! ஆளை விடு!' என்று அலறியிருப்பான். ஆனால், கௌதம் அப்போதிருந்த மனநிலையில் பாலா சொன்னது அவன் கருத்தில் பதியவில்லை. ''சரி பாலா,'' என்று ஒற்றை வரியில் பதில் சொன்னவனைக் கவலையுடன் பார்த்தான் பாலா.

கௌதமின் மனநிலைமையை மாற்றத்தான் அவன் அவ்வாறு கூறியது. ஆனால், அவன் சொன்னதைக்கூடக்

கருத்தில் பதிக்காமல் அவன் கவலையில் உழன்று
கொண்டிருந்ததைப் பார்த்த பாலா, 'நாளைக்கு இதை
ஒரு முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்,' என்ற
எண்ணத்துடன் அங்கிருந்து கிளம்பினான்.

வெளியில் வந்தவனுக்கு ஒரு புது கைபேசி 'சார்ஜர்'
வாங்க வேண்டும் என்ற ஞாபகம் வந்தது. 'இப்பொழுதே
வீட்டுக்குப் போய்த் தூங்கிட்டா, அப்புறம் காலையில
நேரத்துல எழுந்து உட்கார்ந்துட்டு, இன்னும் அமெரிக்க
நேரத்திலேயேதான் இருக்கணும். அதனால் கொஞ்ச
நேரம் வெளியில் போய்ச் சுத்திட்டு வந்தா, 'நைட்' ஓரள
விற்கு நேரம் கழிச்சுத் தூங்கலாம்,' என்று நினைத்துக்
கொண்டு கிளம்பிச் சென்றான்.

திருச்சி சாலையில் உள்ள கடைக்குச் சென்றவன்,
அவனுக்கு வேண்டியதை வாங்கிக் கொண்டு சிறிது
நேரம் அருகிலிருக்கும் 'சூப்பர் மார்க்கெட்'டில் சுற்றி
விட்டு, பின் இரவு உணவையும் அருகிலிருந்த ஒரு
உணவகத்தில் முடித்துக் கொண்டு வெளியே வந்த
பொழுது மழையின் மண் வாசம் அவனை வரவேற்றது.

அந்த வாசத்தைச் சுவாசித்தவன், 'அடடா! மழை
வந்துடுச்சா? ஆமாம், பின்னே இருக்காதா? இன்னைக்கி
தனு நம்மகிட்ட அக்கறையா வந்து விசாரிச்சாளே!' என்று
எண்ணியவாறே காரை ஓட்டிச் சென்றான். சிறிது தூரத்
தில், 'சிக்னலு'க்காக நின்று கொண்டிருந்த பொழுது,
அங்கிருந்த பேருந்து நிறுத்தத்தில் பதுமையாய் நின்
றிருந்த அவன் தேவதை, அவன் கண்ணில் பட்டு
அவனை இனிமையாக அதிர வைத்தாள்.

மழை காரணமாக அனைவரும் சற்று உள்ளே ஒதுங்கி
நிற்க, தான்யா மட்டும் கவலைப்படாமல் மழையில்



நனைந்தவாறே நின்று கொண்டிருந்தாள். மழை வலுப்
பெற ஆரம்பித்தால் அவளுக்குச் சிரமம் என்று எண்
ணியவன், அவளை வீட்டில் விட்டு விடலாம் என்று காரை
அவளின் அருகில் நிறுத்தி, ஜன்னலை இறக்கினான்.

''தான்யா! மழை நிக்கற மாதிரி தெரியலை. வாங்க.
நான் உங்களை வீட்ல கொண்டு போய் விடறேன்,''
என்று அவளை அழைத்தான்.

அவனை அந்நேரத்துக்கு அங்கு எதிர்பார்க்காதவள்,
'இவர் எங்கு இங்கு வந்தார்? ஒருவேளை என்னைத்
தொடர்ந்து வர்றாரோ?'' என்று எண்ணினாள். 'ச்சே! ச்சே!
இருக்காது!' என்று அவளே ஒரு பதில் கண்டு பிடித்து
விட்டு, ''சார்! பரவாயில்லை... என்னோட 'பஸ்' இப்போ
வந்துடும். நீங்க போங்க,'' என்றாள்.

''சொல்லவேயில்லை நீங்க. உங்களுக்குன்னு 'பஸ்'
எல்லாம் வச்சிருக்கீங்களா என்ன? பரவாயில்லை. பெரிய
ஆளுதான் நீங்க!'' என்று அவள் 'என்னோட பஸ்' என்று
சொன்னதைக் கேட்டுக் கிண்டலடித்தான். வந்த முறு
வலை அடக்கிக் கொண்டு அவள் பதில் சொல்லும்
முன், ''அதுக்காகச் சொல்லலை, மழை அதிகமாயிடுச்
சுன்னா சிரமம். அதான் சொன்னேன். வாங்க!'' என்று
மறுபடியும் அவன் பிடியிலேயே நின்றான்.

'இவருக்குச் சொன்னா புரியாதா?' என்று யோசித்தவள்,
''சார்! எனக்கு மழையில நனையறது ரொம்பப் பிடிக்கும்.
அதுவுமில்லாம, உங்களுக்கு நிறையா வேலை இருக்
கும். நீங்க கிளம்புங்க. நான் தனியா இப்படி யாரோடும்
போறதில்லை. என்னை மன்னிச்சுடுங்க பாலா. அங்க
பாருங்க, என்னோட 'பஸ்' வந்துடுச்சு. நான் கிளம்பறேன்,''
என்று தாழ்ந்த குரலில் அவனிடம் சொல்லிவிட்டு, ஓடிச்

சென்று, அங்கு வந்து நின்ற பேருந்தில் ஏறிச் சென்று விட்டாள்.

அவளின் பதிலில் அடிபட்டவன், 'யாரோடயும் நீ தனியா போறதில்லையா? என்னையும் எல்லோர் மாதிரி தான் நீ இன்னும் நினைக்கிறியா?' என்று கத்த வேண்டும்போல இருந்தது அவனுக்கு. 'ச்சே! என்னை நம்பவே மாட்டாளா? இவள் கிட்ட எப்படிப் புரிய வைக்கிறது?' என்று புலம்பியவனின் மூளைக்கு அப்போது தான் எட்டியது, அவள் தன்னையுமறியாமலேயே முதல் முறையாக பாலா என்று அவனை அழைத்ததை. அந்தச் சந்தோசத்துடன் விசிலடித்தவாறே காரைக் கிளப்பிக் கொண்டு தன் வீடு நோக்கிச் சென்றான் பாலா. வீட்டிற்குச் சென்றவன் காரை நிறுத்திவிட்டுச் செய்த முதல் காரியம், சிறிது நேரம் மழையில் நனைந்தது தான்.

இவன் மழையில் நனைந்து கொண்டிருந்த அதே நேரம், கௌதம் தன் கைபேசியில் வசந்தை அழைத்து, ''வசந்த்! நாளைக்கு நீ ஃப்ரீயா இருப்பியா? உன்கிட்ட கொஞ்சம் பேசணும்,'' என்றான்.

''இல்லை கௌதம். நாளைக்கு நான் எங்க ஊருக்குப் போகணும். அப்பா இங்க ஊர்ல இல்லாததுனால கிராமத்துக்குப் போய்க் கணக்கு வழக்கெல்லாம் நான் தான் பார்த்துட்டு இருக்கேன்,'' என்றான்.

''அப்படியா? சரி! நீ போயிட்டு வா. நான் சொல்ல நினைத்ததைப் பத்தி அப்புறம் பேசலாம்,'' என்று கூறி விட்டுப் பேசியை வைத்தான்.

* * *

மறுநாள் காலையில் எழுந்த பாலா, அவன் கவலைகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, சமையல்



செய்து... இல்லை இல்லை... அவர்கள் வீட்டில் வந்து வேலை செய்யும் அம்மா செய்து வைத்துவிட்டுச் சென்றபின்,தன் நண்பனின் வரவுக்காகக் காத்திருந்தான். பாலாவின் வீட்டிற்குச் சென்று மதிய உணவை முடித்து விட்டு, எப்படி ஆரம்பிப்பது என்று தயங்கிக் கொண்டு, அங்கிருந்த 'ஜூஸ்' டப்பாவைக் கண் சிமிட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான் கௌதம்.

அவனின் தயக்கத்தைப் பார்த்த பாலா, அவனிடம், ''கௌதம், இவ்வளவு நேரமா நீ எதுக்கு அந்த ஜூஸ் டப்பாவையே பார்த்துட்டு இருக்கேன்னு புரியலை. இப்போ தான் எனக்குப் புரிஞ்சது!'' என்றான்.

கண்களை உயர்த்தி, 'நீ என்ன சொல்றே?' என்று பார்த்த கௌதமிடம், ''இல்லை அந்த டப்பால 'கான்சென்ட்ரேட்'ன்னு எழுதி இருக்கே. அதனாலதான் நீ 'கான்சென்ட்ரேட்' பண்ணிட்டு இருந்தியோன்னு நினைச்சேன்,'' என்று சொல்லிக் கௌதமைச் சிரிக்க வைத்தான்.

தொடர்ந்து, ''ஏன்டா கௌதம், என்னோட சமையல் அவ்வளவு கொடுமையாவா இருந்தது? சாப்பிட்டுட்டு இப்படி வாயைத் திறக்கவே மாட்டேங்கிற. நான் உண்மையைச் சொல்லிடறேன். நான் இன்னைக்குச் சமைக்கலை!'' என்று அவனை இயல்புக்குக் கொண்டு வர முயன்றான்.

கௌதமும், ''இத்தனை நாள் சாப்பிட்டதுல அது கூட எனக்குத் தெரியாதா? அதுதான் தைரியமா இன்னைக்குச் சாப்பிட்டேன்!'' என்றான் பதிலுக்கு.

''கௌதம்! ரொம்ப யோசிக்காத. எதுவா இருந்தாலும் தயங்காமச் சொல்லு. அப்போதான் உனக்குத் தெளிவா யோசிக்க முடியும். அப்படி என்ன நடந்தது?'' என்று பேச்சை ஆரம்பித்து வைத்தான்.

''பாலா! நான் காலேஜ் படிக்கும்போது ஒரு பொண்ணை உயிருக்கு உயிரா காதலிச்சேன்!'' என்று பட்டென்று போட்டு உடைத்தான் கௌதம்.

''என்னது, நீ காதலிச்சியா? என்ன சொல்லற கௌதம்? யாரு அந்தப் பொண்ணு? அப்புறம் என்ன ஆச்சு?'' என்றான் நம்பாமல், ஆச்சர்யத்துடன்.

''ஆமாம்! நான் காதலிச்சது வர்ஷனாவை!'' என்றான் கௌதம், பதிலாக.

''வாட்? நாம ஊட்டில பார்த்தோமே, அவங்களா? ஆனா, அவங்களுக்குத்தான் கல்யாணம் ஆயிடுச்சே. இப்போ ஒரு குழந்தைகூட இருக்கே?'' என்று புரியாமல் திகைத்தான்.

''ஆமாம் பாலா! அதான் உன்கிட்ட கூட அதைப் பத்திச் சொல்லலை. தப்பா நினைச்சுக்காத. அதுவுமில்லாம நான் காதலிச்சது அவளுக்குத் தெரியாது. ஆனா...'' என்று அவன் மேற்கொண்டு சொன்ன விஷயத்தைக் கேட்ட பாலா மேலும் அதிர்ந்தான்.

## 9

''என் மனதில்
பாசம் தூவினேன்
நேசம் வளர்த்தேன்
என்னுள் நீ வளர்பிறையானாய்
நான் மட்டும் தேய்பிறையாய்...!''

சென்னையில், கௌதம் பி.ஈ. சேர்ந்த அதே கல்லூரியில், அதுவும் அவனின் வகுப்பிலேயே வந்து சேர்ந்தாள் வர்ஷனா. கல்லூரியில், முதல் நாள் வகுப்பில் கௌதம் எப்போதும் போல அமைதியாக அமர்ந்திருக்க, அவனருகில்



வந்தமர்ந்தான் கார்த்திக். அவன் திருநெல்வேலியில் இருந்து சென்னைக்குப் படிக்க வந்தவன். விடுதியில் இருவரும் ஒரே அறையில் தங்குவதாக அவர்கள் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கௌதம் தன் தந்தையுடன் சென்னை வந்து அவரின் நண்பரின் வீட்டில் தங்கி, அன்று மாலை தான் விடுதிக்குச் செல்வதாக முடிவு செய்யப்பட்டிருந்தது. அதனால் அவனுக்குக் கார்த்திக் யாரென்று தெரியவில்லை.

கார்த்திக்குக்கு, முன்பே இதைப் பற்றி தெரியுமாதலால், மாலை வரை காத்திருக்கப் பொறுமை இல்லாமல் தான் அவனே யார் கௌதம் என்று கண்டுபிடித்து, அவனருகில் வந்து அமர்ந்திருந்தான். கார்த்திக்கைப் பார்த்து சிநேகமாகப் புன்னகைத்து, ''நான் கௌதம். கோவையிலிருந்து வரேன்,'' என்று அறிமுகப்படுத்திக் கொண்டான்.

''அதுதான் எனக்குத் தெரியுமே...'' என்ற கார்த்திக்கை விநோதமாகப் பார்த்தவன், மீண்டும் ஏதோ கேட்கும் முன்னரே கார்த்திக்கே தன்னைப் பற்றிக் கூறினான்.

அமைதியே உருவான கௌதமிற்கு, முதல் நாளே கார்த்திக்கை மிகவும் பிடித்து விட்டது. இருவரும் பரஸ்பர அறிமுகங்களுக்குப் பிறகு, சிறிது நேரம் பொதுவான விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். வகுப்பறையில் அவர்களின் பேராசிரியர் வந்தவுடன் அமைதியாக அவர் சொல்லப் போவதைக் கேட்கத் தயாராயினர். அவரும் அனைவரையும் வரவேற்றுப் பின் ஒவ்வொருவராக அறிமுகப்படுத்திக் கொள்ளச் சொன்னார். அப்போது தடதடவென்று யாரோ வேகமாக ஓடி வரும் சத்தத்தைத் தொடர்ந்து, அவர்களின் வகுப்பின் முன் நின்று, ''எக்ஸ்கியூஸ் மீ!'' என்று ஒரு இனிய குரல் அனைவரின் கவனத்தையும் சிதறடித்தது.

அங்கே, அரக்கப் பரக்க ஓடி வந்ததின் விளைவாக மூச்சு வாங்கிக் கொண்டு ஒரு பெண் நின்றிருந்தாள். முகமெல்லாம் சிவந்து, வேர்த்துப் போய் நின்றிருந்த வளைப் பார்த்தாலே ஏதோ ஒரு 'சீனியரி'டம் வசமாக மாட்டித் தப்பித்துக் கொண்டு வந்திருக்கிறாள் என்று அங்கிருந்த அனைவருக்குமே புரிந்தது.

அவளைப் பார்த்த கௌதம் மூச்சு விட மறந்தான். 'என்ன ஒரு அம்சமான மாசு மருவில்லாத பளிங்கு முகம்! அவளின் பயத்தைத் தேக்கி வைத்திருந்த விழிகள், சிவந்த கன்னங்கள், உலர்ந்த உதடுகள்!' என்று நீண்டு கொண்டே போன அவனின் சிந்தனையைப் பேராசிரியரின் குரல் கலைத்தது. தலையைக் குலுக்கி, 'இது என்ன சிந் தனை? அதுவும் பார்த்தே ஒரு நிமிஷம் ஆன பெண் ணைப் பத்தி!'' என்று தன் சிந்தனையில் இருந்து கலைந்து வகுப்பில் கவனத்தைத் திருப்பினான்.

அவர்களின் வகுப்பில் நடந்த அறிமுகத்தின் போது தான் அவள் பெயர் வர்ஷனா என்று தெரிந்து கொண்டான். அதன் பிறகு வந்த நாட்களில் கௌதம் வகுப்பிற்கு வந்து கடமையே கண்ணாகப் படிப்பில் கவனம் செலுத்தி னாலும், அவனின் கண்கள் தினமும் வர்ஷனாவைத் தழுவ மறந்ததில்லை. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அவளைத் தழுவிய அவன் விழிகள், அவளின் பிம்பத்தைத் தன் இதயச் சுவரில் செதுக்கியதை அவன் அறியவில்லை.

கார்த்திக்கும், கௌதமும் கூடிய விரைவிலேயே நல்ல தோழராகி விட்டார்கள். கார்த்திக்கின் இயல்பான பேச்சாலும், கௌதமின் நல்ல குணத்தாலும், வருணும், தியானும் அவர்களின் நட்பு வட்டத்தில் சேர்ந்தனர்.



முதல் வருடம் முடியும் தருவாயில்தான் வர்ஷனா இவர்களிடம் சகஜமாகவே பேசிப் பழக ஆரம்பித்தாள். அவள் அவ்வாறு பேசுவதற்குக் காரணம் கார்த்திக்தான். ஒரு நாள் தேர்வு நடக்கும் சமயத்தில் வர்ஷனாவிடம் சென்று தேர்வு எழுதும்பொழுது, அவள் அருகில் தான் அமரப் போவதாகவும் அவள் விடைத்தாள்களை அவ னுக்குக் காண்பிக்க வேண்டும் என்றும் இல்லாவிட்டால் அவளை என்ன பண்ணுவான் என்று அவனுக்கே தெரி யாது என்றும் ஒரு படம் போட்டு மிரட்டி வைத்தான் கார்த்திக்.

கார்த்திக் நன்றாகப் படிப்பவன் என்று தெரியாமல் வர்ஷனாவும் பயந்து போய் அவனுக்கு அவளுடைய விடைத்தாளைக் காண்பித்தாள். தேர்வு முடிவு வந்த பொழுது கார்த்திக் அந்தப் பாடத்தில் முதல் மதிப்பெண் பெற்று, வர்ஷனாவின் வயிற்றெரிச்சலை வேறு வாங்கிக் கொட்டிக் கொண்டான். அவன் செய்த இந்த அட்டூழி யத்தைப் பின்பு தான் அவள் அறிந்து கொண்டு அவனிடம் சகஜமாகப் பேசிப் பழகினாள். கார்த்திக்கும் கிடைத்த முதல் சந்தர்ப்பத்திலேயே அவளைக் கிண்டல் செய்து அதற்கும் சேர்த்து வாங்கிக் கட்டிக் கொண்டான்.

''வர்ஷனா! நான் உன்கிட்ட வந்து சொன்னப்பவே நீ போய் 'ஃப்ரொபசர்' கிட்ட நான் மிரட்டினதைப் பத்திச் சொல்லி இருக்கலாமே? ஏன் அப்படிச் செய்யாம இப்படி 'பேக்கு' மாதிரி எல்லாத்தையும் என்கிட்டே காண்பிச்சே?'' என்று கிண்டலாக வினவினான் கார்த்திக்.

அவனைப் பார்த்து முறைத்தவள், ''நான் உனக்கு 'பேக்கா?' இப்போ வந்து இதுவும் சொல்லுவ. விட்டா இன்னமும் சொல்லுவ. எல்லாம் என் நேரம். அப்போவே உன்னைப் போட்டுக் கொடுத்திருக்கணும். ஆமா,

ஏன் என்னை அப்படி வந்து பயமுறுத்தின?'' என்று கேட்டாள்.

''அதுவா, சும்மா 'உல்லுலாய்க்கு'!'' என்று நாக்கை வெளியே துருத்திச் சொன்னவன், அவளின் முக மாற்றத்தைக் கவனித்து, ''நம்ம கிளாஸ்ல நீதான் ரொம்ப அமைதியான பொண்ணா யார்கிட்டேயும் பேசாம, உனக்குப் பின்னாடி நிறைய தேவதைங்க சோகமா வயலின் வாசிச்சிட்டு இருந்தாங்க. அதெப்படி நான் இருக்கிற இடத்துல அப்படி எல்லாம் இருக்கலாம்? விட்டுடுவேனா? அதான் உன்னைப் பேசிச் சிரிக்க வைக்கறதுக்காகத்தான் அப்படி செஞ்சேன்!'' என்று சிரித்தான்.

''நான் வந்து உன்னை மிரட்டும் போது உன்னோட முகத்தைப் பார்க்கணுமே!'' என்று அவளை மாதிரியே செய்து காட்டினான்.

அதைப் பார்த்து மனம் விட்டுச் சிரித்தவள், ''தேங்க்ஸ் கார்த்திக்! இது மாதிரி நான் சிரிச்சி ரொம்ப நாள் ஆச்சு. ரெண்டு வருஷத்துக்கு முன்னாடிதான் என்னோட அம்மா அப்பா இறந்தாங்க. எனக்கு ஒரு அண்ணன் மட்டும்தான். அவரும் என்னை நல்லா பார்த்துக்குவார். ஆனா, இப்படி பிரண்ட்லியா எல்லாம் பழக மாட்டார். தேங்க்ஸ்!'' என்று கண் கலங்கியவள், ''ஆனா, உன்னைப் போட்டுக் கொடுக்காததற்குக் காரணம், என்னதான் நீ இப்படி அடாவடியா இருந்தாலும் இன்னும் எவ்வளவு நாளைக்கு இப்படி இருக்க முடியும்? படிச்சு முடிக்கிற வரைக்கும்தானே. அதுதான் சொல்லலை. நான் சொல்லி அப்புறம் உன்னை 'எக்ஸாம்' எழுத விடாம பண்ணிட்டா, நீ பாவம் இல்லையா? அதனாலதான்!'' என்றாள்.

''ஹேய்! ரொம்ப 'ஃபீலிங்ஸ்' காட்டாத! அப்புறம் நான் நிஜமாவே என்னோட சுயரூபத்தைக் காட்ட



வேண்டிவரும். அப்புறம் உண்மையான காரணத்தை வேற சொல்லணும்...'' என்று இடைவெளிவிட்டு, அவளிடமிருந்து சிறிது தூரம் நகர்ந்து போய் நின்று கொண்டு, ''நீ சிரிச்சாலே உன்னைப் பார்க்க முடியலை, அப்புறம் உம்முன்னு இருந்தா கேட்கவா வேணும்? அதான்...'' என்று வாரி, அவளை மறுபடியும் இழுத்து நிலைமையைச் சகஜமாக்க முயன்றான்.

அதைக் கேட்டு அவனைத் துரத்தியவள் அதில் தோல்வியுற்று, ''உன்னை... இரு. அப்புறம் வச்சுக்கறேன்,'' என்று கூறினாள்.

இப்படித் தான் வர்ஷனா கார்த்திக்கிடம் பேச ஆரம்பித்துப் பின் அவனின் நண்பர்களுடனும் பேச ஆரம்பித்தாள். இப்படியே அவர்களின் கல்லூரி வாழ்க்கை எந்தவிதத் தடங்கலும் இல்லாமல் சந்தோசமாக எல்லாவிதக் கலாட்டாக்களுடன் சென்றது.

* * *

இரண்டாம் வருடத்தில் கௌதம், கார்த்திக், வருண் மற்றும் தியான் சேர்ந்து கூட்டணி அமைத்து இணைபிரியா நண்பர்களாய் மாறினர். இவர்களின் கட்சியில், கார்த்திக்கினால் வர்ஷனாவும், அவள் தோழி ஜென்னியும் சேர்ந்து கொண்டனர். ஜென்னியும், வர்ஷனாவும் ஊட்டியில் ஒன்றாகப் பள்ளியில் படித்தவர்கள். ஆனால், இங்கே கல்லூரியில் வர்ஷனா 'கம்ப்யூட்டர் சயின்ஸ்' என்றால் ஜென்னி 'மெக்கானிக்கல்' எடுத்திருந்தாள். வர்ஷனா மூலமாக இவர்களை அறிந்து வைத்திருந்ததால் ஜென்னியும் சகஜமாக வந்து இவர்களுடன் பேசினாள். கௌதமும், கார்த்திக்கும் ஒரே அறையில் தங்கியதால் அவர்களுக்குள் இருந்த புரிதலும் நட்புணர்வும் அவர்

களிடையே ஒரு பலமான அசைக்க முடியாத பாலத்தை அமைத்தது.

அவர்கள் ஆறு பேரும் ஒரு நாள் மதியம் கல்லூரி வளாகத்திலிருக்கும் உணவகத்தில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டும், அரட்டையடித்துக் கொண்டும் இருந்தனர். அப்பொழுது, கௌதம் அவர்களிடம் அந்த வார இறுதியில் அவன் கோவை சென்றிருந்த பொழுது கார்த்திக் விடுதியில் செய்த திருவிளையாடலைப் பற்றிச் சொல்லி அவனைக் கலாட்டா செய்து கொண்டிருந்தான்.

கௌதம் தங்கி இருந்த விடுதியில் இரவு அநாவசியமாக யாரும் வெளியே சுத்தக் கூடாது என்றும் அப்படியே அவர்கள் வெளியே சென்றிருந்தாலும் பத்து மணிக்குள் திரும்பி வந்துவிட வேண்டும் என்றும் ஒரு சட்டம் உள்ளது. அவர்கள் பத்து மணிக்கு மேல் வந்தால் விடுதி 'கேட்'டைப் பூட்டி விடுவர். அதன் பின் 'வார்டனி'டம் போய், என்ன ஏது என்று எடுத்துச் சொல்லி, நன்றாக விளக்கி, கிலோ கணக்கில் கொடுக்கும் திட்டையும் வாங்கிக் கொண்டுதான் மறுபடியும் உள்ளே செல்ல முடியும். இதைத் தவிர்ப்பதற்காகவே அனைத்து மாணவர்களும் முடிந்தவரை நேரத்தோடு திரும்பி விடுவார்கள்.

கடந்த சனிக்கிழமை இரவு கௌதம் கோவைக்குச் சென்றதினால் கார்த்திக்கிற்கு அவன் அறையில் சும்மா அடைந்து கிடப்பதற்கு 'போர்' அடித்தது. 'என்ன செய்யலாம்?' என்று யோசித்தவன் விடுதியில் இருந்த மற்ற அனைவரையும் சினிமாவுக்குச் செல்லலாம் என்று அழைத்தான். அவர்களில் சிலர் சரி என்று அவனுடன் கிளம்பினர்.

சினிமா முடிந்து இரவு பத்து மணிக்குள் வந்து விடலாம் என்று எண்ணிச் சென்றவர்கள் நினைத்ததற்கு மாறாகப்



படம் முடிய நேரமாகி விட்டது. மேலும், சென்னை மாநகராட்சிப் பேருந்தின் கைங்கர்யத்தால் விடுதிக்குத் திரும்ப இரவு பதினோரு மணி ஆகிவிட்டது. அனைத்து மாணவர்களும் பதட்டத்துடன், 'ஹாஸ்டலுக்குச் சென்று 'வார்டனி'டம் என்ன சொல்லுவது? வார்டனுக்குத் தெரிந்தால் அவ்வளவுதான்... இனிமேல் வெளியேவே போக முடியாது!' என்று ஆளாளுக்கு ஒவ்வொன்று நினைத்துக் கொண்டே பதட்டத்துடன் விடுதிக்கு வந்து சேர்ந்தனர்.

விடுதி வளாகத்தின் அருகில், அனைவரும் ஒரு மரத்தின் பின் ஒளிந்து கொண்டு 'வாட்ச்மேன்' அங்கே இருக்கிறாரா என்று உளவு பார்த்தனர். ஆனால், அவர்கள் நின்ற இடத்தில் இருந்து 'கேட்' சரியாகத் தெரியாததால், கார்த்திக் அவர்களிடம் தான் உளவறிவதாகக் கூறி 'கேட்'டுக்கு அருகில் சத்தமில்லாமல் மெதுவாகச் சென்றான்.

அங்கே சென்று 'கேட்' அருகில் ஒருவரும் இல்லை என்று உறுதிப்படுத்திக் கொண்டு மற்றவர்களுக்குச் சைகை செய்துவிட்டு அவன் அவசரமாக 'கேட்'டின் மேல் மளமளவென்று ஏறி மறுபக்கம் குதித்தான். அவனைப் பின்பற்றி மற்றவர்களும் ஒவ்வொருவராகச் சத்தம் போடாமல் கஷ்டப்பட்டு அவர்களுக்குத் தெரிந்த வரையில் 'கேட்'டைப் பிடித்து ஏறி மறுபக்கம் குதித்தனர். அனைவரும் தப்பித்தோம் பிழைத்தோம் என்று அவர்களின் அறைக்குச் செல்ல எத்தனிக்கையில், 'கேட்'டை வெளியிலிருந்து திறந்து கொண்டே உள்ளே வந்தார் அங்கிருந்த 'வாட்ச்மேன்.'

அவர்கள் இத்தனை நேரம் கஷ்டப்பட்டு ஏறிக் குதித்த போதெல்லாம் அந்த 'கேட்' திறந்துதான் இருந்தது என்பதை அறிந்தவர்கள், கார்த்திக்கைப் பார்த்து முறைத்து

விட்டு, அவனை உள்ளே இழுத்துக் கொண்டு போய்க் கும்மி எடுத்து விட்டார்கள்.

''ஏன்டா! இதுதான் நீ வேவு பார்க்கற லட்சணமா? வாட்ச்மேன் இருக்கிறாரா இல்லையான்னு பார்க்கப் போன நீ அப்படியே 'கேட்' திறந்து இருக்கா இல்லையான்னு பார்க்க மாட்டியா?'' என்றும், ''நீதான் குரங்கு மாதிரி கேட்டைத் தாவிக் குதிச்சேன்னா எங்களையும் சேர்த்துக் குதிக்க வச்சிட்டியே!'' என்றும், ''ஒரு நாளாவது நாங்க இப்படி குரங்கு ரேஞ்சுக்கு இறங்கி இருப்போமா? உன்னால என்னவெல்லாம் இன்னிக்குப் பண்ணினோம்!'' என்றும், ''நம்ம முன்னோர்களைப் பின்பற்றி 'சர்க்கஸ்' வித்தை எல்லாம் செய்ய வச்சிட்டியே...'' என்றும், ஆளாளுக்கு மனதில் இருந்த குமுறலைக் கேள்வி கேட்டும், அவனை நன்றாக அடித்தும், துவைத்தும் வெளியிட்டனர்.

அவனும் அசடு வழிந்த படியே, ''மகா பாரதத்துல, துரோணாச்சார்யா, அவரோட சீடர்களுக்கு வில்லு - அம்பு விடறதுல போட்டி வைக்கும் போது ஒரு மரக் கிளியை மரத்துல கட்டி வச்சு, அதனோட கண்ணைப் பார்த்து அம்பு விடச் சொன்னாராம். எல்லார்கிட்டேயும் குறி பார்க்கு போது, 'உங்களுக்கு என்ன தெரியுதுன்?'னு கேட்டாரா. அதுக்கு மத்தவங்கெல்லாம், 'இலை தெரியுது. கிளை தெரியுது'ன்னு சொன்னாங்களாம். ஆனா, அர்ஜுன்கிட்ட வில்லைக் கொடுத்து உனக்கு என்ன தெரியுதுன்னு கேட்டப்போ, கிளியோட கண்ணு மட்டும்தான் தெரியுதுன்னு சொன்னாராம். அது மாதிரி தான் நானும் 'கேட்'டைப் பத்தியே நினைக்கலை. ஆரம்பத்துல இருந்தே 'கேட்'டை எப்படி ஏறிக் குதிக்கறதுன்னே யோசிச்சுட்டு, காரியத்துலே கண்ணா இருந்துட்டேன். அது திறந்து இருக்கா



இல்லையான்னு பார்க்கறதுக்குத் தோணவே இல்லை. இது தப்பா?'' என்றான்.

''ஏன்டா, இப்படி பண்ணினது இல்லாமா, மகாபாரதத்தை வேற இழுக்குறியா?'' என்று அதற்கும் சேர்த்து அனைவரும் அவனை உண்டு இல்லை என்று பண்ணி விட்டுத்தான் தூங்கச் சென்றனர். இவன் செய்தவற்றைக் கௌதம் வந்தவுடன் முதல் வேலையாக அவனிடம் சொல்லி மறுபடியும் கலாய்த்தனர். இதைத்தான் கௌதம் நண்பர்களிடம் சொல்ல, அவர்களும் கார்த்திக்கைக் கிண்டலடித்துச் சிரித்துக் கொண்டிருந்தனர்.

* * *

இப்படியாக அவர்களின் கல்லூரி வாழ்க்கை இனிமையாகச் சென்று கொண்டிருந்தது. ஒரு நாள் வர்ஷனா, ஜென்னியிடம் பேசியதைக் கேட்ட கௌதம் அசந்து நின்றான். நண்பர்கள் நான்கு பேரும் 'கான்டீனில்' அரட்டை அடித்துக் கொண்டிருந்த போதுதான் வர்ஷனாவும், ஜென்னியும் அங்கே வந்தனர். ஜென்னி முகமெல்லாம் கோபத்துடன் வர்ஷனாவிடம் ஏதோ சொல்லுவதைப் பார்த்த கௌதமின் கவனம், அதன் பின் அவனின் நண்பர்கள் பால் இல்லை. காதைத் தீட்டி அவர்களின் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

''நீ என்னதான் சொல்லு. அவனுங்களைச் சும்மா விட்டது தப்பு தான். நல்லா நாக்கைப் பிடுங்கிக்கிற மாதிரி நாலு கேள்வி கேட்டுட்டு வந்திருக்கணும்!'' என்று பொரிந்தாள் ஜென்னி.

வர்ஷனாவின் நேர் மாறான குணம் ஜென்னிக்கு. எதற்கெடுத்தாலும் சட்டென்று கோபம் வந்துவிடும் அவளுக்கு. அவர்கள் இருவரும் எங்கோ வெளியே

சென்று விட்டு அப்போதுதான் வந்தார்கள். அவர்கள்
திரும்பி வந்த போது சாலையில் சில மாணவர்கள் அவர்
களைக் கலாய்த்து, கிண்டல் செய்தார்கள். இதையெல்
லாம் பார்த்த வர்ஷனா ஒன்றும் பேசாமல் வந்தாள். ஆனால்,
ஜென்னிக்கோ கோபம் சுறுசுறுவென்று ஏறியது. அவளைச்
சமாதானப்படுத்தி, வர்ஷனாதான் அவளை அங்கிருந்து
அழைத்து நேராக 'கான்டீன்' வந்தாள். அப்பொழுதுதான்
ஜென்னி இது மாதிரி பொரிந்து தள்ளிக் கொண்டிருந்தாள்.

''ரிலாக்ஸ் ஜென்னி! நீ கோபப்பட்டு இப்போ என்ன
தான் ஆகப் போகுது? நல்லா யோசிச்சுப் பாரு. அவங்க
இது மாதிரி பொண்ணுங்களைக் கிண்டல் பண்றது எல்
லாம் இன்னும் எவ்வளவு நாளைக்குச் செய்வாங்க? அவங்க
'காலேஜ்' படிச்சு முடிக்கற வரைக்கும்தான். 'காலேஜ்'
முடிச்சதுக்கு அப்புறமா அவங்க வாழ்க்கையைப் பார்த்
துட்டுப் போயிட்டே இருப்பாங்க...'' என்று அவள் முடிக்
கும் முன்னர், ''அப்படீன்னா அவங்க பண்ணினது சரின்னு
சொல்லறியா?'' என்று ஆத்திரத்துடன் கேள்வி கேட்டாள்.

''அவங்க பண்ணறது சரின்னோ இல்லை தப்புன்னோ
சொல்லலை. அவங்க படிச்சு முடிச்சு வேலை கிடைக்
காம, வேலை கிடைச்சும் வேற விதமான பிரச்சனைகளைச்
சந்திக்கும்போது அவங்களுக்குன்னு இருக்கிற ஒரே
சந்தோசம், சுகம் எல்லாமே இந்தக் கல்லூரி வாழ்க்கை
யின் 'மெமரீஸ்' தான். இதை எல்லாம் யோசிச்சு சந்தோஷப்
பட்டுக்குவாங்க. அதை நாம ஏன் அவங்களைத் திட்டிக்
கெடுக்கணும்? அதனால தான் சும்மா இருந்தேன்.
அவங்க நம்ம மனசைப் புண்படுத்தாத மாதிரி, அவங்க
'லிமிட்'டைத் தாண்டாம சும்மா கிண்டல் பண்ணினாங்
கன்னா நான் அப்படித்தான் இருப்பேன். நீ வீணா ஏன்
'டென்ஷன்' ஆகிற? இந்தா, இதைக் குடி!'' என்று



அவளுக்குப் பிடித்த 'பெப்சி'யைக் கொடுத்தாள் வர்ஷனா.

இதை எல்லாம் கவனித்துக் கொண்டிருந்த கௌதம், 'இந்தப் பொண்ணு எப்படி எல்லாம் மற்றவர்களுக்காக யோசிக்கிறா? என்ன ஒரு நல்ல மனசு... எத்தனை பேரு இப்படி எல்லாம் யோசிப்பாங்க...?' என்று வர்ஷனாவின் மனதைப் பற்றி யோசித்து, அவன் மனது அவளிடம் தொலைவதைப் பற்றி யோசிக்காமல் விட்டான்.

சிறிது சமாதானமடைந்த ஜென்னியும் ஒன்றும் பேசாமல், 'பெப்சி'யைப் பருகியவாறே நண்பர்கள் நால்வரும் உட்கார்ந்திருந்த இடத்திற்கு உணவை வாங்கிக் கொண்டு வர்ஷனாவுடன் சென்றாள். அங்கு சென்ற ஜென்னி அவர்களிடம், ''ஹே கைஸ், எப்படி இருக்கீங்க? ஐ அம் ஹங்ரி!'' என்றவாறே அங்கு காலியாயிருந்த நாற்காலியில் அமர்ந்து உணவைக் கொறிக்க ஆரம்பித்தாள்.

அதைக் கேட்ட கார்த்திக்கோ, ''ஓஹ்! ஐ அம் கார்த்திக். நைஸ் டு மீட் யூ!' என்று அவளிடம் கையை நீட்டிக் கூறி அவளை மறுபடியும் கோபப்பட வைத்தான்.

''அடங்கவே மாட்டியா கார்த்திக்? எங்கிருந்து உன்னைப் பிடிச்சாங்க? அப்படியே உன்னைக் கடிச்சுக் குதறிடுவேன், ஜாக்கிரதை!'' என்று மிரட்டினாள்.

''வர்ஷனா, உன்னை மாதிரிதான் உன்னோட பிரெண்டும் அமைதியா இருப்பான்னு பார்த்தா, 'அனிமல் பிளானட்'ல வர்ற மாதிரி இருக்கிறாளே!'' என்று கூறி ஜென்னியைக் குமுற வைத்தான்.

வர்ஷனா - கார்த்திக், வருண் மற்றும் தியானுடன் சகஜமாகப் பழகினாலும் - தன்னிடம் சிறிது ஒதுக்கத்துடன்

தான் பழகுகிறாள் என்று கௌதம் நினைத்துக் கொண்டான். ஆனால், அவனையும் அறியாமலேயே அவனுக்கு மனதில் ஒரு ஆலயம் கட்டி, கும்பாபிஷேகம் நடத்தி, தினமும் அவளைத் தொழுது வந்ததைப் பின்னர்தான் உணர்ந்தான். அவளின் அழகு, மென்மை, மௌனம், சிரிப்பு, குணம் என்று எல்லாவற்றையுமே கொண்டு கௌதமை மீளாச் சலனத்துக்குள் தள்ளினாள் வர்ஷினா. அதையும் கௌதமிற்கு உணர்த்தியது கார்த்திக்தான்.

* * *

அவர்கள் மூன்றாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு நாள் வகுப்பறையில் பேராசிரியை மிகுந்த ஈடுபாட்டுடன் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அனைவரும் பாடத்தைக் கவனித்துக் கொண்டிருந்த பொழுது, திடீரென்று அங்கே வகுப்பின் அமைதியைக் கிழித்துக் கொண்டு 'அலாரம்' அடிக்கும் சத்தம் கேட்டது. அதைக் கேட்டதும் பாடம் நடத்துவதை நிறுத்திவிட்டு, 'என்ன சத்தம்?' என்று விசாரித்தார் பேராசிரியை.

அனைவரும் வாயைத் திறக்காமல் அமைதியாக இருந்ததைப் பார்த்து, அவரே எங்கிருந்து சத்தம் வந்தது என்று ஊகித்து அந்த திசையில் சென்று, கார்த்திக்கிடம் வந்து நின்றார். வந்தவர் அவனிடம், ''என்ன கார்த்திக் பண்ணிட்டு இருக்க? 'கிளாஸ்'ல ஒழுங்கா பாடத்தைக் கவனிக்காம என்ன விளையாட்டு இது?'' என்றார் கோபமாக.

கார்த்திக்கும் ஒன்றுமே அறியாத அப்பாவி போல திருதிருவென்று முழித்துக் கொண்டிருந்தான். அவனின் குழந்தைத்தனமான முகத்தைப் பார்த்துப் பரிதாபப் பட்ட அந்த ஆசிரியை அவனிடம், ''பரவாயில்லை... என்னன்னு சொல்லு. இதெல்லாம் 'காலேஜ்'ல சகஜம்தான். நாங்களும் உங்களை மாதிரி ஸ்டுடெண்டா இருந்து, இது



மாதிரி கலாட்டா எல்லாம் செஞ்சிட்டுத்தானே வந்தோம்!'' என்று தைரியம் ஊட்டினார்.

அவர் கொடுத்த தைரியத்தில் கார்த்திக்கும், ''அதில்லைங்க மேடம், அடுத்து வர 'கிளாஸ்' எனக்கு ரொம்பப் பிடிச்ச 'சப்ஜெக்ட்.' என்னையும் அறியாம உங்க 'கிளாஸ்'ல நான் தூங்கிட்டா அப்புறம் யாரு என்னை எழுப்பறது? எனக்கு இந்த 'கிளாஸை மிஸ்' பண்ணறது எல்லாம் பிடிக்காது. அதனாலதான் அலாரம் வச்சிட்டுத் தூங்கினேன்!'' என்றான் தெம்பாக.

அவன் கூறியதைக் கேட்டதும் வகுப்பறையே கலகலவென்று சிரித்தது. அவர்களை அடக்கிவிட்டு, ''ஏன் கார்த்திக்? என் கிளாஸ்ல தூங்கினதும் இல்லாம நான் கிளாஸ் நடத்துனா தூங்க வைக்கிற மாதிரி இருக்குன்னு வேற என்னைக் கிண்டல் பண்ணறியா? இரு இரு. உன்னை 'எக்ஸாம்' டைம்ல வச்சுக்குறேன்!'' என்று அவனை எரிச்சலுடன் மிரட்டிவிட்டுப் பாடத்தைத் தொடர்ந்தார்.

அவர் சென்ற பின்னர் கௌதம் அவன் முதுகில் ஒரு போடு போட்டு, ''ஏன்டா இப்படி மானத்தை வாங்குற? ஒழுங்கா இருக்க மாட்டியா? எப்போ பாரு, விளையாட்டுத் தானா உனக்கு?'' என்று சலித்துக் கொண்டான்.

''கௌதம், இதெல்லாம் 'காலேஜ்' வாழ்க்கைல சகஜம்டா. எப்போ பார்த்தாலும் இப்படி மௌனச் சாமியாரா இருந்தா 'லைஃப் போர்' அடிக்கும். இருக்கிற வரைக்கும் இப்படி என்ஜாய் பண்ணணும்!'' என்று அதற்கு ஒரு சாக்கு வேற சொல்லித் தப்பித்தான்.

* * *

ஒரு நாள், கார்த்திக் அவசரம் அவசரமாகக் கௌதமிடம் அவர்களுடன் படிக்கும் ஒரு பெண்ணைக் காதலிப்ப

தாகக் கூறி அவனின் இதயத் துடிப்பை எகிற வைத்தான். ''நான் ரொம்ப நாளாவே அந்தப் பொண்ணை விரும்புறேன். ஆனா, அவள்கிட்ட அதை எப்படிச் சொல்லறதுன்னு தெரியாமதான் முழிச்சிட்டு இருக்கேன். இந்த வருஷம் 'வேலன்டைன்ஸ் டே' அன்னக்கி சொல்லலாம்ன்னு இருக்கேன். நீ என்ன நினைக்கற?'' என்று அவனிடம் ஆலோசனை கேட்டு அவனை மேலும் தவிக்க வைத்தான்.

அவனின் கேள்வியில் சிறிது நேரம் தடுமாறியவன் பின் சுதாரித்து, ''என்னைக் கேட்டா நான் என்னடா சொல்லறது? நீ தான் முடிவு பண்ணணும். நீ 'லவ்' பண்ற பொண்ணு யாரு?'' எனக் கேட்டு எச்சிலை விழுங்கினான்.

''எல்லாம் உனக்குத் தெரிஞ்ச பொண்ணு தான். நாளைக்கு 'காலேஜ்'ல காண்பிக்கறேன். இப்போதைக்கு எனக்குத் தூக்கம் வருது!'' என்று தூங்கப் போய் விட்டான். கௌதமிற்கு, அன்றிரவு வெகு நேரம் தூங்க முடியாமல், ஏதோ ஒன்று நெஞ்சை அழுத்துவது போல இருந்தது. 'இது என்ன அவஸ்தை?' என்று நினைத்துக் கொண்டே இருந்தவன், எப்போது தூங்கினான் என்று அவனுக்கே தெரியவில்லை.

மறுநாள் அதிகாலையிலேயே எழுந்து நேரத்தில் கிளம்பிக் கல்லூரிக்குச் சென்ற கௌதமிற்கு அங்கே எதுவுமே ஓடவில்லை. எப்பொழுதுதான் இந்தக் கார்த்திக் அவன் காதலிக்கிற பெண்ணைக் காண்பிப்பானோ என்றிருந்தது. சற்று நேரத்தில் கார்த்திக்கும், வர்ஷனாவைக் காண்பித்து, ''இவதான்டா நான் 'லவ்' பண்ணற பொண்ணு!'' என்றவுடன் அவனின் இதயம் சுக்குநூறாக உடைந்தது.



'அப்படின்னா வர்ஷனா எனக்கு இல்லையா? இவ்வளவு நாளா இவளைக் காதலிச்சிட்டு இருக்கேனா? அவள் எனக்கு இல்லைன்னு தெரிஞ்சவுடனேயே என் மனம் ஏன் இப்படித் தவிக்குது? இதை எப்படி நான் தாங்குவது? பரவாயில்லை... இனி அதைப் பத்தி நாம நினைக்கக் கூடாது. கார்த்திக் என்னோட நண்பன்... அவனின் சந்தோசம்தான் முக்கியம். அவனுக்கு இதைத் தெரியப்படுத்தக் கூடாது!' என்று அவனின் மனம் உழன்று கொண்டிருந்தது.

அவன் கூறியதைக் கேட்டு ஒன்றுமே சொல்லாமல் அவன் தன் உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருப்பதைப் பார்த்த கார்த்திக், ''என்னடா, ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கிற? எப்படி என்னோட சாய்ஸ்? பொண்ணைப் பிடிக்கலையா?'' என்று அவனைக் கேள்வி கேட்டான்.

''ரொம்ப நல்ல சாய்ஸ்!'' என்று கூறிப் பேச்சை முடித்தான் கௌதம்.

அதன் பிறகு வந்த நாட்கள் அனைத்துமே கௌதமிற்கு இருளடைந்ததைப் போலவே இருந்தன. அவனின் இந்த சோகத்தைக் கார்த்திக்குக்குத் தெரியாமல் மறைப்பதில் அரும்பாடுபட்டு வெற்றியும் கண்டான். அப்படித்தான் நினைத்திருந்தான், கார்த்திக் அவனிடம் வந்து ஒரு கேள்வி கேட்கும் வரையில்.

அவனின் சோகத்தை மறைக்க முன்னைவிடப் படிப்பில் அதிகக் கவனம் செலுத்தினான். அவன் எப்போதுமே படிப்பில் ஆர்வமுள்ளவன் என்பதால் வருணும், தியானும் அவனை ஒன்றும் கேட்கவில்லை. ஆனால், இருபத்து நாலு மணி நேரமும் கூடவே இருக்கும் கார்த்திக்கிற்கு இது தெரியாமல் போகுமா?

சில நாட்கள் கழித்து, கார்த்திக் கௌதமிடம், ''கௌதம், வர்ஷனா கிட்ட என்னோட காதலைச் சொல்லறதுக்கு நீ தான் உதவி செய்யணும். செய்வியா?'' என்றான்.

அதைக் கேட்டுப் பதறியவன், ''என்னது நானா? இல்லை இல்லை.. என்னால முடியாது. நீயே செல்லிக்கோ!'' என்று நழுவ முயன்றான்.

''ஏன்டா! ஒரு பிரெண்டுக்கு இதைக் கூடப் பண்ண மாட்டியா? நீ ஏன் சொல்ல மாட்ட...? ப்ளீஸ்... எனக்கு ஹெல்ப் பண்ணுடா!'' என்று கெஞ்சினான்.

''இல்லை கார்த்திக். என்னால முடியாது... என்னை இதுக்கு மேல ஒண்ணும் கேட்காதே!'' என்றான் கௌதம்.

ஆனால், கார்த்திக் விடவில்லை. ''ஏன் கௌதம்? நீ 'லவ்' பண்ணற பொண்ணுகிட்ட போய் என்னோட காதலைச் சொல்லறதுக்கு உனக்குக் கஷ்டமா இருக்கா?'' என்று கேட்டுக் கௌதமை அதிர வைத்தவன், அவன் அதிர்ச்சியில் வாய் திறக்காமல் இருப்பதைப் பார்த்து, ''இப்போக்கூட வாயைத் திறந்து சொல்ல மாட்டியா? உனக்கு என்ன ஒரு அழுத்தம்டா!'' என்றான்.

'அவன் கேட்டது தன் காதில் சரியாகத்தான் விழுந்ததா? நான் காதலிக்கும் பெண் என்றா சொன்னான்?' என்று அவனைப் புரியாமல் பார்த்தான் கௌதம்.

''நீ கேட்டது எல்லாம் சரிதான். நீ வர்ஷனாவை ரொம்ப நாளா விரும்பறேங்கிறது எனக்குத் தெரியும். நீயா வந்து என்கிட்டே சொல்லுவேன்னு பார்த்தா... ம்ஹூம்... சரி! வர்ஷனாகிட்டயாவது சொல்வேன்னு பார்த்தா அதுவும் இல்லை. என்னதான் நீ நினைச்சிட்டு இருக்கிறேன்னு கேட்கத் தான், இப்படி ஒரு 'பிட்'டைப் போட்டேன். அப்பவும் வாயைத் திறந்தியா நீ?'' என்று தன் நண்பனைக் கடிந்து கொண்டான்.



''அதில்லை கார்த்திக்! எனக்கே நேத்து நீ ஒரு பொண்ணைக் காதலிக்கறேன்னு சொல்லற வரைக்குமே புரியலை, நான் வர்ஷனாவை என்னோட மனசுக்குள்ள வச்சிருந்தது. எங்க நீ அவளைத்தான் காதலிக்கறியோன்னு நினைச்சப்போ தான் என் மனசு எனக்கே புரிஞ்சது. ஆமா, நான் அவளை விரும்பறதை எப்படிக் கண்டு பிடிச்சே?'' எனக் கேட்டான் ஆவலாக.

''ஆமா, இது பரம ரகசியம் பாரு...'' என்று அவன் அவனின் பையைத் திறந்து ஒரு காகிதத்தை எடுத்துக் கொடுத்தான். அதில் கௌதம் ஒரு பெண்ணை வரைந்து, அதில் வர்ஷனா என்று எழுதி வைத்திருந்தான். அதைப் பார்த்த கௌதம், ''இது எப்படி உன்கிட்ட கிடைச்சது?'' என்றான் ஆச்சர்யத்துடன்.

''நாம முதல் வருடம் படிக்கும்போது நீ ஒரு நாள் ரொம்ப மும்முரமா நம்ம அறையில உட்கார்ந்து வரைஞ்சிட்டு இருந்த. நான் வந்தவுடனே அதை அப்படியே மறைச்சு வச்சுட்ட. என்கிட்ட என்னத்தை இப்படி மறைக்கிறேன்னு என்னோட மூளையை உபயோகப்படுத்திப் பார்த்ததுக்கு அப்புறம்தான் புரிஞ்சது, உனக்கு அவளைப் பிடிச்சிருக்குன்னு. அப்புறம் நீ அவளைப் பார்க்கறப்போ எல்லாம் மலர்ச்சி அடையறது. எல்லோரிடமும் அதிகமா பேசலைன்னாலும் சகஜமா பழகற நீ, அவள் கூட மட்டும் பேசத் தயங்குவது. இது மாதிரி நிறைய உன்னை ஆராய்ச்சி பண்ணிக் கண்டு பிடிச்சேனாக்கும்!'' என்று காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான்.

பின் அவனே தொடர்ந்து, ''ஆனாலும், நீ வரைஞ்சதை விட நேர்ல வர்ஷனா நல்லா இருக்கா. நல்ல வேளை நீ அவள் பெயரை எழுதி இருந்ததுனால கண்டு பிடிக்க முடிஞ்சது!'' என்று அவன் காலை வாரினான்.

அதற்கு முதுகில் தருந்த பரிசு பெற்ற பின், "நானா எதையும் கேட்க வேண்டாம்ன்னு இத்தனை நாள் சும்மா இருந்தேன். ஆனா, நீ 'டி.வி.'ல வர மெகா தொடர் மாதிரி இழுத்துக்கிட்டே இருந்த. அதனாலதான் பொறுத்தது போதும், பொங்கி எழுன்னு நானே உன்கிட்ட கேட்க வேண்டியதாப் போச்சு. அதனாலதான் கேட்டேன்," என அவனின் கேள்விக்குப் பதிலளித்தான் கார்த்திக். அவனை ஆச்சர்யமாகப் பார்த்த கௌதம், "உனக்கு அப்போவே தெரியுமா? இவ்வளவு நாளா என்கிட்டே இதைக் கேட்காம எப்படி மறைச்ச?" என அவன் மறைத்ததை மறந்து ஏதோ கார்த்திக்தான் மறைத்து விட்டான் என்கிற மாதிரி அவனிடம் சண்டைக்கு நின்றான்.

"உனக்கே இது ஒவராத் தெரியலை? உன்னோட காதலை நான் கண்டுபிடிச்சா, என்னமோ நான்தான் உன்கிட்ட மறைச்ச மாதிரி பேசற. உனக்கு ஒண்ணு தெரியுமா? நான் வர்ஷனா கிட்ட போய்ப் பேசிப் பழகினதுக்குக் காரணமே நீதான். அப்படியாவது உனக்குத் தைரியம் வந்து அவகிட்ட சொல்லுவியான்னு பார்த்தா.. இப்போதான் உனக்கு அவள் மேல இருக்கிற காதலே புரிஞ்சதுன்னு சொல்லற. ம்ம்ம்... சரி! இத்தனை நாள் பொறுத்தது போதும். சீக்கிரமா அவகிட்ட போய்ச் சொல்லு. இல்லைன்னா அப்புறம் இதயம் படத்துல வர்ற முரளி மாதிரி தவிக்கப் போற... சொல்லிட்டேன்," என்று ஆலோசனை வழங்கினான்.

அவனைத் தோளோடு அணைத்த கௌதம், "தேங்க்ஸ்டா கார்த்திக்! உன்னை மாதிரி ஒரு பிரெண்ட் கிடைக்க நான் ரொம்பக் கொடுத்து வச்சிருக்கணும்!" என்றான்.

உடனே கார்த்திக், "யாரு கிட்ட? என்னத்தை?" என்றவுடன், அவன் என்ன சொல்லுகிறான் என்று புரியாமல் யோசித்தவன், அவன் சொன்னதைத்தான் கிண்டல் செய்கிறான் என்று உணர்ந்து, மனம் லேசாக, கார்த்திக்குடன் சேர்ந்து சிரித்தான்.



"சரி கார்த்திக்! நீ சொன்ன மாதிரியே சீக்கிரமா வர்ஷனா கிட்ட என்னோட காதலைச் சொல்லிடறேன்", என்றவனுக்குத் தெரியவில்லை, அந்தக் காலம் சீக்கிரமாக வரப் போவதில்லை என்று!

10

"நெஞ்சத்தில் பொங்கும்
காதலின் உவகையைப்
பஞ்சத்தில் அகப்பட்ட
வார்த்தைகளின் வடிவில்லாமல்
விழிகளால் உணர்த்த முயன்று
சஞ்சலத்தில் தவிக்கிறேன்!
என் காதலை வெளிப்படுத்த
உன் வார்த்தைகளைக்
கடனாய்க் கொடுத்து
என் வாழ்வை வட்டியாக
வைத்துக் கொள்!"

அந்த வாரத்தில் ஒரு நாள் நண்பர்கள் நால்வரும் கல்லூரி முடிந்து அருகிலிருந்த ஐஸ்கிரீம் பார்லரில் அமர்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் வர்ஷனாவும், ஜென்னியும் அவர்களுடன் வந்து இணைந்து கொண்டனர்.

கௌதம் எப்பொழுதும் போல அமைதியாக இருக்க, மற்றவர்கள் பார்வையாளர்களாக, கார்த்திக்கும் ஜென்னியும் வாயால் சண்டை போட்டுக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது ஜென்னிக்கு அவள் கைபேசியில் அழைப்பு வர எழுந்து வெளியே சென்றவள், சிறிது நேரம் பேசிவிட்டு உள்ளே வந்தாள். வந்தவள் அவளுடைய 'பெப்சி கேனை' ஆசையுடன் திறக்க அவளுக்கு 'பெப்சி' அபிஷேகம் நடைபெற்றது. ஜென்னி வெளியில் பேசச் சென்ற பொழுது ஒருவரும் அறியாமல் அவளுடைய 'பெப்சி'யை எடுத்து பலமுறை பலமாகக் குலுக்கி விட்டு வைத்திருந்தான் கார்த்திக். இதை யார் செய்திருப்பார்கள் என்று ஊகித்த ஜென்னி, கார்த்திக்குக்கு வசவுகளால் அபிஷேகம் செய்தாள்.

அவளைச் சாந்தப்படுத்த மறுபடியும் அவளுக்கு ஒரு 'பெப்சி'யை வாங்கிக் கொடுத்தான் கார்த்திக். ஜென்னியும் அவனை முறைத்துக் கொண்டே அவனிடமிருந்து நகர்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

அவளின் கோபத்தைக் குறைக்க எண்ணியவன், ''ஜென்னி, 'பெப்சி' கம்பெனி'ல வேலை செஞ்ச ஒருத்தருக்கு 'ட்ரக் டெஸ்ட்' பண்ணினப்போ, அவரோட ரத்தத்துல என்ன இருந்ததுனால அவரை வேலையை விட்டு அனுப்பிச்சிட்டாங்க, சொல்லு பார்க்கலாம்,'' எனக் கேட்டான்.

''எனக்குத் தெரியாது,'' என்றாள் ஜென்னி பட்டென்று.

சிரித்துக் கொண்டே, ''அவரோட ரத்தத்துல 'கோக்' (கோகெய்னின் சுருக்கம்) இருந்ததுனால!'' என்று அவளைச் சிரிக்க வைக்க முயன்றான். அவள் சிரித்தாளோ இல்லையோ, மற்றவர்கள் சிரித்தார்கள்.

இப்படியே கார்த்திக்கின் அழும்புப் பேச்சை ரசித்துக் கொண்டிருந்தவர்கள் நடக்கவிருக்கும் நேர்முகத் தேர்வுக்குத் தாவி, பின்னர் அவர்களின் வாழ்க்கையின் குறிக்கோளைப் பற்றிப் பேசத் தொடங்கினர்.



கார்த்திக், 'ஒரு மென்பொருள் நிறுவனத்தை நிறுவ வேண்டும்,' என்றான். கௌதம், 'அமெரிக்கா சென்று எம்.பி.ஏ. படிக்க ஆசை!' என்றான். தியானும் வருணும், பெரிதாக ஒன்றும் இல்லை. இருக்கிறதை வைத்து சந்தோசப்பட்டுக் கொள்வதாகக் கூறினர். 'முடிந்தால் மேற்படிப்பு படிக்கலாம். இல்லையென்றாலும் கவலையில்லை!' என்றனர்.

வர்ஷனா, ''உலக அளவுல இந்தியா வளர்ந்திருச்சுன்னு சொல்லிட்டு இருக்கிறோம். இங்க நம்ம தமிழ் நாட்டில நிறையப் பெண்கள் படிச்சிருந்தாலும் கணினி பயிற்சி இல்லாமல் இருக்கறாங்க. உலக அளவுல பார்த்தா இன்னும் கிராமத்துல, ஏன் நகரத்துல கூட எத்தனை சதவிகிதப் பெண்களுக்குக் கணினியை உபயோகப்படுத்தத் தெரியும்? அதான் என்னால முடிஞ்ச வரைக்கும் பெண்களுக்குக் கணினிப் பயிற்சி கொடுக்கணும்ன்னு நினைக்கிறேன். அவர்களும் அதை அவங்களோட முன்னேற்றத்திற்கு எப்படி உபயோகப்படுத்தலாம்ன்னு யோசிப்பாங்க. பார்க்கலாம், எவ்வளவு தூரம் இதைச் செயல்படுத்தப் போறேன்னு!'' என்று தெரிவித்தாள்.

ஜென்னியோ, ''படிச்சதும் கல்யாணம்தான். எதுக்கு 'டைம் வேஸ்ட்' பண்ணி வேலை பார்த்து, அப்புறம் கல்யாணம் பண்ணிக்கிட்டுத் திரும்ப வேற வேலை தேடி... அதுக்கு ஒரேயடியா கல்யாணம் பண்ணிக்கிட்டா அப்புறம் வேலை தேடி ஒரு இடத்துல செட்டில் ஆயிடலாமே. 'லைஃப்'பும் ஜாலியா இருக்கும்!'' என்றாள்.

''அடிப்பாவி! கல்யாணம் என்னமோ உன்னோட பெப்சியைக் குடிக்கற மாதிரி அவ்வளவு 'ஈஸி'ன்னு நினைச்சியா? மாப்பிள்ளை கிடைக்க வேண்டாமா? அது சரி, யாரை யாவது காதலிக்கிறியா?'' எனக் கேட்டான் கார்த்திக்.

''வேற வேலை இல்லை. ஒருத்தனைப் பார்த்துப் பிடிச்சு, அவன் நல்லவனா இல்லையான்னு ஆராய்ச்சி பண்ணி, காதலிச்சு, கல்யாணம் பண்ணறதுக்கு அப்பா - அம்மாகிட்டப் போராடிக் கல்யாணம் பண்ணறதுக் குள்ளே எனக்கு வயசாயிடும். எனக்கு விட்ல பார்க்க ஆரம்பிச்சாச்சு!'' என்றாள்.

''நல்லாத்தானே இருந்தே. எப்போதிருந்து இப்படி லூசு மாதிரி யோசிக்கவெல்லாம் ஆரம்பிச்ச? உன்கூட யாரையும் சேர விடக் கூடாது. அப்புறம் பொண்ணுங் களை ரொம்ப யோசிக்க வச்சிடுவே!'' என்றவன், வர்ஷனா விடம், ''நான் அப்போவே சொன்னேன் இவளோட சக வாசம் வச்சுக்காதேன்னு, கேட்டியா? அவள் உன்னையும் கெடுத்துடுவா!'' என்றான் கார்த்திக்.

அதைக் கேட்ட வர்ஷனா ஒன்றும் பேசாமல் புன்ன கையைச் சிந்த, ஜென்னியோ, ''கார்த்திக், யாரு யாரோட சகவாசம் வச்சுக்கக் கூடாது? எல்லாம் நேரம். அவளை உனக்குத் தெரியறதுக்கு முன்னாடியே எனக்குத் தெரியும். நாங்க தெளிவா யோசிச்சாலும் லூசு மாதிரியா இருக்கு உனக்கு?'' என்று அதற்கும் சேர்த்துச் சண்டை போட்டாள். இவர்கள் சண்டை போட்டுக் கொண்டிருந்த பொழுதே வருணும், தியானும் நேரமாகிறது என்று வீட்டிற்குக் கிளம்பி விட்டனர்.

கார்த்திக்கும் அவன் உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்து கதவருகில் சென்று நின்று கொண்டு, ''ஜென்னி, உனக் கும் 'பாட்டரி'க்கும் பெரிய வித்தியாசம் இருக்கு, தெரி யுமா?'' என்றான்.

அவனைப் பார்த்து ''என்னது, எனக்கும் 'பாட்டரி'க் குமா?'' என்றாள் குழப்பத்துடன்.



''பாட்டரி'க்கு ஒரு 'நெகடிவ் சைடு' இருந்தால் எப்ப வுமே ஒரு 'பாசிடிவ் சைடு'ம் இருக்கும்!'' என்று கூறி விட்டு அங்கிருந்து ஓடிவிட்டான்.

'பெண்களுக்கும், 'பாட்டரி'க்கும் என்ன வித்தியாசம்?' என்ற ஜோக்கைத்தான் அவன் தன்னை வைத்துக் கிண்ட லடித்திருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட ஜென்னி அவனைத் துரத்திக் கொண்டு ஓடினாள்.

தனித்து விடப்பட்ட வர்ஷனாவும் கௌதமும் ஒரு வரை ஒருவர் பார்த்துப் புன்னகைக்க, வர்ஷனா, ''வாங்க, நாமும் கிளம்பலாம். லேட் ஆயிடுச்சு!'' என்றவாறே எழுந் தாள். அவளைப் பின்பற்றி அவனும் வெளியில் சென்று கார்த்திக் மற்றும் ஜென்னியுடன் இணைந்து கொண்டான்.

* * *

கார்த்திக்கிடம் பேசியதில் இருந்து தன் காதலை வர்ஷ னாவிடம் சொல்லத் தக்க தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தான் கௌதம். அப்படியெல்லாம் தக்க தருணம் வராது. நாம்தான் அதன் காதைப் பிடித்துத் திருகி, கையைக் காலைக் கட்டி இழுத்து வர வேண்டும் என்று, கார்த்திக் அவனைச் செல்லமாக மிரட்டி (!) நிறையத் தைரியம் ஊட்டி, அவளிடம் கூடிய விரைவில் தெரிவிக்கு மாறு ஆலோசனை வழங்கினான். அதோடு அவனுக்குப் பலமுறை வர்ஷனாவுடன் தனித்துப் பேசும் சந்தர்ப்பத்தைக் கார்த்திக் ஏற்படுத்திக் கொடுத்தும் கௌதம் வாயே திறக் காமல் இருப்பதையும் சுட்டிக் காட்டி நொந்து கொண்டான்.

கார்த்திக் சொன்னதையே பின்பற்ற நினைத்த கௌத மும் கூடிய விரைவிலேயே அவனுள் இருக்கும் தைரியத்தை எல்லாம் திரட்டி, அது பத்தாது என்று நினைத்து, கார்த் திக்கின் தைரியத்தையும் வாடகைக்கு வாங்கிக் கொண்டு

ஒரு நாள் மாலை கல்லூரி முடிந்து, வர்ஷனாவிடம் போய் நின்றான்.

வர்ஷனா வழக்கம் போல வகுப்புகள் முடிந்து தன் உடைமைகளை எல்லாம் எடுத்துக் கொண்டு விடுதி இருந்த திசையை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். அவளைப் பிடிக்கும் அவசரத்துடன் சென்ற கௌதமைக் கார்த்திக் கட்டை விரல் உயர்த்தி வாழ்த்துத் தெரிவித்து, அவன்தை தங்கள் அறையில் சந்திப்பதாகச் சைகை செய்துவிட்டுக் கண்களாலேயே விடை பெற்றான்.

அரக்கப் பரக்க அவளைப் பிடிக்க ஓடிச் சென்றவன், அவள் அருகில் சென்றவுடன் அதுவரை இருந்த பரபரப்பை மறைக்க ஆழ்ந்த பெருமூச்சு விட்டான். பின் நிதான மாகச் (?) சென்று அவளிடம் இயல்பாகப் பேசினான். அவனைப் பார்த்த வர்ஷனாவும் சிநேகமாகப் புன்னகைத்து வழக்கமான விசாரிப்பிற்குப் பின், கடைசியில் அன்று நடந்த பாடத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தாள்.

அவள் பேசுவதை ஏனோதானோ என்று செவி கொடுத்துக் கேட்டவன், 'இவ்வளவு நேரம் படிச்சது பத்தாதா? இவள் என்ன இப்பவே படிச்சுப் பட்டம் வாங்கிப் பறக்க விடப் போறாளா?' என்று நினைத்தவன், 'ச்சே! என்னோட கவலை எனக்கு. அதை அவள் மேல் திணிக்க நினைக்கிறது தப்பு. நான் சொல்ல வந்த விஷயத்தை எப்படி ஆரம்பிப்பது?' என்று ஏதாவது நூல் கிடைக்காதா அதைப் பற்றி முன்னேறலாம் என்று மண்டையைக் குழப்பி, மின்னலை விட வேகமாக யோசித்துக் கொண்டிருந்தான். அவனின் மின்னல் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாத அவன் மனது, அவனின் கேள்விகளுக்கு விடை தெரியாமல், செய்வதறியாது முழித்துக் கொண்டிருந்தது.



சற்று நேரத்தில், வர்ஷனா, கௌதமின் முகத்துக்கு முன்னால் தன் கைகள் இரண்டையும் தட்டிய பின்தான் அவனுக்குப் புரிந்தது. அவள் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்காமல் அவன் தன் எண்ணத்திலேயே உழன்று, விடை காண்பதிலேயே முனைப்பாக இருந்தது. அதைச் சமாளிக்க எண்ணியவன், ''என்ன கேட்ட வர்ஷனா? சாரி! நம்ம பாடத்தைப் பத்தி ஒரு சந்தேகம். அதைப் பத்தித்தான் நினைத்துக் கொண்டிருந்தேன்!'' என்று கூசாமல் புளுகினான்.

அவனைப் பார்த்து முறுவலித்த வர்ஷனா, ''அப்பாடா! நல்லவேளை இங்கதான் இருக்கீங்க. நான் கூட நீங்க எப்போ இங்கே வருவீங்க, இன்னும் எவ்வளவு நேரம் இப்படிக் காத்திருக்கணும்ன்னு நினைச்சேன். உங்களை எவ்வளவு தடவை கூப்பிடறது? பேசாமக் கிளம்பிப் போக லாமான்னு கூட நினைச்சேன். அப்படி நான் கிளம்பிப் போயிருந்தாலும் நீங்க அதைக் கவனிச்சிருப்பீங்களோ என்னவோ? யாருக்குத் தெரியும்?'' என்று தோள்களைக் குலுக்கினாள் கிண்டலாக.

கௌதமும், ''ச்சே! ச்சே! உனக்காகத்தானே நான் இங்கே வந்ததே. நீ கிளம்பிப் போனா அப்புறம் யார்கிட்ட என் காதலைச் சொல்லறது? இன்னைக்கி என்னோட காதலை உன்கிட்ட சொல்லாம உன்னை இங்கிருந்து நகர விட்டிருவேனா? நீ கிளம்பி இருந்தா கண்டிப்பா நான் பார்த்திருப்பேன்!' என்று அவளின் கேள்விக்குப் பதி லளித்தான், மனதிற்குள் தான்.

அவள் இவனையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்து, அசடு வழிந்து விட்டு, அதை மறைக்க, ''அப் படி எல்லாம் ஒண்ணும் இல்லை. இங்கதான் இருக்கேன்.

என்னோட சந்தேகம் தீர்ந்திடுச்சு... இப்போ சொல்லு எங்க போற? ஹாஸ்டலுக்கா?'' என்று விடை தெரிந்த கேள்வியை அவளிடம் கேட்டு, நான் சகஜமாகத் தான் இருக்கிறேன் என்று அவளுக்குப் புரிய வைக்க முயன்றான்.

அவனின் கேள்வியைக் கேட்டு தலையைக் குலுக்கித் தன் சிரிப்பை அடக்க முயன்றவள், அதில் தோற்று. ''நான் கேட்ட கேள்வியைத் திருப்பி என்கிட்டயே கேட் கறீங்களா? எப்படி எப்படி? இங்கதான் இருக்கீங்களா? ம்ம்...'' என்று இடைவெளிவிட்டு, ''இல்லை கௌதம். ஹாஸ்டலுக்குப் போறதுக்கு முன்னாடி நான் லைப்ரரி போகணும். ஜென்னி வர்றேன்னு சொல்லி இருக்கா,'' என்று அவனின் கேள்விக்குப் பதிலளித்தாள்.

அதைப் பிடித்துக் கொண்டு, ''அட, நானும் அங்க தான் போயிட்டு இருந்தேன்...'' என்று அதுதான் உலக மகா அதிசயம் போலக் கூறியவன், ''வா, சேர்ந்தே போகலாம்,'' என்று அவளுடன் சேர்ந்து நடந்தான்.

''கேம்பஸ் இன்டர்வியூ'வுக்கு ப்ரிபேர் பண்ணிட் டீங்களா? இன்னும் கொஞ்ச நாள் தானே இருக்கு,'' என்றவளிடம், 'ரொம்ப அவசியம். அப்படி இப்படின்னு சுத்திச் சுத்தி படிப்பைப் பத்தி மட்டுமே பேசறாளே... எப்படித்தான் நான் சொல்ல வந்ததைச் சொல்லப் போறேனோ!' என்று மீண்டும் தன் உலகத்தில் சஞ்சரிக்க ஆரம்பித்தவனை,

''கடவுளே! மறுபடியுமா?'' என்று அவள் ஆரம்பித்து முடிக்கும் முன்னர், ''இதுக்கெல்லாமா கடவுளைத் தொந் தரவு செஞ்சிட்டு. பாவம் அவர் 'பிஸி'யா இருப்பார். அவரை விட்டுடலாம்,'' என்றான் கௌதம். தொடர்ந்து, ''அதெல்லாம் நல்லபடியா நடந்துட்டு இருக்கு.



அதுக்குத்தான் இப்போ 'லைப்ரரி' போயிட்டு இருக்கேன்,'' என்று அவசர அவசரமாக அவளின் கேள்விக்குப் பதி லளித்தான். அவனின் பதிலைக் கேட்டுச் சிரித்தவளுடன், அவனும் இணைந்து கொண்டான்.

அவர்கள் பேசியபடியே நூலகத்தை நோக்கி நடந்து செல்ல, அப்பொழுது சில மாணவர்கள் விளையாட்டு மைதானத்தில் கால்பந்து விளையாடிக் கொண்டிருந் தனர். அவர்கள் உதைத்த பந்து வர்ஷனாவின் முகம் நோக்கி வர, அதைப் பார்த்த கௌதம் தன்னையுமறி யாமல் வர்ஷனாவின் கையைப் பற்றிச் சட்டென்று அவனருகில் இழுத்தான். அவனைத் திகைப்புடன் பார்த்த வர்ஷனா பின் உண்மையறிந்து மெல்லப் புன்னகைத்து, ''தேங்க்ஸ் கௌதம்!'' என்றாள்.

பற்றிய கையை விடாமலேயே, அந்த மயக்கத்தி லேயே, ''வர்ஷனா, நான் உன்...'' என்று அவன் கிசுகிசுப் பாக முடிக்கும் முன் அவன் வார்த்தைகளின் சத்தத்தை மீறி அங்கே 'க்ரீச்' என்ற சத்தத்துடன் அவர்களுக்கு அருகில் வந்து நின்ற விலை உயர்ந்த கார் அந்த இனிய சூழலைக் கலைத்தது. அந்தக் காரிலிருந்து ஒருவன் இறங்கி இவர்களை நோக்கி வந்தான். அவர்கள் பேசுவ தற்குச் சந்தர்ப்பம் தராமலேயே அந்தப் புதியவன், ''உன் னைப் படிக்க அனுப்பினா, இப்படித்தான் கண்டவனோட ஊர் சுத்திட்டு, கதை அடிச்சிட்டு இருப்பியா? அதுவும் நடு ரோட்ல இப்படிக் கையைப் பிடிச்சிட்டு நிக்கற அளவுக்கு... உனக்கு என்ன தைரியம்?'' என்றவுடன்தான் சுய உணர்வுக்கு வந்த கௌதம் அவள் கையைப் பட்டென்று விட்டான்.

''உன்னை ஒரு பையனோட சினிமா 'தியேட்டர்'ல பார்த்ததா எனக்குத் தெரிஞ்சவங்க சொன்னாங்க. நான்

கூட அப்போ நம்பலை. நானும் ரெண்டு நாளைக்கு முன்னாடி உன்னை இவனோட ஒரு 'ஐஸ்கிரீம் பார்லர்'ல பார்த்தேன். சரி, ஏதோ '·ஃபிரெண்ட்'டா இருக்கும்னு சமாதானப்படுத்திக்கிட்டேன். ஆனா, இப்படித் தராதரம் தெரியாம மற்றவங்களோட பழகாதேன்னு எத்தனை தடவை உன்கிட்ட சொல்லறதுன்னு நினைச்சுக்கிட்டேன். அப்பவே உன்கிட்ட வந்து பேசணும்னு இருந்தேன். எனக்கு இங்க சென்னையில முடிக்க வேண்டிய வேலை நிறைய இருந்ததுனால அப்போ வர முடியலை.

''இன்னைக்கும் இவனோட தனியா நின்னு பேசிட்டு இருக்கிற. நல்லவேளை, என்னோட வேலைகளை எல்லாம் முடிச்சிட்டு உன்னைப் பார்க்கலாம்னு சொல்லாம கொள்ளாம வந்ததுனால தான் உன்னை இப்படிக் கையும் களவுமா பிடிக்க முடிஞ்சது. அப்படி என்ன பேசிட்டு இருந்த? யாரு இவன்? இவனைக் காதலிக்கிறியா? அப்படி மட்டும் இருந்தது... அழிச்சுடுவேன்!'' என்று படபடவென்று வர்ஷனாவிடம் பொரிந்து தள்ளினான். அந்தப் புதியவன் வேறு யாரும் அல்ல... வர்ஷனாவின் அண்ணன், தினகர்.

''அண்ணா! நீங்க நினைக்கற மாதிரி எல்லாம் இல்லை...'' என்று விளக்கம் அளிக்க முயன்ற வர்ஷனாவை,

''போதும் நிறுத்து! பண்ணறதையும் பண்ணிட்டு. அது இல்லை இது இல்லைன்னு விளக்கம் வேற சொல்லறியா?'' என்று திட்டிவிட்டு, கௌதமைப் பார்த்து, ''ஏன்டா! காலேஜுக்குப் படிக்க வர்றீங்களோ இல்லையோ, இதை மட்டும் கரெக்டா பண்ணுங்க. அதுக்கு என்னோட தங்கச்சி தானா உனக்குக் கிடைச்சா?'' என்றான் கோபத்துடன்.

'ச்சே! இந்த அண்ணன் ஏன்தான் இப்படி ஒண்ணும் தெரிஞ்சுக்காமலேயே கௌதமை இப்படித் திட்ட



றாரோ? அவர் என்ன நினைப்பார்? சில சமயம் ஒண்ணா வெளில போனாலும் என்கிட்ட கார்த்திக் பேசற அளவுக்குக் கூட இவ்வளவு நாள் பேசாம இருந்தவரு, இருந்திருந்து இன்னைக்குத்தான் வந்து மாட்டிக் கொள்வாரா? இந்த அண்ணன் இனி என்னென்ன சொல்லப் போகிறாரோ?' என்று கலங்கியவள், தன் அண்ணனிடம் புரிய வைக்கும் முயற்சியுடன், ''அண்ணா! இவர் கௌதம். என்னோட 'கிளாஸ் மேட்.' அவ்வளவுதான். எங்களுக்குள்ள வேற ஒண்ணும் இல்லை. நம்புங்க அண்ணா!'' என்று மன்றாடினாள்.

''இப்போ இப்படித்தான் சொல்வீங்க. அப்புறமா வந்து நாங்க உயிருக்கு உயிரா காதலிக்கறோம். இவர் இல்லாம என்னால உயிர் வாழ முடியாது அப்படின்னு வந்து வசனம் பேசுவீங்க. இதை எல்லாம் முளையிலேயே கிள்ளி எறியணும். இங்க பாரு, இப்பவே சொல்லிட்டேன், உன்னோட கல்யாணம் என்னோட இஷ்டப்படி தான் நடக்கும். அதுவும் நான் பார்க்கிற மாப்பிள்ளையோட. அதுக்கு முன்னாடி காதல் கீதல்ன்னு வந்தே, உன்னை ஒண்ணும் பண்ண மாட்டேன். இதோ இருக்கானே... இவனைக் கொன்னுடுவேன்!'' என்று அவளிடம் மிரட்டினான்.

பிறகு கௌதமைப் பார்த்து, ''எப்போடா இந்த மாதிரி பணக்கார வீட்டுப் பொண்ணுங்க மாட்டுவாங்க, அவங்களோட மனசை எப்படிக் கலைக்கலாம்னு காத்திட்டு இருப்பியா? ஆள் வேற பார்க்கிறதுக்கு சுமாரா இருக்கிறே. அதனாலே ஒரு பொண்ணு மாட்டினவுடனே காதலிக்கறேன்னு சொல்லி வாழ்க்கையில செட்டில் ஆயிடலாம்னு நினைச்சியா? இதுதானே உன்னோட திட்டம்? அதுவும் பெத்தவங்களை இழந்த பொண்ணு சுலபமா

ஏமாத்திடலாம்ன்னு வேற நினைச்சிருப்பே. நான் இருக்கும் வரை என் தங்கையை நெருங்க விட மாட்டேன். உன் திட்டம் ஒன்னும் பலிக்காது. இனி நீ இவளிடம் பேசவதைப் பார்த்தால், தொலைச்சுடுவேன்... சொல்லிட்டேன்!'' என்று மிரட்டினான்.

இதைக் கேட்ட கௌதம் வாயடைத்துப் போனான். வர்ஷனாவோ, ''அண்ணா! அவர் நீ நினைக்கிற மாதிரி எல்லாம் இல்லை. ரொம்ப நல்லவர். என்னை அவர் காதலிக்கவெல்லாம் இல்லை. ஏன் இப்படி எல்லாம் தப்புத் தப்பா பேசறீங்க? அவருக்கு என்னைப் பத்தி ஒண்ணுமே தெரியாது!'' என்று முடிப்பதற்குள்,

''போதும், நிறுத்து! அவன் ரொம்ப நல்லவன்னு உனக்கு எப்படி அவன்கூட பேசாம, பழகாமத் தெரியும்? என்னை என்ன கேணையன்னு நினைச்சியா, நீ சொல்லறதை எல்லாம் நம்பறதுக்கு? அவன் கூட நீ பேசறதை நான் கொஞ்சம் கூட விரும்பவில்லை. இன்னையோட இவனோட பேசறதை நிறுத்திக்கோ...சொல்லிட்டேன்,'' என்று உறுமினான்.

வர்ஷனா, தவிப்புடன் கௌதமைப் பார்த்துக் கண்களால் அவனிடம் அவசர அவசரமாக மன்னிப்பு வேண்டியவள், ''அண்ணா! உனக்கென்ன, நான் யாரையும் காதலிக்கக் கூடாது.. அவ்வளவுதானே. இதுவரை நான் யாரையும் காதலிக்கவில்லை. இனிமேலும் யாரையும் காதலிக்க மாட்டேன். சத்தியமா சொல்லறேன். என்னை நம்பு. நீ சொன்னபடியே நான் கல்யாணம் பண்ணிக்கிறேன். இவரைத் தப்பா பேசறதை முதல்ல நிறுத்து. 'ப்ளீஸ்' அண்ணா! எல்லோரும் பார்க்கறாங்க!'' என்று மறுபடியும் மன்றாடினாள்.



''சரி! நீ இப்படிச் சொல்றதுனால நான் நம்பறேன். காதல் கீதல்ன்னு வந்தே... அப்புறம் பாரு... தொலைச்சுடுவேன்... அப்பா-அம்மா இல்லாத உன்னைப் பாதுகாத்து ஒரு நல்லவன் கையில பிடிச்சுக் கொடுக்கணும்னு நான் கவலைப்படறது உனக்கு எப்படித் தெரியும்? இது மாதிரி எங்காவது தப்பு நடந்தா என்னைத்தானே எல்லோரும் திட்டுவாங்க. பெற்றோர்கள் இருந்திருந்தா உன்னை இப்படி விட்டிருப்பாங்களான்னு என்னைக் கேள்வி கேட்பாங்க. சரி! வா கார்ல ஏறு. உன்னோட கொஞ்சம் தனியாப் பேசணும். 'ஹாஸ்டல்'ல போய் அனுமதி வாங்கிட்டு வெளியில போகலாம்,'' என்று காரை நோக்கி நடந்தான்.

இவ்வனைத்தையுமே ஒன்றும் புரியாமல் பார்த்துக்கொண்டிருந்த கௌதமிடம், கண்களாலேயே மீண்டும் மன்னிப்புக் கோரிவிட்டு, அவசர அவசரமாகத் தன் அண்ணனின் பின்னால் சென்று காரில் ஏறினாள்.

'கடவுளே! என்ன நடந்தது இங்கே? ஏன் இப்படி நான் என் காதலைச் சொல்ல நினைக்கும் போது இப்படி நடக்க வேண்டும்? வர்ஷனா வேற தன் அண்ணனிடம் அவன் இஷ்டப்படியே கல்யாணம் பண்ணிக் கொள்வதாக வாக்குக் கொடுத்துவிட்டாள். ச்சே! இதற்குத்தான் கார்த்திக் முன்னாடியே சொன்னான். சீக்கிரமா என் காதலை அவளிடம் சொல்லச் சொல்லி.... இப்போ என்ன பண்ணறது?'' என்று யோசித்தவனுக்கு அப்போது தான் மூளைக்கும் பளிச்சென்று இன்னொன்றும் எட்டியது.

'வர்ஷனா பணக்கார வீட்டுப் பெண்ணா? அவளைப் பார்த்தா அப்படித் தெரியலையே? ஆமா, பின்னே நான் பணக்காரின்னு நெத்தியில எழுதி ஒட்டிட்டா இருப்பா? ஆனா, ரொம்பச் சாதாரணமாத்தானே இருந்தா.

எல்லோரிடமும் பாகுபாடில்லாமல் நல்லா இயல்பா பழகினா. அவளும் இதுவரைக்கும் யார்கிட்டேயும் இதைப்பத்தி ஒண்ணுமே சொல்லலையே. அதனால தானே நான் இதைப் பத்தி கொஞ்சம் கூட யோசிக்கலே இல்லை.

'ச்சே! என் காதலுக்கு அவ்வளவுதான் ஆயுளா? இனிப் போய் நான் எப்படி அவளிடம் என் காதலைச் சொல்றது? அப்படியே நான் அவளிடம் சொன்னாலும், என்னைத் தப்பா நினைக்கக்க மாட்டாளா? அவள் என்னைப் பத்தி உயர்வா நினைச்சிட்டு இருக்கிறது எல்லாம் சரிந்து விடுமே. உங்களை இவ்வளவு நம்பினேனே.. நீங்களும் இவ்வளவு தானான்னு கேட்டா.. இல்லை, இதுவரை வாராத காதல், தான் பணக்காரின்னு தெரிஞ்சவுடனே வந்துடுச்சான்னு கேட்டா... ஐயோ! இப்போ என்ன பண்ணறது?' என்று அவனின் மனது மௌனமாகக் கேள்விகளை அடுக்கிக் கொண்டிருந்தது.

எவ்வளவு நேரம் அப்படி மனதிற்குள்ளேயே புலம்பிக் கொண்டிருந்தானோ, கார்த்திக் அவனைத் தேடி வந்து அவனை உலுக்கிய பின்தான் சுய உணர்விற்கு வந்தான். கார்த்திக்கைப் பார்த்தவுடன் அவன் கண்களில் நீர் கோத்துக் கொண்டது.

அதைப் பார்த்துப் பதறிய கார்த்திக், "டேய்! என்னதிது? ஏன் இப்படி ரூமிற்கு வராம இங்க உட்கார்ந்திருக்க? வர்ஷனா உன் காதலை மறுத்துட்டாளா? அதுக்காக இப்படி இடி விழுந்த மாதிரியா உட்காருவே! இவ்வளவு நேரம் ஆச்சு, இன்னும் உன்னைக் காணோமேன்னு தேடிகிட்டு வந்தது நல்லதாப் போச்சு. எந்திரி..." என்று வர்ஷனா, கௌதமின் காதலை நிராகரித்துவிட்டாள் என்று எண்ணி ஆறுதல் கூறியபடியே கௌதமை



அங்கிருந்து அழைத்துச் செல்ல அவன் கைப்பிடித்து இழுத்தான்.

கௌதம் எழுந்த பின்னும் ஒன்றும் பேசாமல் இருப்பதைப் பார்த்த கார்த்திக், "கௌதம், இதுக்கெல்லாம் நீ கலங்கலாமா? போய் உன்னோட காதலை அவளுக்குப் புரிய வைக்கறதை விட்டுட்டு... இது என்ன கோலம்? ஏதாவது பேசுடா..." என்று அவனைப் பேச வைக்கும் முயற்சியில் இறங்கினான்.

அவன் சொன்னதைக் கேட்டு விரக்தியாகச் சிரித்த கௌதம், "கார்த்திக்! நீ நினைக்கிற மாதிரி எல்லாம் என் காதலை இன்னும் சொல்லலை. அப்புறம் எப்படி அவ மறுப்பது?" என்று அவன் முடிக்கும் முன்பே,

"என்னது? இன்னும் நீ வர்ஷனா கிட்ட சொல்லலையா? உன்னை என்னடா பண்ணலாம்? அவ்வளவு படிச்சுப் படிச்சுச் சொன்னேனே. இப்படி சொல்லாம இன்னும் எவ்வளவு நாள் காத்திருக்கிறதா உத்தேசம்? நான் கூட என்னமோ ஏதோவென்று பயந்துட்டேன்.. சரி! வர்ஷனா கிட்டதான் சொல்லலை. அப்புறம் ஏன் நீ இங்கேயே உட்கார்ந்திட்டு இருக்கிற? 'ரூமு'க்கு வந்திருக்கலாமே?" எனக் கேட்க, கௌதம் நடந்தவற்றை அவனிடம் கூறினான்.

"என்னடா சொல்லற? வர்ஷனாவோட அண்ணன் வந்தாரா? இருந்திருந்து அவர் இன்னைக்குத்தான், அதுவும் நீ அவகிட்ட பேசற நேரம் பார்த்துத்தான் வரணுமா? ச்சே!" என்று சலித்துக் கொண்டு, தன் நண்பனைச் சமாதானப்படுத்த எண்ணி, "மனசைத் தளரவிடாதே கௌதம்...சீக்கிரமே உன் காதல் கை கூடும்!" என்றான்.

அதைக் கேட்டவன் பெருமூச்சு விட்டு, "எங்க இனி கை கூடும்? முதல்ல அவள் பணக்கார வீட்டுப்

பொண்ணுன்னு தெரியாம என் மனசை அலைபாய விட்டது என்னோட தப்பு. இப்போ இவ்வளவு நடந்த துக்கு அப்புறம் போய் அவளைக் காதலிக்கறேன்னு சொன்னா அவ சிரிக்க மாட்டாளா? என்னால அவ நினைப் புல தாழ்ந்து போறதைத் தாங்க முடியாது கார்த்திக்!'' என்றவனைப் பாவமாகப் பார்த்தான் கார்த்திக்.

''சரி! ரொம்பவும் இருட்டிச்சு. வா 'ரூமி'ற்குப் போய் மிச்சத்தைப் பேசலாம்,'' என்று கௌதமை அங்கிருந்து கிளப்பிக் கொண்டு போய், அவன் பசிக்கவில்லை என்று கூறியதையும் பொருட்படுத்தாமல் அவனை உண்ண வைத்தப் பின்புதான் மீண்டும் பேச வாய் திறந்தான் கார்த்திக்.

''கௌதம், வர்ஷனாவோட அண்ணன் சொன்னதை வைத்து மனசைப் போட்டுக் குழப்பிக்காம இரு. உன் காதல் உண்மையா இருந்தா அதை அவளுக்கு உணர்த்தக் கண்டிப்பா ஒரு சந்தர்ப்பம் அமையும். அதுவரை கொஞ் சம் பொறுமையா இரு. நான்தான் சீக்கிரமா உன்னோட காதலைப் போய் அவகிட்ட சொல்லச் சொன்னேன். இப்போ நானே இப்படிப் பேச வேண்டியதாகிவிட்டது.''

''கார்த்திக், உனக்கு முன்னாடியே தெரியுமா, வர்ஷனா பணக்கார வீட்டுப் பொண்ணுன்னு?'' என்றான் கௌதம் திடீரென்று.

''தெரியாது கௌதம்! ஆனா, காதல் அப்படியா ஏழை-பணக்காரன்னு பார்த்து வரும்? அது மனசுல இருந்து ஒருத்தரைப் பார்த்தவுடன் வருகிற உணர்வு. அதை அப்படி எல்லாம் மூடி மறைக்க முடியாதுடா. இதுலே உன்னோட தப்பு எதுவும் இல்லை. காதல்ன்னா உடனே எல்லோரும் சம்மதிச்சுடுவாங்களா? சரி! இதைப் பத்தி கொஞ்ச நாளைக்கு நிதானமாக யோசித்து என்ன



செய்யலாம் என்று முடிவு செய்வோம். அதுக்குள்ளே உன்னோட குழப்பமும் ஒரு முடிவுக்கு வரும். இப் போதைக்கு வருகிற 'கேம்பஸ் இன்டர்வியூ'வுக்கு ஒழுங்கா உன்னைத் தயார்ப்படுத்திக்கோ. இப்படி பேய றைஞ்ச மாதிரி இருக்காத. அப்புறம் நான்தான் உன்னை அடிச்சிட்டேன்னு எல்லோரும் நினைச்சுக்குவாங்க...'' என்று தன் தோழனைச் சிரிக்க வைக்க முயன்று, அதில் வெற்றியும் கண்டான் கார்த்திக்.

* * *

மறுநாள் காலை வழக்கம் போல வகுப்புக்குச் சென்ற கௌதமின் கண்கள் பலமுறை வர்ஷனாவைத் தேடி அலைபாய்ந்து ஏமாற்றத்தைத் தழுவின. 'அவளுக்கு என்னவாயிற்று? உடம்பு சரியில்லையோ? ஏன் வர வில்லை? ஏதாவது பிரச்சனையோ? ச்சே! இருந்திருந்து அவள் அண்ணன் வந்து பார்க்கும் போதுதானா அவள் கிட்டப் போய்ப் பேசணும். ஒருவேளை அவளை ஒரு இக்கட்டில் மாட்டிவிட்டோமோ?' பாடத்தைக் கவனிக் காமல் அவன் கவனம் பலவாறாகச் சிதறியது.

அன்று முழுவதும் வராமல் அவனைத் தவிக்கவிட் டவள், அதற்கடுத்த இரண்டு நாட்களும் விடுமுறை என்பதால் கல்லூரிக்கு வராமலேயே மேலும் தவிக்க வைத்தாள். அவள் நூலகம் வருவாளோ என்ற எண்ணத் துடன் அதற்கடுத்து வந்த இரண்டு நாட்களும் , கௌதம் அங்கேயே தவம் இருந்தான். கார்த்திக்தான் அவனைத் தேற்றுவதிலும், சமாதானப்படுத்துவதிலும் பொழுதைக் கழித்தான்.

கௌதமின் தவிப்பை முடிந்தவரை மேலே ஏற்றிய வர்ஷனா, திங்கள் அன்று கல்லூரிக்கு வருகை புரிந்தாள்.

அவளின் முகத்தில் இருந்து கௌதமினால் ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை. உணவு இடைவேளை வரை பொறுத்தவன், 'அவளிடம் சென்று பேசலாமா?' என்று நினைத்தான். 'ஆனா, போய் என்னன்னு சொல்றது? உன்னோட அண்ணன் உன்னை ரொம்பத் திட்டினாரான்னு கேட்டா அது அவங்க குடும்ப விஷயத்துல அனாவசியமா மூக்கை நுழைச்ச மாதிரி ஆயிடும்...' என்று யோசித்துக் கொண்டிருக்கையிலே வர்ஷனா அவனிடம் வந்தாள்.

"கௌதம்! ரொம்பவும் சாரி! என்னோட அண்ணன் இப்படித் திடீர்னு வந்து உங்களைத் தப்பு தப்பா பேசுவார்ன்னு நான் நினைக்கவே இல்லை. அவர் சார்பில் நான் மன்னிப்புக் கேட்டுக்கறேன்", என்று தன் அண்ணனுக்காக அவனிடம் மன்னிப்பை வேண்டினாள்.

அதுவரை யோசித்து வைத்ததெல்லாம் மறந்துவிட, "ச்சே... ச்சே! உன் அண்ணனோட நிலைமையில யாரா இருந்தாலும் அப்படித்தான் பேசுவாங்க... அவர் மேல எந்த தப்பும் இல்லை", என்று அவன் முடிக்கும் முன்பே, "உங்க நல்ல மனசு நீங்க அப்படிச் சொல்லறீங்க. ஆனா, ஒரு தப்புமே பண்ணாத உங்களைத் திட்டின போது உங்க மனசு எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கும் என்று எனக்குப் புரியுது", என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே, 'இல்லை வர்ஷனா! நானும் உன் அண்ணன் சொன்ன தப்பைப் பண்ணறேன். உன்னை மனசாரக் காதலிக்கிறேன். ஆனா, அது தப்பில்லை, என்னோட வாழ்க்கை...' என்று கத்த வேண்டும் போல இருந்தது அவனுக்கு.

ஆனால் அவன் மனதில் பேசுவதைக் கேட்காத வர்ஷனாவோ, "அவர் சொல்லக்கூடாத வார்த்தைகள் எல்லாம்



சொல்லிட்டார். மறுபடியும் மன்னிச்சிடுங்க! என்னால நீங்க கெட்ட பெயர் வாங்க வேண்டாம். ஆனால், இனிமேல் நாம் பழகவும் வேண்டாம். தேவை இல்லாம பேசிக்கவும் வேண்டாம். நான் வரேன்", என்றவள், அவன் பதில் கூறும் முன் அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

அவன் மூளை, அவள் சொன்ன வார்த்தைகளைக் கிரகித்து அதற்கு அர்த்தமும் கண்டுபிடித்து அவளுக்குப் பதில் சொல்ல வாயைத் திறக்கும் பொழுது, அவள் சென்று வெகு நேரம் ஆகியிருந்தது. பெரியதாக ஏதும் பிரச்சனை இல்லை என்பதை உணர்ந்து லேசான அவனின் மனது அவளின் கடைசிச் சொற்களைக் கேட்டு மீண்டும் அதன் மேல் 'டன்' கணக்கில் பாறாங்கல்லை ஏற்றிவைத்ததைப் போல உணர்ந்தது.

'தினமும் பேசவில்லை என்றாலும் பார்க்கும் பொழுதெல்லாம் சிநேகமாக ஒரு புன்னகை, எப்பொழுதாவது மற்ற நண்பர்களுடன் வெளியே செல்லும் பொழுது, அவளும் அவர்களுடன் வருவது, சாப்பிடும் பொழுதும் கிடைக்கும் சந்தர்ப்பத்திலும் அதிகமாகப் பேசவில்லை என்றாலும் ஒன்றிரண்டு வார்த்தைகளின் நலன் விசாரிப்பு என்று அவன் போற்றி வைத்த பொக்கிஷத் தருணங்கள் இனி கிடையாதா?' என்று அவன் ஏங்கினான். அன்றிலிருந்து வர்ஷனாவும் அவள் சொன்னதை இனிதே கடைப்பிடித்துக் கௌதமை மேலும் வாட்டினாள்.

வருணும் தியானும் வர்ஷனா முன் போல அடிக்கடி வந்து பேசுவதில்லை என்பதைக் கவனிக்கவில்லை. கவனித்திருந்தாலும் படிப்பில் கவனம் செலுத்துவதாக எண்ணி இருப்பார்கள். கார்த்திக், ஜென்னி இருவருக்கும் தினகர் வந்து கௌதமைத் திட்டியதைப் பற்றிய உண்மை தெரியுமென்பதால், அதைப் பற்றி ஒன்றும் பேசாமல்

சிறிது காலம் விட்டுப் பிடிக்கலாம் என்று எண்ணி அதையே அமல்படுத்தினர்.

''இதயம் வலிக்கிறது
பாரம் தாங்காமல்!
உயிர் துடிக்கிறது
பிரிவைத் தாளாமல்!
கண்கள் வலிக்கிறது
இமை மூடாமல்!
என்னைப் பிரிந்ததேனடா(டி)?''

## 11

கௌதமின் தவிப்புக்காகக் காலம் ஒரு 'நொடி கூட நின்று தாமதிக்காமல் தன் கடமையைச் செவ்வனே செய்து கொண்டிருந்தது. அனைவரும் பரபரப்புடன் எதிர்பார்த்துக் காத்திருந்த 'கேம்பஸ் இண்டர்வியூ'வும் வந்து, அதில் கௌதம், கார்த்திக், வருண், தியான் மேலும் சில நண்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இனிவரும் கடைசி இரண்டு 'செமஸ்டர்'களையும் நன்றாக முடிக்க வேண்டி அனைவரும் இரவு பகல் பாராமல் உழைத்து வந்தனர். கௌதமும் அதற்குள் நன்றாக யோசித்து ஒரு முடிவிற்கு வந்திருந்தான்.

இந்த அமளி எல்லாம் ஓய்ந்தபின், கார்த்திக் தன் நண்பனிடம் அவன் காதலை வர்ஷனாவிடம் சொல்லு மாறு மீண்டும் ஆலோசனை வழங்கினான்.

''கௌதம்! இப்போ உனக்கு வேலையும் கிடைச் சிடுச்சு. இன்னும் கொஞ்ச மாசத்துல படிச்சு முடிக்கப் போற. இப்போ போய்ச் சொன்னா, நீ எப்படி அவளை வச்சுக் காப்பாத்துவ அப்படின்னு உன்னை யாரும் கேட்க



மாட்டாங்க. அவள் பணக்காரியா இருந்தால் என்ன? அவள் அண்ணனிடம் வாக்குக் கொடுத்தாத்தான் என்ன? போய் உன்னோட காதலைச் சொல்லிப் பாரு. அவளுக் கும் உன்னைக் கண்டிப்பா பிடிக்கும். அதுக்கப்புறம் நடக்க வேண்டியதைப் பத்தி யோசிக்கலாம்,'' என்றான்.

''அது இல்லை கார்த்திக்! நான் இப்போதைக்கு என் னோட காதலை வர்ஷனாகிட்ட சொல்லறதா இல்லை. நான் சொல்லி, அவள் முடியாதுன்னு சொல்லிட்டா என்னால அதைத் தாங்க முடியாது.''

''அவள் அண்ணன் உன்னை மிரட்டினதைப் பார்த்து பயந்துட்டியா கௌதம்? அவர் ஏதாவது உன்னைச் செஞ் சிடுவாரோன்னு பயமா?'' என்ற கேள்வி கேட்டவனைப் பார்த்துச் சிரித்தவன், ''பயம் எல்லாம் இல்லைடா. ஒரு 'காம்ப்ளெக்ஸ்'. அவள் அண்ணன் சொன்ன மாதிரி பணத்துக்காக நான் காதலிக்கறேன்னு வர்ஷனா நினைக் கக் கூடாது அல்லவா?

''அதுவுமில்லாம அவள் அண்ணன் சொன்னதிலேயும் தப்பு இல்லையே. எங்கே பணத்துக்காகத் தன் தங்கையை யாராவது ஏமாற்றி விடுவாங்களோ அப்படிங்கற பயம் நியாயம் தானே? நான் அப்படி இல்லைன்னு புரிய வைக்கிற வரைக்கும் காத்திருக்கணும். இன்னும் கொஞ்ச நாள் போகட்டும். 'எக்ஸாம்' எல்லாம் முடிஞ்சு அப்பா - அம்மாகிட்டப் போய் என்னோட காதலைப் பத்திப் பேசிட் டுத் தான் என்ன முடிவு எடுக்கிறதுன்னு யோசிக்கணும். இப்போதைக்கு முதல்ல நல்லா படிப்பை முடிக்கணும். நான் கண்டிப்பா என்னோட காதலை அவள்கிட்ட சொல்லறேன். நீ சொன்ன மாதிரி எனக்குக் கண்டிப்பா ஒரு 'சான்ஸ்' கிடைக்கும்.''

"லூசாடா நீ? அப்பா - அம்மாகிட்ட கேட்டுட்டா அவளைக் காதலிச்ச? நீ நல்லா படிக்கறது ரொம்ப முக்கியம். நீ நல்லா படிப்பேன்னு தான் உலகத்துக்கே தெரியுமே. அப்புறம் என்ன? ஏன்டா இப்படிப் பேசறே?'' என்று பொரிந்தான் கார்த்திக்.

''கோவப்படாதே கார்த்திக்! காதல் அப்படி எல்லாம் எல்லோர்கிட்டேயும் கேட்டுட்டு, சரியா தப்பான்னு யோசிச்சிட்டு வராது. என்ன பார்க்கற? நீ சொன்னது தான். பார்த்த பார்வையிலே அப்படியே ஒருத்தரைப் பிடிச்சு மீண்டும் மீண்டும் அவளோட வாழணும்ன்னு தோணும். ஆனா, அந்தக் காதலை வெளிப்படுத்தும் போது யோசிக்கலாம்தானே? அதைத் தான் நான் இப்போ பண்ணறேன் கார்த்திக்.

''நான் என்னோட காதலுக்காக அவளோட சந்தோசத்தையும் ஏன் குழி தோண்டிப் புதைக்கணும்? யோசிச்சுப் பாரு. நான் என்னோட காதலை வர்ஷனாகிட்ட சொல்லி அப்புறம் அவளுக்கும் என்னைப் பிடிச்சிருந்தா, அவள் அண்ணன் சொல்லை மீற முடியாம என்னோட காதலையும் ஏத்துக்க முடியாம அவள் தவிக்கறதை என்னால பார்க்க முடியாதுடா.

''அவள் தவிப்பைக் கூட என்கிட்டே காட்டுவாளோ இல்லையோ தெரியலை. என்னோட காதலுக்காக நான் ஏன் அவளைக் கஷ்டப்படுத்தணும்? அப்புறம் நான் அவளைக் கண் கலங்காம பார்த்துப்பேன், உயிராத் தாங்குவேன்னு சொல்லறது எல்லாம் பொய்யின்னு ஆயிடாதா? அவள் எங்கிருந்தாலும் எப்போதும் சந்தோசமா இருக்கணும்.''

''மறுபடியும் நீ லூசுன்னு எனக்குப் புரிய வைக்கிற!'' என்று எரிச்சலுடன் ஆரம்பித்த கார்த்திக், தொடர்ந்து,



''காதல்னா எல்லாம்தான் இருக்கும்... கஷ்டப்படுத்திப் பார்க்காம காதல் எப்படிக் கை கூடும்? நீ வர்ஷனாகிட்ட சொல்லாம எப்படி அவள் உன்னோட காதலைப் புரிஞ்சிக்குவா? அதனால நீ அவள்கிட்ட சொல்லறதுதான் கரெக்ட்'', என்று தணிவான குரலில் முடித்தான்.

''முதல்ல அப்பா-அம்மாகிட்டப் பேசி அவங்க சம்மதம் வாங்கிட்டுப் போய் அவளோட அண்ணன் கிட்ட நேரா பேசச் சொல்லப் போறேன். அப்படி அப்பா - அம்மாவோட போய்ப் பேசினா 'அட்லீஸ்ட்' அவளோட மனசைக் காயப்படுத்தாம இருக்கலாம். அதோட அவளோட அண்ணனும் கொஞ்சமாவது நம்புவார் இல்லையா?''

''அப்படி அவளோட அண்ணன் வேண்டாம்னு சொன்னா என்ன பண்ணுவ?''

''அப்பவும் அவள் அண்ணன்தானே வேண்டாம்னு சொல்லுவார். என்னோட வர்ஷனா இல்லையே. அப்படியே என்னோட காதலையும் அவளுக்கு மறைமுகமா உணர்த்தினது போலவும் இருக்கும். ஆனா, என்னோட காதலை அவளோட அண்ணன்கிட்ட புரிய வைக்க முயற்சி செய்வேன். என் காதலைப் புரிய வைக்க அவர் என்ன சொன்னாலும் செய்வேன்.''

''நீ இப்படி எல்லாம் போய் அவர்கிட்ட சொல்லாத. உன் காதல் உண்மையா இருந்ததுன்னா அவளை மறந்துடுன்னு அவர் சொன்னா என்ன பண்ணுவே? நீ என்ன தான் சொல்லு, வர்ஷனாகிட்ட சொல்லறதுதான் நல்லதுன்னு எனக்குத் தோணுது. சரி! உன் இஷ்டம். ஆனா கௌதம், காதலிக்கற பொண்ணோட மனசைக் கஷ்டப்படுத்தக் கூடாதுங்கறதுக்காக இப்படி எல்லாம் யோசிக்கற நீ, நிஜமாவே 'கிரேட்'... உன்னோட காதலை என்னன்னு சொல்ல! ஆனா, உன்னை மாதிரி எல்லாம்

என்னால இருக்க முடியாதுடா...'' என்று இடைவெளி விட்ட கார்த்திக், ''உன்னோட நல்ல மனசுக்கு நல்லதாகவே நடக்கும்'', என்று வாழ்த்திப் பேச்சை முடித்தான்.

பிறகு வந்த நாட்களில் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் எல்லாம் கார்த்திக் அவன் மனதைக் கரைக்க முயல, கௌதமும் அவன் பிடிவாதத்தைக் கரைக்காமல் எடுத்த முடிவிலேயே உறுதியாக நின்றான்.

கடைசி 'செமஸ்டர்' முடிய நான்கு மாதங்கள் இருக்கும் பொழுது ஒரு நாள் கார்த்திக்கிற்குத் திருநெல்வேலியில் இருந்து அவன் தந்தை உடல் நிலை சரியில்லாமல் இருப்பதாகச் செய்தி வரவும், கௌதமிடம் சொல்லிவிட்டு உடனே ஊருக்குக் கிளம்பினான். அங்கே சென்ற பின், அவன் தந்தை சங்கரன், தனக்குப் பெரிதாக ஒன்றும் இல்லை என்றும், எப்பொழுதும் இருக்கும் 'பிரசர்'தான் வாட்டி வதைப்பதாகவும், இந்த முறை கொஞ்சம் அதிகச் சிரமப்பட்டுவிட்டதாகவும், அதைப் பார்த்துப் பயந்து போய் அவன் தங்கை ஸ்வேதா அவனுக்குத் தெரிவித்துவிட்டதாகவும் கூறினார்.

தந்தைக்குப் பெரிதாக ஒன்றுமில்லை என்பதை அறிந்த பின்தான் கார்த்திக் சற்று ஆசுவாசமடைந்தான். சிறிது நேரம் தந்தையுடனும், தங்கையுடனும் பேசிவிட்டு, தன் நண்பனை அழைத்து விவரத்தைக் கூறியவன், ''வந்ததுதான் வந்துட்டேன், இன்னும் இரண்டு நாள் அவங்களோட இருந்துவிட்டு அப்புறம் கிளம்பி வரேன் கௌதம்'', என்று பேசியை வைத்தான்.

ஆனால், மூன்று நாட்கள் கழித்தும் கார்த்திக் வராமல் போகவே, அவனின் கைபேசிக்கு அழைத்தான் கௌதம். வெகு நேரம் அடித்து ஓய்ந்த பின்னும், பலமுறை



முயன்றும் அதைச் சீண்டுவார் யாருமில்லை என்பதை உணர்ந்து பதற்றமடைந்தான். சிறிது நேரம் பொறுமை காத்தவன் மீண்டும் அழைத்தான். அப்பொழுது கார்த்திக்கின் தங்கைதான் பேசியை எடுத்தாள். அவள் கூறிய விஷயத்தைக் கேட்டு அதிர்ந்தவனுக்கு உலகம் தட்டாமாலை சுத்துவதைப் போல இருந்தது. அவன் உடனடியாகத் திருநெல்வேலிக்குக் கிளம்பிச் சென்றான்.

கௌதமிற்கு அதன் பின் என்ன நடந்தது, எப்படித் திருநெல்வேலிக்கு வந்து சேர்ந்தான் என்பது நினைவிலில்லை. எவ்வளவு விரைவாகச் சென்று நண்பனைப் பார்க்க முடியும் என்பதிலேயே குறியாக இருந்தான். அங்கே வந்தவன் நேராக அங்கிருந்த பிரபல மருத்துவமனைக்குச் சென்றான். அவன் சென்ற பொழுது கார்த்திக்கின் தந்தையும், தங்கையும் அழுதழுது ஓய்ந்து போய் விட்டத்தை வெறித்தபடி அமர்ந்திருந்தார்கள்.

கௌதம் சென்று கார்த்திக்கின் தந்தையின் கைகளைப் பற்றிக் கொண்டு ஆறுதல் கூற முயன்று தோற்றுப் போனான். அவர்களிடமிருந்து விலகி அவசர சிகிச்சைப் பிரிவில் இருக்கும் தன் நண்பனைப் பார்க்கச் சென்றான். படுக்கையில் இருந்த கார்த்திக்கை, மௌனமாகக் கண்ணீர் வழியப் பார்த்தவன், கனத்த மனதுடன் மீண்டும் அவர்களிடம் சென்றான்.

''என்ன ஆச்சு கார்த்திக்கிற்கு? மூணு நாளைக்கு முன்னாடி என்கூடப் பேசி, இன்னும் ரெண்டு நாள்ல திரும்பி வர்றதாச் சொன்னானே'', என்றான் கரகரத்த குரலில்.

அதைக் கேட்ட கார்த்திக்கின் தங்கை மறுபடியும் அழ ஆரம்பித்து, ''நான்தான் என் அண்ணனை இந்த நிலைக்கு ஆளாக்கிட்டேன், நான் 'போன்' பண்ணி வரச்

சொல்லலைனா இப்போ நன்றாகத்தானே இருந்திருப்பான்'', என்றாள் அழுகையினிடையே.

''என்னம்மா நீ? அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லை. கார்த்திக்கிற்கு ஒண்ணும் இல்லை. அவன் சீக்கிரமா நல்லா ஆயிடுவான்'', என்று கார்த்திக்கின் தங்கையைத் தேற்றியவன், அவனையும் சேர்த்துத் தேற்றிக் கொண்டான். அவன் தந்தை சொன்னது அவனை மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

அவர் சொன்ன விவரம்... கார்த்திக் சென்னை கிளம்புவதற்கு முன் தினம், எங்கோ வெளியில் சென்று விட்டு இரவு தன் வண்டியில் வீடு திரும்பிக் கொண்டிருந்தான். அப்பொழுது யாரோ முகம் தெரியாத சிலபேர் வந்து அவனை வழி மறித்து, ஏதோ ஜாதிப் பிரச்சனை காரணமாக அவனைச் சரமாரியாக அடித்து நொறுக்கி, அரிவாளால் வெட்டி விட்டுச் சென்றுவிட்டனர். பின்புதான் தெரிந்தது அவர்கள் தேடி வந்த நபர் வேறு யாரோவென்று. கார்த்திக் 'ஹெல்மெட்' போட்டிருந்ததால் அடையாளம் தெரியாமல் தவறாக நினைத்து அவனை இந்த நிலைமைக்குத் தள்ளிவிட்டனர். வழியில் சென்ற யாரோ கார்த்திக்கைப் பார்த்து இங்கே கொண்டு வந்து சேர்த்தனர். கார்த்திக்கின் தந்தை இதைச் சொன்ன பொழுது கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல் 'ஓ' என்று அழுதான் கௌதம்.

மருத்துவர்கள் இரண்டு நாட்களாக எவ்வளவோ போராடியும் கார்த்திக்கின் உயிரை அவர்களால் பிடித்து நிறுத்த இயலவில்லை. அதற்குப் பிறகு நடந்த அனைத்தையும் ஒரு பைத்தியக்காரனைப் போலப் பார்க்க மட்டுமே கௌதமால் முடிந்தது.



'ச்சே! மனிதர்களுக்கு ஏன்தான் இப்படிக் கொலை வெறியோ? அதில் ஒரு பாவமும் அறியாத இவனைப் போய் இப்படிப் பண்ணிவிட்டார்களே. இவர்களின் உயிர்த் தாகத்தைத் தணிப்பதற்கு மனிதர்களின் உயிர் தான் கிடைத்ததா? யார் மேலேயோ இருக்கும் வஞ்சத்துக்கு என் நண்பனை ஏன் பலிக்கடாவாக்கினார்கள்?' என்று மனதிற்குள் குமுறினான். கார்த்திக்கின் தந்தையையும், தங்கையையும் தேற்றுவதற்கு வழி தெரியாமல் காலம் தான் இதற்கு ஒரே மருந்து என்று எண்ணிக் கொண்டான்.

ஒரு வாரம் கழித்து மறுபடியும் சென்னை வந்த கௌதமை தியானும், வருணும் அவன் அறையில் தனியாக இருக்க விடவில்லை. யாராவது ஒருத்தர் வீட்டில் இருக்கும்படி பார்த்துக் கொண்டனர். அதன் பிறகு வந்த நாட்கள் கௌதமிற்கு ஒரு பிடிப்பில்லாமலேயே கழிந்தது.

வர்ஷனா அவனிடம் வந்து பேசியதோ, ஜென்னி அவனை ஆறுதல்படுத்தியதோ எதுவுமே அவன் கருத்தில் பதியவில்லை. அவன் செய்யும் எந்த ஒரு செயலும் கார்த்திக்கை ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்க, மீதமிருந்த நாட்களில் அவன் எப்படிப் படித்து, எப்படித் தேர்வு எழுதினான் என்பது அந்தக் கடவுளுக்குத்தான் வெளிச்சம். இதில் அவனின் ஆசை, காதல், விருப்பம் என்று அனைத்துமே பின்னுக்குத் தள்ளப்பட்டன.

தேர்வுகள் எல்லாம் முடிந்து அவன் தங்கி இருந்த அறையைக் காலி செய்யச் சென்ற கௌதமுக்குக் கார்த்திக்கின் பொருட்களைப் பார்த்து அழுகை முட்டிக் கொண்டு வந்தது. ஒரு வழியாகச் சமாளித்து அவனின் பொருட்களை எல்லாம் ஒழுங்குபடுத்தி எடுத்துக் கொண்டு, கார்த்திக்கின் பொருட்களையும் ஒழுங்குபடுத்தினான். அப்பொழுதுதான் அவன் எதிர்பாராத ஒரு உண்மையை அறிந்து மேலும் நொந்தான்.

கார்த்திக்கின் பொருட்களை எடுத்து வைக்கும் போது அவனின் 'டைரி' கிடைத்தது. அதைக் கையில் எடுத்து, 'கார்த்திக்கிற்கு டைரி எழுதும் பழக்கம் வேற இருந்திருக்கா என்ன? நான் ஒரு நாள் கூடப் பார்த்ததில்லையே!' என்று யோசித்த பொழுது அந்த டைரியிலிருந்து ஒரு சின்ன வாழ்த்து அட்டை கீழே விழுந்தது. அதை எடுத்து அதன் மேல் வர்ஷனா என்றிருப்பதைப் பார்த்தவன், 'வர்ஷனாவுக்குக் கொடுக்க வாங்கியவன் அவளிடம் கொடுக்க மறந்துவிட்டான் போல', என்று நினைத்த வாறே அதைப் பிரித்தான். பிரித்துப் படித்ததும் அப்படியே அதிர்ச்சியில் உறைந்து போனான்.

அந்த வாழ்த்து அட்டையில்,

**''கண்களில் காட்சியாய்...**

**உயிரில் உயிராய்...**

**உடம்பில் உணர்வாய்...**

**உள்ளத்தில் இதமாய்...**

**எனக்குள் நீ சுகமாய்...**

**சுகமான சுமையாய்ச்**

**சுமக்கத் துடிக்கிறது**

**என் நெஞ்சம்!''**

என்று வர்ஷனா மேலிருந்த காதலை எல்லாம் கவிதை வடிவில் வடித்துக் கையெழுத்திட்டிருந்தான் அவனின் உயிர் நண்பன் கார்த்திக்.

அதைப் படித்தவன் தன் தலையைப் பிடித்துக் கொண்டு அப்படியே கீழே சரிந்து குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தான். அவனே சிறிது நேரம் கழித்து ஏதோ தோன்றியவனாக 'டைரி'யை அவசர அவசரமாகப் புரட்டினான்.



பக்கம் பக்கமாக எதுவும் எழுதாமல் அங்கங்கே சுருக்கமாகச் சில விஷயங்களை மட்டும் எழுதி வைத்திருந்தான் கார்த்திக். அதைப் படித்த கௌதம் தெரிந்து கொண்டது. 'கார்த்திக்கும் வர்ஷனாவைப் பார்த்த நாளில் இருந்து காதலித்ததையும், அதை எப்படியாவது அவளிடம் தெரிவிக்கும் முயற்சியில்தான் அவளிடம் முதலில் நண்பனாகப் பழக எண்ணினான்' என்பதையும்தான்.

எப்படியும் சொல்லி விடலாம் என்று வாழ்த்து அட்டை எல்லாம் வாங்கிக் கையெழுத்திட்ட பின்தான் அவனுக்குத் தன் உயிர் நண்பன் கௌதமும் அவளை விரும்புவது தெரிய வந்தது. அதன் பிறகு கௌதமின் உடைமைகளைச் சோதனையிட்டு, கௌதம் வர்ஷனாவை வரைந்த படத்தைக் கண்டுபிடித்தான். கார்த்திக் வர்ஷனாவைக் காதலிப்பதாகக் கூறியவுடன், கௌதமிற்கு அவள் மேல் காதல் இருந்தும், அவனின் நண்பனுக்காக அதை மறைக்க முயற்சி செய்தான். அவனுக்காகக் கௌதம் இதைச் செய்ய நினைக்கும் பொழுது, தானும் அது மாதிரி செய்வதுதானே ஒரு நல்ல நண்பனுக்கு அழகு என்று தன் காதலை அவன் நண்பனுக்காக மறைத்துக் கொண்டதாகவும், அவனை விடத் தன் நண்பனுக்குத் தான் வர்ஷனா பொருத்தமாக இருப்பதாகவும் டைரியில் எழுதி இருந்தான். மேலும் சில பக்கங்களைப் புரட்டிய போது, ஒரு கவிதை அவன் கண்களில் பட்டு அவன் உள்ளத்தை மேலும் ரணமாக்கியது. அந்தக் கவிதை பின்வருமாறு...

**''நண்பனே,**

**நீ அறியாமலேயே**

**என் காதலை**

உனதாக்கிக் கொண்டாய்!

நான் அறிந்தே

உன் துன்பத்தை

எனதாக்கிக் கொண்டேன்!''

வர்ஷனாவிடம் போய்க் கௌதமின் காதலைப் பல முறை சொல்ல நினைத்து அவனால் இயலாமல் போக, கௌதமிற்காக வர்ஷனாவுடன் தனித்து இருக்கும் பல தருணங்களை உருவாக்கிக் கொடுத்ததாக மேலும் எழுதியிருந்தான் கார்த்திக். அதன்பின் கௌதமிற்குத் தெரிந்த சில சம்பவங்களைக் கிறுக்கி இருந்தான். அவனின் 'டைரி'யைப் படித்ததிலிருந்து ஒன்று மட்டும் தெளிவாகப் புரிந்தது கௌதமிற்கு. யாருமே செய்யாத, செய்ய விரும்பாத ஒன்றை, அதுவும் தன் காதலைத் தனக்காகக் கார்த்திக் விட்டுக் கொடுத்திருக்கிறான் என்று. பிறகு வந்த நிமிடங்கள் எப்படிக் கரைந்தன என்று, வருண் அவனை அழைக்க வரும்வரை, அவனுக்குத் தெரிய வில்லை.

வருணின் உதவியுடன் அனைத்தையும் மூட்டை கட்டிக்கொண்டு கோவைக்குக் கிளம்பிச் சென்ற கௌதம், தன் பெற்றவர்களிடம் இரண்டு, மூன்று நாட்கள் செல வழித்து விட்டு, தன் அத்தை மகளான தீபிகாவைப் பார்க்கப் பெங்களூருக்குக் கிளம்பினான்.

தீபிகாவிற்கு ஒரு வருடத்திற்கு முன்னர்தான் திரு மணம் நடந்தது. சிறு வயதிலிருந்தே அவளிடம் எல்லா வற்றையும் பகிர்ந்து கொள்ளும் கௌதம், தன் காதலைப் பற்றியும் ஏற்கெனவே கோடி காட்டி இருந்தான். ஆனால், திருமணம் முடிந்து சில மாதங்களே ஆன அவளை அடிக் கடி தொல்லை செய்ய விரும்பாததால், வர்ஷனாவின்



அண்ணன் வந்து சென்றதையோ, அதன் பிறகு நடந்ததையோ ஒன்றும் அவளிடம் தெரிவிக்கவில்லை. கார்த்திக்கின் காதலைப் பற்றி அறிந்த பின்னர் யாரிட மாவது இதைப் பகிர்ந்து கொள்ளவில்லை என்றால் அவன் இதயம் வெடித்துவிடும் போல் இருந்தது. அதனால் தான் தீபிகாவிடம் அதைப் பற்றி மனம் திறந்து பேசக் கிளம்பினான்.

* * *

கௌதமைப் பார்த்த தீபிகா 'ஹை ஜம்ப்' குதிக்காத குறையாகக் குதித்து அவனை வரவேற்றாள். ''ஏன்டா! எவ்வளவு நாளா உன்னை வரச் சொல்லிட்டு இருந்தேன்! இப்போ தான் உனக்கு வழி தெரிஞ்சதா? சரி சரி! பரிட்சை எல்லாம் எப்படிப் பண்ணின? உனக்கு வேலை கிடைச் சதுக்கு வாழ்த்துகள்!'' என்று அவனைப் பேச விடாமல் அவளே அவனுக்கும் சேர்த்துப் பேசிக் கொண்டு போனாள்.

அவள் பேசுவதைப் பார்த்த அவள் கணவன், உதய், ''ஏம்மா! அவன் இப்போதான் அவ்வளவு தூரம் பயணம் செஞ்சு வந்திருக்கான். அவனை உள்ளே கூப்பிட்டு காபி கொடுக்கலாம்ன்னு ஏதாவது இருக்கா உனக்கு? இப்படி கேள்வி மேல கேள்வி கேட்டு அப்படியே அவனைத் திருப்பி அனுப்பிடுவ போல இருக்கே!'' என்று அவளை வாரி, கௌதமை உள்ளே அழைத்துச் சென்றான்.

தொடர்ந்து, ''எனக்குத்தான் காபித் தண்ணி கிடைக் கறது இல்ல. நீ வந்த சாக்கிலாவது எனக்குக் கிடைக் கும்ன்னு பார்த்தா, அசையமாட்டேங்கிறாளே...'' என்று சத்தமாக முணுமுணுத்தான்.

அதைக் கேட்டவள், உதயின் முதுகில் செல்லமாக இரண்டு போட்டு, ''தண்ணிதானே? அது கண்டிப்பா

குடம் குடமா கொடுக்கிறேன். பத்தலைன்னா அண்டாவா கொடுக்கிறேன். அதைக் குடிங்க. இல்ல அதுலேயே குளிங்க. யாரு வேண்டாம்னு சொன்னா?'' என்று அவனுக்குப் பதிலடி கொடுத்தாள்.

காலை உணவு முடியும் வரை இப்படி ஒருவர் ஒருவரை வாரிக் கொண்டு இருந்ததைப் பார்த்த கௌதம், உதய் வேலைக்குச் சென்றபின், அவளிடம், ''தீபி, நீங்க ரெண்டு பேரும் இப்படி இருக்கிறதைப் பார்த்தா எனக்கு ரொம்ப சந்தோசமா இருக்கு!'' என்றான்.

''நான் இருக்கிறது இருக்கட்டும். நீ ஏன் இப்படி 'டல்'லா இருக்க? நானும் உன்னை வந்ததிலிருந்து பார்த்துட்டுத்தான் இருக்கேன். என்ன ஆச்சு?'' என்று அவனை நன்கு புரிந்து வைத்திருந்த அவளே பேச்சை ஆரம்பித்து வைத்தாள்.

'எப்படி ஆரம்பிப்பது?' என்று காத்திருந்தவன், அவள் கேட்டதும் மூச்சுக் கூட விடாமல் அனைத்தையும் கொட்டித் தீர்த்தான்.

அவன் கூறுவதை இடையிடாமல் கேட்டுக் கொண்டிருந்தவள், கார்த்திக் இப்பொழுது உயிருடன் இல்லை என்று அறிந்து, கண் கலங்கினாள். அதுமட்டுமல்லாமல் அவன் தன் நண்பனுக்காகச் செய்த தியாகத்தை நினைத்து அவனை உயர்வாக எண்ணி மனம் உருகினாள். அதே சமயம் கௌதமை ஆறுதல் படுத்தவும் மறக்கவில்லை.

கௌதம் சொன்னதைப் பற்றி இரண்டு நாட்கள் மனதிற்குள் அசை போட்டவள், ஒரு முடிவுடன் கௌதமிடம் மறுபடியும் இந்தப் பேச்சை ஆரம்பித்தாள். ''கௌதம்! நீ எப்போ உன்னோட 'லவ்'வை வர்ஷனாகிட்ட சொல்லப் போற?'' என்றவளைப் பார்த்து, ''நீ நிஜமாவா இதைக்



கேட்ட? கார்த்திக் எப்போ அவளை விரும்பினான்னு தெரிஞ்சதோ அப்போவே நான் முடிவு பண்ணிட்டேன். இனிமேல் அவளை நான் நினைக்கறது இல்லைன்னு. அது இனி என் வாழ்க்கையில் முடிஞ்சு போன ஒரு விஷயம்.

''இத்தோட அந்தப் பேச்சை விடு தீபி. நான் என் நண்பனுக்கு என்னை அறியாமலேயே துரோகம் செஞ்சிருக்கேன். நான் அவன்கிட்ட எத்தனையோ முறை வர்ஷனாவைப் பத்தியும், என்னோட காதலைப் பத்தியும் சொல்லி எவ்வளவு மனக்கஷ்டப்படுத்தி இருக்கிறேன் தெரியுமா? ச்சே!! இனி என்னாலே எப்படி அதைச் சரி செய்ய முடியும்? நீயே சொல்லு'', என்றான் கலக்கத்துடன்.

அவன் பேசிய பின் பகுதியை மறந்து அவனின் முன்பகுதிக்கு, பதிலாக, ''என்ன பேசறேன்னு தெரிஞ்சு தான் பேசறியா? உன் மனசைத் தொட்டுச் சொல்லு. இப்போ வர்ஷனா உன் மனசுல இல்லியா? அப்படி இல்லேன்னா நீ அவள் மேல வச்சிருந்தது உண்மையான காதலா இருக்க முடியாது. அது வெறும் ஈர்ப்பா மட்டும் தான் இருக்க முடியும்...'' என்று அவள் முடிக்கும் முன்னர், ஆவேசத்துடன், ''உனக்கு என்ன தெரியும் என்னோட காதலைப் பத்தி? ஈர்ப்பா இருந்திருந்தா நான் ஏன் நாலு வருசமா அவளை நினைச்சுட்டு இருக்கேன்? சும்மா தெரிஞ்ச மாதிரி பேசாதே'', என்று எரிந்து விழுந்தான் கௌதம்.

அவனின் ஆவேசமான பதிலைக் கேட்டுப் புன்னகைத்தவள், ''அப்படி வா வழிக்கு! இதிலிருந்தே உனக்குப் புரியலையா? அவள் இன்னும் உன்னோட மனசுல இருக்கான்னு. நான் சொல்லறதைக் கேளு கௌதம். கார்த்திக் இப்போ இருந்திருந்தா, நீ எடுத்திருக்கும்

முடிவைத்தான் தானும் உன்னை எடுக்கச் சொல்லி இருப்பான். ஆனால், இப்போ நிலைமையே வேற. ஒண்ணு மட்டும் புரிஞ்சிக்கோ, உனக்காகத்தான், உன்னோட காதலுக்காகத்தான் கார்த்திக் அவனோட காதலையே மறைத்துவிட்டான்.

''எதுக்குன்னு யோசிச்சியா? உன்னை விட உன் காதல் மேல அவனுக்குத் தான் நம்பிக்கை ஜாஸ்தி. நீ பாட்டுக்கு இப்போ வந்து உன்னோட காதலை மறக்கப் போறேன்னு சொல்லறது, நீ உன் நண்பனோட நம்பிக்கையைச் சிதைக்கறது மாதிரி ஆகாதா? அப்புறம் அவன் பண்ணின தியாகத்துக்கு அர்த்தம் இல்லாம போயிடாதா? அவனின் அந்த ஆசையை நீ நிறைவேத்தித் தான் ஆகணும். ப்ளீஸ்டா! கொஞ்சம் யோசி...'' என்று சரியான இடத்தில் அவனை மடக்கினாள்.

மேலும் இரண்டு நாட்கள் மறுத்தவன், தீபியின் பேச்சினால், கார்த்திக்கின் ஆசையை நிறைவேற்றுவது தான் சரி என்ற முடிவுக்கு வந்தான். வந்தவன் தீபியையே துணைக்கு அழைத்துக் கொண்டு தன் பெற்றோர்களிடம் அதைப் பற்றிப் பேசச் சென்றான்.

* * *

கோவையில் தன் பெற்றோர்களிடம் பேசச் சென்ற கௌதம், தன் தங்கை மது உறங்கி விட்டாள் என்று உறுதிப்படுத்தியபின், தீபியைத் துணைக்கு வைத்துக் கொண்டு நடந்தவற்றை எல்லாம் கூறினான். அவன் கூறியதைக் கேட்ட அவன் தாய் ராஜேஸ்வரி, ''என்னடா சொல்லற? இப்படியெல்லாம் வந்து தலையில கல்லைப் போடற. உன்னை இதுக்குத்தான் படிக்க அனுப்பினோமா? உனக்குப் பின்னால ஒரு தங்கச்சி இருக்கான்னு



கொஞ்சமாவது யோசிச்சியா?'' என்று எல்லா அம்மாக்களைப் போலப் புலம்பித் தள்ளினாள்.

அவளின் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் மௌனமாக அமர்ந்திருந்த கௌதமைப் பார்த்து, ''ஓஹோ! உனக்கு இப்போ வேலை கிடைச்சிருச்சுங்கிறதுனால தானே நீ இப்படி எல்லாம் யாரைப் பத்தியும் யோசிக்காம உன்னோட வாழ்க்கைதான் முக்கியமா போச்சுன்னு முடிவு எடுத்தியா? எங்களைப் பத்தி கொஞ்சமாவது யோசிச்சியா? எங்களை விடு. உனக்கு அப்புறம் மது இருக்காளே! அவளைப் பத்தி யோசிச்சியா?'' என்று மறுபடியும் ஆரம்பித்தாள்.

''அம்மா! அப்படி எல்லாம் இல்லை. ஏம்மா நீங்களா இப்படிக் கற்பனை பண்ணிக்கறீங்க? அப்படி நான் யாரைப் பத்தியும் யோசிக்காம இருந்திருந்தா இப்படி வந்து உங்ககிட்ட கேட்டுட்டு இருப்பேனா? 'ப்ளீஸ்'மா! என்னைப் புரிஞ்சுக்கோங்க. நீங்களே என்னைப் புரிஞ்சுக்காட்டி அப்புறம் வேற யாரு என்னைப் புரிஞ்சுக்குவா?'' என்று அவரிடம் கெஞ்சினான்.

அவனின் தந்தை ஸ்ரீனிவாசனோ, ''நீ சும்மா இரும்மா. அவனே என்ன பண்ணறதுன்னு தெரியாமத் தானே நம்மகிட்ட வந்திருக்கிறான். அவனைப் போய் இப்படி கேள்வி கேட்டுட்டு...'' என்று அவரின் மனைவியிடம் சொன்னவர், தன் மகனிடம், ''நான் காதலுக்கு எல்லாம் மறுப்புச் சொல்ல மாட்டேன். உனக்கு 'விருப்பம்'ன்னா, நீ சந்தோசமா இருந்தா எனக்கும் சந்தோசம் தான். ஆனா, எனக்கு என்ன 'தயக்கம்'ன்னா...'' என்று இடைவெளி விட்டவர், ''பொண்ணு பணக்கார வீட்டுப் பொண்ணுங்கிற... அதுதான் யோசிக்க வேண்டியதா இருக்கு...'' என்று நிறுத்தினார்.

பின், ''சரிப்பா! இது எடுத்தேன் கவிழ்த்தேன்னு முடிக்கற விஷயம் இல்லை. உன்னோட வாழ்க்கை. அதனால நிதானமா யோசிச்சுத்தான் பதில் சொல்ல முடி யும். எனக்குக் கொஞ்சம் 'டைம்' கொடு'', என்று அவ காசம் கேட்டார்.

அதற்குப் பிறகு வந்த இரு தினங்களில், தீபி கௌதமின் அன்னையைக் கரைக்க, கௌதம் அமைதியாக இருந்து தன் தந்தையைக் கரைத்தான். இரண்டு தினங்கள் கழித்து, அவன் தந்தையே அவனிடம் வந்து, ''சரிப்பா! உனக்காக நான் விசாரிச்சு, போய்ப் பேசறேன். என்ன நடக்குதுன்னு பார்க்கலாம். ஆனா, உனக்கு இப்போ தான் இருபத் தொண்ணு முடியுது. இன்னும் கொஞ்ச நாள் கழிச்சுத் தான் கல்யாணம் எல்லாம் பண்ணிக்கணும்... இப்பவே சொல்லிட்டேன்'', என்று தன் சம்மதத்தை மறைமுக மாகத் தெரிவித்தார்.

ஸ்ரீனிவாசன் அவ்வாறு சொன்னதற்குப் பின், ராஜேஸ் வரி ஒன்றும் சொல்லவில்லை என்றாலும், கிடைக்கும் சந்தர்ப்பத்தில் எல்லாம் ஏதாவது முணுமுணுத்துக் கொண்டேதான் இருந்தார்.

மறுப்பு எதுவும் சொல்லாமல் அவன் தந்தையாவது சம்மதித்து விட்டார் என்றவுடன் தீபியும் அவனிடம் விடைபெற்று ஊருக்குக் கிளம்பிவிட்டாள். அவள் கிளம் பிய அன்று மதியம், கௌதம் சென்னையில் இருந்து எடுத்து வந்த, பல நாட்களாகப் பார்க்காமல் விட்டிருந்த, அவன் பெயரில் வந்திருந்த தபால்களை எல்லாம் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டிருந்தவன், ஒரு திருமணப் பத்திரிகையைப் பார்த்து, 'யாருக்குக் கல் யாணம்?' என்று யோசித்துக் கொண்டே பிரித்தான்.



மணமகள் பெயரைப் பார்த்தவனின் இதயம் சுக்கு நூறாக உடைந்தது. திருமணத் தேதியைப் பார்க்கத் தன் கண்களை அலையவிட்டவன், தேதி அச்சிட்ட இடத்தில் நிலைகுத்தி நின்றான். பின், அவன் விரல்கள் தாமாகவே அதைத் தடவிப் பார்த்தனவோ? இல்லை, அழிக்கப் பார்த்தனவோ? ஏனெனில், அது வர்ஷனாவின் திருமண அழைப்பிதழ். திருமணம் முடிந்து இரண்டு தினங்கள் ஆகிவிட்டிருந்தன.

12

''தூண்டில் – வலை
இடையில் மீன்
சிக்குவது எதில்?
நடுவில் வந்து
கொத்திச் சென்றது கொக்கு!
இது தான் இயல்போ?''

வர்ஷனாவிற்குத் திருமணம் முடிந்துவிட்டது என்ற அதிர்ச்சியைச் சுத்தமாக எதிர்பார்க்காதவன் பேச்சற்றவ னாகி அந்தப் பத்திரிகையையே, அவன் அன்னை வந்து அவனைச் சாப்பிட அழைக்கும் வரை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு ஓவென்று கதறி அழ வேண்டும் போல இருந்தது. ஆனால், தன் அன்னையின் முன் அவ்வாறு செய்தால் பயந்துவிடுவார் என்று எண்ணியவன் தன் அன்னையிடம் பசிக்கவில்லை என்று கூறிவிட்டு நேராகத் தன் அறைக்குச் சென்று மனப்பாரம் நீங்கும்(?) வரை அழுது தீர்த்தான்!

தீபிகா பெங்களூருக்குப் போய்ச் சேரும்வரை காத் திருந்தவன், அவளைக் கைப்பேசியில் அழைத்து விஷயத்தைக் கூறினான். தீபிகாவும் இதைச் சற்றும்

எதிர்பார்க்கவில்லை. 'ச்சே! இந்தக் கௌதமுக்கு ஏன் தான் இப்படி எல்லாம் நடக்குதோ? பாவம் அவன்...' என்று அவளால் மனதிற்குள் பரிதாபம் மட்டுமே பட முடிந்தது.

விஷயம் அறிந்த அவன் பெற்றோர்களும் அவனைச் சமாதானப்படுத்தி, "இன்னார்க்கு இன்னார் என்று எழுதி வைத்தானே ஆண்டவன் அன்று'ன்னு சும்மாவா சொன்னாங்க. நம்ம தலையில என்ன எழுதி இருக்கோ அப்படித்தான் நடக்கும். நீ உன் மனசை இதற்காகத் தளரவிடக் கூடாது. இப்போதான் உனக்கு இருபத்தோரு வயசு ஆச்சு. இன்னும் வாழ்க்கையில நிறையக் கஷ்டங்களைச் சந்திக்க வேண்டி வரும். இதை ஒரு பாடமா எடுத்துக்கிட்டு இப்பவே தயார்ப் படுத்திக்கோ கௌதம்", என்று அவனைத் தேற்றுவதில் முனைந்தனர்.

அதற்கு வழி செய்யும் விதமாகச் சில மாதங்களில் கௌதமுக்கு வேலைக்கான உத்தரவும் வர, அவன் சென்னை சென்று பயிற்சிக் காலத்தை முடித்துவிட்டு வேலைக்கெனப் பெங்களூருக்குக் கிளம்பிச் சென்றான். பல அதிர்ச்சிகளிலிருந்து மீள அவனின் புது வேலை மிகவும் துணை புரிந்தது. அதுமட்டுமல்லாமல் வருணும், தியானும் அவனுடனே இருந்ததால் முன் போல் இல்லை என்றாலும் ஓரளவுக்கு இயல்பான நிலைக்குத் திரும்ப முயன்றான். அவர்களுக்கு இவனின் காதல் பற்றித் தெரியாது. கார்த்திக்கின் பிரிவினால் தான் கௌதம் இவ்வாறு இருக்கிறான் என்று நினைத்துக் கொண்டார்கள். அதனால் அவர்களும் தங்களால் இயன்றவரை இவனை மகிழ்விக்க முயன்றனர்.

இதற்கிடையே கௌதமும் மாதா மாதம் திருநெல்வேலிக்குச் சென்று கார்த்திக்கின் தந்தையையும், தங்கையையும் பார்த்துவிட்டு வந்தான். நடுவில் ஒரு



தரம் சென்ற பொழுது தான் ஸ்வேதாவின் திருமணத்தைப் பற்றி சங்கரன் பேச்செடுத்தார். அவளுக்கு ஒரு வரன் வந்திருப்பதாகவும் மாப்பிள்ளை நல்ல வேலையில் இருப்பதாகவும் தெரிவித்தார். ஆனால், ஸ்வேதா தன் தந்தையைத் தனியே விட்டுவிட்டுப் போக விருப்பமில்லை என்று தெரிவித்து விட்டதாகக் கூறிக் கவலைப்பட்டார். கௌதம்தான் அவளைச் சமாதானப்படுத்திச் சம்மதிக்க வைத்து கார்த்திக் ஸ்தானத்தில் இருந்து திருமணத்தைச் சிறப்பாக நடத்தி வைத்தான்.

திருமணத்திற்குப் பின் ஸ்வேதாவும் தன் தந்தையை அவளுடன் டெல்லிக்கு அழைத்துச் சென்றுவிட்டாள். அவளுக்கு இப்பொழுது இரண்டு குழந்தைகள். மூத்தவன் பையன், பெயர் கார்த்திக். அடுத்தது ஒரு பெண், பெயர் தியா. நடுவில் ஒரு தரம் கௌதம் அமெரிக்காவில் இருந்து வந்தபின் டெல்லி போய் அவர்களைப் பார்த்து விட்டு வந்தான். இப்பொழுதும் அடிக்கடி இவனைப் பேசியில் தொடர்பு கொள்வார்கள் கார்த்திக்கின் தங்கையும், தந்தையும்.

"கார்த்திக் என்னை விட்டுப் போனதும் என்னோட பாதி உயிர் போயிடுச்சு. வர்ஷனாவும் எனக்கு இல்லேன்னு தெரிஞ்சதும் மிச்ச உயிரும் போயிடுச்சு. இதெல்லாம் நடந்து முடிஞ்ச பிறகு ஒரு வருஷம் வேலை செஞ்சிட்டு அப்புறம் நான் படிக்க அமெரிக்கா வந்துட்டேன். அப்புறம் தான் என் வாழ்க்கையில என்ன நடந்ததுன்னு உனக்குத் தெரியுமே. எனக்கு முன்பெல்லாம் இது மாதிரி ஒரு 'கம்பெனி' ஆரம்பிக்கணும்ன்னு எண்ணமே இல்லை. எம்.பி.ஏ. படிச்சிட்டு அப்படியே அங்கேயே ஒரு பெரிய 'கம்பெனி'யிலே வேலைக்குச் சேரலாம்ன்னு தான் நினைச்சேன். ஆனா, கார்த்திக்கோட இந்தக் கனவை யாவது நிஜமாக்கலாம்ன்னு தான் நீ வந்து என்கிட்ட

கேட்டப்போ உடனே சரின்னு சொன்னேன். இப்படியே அஞ்சு வருஷம் ஓடிடுச்சு பாலா'', என்று நிகழ் காலத்தில் நிறுத்தினான் கௌதம்.

சற்று நேரம் பேச்சற்றவனாகி அமர்ந்திருந்த பாலா, பின் சுதாரித்து, ''கௌதம்! இதை நான் சுத்தமா எதிர் பார்க்கலை! கார்த்திக்கைப் பத்தி என்கிட்ட முன்னாடி சொல்லி இருக்கிற தான். ஆனா, நீயும் அவனும் இவ் வளவு 'க்ளோஸ்'ன்னு நான் நினைக்கலை. எப்படிடா உனக்குள்ள இத்தனை நாளா இவ்வளவு ரணத்தையும் வச்சுக்கிட்டு, மனசுல ஊமையா அழுதிட்டு, எங்களுக் காக வெளில சிரிச்சுப் பேசிட்டு இருந்த? இது தெரியாம நான் வேற உனக்குக் காதல் பத்தி என்ன தெரியும்னு உன்னைக் கிண்டல் வேற பண்ணியிருக்கிறேன். என்னை மன்னிச்சிடு!'' என்று எழுந்து சென்று கௌதமின் தோள்களைப் பற்றி அணைத்துக் கொண்டான்.

''ச்சே! பாலா... என்னதிது? நீ என்ன வேணும்னா இப்படிச் செஞ்ச? அதை விடு. உனக்கு ஒண்ணு தெரியுமா? நீ பண்ணற சேட்டைகளெல்லாம் பார்க்கும் போது, எனக்கு கார்த்திக் பண்ணற மாதிரியேதான் இருக்கும். அவனும் உன்னை மாதிரி தான் எப்போவுமே சிரிச்சிட்டே இருக்கணும்ன்னு சொல்வான். அதனாலேயே எனக்கு உன்னை ரொம்பப் பிடிக்கும். எனக்கு உன்னை மாதிரியோ இல்லை கார்த்திக் மாதிரியோ பேச வராது. அதனால தான் நீ பேசறதை எப்பவும் நான் ஒரு சிரிப்போட கேட்டுக் குவேன்.

''கார்த்திக் கலங்கி ஒரு நாள் கூட நான் பார்த்ததில்லை. ஆனா, நான் வர்ஷனாவைக் காதலிக்கறதைப் பத்தி தெரிஞ்சவுடனே அவனுக்கு எவ்வளவு அதிர்ச்சியா இருந்திருக்கும்! அந்தக் கலக்கத்தைக் கூட என்கிட்டே



அவன் காட்டலே. அவன் மாதிரி ஒரு நண்பன் கிடைக்க நான் அதிர்ஷ்டம் பண்ணியிருக்கணும். அதே சமயத்துல அவனை இப்படி இழந்ததற்கு ஏதோ ஒரு பாவமும் பண்ணியிருக்கணும். அவனோட நினைவுகள் என்னோட மனசுல இன்னும் பசுமையா இருக்கு. பாலா! எல்லார்கிட் டேயும் நட்புக்கு இலக்கணம் யாருன்னு கேட்டா மகாபாரதத்துல வர்ற கர்ணன்னு சொல்வாங்க. ஆனா, நான் என்னோட கார்த்திக்கைத்தான் சொல்வேன்'', என்றான் கண்கள் கலங்கியவாறு.

அவன் சொன்னதைக் கேட்டு நெகிழ்ந்த பாலா அவனை மீண்டும் தோளுடன் அணைத்து அவன் முதுகைத் தட்டிக் கொடுத்து விடுவித்தான். பின், ''என்னைக் கார்த்திக் மாதிரி நினைச்சதுக்கு ரொம்ப தேங்க்ஸ் கௌதம்!'' என் றான் நெகிழ்ச்சியுடன்.

''டேய் பாலா! சும்மா இருடா'', என்றவன், ''அப்போ தான் பாலா, நான் உணர்ந்தேன். இதுவரைக்கும் நான் யாருக் காகவும் எதுவுமே செஞ்சதில்லைன்னு. அதுக்கப்புறம் நான் ஒரு முடிவெடுத்து, 'அட்லீஸ்ட்' நண்பர்களுக்குப் பிரச்சனைன்னு ஒண்ணு வந்தா அதைத் தீர்க்க என்னால எவ்வளவு முடியுமோ அவ்வளவு முயற்சி செய்யணும்ன்னு, அதையேதான் இது நாள்வரை செஞ்சிட்டும் இருக்கேன். அப்படி செய்யும் போது கார்த்திக் என்னைப் பார்த்துச் சிரிக்கிற மாதிரியே இருக்கும். ஒரு நண்பன் எப்படியெல்லாம் இருக்கணும்ன்னு கார்த்திக் எனக்குப் புரிய வச்சானோ, அதே மாதிரி வர்ஷனாவோட அண்ணன் எப்படி ஒரு அண்ணனா இருக்கக் கூடாதுன்னும் எனக்குப் புரிய வச்சார். அதிலிருந்துதான் மது எது சொன்னாலும் என் காது ஒட்டையானாலும் பரவாயில்லைன்னு காது கொடுத்துக் கேட்க ஆரம்பிச்சேன்'', என்றான்.

அவன் சொன்னதைக் கேட்டுச் சிரித்த பாலா, ''மது இதைக் கேட்டா உன்னை உண்டு இல்லைன்னு பண்ணிடுவா. சரி! இப்போ இனி அடுத்து என்ன பண்ணப் போற?'' என்றான்.

''முதல்ல வர்ஷனாவைக் கூப்பிட்டு பேசப் போறேன். அதுக்கு முன்னாடி அவள் இன்னும் சிவா சொன்ன இடத்திலதான் வேலை செய்யறாளான்னு கண்டுபிடிக்கணும்'', என்று அவன் திட்டத்தைக் கூறினான்.

''எல்லாம் நல்லதா நடக்கும் கௌதம். கவலையே படாத!'' என்று கௌதம் சில வாரங்களுக்கு முன் அவனிடம் சொன்ன அதே வார்த்தைகளை அவனிடம் திருப்பிப் படித்தான் பாலா.

மனதில் இருந்த பாரம் சிறிது குறைந்ததைப் போல உணர்ந்த கௌதமும், அவன் சொன்னதைக் கேட்டுச் சிரித்துவிட்டு, ''சரிடா! அம்மா காத்திட்டு இருப்பாங்க. இன்னைக்கு எங்கேயோ வெளில போகணும்ன்னு சொன்னாங்க. நான் கிளம்பறேன். மிச்சத்தை அப்புறம் பார்க்கலாம்'', என்று கிளம்பினான்.

''ஆமா கௌதம்! நீ வந்து ரொம்ப நேரம் ஆச்சு. கிளம்பு... 'பை'!'' என்று கூறி வழி அனுப்பிவைத்தவன், கௌதம் அவனிடம் தன் கடந்த கால வாழ்க்கையைப் பற்றிக் கூறுமுன் சொன்னதை மீண்டும் அசை போட்டான்.

''வர்ஷனாவிற்கு வேறு யாரோ ஒருத்தருடன் கல்யாணம் ஆயிடுச்சு. அதனால தான் என்னோட காதலைப் பத்தி யார்கிட்டேயும் சொல்லலை, எதுக்கு வீணா கல்யாணமான பொண்ணைப் பத்தி தேவையில்லாமல் பேசணும்ன்னு. ஆனா, இப்போ தான் எனக்கு ஒரு விஷயம் தெரிஞ்சது. வர்ஷனாவோட கணவர் இறந்து போய் மூன்று வருஷம் ஆயிடுச்சுன்னு'', என்றான் கௌதம் வேதனையுடன்.



கௌதம் சொன்னதைக் கேட்ட பாலா, '''வாட்'? நீ என்ன சொல்லற கௌதம்? வர்ஷனாவோட கணவர் இறந்துட்டாரா? எப்படி?'' என்றான் நம்பமுடியாமல்.

''ஆமாம்! எனக்கே இப்போ ஒரு வாரத்துக்கு முன்னாடிதான் இந்த விஷயம் பத்தித் தெரியும். நான் வர்ணாவோட கல்யாணத்துக்குப் போயிட்டு திரும்பி வரும்போது என்னோட 'ஜுனியர்' சிவாவை 'ரயில்வே ஸ்டேஷன்'ல பார்த்தேன். அவன் தான் இந்த விஷயத்தை என்கிட்டே சொன்னான். அவளுக்குக் கல்யாணம் ஆனதும் அப்புறம் அவள் சந்தோசமா இருந்தா போதும்ன்னு அவளைப் பத்தின விஷயத்தையே நான் யார்கிட்டேயும் பேசுவது இல்லை. அதனால தான் இதைப் பத்தி தெரியாம போயிடுச்சு.

''நாங்க வேலைக்குச் சேர்ந்தவுடனே, ஜென்னிக்கும் கல்யாணம் ஆகி அமெரிக்கா போயிட்டா. கொஞ்ச நாள் தொடர்பு இருந்தது. அப்புறம் அப்படியே விட்டுப் போயிடுச்சு. அவளோட பேசினா ஏதோ ஒரு வகைல வர்ஷனாவை ஞாபகப்படுத்திட்டு இருப்பான்னு நானும் பெருசா அக்கறை எடுத்துக்கலை. இப்போ அது தப்புன்னு புரியுது. இல்லைன்னா அவளாவது இதைப் பத்தி என்கிட்ட சொல்லி இருந்திருப்பா.

''வர்ஷனாவோட கணவர் நிறையக் குடிச்சிட்டு கார் ஓட்டியிருக்கார் போல. அப்படியே விபத்துக்குள்ளாகி இறந்துவிட்டார். சிவாவுக்கு 'பேப்பர்' வழியா இதைப் பத்தி தெரிய வந்திருக்கு. எனக்கு இந்த விஷயத்தைக் கேள்விப் பட்டதிலிருந்து வர்ஷனா இத்தனை நாட்களா பட்ட வேதனையும் வலியும்தான் தெரிஞ்சது. யாருக்குமே இந்த மாதிரி ஒரு நிலைமை வரக் கூடாதுன்னு பொதுவா நினைப்போம். ஆனா, நாம காதலிச்ச பொண்

ணுக்கே இந்த நிலைமைன்னு தெரியறப்போ மனசு எவ்வளவு வேதனைப்படுகிறது! என்னால தாங்க முடியலை பாலா. நான் வர்ஷனாவோட மனசைக் கஷ்டப்படுத்தக் கூடாதுன்னு நினைச்சு கடைசியிலே அதைத்தான் செஞ்சிருக்கேன். அப்பவே குழப்பிக்காம சீக்கிரமா ஒரு முடிவு எடுத்திருந்தா இந்த சங்கடங்களை எல்லாம் தவிர்த்திருக்கலாம் அல்லவா?'' என்று பாலாவுக்குத்தான் விடை தெரியும் என்பது போல அவனிடம் கேட்டான்.

''கௌதம்! இதுல உன்னோட தப்பு ஒண்ணும் இல்லை. அப்போ இருபது வயசுப் பையனுக்கு உரிய 'மெச்சூரிட்டி' தான் உனக்கு இருந்திருக்கும். அதுவும் கார்த்திக்கும் வர்ஷனாவை விரும்பியிருப்பது தெரிஞ்சதும் உனக்கு முடிவு எடுப்பதிலே இன்னும் கஷ்டமா இருந்திருக்கும்'', என்று நண்பனைத் தேற்ற முயன்றான்.

''பாலா! எனக்கு ஒரு வருத்தம் என்னன்னா இரண்டு தடவை வர்ஷனா என்னைப் பார்த்துப் பேசும் சந்தர்ப்பம் கிடைச்ச போதும், அவ என்கிட்டே இந்த விஷயத்தை மறைச்சுட்டா. நானும் அவள் சந்தோசமா இருக்கான்னு நினைச்சிட்டு இருந்தேன்.

''அவளை நான் ஊட்டியில் பார்த்தப்பவும் சரி, 'கேரியர் எக்ஸ்போ' அப்போ பார்த்தப்பவும் சரி, வர்ஷனா இங்க தான் கோவையிலேயே இருந்திருக்கா. ஆனா, அவள் ஏன் கோவைக்கு வேலைக்கு வந்தான்னு தான் எனக்குப் புரியலை. 'கேரியர் எக்ஸ்போ'வுக்கு வந்திருந்தப்போ, அவ வேலை செய்யற கம்பெனி அங்கே ஒரு 'ஸ்டால்' போட்டிருந்தது. அதுக்குத்தான் வந்திருக்கா. நான் 'போன்'ல கூப்பிட்டுப் பேசும் போது கூட செங்கல் பட்டுக்குப் போயிருக்கேன்னு பொய் வேற சொல்லியிருக்கா. அதுவும் ஏன்னு புரியலை. சரி. அவளுக்கா சொல்



லத் தோணலைன்னாலும், நான் கேட்டேனே - 'போன்'ல பேசும் போது உன் கணவர் எப்படி இருக்கிறார்ன்னு... அப்பொழுதாவது சொல்லி இருக்கலாமே?'' என்றான் வருத்தம் தேக்கிய குரலிலும், கலங்கிய கண்களுடனும்.

''ஒரு வேளை எல்லோர் முன்னாடியும் அதைச் செல்லறதுக்குக் கஷ்டமா இருந்திருக்கும். இல்லை, நடந்து முடிஞ்சதைப் பத்தி எதுக்கு உன்கிட்ட சொல்லிட்டு இருக்கணும்ன்னு நினைச்சிருப்பாங்க. சரி! இதைப் பத்தி தெரிஞ்சதும் நீ அவங்களைக் கூப்பிட்டுப் பேசினியா?'' என்றான் பாலா.

''இல்லை பாலா! நான் என்ன கேட்கறதுன்னு புரியாம தான் இந்த ஒரு வாரமா யோசிச்சு ஒரு முடிவுக்கு வந்திருக்கேன். இத்தனை வருஷம் தயங்கியது போதும். நான் அதைப் பத்திப் பேசத்தான் நேற்று மதுகிட்ட போனேன். அவள்கிட்ட என்னோட முடிவைச் சொன்னவுடனே மறுப்பு எதுவுமே சொல்லாம சரின்னு சொல்லிட்டா'', என்று மதுவுடன் நடந்த உரையாடலைப் பற்றிக் கூறினான்.

பாலா, கௌதம் சொன்னதை அசைபோட்டுக் கொண்டிருந்த அதே வேளையில், கௌதம் வீட்டிற்குச் செல்லும் வழியில் அன்று தன் தங்கையிடம் பேசியதைப் பற்றி அசைபோட்டுக் கொண்டிருந்தான்.

மதுவின் வீட்டிற்குச் சென்ற கௌதம், தன் தங்கையிடம் வழக்கமான விசாரிப்புகளுக்குப் பின், ''மது! நான் உன் கிட்ட ஒரு கேள்வி கேட்பேன். நீ உன் மனசுல தோணறதை என்கிட்ட மறைக்காம சொல்லணும். சரியா?'' என்று பீடிகையுடன் ஆரம்பித்தான்.

''என்ன ஆச்சு அண்ணா? இப்படி பலமா பீடிகை எல்லாம் போட்டுட்டு இருக்கீங்க. என்ன கேட்கணுமோ

கேளுங்க'', என்றாள் மது - இதழ்களில் அரும்பிய சிறு புன்னகையுடன்.

''மது! அது வந்து... நான் வர்ஷனான்னு ஒரு பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கலாம்ன்னு இருக்கேன். அந்தப் பொண்ணுக்கு ஏற்கெனவே கல்யாணம் ஆகி ஒரு குழந்தையும் இருக்கு. ஆனா, அவளோட கணவர் இறந்து மூணு வருஷம் ஆச்சு. நீ என்ன நினைக்கிற?'' என்று ஒருவாறாகக் கேட்க வேண்டியதைக் கேட்டு முடித்தான்.

அவன் சொன்ன விஷயத்தைக் கேட்டுச் சற்று நேரம் வர்ஷனாவின் நிலையை எண்ணிக் கலங்கியவள், பின் அமைதியாய், ''உங்களுக்குப் பிடிச்சிருந்தா... நீங்க சந்தோசப்படுவீங்கன்னா... எனக்கு அதுல முழுச் சம்மதம்!'' என்று ஒற்றை வரியில் தன் சம்மதத்தைத் தெரிவித்தாள்.

அவள் இப்படி ஒரு வரியில் 'சரி', என்று பதில் சொல்லுவாள் என்பதை எதிர்பார்க்காதவன், அவளை நம்பாமல் பார்த்து, ''நீ இன்னும் வேற ஏதாவது கேள்வி கேட்பேன்னு நினைச்சேன் மது. இப்படி உடனே சரின்னு சொல்லிட்ட'', என்றான் ஏமாற்றத்துடன்.

''அண்ணா! நீங்க வர்ஷனாவைத் தானே கல்யாணம் பண்ணப்போறேன்னு சொன்னீங்க. நீங்க ஆறு வருஷத்திற்கு முன்னாடி அம்மா - அப்பாகிட்ட பேசினதை நானும் கேட்டேன். நான் தூங்கிட்டேன்னு நினைச்சு நீங்க பேசிக்கிட்டு இருந்தீங்க. நடுவுல எழுந்திரிச்சி வந்த நான் உங்க பேச்சுக்கு இடையில் வரலாமா இல்லையான்னு தெரியாம மறுபடியும் தூங்க முயற்சி செஞ்சேன். இருந்தும் நீங்க பேசினது எல்லாமே என் காதுல விழுந்தது. அப்போ எல்லாம் நீங்க ஏன் இப்படி காதல்ல விழுந்தீங்க, ஏன் தான் இப்படி 'டைம்'மை 'வேஸ்ட்' பண்ணறீங்கன்னு



நினைச்சேன். ஆனா, இப்போ வசந்தோட காதலை முழுசா அனுபவிச்சதுக்கப்புறம் தான் காதல் எவ்வளவு உயர்ந்ததுன்னு புரிஞ்சது. அதனாலதான் உங்களை ஒரு வார்த்தை கூடக் கேட்காம என்னோட சம்மதத்தைச் சொன்னேன்'', என்றாள் தெளிவாக.

''மது! அப்போ நீ சின்னப் பொண்ணுன்னு தான் நான் எதுவுமே உன்கிட்டச் சொல்லலை. அதுக்காக ஒண்ணும் தப்பா நினைச்சுக்காதேடா. ஆனா, இப்போ நான் எடுக்கற ஒவ்வொரு முடிவும் உன்னையும் பாதிக்கும். அதனாலதான் இதைப் பத்தி உன்கிட்ட தெளிவுபடுத்திட்டு, வர்ஷனாகிட்ட பேசலாம்ன்னு இருக்கிறேன்'', என்று அவளிடம் முன்பே இதைப் பற்றிச் சொல்லாததற்கு விளக்கமளித்தான்.

''அண்ணா! அதெல்லாம் இல்லை. உங்களைப் பத்தி எனக்குத் தெரியாதா? உங்களோட நல்ல மனசுக்கு கண்டிப்பா உங்களோட காதல்ல வெற்றி அடைவீங்க. நீங்க நினைச்ச மாதிரியே எல்லாமே நல்ல படியா நடக்கும்!'' என்று ஆசி வழங்கினாள்.

''ரொம்ப தேங்க்ஸ்டா! என்னைப் புரிஞ்சுக்கிட்டதுக்கு. நான் வர்ஷனாவைக் காதலிச்சதைப் பத்தி வசந்த்கிட்டேயும், பாலாகிட்டேயும் இதுவரை சொன்னதே இல்லை. நான் எடுத்த முடிவைப் பத்தி தீபியிடம் சொல்லி அவளைக் கூட்டிட்டு வந்துதான் அப்பா-அம்மாகிட்ட பேசணும்ன்னு நினைக்கிறேன். ஏன்னா அவ சொன்னா கொஞ்சமாவது அப்பாவும் அம்மாவும் கேட்பாங்க. ஆனா, அதுக்கு முன்னாடி வர்ஷனாகிட்ட இதைப் பத்திப் பேசலாம்ன்னு இருக்கிறேன். இவ்வளவு நாள் காத்திருந்தது போதும். இனியும் காத்திருந்து மறுபடியும் ஏதாவது நடக்கறதுக்குள்ள நான் முந்திக்கணும். முதல்ல வர்ஷனாகிட்ட இருந்து சம்மதம் வாங்கணும்.''

''நான் வசந்த்கிட்ட இதைப் பத்தி பேசறேன். நீங்க முதல்ல போய் அண்ணிகிட்ட பேசிச் சம்மதம் வாங்குங்க. 'ஆல் த பெஸ்ட்' அண்ணா!'' என்று புன்னகையுடன் சொன்னாள்.

''தேங்க்ஸ்ம்மா!'' என்று அவள் கையைப் பற்றி நன்றி தெரிவித்தவன், ''சரிம்மா. நேரம் ஆகுது. அம்மாகிட்ட சொல்லாம வந்துட்டேன். நான் கிளம்பறேன். சீக்கிரமே நல்ல செய்தி சொல்லறேன்,'' என்று விடைபெற்றான்.

இவ்வனைத்தையும் கேட்டதால்தான் கௌதம் சென்ற பின் சிறிது நேரத்தில் வீட்டிற்கு வந்த வசந்தை மதுவிடம் தனியாகப் பேசவிடாமல் தன் ஆசையைப் பற்றித் தெரிவித்துத் தன் காரியத்தைச் சாதிப்பதிலேயே குறியாக இருந்தாள் ஹர்ஷினி.

* * *

பாலாவிடம் அனைத்தையும் பகிர்ந்துகொண்ட பின், அதிக நாள் காத்திருக்காமல் வர்ஷனாவை அழைத்துப் பேசினான் கௌதம்.

அந்த வாரக் கடைசியில் வர்ஷனாவின் எண்ணிற்கு அழைத்து அவள் பேசியை எடுக்கும்வரை படபடப்புடன் காத்திருந்தான். அவளின் குரலுக்குப் பதிலாக, ஒரு குழந்தையின் குரலைக் கேட்டதும், நட்சத்ரா தான் பேசியை எடுத்திருக்கிறாள் என்றுணர்ந்தவனின் படபடப்பு வெகுவாகக் குறைந்தது.

அவளின் மழலைப் பேச்சில் உள்ளத்தைக் கொள்ளை கொடுத்தவன், ''ஹலோ! நட்சத்ராங்களா பேசறது?'' என்று ஆரம்பித்தான்.

நட்சத்ராவும், ''ஆமாங்க... நட்சத்ராதான் பேசறேன். நீங்க யாரு?'' என்றாள் தன் மழலைக் குரலில்.



''நான் கௌதம் பேசறேன். நீங்க எப்படி இருக்கீங்க? நீங்க எந்த கிளாஸ் படிக்கறீங்க?'' என்று சிறிது நேரம் அவளிடம் பேசியபின், ''உங்களோட அம்மாகிட்ட 'போனை'க் கொடுக்க முடியுங்களா?'' எனக் கேட்டான். நட்சத்ராவுடன் சிறிது நேரம் பேசியதில் வர்ஷனாவைத் தைரியமாக எதிர்கொள்ளத் தயாரானான்.

பேசி கைமாறி வர்ஷனாவின் குரல் கேட்டதும், ''வர்ஷனா! நான் கௌதம் பேசறேன். எப்படி இருக்க? இப்போ 'பிஸி'யா இருந்தா நான் அப்புறமா கூப்பிடறேன்'', என்றான்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லை கௌதம். சொல்லுங்க... நீங்க எப்படி இருக்கீங்க? நான் நல்லா இருக்கேன்.''

''சும்மாதான் கூப்பிட்டேன். நீ இப்போ எங்க இருக்க வர்ஷனா?'' என்று நூல் விட்டுப் பார்த்தான். அதுவும் சரியாக வேலை செய்ய, வர்ஷனா, ''வீட்லதான் இருக்கிறேன். ஏன்?'' என்றாள் குழப்பத்துடன்.

''அதில்லை. எந்த ஊரில இருக்க? அதைத்தான் கேட்டேன்'', என்று அவளிடம் தெளிவுபடுத்தினான்.

''நா... நான் இங்க செ... சென்னையில தான் இருக்கேன். ஏன் கேட்டீங்க?'' என்றாள் தட்டுத் தடுமாறி.

''நீ கோவையில இருக்கிறதா யாரோ சொன்னாங்களா. அதுதான் உன்னை நேர்ல பார்க்கலாம்ன்னு கேட்டேன்.''

''யாரு சொன்னாங்க? அது கொஞ்ச நாளைக்கு முன்னாடி வந்த போது யாராவது பார்த்திருப்பாங்க. அதைப் பார்த்துட்டு நான் இன்னும் கோவையிலேயே இருக்கறதா நினைச்சிருப்பாங்க போல. நீங்க கூட என்னைப் பார்த்தீங்களே! அப்போதான் நான் கடைசியா கோவைக்கு வந்தது'', என்றாள் அவசரமாக.

அவள் கூறியதைக் கேட்டுச் சிரித்தவன், ''அப்படியா? நீ சொன்னா சரிதான்'', என்று இடைவெளிவிட்டு,

''ஆனா, உன்னை ரெண்டு நாளைக்கு முன்னாடி நேர்ல பார்த்த சிவா தான் என்கிட்ட சொன்னான்'', என்று அவளைப் பார்த்ததைப் பற்றிக் கூறினான். கௌதம் அவளிடம் பேசும் முன்னர், அவளைப் பற்றி நன்கு விசாரித்து, சிவா சொன்னதைப் போல் அவள் கோவையில் அதே 'கம்பெனி'யில் தான் இன்னும் வேலைக்கு இருக்கிறாள் என்று உறுதிபடுத்திய பின்தான் அவளைத் தொடர்பு கொண்டான் என்பதை வர்ஷனா அறியவில்லை.

அவனின் இந்தப் பதிலை எதிர்பார்க்காத வர்ஷனா 'ஒன்றுமே பேசாமல் சற்று நேரம் அமைதியாக இருந்தாள். அவளின் இந்த அமைதியை உடைக்க எண்ணியவனாக,

''என்ன ஒண்ணுமே சொல்லாம அமைதியா இருக்கிறே வர்ஷனா? எனக்கு எல்லாமே தெரியும். என்கிட்ட எதுக்கு மறைக்க முயற்சி பண்ணறே? நான் உன்னை நேர்ல சந்திக்கணும். எப்போ பார்க்கலாம்?'' என்றான்.

''உங்களுக்கு எல்லாம் தெரியுமா? அதனால என்ன? உங்களை ஏன் நான் நேரில் சந்திக்கணும்? எனக்கு அதுக்கு எல்லாம் நேரம் இல்லை'', என்றாள் படபடப்பாக.

''வர்ஷனா, உன்கிட்ட நான் முக்கியமான ஒரு விஷயத்தைப் பத்தித் தனியா பேசணும். 'ப்ளீஸ்'! எனக்கு ஒரு அரைமணி நேரம் கொடு... அது போதும்.''

''இங்க பாருங்க கௌதம். மூணு வருஷத்துக்கு முன்னாடி நடந்தது. இப்போ அதைப் பத்திப் பேசி என்ன ஆகப்போகுது? உங்களுக்கு நிறைய வேலை இருக்கும். போய் அதைப் பாருங்க.''

''நான் மூணு வருஷத்துக்கு முன்னால நடந்ததைப் பத்தி பேசறதுக்கு வரச் சொல்லலை. நாம் ஒண்ணா படிச்சோமே, என்னை 'ஃபிரெண்டா' நினைக்கலைன்



னாலும் பரவாயில்லை. 'அட்லீஸ்ட்' உன்னோட பழைய 'கிளாஸ்மேட்'டைப் பார்க்க வர மாதிரியாவது வரலாமே...''

''நாம் படிக்கும் போதே 'ஃபிரெண்ட்ஸா' இல்லை. கொஞ்ச நாளைக்கப்புறம் நாம் பேசிக்கக் கூட இல்லை. அப்புறம் உங்க கூட பேச என்ன இருக்கு? எனக்கு அதுக்கு எல்லாம் 'டைம்' இல்லை. 'ப்ளீஸ்!' புரிஞ்சுக்கோங்க...''

அவனைக் கோபப்பட வைக்க வேண்டும் என்றே கூறுகிறாள் என்றுணர்ந்து சிரித்தவன், ''வர்ஷனா, எதுக்கு இந்தப் பிடிவாதம்? ஒரு அரை மணி நேரம் தானே கேட்கிறேன். நீ ஒத்துக் கொள்ளலைன்னா நான் நேரா உன்னோட வீட்டுக்கு வந்திடுவேன். உன்னோட வீட்டு 'அட்ரெஸ்' கண்டுபிடிக்கறது ஒண்ணும் எனக்குச் சிரமம் கிடையாது. உனக்கு அது தான் வேணும்ன்னா சொல்லு, அதையே செய்யறேன்'', என்று அவளை மடக்கினான்.

''கௌதம்! நீங்க ரொம்ப மாறிட்டீங்க... முன்னெல்லாம் நீங்க இப்படிப் பேசி நான் பார்த்ததே இல்லை. எனக்குப் பிடிக்கலைன்னா விட வேண்டியதுதானே.''

''ஆமாம்! நான் ரொம்ப மாறிட்டேன்... இப்போ அதுக்கு என்ன? காலம் எல்லாத்தையும் மாற்றும்ன்னு நீ கேள்விப்பட்டதில்லையா? நான் இப்போ என்னோட மாற்றத்தைப் பத்திப் பேசக் கூப்பிட்டதா எனக்கு நினைவில்லையே'', என்று எங்கே இதற்கு மேல் நிதானித்துச் செயல்பட்டால் காரியம் கைகூடாமல் போய்விடுமோ என்ற கவலையில், அதிரடியாக இறங்கினான் கௌதம்.

அவள் எவ்வளவோ மறுத்தும் அவளை ஒருவழியாகச் சம்மதிக்க வைத்தவன், இதோ இப்பொழுது அவளுக்காக ஒரு 'காபி ஷாப்'பில் காத்திருக்கிறான்.

தனியாக வந்த வர்ஷனாவை, ''நட்சத்ரா எங்கே?'' என்று கேட்டான்.

அவள், ''நீங்கதானே தனியா பேசணும்ன்னு சொன்னீங்க. அதனால அவளை என் 'ஃபிரெண்ட்' வீட்ல விட்டுட்டு வந்திருக்கேன். அதுவுமில்லாம நீங்க என்ன தான் இல்லைன்னு சொன்னாலும் எப்படியும் என்னோட கடந்த காலத்தைப் பத்திப் பேசப் போறீங்க. அப்போ அவ இங்க இல்லாம இருக்கறதுதானே நல்லது. அவள் குழந்தை... எந்த ஒரு சின்ன விஷயமும் அவள் மனசைப் பாதிக்கும். அவளோட நல்லதுக்குத்தான் அவளை விட்டுட்டு நான் மட்டும் தனியா வந்தேன்'', என்று விளக்கினாள்.

அவளின் கூற்றில் இருந்த உண்மையை ஒத்துக்கொண்டவன், ''ஆனா, உன்னோட கடந்த காலத்தைப் பத்திப் பேசக் கூப்பிடலை. என்னோட எதிர்காலத்தை உன்னோடு கழிப்பதைப் பத்தி பேசத்தான் உன்னை வரச் சொன்னேன்'', என்று ஏழு வருடமாகச் சொல்ல நினைத்ததைச் சுற்றி வளைக்காமல் தைரியமாக விஷயத்தைப் போட்டு உடைத்தான். இத்தனை வருடங்கள் மௌனமாக இருந்து பட்ட வேதனைகளும் சோதனைகளும் போதாதா...

அவள் மௌனமாக இருப்பதைப் பார்த்து அவள் அதிர்ந்திருக்கிறாள் என்றெண்ணி, ''ஏன் அமைதியா இருக்க வர்ஷனா? ஏதாவது சொல்லு. என் வாழ்க்கையை உன்னோடு கழிக்க நீ சம்மதிக்கணும். உனக்கு யோசிக்க 'டைம்' வேணுமா? பரவாயில்லை. எவ்வளவு 'டைம்' வேணும்ன்னாலும் எடுத்துக்கோ. ஆனா, நல்லா யோசிச்சு எனக்குச் சரின்னு சொல்லிடு'', என்றான் உறுதியாக.

''கௌதம்! உங்களை நான் எவ்வளவு உயர்வா நினைச்சிருந்தேன். இப்படி வந்து கீழ்த்தரமா நடந்துக்கறீங்களே. ச்சே! என்னோட தப்பு... நீங்க கூப்பிட்ட உடனே இங்க வந்தேன் பாருங்க... என்னைச் சொல்லணும். ஒரு



கல்யாணமான பொண்ணுகிட்ட அதுவும் ஒரு குழந்தைக்குத் தாயான பொண்ணுகிட்ட பேசற பேச்சா இது. இனிமேல் நீங்க என்னோட பேசறது இதுவே முதலும் கடைசியுமா இருக்கட்டும்... சொல்லிட்டேன்... வரேன்...'' என்று படபடவெனப் பொரிந்துவிட்டு எழப் போனவளைத் தடுத்து நிறுத்தினான் கௌதம்.

''வர்ஷனா! ப்ளீஸ். எல்லோரும் பார்க்கறாங்க. எதுக்கு இப்போ கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணற? நாம வளர்ந்தவங்க. எதுக்கு இப்படி 'ஸ்கூல்' பசங்க மாதிரி கத்தி, சண்டை போடணும்? இந்த விஷயத்தைப் பேசித் தீர்க்கலாமே'', என்றான் மெல்லிய குரலில்.

அவள் சுற்றும் முற்றும் பார்க்க, அனைவரும் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்ததை உணர்ந்து, சற்றுத் தாழ்ந்த குரலில், ''சரி! நான் சத்தமா சொன்னாலும் மெதுவா சொன்னாலும் என்னோட பதில் ஒண்ணுதான். எதுக்கு இப்படி வந்து தேவை இல்லாத பேச்சை எடுக்கறீங்க? 'ப்ளீஸ்...' இத்தோட அந்தப் பேச்சை விட்டுடுங்க. எனக்குச் சுத்தமா நீங்க பேசினதுல உடன்பாடில்லை!'' என்றாள்.

''இப்படியே எத்தனை நாள் இருப்பதாக உத்தேசம். உனக்குன்னு ஒரு துணை வேண்டாமா? நான் சொல்லறதை...'' என்று அவன் முடிக்கும் முன், ''எனக்கு என்னோட நட்சத்ரா இருக்கா. அவதான் எனக்கு இனி வாழ்க்கை, சந்தோசம் எல்லாமே. அதனால தெளிவா இருக்கிற என்னோட வாழ்க்கையில தயவு செய்து கல்லெறிந்து குழப்பத்தை உண்டு பண்ணாதீங்க'', என்றாள் அவசரமாக.

''அதுதான் சொல்லறேன். நட்சத்ராவோட எதிர்காலத்தைப் பத்தி யோசிச்சியா? இப்போ அவ சின்னப் பொண்ணு...

ஒண்ணும் தெரியாது. இன்னும் கொஞ்ச நாள் போனா மத்தவங்க மாதிரி தனக்கு அப்பா இல்லையேன்னு ஏங்க மாட்டாளா? யோசிச்சுப் பாரு...''

''என் பொண்ணோட எதிர்காலத்தைப் பத்தி நான் யோசிச்சுக்குவேன். உங்களோட கரிசனத்துக்கு ரொம்ப நன்றி! எதுவா இருந்தாலும் அவளிடம் உண்மையைச் சொல்லித்தானே ஆகணும்?''

''உண்மையைச் சொன்னா மட்டும் அவளோட மனசை இருக்கிற ஏக்கம் போயிடுமா? யோசிம்மா!''

அவனின் கரிசனத்தில் துணுக்குற்றவள், ''இங்க பாருங்க! நீங்க இப்படியே பேசிக்கிட்டு இருந்தா நான் கிளம்பிடுவேன். நட்சத்ராவைக் காரணம் காட்டி என்னை மடக்க முயற்சி செய்யறீங்களா? சும்மா சொன்னதையே சொல்லிட்டு இருக்கீங்க'', என்று மறுபடியும் முருங்கை மரம் ஏறினாள்.

அவள் சொன்னதைக் கேட்டு மனதிற்குள் சிரித்து, 'இவளைக் கொஞ்சம் கொஞ்சமாத்தான் விட்டுப் பிடிக்கணும்', என்று நினைத்தவன், ''சரி. உனக்குப் பிடிக்கலைன்னா விட்டுடுவோம். நான் அதைப் பத்தி இனிப் பேசலை. வேற ஏதாவது பேசலாம்'', என்று அவள் சொன்னதற்கு உடனே செவிமடுத்தான்.

அவனிடம் இதற்குப் போராட வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தவள், அவன் உடனே சம்மதம் தெரிவித்ததும் அவனைக் குழப்பத்துடன் பார்த்தாள். அவனின் கேள்விக்கு அவள் பதில் சொல்லாமல் இருக்க, ''நிஜமாத்தான் சொல்லறேன்... அந்தப் பேச்சை இத்தோட விட்டுடறேன்... ஆனா, அதுதான் வேண்டாம்... 'அட்லீஸ்ட்... ஃப்ரெண்டா' இருக்கலாமே. நாம ரெண்டு பேரும் ஒண்ணாப் படிச்ச



வங்க, படிக்கறப்போ தான் அதிகமா பழகச் சந்தர்ப்பம் கிடைக்கலை. இப்போ கிடைச்ச சந்தர்ப்பத்தை ஏன் விடணும்?'' என்று அவள் சொன்னதை வைத்தே அவளிடம் விளையாடினான்.

பதில் ஒன்றும் பேசாமல் ஏதோ யோசித்துக் கொண்டிருந்தவளிடம் பல விதங்களில் பேசி அவனுக்குத் தருந்த பதிலான அவள் சம்மதத்தைப் பெற்றுக் கொண்டு தான் அவ்விடத்தைக் காலி செய்தான் கௌதம். அதன் பிறகு வந்த நாட்களில் அவன் அந்த நட்பென்னும் அஸ்திவாரத்தைப் பலப்படுத்துவதில் முனைப்பாக இருந்தான்.

## 13

''பெண்ணே, நீ
என் இதய வானில்
மின்னும் நட்சத்திரமடி!
என் மனக் கடலில்
தவழும் நிலவடி!
என் உள்ளப் பூமியில்
நிலவும் ஏகாந்தமடி!
என் நெஞ்சத் தீயில்
நுழையும் பனித் துளியடி!
என் அகக் காற்றில்
வாழும் என் உயிரடி!''

அந்த வாரத்தில் ஒரு நாள், முக்கியமான வேலை ஒன்றை முடிக்க வேண்டி இருந்ததால், காலையில் எப்பொழுதும் வருவதை விட ஒரு மணி நேரம் முன்பே வந்து தன் வேலையில் ஆழ்ந்திருந்த தான்யாவை, ஒரு பெரியவரின் குரல் கலைத்தது.

"வணக்கம்மா! பாலாவோட அறை எந்தப் பக்கம் இருக்கு?"

"வாங்க! அதோ அதுதான் அவரோட அறை!" என்று அவனின் அறையைச் சுட்டிக் காட்டியவள், "ஆனா, அவர் இன்னும் வரலை... வர்ற நேரம் ஆச்சு. வேணா நீங்க அங்க உட்காருங்க," என்று அங்கிருந்த பார்வையாளர்களின் இருக்கையில் அவரை அமரச் சொன்னாள்.

மேலும் கால் மணி நேரம் கழிந்ததும், "தினமும் எப்போ வருவான் பாலா?" என்று மீண்டும் வந்து நின்றார் அந்தப் பெரியவர்.

"வழக்கமாக இந்நேரத்துக்கு அவர் வந்திருக்கணும். இன்னும் ஏன் வரலைன்னு தெரியலைங்க," என்று அவருக்கு விடையளித்தாள்.

"பாலா எப்படி? வேலைன்னு வந்தா நல்லாப் பிழிஞ்சு எடுத்துடுவானே!" என்று சிரிப்புடன் கேட்க, 'இவருக்கு இப்போ என்ன வேண்டும்? பாலா எப்படி வேலை வாங்கினா இவருக்கு என்ன வந்தது?" என்று துணுக்குற்றவள்,

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை சார்! அவர் வேலைன்னு வந்துட்டா அப்படியே அதிலேயே ஒன்றிடுவார். அப்படி இருந்தாத்தானே தொழில் பண்ண முடியும். சரி! நீங்க அவரை அவசரமாகப் பார்க்கணுமா? நீங்க என்ன விஷயமா வந்திருக்கீங்க? எத்தனை மணிக்கு 'அப்பாயின்ட்மென்ட்' வாங்கி இருக்கீங்க?" என்று அவரிடம் அவர் வந்ததற்கான காரணத்தை அறியக் கேள்விகளை அடுக்கிப் பேச்சைத் திசை திருப்பினாள்.

"அப்பாயின்ட்மென்ட்' எல்லாம் வாங்கலைம்மா. சும்மா ஒரு வேலையா இங்கே வந்தேன். அப்படியே பாலாவையும் பார்த்துட்டுப் போகலாம்ன்னுதான். ஆனா, ஒரு



தகப்பனுக்குக் கூட உன்னோட அறை - பாஸ் 'அப்பாயின்ட்மென்ட்' கொடுத்துத்தான் பார்ப்பாரோ?" என்று அவளைக் கேள்வி கேட்டுத் திகைக்க வைத்தார் வெங்கடேசன். கௌதமும் ஒரு 'பாஸ்' என்பதால் அவ்வாறு கூறினார் பாலாவின் தந்தை வெங்கடேசன்.

"ஐயய்யோ! நீங்க பாலா 'சாரோ'ட அப்பாவா? இதை நீங்க முன்னாடியே சொல்லி இருக்கலாமே. என்னை மன்னிச்சுடுங்க! வாங்க.. வாங்க..." என்று பதறி அவசரமாக அவள் இருக்கையிலிருந்து எழுந்தாள்.

"மெல்ல... அதுக்கு ஏன்ம்மா இப்படிப் பதறணும்?" என்று அவர் அவளிடம் கேட்ட அதே சமயம் அலுவலகத்தில் நுழைந்த பாலாவும், "அப்பா! இங்க என்ன பண்ணறீங்க? எப்போ வந்தீங்க? என்கிட்டே ஒரு வார்த்தை கூடச் சொல்லாம திடீர்னு.... என்னப்பா இதெல்லாம்? வீட்டுக்கு வந்திருக்கலாமே... இல்லை. எனக்கு போனாவது பண்ணி இருக்கலாமேப்பா," என்று தன் தந்தை இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் வந்து நிற்கிறார் என்ற ஆதங்கத்தைக் கேள்விகளால் வெளியிட்டான்.

"திடீர்னுதான்ப்பா கிளம்ப வேண்டி வந்துச்சு!" என்று ஒரு வரியில் கேள்விகளுக்குப் பதிலளித்தவர், "ஆமா, நீ அமெரிக்காவில் இருந்து வந்து என்னை ஒரு எட்டுப் பார்த்துட்டு வந்திருக்கலாம் இல்லை. உனக்கு இப்பவெல்லாம் இந்த அப்பாவோட ஞாபகம் எங்க இருக்கு?" என்று அவரின் ஆதங்கத்தைத் தெரிவித்தார்.

"அது... இந்த வாரம் வரலாம்னு இருந்தேன். சரிப்பா! வந்ததுதான் வந்தீங்க. இங்க எதுக்கு நின்னிட்டு இருக்கறீங்க? போய் என்னோட அறையில உட்கார்ந்திருக்கலாமே?" என்றான்.

''இல்லை. நீ வர வரைக்கும் தனியா அங்க உட்கார்ந்துட்டு என்ன பண்ணப் போறேன்? அதை விடு. உனக்கு ஒரு பொண்ணு பார்க்கத்தான் வந்தேன். பொண்ணோட அப்பாதான் திடீர்னு 'போன்' பண்ணி இன்று வரச் சொன்னார். நானும் நாள் இல்லா இருக்கேன்னு உடனே கிளம்பி வந்தேன். சும்மா சொல்லக் கூடாது... பொண்ணு மகா லட்சுமி மாதிரி இருக்கா. ரொம்ப அடக்கமான பொண்ணு...''

இன்னும் என்ன கூறி இருப்பாரோ. பாலா அவசரமாக, ''அப்பா! போதும். வாங்க! என்னோட அறைக்குப் போய்ப் பேசலாம்,'' என்று அவன் அறையை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

இருக்கிற பிரச்சனை போதாதென்று இதை வேறு தான்யாவின் முன் பேசி, ஏற்பட்ட முன்னேற்றத்தையும் கெடுத்துக் கொள்ளப் பாலா விரும்பவில்லை.

''சரிம்மா! நீ உன் வேலையைக் கவனி. நான் போய், உன்னோட அரை 'பாஸி'டம், அதுதான்மா என்னோட மகனிடம் பேசிட்டு வரேன்,'' என்று பகிரங்கமாக அவளிடம் ரகசியம் பேசிவிட்டு வெங்கடேசன் அங்கிருந்து நகர்ந்தார். அவர் விடைபெற்றுச் சென்றது அவளின் கருத்தில் பதியவில்லை.

'பொண்ணு பார்க்க வந்தாரா? அதுவும் பொண்ணு மகா லட்சுமி மாதிரி அழகா வேற இருக்காளா? ம்ம்... இவர் என்ன சொல்லப் போறாரோ? ஆமா! ஆமா! சும்மாவே பொண்ணுங்கன்னா வாயைப் பிளந்து பார்த்துட்டு இருப்பான். இப்போ பொண்ணு வேற பார்த்துட்டு மகா லட்சுமி மாதிரி வேற இருக்காளாமே! இனி கேட்கவே வேண்டாம்!' என்று யோசித்த தான்யா, சில சமயங்களில் மரியாதை கொடுத்தும் சில சமயங்களில் மரியாதை



இல்லாமலும் அவனைப் பற்றி நினைப்பதை உணர்ந்தாளில்லை.

'ச்சே! எனக்கு இது தேவையில்லாத விஷயம். தலைக்கு மேல வேலை இருக்கு. அதை விட்டுட்டு, யார் என்ன முடிவு எடுத்தா நமக்கென்ன வந்தது?' என்று வேலையில் தன்னைப் புதைத்தாள். அவள் மூளை முடிவு செய்தாலும் மனம் அதைக் கேட்காமல் பாலாவின் அறையைப் பார்க்குமாறு கண்களுக்குக் கட்டளையிட்டது. அவள் கண்களும் அதைச் செவ்வனே நிறைவேற்றின. பாலாவின் முகத்தில் இருந்து அவளால் ஒன்றையும் கண்டுபிடிக்க முடியவில்லை. நடந்தவற்றை மறுபடியும் மனத்திற்குள் ஓட்டிப் பார்த்தவள், பாலாவின் இந்தக் கலகலப்பான குணம் அவன் தந்தையிடமிருந்துதான் வந்திருக்க வேண்டும் என்று எண்ணிப் புன்னகைத்துக் கொண்டாள்.

பாலாவின் அறையில், பாலாவின் எலும்புக் கூடு தோற்றத்துக்கு நன்றாகத் தன் பங்கிற்குத் திட்டிய பின் தான் வந்த விஷயத்தைப் பற்றி பேசினார் அவன் தந்தை. ''பாலா! பொண்ணை இன்று காலையிலதான் பார்த்தேன். அவ்வளவு அடக்கம், அவ்வளவு பொறுமை. பெரியவங்களை நல்லா மதிக்கத் தெரிஞ்சு இருக்கு. ரொம்ப நல்ல பொண்ணு. பார்க்கவும் லட்சணமா இருக்கிறா. பூர்வீகம் சென்னை போல. ஆனா, இங்க கோவைக்கு வந்து கொஞ்ச வருஷம் ஆச்சு!'' என்று அவர் பார்த்த பெண்ணைப் பற்றி விளம்பரப் படம் எடுக்காத குறையாக வர்ணித்துக் கொண்டிருந்தார்.

அவர் பார்த்த பெண்ணைப் பற்றிச் சொல்லும் பொழுதெல்லாம் பாலா அவர் கூறிய அனைத்திற்கும் தான்

யாவைப் பொருத்திப் பார்த்துக் கொண்டிருந்தான். அவர் பொறுமை என்று சொல்லும் பொழுது மட்டும் தான்யா அவனைக் கோபத்துடன் திட்டியதை மனதிற்குள் கொண்டு வந்தவன், 'நான் தப்பு செய்யப் போய்த் தானே அவள் என்கிட்ட கோபப்பட்டா. மத்தப்படி பொறுமை தான் அவளுக்கு!'' என்று அவளுக்கு நற்சான்றிதழ் வேறு வழங்கிக் கொண்டிருந்தான் மனதிற்குள்.

''என்னப்பா! ஒண்ணுமே பேசாம இருக்கே! அவங்களுக்கு உன்னைப் பார்க்கணும் போல இருக்கும்தானே. எப்போ போகலாம்? அப்படியே நீயும் பொண்ணைப் பார்த்த மாதிரி இருக்கும். எதுக்கும் கொஞ்ச நாள் கழிச்சுப் போகலாம். அதுக்குள்ளே நீயும் உன்னோட உடம்பைத் தேத்திக்கோ!'' என்று ஆலோசனை வழங்கினார்.

'தான்யாவைப் பத்தி அப்பாகிட்ட சொல்லலாமா?' என்று ஒரு கணம் யோசித்தவன், 'சொன்னா அப்புறம் அவர் பாட்டுக்கு நேராப் போய் அவளிடம் எதையாவது கேட்டு வச்சுட்டார்ன்னா. வேற வினையே வேண்டாம். இந்த வாரம் ஊருக்குப் போகும் போது சொல்லிக்கலாம்,' என்று முடிவு செய்து கொண்டு,

''அப்பா! எனக்கு இந்தப் பொண்ணு வேண்டாம்ப்பா. சொன்னாக் கேளுங்க.''

''என்னது, பொண்ணு வேண்டாமா? பார்க்காமலேயே வேண்டாம்ன்னு சொன்னா எப்படி?'' என்று சிரித்தவர், ''இந்தக் காலத்துப் பசங்க இப்படித்தான் கல்யாணத்துக்கு ஒத்துக்க மாட்டாங்க... நாமதான் கல்யாணம் பண்ணி வைக்கணும்... கல்யாணம் ஆனா அப்புறம் எல்லாம் சரியா போயிடும்ன்னு என்னோட நண்பன் அப்போவே சொன்னான்,'' என்றார் வெங்கடேசன்.



''இந்த நண்பருக்கு வேற வேலையே இல்லை. வந்துடுவாங்க இது மாதிரி தேவையில்லாம எதையாவது சொல்லிட்டு,' என்று நினைத்த பாலா, ''அப்பா, உங்கள் நண்பர் சொல்றதைக் கேட்கற நீங்க உங்க பையன் சொல்றதைக் கேட்க மாட்டீங்களா? நானே இந்த வாரக் கடைசியில ஊருக்கு வர்றதா இருந்தேன். அதுக்குள்ளே நீங்க வந்துட்டீங்க. இதைப் பத்தி நாளைக்கு ஊருக்கு வரும் போது பேசிக்கலாம். அதுவரைக்கும் கொஞ்சம் பொறுமையா இருங்க. எந்த முடிவும் எடுத்திடாதீங்க. இப்போ எனக்கு ஒரு முக்கியமான 'கால்' வரும்ப்பா,'' என்று நல்ல விதமாகவே கூறி அவருக்குப் புரிய வைக்க முயன்றான்.

அவன் தந்தையோ, கோபத்துடன் எழுந்து வெளியே சென்றவர், ''இதோ பாருப்பா! உன்னை இவ்வளவு நாள் விட்டு வச்சதே தப்பு. நான் வாக்குக் கொடுத்துட்டேன்,'' என்று தணிந்த குரலில் சொல்லிவிட்டு, ''மறுபடியும் சொல்லறேன். பொண்ணை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. இவ்வளவு நாள் காத்திட்டு இருந்தது நல்லதுக்குத்தான் போல. சீக்கிரமா ஒரு நல்ல முடிவோட என்னைப் பார்க்க வா. எவ்வளவு சீக்கிரம் கல்யாணத்தை வைக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் வச்சிடலாம். நான் வரேன்...'' என்று உரக்கக் கூறியபடி, தான்யாவிடம் சென்றார்.

''உன் பேர் என்னம்மா சொன்ன?'' என்று தலையைத் தட்டி யோசித்தவரிடம், ''தான்யலக்ஷ்மி!'' என்றாள் தான்யா.

''நல்ல பேரு! நான் கிளம்பறேனம்மா! நீயாவது சொல்லு உன்னோட அரை 'பாஸ்' கிட்ட. சீக்கிரமா நான் பார்த்த பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கச்

சொல்லி,'' என்று தான்யாவையும் அவருக்குத் துணை சேர்த்தார்.

இந்தத் திடீர்த் தாக்குதலில் நிலை குலைந்த தான்யா, உடனே சுதாரித்து அவரிடம் மெதுவாகத் தலை அசைத்தாள். பின் திரும்பிப் பாலாவைப் பார்க்க, அதே சமயம் பாலாவும் அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கண்களில் இருக்கும் சேதியைப் படிக்க முயன்று தோற்றுப் போய்க் கண்களைத் தாழ்த்தினாள்.

''மறந்துட்டேன் பாரு! பொண்ணோட போட்டோ இந்தக் 'கவர்'ல இருக்கு. இந்தாம்மா! இதை அவங்கிட்ட கொடு!'' என்று தன் பையிலிருந்து ஒரு கவரை எடுத்து அவளிடம் தந்தார் பாலாவின் தந்தை.

'இது என்ன வம்பாப் போச்சு! அவரே கொடுக்க வேண்டியதுதானே... என்னை இக்கட்டில் மாட்டி விட்டுட்டாரே! இவங்களுக்குப் பொண்ணு பார்க்க நான் என்ன தபால்காரியா?' என்று மனதில் நினைத்தாலும் அவளுடைய கை அந்த 'கவரை'ப் பெற்றுப் பாலாவிடம் தந்தது.

''இதைப் பிரிச்சுப் பார்க்கச் சொல்லி இவனுக்கு அப்பப்போ ஞாபகப்படுத்தும்மா. இல்லேன்னா வேலை, வேலைன்னு, மறந்துடப் போறான்,'' என்று அவளிடம் கேட்டுக் கொண்டார்.

பாலா மேலே ஏதோ பேச வாயெடுக்கும் போது, ''அங்கிள்! எப்போ வந்தீங்க?'' என்றவாறே உள்ளே வந்தான் கௌதம்.

''நான் சொன்னது ஞாபகத்துல வச்சுக்கோம்மா. நான் வரேன்,'' என்று அவளிடம் விடைபெற்றுக் கொண்டு, கௌதமிற்குப் பதிலளித்தவாறே அங்கிருந்து நகர்ந்தார்



வெங்கடேசன். பாலாவும் தான்யாவிடம் ஒரு வெற்றுப் பார்வையை வீசிவிட்டு அவர்களைப் பின் தொடர்ந்தான்.

அன்று மழை நாளில் அவனிடம் சிறிது மனம் திறந்தாள் தான். ஆனால், அதன் பின் மறுபடியும் தான்யா கூட்டுக்குள் போய் அடைந்து கொண்டதைப் போல உணர்ந்தான் பாலா. இவனாகச் சென்று பேசினாலும் தான்யா பட்டும் படாமலும் பதில் அளித்தாள். அவளிடம் வலியச் சென்று பேசினால், அங்கே வழியப் போகிறோம் என்று அவள் நினைத்து, மறுபடியும் முறுக்கிக் கொண்டு பேசாமல் இருந்துவிடுவாளோ என்று எண்ணியவன், அவளிடம் சிறிது ஒதுங்கியே இருந்தான். தான்யாவிடம் காதலையும் சொல்லியாகிவிட்டது. அதை உண்மையானது என்று எப்படி அவளுக்குப் புரிய வைப்பது, அவள் மனதை எப்படி அணுகுவது என்று புரியாமல் திண்டாடிப் போனான்.

மறுநாள் காலை வழக்கம் போல வேலைக்குச் சென்ற தான்யா பாலாவிடம் வேலை சம்பந்தமாகப் பேசிவிட்டுத் திரும்பும் பொழுது, நேற்று அவன் தந்தை கொடுத்த 'கவர்' அவனின் மேஜை மீது பிரிக்கப்படாமலேயே கிடப்பதைப் பார்த்தாள். அதைப் பார்த்தவளின் கண்கள் கேள்வியுடன் தாமாகவே பாலாவைப் பார்த்தன.

'இன்னும் பொண்ணைப் பார்க்கலையான்னு குறிப்பால் கேட்கிறாளா? ஆனாலும் இவளுக்குக் கொழுப்புதான்!' என்று நினைத்தவன், ''சொல்லுங்க தான்யா! வேற ஏதாவது... கேட்கணுமா?'' என்று 'வேணுமா' என்று கேட்க வாயெடுத்து, பின் முன்பு நடந்ததை நினைத்து 'கேட்கணுமா' என மாற்றினான்.

'நான் என்ன கேட்கிறேன்னு தெரிஞ்சுக்கிட்டே வேணும்ன்னே சீண்டறாரா' என்று நினைத்தவள், "ஒன்னும் இல்லைங்க சார்! நான் வந்த வேலை முடிஞ்சிடுச்சு!" என்று முறுக்கிக் கொண்டு எழுந்து சென்றாள்.

மாலை வரை வேலையைத் தவிர வேறு ஒன்றைப் பற்றியும் கவலைப்படாமல் இருந்தாள் தான்யா. அல்லது அப்படி இருப்பதாக நினைத்தாள். மாலையில் வீடு செல்வதற்கு முன், 'பாலா அவருக்குப் பார்த்திருக்கும் பொண்ணோட போட்டோவைப் பார்த்தாரா இல்லையா?' என்ற கேள்வி மறுபடியும்(?) அவள் மனதைக் குடைய ஆரம்பித்து விட்டது. 'இப்போ விட்டா இனி திங்கள் கிழமைதான் வர முடியும். அது வரைக்கும் பதில் தெரியாமல் எப்படி இருப்பது?' என்று யோசித்தவள், ஏதோ ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு மீண்டும் பாலாவைப் பார்க்க அவன் அறைக்குச் சென்றாள்.

உள்ளே சென்றவள், தான் வந்ததின் காரணத்தைக் கூறி ஏற்கெனவே விடை தெரிந்த கேள்விக்கு மீண்டும் அவன் சொல்வதைக் கருமமே கண்ணாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவன் கூறி முடித்தபின் மீண்டும் அவள் கண்களை அந்த 'கவர்' இருக்கும் பக்கம் திருப்பி அது இன்னும் பிரிக்கப்படாமலேயே இருப்பதைக் கவனித்தாள். அதற்கு மேல் பொறுமையுடன் காத்திருக்காமல் அவனிடம், "வந்து... உங்க அப்பா கொடுத்துட்டுப் போன 'கவரை' இன்னும் பிரிச்சிப் பார்க்கலையா? மறந்துட்டீங்களா? உங்க அப்பா தான் உங்க கிட்ட ஞாபகப்படுத்தச் சொன்னார்," என்று எனக்கொன்றும் இல்லை என்கிற ரீதியில் ஒருவாறாகக் கேட்டு முடித்தாள்.

அவளை விசித்திரமாகப் பார்த்த பாலா, "இன்னும் இல்லை. இனிமேல்தான் பார்க்கணும்... எனக்கு ஞாபகம் இருக்கு. உங்களுக்கு இன்னும் கேட்க வேண்டியது ஏதாவது இருக்கா? நான் கொஞ்சம் சீக்கிரமாக் கிளம்பணும்," என்றான்.

அவள் இருக்கையிலிருந்து எழுந்தவாறே, "உங்களுக்குப் பார்த்திருக்கும் பொண்ணு பேரு..." என்று இழுத்தாள்.

மறுபடியும் அவளை விசித்திரமாகப் பார்த்து விட்டு, "தனு! சரி... எனக்கு 'லேட்' ஆச்சு... நான் கிளம்பறேன்," என்று இருக்கையில் இருந்து எழுந்தான்.

"ரொம்பத்தான்! இவரோட அப்பாவுக்காகப் போனா போகுதுன்னு கேள்வி கேட்டா... என்னையே நாக்கறீங்களா? நீங்க எப்படிப் போனா எனக்கு என்ன?" என்று மனதிற்குள் கறுவியவள், "வேற ஒன்னும் இல்லை சார். நான் வரேன்," என்று உடனே கிளம்பிவிட்டாள்.

அவள் அறையிலிருந்து கிளம்பினாளே ஒழிய, அவள் எண்ணம் முழுவதும் பாலாவுக்குப் பார்த்திருக்கும் பெண்ணைப் பற்றியே சுற்றிச் சுற்றி வந்தது. 'பொண்ணு பார்க்கறதுக்கு எப்படி இருப்பா? ஆமா! அது என்ன பேரு தனு? தனுஷா, தனுஜா இல்லை தனுஷ்கா... ச்சே! யாரோட பேர் எப்படி இருந்தா நமக்கென்ன?' என்று நினைத்தவாறே வீட்டுக்குச் செல்ல ஆயத்தமானாள். இன்னும் சற்று யோசித்திருந்தால் அது அவள் பெயரின் சுருக்கம்தான் என்பது புரிந்திருக்கும்.

பாலாவும் மேஜை மேலிருந்த அந்தக் 'கவரை' எடுத்துக் கொண்டு உடனே கிளம்பியதைப் பார்த்தவள், 'இதுக்குத்தான் இந்த 'பில்டப்'பா?' என்று நினைத்துக் கொண்டே வீட்டிற்குச் சென்றாள்.

கௌதமிடம் சென்ற பாலா, "கௌதம்! நான் ஈரோடு போய் அப்பாவைப் பார்த்துட்டு வரேன்," என்றான்.

''ஏன்டா திடீர்னு? என்ன ஆச்சு? அப்பா நேத்துதானே வந்துட்டுப் போனார். அதுக்குள்ளே என்ன அவசரம்?''

''இல்லை கௌதம்! அப்பாகிட்ட உண்மையை சொல்லலாம்னு நினைக்கிறேன். நேத்து அப்பா பாட்டுக்கு யாரோ ஒரு பொண்ணைப் பாத்துட்டு வந்து 'போட்டோ'வை நீட்டறார். அவர் வாக்குக் கொடுத்துட்டாராம். அதனால் நான் இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக் கொள்ளணுமா? என்னைக் கேட்காம இவர் மட்டும் போய் எப்படி வாக்குக் கொடுக்கலாம்? நேத்து எவ்வளவோ சொல்லிப் பார்த்துட்டேன் - எனக்கு இந்தப் பொண்ணு வேண்டாம்னு. அப்பா கேட்கிற மாதிரி இல்லை.''

''சரி! நீ கவரைப் பிரிச்சிப் பார்த்துப் பொண்ணைப் பிடிக்கலைன்னு சொல்ல வேண்டியதுதானே பாலா? அதுக்கப்புறமும் உன் அப்பா உன்னைக் கட்டாயப்படுத்து வாரா, என்ன?''

''மறுக்க மாட்டார்ன்னு தான் தோணுது. ஆனா ஃபிரெண்டுகிட்ட வாக்குக் கொடுத்துட்டேன்னு சொல்றார். அதான் பயமா இருக்கு.''

''அப்படின்னா தான்யாவைப் பத்தி சொல்லி இருக்கலாமே.''

''ஆபீஸ்'ல வச்சு என்னத்தைப் பேசி இவருக்குப் புரிய வைக்கறதுன்னு ஒண்ணும் சொல்லாம அப்பாவை அனுப்பி வச்சுட்டேன். இங்க வச்சு ஏதாவது சொன்னா அப்புறம் தான்யாவைக் கைகாட்ட வேண்டி வரும். அவரும் அவர் பாட்டுக்குப் போய் தான்யாகிட்ட எதையாவது கேட்டுட்டார்ன்னா... அவள் வேலை செய்யற இடத்துல எதுக்கு வீணா அவளைச் சங்கடப்படுத்தணும்னுதான். அதுவும் இல்லாம சும்மாவே அவளுக்கு மூக்குக்கு மேல கோபம்



வருது. அதுல இது வேறயான்னு தான். அப்புறம் அவ பாட்டுக்கு கோவிச்சிட்டு வேலையை விட்டுப் போயிட்டா நான் என்ன பண்ணறது? அதுதான் இன்று ஊருக்குப் போய் நேர்ல பார்த்து நான் தான்யாவைக் காதலிக்கறதைச் சொல்லப் போகிறேன்,'' என்று கௌதமின் கேள்விகளுக்குப் பதிலளித்தான்.

''அதுவும் சரிதான்,'' என்று ஆமோதித்தான் அவன் நண்பன்.

''நான் தான்யாவைப் பத்திச் சொன்னா அப்புறம் இப்படி சொல்லாமப் போய் பொண்ணு பார்க்கறதை நிறுத்திட்டு அமைதியா இருப்பாரே. அது போதும். அதுசரி. நான் ஏன் 'போட்டோ'வைப் பார்க்கணும்? நான்தான் தான்யா போதும்ன்னு சொன்னேனே. அவள் சம்மதிச்சாலும் சம்மதிக்கலைன்னாலும் நான் இனி எந்தப் பொண்ணையும் பார்க்கறதா இல்லை. அதனால சும்மா கூட நான் 'போட்டோ'வைப் பார்க்கமாட்டேன்.''

''பாலா! நிஜமா நீயா பேசறது? கொஞ்சம் இரு. எனக்குக் கனவு மாதிரி இருக்கு!'' என்று அவனே அவனைக் கிள்ளிப் பார்த்துவிட்டு, ''அட! நிஜமாவே நீதான் பாலா.... எப்படி இருந்தவன்! இப்படி மாறிட்ட!'' என்று நண்பனைப் பெருமையோடு கிண்டலடித்தான் கௌதம். பாலாவிடம் தன் கடந்த காலத்தைப் பற்றிப் பகிர்ந்து கொண்டதாலும், வர்ஷனாவிடம் அவன் விருப்பத்தைத் தெரிவித்ததாலும் சற்று இலகுவாக உணர்ந்தான். பாலாவும் தன்னால் முடிந்த வரை கௌதமைச் சிரிக்க வைக்க முயன்றான். கௌதமும் அதையே தன் நண்பனுக்காகப் பின்பற்றினான்.

''கிண்டல் போதும்டா கௌதம்! நான் கிளம்பறேன்.''

"அது சரி! நான் கிண்டல் பண்ணலை. உண்மையைத் தான் சொன்னேன்," என்றவன் பின் சீரியசாக மாறி, "ஆனா, நீ மறுபடியும் தான்யாகிட்ட சொல்ல முயற்சி பண்ணி னியா?" என்று கேட்டான்.

"இல்லை கௌதம். மறுபடியும் சொல்லி அவள் மறுபடி யும் என்னை மறுக்கறதை என்னால் தாங்கிக்க முடியாது. அதனால இன்னும் எப்படி அவளுக்குப் புரிய வைக்க முயற்சி பண்ணலாம்னு தான் யோசிச்சிட்டு இருக்கேன். பேசாம சினிமாவுல வர மாதிரி ஒரு 'பில்டிங்' மேல ஏறி நின்னுகிட்டு குதிச்சுடுவேன்னு மிரட்டலாம்னு நினைச்சா எனக்கே சிரிப்பு வருது. அப்புறம் நான் சிரிக்கறதைப் பார்த்து அவளுக்கு என் மேலே எப்படி நம்பிக்கை வரும்? இல் லேன்னா பேசாம நீ வர்ஷனாகிட்ட தான்யாவைக் கூட்டிட்டுப் போய், வயசுப் பசங்கன்னா இப்படித்தான் பொண்ணுங்களைக் கிண்டல் பண்ணுவாங்கன்னு ஒரு 'லெக்சர் கொடுக்கச் சொல்லணும்!" என்றான் சிரிக்காம லேயே.

அதைக் கேட்டுச் சிரித்த கௌதம். "ஏன்டா! வர்ஷனா காலேஜ் படிக்கற பசங்களைப் பத்தி அப்படிச் சொன்னா அதை உனக்கும் சாதகமாக எடுத்துக்குவியா? ரொம்ப உசார்டா நீ!" என்று அவனைக் கிண்டலடித்தான்.

"ஆமாம் பின்னே! இப்படி எல்லாம் நமக்குச் சாதகமா பயன்படுத்தி நான் நல்லவன்னு நானே சொல்லிக்கிட்டா தான் உண்டு. நானே என்னை நல்லவன்னு சொல்ல லைன்னா அப்புறம் மத்தவங்க எப்படி என்னை நல்ல வன்னு சொல்லுவாங்க? ஆனா, நானும் தினமும் காலேஜ் இருக்கிற வழியாத் தானே வரேன்... போறேன். அப்படின்னா நானும் காலேஜ் போறதாத்தானே அர்த்தம். அது கணக்குல சேராதா?" என்று கௌதமிடம் பதில்



சொன்னவன், "ஆனா, தான்யாவைப் பார்த்த நாளில் இருந்து நான் அப்படி இல்லையே. உன்கிட்ட சொல்லி நான் என்ன பண்ணறது? அதை அவள் அல்லவா புரிஞ் சுக்கணும்..." என்று புலம்ப ஆரம்பித்தான்.

"பாலா, நீ நல்லவன்னு வேணா நானும் போய்ச் சொல்லறேன். கவலைப்படாதே!" என்றான் கௌதம்.

அவனைப் பார்த்து முறைத்த பாலா, "என்னது பொய் சொல்லறியா? உனக்கு ஆனாலும் கொழுப்புடா!" என்று கூறியதும், "நீ நல்லவன்னு வேணா நானும் போய் சொல் லறேன்னு சொன்னேன். நீ என்ன நினைச்சுகிட்ட?" என்றான் விஷமச் சிரிப்புடன் கௌதம்.

"சொல்லுவடா சொல்லுவ... இன்னும் கொஞ்சம் நாள் போகட்டும். என்னோட மூளையைக் கசக்கிப் பிழிஞ்சு ஒரு ஐடியா பண்ணறேன். நீ உன்னோட காதலைப் பத்திச் சொன்னதைக் கேட்டதுக்கு அப்புறம் ரொம்ப நாள் காத்திருக்கவும் பயமா இருக்கு. ஆனா..." என்று அன்று மழை நாளன்று நடந்ததையும், பின் அவன் தந்தை வந்த பொழுது நடந்ததைப் பற்றியும். அதன் பின் தான்யா தானாகவே வந்து அவனிடம் கேட்டதைப் பற்றியும் பாலா கௌதமிடம் விலாவாரியாக விவரித்தான்.

"அப்படியா? பரவாயில்லையே. கொஞ்சம் நல்ல விதமாத்தான் முன்னேறி இருக்கு. தான்யா ஏதோ ஒரு காரணமா தன்னோட கூட்டிலிருந்து வெளி வரத் தயங்க றாங்க போல. சீக்கிரமா உன்னோட காதலை மறுபடியும் சொல்ல நல்லா யோசிச்சிட்டு வா. ஆனா, என்னை ஒரு 'டாக்டர்' கிட்ட கூட்டிட்டுப் போன மாதிரி இந்தத் தடவை தான்யாவை ஒரு 'கார்டியாலஜிஸ்ட்' கிட்ட கூட்டிட்டுப் போய் உன் இதயத்தைத் திறந்து காமிக்கச் சொல்லிடாத பாலா. அப்புறம் தான்யா பயந்துடப்போறாங்க!" என்று நண்பனைச் சிரிக்க வைக்க முயன்றான்.

அதுவும் பயனளிக்க, ''கௌதம்! எனக்கும் ஒரு காலம் வரும். அப்போ வச்சுக்கறேன் உன்னை. ஆனா, அது மாதிரி எல்லாம் உனக்கு மட்டும்தான் ஸ்பெஷல்!'' என்று சொல்லிச் சிரித்தவன், ''எனக்கு ஒண்ணு மட்டும் புரியலை கௌதம். அப்பா எப்பொழுதும் வீட்டு விஷயத்தை இப்படி மத்தவங்க முன்னாடி பேசி நான் பார்த்ததே இல்லை. ஆனா, இன்று என்னோட கல்யாண விஷயத்தைப் பத்தி தான்யா இருக்கறதையும் பொருட் படுத்தாம 'நியூஸ்' வாசிச்ச மாதிரி சத்தமா சொல்லிட்டுப் போனார். அவருக்கு இருக்கிற சந்தோசத்துல என்ன பண்ணறதுன்னு தெரியலை போல!'' என்றான்.

''சரி பாலா! நீ கிளம்பு... ரொம்ப இருட்டறதுக்குள்ள ஊர் போய்ச் சேரு. பார்த்து நிதானமா ஓட்டிட்டுப் போ. தனியா போறோம்னு ரொம்ப 'ஸ்பீடா' ஓட்டாதே!'' என்று அவனுக்கு அறிவுரைகளை வழங்கி அவனை வழி அனுப்பி வைத்தான். ஆனால், அவன் அறிவுரைகளை எல்லாம் பாலா கேட்டு என்ன பயன்!

## 14

''உன் கண்கள்
என்னைக் கடிவாளமிட
மனது தொலைந்தது
எண்ணம் அலைந்தது
சிந்தனை சிதறியது
இருந்தும்,
வாழ்க்கை சுவைத்தது
இப்பயணம் பிடித்தது!''



வசந்த், கௌதமிடம் ஹர்ஷினியைப் பற்றிப் பேசிச் சென்ற பின் அவசர வேலையாகச் சென்னைக்குச் சென்று விட்டு மூன்று நாட்களுக்கு முன் தான் திரும்பி இருந் தான். ஊரில் இருந்து வந்தவனுக்கு மது கர்ப்பமடைந் திருக்கிறாள் என்ற நல்ல விஷயத்தை அறிந்து சந்தோசத் தின் அளவு பிடிபடவில்லை.

இந்த மகிழ்ச்சிகரமான விஷயத்தைத் தன் பெற்றவர் களிடமும் அண்ணனிடமும் பகிர்ந்து கொள்ளவென மது அவளின் பிறந்த வீட்டுக்கு இரண்டு நாட்களுக்கு முன் தான் வந்திருந்தாள். அந்த ஞாயிறன்று காலையில் எழுந்து, காலை உணவிற்குப் பின் இரண்டு நாட்களாகத் தன் அண்ணனிடம் கேட்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்த கேள்வியை அவர்கள் இருவரும் தனித் திருந்த பொழுது கேட்டாள் மது.

''அண்ணா! கல்யாணத்துக்கு முன்னாடி வசந்த் என்னைக் காதலிச்ச விஷயம் பற்றி உங்களுக்கு எப்படித் தெரிஞ்சது?''

''எனக்குத் தெரியும்றது உனக்கு எப்படித் தெரியும்?'' என்று அவளின் கேள்விக்குப் பதிலளிக்காமல் எதிர்க் கேள்வி கேட்டான்.

''விளையாடுறீங்களா? நான் கேள்வி கேட்டா பதில் சொல்லாம என்னையே திருப்பிக் கேள்வி கேட்கறீங் களா?'' என்றவள், ''வசந்த்தான் உங்களுக்கு அவரோட காதல் விஷயம் பத்தித் தெரியும் போலன்னு இரண்டு நாளைக்கு முன்னாடி சொன்னார். அதான் கேட்டேன்,'' என்று விளக்கினாள்.

அதைக் கேட்டுச் சிரித்தவன், ''ஆமாம்! உங்க கல்யாணத் தன்று தெரியாம வாயை விட்டுட்டேன்!'' என்றவன்,

பின், "உங்க கல்யாணத்திற்கு முன்னாடியே உன்னோட மாமனார் வந்து என்கிட்ட வசந்த் உன்னை ஆறு வருஷத்துக்கு முன்னாடியே எங்கோ பார்த்துக் காதலிக்க ஆரம்பிச்சதையும் நீ அதை மறுத்துட்டதையும் சொன்னார். ஆனா, இவ்வளவு வருஷம் கழிச்சும் உன்னை மறக்காம வச்ந்த் இருந்ததாலே அவனோட அப்பாவே மேற்கொண்டு பண்ண வேண்டியதைப் பண்ணி உங்க கல்யாணத்தை நடத்தி முடிச்சுட்டார். உனக்கும் எப்பவோ பார்த்த வசந்தைச் சுத்தமா ஞாபகம் இல்லை. அதனால நானா சொல்றதை விட வசந்த் உன்கிட்ட சொல்லறதுதான் நல்லதுன்னு நினைச்சு சும்மா இருந்துட்டேன்.

"அப்பா - அம்மாகிட்டே காதல்ன்னு சொன்னா, அதுவும் வசதியான இடத்தில இருந்து வந்து காதலிக்கறதாச் சொல்லிப் பொண்ணு கேட்டா பயந்து போய் ஏமாத்தறாங்களோன்னு யோசிச்சு குழம்பிடுவாங்க. எனக்குத்தான் அனுபவம் இருக்கே. அதுதான் வேண்டாம்ன்னு சொன்னேன்.

"கல்யாணத்துக்கு அப்புறம் நமக்கு இதைப் பத்தி தெரிய வந்தா அவங்க இதை மறைச்சுட்டதா நாம நினைக்கக் கூடாதுன்னு தான். நான் காதலைப் பத்தி புரிஞ்சுக்குவேன் அப்படிங்கற எண்ணத்துல 'அங்கிள்' வந்து என்கிட்டே சொன்னார். என்னோட காதல் தான் நிறைவேறாமப் போச்சு. என்னோட நண்பனோட காதலாவது நிறைவேறட்டும்ன்னு நினைச்சுத்தான் நானும் யார்கிட்டேயும் சொல்ல வேண்டாம்னு சொல்லி, அவர் உன்னை எங்கோ பார்த்துப் பிடிச்சதா சொல்லி அப்பாகிட்ட வந்து பொண்ணு கேட்கிற மாதிரியே இருக்கட்டும்னு சொன்னேன். அவ்வளவுதான்," என்று அவள் கேள்விக்குப் பதிலளித்தான்.



"ஓஹ்! அப்படியா! ரொம்ப தேங்க்ஸ் அண்ணா! உன்னாலதான் நான் இப்போ ரொம்ப சந்தோசமா இருக்கேன். ஆனாலும், உனக்கும் மாமாவுக்கும் தனியா ஒரு 'அண்டர்ஸ்டாண்டிங்' ஏதோ ஓடிட்டு இருக்கு போல. ம்ம்ம்?" என்றாள் பெருமையுடன்.

அதைக் கேட்டுச் சிரித்தவன், "இது மாதிரி பல பேரோட காதலைச் சேர்த்து வச்சா என்னோட காதல் வெற்றியடையும்ன்னு பார்த்தா... ம்ம்ம்ஹூம்... மது! நான் எது பேசினாலும் வர்ஷனா பிடி கொடுத்துப் பேச மாட்டேங்கிறா. இவளை எப்படித்தான் சமாளிச்சு கல்யாணத்துக்குச் சம்மதிக்க வைக்கப் போறேன்னு தெரியலை!" என்று தன் தங்கையிடம் தன் காதலைப் பற்றிப் புலம்பினான்.

பின் ஞாபகம் வந்தவனாக, "ஆமாம் மது! நான் வர்ஷனாவைப் பத்திச் சொன்னதை வசந்த்கிட்டச் சொன்னியா?" என்று கேட்டான்.

"இன்னும் இல்லேண்ணா. நீங்க சொல்லிட்டுப் போனதுக்கு அப்புறம் அந்த வாரக் கடைசியில நாகூருக்குப் போயிட்டு வந்தவர் உடனே அவசர வேலையா சென்னைக்குக் கிளம்பிப் போயிட்டார். மூணு நாளைக்கு முன்னாடிதான் வந்தார். அதுக்குள்ள நான் இங்க வந்துட்டேன். நான் அங்க போனவுடனே சொல்லிடறேன் அண்ணா," என்றாள்.

"அது இல்லைம்மா! அவன் போன வாரம் அலுவலகத்திற்கு வந்து, 'என்கிட்ட ஹர்ஷினியைப் பத்தி என்ன நினைக்கிற, அவள் உன்னை விரும்பறா, கல்யாணம் பண்ணிக்க முடியுமா?'ன்னு நிற்கிறான்."

"என்னது ஹர்ஷினி உங்களை விரும்பறாளா? ஆனா, அவர் என்கிட்ட இதைப் பத்தி ஒண்ணுமே சொல்லலயே. சரி. அவர்கிட்ட நான் உடனே பேசறேன்," என்றாள்.

''அவன் எப்போதுமே இப்படித்தான். மனசுல ஏதோ ஒண்ணு நினைச்சான்னா வெளியில கொட்டிட்டு அப்புறம்தான் யோசிப்பான். நான் வர்ஷனாவைப் பத்தி அவன்கிட்ட சொன்னா புரிஞ்சுக்குவான். நானும் 'ஆபீஸ்'ல வச்சி அவன்கிட்ட ஒண்ணும் சொல்ல முடியலை. அப்படியே சொன்னாலும் அவன் ஹர்ஷினிகிட்ட போய் என்ன பதில் சொல்லுவான்? அதான் ஒரே யோசனையா இருக்கு. ஹர்ஷினிக்கு வர்ஷனாவைப் பத்தி தெரிஞ்சதுன்னா அப்புறம் அப்படி இப்படின்னு அப்பாவுக்கும் அம்மாவுக்கும் தெரிஞ்சிடும். மத்தவங்க வழியா இவங்களுக்குத் தெரியறதை விட என் வாயால சொல்லறது தானே நல்லது. அதுக்கு முன்னாடி வர்ஷனாவோட சம்மதத்தை வாங்கணும்ன்னு நினைக்கிறேன். என்னோட கவலை எல்லாம் முதல்ல எப்படி வர்ஷனாவைச் சம்மதிக்க வைப்பது என்பது பற்றித்தான்!'' என்றான் வருத்தத்துடன்.

சிறிது நேரம் யோசித்துவிட்டு, ''அண்ணா! அண்ணியோட 'போன் நம்பரை'க் கொடு. நான் அவங்ககிட்ட பேசறேன்,'' என்று அவனுக்குத் தைரியம் அளித்து வர்ஷனாவின் தொலைபேசி எண்ணைக் கேட்டாள் மது.

''நீ ஏதாவது சொல்லிப் பயமுறுத்திடாத. அப்புறம் இருக்கும் இந்த முன்னேற்றமும் போயிடும்!'' என்றான் கவலையுடன்.

''அண்ணா! என்னை நம்புங்க! முதல்ல 'நம்பரை'க் கொடுங்க. நான் பேசறேன்,'' என்று அவனிடம் வற்புறுத்தி வர்ஷனாவின் எண்ணை வாங்கி அவளுக்கு அழைத்தாள்.

'ஸ்பீக்கர் மோடி'ல் போட்டவள், ஒரு பெண்ணின் குரல் ''ஹலோ!'' என்றவுடன் கௌதமைப் பார்த்தாள்.



அவனும் 'வர்ஷனா' என்று சத்தம் வராமல் உதட்டை மட்டும் அசைத்தான். அதைக் கேட்டதும் மது, சிரித்துக் கொண்டே மிக இயல்பாக, ''வர்ஷனா இருக்காங்களா? அவங்களோட நான் கொஞ்சம் பேசணும்,'' என்றாள்.

''நான் வர்ஷனாதான் பேசறேன். நீங்க யாருன்னு தெரிஞ்சுக்கலாமா?''

''வணக்கம் வர்ஷனா! நான் மதுவந்தி. எல்லோரும் மதுன்னு கூப்பிடுவாங்க. நான் உங்க 'ஃபிரெண்ட்' கௌதமோட தங்கச்சி. உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயத்தைப் பத்திப் பேசணும். அதுக்குத்தான் கூப்பிட்டேன்,'' என்று கௌதமின் இதயத்துடிப்பையும், வர்ஷனாவின் இதயத் துடிப்பையும் ஒரே சமயத்தில் ஒரே சத விகிதத்தில் எகிற வைத்தாள்.

கௌதம் அவளைப் பார்த்து, ''ப்ளீஸ்!'' என்று மறுபடியும் சத்தம் வராமல் முணுமுணுத்தான். அவனின் இதயத் துடிப்பை அதிக நேரம் எகிற வைக்காமல், ''அது வேற ஒண்ணுமில்லைங்க அ... வர்ஷனா... நான் இப்போ முதல் முறையா 'ப்ரெக்னன்ட்' ஆகி இருக்கேன். எனக்கு அதைப் பத்தி நிறையத் தெரிஞ்சுக்கணும். அம்மாகிட்ட பேசறதைவிட என் வயசொத்த 'ஃபிரெண்ட்ஸ்' கிட்ட அல்லது தெரிஞ்சவங்கிட்ட அவங்களோட அனுபவத்தைப் பத்தி தெரிஞ்சுக்கலாம்ன்னு நினைச்சேன். என்னோட 'ஃபிரெண்ட்ஸ்' எல்லோரும் வெளியூர்ல இருக்காங்க. 'போன்'ல பேசினாலும் நேரில் பார்த்துப் பேசின மாதிரி வருமா? அதைப் பத்தி அண்ணன்கிட்ட குறைப்பட்டுக் கொண்ட போதுதான் உங்களுக்கு நட்சத்ரான்னு ஒரு பொண்ணு இருக்கிறதைப் பத்திச் சொன்னார். அதுதான் உங்களுக்குச் சம்மதம்னா உங்களை நேரில் பார்த்துப் பேச

லாம்ன்னு நினைச்சேன்,'' என்று அவளிடம் தெளிவாகத் தான் அழைத்த காரணத்தைச் சொன்னாள்.

அவள் சொன்னதைக் கேட்டு கௌதம் வாயடைத்துப் போயிருந்தான். வர்ஷனாவோ மகிழ்ச்சியுடன், ''வாழ்த்துகள் மது! தாராளமா. உங்களைச் சந்திக்கறதுல எனக்கும் சந்தோசமே. எப்போ வேணாலும் பார்க்கலாம்!'' என்று சம்மதித்தாள்.

''நீங்க 'ஃப்ரீயா' இருந்தால், இன்றே வரட்டுமா?'' என்றவளிடம், ''சரி'' என்றாள் வர்ஷனா.

''உங்க வீட்டுக்குப் பக்கத்துல இருக்கிற 'காபி ஷாப்' ல மீட் பண்ணலாமா?'' என்று வலை விரித்த மதுவிடம் -

''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். நீங்க என்னோட வீட்டிற்கு வாங்க,'' என்று மதுவை அவளின் வீட்டிற்கு அழைத்துச் சுலபமாக வலையில் சிக்கிக் கொண்டாள்.

மது பேசி முடித்தபின் கௌதம் அவளிடம், ''மது! 'சூப்பர்'மா! எப்படி இப்படி எல்லாம் யோசிக்கற? பரவாயில்லை. கல்யாணத்துக்கு அப்புறம் கொஞ்சம் அறிவு வளர்ந்திருக்கு உனக்கு. வசந்துக்குத்தான் 'தேங்க்ஸ்' சொல்லணும்!'' என்று உற்சாகமாக ஆரம்பித்துத் தன் தங்கையைக் கிண்டலடித்தான்.

அவள் சிணுங்குவதைப் பார்த்தவன், உடனே, ''சரி சரி! சும்மாதான் வம்பு பண்ணினேன். ஆனா, என்ன காரணம் சொல்லிட்டு நான் உன்னோட வர்றது?'' என்றான் உற்சாகம் வடிந்த குரலில்.

''அண்ணா! நானும் அவங்களும் பேசும் பொழுது நட்சத்ராவிற்கு 'போர்' அடிக்காம இருக்க நீங்க அவளுக்கு 'கம்பெனி' கொடுக்கறதுக்காக உங்களைக் கூட அழைத்து வந்திருக்கிறேன்னு சொல்வோம். இல்லேன்னா எனக்குத்



துணையாக வந்திருக்கறதாச் சொல்வோம். அதெல்லாம் ஒரு பிரச்சனையே இல்லை!'' என்று அதற்கு ஒரு தீர்வையும் சொன்னவள், தன் அண்ணனுடன் கிளம்பித் தன் வருங்கால அண்ணியை அவர்களின் வீட்டில் சந்திக்கச் சென்றாள்.

வர்ஷனாவைப் பார்த்த முதல் பார்வையிலேயே மதுவிற்குத் தன் வருங்கால அண்ணியை மிகவும் பிடித்து விட்டது. வர்ஷனாவிற்கும் தன் வருங்கால நாத்தனாரை (ஆனால், அவளுக்குத்தான் தெரியாதே) உடனே பிடித்து விட்டது.

''வாங்க மது! எப்படி இருக்கீங்க? உங்களைச் சந்திக்கறது எனக்கு ரொம்ப சந்தோசமா இருக்கு!'' என்று சரளமாக ஆரம்பித்தவளின் வார்த்தைகள் மதுவிற்குப் பின்னால் நின்றிருந்த கௌதமைப் பார்த்தவுடன் வெளி வர மறுத்தன.

அதைப் பார்த்தும் பார்க்காதவள் மாதிரி மிக இயல்பாக, ''எனக்கும் உங்களைச் சந்திக்கறது மிக்க மகிழ்ச்சி.. உங்க பொண்ணு நட்சத்ரா எங்கே?'' என்று மது கேட்டாள். அவள் பதில் அளிக்கும் முன், ''நான் தனியா வரத்தான் நினைச்சேன். ஒரு நாள் கௌதமோட தொல்லை இல்லாமல் சந்தோசமா இருக்கலாம்ன்னு நினைச்சா, இந்த அம்மாதான் தனியாப் போக வேண்டாம்ன்னு சொன்னாங்க. அதுதான் வேற வழியில்லாம கௌதமையும் அழுது புரண்டு கூட்டிட்டு வந்தேன். உங்களுக்குத் தொந்தரவா இருந்தா என்னை மன்னிச்சுடுங்க!'' என்று அவனுக்கு வர இஷ்டமில்லை என்றும் அவள் தான் கட்டாயப்படுத்தி அவனை அழைத்து வந்ததாகவும் வர்ஷனாவிடம் கூறினாள்.

அவளின் விளக்கத்தைக் கேட்ட வர்ஷனாவும் தெளிவடைந்து சகஜமானாள். "ச்சே! கௌதமை எனக்கு என்ன தெரியாதா? அவர் வந்தா எல்லாம் எனக்குத் தொல்லையில்லை!" என்று அவள் வாயாலேயே பதிலையும் வர வைத்தாள் மது.

மனதுக்குள் தங்கையின் பேச்சை மெச்சிக் கொண்ட கௌதம், அமைதியாக அமர்ந்திருந்தான். அப்பொழுது உள்ளறைக்குள் இருந்து வெளியே ஓடி வந்த நட்சத்ரா, மதுவிடம்,

"யாரோ ஒரு 'ஆன்ட்டி' வரதா அம்மா சொன்னாங்க. நீங்க தான் அந்த 'ஆன்ட்டி'யா? நீங்க வருவீங்கன்னு நான் குளிச்சு எனக்குப் பிடிச்ச 'பிங்க் கலர்ல டிரஸ்' போட்டிருக்கேன். உங்களுக்குப் பிடிச்சதா?" என்று சுற்றிச் சுற்றிக் காண்பித்து மதுவின் உள்ளத்தைக் கொள்ளை போகச் செய்தாள்.

அவளை அணைத்தவாறே, "ஆமாம்டா செல்லம்! நான்தான் அந்த ஆன்ட்டி, உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்," என்று அவளுக்கு வாங்கிய 'சாக்லேட்' மற்றும் விளையாட்டுப் பொருளை அவளிடம் தந்தவள், "ரொம்ப அழாகா இருக்கு உங்களோட 'பிங்க் டிரஸ்.' எங்களுக்கும் 'பிங்க் கலர்' தான் ரொம்பப் பிடிக்கும்!" என்று அவளையும் வலையில் விழ வைத்தாள்.

அவள் வாங்கிச் சென்றதை வாங்குவதா வேண்டாமா என்று தன் அன்னையைப் பார்க்க, வர்ஷனா வாங்கிக் கொள்ளச் சொன்னவுடன், அதை வாங்கிக் கொண்டு, "தேங்க்ஸ் ஆன்ட்டி!" என்று அவள் கன்னத்தில் முத்தமிட்டாள் நட்சத்ரா.



"இதெல்லாம் அவர் தான் வாங்கிட்டு வந்தார்!" என்று கௌதமைச் சுட்டிக்காட்டி, "போங்க. அவருக்கும் போய் 'கிஸ்' கொடுங்க!" என்றாள் மது.

அதைக் கேட்ட நட்சத்ராவும் கௌதமிடம் ஓடிச் சென்று அவன் இரு கன்னத்திலும் மாறி மாறி முத்தமிட்டாள். அவனும் அவளை அப்படியே மடியில் உட்கார வைத்துக் கொண்டான். நட்சத்ராவும் அவன் மடியில் இருந்தவாறே மதுவிடம் பல கேள்விகளைக் கேட்க, அவளும் அதற்கு இனிமையாகப் பதிலளித்துக் கொண்டிருந்தாள்.

கௌதம் அமைதியாக இருப்பதைப் பார்த்து, "ஏம்பா கௌதம்! கொஞ்சம் வாயைத் திறந்து பேசுங்கப்பா. நான் மட்டும் வந்ததிலிருந்து பேசிக்கிட்டே இருக்கேன். நீங்க வாயே திறக்கலை!" என்று வேண்டுமென்றே அவனை வம்பிற்கு இழுத்தாள் மது.

அவளை விநோதமாகப் பார்த்தவன் வாயைத் திறந்து பேசும் முன்னர், நட்சத்ராவோ, "அப்பா கௌதம்! பேசுங்க அப்பா!" என்று மது சொல்வதைப் போலச் சொல்லி வர்ஷனாவைத் திகைப்பிலும், கௌதமைப் பூரிப்பிலும் ஆழ்த்தினாள்.

வர்ஷனா, வாய் திறந்து பேசும் முன்னரே மது, "கௌதம்ப்பா...! நீங்க நட்சத்ரா கூட பேசி விளையாடுங்க. நாங்க கொஞ்சம் தனியாப் பேசணும்," என்று அவர்களைக் கூட்டுச் சேர்த்துவிட்டு வர்ஷனாவைப் பார்த்துச் சிரித்தாள்.

நட்சத்ராவும் தனக்குப் பிடித்த 'ஆன்ட்டி' சொன்னதைக் கடைப்பிடிக்க கௌதமுடன் விளையாட ஆரம்பித்தாள். அவனும் தன் தங்கை போட்டுக் கொடுத்த கோட்டில் ரோட்டைப் போட்டு, அவளுடன் பேசிச் சிரித்து, விளையாடினான்.

பின் அவர்களைத் தனித்து விட எண்ணி, வர்ஷனா விடம், ''நான் நட்சத்ராவை வெளியில அழைத்துப் போயிட்டு கொஞ்ச நேரம் கழிச்சு வரேன். அதுவரைக் கும் நீங்க ரெண்டு பேரும் பேசிகிட்டு இருங்க. உனக்கு ஒண்ணும் ஆட்சேபனையில்லையே?'' என வர்ஷனா விடம் கேட்டான் கௌதம்.

அவளும் சம்மதம் தெரிவிக்க, நட்சத்ராவை வெளி யில் அழைத்துச் சென்று 'ஐஸ்கிரீம்', மிட்டாய் என அவளுக்கு வேண்டிய லஞ்சம் கொடுத்து அவளைத் தன் கட்சியில் தக்க வைத்துக் கொண்டான் கௌதம்.

சில மணி நேரம் கழித்து வந்தவன், மதுவை அழைத்துக் கொண்டு வீடு திரும்பும் வழியில், ''மது, எதுக்கு நீ என்னை அப்பான்னு திடீர்னு சொன்ன?'' என்றான் தெளிவுபடுத்திக் கொள்ளும் நோக்குடன்.

அவளோ அவனைப் பார்த்துச் சிரித்து விட்டு, ''உங் களுக்கு இன்னும் புரியலையா? நட்சத்ராவும் உங்களை அப்படிக் கூப்பிடட்டும் என்றுதான். நாம் கிளம்பி வந்ததற்கு அப்புறம் அண்ணி கண்டிப்பா நட்சத்ரா கிட்ட இதைப் பத்தி ஏதாவது சொல்லுவாங்க. அப்படிச் சொல் லாட்டியும் அவங்களாவது ஏதாவது யோசிப்பாங்க. அவங்க மனசைக் கொஞ்சம் குழப்பிவிட்டுட்டு வந்திருக் கேன். அவ்வளவுதான்!'' என்றவளை மெச்சும் பார்வை யுடன் பார்த்தான் கௌதம்.

அதன் பின் வந்த நாட்களில் வர்ஷனாவின் வீட்டிற்கு மதுவின் வரவு அடிக்கடி நிகழ்ந்தது. அதே போல வர்ஷனாவும் நட்சத்ராவுடன் மதுவின் வீட்டிற்கு அடிக்கடி செல்ல, இருவரும் நல்ல தோழிகளாயினர்.



திங்களன்று காலையில், கௌதம் அலுவலகத்திற்குக் கிளம்ப ஆயத்தமாகிக் கொண்டிருந்த பொழுது அவனின் கைபேசி அடித்தது. அவன் எடுத்தவுடன், மறுமுனை யில், ''ஹலோ! கௌதம் இருக்காங்களா?'' என்று விசா ரித்தது ஒரு பெண்ணின் பதட்டமான குரல்.

யாரென்று யோசித்தவாறே, ''நான் கௌதம்தான் பேசறேன். சொல்லுங்க,'' என்றான்.

''உங்களுக்குப் பாலான்னு யாராவது தெரிஞ்சவர் இருக் காங்களா?'' என்று அவசரம் அவசரமாக விவரம் அறிய முயன்றாள் அந்தப் பெண்.

''ஆமாம்! நான் அவனோட 'ஃபிரெண்ட்' தான்... என்ன விஷயம்? சொல்லுங்க,'' என்றான் இவனும் பதட்டத்துடன்.

''நான் 'ஹாஸ்பிடல்'ல இருந்து பேசறேன். உங்க 'ஃபிரெண்டு'க்கு கார்ல வரும் போது ஜி.ஆர்.டி. காலேஜ் கிட்ட விபத்து ஆயிடுச்சு. அவரோட உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை. ஆனா, கையிலேயும் கால்லேயும் எலும்பு முறிஞ்சிருக்குன்னு சொல்லறாங்க. 'ஆபரேஷ னுக்கு ரெடி' பண்ணணும். நீங்க உடனே கிளம்பி இங்கே வாங்க,'' என்று தெரிவித்து, மருத்துவமனையின் விவரத் தையும் கூறிப் பின் பேசியை வைத்தாள்.

உடனே கௌதம் தன் பெற்றோர்களிடமும் மதுவிட மும் தெரிவித்து விட்டு மருத்துவமனைக்கு விரைந்து சென்றான். செல்லும் வழியிலேயே வசந்திற்கு அழைத்து விஷயத்தைச் சொன்னான். அவன் மருத்துவமனைக்குச் சென்ற பொழுது பாலா வலியில் துடிப்பதைப் பார்த்துத் தாங்க முடியாதவனாக மருத்துவர்களிடம் கூடிய விரை வில் அறுவைச் சிகிச்சையை ஆரம்பிக்குமாறு கேட்டுக் கொண்டான். அவர்களும் தங்களால் இயன்றவரை முயலுவதாகத் தெரிவித்தனர்.

அதன் பின்தான் தனக்குத் தகவல் கொடுத்த பெண்ணைப் பார்த்து நன்றி கூறினான். அவளிடம் பேசிக் கொண்டிருந்த பொழுதே கௌதமின் தோழி நிரஞ்சனி அங்கே வர அவளிடம் கவனத்தைத் திருப்பினான்.

''நிரஞ்சனி, சாரி! உன்னைத் தொந்தரவு பண்ணினதற்கு. உனக்குத் தெரிஞ்ச 'டாக்டரி'டம் நீ போய்ப் பேசினால் நன்றாய் இருக்கும் என்றுதான் உன்னைக் கூப்பிட்டேன்,'' என்றான் கௌதம்.

''கௌதம், அதெல்லாம் ஒண்ணும் இல்லைடா. எனக்கும் இன்று இங்க வர வேண்டி இருந்தது. நான் எல்லாம் பேசியாச்சு. நீ ஒண்ணும் பயப்படாத!'' என்று கண்களைச் சுழல விட்டவளின் பார்வையில், முகத்தில் கலவரத்துடன் நின்றிருந்த அந்தப் பெண் பட்டாள். அவளிடம், ''நீ கமலா அம்மாவோட பொண்ணு சந்தனா தானே? நீ எப்படி இங்கே?'' என்று விசாரித்தாள்.

அவளின் கேள்விக்கு, ''இவங்கதான் பாலாவுக்கு விபத்து நடந்ததைப் பத்தி 'ஆம்புலன்ஸு'க்கு போன் பண்ணி வரவழைச்சு எனக்கும் தகவல் சொன்னாங்க நிரஞ்சனி. உனக்கு இவங்களைத் தெரியுமா?'' என்று கேட்டான் கௌதம்.

''ஆமாம் கௌதம்! எங்க வீட்டுக்குப் பக்கத்துலதான் இவங்க வீடும். இவங்க அம்மா என்கிட்ட அப்பப்போ வந்து ஊசி போட்டுட்டுப் போவாங்க. அப்படித்தான் பழக்கம்,'' என்று பதிலளித்தவள், ''சந்தனா, நீ வேணா கிளம்பும்மா. இனி நாங்க பார்த்துக்கறோம்,'' என்றாள்.

சந்தனா தயக்கத்துடன் ஏதோ சொல்ல முயல, அந்தச் சமயத்தில் வசந்த் அங்கு பரபரப்புடன் வந்து சேர்ந்தான்.



இனிப் பேசி ஒன்றும் ஆகப் போவதில்லை என்று தீர்மானித்த அந்தப் பெண், ''சரிங்க! நான் கிளம்பறேன். நாளைக்கு வந்து பார்க்கிறேன்,'' என்று தயங்கியவாறே விடைபெற்றாள்.

பாலாவின் நல்ல நேரம், உடனே மருத்துவர்களும், அறுவைச் சிகிச்சை செய்யும் அறையும் கிடைக்க அன்றே அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டு அவனை அவன் அறைக்கு அனுப்பி வைத்தனர். அவன் உள்ளே செல்லு முன் கௌதமைப் பார்த்து, ''அப்பாவுக்குச் சொல்லாதே... அவர் கவலைப்படு...'' என்று முடிக்கும் முன்பே நினைவை இழந்தான்.

சிகிச்சை நடப்பதற்கு முன்பே வசந்தும் வந்து விட்டது கௌதமுக்கும் சற்று ஆறுதலாக இருந்தது. இனி கவலைப்படுவதற்கு ஒன்றும் இல்லை என்று மருத்துவர்கள் தெரிவித்த பின்தான் இருவரும் சற்று நிம்மதி அடைந்தனர். அவர்கள் சொன்ன விவரத்தை கேட்டுக் கொண்டு பாலாவைப் பார்க்க அவன் அறைக்கு விரைந்தார்கள்.

அங்கே சென்ற பொழுது மயக்கத்திலிருந்த பாலா, ''தான்யா!, தனு... தனு...'' என்று புலம்புவதைக் கேட்டவர்களின் கண்கள் கலங்கின... அதன் பின் கௌதம், அவன் அலுவலகத்திற்கு அழைத்து விவரத்தைக் கூறியவன் அன்றிரவு அங்கேயே தங்கிக் கொண்டான். வசந்த், இரவுவரை கௌதமுக்குத் துணை இருந்தவன், ஒரு நபருக்கு மேல் இரவு அங்கே தங்க இயலாது என்றுணர்ந்து வீடு திரும்பினான்.

பாலாவிற்கு நினைவு திரும்பியவுடன் அவனின் படுக்கைக்கு அருகில் இருக்கும் இருக்கையில் அமர்ந்து

கொண்டு, மெல்லிய குரலில், ''இப்போ எப்படி இருக்கு பாலா? ரொம்ப வலிக்குதா?'' என்று கவலையுடன் மெல்லிய குரலில் வினவினான் கௌதம்.

''பரவாயில்லை...! அப்பாவுக்குச் சொல்லலையே?'' என்று கௌதமைப் பார்த்துக் கவலையுடன் கேட்டான்.

''பாலா! அப்பாகிட்ட சொல்லாம இருக்கறது சரியில்லைன்னு நான் அவரைக் காலையிலேயே கூப்பிட்டு விஷயத்தைச் சொல்லிட்டேன். 'டிரைவரு'டன் மதியமே வந்துட்டார். இவ்வளவு நேரம் இங்கதான் இருந்தார். நான் தான் அவரை உனக்கு எப்போ நினைவு திரும்புன்னு தெரியாது. நீங்க போய் 'ரெஸ்ட்' எடுங்கன்னு சொல்லி, அவர் எவ்வளவோ மறுத்தும் அனுப்பி வச்சேன். இரு. முதல்ல அவருக்குக் கூப்பிட்டு சொல்லிடலாம்,'' என்று பாலாவின் தந்தைக்கு அழைத்தான் கௌதம்.

அவரை அழைக்கும் அதே சமயத்தில், ''வசந்த் இப்போ வரைக்கும் இங்கதான் இருந்தான். இப்போதான் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி கிளம்பிப் போனான். நாளைக்கு வருவதாகச் சொன்னான்,'' என்று அவனுக்கு வசந்த் வந்து சென்ற தகவலையும் தெரிவித்தான்.

பாலாவின் தந்தையிடம் விஷயத்தைக் கூறியவன், பாலாவிடம் பேசியைக் கொடுத்தான். விஷயத்தை அறிந்து சந்தோசமடைந்தவர், ''ஏம்பா பாலா, இப்போ எப்படி இருக்கு? இப்படிப் பதறடிச்சிட்டியே!'' என்று கலங்கினார். பின் பாலாவின் நலனைக் கருத்தில் கொண்டு, இயல்பாகச் சிறிது நேரம் பேசிவிட்டு உடனே கிளம்பி வருவதாகத் தெரிவித்தார். பாலா சொன்னதைக் கேட்காமல் இருந்தவரை கௌதம்தான் பாலாவை



அவன் பார்த்துக் கொள்வதாகவும், பார்வையாளர்களின் நேரம் முடிந்து விட்டது என்றும், அவரைச் சமாதானப் படுத்திக் காலையில் வருமாறும் கூறிவிட்டுப் பேசியை வைத்தான்.

சற்று நேரம் அமைதியாக இருந்த கௌதம், பாலாவிடம், ''உனக்குத் தூக்கம் வருதா? தூக்கம் வந்தா, படுத்துத் தூங்கு!'' என்றான் கனிவாக.

''இல்லை... கொஞ்சம் அசதியா மட்டும் இருக்கு!'' என்றான் நலிந்த குரலில்.

''அப்படியா? உனக்கு இன்னும் கொஞ்ச நேரத்துல இன்னொரு 'டோஸ்' மருந்து மாத்துவாங்க. அதுககப்புறம் உனக்கு மறுபடியும் தூக்கம் வந்திடும். ரொம்ப வலிக்குதா?'' என்று அவன் கையை இதமாக வருடியவாறே கேட்டு, அவன் வலியின் அளவை அறிய முயன்றான் கௌதம்...

''ரொம்பவெல்லாம் வலிக்கலை...''

''இப்படியா கார் ஓட்டுவாங்க? விஷயத்தைக் கேட்டு அப்படியே நடுங்கிப் போயிட்டேன்!'' என்றான் கௌதம் ஆதங்கத்துடன்.

''நான் கார் ஓட்டும் லட்சணம்தான் உனக்குத் தெரியுமே! இதெல்லாம் நான் பண்ணலைன்னா தான் நீ ஆச்சர்யப்படணும்!'' என்று கௌதமின் கவலையைக் குறைக்க முயன்றான் பாலா.

அவனின் பதிலில் துணுக்குற்றவன், ''அப்படி என்ன தான் சிந்தனை? நல்ல வேளை! பெருசா ஒண்ணும் ஆகலை. உன் அப்பாவைப் பத்தி நினைச்சுப் பாருடா. நீ ஒரே பையன். பாவம் அவரு.''

''இனிமேல் பார்த்து வரேன்...'' என்று சிரித்தான் பாலா.

''நீ பார்த்து வர்றது இருக்கட்டும். நான் கேட்ட கேள்விக்கு எங்க பதிலையே காணோம்? அப்படி என்ன யோசனை, 'ரோட்'ல கண்ணில்லாம?'' என்று மறுபடியும் கேட்டான் கௌதம்.

''வந்து... தான்யாவைப் பத்திதான்... அவ கடைசி வரைக்கும் என்னையும், என்னோட காதலையும் புரிஞ்சிக்காட்டி என்ன பண்ணறது? அதை எப்படித் தாங்கறதுன்னு திடீர்னு ஒரு பயம் வந்திடுச்சு. உன்னை மாதிரி எனக்குத் தாங்கிக்க முடியுமான்னு யோசிச்சுட்டு வந்தேன்... அப்போ கரெக்டா நடுவுல யாரோ 'டூ-வீல'ரை விட்டுட்டாங்க!'' என்றான் பாவமாக.

''பாலா! அப்படியெல்லாம் ஒண்ணும் நடக்காது. அப்படி நடக்க நான் விடமாட்டேன். நீ நல்லபடியாத் தேறி வா. நான் எல்லாத்தையும் பார்த்துக்கறேன். நான்...'' என்று அவனிடம் ஏதோ சொல்ல எத்தனிக்கும் பொழுதே அங்கே 'நர்ஸ்' ஒருவர் வந்து பாலாவைப் பரிசோதித்து அவனுக்கு வேண்டியதைச் செய்துவிட்டு, ''அவரை ரொம்ப நேரம் பேச விடாதீங்க. தூங்கட்டும். இல்லைன்னா வலி தெரியும்!'' என்று கௌதமிடம் அறிவுறுத்திவிட்டுச் சென்றார்.

''பாலா! நீ குணமாகி வா... நாம் இதைப் பத்தி அப்புறம் பேசலாம்,'' என்றான் கௌதம். ''அப்பாகிட்ட சொல்லலாம்ன்னு போனப்போ அங்க வாழைத்தோப்பைக் குத்தகைக்கு விடறதுல ஏதோ பிரச்சனை வந்து, நானும் அப்பா கூட சேர்ந்து அலைய வேண்டியதாப் போச்சு.



அதனால அவர்கிட்டேயும் சொல்ல முடியலை கௌதம்,'' என்றவனிடம்,

''அப்பாகிட்டதானே. சீக்கிரமாச் சொல்லிடலாம். அதைப் பத்தி ஒண்ணும் கவலைப்படாத!'' என்று தன் நண்பனுக்குத் தைரியமளித்து அவனைத் தூங்கச் சொன்னான் கௌதம்.

மறுநாள் பாலாவைப் பார்க்கவென வந்த சந்தனா, அவனிடம், ''சாரி! உங்க மேல எந்தப் தப்பும் இல்லை. நான்தான் வண்டியை ஓட்டத் தெரியாம உங்க கார் முன்னாடி குறுக்க வந்துட்டேன். என்னை மன்னிச்சுடுங்க. என்னாலதான் உங்களுக்கு இவ்வளவு வேதனையும்!'' என்று கண் கலங்கினாள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. நானும் என் சிந்தனையை வேற எங்கோ வச்சிட்டு இருந்தேன். 'ரோட்'ல இருந்திருந்தா நீங்க வந்தது தெரிஞ்சு 'ரைட்'ல வளைச்சிருக்கலாம். அப்படிப் பண்ணியிருந்தா, எனக்கும் அடி பட்டிருக்காது. அதனால் உங்க மேல எந்தத் தப்புமில்லை!'' என்று அவளைச் சமாதானப்படுத்த பாலா முயன்றான்.

இவர்களின் பேச்சைக் கேட்டவாறு வந்த கௌதமிடம், ''நேத்தே உங்ககிட்ட சொல்ல நினைச்சேன். ஆனா, நிரஞ்சனி அக்கா இருந்ததுனால ஒண்ணும் சொல்ல முடியலை. என் 'ஃபிரெண்ட்'கிட்ட இருந்து வீட்டிற்குத் தெரியாம அவளோட வண்டியை வாங்கிட்டு வந்தேன். என்னாலதான் இப்படி ஆயிடுச்சுன்னு எங்க வீட்ல தெரிஞ்சா ரொம்பவும் பயந்துடுவாங்க. அதனால் தான். 'ப்ளீஸ்' என்னை மன்னிச்சுடுங்க!'' என்று கௌதமைப் பார்த்துக் கைஎடுத்துக் கும்பிட்டாள்.

பாலா சந்தனாவிடம், ''சந்தனா, என்னைக் கொல்ல ஏதாவது 'பிளான்' பண்ணிட்டு வந்தீங்களா?'' என்று கேட்டான்.

அவளோ பதறி, ''ஐயையோ! உங்களைப் போய் நான் ஏன் கொல்லணும்? நீங்க ஏன் இப்படிச் சொல்லறீங்க?'' என்றாள்.

பாலா அவளிடம், ''இல்லை. ஏதோ என்னை வேணும்ன்னே வந்து இடிச்ச மாதிரி பேசறீங்களே, அது தான் கேட்டேன். நீங்க பிளான் பண்ணாமதானே வந்து இடிச்சீங்க. இப்படி எதிர்பாராம நடந்தா அதுக்குப் பேரு 'ஆக்சிடென்ட்'. நீங்க என்னமோ ''இன்சிடன்ட்'' நடந்த மாதிரி சொல்லறீங்க. உங்க மேல ஒரு தப்பும் இல்லை. அதனால கவலைப்படாம வீட்டுக்குப் போங்க. நான் நல்லா இருக்கேன். எனக்கும் ரொம்ப நாளா 'ரெஸ்ட்' எடுக்கணும்னு ஒரு ஆசை. கௌதம்கிட்ட கேட்டா விடமாட்டான். அதனால உங்க புண்ணியத்துல நான் நல்லா 'ரெஸ்ட்' எடுத்துக்கறேன்!'' என்றான் சிரித்த வாறே.

அவள் ஒன்றும் பேசாமல் அமைதியாக இருக்க, ''நான் தான் சொன்னேன் இல்லை சந்தனா. என்னோட 'பிரேக்' கொஞ்சம் 'பிரேக்' எடுக்கப் போனதால எலும்பு 'பிரேக்' ஆயிடுச்சு!'' என்று சொல்லி சந்தனாவைச் சிரிக்க வைத் தான் பாலா.

தவறு தன் நண்பன் மேல் இல்லை என்று தெரிந்ததும் நிம்மதியடைந்த கௌதம், தன் நண்பனின் முயற்சியைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப நடந்து கொண்டான். அவனும் சந்தனாவின் குற்ற மனப்பான்மையைக் குறைக்க எண்ணியவனாக, ''உங்களுக்கு எங்க பாலா



கார் ஓட்டறதைப் பத்தி சரியா தெரியாது!'' என்று சில விஷயங்களைக் கூறி அவளை இயல்புக்குக் கொண்டு வந்தவன். அவளை வீட்டிற்கு அனுப்பி வைத்தான்.

அன்று மாலை. அவன் அலுவலகத்தில் விபத்தைப் பற்றி அறிந்து. அவனைப் பார்க்க மருத்துவமனைக்கு ஒரு படையே திரண்டு வந்தது. அதில் பாலாவின் இதயம் கவர்ந்த கள்ளியும் இருந்ததைப் பார்த்த பாலா விற்குத் தலை கால் புரியவில்லை. அமைதியே உருவாக நின்றிருந்தவளைப் பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போனான். வந்தவர்களில் சுவாதி தான் மிகவும் உருகிவிட்டாள்.

''ரொம்ப வலிக்குதா?'' என்றும், ''சீக்கிரமா குண மடைஞ்சு நீங்க சீக்கிரமா மீண்டும் வேலைக்கு வர ணும்!'' என்றும், ''நீங்க இல்லாம ஆபீஸ் நல்லாவே இல்லை!'' என்றும்பேசி தான்யாவின் எரிச்சலுக்கு ஆளானாள். பாலாவின் கைக்கட்டையும் கால் கட்டையும் மெதுவாகத் தடவிக் கொடுத்து. தான்யாவை மேலும் சினமுறச் செய்தாள்.

அத்துடன் நிறுத்தி இருந்தால் பரவாயில்லை. ஒவ்வொருத்தராக விடைபெற்றுச் செல்லக் கடைசிவரை அங்கேயே இருந்த சுவாதி, கிளம்பிச் செல்லுமுன், கைப்பையில் இருந்து ஒரு பேனாவை எடுத்து அவனின் கைக்கட்டில் 'கெட் வெல் சூன்! ஈகர்லி வெய்டிங் ஃபோர் யுவர் ரிடர்ன்! - வித் லவ், சுவாதி!' என்று கையெழுத் திட்டு தான்யாவை ஆத்திரமுறச் செய்தாள். அதை மறைக்கும் பொருட்டு சுவாதியிடம் வெளியில் காத் திருப்பதாகக் கூறி அறையை விட்டு வெளியில் சென் றாள் தான்யா. சுவாதிதான் தான்யாவைத் தன் வண்டியில் அங்கு அழைத்து வந்தாள். சுவாதியே மீண்டும் அவளை

அழைத்துக் கொண்டு வீட்டில் விட்டு விடுவதாகக் கூறவும், தான்யாவும் அவள் இருக்கும் வரை அங்கேயே இருக்க வேண்டியதாகி விட்டது.

தான்யா அங்கே வந்ததிலிருந்து அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த பாலா, சுவாதியின் செயல்களினால் சினமுற்ற தான்யா அதை முகத்தில் அப்பட்டமாகக் காண்பிக்க, அவளைத் தப்பாக அர்த்தம் செய்து கொண்டு, 'ச்சே! நான் அடிபட்டிருக்கும் போது கூட அவளோட கோபம் குறையலையா? நான்தான் ரொம்ப சந்தோசப்பட்டுட்டேன் போல. எல்லோரும் வந்து என்னைப் பார்க்கும் போது இவள் மட்டும் வரலைன்னா தப்பா நினைச்சுக்குவாங்கன்னு தான் வந்திருக்கா போல...' என்று அவனுக்குத் தெரிந்த விதத்தில் ஒரு திரைக் கதையை மூளையில் எழுதி, அதை மனதில் அரங்கேற்றம் செய்து கொண்டிருந்தான்.

அதே சமயம், அலுவலகத்திலிருந்து வந்திருந்தவர்களைப் பேச விட்டுவிட்டு வெளியே அமர்ந்திருந்த பாலாவின் தந்தைக்கு அருகில் சென்று அமர்ந்த தான்யா, அவரிடம், ''சார்'! நீங்க எப்படி இருக்கீங்க? நீங்கதான் தைரியமா இருக்கணும். எலும்பு முறிவெல்லாம் சீக்கிரமா குணமாயிடும்!'' என்று அவரை ஆறுதல் படுத்த முயன்றாள்.

''நேத்து விஷயத்தைக் கேட்டு எனக்கு என்ன பண்ணறதுன்னே தெரியலை. கண்ணெல்லாம் இருட்டிட்டு வந்திடுச்சு. நல்லவேளை கௌதம் இருந்ததனால பரவாயில்லை. இவனுக்கு எப்பவுமே இப்படித் தான். எதையாவது பண்ணிட்டு எதையாவது யோசிச்சிட்டு இருப்பான். இவனைச் சீக்கிரமா ஒருத்தி கையில



பிடிச்சிக் கொடுத்துட்டா வரப் போறவ பார்த்துக்குவா. நானும் அங்க ஊர்ல நிம்மதியா இருக்கலாம்!'' என்று அவர் மனக் குமுறலை அவளிடம் வெளியிட்டார்.

''நீங்க நினைச்ச மாதிரியே எல்லாம் நடக்கும். ஒண்ணும் கவலைப்படாதீங்க. நீங்க உங்க உடம்பைப் பார்த்துக்கோங்க!'' என்று அவள் சொல்லிக் கொண்டிருக்க, அவளைக் கண்களில் ஒரு மின்னலுடன் பார்த்தார். ''நீ சொன்னா கண்டிப்பா நடக்கும்!'' என்று அவள் கைகளைப் பற்றிக் கொண்டு அவர் சொல்லும் போதே, சுவாதி வெளியில் வர, தான்யா அவரிடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினாள்.

பகலில் கௌதம் அலுவலகத்திற்குச் செல்ல, பாலாவின் தந்தை வெங்கடேசனும், கௌதமின் பெற்றோர்களும் பாலாவுடன் மருத்துவமனையில் இருந்தனர். இரவில் கௌதம் அவனுக்குத் துணை இருக்க, மேலும் இரண்டு நாட்கள் உருண்டோடின. அவனைப் பரிசோதித்து ஆலோசனைகளை வழங்கி வீட்டுக்கு அனுப்பிவிட்டனர் மருத்துவர்கள். வெங்கடேசன் தங்கள் ஊரிலிருந்து ஒரு வேலைக்காரம்மாவை (நல்லம்மாள்) ஏற்பாடு செய்து, கோவைக்கு அழைத்து வந்தவர் அங்கேயே தங்கிக் கொண்டார். ஏற்கெனவே வீட்டிற்கு வேலை செய்ய ஆள் இருந்ததால் அனைவரும் சேர்ந்து பாலாவை நன்றாகக் கவனித்துக் கொள்ள, நாட்கள் விரைந்தோடின.

பாலா மருத்துவ மனையிலிருந்து வீடு திரும்பிய மறுநாள், வெள்ளியன்று மதியம் கௌதம் - பாலாவின் அலுவலகத்தில் வேலையில் ஆழ்ந்திருந்த தான்யாவைப் பார்த்துப் பேசவென வந்த நபரைப் பார்த்து அதிசயித்தாள் தான்யா.

## 15

''மனமிருக்கு, மருக முடியவில்லை!
மனமிருப்பது உன்னிடத்தில்!
ஏக்கமிருக்கு, ஏங்க முடியவில்லை!
ஏங்குவது உனக்காக!
நினைவிருக்கு, மகிழ முடியவில்லை!
நினைப்பது உன் மறுப்பை!
வாழ்விருக்கு, சுவைக்க முடியவில்லை!
வாழ்வது உன்னுடன்,
என் தனிமையில்!''

பாலாவை மருத்துவமனையில் சென்று பார்க்காத தால், வெள்ளியன்று காலையிலேயே கிளம்பி அவன் வீட்டிற்குச் சென்ற மது, காலை வேளை முழுவதையும் பாலாவுடனும் அவன் தந்தையுடனும் செலவழித்தாள்.

மது அங்கிருந்து கிளம்பும் முன் பாலாவின் வீட்டிற்கு வருகை புரிந்தாள் சந்தனா. அவள், 'தன்னால்தான் பாலாவிற்கு இவ்வாறு ஆகிவிட்டது!' என்ற குற்றக் குறுகுறுப்பில் அவனை அடிக்கடி மருத்துவமனையில் சென்று பார்த்து நலம் விசாரித்தாள். அவளைப் பற்றி அறிந்த வெங்கடேசனும், 'உன்னால் தான் என் மகனுக்கு இப்படி ஆகிவிட்டது!' என்று அவளை மனத்திற்குள் கூடத் திட்டாமல் அவளிடம் இயல்பாகப் பழகினார். பாலாவும் ஒவ்வொரு முறையும் அவளிடம் தன் திறமை அனைத்தையும் காட்டி அவளைச் சிரிக்க வைத்து, அவளின் குற்ற மனப்பான்மையை அவள் மனதில் இருந்து நீக்கி விட்டிருந்தான். அப்படித்தான் நினைத் திருந்தான்.



சந்தனாவைப் பார்த்த மது யார் என்று யோசித்துக் கொண்டிருந்த பொழுதே, மதுவிடமும் தன் புலம்பலை ஆரம்பித்தாள் சந்தனா. 'இந்தப் பொண்ணு ஏன்தான் இப்படி கஷ்டப்படறாளோ?' என்று நினைத்த பாலா மதுவிடம், ''மது! உனக்கு ஒரு ஜோக் சொல்லட்டுமா?'' என்று கேட்டுப் பேச்சைத் திசை திருப்பினான்.

சந்தனாவைப் பற்றி அறிந்த மதுவும் பாலாவின் முயற்சியைப் புரிந்து கொண்டு, ''சொல்லுங்க. சொல் லுங்க! உங்க 'ஜோக்ஸ்' எல்லாம் கேட்டு எவ்வளவு நாள் ஆச்சு?'' என்றவுடன், ''ஒருத்தன் போய் 'பிட்ஸா' கடை யில ஒரு முழு 'பிட்ஸா' ஆர்டர் கொடுத்தான். அப்போ கடைக்காரரும் அந்த 'பிட்ஸா'வை எத்தனை 'ஸ்லைஸா' வெட்டணும்? நாலா இல்லை எட்டா?'ன்னு கேட்டார். அதுக்கு 'ஆர்டர்' கொடுத்தவனும், 'நாலு போதும். அதையே என்னால் சாப்பிட்டு முடிக்க முடியாது. அப் புறம் எட்டை எப்படி என்னால சாப்பிட முடியும்?'ன்னு சொல்லியிருக்கான். அவன் பதிலைக் கேட்ட கடைக் காரர் நொந்துட்டார்!'' என்று சிரித்தான் பாலா.

அதைக் கேட்ட மதுவும் சந்தனாவும் சிரிக்க, ''ஐயோ அண்ணா! இனி 'பிட்ஸா' சாப்பிடறப்போ எல்லாம் எனக்கு இதுதான் ஞாபகம் வரும்!'' என்றாள் மது.

''சரி! உங்க கிட்ட ஒரு கேள்வி கேட்கிறேன். கரெக்டா பதில் சொல்லுங்க, பார்க்கலாம். கம்ப்யூட்டர் பசிச்சா என்ன சாப்பிடும்?'' என்று கேட்டான்.

பதில் தெரியாமல் மதுவும் சந்தனாவும் ஒருவரை ஒருவர் பார்த்து முழிக்க, ''சிப்ஸ், ஒன் பயிட் அட் எ டைம்!'' என்றான் பாலா.

''ஐயோ! ஆளை விடுங்க. நான் கிளம்பறேன்,'' என்று மது சொல்ல, ''இதுக்கே அசந்தா எப்படி? இப்போ தானே

ஆரம்பிச்சிருக்கேன்!'' என்று சொல்லி சந்தனாவையும் சேர்த்து அலற வைத்தான். இப்படியே அவர்களை ஒரு வழி பண்ணிய பின்புதான் அவர்களை அங்கிருந்து கிளம்பவிட்டான். சந்தனாவும், நடந்ததை மறந்து விட்டுச் சிரித்தவள், ''உங்க கூட கொஞ்ச நேரம் பேசினாலே போதும். மனசுல இருக்கிற கவலை எல்லாம் பறந்திடுது!'' என்று கூறிவிட்டுக் கிளம்பினாள்.

தன் அண்ணனிடம் இருந்து பாலா தான்யாவிடம் காதலைச் சொன்னதிலிருந்து நடந்த அனைத்தையும் தெரிந்து கொண்ட மதுவும், அவனிடம், ''நீங்க எப்பவுமே இப்படிச் சிரிச்சுட்டே இருங்க அண்ணா! இதை நாங்க எல்லோருமே ரொம்பவுமே 'மிஸ்' பண்ணறோம்!'' என்று கூறிவிட்டுச் சென்றாள்.

பாலாவைப் பார்த்துவிட்டு வீட்டிற்குத் திரும்பும் வழியில், தான்யாவை அவன் அண்ணனின் அலுவலகத்தில் போய்ச் சந்தித்தாள் மது.

தன் அண்ணனிடம் சிறிது நேரம் பேசிவிட்டு, தான்யா விடம் சென்றவள், சிநேகமாக அவளைப் பார்த்துப் புன்ன கைத்து, ''ஹலோ! நான் மது, கௌதமோட தங்கை!'' என்று அவளை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

அவளை அங்கு எதிர்பார்க்காத தான்யா, ''வாங்க வாங்க! நான் தான்யா. உங்களை ஒரு தடவை பார்த் திருக்கேன். எப்படி இருக்கீங்க?'' என்றாள். அன்று பாலா விடம் இவளைப் பற்றி அனாவசியமாகத் தப்புத் தப்பாகப் பேசியது இதுவரை மனதில் உறுத்திக்கொண்டிருந்தது. அதைத் துடைக்க இதை ஒரு சந்தர்ப்பமாக எண்ணி மதுவுடன் நன்றாகப் பேசினாள் தான்யா.

''நான் நல்லா இருக்கேன். நீங்க இப்போ 'பிஸி'யா இருக் கீங்களா? உங்ககிட்ட கொஞ்சம் தனியாப் பேசணும்.



எப்போ 'டைம்' கிடைக்கும்? என்று அவளிடம் கேட்டாள்.

''நான் இப்போ பெரிசா 'பிஸி'யா இல்லை. எனக்கும் கொஞ்சம் வெளில போய் ஒரு காபி குடிச்சா நல்லா இருக்கும். இருங்க போய் 'பெர்மிசன்' சொல்லிவிட்டு வரேன்,'' என்று கௌதமிடம் சென்று கேட்டுவிட்டு மது வுடன் வெளியேறினாள். அருகிலிருந்த 'காபி ஷாப்'பிற்குச் சென்றவர்கள், தங்களுக்கு வேண்டியதை வாங்கிக் கொண்டு, அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தவுடன், ''சொல்லுங்க மது. என்ன பேசணும்?'' என்றாள் தான்யா.

''என்னைச் சும்மா மதுன்னே கூப்பிடுங்க. இந்த வாங்க போங்க என்கிற மரியாதை எல்லாம் வேண்டாம்!'' என் றாள் மது.

அவள் சொன்னதைக் கேட்டுச் சிரித்த தான்யா. ''சரி மதுன்னே கூப்பிடறேன்! ஆனா, ஒரு 'கண்டிஷன்.' நீங் களும் என்னைத் தான்யான்னே கூப்பிடுங்க. இந்த வாங்க போங்க என்கிற மரியாதை எல்லாம் வேண்டாம்!'' என்று அவளை மாதிரியே சொல்லிக் காண்பித்தாள்.

அதைக் கேட்டுச் சிரித்தவள், ''எனக்கேவா?'' என்று கூறிவிட்டு, பின், ''தான்யா, எனக்குச் சுத்தி வளைச்சுப் பேசத் தெரியாது. நான் இப்போ பாலாண்ணாவைப் பத்திப் பேச வந்திருக்கேன். அவரைப் பத்தி நீ என்ன நினைக்கிற?'' என்று நேரிடையாக விஷயத்திற்கு வந்தாள். 'நீ என்ன கேட்பது, நான் என்ன சொல்வது?' என்று முறுக் கிக் கொள்ளாமல், அதுவும் மதுவிடம் முறுக்கிக் கொள்ள முடியாமல், என்ன சொல்வது என்று புரியாமல் மௌன மாக அமர்ந்திருந்தாள் தான்யா.

அவள் பேசாமல் இருப்பதைப் பார்த்த மது, ''என்ன தான்யா? நான் கேட்ட கேள்விக்குப் பதிலைக் காணோம்?

என்கிட்ட எதுக்குப் பதில் சொல்லணும் என நினைக்கிறியா?'' என்றாள்.

''மது! ச்சே! அப்படியெல்லாம் இல்லை. ஆனா, அ... அவரைப் பத்தி நினைக்க என்ன இருக்கு?'' என்றாள் தடுமாற்றத்துடன்.

''நிஜமாகவே ஒண்ணுமே இல்லையா? அவர் உங்களைக் காதலிக்கற விஷயம் எனக்குத் தெரியும்!'' என்றவள், தான்யாவின் முக மாற்றத்தைப் பார்த்து, ''ச்சே... ச்சே! பாலாண்ணா அப்படி எல்லாம் எல்லோர்கிட்டேயும் சொல்லலை. என்னோட கணவர் வசந்த் அவரோட 'ஃபிரெண்ட்'. அவர் தான் என்கிட்டே சொன்னார்,'' என்று விளக்கமளித்து, அவள் முகம் தெளிவடைந்த பின், தான் சொல்ல வேண்டியதைச் சொன்னாள்.

''எனக்கு அஞ்சு வருஷமா பாலாண்ணாவைத் தெரியும். அவர் பொண்ணுங்களைக் கிண்டல் பண்ணுவார். இல்லைன்னு சொல்லலை. ஆனா சும்மா ஒரு 'ஜாலி'க்குத்தான் பண்ணுவார். அவர் அப்படி 'ஜாலி'யாப் பண்ணினது ஏதோ ஒரு காரணத்தினால உன்னை ரொம்பவும் பாதிச்சிருக்கு. ஆனா நிஜமா அவர் இப்போ அப்படி இல்லை. முன்னமே யாரையும் அசிங்கமாவோ இல்லை 'சீரியஸா'க வோ அப்படி எல்லாம் கிண்டல் பண்ணினது இல்லை. அவரோட குணத்திற்கு அவர் கல்யாணமே பண்ணிக்க மாட்டார்ன்னு தான் நினைச்சிட்டு இருந்தோம். அப்படித்தான் அவரும் எங்ககிட்ட சொல்லிட்டு இருப்பார். ஆனா, அவருக்கு இப்போ கல்யாண ஆசை வந்திருக்கு. அதுவும் காதல் கல்யாணம். அவர் எப்படி உன் மேல காதல்ல விழுந்தார் என்பது எனக்குத் தெரியலை. அதை என்னால முதல்ல நம்பவும் முடியலை.



''அவர் உன்கிட்ட காதலைச் சொன்னப்போ நீ மறுத்திட்டதாச் சொன்னார். அதிலிருந்து வாழ்க்கையே வெறுத்துப் போன மாதிரிதான் இருக்கிறார். அவர் இப்படி இருந்து நாங்க பார்த்ததே இல்லை, தான்யா. எப்பவும் சிரிச்சிட்டு, கலகலப்பா, சோகமா இருக்கிறவங்களைக் கூட வாழ்க்கை சந்தோசமா வாழத்தானேன்னு உற்சாகப்படுத்துவார். இப்போ என்னடான்னா அடியோட மாறிப் போயிட்டார். எப்பவுமே உன்னோட நினைப்போடதான் சுத்திட்டு இருக்கிறார். அடிபட்டு மயக்கத்தில இருந்தப்போ கூட உன் பேரைத்தான் புலம்பிட்டு இருந்திருக்கிறார்.

''இங்க பாரு தான்யா! நான் பாலாண்ணாவுக்காகப் பேச வந்திருக்கேன் என்கிறதை மறந்துடு. என்னை ஒரு தோழியா நினைச்சு உன்னோட மனசில என்ன இருக்குன்னு சொல்லு. நீ யாரு இதைப் பத்திக் கேட்கறதுக்குன்னு சொல்ல மாட்டேன்னு நினைக்கிறேன். நான் இதை எதுக்கு சொல்லறேன்னா நீ அவரை முதல் முதலா பார்த்தப்போ ஏதோ தப்பா நடந்துகிட்டார் அப்படிங்கற கோபத்துல அவரோட நல்ல மனசைப் புரிஞ்சுக்கத் தவறிட்டியோன்னு நினைச்சுத்தான். 'ப்ளீஸ்', சொல்லு தான்யா,'' என்று அவளிடம் பாலாவை மறுத்த காரணத்தைக் கேட்டாள் மது.

சற்று நேரம் பேசாமல் ஏதோ யோசித்துக் கொண்டிருந்தவள் பின், ''நீ இவ்வளவு தூரம் கேட்கும் போது நான் சொல்லாம இருக்கிறது நல்லா இல்லை. என்னைத் தோழியா நினைச்சுக் கேட்டதுக்கு ரொம்ப நன்றி. எனக்கும் கூட யார்கிட்டயாவது மனசு விட்டுப் பேசினா மனசுக்கு நல்லாதான் இருக்கும்!'' என்று முறுவலித்தாள்.

அதன் பின் அவள் கூறிய விஷயத்தைக் கேட்டு மது அதிர்ந்தாள்.

''நானும் என்னோட தங்கையும் சென்னைல 'பி.ஈ.' படிச்சிட்டு இருந்தோம். நான் கடைசி வருடம் படிக்கும் பொழுது என் தங்கை இரண்டாவது வருடம் படிச்சிட்டு இருந்தா. அப்போ தான் எங்களோட கெட்ட காலம் ஆரம் பிச்சது போல. நான் 'காலேஜ்' கடைசி வருஷம் படிக் கறப்போ அப்பாவோட வேலையில அவர் லஞ்சம் வாங் காமலேயே அவர் மேல யாரோ வேண்டாதவங்க புகார் கொடுத்து அவரை வேலையிலிருந்து நீக்கிட்டாங்க. வருமானம் இல்லாம என்னையும், என்னோட தங்கச்சியை யும் கஷ்டப்பட்டுப் படிக்க வச்சாங்க. நான் படிக்கும் போதே அப்பா - அம்மாவுக்கு உதவியா இருக்க 'பார்ட்டைம்' வேலை செஞ்சிட்டு இருந்தேன். நான் வேலை பார்க்கும் அதே இடத்துல ஒரு பொறுக்கியும் வேலை செஞ்சிட்டு இருந்தான். எனக்கு ஆரம்பத்துல அவனைப் பத்தி ஒன்றும் தெரியாம நானும் அவனோட 'ஃபிரெண்ட்லி' யாகப் பழகினேன். அப்புறம்தான் அவனோட சுயரூபம் தெரிய வந்தது. தெரிஞ்சவுடனே ஒதுங்கிட்டேன். அதுக்கப் புறம் அவன் தினமும் ஏதோ ஒரு வகைல தொல்லை செஞ்சிட்டு இருந்தான். ஒரு நாள் என்கிட்டே வந்து என்னைக் காதலிக்கறதாச் சொன்னான். நான் எனக்கு இதிலெல்லாம் இஷ்டம் இல்லை. எனக்குக் குடும்பத்தைக் காப்பாத்தற பொறுப்பு இருக்குன்னு சொல்லி மறுத் துட்டேன்.

''ஆனா, அவன் என்னை விடலை. அவனை 'லவ்' பண்ணச் சொல்லி மிரட்டிட்டு இருந்தான். கடைசியிலே ஒரு நாள் அவன் அத்து மீறி நடந்துக்கிட்டப்போ



எல்லோர் முன்னாடியும் அவன் கன்னத்துல பளார்ன்னு அறைஞ்சுட்டேன். அந்த வன்மத்தை மனசுல வச்சிகிட்டு என்னைப் பழி வாங்கறேன்னு என் தங்கை மேல 'ஆசிட்'டை வீசிட்டான். எனக்கு அவனை அடையாளம் தெரியும் என்கிறதுனால அவன் பக்கத்துல வந்தாலே நான் உஷாராயிடுவேன்னு என் தங்கையை அப்படிப் பண்ணி இருக்கான். அதுவுமில்லாம, எனக்கு நடந்ததுன்னா கொஞ்ச வருஷத்துல நான் சரியாயிடுவேனாம். ஆனா, என் தங்கைக்கு நடந்தா, வாழ்க்கை முழுவதும் என்னால தான் அவளுக்கு இப்படி ஆச்சுன்னு நான் கஷ்டப்படு வேன்னு அவள் மேல ஊத்தி இருக்கான்.

''என்ன மாதிரி ஒரு வக்கிரம் அவன் மனசுல இருந் திருக்கும்! அவனே அதை வேற என்கிட்ட சொன்னான். அவள் மேல 'ஆசிட்' வீசறதுக்கு முன்னாடிதான் நான் பஸ்ல இருந்து இறங்கி வந்தேன். அவன் முகத்துல இருக்கிற வன்மத்தைப் பார்த்து, அவன் என் தங்கையை ஏதோ பண்ணப் போறான்னு நினைச்சு அவளருகே போறதுக்குள்ள காலம் கடந்திருந்தது. அவன் அப்படி வீசினப்போ பட்டதுதான் இந்தத் தழும்பு...'' என்று தன் முகத்தில் இருந்த தழும்பைக் காட்டிவிட்டுப் பிறகு பேச்சைத் தொடர்ந்தாள்.

''அவ்வளவு எரிச்சல்! சில துளிகளே பட்ட எனக்கே அப்படி எரிஞ்சா, அவளுக்கு எப்படி இருந்திருக்கும்! பாவம்! துடியா துடிச்சிட்டா. அவளை உடனே 'ஹாஸ் பிடல்' கூட்டிட்டுப் போய்ச் சிகிச்சை கொடுத்தோம். ஏற்கெனவே அப்பாவுக்கு வேலையில இப்படி ஆயிடுச் சுன்னு வேதனையில இருந்தாங்க. இப்போ பொண் ணுக்கும் இப்படி ஒரு நிலைமையான்னு கவலை வேற.

அந்த அதிர்ச்சியில அப்பாவுக்கு மாரடைப்பு வந்திடுச்சு. தங்கையைக் கவனிக்கறதா, இல்லை... அப்பாவைக் கவனிக்கறதா? எப்படியோ ரெண்டு பேரும் ஒரு வழியா உடல் தேறி வந்தாங்க. இடைப்பட்ட காலத்துல நான் 'காலேஜ்' போக முடியாமப் போச்சு. அம்மாவை மட்டும் தனியா அவங்களைப் பார்த்துக்க சொல்லி விட்டுட்டுப் போகவும் என்னால முடியலை. என் 'ஃபிரெண்டோ'ட அப்பாவை வச்சு 'காலேஜ்'ல எப்படியோ அனுமதி கேட்டு கடைசி 'செமஸ்டரை' அடுத்த வருடம்தான் படிக்க முடிஞ்சது. அந்தப் படுபாவியால நேர்முகத் தேர்வுல 'செலக்ட்' ஆகியும் 'எக்ஸாம்' எழுதாம வேலைக்குப் போக முடியலை.

''எனக்கு வேலை கிடைச்சதும் எங்க கஷ்டம் எல்லாம் தீர்ந்துடுச்சுன்னு ரொம்பச் சந்தோசமா இருந்தோம். அதுக்கப்புறம் தங்கையோட படிப்பும் வீணாப் போச்சு. ரெண்டு பேருக்குச் சிகிச்சை எல்லாம் முடிச்சு தங்கை நன்றாக ஆன் பின்னாடி அவள் முகத்தைப் பார்த்து அவள் அலறினது இன்னும் என் கண் முன்னாலேயே இருக்கு. அதன் பிறகு அவள் 'காலேஜு'க்குப் போக மாட்டேன்னு சொல்லி வீட்ல இருந்துகிட்டா. அவளுக்கு நடந்த அந்தச் சம்பவத்துக்கு அப்புறம் வெளில போறதுக்கே பயப்பட்டா. அவ மனசாலேயும் பாதிக்கப் பட்டிருந்ததை அப்போ தான் நாங்க உணர்ந்தோம்.. நானும் அவளைக் கட்டாயப்படுத்த வேண்டாம்ன்னு விட்டுட்டேன்.

''முதல்ல இருக்கிற பணத்தை எல்லாம் வைத்து, பத்தாதுன்னு கடனை வாங்கி அவளுக்கு 'பிளாஸ்டிக் சர்ஜெரி' பண்ணி அவள் முகத்தைச் சரி பண்ணினோம்.



அப்பாவுக்குத் தெரிஞ்சவர் இங்க கோவையிலதான் இருக்கார். அவர் தான் எல்லோருக்குமே ஒரு மாற்றமா இருக்கும் என்று எங்களை இங்க வரச் சொன்னார். அதனால நாங்களும் இங்க வந்துட்டோம். நானும் ஒரு நல்ல வேலை தேடிக்கிட்டேன். எனக்கு வேலை தேடறப்போ கூட கவலையா தான் இருந்தது. என்னோட படிப்பைப் பத்தி ஏதாவது கேள்வி கேட்பாங்களோன்னு. ஆனா, உன்னோட அண்ணன் அப்படியெல்லாம் கேட்கலை. அம்மாவும் அப்பாவும் இப்போ பரவாயில்லை. நல்லா இருக்காங்க. ஆனா, தங்கையோட கவலைதான் அவங்க மனசை அரிச்சிட்டே இருக்கு. அவளை ஒரு வழியாகச் சமாதானப்படுத்தி 'IGNOU'வில பி.எஸ்.சி. கம்ப்யூட்டர் சயின்ஸ்' படிக்க ஏற்பாடு பண்ணிட்டேன். அவளும் இப்போ நல்லா இருக்கிற மாதிரிதான் இருக்கு.

''எனக்கு இன்னும் நிறையக் கடமைகள் இருக்கு. வாங்கின கடனை எல்லாம் அடைக்கணும். முக்கியமா என்னோட தங்கைக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைச்சுக் கொடுக்கணும். அப்பா - அம்மாவைக் கண் கலங்காம பார்த்துக்கணும். அப்படி இருக்கும் போது எனக்கு எப்படி என்னோட கல்யாணத்தைப் பத்தி யோசிக்க முடியும்? அதுவும் என் தங்கைக்கு என்னாலதான் இந்த நிலைமைன்னு நினைக்கறப்போ மனசு ரொம்பவும் வலிக்குது.

''அதுமட்டுமில்லாம இந்த மாதிரி ஒரு அனுபவத்துக்குப் பிறகு நான் எப்படி ஒரு ஆணை நம்பறது? நான் முதன் முறையா பாலாவைப் பார்க்கும் பொழுது அவரும் இது மாதிரி ஏதோ பொண்ணுங்களைக் கிண்டல் பண்ணிட்டு இருந்தார். பொண்ணுங்களைக் கிண்டல் பண்றது சகஜம் என்று நினைச்சிட்டு இருந்தப்போதான்,

'உன்னை விட உன் தங்கையை அதிகம் நினைக்கி றேன்'னு வேற ஏதோ உளறிட்டு இருந்தார். அதுதான் எனக்குக் கோபம் வந்தது. இப்போ சொல்லு, மது. என் னோட கோபம் தப்பா?'' என்று கண்ணீருடன் முடித்தாள்.

தான்யா கூறியதைக் கேட்ட மதுவோ கலங்கிய கண் களுடன், ''தான்யா! சாரி... இப்படி ஒன்றை நான் நிச்சயம் எதிர்பார்த்து வரலை. கஷ்டம்தான். உன்னோட நல்ல மனசுக்கு நீ நினைச்ச மாதிரியே உன் தங்கைக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைச்சிக் கொடுப்ப. உனக்கு எப்போ என்ன தேவையோ, உன்னோட தோழி நான் இருக்கிறேன் என்கிறதை மட்டும் இனி நீ மறக்காதே!'' என்று அவள் கைகளைப் பற்றி ஆறுதல் கூறினாள். பின் தொடர்ந்து, ''சரி. அந்தப் பொறுக்கியைச் சும்மாவா விட்ட?'' என்று ஆவேசத்துடன் கேட்டாள்.

''இல்லை! அவன் மேல 'போலீஸ்'ல புகார் கொடுத்து அவனைக் கம்பி என்ன வச்சுட்டுத்தான் சென்னையை விட்டு வந்தேன். இனிமேலாவது வேற பொண்ணோட வாழ்க்கையில விளையாடாம இருப்பானே, அதான்....'' என்றாள் கண்களில் கோபம் மின்ன. பின், ''அப்பாவும் அம்மாவும் அதுக்கு எனக்குத் துணை இருந்தாங்க!'' என்றாள் முகம் இளகி.

''தான்யா! சாரி! நான் வந்து உன்னோட துன்பத்தை எல்லாம் மறுபடியும் கிளறிவிட்டுட்டேன் போல. என்னை மன்னிச்சிடு!'' என்று அவளிடம் மன்னிப்பு வேண்டி னாள் மது.

''நான்தான் உனக்கு நன்றி சொல்லணும். இதைப் பத்தி யார்கிட்டயாவது மனசு திறந்து பேச மாட்டோ மான்னு தவிச்சிட்டு இருந்தேன். எனக்கு இப்போ



கொஞ்சம் பரவாயில்லை!'' என்று அவர்கள் இருவரும், மாற்றி மாற்றி மன்னிப்பையும், நன்றியையும் சொல்லிக் கொண்டு விடைபெற்றுச் சென்றனர்.

விடை பெறுவதற்கு முன்னால், மது அவளிடம், ''ஒண்ணே ஒண்ணு மட்டும் சொல்லறேன். பாலாவும் அந்தப் பொறுக்கியும் ஒண்ணு கிடையாது தான்யா. ரெண்டு பேரையும் ஒரே தராசில் வச்சு எடை போட... பாலாண்ணா உன்னோட கடமையைக் கண்டிப்பா தன் கடமையா நினைச்சு நிறைவேற்றுவார். அது மட்டும் எனக்கு நிச்சயமாத்தெரியும். கொஞ்சம் யோசிச்சுப் பாரு. அதவுமில்லாமல், நீ இப்படி உன்னோட கூட்டுக்குள் ளேயே அடைபட்டுக் கிடந்தால் அந்தப் பொறுக்கி ஜெயிச்ச மாதிரி ஆயிடாதா?'' என்று வேறு ஒரு கல் எறிந்துவிட்டுத்தான் விடைபெற்றாள்.

அன்றிரவு மது தன் அண்ணனின் காதலைப் பற்றி யும் அவன் எடுத்த முடிவைப் பற்றியும் வசந்திடம் தெரிவித்தாள். ''அண்ணா சென்னையில 'காலேஜ்' படிக்கறப்போ ஒரு பொண்ணை மனசார விரும்பியிருக் கிறார்,'' என்று அவள் மேலும் தொடரும் முன், ''என்னது, கௌதம் 'லவ்' பண்ணினானா? என்கிட்ட அதைப் பத்தி அவன் சொன்னதே இல்லையே. இரு, அவனை வச்சுக் கிறேன்!'' என்று ஆச்சரியமாக இடையிட்டான்.

''ஆமாம்! ஒரு காரணமாத்தான் அதைப் பத்தி இது வரைக்கும் யார்கிட்டேயும் சொன்னது இல்லை,'' என் றாள் மது.

''அப்புறம் என்ன ஆச்சு?'' என்றான் வசந்த் பரபரப் புடன். தன் அண்ணனின் காதலைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லி முடித்த மது, ''இதைத்தான் நான் உங்களிடம்

சொல்லணும்ன்னு நினைச்சிட்டு இருந்தப்போ ஹர்ஷினி வந்து உங்களைக் கூட்டிட்டு போயிட்டா. அப்புறம் நீங்களும் சென்னைக்குப் போய்ட்டீங்க. அதனால சொல்ல முடியாமப் போயிடுச்சு. அண்ணனும் இந்த ரெண்டு வாரமா உங்ககிட்ட சொல்லணும்ன்னு நினைச்சுட்டுத்தான் இருந்தார். அதுக்குள்ள பாலாண்ணாவுக்கு வேற இப்படி ஆயிடுச்சு!'' என்றாள்.

''அப்படியா? ச்சே! நான் இதைப் பத்தி ஒண்ணும் தெரியாம, அவசரக் குடுக்கை மாதிரி ஹர்ஷினியைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி அவன்கிட்ட கேட்டுட்டு வந்தேன்,'' என்று வருத்தத்துடன் தெரிவித்தான்.

''ம்ம்ம்... அதை பத்தி அண்ணா சொன்னார்.''

''அது சரி! போய் வர்ஷனாகிட்ட தன்னோட காதலைச் சொல்ல வேண்டியதுதானே? இன்னும் எதுக்கு வெயிட் பண்ணிட்டு இருக்கான்?''

''எல்லோரும் உங்களை மாதிரியே அவசரக் குடுக்கையா இருப்பாங்களா என்ன?'' என்று அவள் இயல்பான குணம் தலைதூக்க, அதற்குத் தகுந்த சன்மானத்தையும் வாங்கிய பின்தான் அவளைத் தொடர்ந்து பேச விட்டான் அவள் கணவன்.

''எல்லாம் சொன்னார். ஆனா, அவங்கதான் இதைப் பத்தி பேச்சை எடுத்தாலே அண்ணனை ஒரு எதிரி மாதிரி பார்க்கறாங்க. முடியாதுன்னு வேற சொல்லிட்டாங்க. அதனால இப்போ 'ஃபிரெண்ட்ஸா' மட்டும் இருக்கலாம் என்கிற அளவுக்கு முன்னேறியிருக்கு. ஆனா...'' என்று அவள் எடுத்த முயற்சிகளையும் சொல்லி, சென்ற வாரம் தங்கள் வீட்டிற்கு வந்த வர்ஷனாதான் அந்தப் பெண் என்று முடித்தாள்.



''அப்படியா? அவங்க பொண்ணு நட்சத்ரா கூட ரொம்ப ஸ்வீட்... கூடிய சீக்கிரமே அவங்க காதல் வெற்றியடையட்டும். நீ வேணாப் பாரு. வர்ஷனா சீக்கிரமா மனசு மாறிடுவாங்க!'' என்று ஆருடம் சொன்னான் வசந்த்.

அதைக் கேட்டுச் சிரித்த மது, ''எனக்கும் ஆசைதான். அது சரி. இப்போ ஹர்ஷினியை எப்படிச் சமாளிக்கப் போறீங்க?'' என்று தன் அண்ணன் தெரிவித்ததைக் கவலையுடன் பகிர்ந்து கொண்டாள்.

''நீ இந்த மாதிரி சமயத்துல ரொம்பக் கவலைப்படாத. அதைப் பத்தி யெல்லாம் நான் பார்த்துக்கிறேன்,'' என்றான் அனுசரணையோடு.

கௌதமின் காதலைப் பற்றி அறிந்தவுடன், ''ஹர்ஷினி, கௌதமிற்கு உன்னைக் கல்யாணம் பண்ணிக்கற எண்ணம் இல்லைன்னு சொல்லிட்டான். அதுக்கப்புறம் அவனை எப்படி வற்புறுத்தறது? அப்படியே வற்புறுத்திக் கல்யாணம் பண்ணி வச்சாலும் நீங்க சந்தோசமா இருக்க முடியாது,'' என்று அவளுக்குத் தெரிந்த விஷயத்தை, அவளுக்குத் தெரியாது என்று எண்ணி மழுப்பலாகச் சொல்லி முடித்தான் வசந்த்.

ஹர்ஷினியோ, ''நினைச்சேன். உனக்கு உன் தங்கையை விட உன்னோட நண்பன்தான் முக்கியமாப் போயிட்டான். ச்சே! நீ மட்டும் சந்தோசமா இருந்தா போதும்ன்னு நினைக்கறே. உன் தங்கையோட சந்தோசத்தைப் பத்தி கொஞ்சமாவது நினைச்சுப் பார்த்தியா?'' என்றாள் கோபத்துடன்.

''என்ன பேசற ஹர்ஷினி? அதைப் பத்தி நினைச்சுப் பார்த்ததாலதான் சொல்லறேன். புரிஞ்சுக்கோ. காதலை எல்லாம் கட்டாயப்படுத்தி வர வைக்க முடியாது.

இப்போ உனக்கு ஏமாற்றமாத்தான் இருக்கும். ஆனா, நிதானமா யோசிச்சுப் பாரு. அப்போ புரியும்,'' என்று அவளுக்குப் புரிய வைக்க முயன்றான்.

அவன் சொல்வதைக் கேட்டவள் ஒன்றும் பேசாமல் அங்கிருந்து நகர்ந்து விட்டாள். வசந்தும் தன் தங்கை யோசிக்கட்டும் என்று விட்டுவிட்டான். அவளும் யோசித்தாள்... மிக மிகத் தெளிவாக!

பாலா மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வந்த பின் அவனைப் பார்க்கவென உற்றார் உறவினர்கள், நண்பர்கள் என்று ஒருவர் மாற்றி ஒருவர் வந்து அவனைப் பார்த்து விட்டுச் சென்றனர். பாலாவிற்கு நடந்த விபத்தைப் பற்றி அறிந்தவுடன் அவன் அத்தைகள் வேறு ஒப்பாரி வைத்துக் கொண்டு குடும்பத்துடன் அவன் வீட்டில் கூடிவிட்டனர். அதைப் பார்த்த அவன் தந்தை ஒன்றும் சொல்லாமல் ஒதுங்கிவிட, அவர்களைப் பற்றி உண்மையறிந்த பாலாவும் வந்தவர்களைப் புண்படுத்தக் கூடாதென்று அமைதியாக அதைச் சகித்துக் கொண்டான். இப்படியே இரண்டு வாரங்கள் உருண்டோடி விட்டன. இப்பொழுது அவனால் எழுந்து நடக்க முடிந்தது. அவனே அவன் வேலைகளைச் செய்யும் அளவு தேறியும் விட்டான். அதைப் பார்த்து அவன் தந்தைக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

பாலா ஒருவழியாக அவன் அத்தைகளை ஊருக்கு அனுப்பி வைத்தான். கௌதமிடம் நச்சரித்து, அவனுக்கு வீட்டில் சும்மா இருப்பது 'போர்' அடிப்பதாகவும், தேவையில்லாத எண்ணங்கள் அவனை அலைக்கழிப்பதாகவும், ஏற்கெனவே செய்து கொண்டிருந்த 'ப்ராஜெக்டை' நேரத்தில் முடிக்க அவனும் சேர்ந்து செய்தால்தான்



முடிக்க முடியும் என்றும் பல காரணங்களை முன் நிறுத்தி, அலுவலக வேலைகளை வீட்டிலிருந்தவாறே பார்த்துக் கொள்ளப் போவதாகத் தெரிவித்து, அவ்வாறே செய்து கொண்டிருந்தான்.

பலமுறை சொல்லிப் பார்த்த கௌதமும் அவன் பிடிவாதத்தைத் தளர்த்திக் கொள்ளாமல் இருப்பதைப் பார்த்துப் பேசாமல் இருந்து கொண்டான். பாலாவுடன் சேர்ந்து அந்த 'ப்ராஜெக்டை'த் தான்யாவும் சுவாதியும் தான் செய்து கொண்டிருந்தார்கள். வீட்டிலிருந்தபடியே வேலை செய்து கொண்டிருந்தவன், தேவை என்றால் சுவாதியை மட்டுமே அழைத்து வேண்டிய விவரத்தைத் தெரிவித்துவிட்டு வைத்து விடுவான். அன்று மருத்துவ மனையில் சுவாதியின் மேல் கோபத்தை முகத்தில் அப்பட்டமாகக் காட்டி வெளியேறிய பின் தான்யாவோடு பேசுவதையே விட்டுவிட்டான். அவளை எதற்கு வீணாகக் கோபப்பட வைக்க வேண்டுமென்று இம்முடிவிற்கு வந்திருந்தான்.

தான்யாவிற்கு ஏதாவது சந்தேகம் என்று வந்தால், அவனை அவளே அழைத்துப் பேசும் பொழுது கூட, மறந்தும் அவளிடம் வேலையைத் தவிர வேறெதைப் பற்றியும் பேசாமல் தவிர்த்து வந்தான். அவன் சுவாதியுடன் பேசும் பொழுது மட்டும் சிரித்துப் பேசுவதைப் பார்த்து மனதிற்குள் பொருமிக் கொண்டாள் தான்யா. சுவாதி அவனிடம் பேசும் பொழுது சிரிப்பதைப் பார்த்தவள் சினமுற்று, 'இப்போ என்ன சொல்லிட்டாருனு இப்படி பல்ல சுளுக்கிக்கற மாதிரி சிரிக்கற?' என்று அவளைத் திட்டியும் தீர்த்து விட்டாள். அவளின் பொருமல் அடுத்த நாள் நடந்த விஷயத்தில் சிகரத்தைத் தொட்டது.

16

''மாறித்தான் போனேன்
உன் மௌனம் உரைத்த மயக்கத்தை
அந்திவானம் தரவில்லை.
உன் பார்வை தழுவிய சுகத்தைத்
தென்றல் தரவில்லை!
உன்னருகே அனுபவிக்கும் அமைதியைச்
சோலை கொடுக்கவில்லை!
உன் காதல் சொன்ன செய்தியை
நான் உணரவில்லை!
என மூளை நினைக்க,
என் மனமோ சிரித்தது!
மாறித்தான் போனேன்!

தான்யாவும் சுவாதியும் அவர்கள் செய்து கொண் டிருந்த 'ப்ரொஜெக்டில்' எவ்வளவுதான் முட்டி மோதி னாலும் செய்த தப்பைக் கண்டுபிடிக்க முடியாமல் முழித்துக் கொண்டிருந்தனர். கௌதமிடம் நேரில் சென்று பேசலாம் என்றால் அவனும் அவசர விஷயமாக எங்கோ வெளியூர் சென்றிருந்தான். தேவை என்றால் பாலாவைத் தொடர்பு கொள்ளுமாறு சொல்லிவிட்டுத்தான் சென் றிருந்தான்.

''பாலாவின் வீட்டிற்குச் சென்று அவரை வீட்டில் பார்த்து அவருடன் சேர்ந்து இந்தப் பிரச்சனையைத் தீர்க்கலாம்,'' என்று தான்யாவிடம் யோசனை வழங்கினாள் சுவாதி.

தான்யாவோ, ''அவர் உடல்நிலை சரியில்லாத போது அவரை எதுக்கு வீணா தொந்தரவு செய்யணும். நாமே



இன்னும் கொஞ்சம் பார்த்தா கண்டுபிடிச்சிடலாமே!'' என்று தயங்கினாள். ஆனால், சுவாதியோ அவள் சொல் வதைக் கேட்காமல், ''இவ்வளவு நாளா கண்டுபிடிக்க முடியாததையா இப்போ கண்டுபிடிக்கப் போறோம். அதுவுமில்லாம நாம் சென்று பார்த்தால் அவர் சந்தோசப் படுவார். நமக்கு வேலையும் ஆச்சு... அவரைப் பார்த்த மாதிரியும் ஆச்சு. உனக்குக் கஷ்டமா இருந்தா நீ வேணா இங்கேயே இரு. நான் போய்ப் பார்க்கத்தான் போறேன்,'' என்றவள் பாலாவுக்கு அழைத்து விவரத்தைக் கூறிவிட் டுக் கிளம்பினாள். வேறு வழியில்லாமல் தான்யாவும் அவளுடன் கிளம்பி பாலாவின் வீட்டிற்குச் சென்றாள்.

வீட்டிற்குச் சென்றவர்களைப் பாலாவின் தந்தைதான் மலர்ந்த முகத்துடன் வரவேற்றார். தான்யாவை முன்பே இரண்டு முறை பார்த்துப் பேசியிருந்ததால் அவளிடம் சகஜமாகப் பேசினார்.

''வாம்மா! எப்படி இருக்கே? பாரும்மா இவனை, எப்படி பள்ளத்துல விழுந்து புதையலைத் தேடிட்டு வந்திருக் கிறான்னு,'' என்று அவர் சிரித்தவாறே கிண்டலடிக்க முயன்றாலும் அவரின் அந்தச் சிரிப்பு கண்களை எட் டாமல் அதில் இருந்த வலியை உணர்த்தியது தான்யா விற்கு.

''ச்சே! பாவம் 'அங்கிள்!' அவர் இப்போ எப்படி இருக் கிறார்?'' என்று தான்யா பதிலளிக்கும் முன்னரே சுவாதி முந்திக் கொண்டாள்.

''இப்போ நல்லா இருக்கான். உங்களை 'ஆபீஸ்'ல வேலை செய்யாவிடாம வீட்டுக்கு வரச் சொல்லிட் டானா? அவனுக்கு இங்க தனியா இருக்கறதுக்கு 'போர்' அடிக்குதுன்னு நினைக்கிறேன். அதுதான் வேலையைக்

காரணம் காட்டிப் பேச்சுத் துணைக்கு உங்களை இங்கே வரவச்சுட்டான் போல!'' என்றார் சிரித்தவாறே.

மறுபடியும், ''அதெல்லாம் இல்லைங்க அங்கிள். நாங்களாத் தான் வந்தோம்,'' என்று சுவாதியே பதிலளித்து தான்யாவைப் பேசவிடாமல் எரிச்சல் படுத்தினாள்.

தான்யாவின் வருகையை அறிந்த பாலாவோ, அவசரமாக முகத்தைச் சீர்ப்படுத்திக் கொண்டு நல்ல உடையணிந்து அவளின் வருகைக்காக ஒரு எதிர்பார்ப்புடன் காத்திருந்தான். இத்தனை நாட்கள் அனைவரும் அவனை நன்றாகக் கவனித்துக் கொண்டதால் இடையில் இளைத்திருந்தவன் இப்பொழுது நன்றாகத் தேறிவிட்டிருந்தான்.

அவர்கள் வந்த பின்னும் இன்னும் இவனைப் பார்க்க வராமல் அவன் தந்தையுடன் பேசிக் கொண்டிருப்பதை அறிந்தவன், 'இந்த அப்பாவுக்கு என்னோட தவிப்பு புரியவே மாட்டேங்குது!' என்று மனதிற்குள் புலம்பிக் கொண்டிருந்தான்.

''சரிம்மா! நீங்க போய் வேலையைப் பாருங்க. எனக்குக் கொஞ்சம் வெளில வேலை இருக்கு. போயிட்டு சீக்கிரமா வரேன்,'' என்று வெளியில் சென்று விட்டார். அவர் சென்ற பின் சுவாதி செய்த ஒவ்வொரு செயலும் தான்யாவை மேலும் ஆத்திரமுறச் செய்தது.

அவர்கள் தன் அறையை நோக்கி வரும் அரவம் கேட்டதும், பாலா தன் 'லேப்டாப்'பில் பாட்டுக் கேட்டுக் கொண்டே வேலை செய்து கொண்டிருந்ததைப் போல அமர்ந்திருந்தான். அவர்கள் கதவைத் தட்டிவிட்டு உள்ளே வரவும் அப்பொழுது தான் அவர்கள் வந்ததைப் பார்ப்பது போல அவர்களைப் பார்த்து, ''வாங்க வாங்க!'' என்றவாறே பாட்டின் சத்தத்தைக் குறைத்தான்.



இருவரிடமும் சிறிது நேரம் வேலை அல்லது மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தவன், அவர்களுக்குக் குடிக்க ஏதாவது கொண்டு வருவதற்கு நல்லம்மாளை அழைத்தான்.

அவர் வருவதற்கு முன்னரே அவனைத் தடுத்த சுவாதி, ''எதுக்கு இந்த 'ஃபார்மாலிட்டி' எல்லாம்? இருங்க, நானே போய் எடுத்துட்டு வரேன். உங்களுக்கு என்ன வேணும்? 'ஜூஸா'? இல்லை காபியா?'' என்று மிகவும் உரிமை எடுத்துக் கொண்டாள்.

அவனோ, 'ஜூஸ்' கேட்டால் உடனே எடுத்துக் கொண்டு வந்து விடுவாள். அப்புறம் தான்யாவுடன் தனித்து இருக்க முடியாது என்ற எண்ணத்தில், ''காபி!'' என்றான்.

''எனக்கும் இந்நேரத்துக்கு காபிதான் வேணும். தான்யா, உனக்கு?'' என்று தான்யாவிடம் கேட்டு, அவளும், காபி என்றபின் அங்கிருந்து நகர்ந்தாள்.

அவள் நகர்வதற்கு முன் பாலாவின் கையைத் தொட்டு, ''இன்னும் வலிக்குதா?'' என்று கேட்டாள். அது மட்டும் போதாதென்று, ''பாலா! இப்போதான் ஆள் பார்க்கற மாதிரி தேறியிருக்கறீங்க!'' என்று வேறு சொல்லிவிட்டுச் சென்றாள்.

சுவாதியின் இந்த உரிமை மீறல்களைப் பார்த்து, தாங்க முடியாமல் அதைப் பற்றி ஒன்றும் செய்ய முடியாமல் உதட்டைச் சுழித்தவாறே அமர்ந்திருந்தாள் தான்யா. அவள் உதட்டின் சுழிப்பைப் பார்த்த பாலாவோ, 'இப்போ எதுக்கு இப்படி கோபத்துல இருக்கா? நாம்தான் இவள் கிட்ட இப்போ எல்லாம் இயல்பாகக் கூட பேசறது இல்லையே. ஒரு வேளை என்னைப் பார்த்தாலே பிடிக்

கலையோ?' என்று அவளிடம் ஒன்றும் பேசாமல் அவளின் உதட்டுக் சுழிப்புக்குக் காரணம் கற்பித்துக் கலங்கினான்.

இருவரும் அவரவர்களின் எண்ணங்களில் உழன்று கொண்டிருக்க, வைரமுத்துவின் வரிகளில் ஏ.ஆர்.ரஹ் மானின் இசையில் ''உசுரே போகுதே'' என்ற பாடல் ஆரம்பித்து அவர்களின் எண்ண வலையை அறுத்தது. பாலா ஒன்றும் பேசாமல் அந்தப் பாடலின் சத்தத்தை மேலும் அதிகப்படுத்தி விட்டு அவளையே ஊடுருவப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''இந்தப் பூமியில எப்ப வந்து நீ பொறந்த? என் புத் திக்குள்ள தீப் பொறிய நீ விதைச்ச!

அடி தேக்கு மரக் காடு பெருசுதான். சின்ன தீக்குச்சி ஒசரம் சிறிசுதான்.

ஒரு தீக்குச்சி விழுந்து புடிக்குதடி, கருந்தேக்குமரக் காடு வெடிக்குதடி.

உசுரே போகுதே உசுரே போகுதே உதட்டை நீ கொஞ்சம் சுழிக்கையிலே

ஓஓ மாமன் தவிக்கிறேன், மடிப்பிச்சை கேட்கறேன் மனசைத் தா என் மணிக்குயிலே.

அக்கரைச் சீமையில் நீ இருந்தும் ஐவிரல் தீண்டிட நினைக்குதடி,

அக்னி பழமுனு தெரிஞ்சிருந்தும் அடிக்கடி நாக்கு துடிக்குதடி!

'இப்போ என்னோட நிலைமையை எடுத்துரைப்பது போலவே என்ன பொருத்தமான வரிகள்' என்று நினைத்து ஏக்கப் பெருமூச்சு விட்டான் பாலா. அவனின் அந்தப் பெருமூச்சுக்குக் காரணம் சொல்லித்தான் அவளுக்குத் தெரியுமா என்ன?



எட்ட இருக்கும் சூரியனைப் பார்த்து மொட்டு விரிக்குது தாமரை

தொட்டுவிடாத தூரமிருந்தும் சொந்த பந்தமும் போகல,

பாம்பா. விழுதா ஒரு பாகுபாடு தெரியலையே

பாம்பா இருந்தும் நெஞ்சு பயப்பட நினைக்கலையே

எங்கட்டையும் ஒரு நாள் சாயலாம், என் கண்ணுல உன் முகம் போகுமா?

நான் மண்ணுக்குள்ள, உன் நினைப்பு மனசுக்குள்ள...

கடைசி இரண்டு வரிகளைக் கேட்ட தான்யா, அதைத் தாங்க மாட்டாதவளாக, 'சே! அந்தப் பாட்டைக் கொஞ்சம் நிறுத்தறீங்களா. சகிக்கலை!'' என்றாள் கோபமாக.

அவன் பதிலளிக்கும் முன் சுவாதி காபியுடன் வந்து, ''அந்தப் பாட்டுக்கு என்னடி குறைச்சல்? எனக்கும் இந்தப் பாட்டுன்னா ரொம்பப் பிடிக்கும். இவ எப்போதுமே இப்படித்தான் பாலா. அந்தப் பாட்டை எவ்வளவு நல் லாப் பாடி இருக்கிறார். அதைக் கூட புரிஞ்சுக்கமாட்டா. எங்கே இன்னொரு தடவை அதைப் போடுங்க. நான் கேட்கவேயில்லையே!'' என்றவள் மறுபடியும் தான்யாவைக் கேட்க வைத்து, தான்யாவிடம் பல அர்ச்சனைகளையும் பாலாவிடம் பாராட்டையும் பெற்றுக் கொண்டாள். இவை எல்லாம் அவர்களின் மனதில் தான்.

அதன் பின் வேலைக்குள் மூவரும் ஆழ்ந்து பிரச் சனைக்கு ஒரு தீர்வையும் கண்டபொழுது இரவு ஏழு மணி ஆகியிருந்தது. அதற்குள் வெளியே சென்றிருந்த பாலாவின் தந்தையும் வந்துவிட அவர்களை வற்புறுத்தி அங்கே இரவு உணவை முடித்த பின்புதான் அவர்களை வழி அனுப்பி வைத்தார். உணவருந்தும் பொழுது

பாலாவின் தந்தையும் அருகில் இருந்ததால் தான்யா தன் தயக்கத்தைச் சிறிது விட்டுவிட்டு, சிரித்த முகத்துடன் பேசிக் கொண்டிருந்தாள். அதுவுமல்லாமல் தான் யோசித்து வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருந்தால் சுவாதி ஒரு சொற்பொழிவே நடத்தி விடுவாளே என்று பயப்பட்டாள் தான்யா.

பாலா, மதியம் முழுவதும் தன்னவளுடன் செலவழித்த மயக்கத்திலும், மாலை இயல்பான பேச்சின் கிறக்கத்திலும் அன்றிரவு மிக நிம்மதியாக உறங்கிக் கொண்டிருக்க, அவன் மனதிற்கினியவளோ உறக்கத்தைத் துறந்து அவனைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தாள்!

வர்ஷனாவை அடிக்கடி அவள் வீட்டில் பார்த்த ஹர்ஷினிக்கோ வயிறெல்லாம் எரிந்தது. 'இவளை எல்லாம் யார் வீட்டுக்கு வெத்தலை பாக்கு வச்சு அழைச்சா? எல்லாம் இந்த மது பண்ணற வேலை. பெரிய இவ மாதிரி தன் அண்ணனோட காதலுக்கு உதவி செய்யறாளாம். அதுவும் என்னமோ பெரிய அம்பிகாவதி - அமராவதி காதல் மாதிரி. இதற்குச் சீக்கிரமாக ஒரு முடிவு கட்ட வேண்டும். இந்த வசந்தை நம்பி பிரயோஜனமில்லை!' என்று எண்ணியவள், மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று இரண்டு மூன்று நாளாக யோசித்துத் தன் தந்தையிடம் அவளே சென்று நேரிடையாகப் பேசலாம் என்ற முடிவிற்கு வந்தாள். அதையும் கௌதம் ஊரில் இல்லாத போதே சாதித்துக் கொள்ள வேண்டும் என்றெண்ணித் தன் தந்தையிடம் பேசச் சென்றாள்.

''டாட்! உங்ககிட்ட நான் முக்கியமான ஒரு விஷயத்தைப் பத்தி பேசணும். நீங்க ஏதாவது ஒரு முடிவு எடுக்கறதுக்கு முன்னாடி இதைப் பத்தி உங்ககிட்ட சொல்லறதுதான் சரின்னு எனக்குப் பட்டது. அதான் நான் சொல்லறதை வைத்து என்னைத் தப்பா நினைச்சுக்காதீங்க 'டாட்!'' என்று குரலில் குழைவைக் கொண்டு வந்து பேசினாள்.



''என்னம்மா ஹனி? (அவர் அப்படித் தான் அவளைச் செல்லமாக அழைப்பார்.) பீடிகை எல்லாம் பலமா இருக்கு. என்ன வேணும் உனக்கு? உன் ஃப்பிரெண்ட் ஸோட வெளிநாட்டுக்கு 'டூர்' போகணுமா இல்லை ஏதாவது புது மாடல் 'டைமண்ட் நெக்லஸ்' வேணுமா?'' என்று தேவராஜனை முந்திக் கொண்டு பூரணி கேட்டார்.

''ஐயோ 'மாம்'! கொஞ்சம் சும்மா இருக்கறீங்களா? நான் அதைப் பத்தி எல்லாம் பேசலை. பார்க்கப் போனா நான் சொல்லறது உங்களுக்குப் பிடிக்காமப் போனாலும் போகலாம்,'' என்று ஹர்ஷினி கூறினாள். எங்கே கௌதம் தங்களை விட வசதி குறைந்தவன் என்பதால் அவளின் 'மாம்'மிற்குப் பிடிக்காமல் போகுமோ என்ற பயம் அவளுக்கு.

''அப்படி என்ன எனக்குப் பிடிக்காத விஷயம்? நீ சொன்னாத்தானே எனக்குத் தெரியும்...'' என்று அவர் மறுபடியும் ஆரம்பிக்க, தேவராஜனோ, ''நீ சொல்ல விட்டாத்தானே அவள் சொல்லுவாள்!'' என்று மனைவியிடம் கடிந்து கொண்டவர் ஹர்ஷினியிடம், ''சொல்லும்மா, என்ன விஷயம்?'' என்றார்.

''அது வந்து...'' என்று தயங்கியவளைப் பார்த்து, 'என் பொண்ணா இப்படி எல்லாம் தயங்குவது? எதையும் யோசிக்காம பட்டுன்னு பேசற இவளா இப்படி மாறிட்டா?' என்று மனதுக்குள் நினைத்தவர், ''ம்ம்...சொல்லும்மா...'' என்றார்.

''டாட், எனக்குக் கௌதமை ரொம்பப் பிடிச்சிருக்கு. நான் அவரை மனசார விரும்பறேன். அவருக்கும் என்னை ரொம்பப் பிடிக்கும். வசதியைக் காரணம் காட்டி அவர் இதைப் பத்தி பேசறதுக்கு தயங்கறார்ன்னு நினைக்கிறேன். நீங்க அது மாதிரி எல்லாம் நினைக்க மாட்டீங்கன்னு எனக்குத் தெரியும். நீங்கதான் பெரியவங்ககிட்டப் பேசி எங்க கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யணும். அதுக்கு முன்னாடி நீங்க சம்மதிக்கணும்!'' என்று அவள் சொல்ல வந்த விஷயத்திற்கு நிறைய காரம் மற்றும் உப்பு சேர்த்து, தகுந்த ருசியுடன் சொல்லி முடித்தாள். அவள் சொன்னதைக் கேட்ட பூரணியோ வாயடைத்துப் போய்விட்டார்.

'இவ என்ன சொல்றா? கௌதமை விரும்பறாளா? இவளோட குணத்துக்கு இவ அந்த வீட்ல ஒழுங்கா இருப்பாளா?' என்று எண்ணிய தேவராஜன், ''என்னம்மா சொல்லற! நீ கௌதமை விரும்பறியா? என்னால் நம்ப முடியலை. கௌதமிற்கு அதில் விருப்பமா?'' என்று அவள் சொன்னதை நம்பாமல் மறுபடியும் உறுதிப்படுத்திக்கொள்ள இந்தக் கேள்விகளைக் கேட்டார்.

''ஆமாம் டாட்.... நம்புங்க...''

''முதல்ல நான் நம்பறது இருக்கட்டும். நீ நல்லா யோசிச்சியாம்மா? கல்யாணத்துக்கு அப்புறம் நீ நிறைய விட்டுக் கொடுக்க வேண்டி வரும். முக்கியமா உன்னோட கோபத்தையும் பிடிவாதத்தையும். நீ உன்னோட இஷ்டத்துக்கு இங்க நம்ம வீட்ல இருக்கிற மாதிரி செலவு செஞ்சிட்டு இருக்க முடியாது. அதுவுமில்லாம நம்ம வீட்ல இருந்து ஒரு பைசா நீ எடுத்துச் செலவு செய்யறதையும் கௌதம் விரும்ப மாட்டான்.

''இருக்கறதை வச்சிட்டு நீ சந்தோசமா இருக்கணும். உன்னால அது முடியுமா? உன்னோட பிடிவாத குணத்



தையும் அலட்சியத்தையும் நான் சின்ன வயசுல இருந்தே பார்த்துட்டுதான் இருக்கிறேன். அப்பா என்கிறதுனால நீ பண்ணறதுக்கு எல்லாம் நான் பொறுத்துப் போவேன். ஆனா அதையே நீ அங்க எதிர்பார்க்க முடியாது!'' என்று கறாரக் குரலில் அவளிடம் சொன்னார்.

அவருக்குக் கௌதமை விடத் தன் மகள் மேல்தான் பயமாக இருந்தது. என்னதான் மகளே என்றாலும் அவளின் குணத்தைப் பற்றி அவருக்குத் தெரியாதா என்ன? கௌதம் மிக நல்லவன். அவனுக்கு ஒரு கெட்ட பழக்கமும் கிடையாது. பெரியவர்களை நன்கு மதித்து நடப்பவன், அன்பானவன், நல்ல திறமைசாலி. இந்தச் சின்ன வயதிலேயே தன் நண்பனுடன் சேர்ந்து சொந்தமாகத் தொழில் செய்து முன்னேறிக் கொண்டிருக்கிறான். வசந்திற்காவது தான் தொடங்கின தொழில் இருந்தது. கௌதம் அப்படியில்லை. நல்ல குணம், பண்பு நிறைந்த கௌதமை அவருக்கும் பிடிக்காமல் போகுமா? 'கௌதம் இந்த வீட்டு மாப்பிள்ளை ஆனால்?' என்று எண்ணும் போதே அவருக்கு மனதில் உற்சாகம் ஊற்றெடுத்தது. ஆனால் முதலில் இவள் முடிவில் எவ்வளவு உறுதியாக இருக்கிறாள் என்று பார்ப்போம் என்று யோசித்துத்தான் அவ்வாறு கூறினார்.

''நீங்க சொன்னதை எல்லாம் நான் நன்றாக யோசிச்சுப் பார்த்துட்டேன். நீங்க சொன்னது அத்தனையும் உண்மைதான். நீங்க சொல்றபடியே இருக்க, கண்டிப்பா நான் முயற்சி செய்வேன். அதுவும் அவருக்காக நான் இருக்க மாட்டேனா?'' என்று தன் தந்தைக்குப் பிடித்த விதமாகப் பதிலளித்தவள், 'என்னை என்ன லூசுன்னு நினைச்சீங்களா? கல்யாணம் நடக்கட்டும் அப்புறம் பாருங்க, நான் யாருங்கறதைக் காட்டறேன். கல்யாண

மான உடனேயே கௌதமைத் தனிக்குடித்தனம் கூட்டிட்டுப் போயிடுவேன் அல்லது இங்க வீட்டோட மாப்பிள்ளையா வரவச்சுடுவேன். அதுக்குத்தான் மது இருக்காளே காரணம் காட்ட. அதுவும் நான் இவ்வளவு இறங்கிப் போய் அவன்கிட்ட மறைமுகமா என் காதலை உணர்த்தியும் என்கிட்டே இருந்து நழுவிட்டே இருக்கானே. அதுக்கும் சேர்த்துப் பழி வாங்கணும். முதல்ல அந்த வர்ஷனாவை வீட்டுக்கு வர விடாமப் பண்ணணும்!' என்று மனதிற்குள் கறுவிக் கொண்டாள்.

ஆனால் அவரோ அவளின் பதிலில் திருப்தி அடையாதவராக, ''இல்லம்மா! எனக்கு என்னமோ நீ இன்னும் கொஞ்ச நாள் நல்லா யோசிச்சிட்டு அப்புறமா முடிவு எடுக்கறது தான் உனக்கும் நல்லது, கௌதமிற்கும் நல்லதுன்னு படுது. அதுக்கப்புறம் நான் மேற்கொண்டு ஆக வேண்டியதைப் பார்க்கிறேன்,'' என்றார்.

''டாட்... நான் நல்லா யோசிச்சுதான் சொல்லறேன். என்னோட முடிவுல மாற்றம் இல்லை. நீங்க இப்போ கேட்டாலும் சரி, கொஞ்ச நாள் போய்க் கேட்டாலும் சரி, என் முடிவு ஒன்றுதான்... 'டாட்...' நீங்க தட்டிக் கழிக்கறதைப் பார்த்தா உங்களுக்கும் கௌதமோட வசதி தான் கண்ணுக்குத் தெரியுதோன்னு எனக்குச் சந்தேகமா இருக்கு,'' என்று திடமான குரலில் ஆரம்பித்துப் பின் விசும்பியவாறே அவரை எவ்விதத்தில் மடக்க வேண்டுமோ அவ்வழியில் மடக்கினாள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லை! கௌதமை யாருக்காவது பிடிக்காமப் போகுமா? இது வாழ்க்கை. கடைசி வரைக்கும் நீ சந்தோசமா வாழணும். இப்ப பிடிச்சிருக்குன்னு சொல்லி கல்யாணம் பண்ணிட்டு அப்புறம் கொஞ்ச



நாள்ல வந்து அது சரியில்லை. இது சரியில்லைன்னு குறை சொல்லக் கூடாது... சொல்லிட்டேன்.''

''அய்யோ! அதையே திருப்பித் திருப்பிச் சொல்லி நீங்க நேரத்தைக் கடத்தாம, போய் அவர் வீட்ல பேசுங்க,'' என்றாள். பின் தன் அன்னையிடம் திரும்பி, ''மாம்...' உங்களுக்கு இது பிடிக்காதுன்னு எனக்குத் தெரியும். நல்ல கோடீஸ்வர மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணி வைக்க நீங்க நினைச்சிட்டு இருப்பீங்க. ஆனா. எனக்கு நீங்க பார்க்கும் கோடீஸ்வர மாப்பிள்ளையை விட கௌதமைத்தான் ரொம்பப் பிடிச்சிருக்கு... ப்ளீஸ் மாம்... என்னோட சந்தோசத்துக்காக நீங்க சம்மதிச்சுத் தான் ஆகணும்,'' என்று தன் அன்னையிடம் தெரிவித்தாள்.

''நான் என்னமோ நினைச்சேன். ம்ம்ம்... ஆனா, கௌதம் ரொம்ப நல்லவன் என்கிறதுனால இதுக்குச் சம்மதிக்கறேன்,'' என்று மறைமுகமாகத் தன் சம்மதத்தைச் தெரிவித்தார்.

''மாம்... மரியாதை கொடுங்க! வருங்கால மாப்பிள்ளை அவர்!'' என்று தன் அன்னையைக் கிண்டல் செய்து தன் பெற்றோர்களைச் சிரிக்க வைத்தாள்.

''சரிம்மா! நான் நல்லா யோசிக்கறேன். அதுக்கப்புறம் போய் அவங்க வீட்ல பேசறேன்,'' என்று அவளுடைய தந்தை பதிலளிக்கவும். 'டாட்டை முதல்ல நம்ப வைக்கணும். என்ன பண்ணலாம்?' என்று யோசித்தாள்.

தேவராஜனின் மனதின் ஓரத்தில், நம் பெண் சொல்கிறாள் என்று கௌதமிடம் ஒரு வார்த்தை கூட கேட்காமல் அவன் பெற்றோர்களிடம் சென்று பேசுவதா வேண்டாமா என்பது பற்றி உறுத்திக் கொண்டேதான் இருந்தது.

தேவராஜனை நம்ப வைக்கவென, அதற்கு முதல் படியாக, தன் தந்தையிடம், வசந்தின் கல்யாணத்திற்கு முன் அவர்கள் ஷாப்பிங் செல்லும் பொழுது கௌதம் தன்னை அழைத்துச் சென்றதாகவும், அவள் நச்சரித்து கௌதம் அவளை சினிமாவிற்கு அழைத்துச் சென்றதை கௌதம் ஆசையுடன் அழைத்துச் சென்றான் என்றும் பேச்சு வாக்கில் கூறுவது போலக் கூறினாள். ஆனால், பார்ப்பவர்கள் தப்பாக எண்ணக் கூடும் என்று மற்ற அனைவரையும் அழைத்துச் சென்றதாக அதைத் திரித்துக் கூறினாள்.

வசந்தின் கல்யாண வீடியோவை அவர் தந்தை இருக்கும் பொழுது போட்டுப் பார்த்த ஹர்ஷினி, இவள் கௌதமுடன் அடிக்கடி சென்று பேசியதை அப்படியே மாற்றிப் போட்டாள். ஹர்ஷினி மிகச் சிறந்த 'சயின் டிஸ்ட்'டாக மாறி அவளின் கண்டுபிடிப்புகளைத் தன் தந்தையிடம் தெரிவித்தவுடன் அவருக்கு இருந்த உறுத் தலும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. ஏனெனில், நடந்த விஷயம் அனைத்தும் உண்மை என்று அவருக் குத் தெரியும். அதுவுமில்லாமல் கௌதம், வசந்திற்காக ஹர்ஷினியிடம் புன்னகை மாறாமல் பேசியது அவருக்கு வேறு விதமாகத் தோன்றியது. ஆனால், அவருக்குத் தெரியாதது ஹர்ஷினி அதை அவளுக்குத் தகுந்த மாதிரி மாற்றிக் கொண்டாள் என்பதுதான்.

அன்று மாலை அவள் அறையில் ஒன்றும் செய்யா மல் விட்டத்தைப் பார்த்தவாறே படுத்துக் கொண்டிருந்த ஹர்ஷினியிடம் வந்த அவள் தந்தை. ''சரிம்மா! நான் நாளைக்கே போய் கௌதமோட அப்பா, அம்மாகிட்ட பேசிட்டு அவங்க என்ன சொல்லறாங்கன்னு கேட்டுட்டு வரேன். இப்போ சந்தோசமா?'' என்று அவளிடம் தன் சம்மதத்தைத் தெரிவித்தார்.



அவளோ ஒன்றும் சொல்லாமல் தயங்கியவாறே. ''டாட்... அப்புறம் இன்னொரு விஷயம். கௌதம் இப்போ ஊரில இல்லை. அதனால இதைக் கொஞ்சம் 'சஸ்பென்ஸா' வச்சுக்கிட்டு. அவர் இங்க வந்ததுக்கு அப்புறம் திடீர்னு சொன்னா அவர் ரொம்ப சந்தோசப் படுவார். அதனால வசந்த்கிட்டேயும், மதுகிட்டேயும் அதைப் பத்தி இப்போதைக்குச் சொல்லாதீங்க. அப்புறம் அவன் உடனே கௌதமுக்கு போன் பண்ணிச் சொல் லிட்டுத் தான் மறுவேலை பார்ப்பான்!'' என்று எப்படிக் காயை நகர்த்த வேண்டுமோ அப்படி நகர்த்தினாள். சகுனி கூட இந்தளவிற்கு நகர்த்தி இருப்பாரோ என்னவோ?

''அவ்வளவுதானே! சரிம்மா. நான் எல்லாம் பார்த்துக் கறேன். கௌதம் ஊரில் இருந்து திரும்பி வந்தவுடனே. அப்படியே சந்தோசத்துல திளைக்கப் போறார் பாரு!'' என்றவரின் கன்னத்தில் முத்தமிட்டு விட்டு, ''தேங்க் யூ டாட்!'' என்றாள் ஹர்ஷினி கண்களில் மின்னலுடன்.

மறுநாள், தேவராஜன் கௌதமின் வீட்டிற்கு அழைத்துப் பேசியவர், வழக்கமான உபசரிப்புப் பேச்சுக்குப் பின், ''சம்பந்தி! உங்ககிட்ட ஒரு நல்ல விஷயத்தைப் பத்தி பேசலாம் என நினைக்கிறேன். நீங்க இப்போ 'ஃப்ரீயா' இருந்தா நானும் பூரணியும் இன்னும் ஒரு மணி நேரத்துல அங்க வரோம்,'' என்று நேராக விஷயத்திற்கு வந்தார்.

''அட, என்ன சம்பந்தி நீங்க? நீங்க வரேன்னு சொன்னா, இருக்கற வேலையை எல்லாம் ஓரங்கட்டி வச்சிட மாட் டோமா? 'ஃப்ரீயா' இருக்கோமான்னு கேட்டுட்டு இருக் கீங்க. வாங்க, வீட்ல தான் இருக்கோம்,'' என்று பதிலளித் தவர், பேசியை வைத்துவிட்டு, ''ராஜி! இங்க வாம்மா! சம்பந்தி வீட்லே இருந்து அவர் கூப்பிட்டு இப்போ ஒரு மணி நேரத்துல இங்க வந்து ஏதோ நல்ல விஷயத்தை

பத்திப் பேசப் போறதா சொன்னார்!'' என்று மனைவியிடமும் தெரிவித்தார். ஸ்ரீனிவாசன், ஒரு பிரபல வங்கியில் மேனேஜராக இருந்து மதுவின் திருமண சமயத்தில்தான் ஓய்வு பெற்றார்.

ஹர்ஷினியின் பெற்றோர்கள் வருவதற்குள் சமையலறையில் நுழைந்து, மதியச் சமையலை அவர்களுக்கும் சேர்த்துச் சமைத்து வைத்த ராஜேஸ்வரி, குளித்து ரெடியாக வரவும், தேவராஜனும் பூரணியும் வந்து சேரவும் சரியாக இருந்தது.

''வாங்க! வாங்க! வீட்ல எல்லோரும் நல்லா இருக்காங்களா?'' என்று பார்த்துப் பேசி, பல நாட்களாகி விட்டதைப் போலக் கேட்டுக்கொண்டிருந்தார் ஸ்ரீனிவாசன்.

அவரின் மனைவியோ, ''நீங்க மட்டும்தான் வந்தீங்களா? வீட்ல எல்லோரையும் அழைத்துக் கொண்டு வந்திருக்கலாமே!'' என்று அன்று அனைவரும் வேலைக்குச் சென்றிருப்பார்கள் என்பதை மறந்து கேட்டுக் கொண்டிருந்தார்.

தேவராஜன் சிரித்து, ''அவங்கெல்லாமே 'ஆபீஸு'க்குப் போயிட்டாங்க. மது வீட்லதான் இருக்கா. அவளையும் கூட்டிட்டு வரத்தான் நினைச்சோம். ஆனா, நாங்க பேசப் போற விஷயம் கொஞ்சம் ரகசியமா இருக்கட்டுமென என் பொண்ணு சொல்லிட்டா!'' என்று பதில் தந்தார்.

'அப்படி என்ன ரகசியம் இருக்கு?'' என்று யோசித்துக் கொண்டிருந்தவரை, ''ஏம்மா! வந்தவங்களை அங்கேயேவா நிக்க வச்சு பேசறது? நீங்க உள்ள வாங்க சம்பந்தி!'' என்று ஸ்ரீனிவாசன் அழைத்த பின்னர்தான் சுய உணர்வுக்கு வந்தவர் சிரித்து, ''வாங்க... வந்து உட்காருங்க!'' என்றவாறே அவர்களுடன் உள்ளே சென்றார்.



அங்கிருந்த சோபாவில் அமர்ந்தவர், ராஜேஸ்வரி கொண்டு வந்த தண்ணீரைப் பெற்றுக் கொண்டு, ''நீங்களும் உட்காருங்க. நான் நேரடியா விஷயத்திற்கு வரேன். கௌதமை எங்களுக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. கௌதம் தம்பி எங்க வீட்டுக்கு மாப்பிள்ளையா வந்தா நாங்க ரொம்ப சந்தோசப்படுவோம். ஹர்ஷினிக்கும் கௌதமை ரொம்ப பிடிச்சிருக்கு. கௌதமுக்கும் ஹர்ஷினியைப் பிடிக்கும் போல. ஆனா, அந்தஸ்தைக் காட்டி கொஞ்சம் தயங்கறார் எனப் பொண்ணு சொன்னா. அதுதான் பெரியவங்க நாம ஒரு முடிவு எடுத்து அவங்களைச் சேர்த்து வைக்கணும்ன்னு இப்போ வந்திருக்கோம். உங்களுக்குச் சம்மதம்ன்னா மேற்கொண்டு நடக்க வேண்டியதைப் பார்ப்போம்,'' என்று வந்த விஷயத்தைக் கூறி விட்டு அவர்கள் முகத்தை ஆவலுடன் பார்த்தார்.

இதைக் கேட்ட கௌதமின் பெற்றோர்களோ, சந்தோஷத்தில் செய்வதறியாது பூரித்துப் போயினர். பின்னே இருக்காதா? தேவராஜன் மாதிரி ஒரு பணக்காரக் குடும்பத்தில் தன் மகள் வாழ்க்கைப்பட்டுப் போனதில் அவர்கள் ஆரம்பத்தில் கலங்கினாலும், கூடிய விரைவிலேயே மதுவின் சந்தோசத்தையும், தேவராஜன் மற்றும் பூரணியின் குணத்தையும் பார்த்து நிம்மதி அடைந்தனர். தற்பொழுது கௌதமும் அவர்களின் மாப்பிள்ளை ஆனால், அண்ணனும் தங்கையும் ஒருத்தருக்கு ஒருத்தர் கடைசி வரை துணை இருப்பார்கள்... அவர்களும் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் நிம்மதியாக இருக்கலாம் என்று ஏதேதோ எண்ணினர்.

அதையே தங்களின் முகத்தில் பிரதிபலித்து, ''என்ன சொல்லறீங்க சம்பந்தி? நீங்க சொல்லறது நிஜமா? ஹர்ஷினி எங்க வீட்டுக்கு மருமகளா வர்றதுக்கு நாங்க

கொடுத்து வச்சிருக்கணும். கௌதமிற்கும் பிடிச்சிருந்தா அப்புறம் நாங்க எதுக்கு மறுப்பு சொல்லப் போறோம்?'' என்று சம்மதத்தைத் தெரிவித்தார் ஸ்ரீனிவாசன். அவரின் பதிலில் ராஜேஸ்வரியும் திருப்தி அடைந்தார்.

''அப்புறம் என்ன? ஒரு நல்ல நாள் பார்த்துச் சீக்கிரமே கௌதம் வந்தவுடனே நிச்சயத்தை வச்சுக்கலாம். அப்புறம் ஒரு விஷயம். ஹர்ஷினிக்கு இந்த விஷயத்தை ரகசியமா வச்சு கௌதம் இங்க வந்ததுக்கு அப்புறம் சொல்லணும்னு ஆசை. இவ்வளவு நாள் கௌதம் தயங்கினதுக்கு கொஞ்சம் 'சுவீட் சர்ப்ரைஸ்' கொடுக்க வேண்டுமாம். அதுவும் அவளே அவ வாயால கௌதம் கிட்ட சொல்லணும்னு ஆசைப்பட்டா. அதுதான் நாங்க இன்னும் வசந்த் - மதுகிட்ட கூட சொல்லலை. அவங்ககிட்ட சொன்னா, மது சொல்லாட்டியும் வசந்த் தன் 'ஃபிரெண்ட்' கிட்ட முந்திரிக் கொட்டை மாதிரி உடனே 'போன்' செஞ்சு சொன்னாலும் சொல்லிடுவான்!'' என்று அவரும் கௌதமிற்கு இனிய அதிர்ச்சியாக இருக்கும் என்று நம்பி, ஹர்ஷினியின் திட்டத்தை அப்படியே நடத்தி வைக்கச் செய்தார்.

அதன் பின் அவர்களுக்குத் தெரிந்த ஜோதிடருக்கு அழைத்து நல்ல நாள் குறித்துக் கொண்டு அதைப் பற்றி சிறிது நேரம் பேசி, மதிய உணவையும் முடித்துக்கொண்டு வீடு சென்றனர். வீட்டில் ஹர்ஷினி இவர்களின் வரவுக்காக ஆவலுடன் காத்திருந்தாள். என்னதான் அவள் கௌதமிற்குத் தன்னைப் பிடித்திருக்கும் என்று கூறினாலும், தன் தந்தை நம்ப வேண்டும் என்ற உதறல் இருக்கத் தான் செய்தது. ஆனால், மகள் என்றவுடன், தன் மகள் பொய் உரைக்க மாட்டாள் என்று நம்பியவர், உடனே காரியத்தில் இறங்கவும் பூரித்துப் போனாள்.



அவர்களின் முகத்தில் இருந்த மகிழ்ச்சியைப் பார்த்தே சென்ற காரியம் வெற்றி என்று அறிந்து கொண்டு ஆனந்தத்தில் தத்தளித்தாள்.

'இனி இந்தக் கல்யாணத்தை யாராலும் நிறுத்த முடியாது. அவங்க அம்மா - அப்பாகிட்டப் பேசி அவங்களும் சம்மதம் சொன்ன பிறகு, கௌதம் வந்து வேண்டாம் என்று சொன்னாலும், அவன் பெற்றோர்கள் அவனைச் சும்மா விடமாட்டார்கள். அதுவும் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுத்த வீட்டில் இது மாதிரி செய்தால் தங்கள் பெண்ணின் வாழ்வு என்ன ஆகும் என்று பயப்படுவார்கள். ஐயோ ஹர்ஷினி! உனக்கு அறிவு ஜாஸ்தி! எப்படியும் இனி கௌதம் வந்ததுக்கு அப்புறம் தான் தெரியும். ஆனா, தெரிஞ்சாலும் ஒண்ணும் பண்ண முடியாது.' என்று மகிழ்ச்சியில் தலை கால் புரியாமல் ஆடிக்கொண்டிருந்தாள். நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்?

## 17

''உன்னைக் காணும் வரையில்
பொருட்களைத் தேடும் வேட்கையே
வாழ்க்கை என்று வாசித்திருந்தேன்!
ஆட்களின் மேலிருக்கும் அன்பே
வாழ்க்கை என்று சுவாசிக்க வைத்தாய்!''

பெங்களூருவில், ஹர்ஷினி அவனுக்குச் சதி வலை பின்னி அதில் அவனைச் சிக்க வைத்திருப்பதை அறியாமல், தியானின் வீட்டிற்குச் சென்று அவனுக்குத் தேவையான உதவிகளைச் செய்து கொண்டிருந்தான் கௌதம். கடந்த வாரத்தில் ஒரு நாள், தியான் கௌதமை

அழைத்து, 'உடனே கிளம்பி வர முடியுமா?' என்று கேட்க, அவனும் உடனே கிளம்பி வந்தான்.

கடந்த மாதத்தில் கீதாவை மருத்துவரிடம் அழைத்துச் சென்றபின், தியானின் தந்தை சென்னையில் இருக்க, அவன் அன்னையின் துணையுடன் பெங்களூருக்கு அவளை அழைத்து வந்துவிட்டான் தியான். அவன் அன்னையும் அவரால் முடிந்தவரை கீதாவைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொண்டிருந்தார். அவள் எடுத்துக் கொண்டிருக்கும் மருந்துகளைக் கூட அவர் தான் நேரம் தவறாது கொடுத்து அவளை ஒரு மகளைப் போலப் பார்த்துக் கொண்டார். அவள் குணமாகித் தன் மகனுடன் சந்தோசமாக வாழ்ந்தால் அதுவே போதும் அந்தத் தாய் உள்ளத்திற்கு.

சென்னையில் 'டாக்டரி'டம் சென்று வந்த இந்த நான்கு வாரத்தில் பெரிய முன்னேற்றம் எதுவும் இல்லாவிடினும், அவளைத் தனியாக விடவில்லை என்ற நிம்மதியுடன் வேலைக்குச் செல்ல ஆரம்பித்தான் தியான். மாலையில் அவளை 'தெரபிக்கும்' அழைத்துச் சென்று வந்தான். அதனால் இப்பொழுது எல்லாம் தியான் கேட்கும் கேள்விகளுக்கு ஒற்றை வரியில் பதில் சொல்லவும் ஆரம்பித்திருந்தாள் கீதா.

ஒரு நாள் அவன் வேலைக்குச் சென்றிருந்த சமயத்தில் எப்பொழுதும் போல அவன் அன்னை, கீதா உறங்குகிறாள் என்று நினைத்துக் குளிக்கச் சென்றார். அவளுக்குக் கொடுக்கும் மருந்துகளைக் கொடுத்துவிட்டு, பின்னர் அவற்றை எல்லாம் ஒரு ஷெல்பில் வைத்துப் பூட்டிவிட்டுத் தான் குளிக்கச் சென்றார். அவர் அந்தப் பக்கம் குளிக்கச் செல்லவும் சிறிது நேரத்திலேயே தூக்கம் கலைந்து எழுந்த கீதா இன்னும் மாத்திரைகளை உட்



கொள்ளவில்லை என்று நினைத்து மீண்டும் மாத்திரைகளை எடுத்துக் கொண்டு உறங்கிவிட்டாள்.

ஒரு மணி நேரம் கழித்து வந்து அவளைச் சாப்பிட எழுப்பிய தியானின் அம்மா அவள் எழாமல் போகவே பயந்துவிட்டார். பின் அவளின் அருகில் கிடந்த மருந்து அட்டைகளைப் பார்த்துத் தான் புரிந்தது அவள் மறுபடியும் மாத்திரைகளை எடுத்துக் கொண்டிருக்கிறாள் என்று. உடனே, தியானுக்குத் தெரியப்படுத்தி, மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அவர்களும் அவளைப் பரிசோதித்து 'பயப்பட ஒன்றும் இல்லை' என்று கூறி மேற்கொண்டு சிகிச்சை அளித்தனர்.

அத்தோடு விட்டிருந்தால் பிரச்சனையின்றிப் போயிருக்கும். ஆனால், கீதாவை இந்த நிலைமையில் பார்த்த தியானின் அன்னையோ பயத்திலும், பதட்டத்திலும் திருநெல்வேலிக்கு அழைத்து கீதாவின் பெற்றோருக்கும் தெரியப்படுத்திவிட்டார். அவர்களும் உடனே கிளம்பி வந்தனர். வந்த பின்புதான் தியானுக்குச் சோதனை மேலும் அதிகரித்தது.

ஏற்கெனவே நடந்ததில் நொந்திருந்த தியானை, வந்த கீதாவின் தந்தையோ கத்தி ஆர்ப்பாட்டம் செய்து, அவனை ஒரு கொலைகாரனாகச் சித்திரித்து விட்டார். மருத்துவ மனையில் அனைவரின் முன்னிலையில் அவனைக் குற்றம் சாட்டி, வரதட்சிணைக் கொடுமைப் படுத்தி, அவன்தான் தங்கள் மகளுக்கு அளவுக்கு அதிகமாக மாத்திரைகளைக் கொடுத்துவிட்டதாகவும் அதற்கு அவன் பெற்றோர்கள் உடந்தை என்றும், காவல் துறையினரிடம் புகார் கொடுத்து அவர்களைக் கையோடு அழைத்துக் கொண்டும் வந்திருந்தார்.

இதை எதிர்பார்க்காத தியானும் அவன் பெற்றோர் களும் அதிர்ச்சி அடைந்தனர். வந்த அதிகாரியும் தியானிடம் விசாரிக்க, அவனும் நடந்ததை எடுத்துச் சொன்னான். ஆனால், அந்த அதிகாரியின் முன்னிலை யில் கீதாவின் அப்பாவோ அழுது புரண்டு அங்கே ஒரு நாடகத்தை அரங்கேற்றி, அவனை ஒரு வழி பண்ணி விட்டார். என்ன செய்வதென்று புரியாத தியானும், கௌதமைத் தொடர்பு கொண்டு அவனைப் பெங்க ளூருக்கு வர முடியுமா என்று கேட்டான்.

தியான் ஒரு பெரிய சிக்கலில் மாட்டியிருக்கிறான் என்றுணர்ந்த கௌதம், அவனை ஆறுதல் படுத்தி, தீபியின் கணவர் உதய் அங்கு பெங்களூருவில்தான் ஒரு காவல்துறை அதிகாரியாக இருக்கிறார் என்று தைரியம் அளித்து, 'அவர்கிட்ட நான் பேசறேன். ஆனாலும் ஒன்றும் கவலைப்படாத!' என்று கூறினான்.

உதய்க்கு அழைத்து விஷயத்தைத் தெரியப்படுத் தியவன், உடனே கிளம்பிப் பெங்களூருவிற்கு வந்து சேர்ந் தான். பெங்களூருக்கு வந்தவன் தீபியிடம் தியானைப் பற்றி பேசிவிட்டு, அவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து முடித்தபின் இன்னும் மூன்று நாட்களில் அவள் வீட்டிற்கு'வருவதாகத் தெரிவித்தாள். அவளும் அந்த வாரத்தில் தான் வேலை விஷயமாகச் சிங்கப்பூர் சென்று விட்டுத் திரும்பி வந்திருந்தாள். அதன் பின் மருத்துவ மனையில் சென்று கீதாவைப் பார்த்துவிட்டு, உதயின் துணையுடன் கீதாவின் பெற்றோரிடம் பேசினான்.

ஆரம்பத்தில் உதய் யாரென்று தெரியாமல் அவர்கள் கத்திக் கொண்டிருக்க, 'மருத்துவரின் ஒரு சான்றிதழ் போதும், அவர்கள் தங்களின் மகளுக்கு இருக்கும் பிரச்சனையை மறைத்துக் கல்யாணம் செய்து வைத்து



விட்டார்கள் என்று தெரிய வரும். அவர்கள் மேல்தான் தப்பிருப்பதாக் கூறி, 'கேஸ்' போட்டால் அவர்கள்தான் கம்பி எண்ண வேண்டியிருக்கும்,' என்று உண்மையை எடுத்துச் சொன்னவுடன் மிரண்டு போயினர். இதற்கெல் லாம் அவசியமே இல்லாதவாறு கீதாவும் போலீஸ் விசாரணையில், 'தியான் மேலும் அவர் பெற்றோர்கள் மேலும் தப்பில்லை, நான்தான் தூக்கக் கலக்கத்தில், ஞாபக மறதியாக மாத்திரைகளை விழுங்கி விட்டேன்!' என்று கூறிவிட்டாள்.

இனி அங்கிருந்தால் அவர்களுக்குத்தான் பிரச்சனை என்று உணர்ந்த கீதாவின் தந்தை சொல்லாமல் கொள் ளாமல் ஊருக்குக் கிளம்பிவிட்டார். இரண்டு நாட்களில் கீதாவை மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு அழைத்து வந்தவுடன், தியானின் பெற்றோர்கள், கீதாவின் தந்தை பேசியதைப் பார்த்தும், அவர் செய்ததைப் பார்த்தும் பயந்து போய், தியானிடம் கீதாவை விவாகரத்து செய்யச் சொன்னார்கள். அவனோ அதற்கு மறுத்துவிட்டான். அதன் பின் கிடைத்த தனிமையில் நண்பர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

''சாரி தியான்! சென்னைல உன்னைப் பார்த்துட்டு வந்ததுக்கு அப்புறம் என்னால உன்னோட அடிக்கடி 'போன்'ல பேச முடியலை,'' என்று வருத்தத்துடன் கூறினான் கௌதம்.

''கவலைப்படாதடா! உனக்கும் நிறைய வேலை இருக் கும். அதுவுமில்லாம பாலாவுக்கு வேற அடி பட்டு டுச்சே!'' என்றவன், ''கௌதம்! நான்தான் உனக்குத் 'தேங்க்ஸ்' சொல்லணும். கூப்பிட்டவுடனே வந்தியே. ரொம்ப 'தேங்க்ஸ்' டா! எனக்கு என்ன பண்ணறதுன்னு தெரியாம முழிச்சிட்டு இருந்தப்போ வந்து உதவி

பண்ணினதுக்கு. கீதாவோட அப்பா இப்படிப் பண்ணு வார்ன்னு நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கலை!'' என்றான் தியான் உடைந்த குரலில்.

''தியான்! நன்றி சொல்லி என்னை ரொம்பத் தூரப் படுத்தாதே. அதை விடு. கீதா இப்போ எப்படி இருக் காங்க? புதுசா மாத்திரைகளைச் சாப்பிட்டதுக்கு அப்புறம் ஏதாவது முன்னேற்றம் தெரியுதா?'' என்று கேட்டான்.

''ஆமாம் கௌதம்! கொஞ்சம் தெரியற மாதிரிதான் இருக்கு. முன்ன மாதிரி என்னைப் பார்த்தா ஒதுங்கிப் போகாம, நான் ஏதாவது கேள்வி கேட்டா அப்பப்போ பதில் சொல்லறா. ஒரு மாசம் தானே ஆயிருக்கு. அடுத்த மாசம் சென்னைக்குக் கூட்டிட்டுப் போய் நாம் போன அதே 'டாக்டரி'டம் காட்டணும்,'' என்றான் சற்று நிம்மதி கலந்த குரலில். ''அப்படியா? ரொம்ப நல்ல முன்னேற்றம் தான். கேட்கவே சந்தோசமா இருக்கு.'' என்றான்.

''ஆமாம்டா! அதுவுமில்லாமல் நீயே பார்த்தியே. 'போலீஸ்'ல விசாரிச்சப்ப கூட எப்படி பதில் சொன்னாள்னு. முதல்லேயே கீதாவை நல்லபடியா கவனிச்சிருந்தா இந்த அளவுக்கு வந்திருக்காதோ என்னவோ. அவ அடி மனசுல ஏதோ ஒண்ணு ஆழமா பதிஞ்சு போயிருக்கு. அதைக் கண்டு பிடிக்கணும்.''

கீதாவைப் பற்றிச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த தியான் திடீரென்று, ''கௌதம்! அம்மாவும் அப்பாவும் என்னைக் கீதாவை விவாகரத்து செய்யச் சொல்லறாங் கடா!'' என்று சொல்லி நிறுத்தினான்.

அவன் சொன்னதைக் கேட்ட கௌதம் பதில் கூறாமல், 'இது அவன் வாழ்க்கை. அவன்தான் வாழ வேண்டும். அவன் மன நிலைமையைப் பொறுத்துத்தான் அவன் முடிவும் எடுக்க முடியும். நான் ஏதாவது சொல்லி அவன் முடிவு எடுப்பது என்பது சரி வராது.' என்று நினைத்து, அவனே பேசட்டும் என்று அமைதியாக இருந்தான்.



அவனின் மௌனத்தைப் புரிந்து கொண்ட தியானும், ''கௌதம்! முதல்ல கீதாவுக்கு இந்தப் பிரச்சனை இருக்குன்னு தெரிஞ்சப்போ கூட எனக்குப் பயங்கரமா கோவம் வந்தது. இப்படி ஏமாத்திக் கல்யாணம் பண்ணி வச்சுட்டாங்களேன்னு. ஒரு கட்டத்துல இது எல்லாம் தேவையா? பேசாம விட்டுடலாம்ன்னு கூட யோசிச்சிருக் கேன். ஆனா, இப்போ யோசிச்சுப் பார்க்கிறப்போ, எல்லா விதமான துன்பங்களிலிருந்து அவளைக் காப்பேன்னு சொல்லித்தானே அவளைக் கைப்பிடிச்சேன்? கீதா எப் படியோ, நான் கல்யாணம் பண்ணும் போது முழு மன சோட தானே இருந்தேன். ஒரு பிரச்சனைன்னு வரப்போ அவளை எப்படி நான் தனியா விடறது? அதுவுமில் லாமல் அவளோட பெற்றோர்கள் பண்ணின தப்புக்காக அவள் என்ன பண்ணுவா?

''நீ கொடுத்த விபரங்களைக் கொஞ்சம் படிச்சேன். 'டிப்ரசன்' பத்தி முதல்ல புரியாதது எல்லாம் இப்போ தான் எனக்குக் கொஞ்சம் கொஞ்சமா புரியுது. கீதாவை என்னோட உயிரா இனி கவனிச்சுக்குவேன். அவளை அவங்க பெற்றோர்கள் நல்லா கவனிச்சிருந்தா அவளுக்கு இப்படி இருக்கிறப்போ யாரென்றே தெரியாத எனக்குக் கல்யாணம் பண்ணி வச்சிருக்க மாட்டாங்க. அதனால, இனி அவளை அவங்ககிட்ட அனுப்பி ஒரு பயனும் இல்லை. அப்படியே அனுப்பினாலும் அவளோட நிலைமை இன்னும் மோசமாதான் போகும்.

''நானும் இப்போ அவளை விட்டுட்டு வேற ஒரு பொண்ணைக் கல்யாணம் பண்ணி சந்தோசமா இருக்

கலாம்தான். ஆனா, சில வருடங்கள் கழிச்சு ஒரே ஒரு தடவை, 'பேசாம வேற கல்யாணம் பண்ணாம கீதாவை நானே கவனிச்சிட்டு இருந்திருக்கலாம்', அப்படிங்கற எண்ணம் மனசுல வந்துச்சுன்னா, அப்போ காலம் கடந்தல்லவா போயிருக்கும்? அதுக்கப்புறம் என்னால வாழ்க்கையில நிம்மதியா இருக்க முடியும்னு நினைக்கிறியா?

''அவளை முடிஞ்ச வரைக்கும் நல்லா வச்சுக்கப் போறேன். கொஞ்ச நாள்ல அவளைச் சரி பண்ணிடலாம்னு எனக்கு நம்பிக்கை இருக்கு. அவளை மட்டும் 'சைக்கோதெரபி'க்கு அனுப்பி வைக்காம, நானும் அவள் கூடப் போகப் போறேன். அவள் எப்பப்போ எப்படி நடந்துக்கறாளோ அதுக்குத் தகுந்த மாதிரி நான் எப்படி நடந்துக்கணும் என்பது அப்போதான் எனக்குத் தெரியும்.

''அதுவுமில்லாம, உணவு முறைகளை மாற்றி, நல்ல சத்துள்ள உணவாக் கொடுத்தா நல்ல மாற்றம் வரும்னு படிச்சேன். அவளுக்கு நான் எப்போதும் இருக்கேன்னு, இருப்பேன்னு நம்பிக்கை வர வைக்கப் போறேன். அடிக்கடி நிறைய சுற்றுலாப் பயணம் கூட்டிட்டுப் போகப் போறேன். வேற வேற இடங்களுக்குக் கூட்டிட்டுப் போய், இயற்கையை ரசிச்சாலும் கீதாவோட மனசுக்கு ஒரு நல்ல மாற்றமா இருக்கும். இல்லை?

''நம்பிக்கைதானே வாழ்க்கை, நம்பிக்கையோட காத்திருப்பேன். அவளுக்குச் சீக்கிரமா குணமாகும் என்கிற நம்பிக்கையில கௌதம்!'' என்று முடித்தான்.

தியான் சொன்னது அனைத்தையும் இடையிடாமல் கேட்டுக் கொண்டிருந்த கௌதம், ''தியான்! ரொம்ப நல்ல முடிவு. உன்னோட நம்பிக்கை வீண் போகாது தியான். 'ஆல் த பெஸ்ட்'. எனக்கு உன்னை நினைச்சா



பெருமையா இருக்கு. ஒரு 'ஃபிரெண்டா' சொல்லலை. ஒரு மனுஷனா சொல்லறேன்,'' என்று அவனைத் தோளோடு அணைத்து விடுவித்தான்.

''சரிடா! நான் போய்த் தீபியைப் பார்த்துக் கொஞ்ச நேரம் அவளோட செலவழிச்சிட்டு இன்று 'நைட்'டே ஊருக்குக் கிளம்பறேன். என்ன உதவி வேணும்னாலும் உதயிடம் கேளு,'' என்று நண்பனிடம் கூறிவிட்டுக் கிளம்பினான் கௌதம்.

தியானின் பிரச்சனை ஒரு வழியாகத் தீர்ந்து விட்டது என்ற நிம்மதியுடன், அவன் தீபியிடம் சொன்னதைப் போலவே மூன்றாம் நாள் அவளின் வீட்டிற்கு வந்தான் கௌதம். உதயிற்கு அனைத்து விஷயமும் தெரியுமாதலால் அவனிடம் இருந்து அனைத்து விஷயத்தைப் பற்றியும் முன்பே தெரிந்து கொண்டாள் தீபி. வீட்டிற்கு வந்த கௌதமிடம் தீபி எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவன் கேட்காமல் அன்றிரவு கோவை செல்வதற்கு ஏற்பாடு செய்யவே தீபியின் கோபத்திற்கு ஆளானான்.

''ஏன்டா! ஆறு வருஷத்துக்கு முன்னாடி நீ இங்க வந்தது. குழந்தைகள் ஆசைப்படறாங்க. அதுக்காக வாவது ஒரு ரெண்டு நாள் இருந்துவிட்டுப் போடா!'' என்றாள் குறைப்பட்டுக் கொண்டே.

''இல்லை தீபி. நான் மறுபடியும் வரேன். பாலாவுக்கு வேற 'ஆக்சிடென்ட்' ஆகி இப்போதான் சரியாயிட்டு இருக்கு. அவனுக்கு இப்படி இருக்கும் போது நான் வேற அவனைத் தனியா 'ஆபீஸை'ப் பார்த்துக்கச் சொல்லிட்டு வந்துட்டேன். அதான்டா. 'ப்ளீஸ்' டா! புரிஞ்சுக்க!'' என்று காரண காரியங்களுடன் விளக்கினான்.

அவளோ கோபத்தைச் சற்றும் குறைக்காமல் முகத்தை உம்மென வைத்துக் கொள்ளவே, கௌதம் உதயின் உதவியை நாடினான். உதயும் தீபியை ஒருவாறு பேசிச் சமாதானம் செய்தான். கௌதம் அன்று திரும்பி வரும் விஷயத்தைத் தன் பெற்றோர்களுக்குத் தெரியப் படுத்திவிட்டுத் தொலைபேசியை வைக்கும் முன், தீபி அவனிடமிருந்து அதைப் பிடுங்கிச் சிறு குழந்தை போல அவன் அன்னையிடம் குற்றப்பத்திரிகை வாசித்தாள்.

அவரோ, கௌதமிற்கும் ஹர்ஷினிக்கும் திருமணம் முடிவானதைப் பற்றிக் கூறி, ''அவன் இங்க சீக்கிரமா வந்தாத்தானே இனி மேற்கொண்டு நடக்க வேண்டி யதைப் பார்க்க முடியும். இப்பத்தான் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி வந்து பேசிட்டுப் போனாங்க. நானே உன்னைக் கூப்பிட்டு விஷயத்தைச் சொல்லலாம் என்று இருந் தேன். அதுக்குள்ள நீயே கூப்பிட்டுட்ட. அடுத்த வாரம் வீட்டோட நிச்சயம் பண்ணிக்கலாம்ன்னு நினைக் கிறோம். அப்புறம் கல்யாணத்தை விமரிசையா கொண் டாடலாம்ன்னு பேசியிருக்கோம்!'' என்றார்.

''அப்படியா? ரொம்ப சந்தோசம் அத்தை!'' என்று துள்ளினாள் தீபிகா.

''தீபி மெதுவா! கல்யாணம் முடிவான விஷயம் பத்தி இன்னும் கௌதமிற்குச் சொல்லலை. நீ எதாவது உளறி வச்சுடாத!'' என்று அன்று நடந்ததைப் பற்றி அவளிடம் தெரிவித்துத் தொடர்பைத் துண்டித்தார்.

எங்கே இவன் வர்ஷனாவோட நினைப்பிலேயே கல்யாணம் செய்து கொள்ளாமலேயே காலத்தை ஓட்டி விடுவானோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தவள் கௌதமின் திருமண விஷயம் கேட்டு மிகவும் மகிழ்ச்சி யடைந்தாள். 'பிடி கொடுக்காமலேயே இருந்தவனை



ஒரு வழியா ஹர்ஷினி, தன்னோட வலையில் விழ வச்சுட்டாளா. சபாஷ்! ஏதாவது சொல்லறானா பாரு? திருட்டு ராஸ்கல்! அவனுக்குத் தேவைன்னா உடனே இந்த தீபியோட ஞாபகம் வரும். இருக்கட்டும் இவனை அப்புறம் வச்சுக்கலாம்,' என்று மனதிற்குள் மகிழ்ந்திருந்த வளைச் சற்று நேரத்தில் அதிர்ச்சிக் கடலில் தள்ளினான் கௌதம்.

தொலைபேசியை வைத்தவளிடம், ''தீபி, அம்மா என்ன சொன்னாங்க? ஏதோ ரொம்ப சந்தோசம்ன்னு சொல் லிட்டு இருந்தே?'' என்று கேட்டு அவளைத் திருதிரு வென முழிக்க வைத்தான்.

''என்ன தீபி, கேள்வி கேட்டா இப்படி முழிக்கறே?'' என்று அவன் கேட்டவுடன், 'இப்படி முழிச்சு நானே காட்டிக் கொடுத்துடுவேன் போல!' என்று அவசர அவசர மாக யோசித்த தீபியும், ''அதுவா? மது 'ப்ரெக்னன்ட்' ஆனதைப் பத்தி சொன்னாங்க அத்தை. அதுதான்...'' என்று அவள் சிங்கப்பூரில் இருந்து வந்த அன்று தெரிந்து கொண்ட விஷயத்தைக் கூறி ஒருவாறாகச் சமாளித்தாள்.

அவள் பதிலில் திருப்தி அடைந்த கௌதமும், ''தீபி, நான் உன்கிட்ட ஒரு விஷயம் சொல்லணும்,'' என்றான்.

'ஆகா! விஷயம் வெளி வருதா? வரட்டும் வரட்டும்,' என்று மனதிற்குள் நினைத்தவள், ''என்ன விஷயம் கௌதம்?'' என்றாள் முகத்தைத் தீவிரமாக வைத்துக் கொண்டு. அதன் பின் கௌதம் சொன்ன விஷயம் தான் அவளைப் பேச விடாமல் செய்தது.

''அது வந்து, என்னோட காதலைப் பத்தி... நான் கல் யாணம் பண்ணிக்கலாம் என முடிவு பண்ணியிருக்கேன்.

இன்னும் பொண்ணுகிட்ட பேசிச் சம்மதம் வாங்கலை. நீதான் அப்பா - அம்மாகிட்ட பேசிச் சம்மதம் வாங்கிக் கொடுக்கணும்,'' என்று அவன் வர்ஷனாவைப் பற்றிக் கூறிக் கொண்டிருக்க, தீபியோ, அவன் தாய் கூறியதை அந்த இடத்தில் அழகாகப் பொருத்தி, அந்தப் பெண் ஹர்ஷினி தான் என்ற முடிவுக்கு வந்தவள், 'அட மாக்கா! இன்னும் பொண்ணுகிட்ட கூட சம்மதம் வாங்காம என் கிட்டே வந்து பேசிட்டு இருக்கிற. நான் வந்து பேசாம லேயே அங்கே உனக்குக் கல்யாண ஏற்பாடுகள் 'சூப்பரா' நடந்துட்டு இருக்கு!' என்று மனதிற்குள் அவனைக் கிண்டல் செய்து கொண்டிருந்தாள்.

இதை அறியாத கௌதமோ, தீபி பதிலளிக்காமல் அவனையே, 'ஈஈஈ' என்று பார்த்துக் கொண்டிருந்ததைப் பார்த்துக் கடுப்பாகி, ''இப்போ என்ன சொல்லிட்டாங் கன்னு இப்படி சிரிக்கிற. நான் சொன்னதுக்கு என்ன பதிலையே காணோம்?'' என்றான்.

அவன் கடுப்புடன் கேட்ட பின்தான் அவனுக்குப் பதிலளிக்கவில்லை என்று உணர்ந்தவள், ''நான் உனக்கு 'ஹெல்ப்' பண்ணாமலா? கண்டிப்பா. அழுது புரண்டு. சண்டை போட்டாவது உனக்குச் சம்மதம் வாங்கிக் கொடுப் பேன். என்னை நம்பு!'' என்று விஷயம் தெரியாமல் வாக்குக் கொடுத்தாள்.

''தேங்க்ஸ் தீபி! ஆனா, பொண்ணு யார்ன்னு நீ கேட் கவே இல்லையே?'' என்றான் கவலை அகன்ற குரலில்.

''வந்து என்னோட 'ஹெல்ப்' கேட்கத் தெரிஞ்ச உனக்கு அதைச் சொல்லணும்னு தெரியாதா? நீயே சொல்லு வேன்னு நான் வெயிட் பண்ணறேன்.''

''எல்லாம் உனக்குத் தெரிஞ்ச பொண்ணுதான். ஆனா அப்பா அம்மாவை நினைச்சாத்தான் பயமா இருக்கு.''



''ஏன்டா பயப்படணும்? தீபியிருக்கப் பயமேன்?'' என்று அவள் கையை உயர்த்தி அவனுக்கு ஆசி வேறு வழங்கியவள், அடுத்து அவன் சொன்னதைக் கேட்டு அதிர்ந்தாள்.

''வந்து தீபி... வர்ஷனாவைத்தான் கல்யாணம் பண்ணிக்கலாம்னு இருக்கேன். நீதான் வந்து அப்பா - அம்மாகிட்ட பேசிச் சம்மதிக்க வைக்கணும். செய்வியா?'' என்று கேட்டு அவளைத் திகைக்க வைத்தான்.

அவன் சொன்னதன் அர்த்தம் புரிந்து, ''வாட்'? என் னடா உளர்ற? அவளுக்குத்தான் கல்யாணம் ஆயிடுச்சே!'' என்றாள்.

கௌதம் நடந்ததைக் கூறி, அவளிடமும் இதைப் பற்றிக் கோடி காட்டி விட்டதாகவும், அவள் தான் இதற்கு இன்னும் ஒத்துக் கொள்ளாமல் இருக்கிறாள் என்றும் தெரிவித்தான். அவன் கூறிய விஷயத்தைக் கேட்டு, ''அப்போ நீ காதலிக்கற பொண்ணு ஹர்ஷினி இல்லையா?'' என்று கேட்டுக் கௌதமை எரிச்சல் படுத்தினாள்.

''வாட் நான்சென்ஸ்'! நான் எப்போ ஹர்ஷினியைக் காத லிக்கிறேன்னு சொன்னேன்?'' என்று எரிந்து விழுந்தான்.

''அப்போ அங்க உனக்கு ஹர்ஷினியோட நடந்திட்டு இருக்கற கல்யாண ஏற்பாடு? ஐயோ! என்னடா நடக்குது இங்க?'' என்று நடப்பது எதுவும் தெரியாமல் இருப்பவ னிடமே கேட்டாள்.

''என்ன தீபி சொல்லற? உனக்கு ஏதாவது கழண்டு டுச்சா?'' என்றான் கௌதம் சினத்துடன். அவனின் எரிச் சலைப் பார்த்தவள், அவன் அன்னை கூறிய விஷயத்தை மடமடவென்று ஒப்பித்தாள்.

''ச்சே! எங்கிட்டே ஒரு வார்த்தை கூடக் கேட்காம எப்படி அவங்களா ஒரு முடிவுக்கு வரலாம்? யார் இப்போ

ஹர்ஷினியோட கல்யாணம் வேணும்னு இவங்ககிட்ட அழுதாங்க? வர்ஷனாதான் கல்யாணத்துக்குச் சம்மதம் சொல்லாம என்னை இம்சைப் படுத்தறான்னா, அவளோட சேர்ந்துட்டு அப்பா - அம்மாவும் அவங்க பங்குக்கு சும்மா இருக்காம என்னைப் படுத்தி எடுக்கறாங்க. எல்லாம் அந்த ஹர்ஷினி ஓரகு பண்ணின வேலையா் இருக்கும். அவ மட்டும் என் கையில கெடைச்சா கொலைல்யே பண்ணிடுவேன்!'' என்றான் ரௌத்திரத்துடன்.

இதுவரை கௌதமை அப்படிப் பார்த்திராத தீபி, அவனின் இந்தக் கோபத்தைப் பார்த்துப் பயந்துதான் போனாள். ''கௌதம்! என்ன பேசற? கொஞ்சம் சும்மா இரு. அவளுக்கு உன்னைப் பிடிச்சிருக்கு. அதனாலதான் அவளோட அப்பாகிட்ட அப்படிச் சொல்லி இருப்பா. நீ எப்பவாவது அவகிட்ட அவளைப் பிடிக்கலைன்னு சொல்லி இருப்பியா?

''அவளா உனக்கும் அவளைப் பிடிச்சிருக்குன்னு நினைச்சுட்டு ஏதேதோ கற்பனை பண்ணிட்டு இருந் திருப்பா. நான்தான் கல்யாணத்துல பார்த்தேனே. அவ உன் பின்னாடியே அலைஞ்சதை. நீ அப்பவே அவள் கிட்ட சொல்லி இருக்க வேண்டியதுதானே? உனக்கு அப்பவே தெரியுமில்லை. அவ உன் பின்னாடி சுத்திட்டு இருக்கான்னு?'' என்று அவள் செய்ததைப் பெரிதாக ஒன்றுமில்லை என்பது போலக் காட்ட முயன்றாள்.

''ச்சே! மதுவுக்காவும், வசந்துக்காவும் அவள் முகத்தி லடிக்கிற மாதிரி பேசக் கூடாதுன்னுதான் சும்மா இருந் தேன். எனக்கும் அவளைப் பிடிச்சிருக்குன்னு நினைச் சிருந்தா எதுக்கு எல்லாத்தையும் ரகசியமா செய்யச் சொல் லுவா? என்கிட்டே இல்லை முதல்ல கேட்கச் சொல்லி இருக்கணும். நான் அவளை ஒரு தடவை 'ஆபீஸ்'



வந்தப்போ கூட திட்டி அனுப்பிச்சுட்டேன். வசதி காரணமா என்னோட காதலைச் சொல்லத் தயங்கறேனா? என்னமா நடிச்சிருக்கா? வரேன்டி! அங்க வந்து உன்னை வச்சுக்கறேன்!'' என்று தீபியிடம் பேச ஆரம்பித்து, கோவையில் இருக்கும் ஹர்ஷினியிடம் முடித்தான்.

''கௌதம்! என்ன இது? ஒரு பொண்ணை வாடி - போடின்னு பேசிட்டு? இது உன்னோட குணம் இல் லையே. கொஞ்சம் பொறுமையா இரு. நீதான் இன் னைக்கு 'நைட்' அங்க போறியே. அங்க போற வரைக்கும் நல்லா யோசி. அப்புறம் அங்க போய்ப் பேச வேண்டியதைப் பேசு. நான் ரெண்டு நாளுல அங்க வரேன். எனக்கு உடனே லீவு கிடைக்குமான்னு தெரியலை,'' என்றாள்.

அவள் சொல்வதிலும் உண்மை இருக்க, ''சாரி தீபி! கோபத்துல என்ன பேசறேன்னு தெரியாம பேசிட்டேன். வர்ஷனாகிட்ட வேற போய்ப் பேசினேன். அவளும் கல்யாணத்துக்கு ஒத்துக்கலை. அவளை எப்படிச் சரிக் கட்டறது எனக் குழப்பமாயிருக்கு. இதுல இது வேற தேவையா?'' என்றான் கவலையுடன்.

''கௌதம்! நீதான் அவள்கிட்ட பேச வேண்டிய விதத்துல பேசிச் சரிக் கட்டணும். நல்லா தெளிஞ்ச மனசோட யோசி. நல்லதா நடக்கும். ஆனா, ஒண்ணுடா, உன்னை நினைச்சா எனக்குப் பெருமையா இருக்கு. உன்னோட காதல்தான் எவ்வளவு உன்னதமானது!'' என்று அவன் தலையைக் கலைத்து விட்டாள்.

அவளின் வருடலில் இருந்த அன்பை உணர்ந்தவன், அவள் கையைப் பற்றிக் கொண்டு, ''தேங்க்ஸ் தீபி! நீ தான் வந்து அப்பா - அம்மாகிட்ட பேசணும்,'' என்றான் கோபம் தணிந்தவனாக.

''சரி. கண்டிப்பா வந்து பேசறேன். ஆனா, உனக்குக் கல்யாணம் நிச்சயம் பண்ணறதைப் பத்தி நான்தான் உன்கிட்ட சொன்னேன்னு அத்தை கிட்ட போட்டுக் கொடுத்துடாதே. நான்தான் இதைப் பத்தி உன்கிட்ட சொல்லிட்டேன்னு தெரிஞ்சு உன் மேல இருக்கிற கோபத்தை எல்லாம் என் மேல் திருப்பிடுவாங்க. அப்புறம் அவங்ககிட்ட என்னால போய் வர்ஷனாவைப் பத்தி பேசக்கூட முடியாது!'' என்றவளிடம் சரியெனத் தலையசைத்தான்.

அதுவரை கௌதமுக்குத் தைரியம் அளித்துக் கொண்டிருந்தவள், ''ம்ம்ம்... உனக்கே தெரியும். காதலை அத்தை ஒத்துக்க மாட்டாங்கன்னு. போன தடவை அவங்ககிட்ட பேசினப்பவே படாத பாடு பட்டுட்டேன். மறுபடியும் போய் வர்ஷனாவைக் கல்யாணம் பண்ணிக்க அனுமதி வாங்கிக் கொடுக்கச் சொல்லறே. இது தெரியாம நான் பாட்டுக்கு உனக்கு வாக்கு வேற கொடுத்துட்டேன். அத்தை இதற்குக் கண்டிப்பா ஒத்துக்கவே மாட்டாங்க. என்னத்தைச் சொல்லி அவங்களைச் சம்மதிக்க வைக்க முடியுமோ? எனக்கு என்னமோ பயமா இருக்குடா. உனக்கு ஏன்தான் இப்படி ஒரு நிலைமையோ?'' என்று புலம்பி, அவள் கவலையையும் சேர்த்து மூட்டை கட்டி, கௌதமுடன் கோவைக்கு அனுப்பி வைத்தாள் தீபிகா.

கோவைக்குத் திரும்பிய கௌதமை அவன் தந்தை, ''தியான் எப்படி இருக்கான்? அவன் மனைவி எப்படி இருக்கா?'' என்று விசாரித்தார். அதற்குப் பதிலளித்த பின் தன் அறைக்குச் சென்று குளித்து விட்டு வந்தான் கௌதம். பெங்களூரில் இருந்து வரும் வழியில் எல்லாம் யோசித்து நேரே தன்னைப் பெற்றவர்களிடம் வர்ஷ



னாவைப் பற்றிக் கூறப் பல முறை ஒத்திகை பார்த்து விட்டுத்தான் வந்தான்.

தன் தந்தையிடம் சென்று, ''அப்பா! ரொம்ப நாளா உங்ககிட்ட ஒரு விஷயம் சொல்ல எண்ணி இருந்தேன். ஏதோ ஒரு காரணத்துனால தள்ளிப் போயிட்டே இருக்கு. இப்போ கொஞ்ச நேரம் இருக்கு. பேசலாமாப்பா?'' என்று கேட்டான்.

''என்னப்பா பேசணும்? சொல்லு,'' என்று அவர் படித்துக் கொண்டிருந்த செய்தித் தாளை மடித்து வைத்தார்.

''இருங்க! அம்மாவையும் வரச் சொல்லறேன்,'' என்றவன் சமையலறையில் எதையோ உருட்டிக் கொண்டிருந்த ராஜேஸ்வரியைக் கையைப் பிடித்து இழுத்து வந்து உட்கார வைத்தான்.

''கண்ணா! மெல்ல... கையை விடு... நானே வரேன்,'' என்று அவர் சொல்வதைக் காதில் போட்டுக் கொள்ளாமல், ''எவ்வளவு நேரமா கூப்பிட்டுட்டு இருக்கிறேன்? அப்படி என்ன வேலை செஞ்சிட்டு இருந்தீங்க?'' என்று அவரை அங்கிருந்த சோபாவில் உட்கார வைத்தான்.

''அப்படி என்ன தலை போற அவசரம்?'' என்றார் அவர் எரிச்சலுடன். ''நான் ஒரு பொண்ணை மனசார விரும்ப...'' என்று அவன் முடிக்கும் முன், ''இதைப் பத்தி பேசத்தான் இவ்வளவு அவசரமா என்னை இழுத்துட்டு வந்தியா? உனக்குக் கல்யாணம் பண்ணத்தானே நாங்க காத்துட்டு இருக்கோம். அடுத்த முகூர்த்தத்துலேயே கல்யாணத்தை வச்சிடலாம்,'' என்று சந்தோசமாக அவனை இடையிட்டுக் கூறினார் ராஜேஸ்வரி.

அவரைப் பார்த்து முறைத்தவன், ''என்னைக் கொஞ்சம் பேச விடறீங்களா? நான் 'காலேஜ்' படிக்கும் போது

ஒரு பொண்ணை விரும்பினேன்னு வந்து உங்ககிட்ட சொன்னது ஞாபகம் இருக்கா?'' என அவர்களைக் கேட்டான்.

''அதுதான் முடிஞ்சு போன விஷயமாச்சே. இப்போ அதுக்கு என்ன? அதைப் பத்தி ஏதாவது பொண்ணுகிட்ட தத்துப்பித்தாக உளறி வைக்காதே!'' என்று அதட்டினார் அவன் அன்னை.

''அந்த விஷயம் இன்னும் முடியலை. அவளை நான் ஆறு மாசத்துக்கு முன்னாடி தான் மறுபடியும் சந்திச்சேன். ஆனா, இப்போ ஒரு மாசத்துக்கு முன்னாடி தான் எனக்குத் தெரிஞ்சது. அவளோட கணவர் ஒரு விபத்துல மூணு வருஷத்துக்கு முன்னாடி இறந்துட்டார் என. அவளை நான் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறேன். நீங்க தான் மறுப்பு எதுவும் சொல்லாம நடத்திக் கொடுக்கணும்!'' என்று தங்கு தடையில்லாமல் தெளிவாகச் சொன்னான்.

''என்ன சொல்ற நீ? விளையாடுறியா? உனக்கு ஏன்ப்பா புத்தி இப்படி எல்லாம் போகுது?'' என்று அவன் அன்னை புலம்ப, அவன் தந்தையோ, ''என்னப்பா கௌதம் இது? அதுதான் ஆறு வருஷத்துக்கு முன்னாடியே முடிஞ்சு போச்சே. இன்னுமா நீ அதை மறக்கலை. நீ சொல்லறது சினிமாவுல வேணா ஒத்து வரும். நடைமுறைக்கு ஒத்து வராதுப்பா. இதனால வரப்போகும் சிக்கல்களைப் பத்தி யோசிச்சுப் பாரு. நாங்க அப்புறம் சம்பந்திக்கு என்ன பதில் சொல்லுவோம்? அதுவும் அந்த ஹர்ஷினிப் பொண்ணு உன் மேல உயிரையே வச்சிருக்கு. அவள் மனசுல ஆசையை விதைச்சிட்டு இப்போ வந்து இப்படி மாத்திப் பேசினா எப்படி?'' என்றார்.

இதற்காகவே காத்திருந்தவன் போல, 'ஹர்ஷினியா? அவளுக்கும் என் கல்யாணத்துக்கும் என்ன சம்பந்தம்?



நீங்க ஏன் அங்கிளுக்குப் பதில் சொல்லணும்? எனக்கு ஒண்ணுமே புரியலை. அதுவும் ஹர்ஷினி மனசுல நான் ஆசையை விதைச்சேனா? யார் சொன்னது உங்களுக்கு?'' என்று அதுவரை மனதில் கனன்று கொண்டிருந்ததைக் கொட்டி முடித்தான்.

''ஹர்ஷினிக்கும் உனக்கும் என்ன சம்பந்தமா? நீ உன் விருப்பத்தைக் கோடி காட்டாமலேயா ஹர்ஷினி போய் அவளோட பெற்றோர்கள் கிட்ட உனக்கு அவளைப் பிடிச்சிருக்குன்னு சொல்லுவா? திடீர் என உனக்கு வர்ஷ னாவைப் பத்தின விஷயம் தெரிஞ்சதும் இப்போ மாத்திப் பேசறயா? உனக்கே இது அசிங்கமாப் படலையா?'' என்றார் ஸ்ரீனிவாசன்.

''அப்பா! நான் எப்பவுமே ஹர்ஷினி கிட்ட அவளைப் பிடிச்சதா சொல்லவே இல்லை. அவளா கற்பனை பண்ணிகிட்டா அதுக்கு நான் ஒண்ணும் பண்ண முடியாது. நான் முடிவாச் சொல்லறேன். வர்ஷனாவைத்தான் கல்யாணம் பண்ணிக்குவேன்!'' என்றான் தீர்மானமாக.

''என்னடா சொல்லற? அந்தப் பொண்ணைப் போய்க் கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொல்லற. அந்தப் பொண்ணு ஒரு ராசி இல்லாத பொண்ணா இருப்பா போல. தெரிஞ்சே போய் எதுக்கு நீ காலை விடற. அதெல்லாம் நமக்குச் சரிப்பட்டு வராது. உனக்கு அடுத்த வாரம் ஹர்ஷினியோட நிச்சயத்துக்கு ஏற்பாடு பண்ணியிருக்கிறோம். ஒழுங்கா நல்ல பையனா அந்த ஹர்ஷினியைக் கல்யாணம் பண்ணிக்கோ!'' என்றார் ராஜேஸ்வரி படபடப்புடன்.

அவன் அன்னையை நம்பாமல் பார்த்தவன், ''அம்மா! உங்களுக்கே இது நல்லா இருக்கா? இப்படியா ஒரு

பொண்ணைப் பத்தி ராசியில்லாதவன்னு சொல்லுவீங்க? இது மாதிரி நடக்கறதுக்கு அவ என்ன பண்ணினா? ச்சே! நீங்க இப்படி பேசுவீங்க என நான் கொஞ்சங் கூட நினைக்கலை!'' என்று முதலில் கண்டனக் குரலில் தன் அன்னையிடம் சொன்னவன், பின், ''அதை விடுங்க. முதல்ல என்னைக் கேட்காம எதுக்கு நீங்களா என்னோட நிச்சயத்தை முடிவு பண்ணினீங்க?'' என்று இருவரிடமும் சீற்றத்துடன் கேட்டான்.

''உன்னைப் பெத்து வளர்த்திருக்கோமே, அந்த உரிமையில தான்ப்பா முடிவு செஞ்சோம். எங்களுக்கு அந்த உரிமை கூட இல்லையா?'' என்றார் ஸ்ரீனிவாசன்.

''அப்பா! உங்களுக்கு உரிமை இல்லைன்னு யாரு சொன்னா? உரிமையை நிலைநாட்ட இதுவா நேரம்? நான் என்ன கேட்கிறேன்னா கல்யாணம் பண்ணப் போற என்கிட்டே ஒரு வார்த்தை கேட்கணும்ன்னு உங்களுக்குத் தோணலையா? யாரோ ஒரு பொண்ணு சொன்னதை நம்பி நீங்களா எப்படி ஒரு முடிவுக்கு வரலாம்?''

''சரிப்பா! இப்போ சொல்லறோம். உனக்கு ஹர்ஷினியோட இந்த வெள்ளி போய் அடுத்து வர்ற வெள்ளிக் கிழமை வீட்டோட நிச்சயம் பண்ண முடிவு பண்ணி இருக்கிறோம். அதை வேண்டாமெனச் சொல்லறதுக்கு முன்னாடி வரும் பின் விளைவுகளைப் பத்தி யோசிச்சுப் பாரு. உன்னோட தங்கையோட வாழ்க்கையும் அதிலே அடங்கி இருக்கு... சொல்லிட்டேன். நீ அவங்க வீட்டுப் பொண்ணை வேண்டாம்ன்னு சொன்னதற்கு அப்புறம் மது அங்க சந்தோசமா இருக்க முடியுமா?'' என்றார் ராஜேஸ்வரி அழுகையுடனே.

''ச்சே! அம்மா... அதுக்கும் இதுக்கும் என்னம்மா சம்பந்தம்? வர்ஷனாவைப் பத்திச் சொல்லி அதனால



தான் இஷ்டமில்லைன்னு சொன்னா புரிஞ்சுக்கப் போறாங்க.''

''ஓஹோ! நாங்க இவ்வளவு சொல்லியும் உனக்கு அந்தப் பொண்ணுதான் முக்கியமாப் போனாளா? உன்னோட தங்கச்சியோட வாழ்க்கை எப்படிப் போனா உனக்கு என்ன வந்தது? தன்னோட சோகக் கதையை உன்கிட்ட வந்து சொல்லி உன்னை ரொம்ப அழகா அவளோட வலையில விழ வச்சுட்டாளா?'' என்று அம்மா கேள்விகளை அடுக்க, இவனுக்குள் சினம் தலைக்கேறியது. மேற்கொண்டு என்ன பேசியிருப்பானோ, அதற்குள் அவனின் கைபேசி என்னை எடு என்றது.

எடுத்தவனிடம், ''கௌதம், எங்க இருக்கிற? கோவைக்கு வந்திட்டியா? இன்று ஒரு முக்கியமான 'கான்பரன்ஸ்' கால் பேசணும். ஞாபகம் இருக்குதா? நீ வந்து என்னைக் கூட்டிட்டுப் போறேன்னு நேத்தே சொன்னியே. இப்போ நீ எங்கிருக்கே?'' என்றான் பாலா.

''ஞாபகம் இருக்கு பாலா. இதோ கிளம்பிட்டேன்,'' என்று பேசியை வைத்தவன், ''சரிப்பா! இதைப் பத்தி நாம் அப்புறமா பேசுவோம். எனக்கு இப்போ அவசரமாக் கிளம்பணும்,'' என்று கிளம்ப எத்தனிக்க, அவன் அன்னையோ, ''பேசறதுக்கு என்ன இருக்கு? அடுத்த வெள்ளிக் கிழமை நாங்க சொன்ன மாதிரி உனக்கும் ஹர்ஷினிக்கும் நிச்சயதார்த்தம் நடக்குது. அவ்வளவுதான்!'' என்று கறாராக முடித்து அங்கிருந்து எழுந்து சென்றார். வேலை அவனை அழைக்க இதைப் பற்றிப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்துக் கனத்த மனதுடன் அங்கிருந்து கிளம்பினான்.

கௌதம் பெங்களூரில் இருந்து வந்த அன்று மாலை, வர்ஷனாவைச் சந்திக்கவென்று அவள் வீட்டிற்குச்

சென்றாள் மது. வசந்த், அவளை இறக்கி விட்டவன், ஒரு நண்பனைச் சந்திக்கப் போவதாகவும், சந்தித்து விட்டு, இரவு சீக்கிரம் வந்து அவளைத் திரும்ப அழைத்துச் செல்வ தாகவும் தெரிவித்து அங்கிருந்து கிளம்பிச் சென்றான்.

மதுவும், வர்ஷனாவும் இப்பொழுது நல்ல தோழி களாக மாறி அனைத்து விஷயங்களையும் பற்றிப் பகிர்ந்து கொண்டனர். வர்ஷனாவிடம் தன் அண்ணன் அவளை அழைப்பதைப் போலவே மது என்று அழைக்கச் சொல்லி இருந்தாள். மறுப்புச் சொல்லாமல் வர்ஷனா வும் அவ்வாறே அழைத்தாள். வர்ஷனாவின் வீட்டிற்குச் சென்ற பின் நட்சத்ராவுடன் சிறிது நேரம் விளையாடி, அவளுடனே சாப்பிட்டு அவள் உறங்கும்வரை அமைதி யாக இருந்த மது, அவள் உறங்கிய பின் வர்ஷனாவிடம் மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தாள்.

''வர்ஷனா! உங்ககிட்ட நான் ஒண்ணு கேட்டா, தப்பா நினைச்சுக்க மாட்டீங்களே?''

''நான் ஏன் தப்பா நினைச்சுக்கப் போறேன்? கேளு மது.''

''அ... அது... வந்து... நீங்க இப்படித் தனியா இருக்கற வாழ்க்கையில சந்தோசமா இருக்கீங்களா? நீங்க ஏன் மறுபடியும் கல்யாணம் பண்ணிக்கக் கூடாது?'' என்று கேட்க நினைத்ததைக் கேட்டு முடித்தாள்.

வர்ஷனா பதில் சொல்லாமல் அமைதியாக இருப் பதைப் பார்த்தவள், பதட்டத்துடன், ''சாரி வர்ஷனா! நான் ஏதாவது தப்பாக் கேட்டிருந்தா என்னை மன்னிச் சுடுங்க!'' என்றாள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லை மது. நான் சந்தோச மாகத்தான் இருக்கிறேன். எனக்கு நட்சத்ரான்னா உயிர்.



அவள் இருக்கும் போது எனக்கு சந்தோசத்துக்கு என்ன குறைச்சல்? அதனால நான் இன்னொரு கல்யாணத்தைப் பத்தி யோசிச்சுப் பார்த்ததேயில்லை. எனக்கு என் நட்சத்ரா மட்டும் கடைசி வரை போதும்.''

அவள் கோபப்படவில்லை என்றறிந்ததும், மதுவிற்கும் சிறிது தைரியம் வந்தது. ''இனிமேலாவது யோசிக்க லாமே. எவ்வளவு நாளைக்குத்தான் இப்படி தனியா இருப்பீங்க? உங்களுக்காக இல்லாவிட்டாலும், நட்சத்ராவுக் காகவாவது யோசிச்சுப் பார்க்கலாமே?'' என்றாள் மது.

''அது எல்லாம் ஒத்து வராது மது. நானே நட்சத்ராவை நல்லா கவனிச்சுக்குவேன்.''

''அவசர ஆத்திரத்துக்கு உதவி செய்யக் கூட உங்க பக்கத்துல உறவுன்னு சொல்லிக்க இங்க யாருமில்லை. என்னதான் நண்பர்கள் பார்த்துகிட்டாலும், எவ்வளவு நாளைக்கு? அவங்களுக்கும் குடும்பம்னு ஒண்ணு இருக்கும். உங்களுக்கு அவசியப்படும் பொழுது அவங்க ளால வர முடியாமப் போகும். ஆனா, உங்களுக்குன்னு ஒருத்தர் இருந்தா கடைசிவரை நீங்களும் ஒரே குடும்பமா சந்தோசமா இருக்கலாமே?

''உங்களுக்கு வேலை காரணமா நட்சத்ராவை 'டே கேர்'ல இருந்து நேரத்துக்குக் கூப்பிடப் போக முடி யலைன்னுவையுங்க. நட்சத்ராவோட நிலைமையை யோசிச்சுப் பார்த்தீங்களா? எல்லாக் குழந்தைகளும் அவங்கவங்க வீட்டிற்குப் போனதற்கு அப்புறம் உங்களை அவ தேட மாட்டாளா? நீங்க ஏன் இன்னும் வரலைன்னு அவ பயந்து போயிட மாட்டாளா?'' என்று கூறி நிறுத் தினாள்.

''எனக்கு அது தெரியாமலில்லை மது. நீ சொன்ன மாதிரி பல தடவை நடந்திருக்கு. நட்சத்ராகிட்ட

சொல்லிப் புரிய வச்சிருக்கேன். இப்போ அவளே புரிஞ்சுக்கிட்டு என்னைத் தேடறது இல்லை. உதவிக்காகத்தானே ஒரு வேலைக்கார அம்மாவை நியமிச்சிருக்கேன். அவங்க நான் வர வரைக்கும் நட்சத்ராவைப் பார்த்துக்குவாங்க. அதுக்காக எல்லாம் கல்யாணம் பண்ணிக்க முடியுமா?'' என்று அவளையே திருப்பிக் கேட்டாள்.

மனதிற்குள், 'நான் எதை நினைச்சுச் சொன்னா, அண்ணி என்ன பதில் சொல்லறாங்க... அண்ணா! உன் நிலைமை கொஞ்சம் கஷ்டம்தான்!' என்று தலையில் அடித்துக் கொண்டவள், ''உதவிக்காக மட்டும் யாரும் கல்யாணம் பண்ணிக்க மாட்டாங்க வர்ஷனா. நான் அதைச் சொல்ல வரலைன்னு உங்களுக்கே தெரியும். உங்களுக்குன்னு ஒரு அன்பானவர் வேண்டாமா? உங்க சுமைகளைச் சுமக்க, உங்க சுக துக்கங்களைப் பகிர்ந்துக்க, நீங்க தோள் சாஞ்சு அழ. இதற்கெல்லாம் ஒரு துணை வேண்டாமான்னுதான் கேட்டேன்.''

''எனக்கு அப்படி ஒரு துணை தேவைன்னு நான் நினைக்கலையே. எனக்குன்னு எந்தச் சுமையும் இல்லை. இருக்கிற என்னோட உயிரை (நட்சத்ராவை) நல்லா வச்சுக்குவேன். அதுக்குத் தகுந்த மாதிரி ஒரு நல்ல வேலை இருக்கு. எனக்கு அழணும்னு நினைச்சா, நட்சத்ராவோட சிரிப்புல அது கூட இருந்த இடம் தெரியாமப் போயிடும்.''

'ச்சே! எல்லாத்துக்கும் ஒரு பதில் ரெடியா வச்சுட்டு இருக்காங்க. சரி... ட்ராக்கை மாத்திப் பார்க்கலாம்,' என்று நினைத்தவள், ''வர்ஷனா! உங்களுக்கு ஏன் இந்தப் பிடிவாதம்? நட்சத்ராவுக்காகவாவது யோசிங்க. உங்களுக்



குத் தேவையில்லை. சரி! நீங்க என்னதான் அம்மாவாவும் அப்பாவாவும் மாறி மாறி அவளுக்குச் செஞ்சாலும், மற்றக் குழந்தைகளைப் பார்த்து அவள் ஏங்க மாட்டாளா? அவளோட மனநிலைமை இதனால பாதிக்காதா? கொஞ்ச நாளைக்கு முன்னாடிதான் ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை படிச்சேன். இது மாதிரி அப்பாவோட அரவணைப்பு இல்லாம பெண் குழந்தைகள் வளர்ந்தா அவங்க மனசளவுல பாதிக்கப்படுவாங்கன்னு போட்டிருந்தது.'' என்று மறுபடியும் ஆரம்பித்த இடத்திலேயே வந்து நின்றாள் மது.

''நானும் அதையேதான் சொல்லறேன். நான் யாரை யாவது கல்யாணம் பண்ணிகிட்டாலும் வரப்போறவர் நட்சத்ராவைத் தன் பொண்ணா நினைப்பார் என்கிறதுக்கு என்ன உத்தரவாதம்? அவர் அப்படி நினைக்கலைன்னு வையுங்க. அப்போ நட்சத்ராவோட மனநிலை பாதிக்கப்படாதா?'' என்று மது தடுக்கில் பாய்ந்தால் இவள் இடுக்கில் பாய்ந்தாள்.

''அதெல்லாம் நட்சத்ராவைத் தன் மகளா அ... வரப்போறவர் நினைப்பார். யாருக்காவது நட்சத்ராவைப் பிடிக்காம இருக்குமா?''

''மது! இதுவரைக்கும் நான் சந்தோசமாகத்தான் இருக்கேன். நட்சத்ரா என்னோட இருந்தா, இனியும் நான் சந்தோசமாத்தான் இருப்பேன். அதுவுமில்லாம இவளை வளர்க்கிறதுக்கு இது வரைக்கும் துணை புரிந்த அதிர்ஷ்டம், எனக்குக் கடைசி வரைக்கும் துணை புரியும் என்கிற நம்பிக்கையில நான் வாழ்ந்துக்கிட்டு இருக்கிறேன். தயவு செய்து இதைப் பத்தி இனிமேல் நாம பேச வேண்டாமே. 'ப்ளீஸ்'!'' என்றாள் கெஞ்சலாக வர்ஷனா.

'சாமி! என்னால முடியலைடா... ஏதாவது அதிரடியாப் பண்ணினா தான் அண்ணி வழிக்கு வருவாங்க போல.'

''பேசலை. நீங்க உடனே முடிவு தெரிவிக்க வேண்டாம். ஆனா, இதைப் பத்தி கொஞ்சமே கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க,'' என்று இரண்டு கையையும் விரித்துக் காண்பித்த மதுவைப் பார்த்துச் சிரித்த வர்ஷனா, ''இது உனக்குக் கொஞ்சமா?'' என்று கேட்டவள், ''சரி! நீ சொன்ன மாதிரியே செய்யறேன்,'' என்று பதிலளித்த பின், ''உன்னோட அண்ணன் வந்து என்கிட்ட இப்படிப் பேசச் சொன்னாரா மது?'' என்று கேட்டு அவளைத் திகைக்க வைத்தாள்.

''அண்ணனா? அவர் எதுக்கு என்னை உங்ககிட்ட பேசச் சொன்னார்? நானாதான் வந்து பேசினேன். நான் உங்களோட 'ஃபிரெண்ட்' அப்படிங்கற உரிமையில கேட்டேன். தப்பா இருந்தா மன்னிச்சுடுங்க வர்ஷனா!'' என்று வர்ஷனாவிடம் சொன்னவள், 'அண்ணா! அண்ணி பயங்கர ஷார்ப்! கொஞ்சம் ஜாக்கிரதையாத்தான் இருக்கணும்!' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்.

வர்ஷனாவோ அதை நம்பத் தயாராக இல்லை. இருந்தாலும் மதுவின் மனம் வாடுவதைப் பார்த்துத் தாங்காமல், 'சாரி மது! கௌதம் என்னைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறதா கொஞ்ச நாளைக்கு முன்னாடி சொன்னான். நான் முடியாதுன்னு சொன்னேன். அது தான் உன்னை அனுப்பி என்னோட மனசை மாத்த முயற்சி பண்ணறாரோன்னு நினைச்சேன். நீயே நல்லா யோசிச்சுப் பாரு. இது எல்லாம் ஒத்து வருமான்னு!'' என்று பதிலளித்தாள்.

சற்று நேரம் அமைதியாக இருந்த மது, ''எனக்குத் தெரியும். அண்ணன் ஏற்கெனவே என்கிட்ட சொன்னார். ஆனா, இப்போ நான் பேசினது முற்றிலும் என்னோட



கருத்து. இதற்கும் அண்ணனுக்கும் கொஞ்சம் கூடச் சம்பந்தமில்லை. அண்ணன் உங்ககிட்ட கல்யாணம் பண்ணிக்கக் கேட்கலைன்னாலும் இதைப் பத்தி நான் கண்டிப்பா பேசியிருப்பேன். தப்பா இருந்தா மன்னிச்சுடுங்க! ஆனா, நீங்க எனக்கு அண்ணியா வந்தா நான் ரொம்ப சந்தோசப்படுவேன். அப்புறம் உங்கள் இஷ்டம்!'' என்றவளை, இடையிட்டது அவளின் கைபேசி.

அதை எடுத்து, ''வசந்த்! வந்திட்டீங்களா? இதோ கீழே வரேன்,'' என்று தன் கணவனுக்குப் பதிலளித்தவள், வர்ஷனாவிடம், ''நான் வரேன்! நீங்க யோசிங்க!'' என்று கூறிக் கிளம்பிவிட்டாள்.

அலுவலகத்தில் இருந்து ஓய்ந்து, களைத்துப் போய் வந்த கௌதம், அமைதியாக இரவு உணவை முடித்துக் கொண்டு, தூக்கம் வருவதாகக் கூறித் தன் அறைக்குச் சென்றான். அப்போதிருந்த மனநிலையில், அவனுக்குத் தன் பெற்றவர்களிடம் விவாதிக்கச் சிறிதும் விருப்பம் இல்லாததால் அவ்வாறு கூறிவிட்டு வந்தவனுக்கு நித்ராதேவி சிறிதும் கை கொடுக்கவில்லை. மேலும், அலுவலகத்தில் அன்று முழுவதும் நிற்கக் கூட நேரமில்லாமல் வேலை செய்து கொண்டிருந்ததால், சொந்த விஷயத்தைப் பற்றி யோசிக்கக் கூட அவனால் முடியவில்லை. அதைப் பற்றி யோசிக்க இப்பொழுது தான் அவனுக்கு நேரமும் தனிமையும் கிடைத்தது.

'வர்ஷனா விஷயத்தில் மேற்கொண்டு என்ன செய்வது? மதுவுக்கு இதெல்லாம் தெரிஞ்சிருக்குமா? இருக்காது. மதுவுக்கு விஷயம் தெரிஞ்சிருந்தா இந்நேரம் என்கிட்டே அதைப் பத்திக் கேட்டிருப்பா. மதுவுக்குக் கூடத் தெரியக் கூடாதுன்னு என்ன தந்திரமா காயை நகர்த்தி இருக்கா ஹர்ஷினி. மதுகிட்ட பேசாம

விஷயத்தைச் சொல்லி அவளையும் வந்து அப்பா - அம்மாகிட்ட பேசச் சொல்லிப் பார்க்கலாமா?' என்று கைபேசியை எடுத்தவன் அப்பொழுது தான் பார்த்தான். மதுவிடமிருந்து இரண்டு தடவை அழைப்பு வந்திருந்ததை. ஆனால், இரவு வெகுநேரம் ஆகிவிட்டதை உணர்ந்து நாளை பேசிக்கொள்ளலாம் என்று அவளை அழைக்காமல் விடுத்தான்.

மேலும் சற்று நேரம் யோசித்தவன், 'மதுகிட்டச் சொல்லி அவளையும் இது மாதிரி சமயத்துல கஷ்டப்படுத்த வேண்டாம். முதல்ல நடக்கவிருக்கும் நிச்சயத்தைத் தடுத்து நிறுத்தணும். இன்னும் ஒரு வாரம்தான் இருக்கு. அதுக்கப்புறம் தான் வர்ஷிணாவோட மனசை மாத்த முயற்சி பண்ணணும். அப்பா - அம்மாகிட்ட மறுபடியும் காலையில் பேசிப் பார்ப்போம். அப்பவும் ஒத்துக்கலைன்னா மதுகிட்ட சொல்லிப் பார்க்கலாம்,' என்று முடிவு செய்தான்.

'ஒரு வேளை வசந்துக்குத் தெரிஞ்சிருக்குமோ? அவன் கூட ஒரு நாள் வந்து என்னிடம் கேட்டானே, நஷ்ஷினியைப் பத்தி என்ன நினைக்கிறேன்னு? அவன்கிட்ட வேற நான் இன்னும் வர்ஷிணாவைப் பத்தி சொல்லவே இல்லை. சொல்லி இருந்தால் அவன் அந்தப் பேச்சையே எடுத்திருக்க மாட்டான். ம்ம்ம்...' இவ்வாறு பலவாறாக எண்ணி மனத்தைக் குழப்பிக் கடைசியில் துயிலில் ஆழ்ந்தான்.

மறுநாள் காலையில் எழுந்து குளித்துக் கிளம்பி வந்தவன், தன் தந்தையிடம் சென்று, ''அப்பா! நான் சொன்னதைப் பத்தி என்ன முடிவு செஞ்சீங்க?'' என்று சுத்தி வளைக்காமல் நேரடியாக விஷயத்திற்கு வந்தான்.



அவன் பேச ஆரம்பிக்கும் போதே அங்கே வந்திருந்த ராஜேஸ்வரி, ''என்பா! நாங்க அவ்வளவு சொல்லியும் நீ மறுபடியும் அதிலேயே நிக்கிறயே!'' என்று அங்கலாய்த்தவர், ''நாங்க எதுவும் இனி புதுசா முடிவு எடுக்க வேண்டாம். நீதான் உன் முடிவைச் சொல்லணும்,'' என்றார் கறாராக.

''அப்பா! நீங்களாவது சொல்லுங்கப்பா. 'அட்லீஸ்ட்' நிச்சயத்தையாவது இப்போதைக்கு வைக்க முடியாதுன்னு சொல்லுங்க. அடுத்த வாரம் எனக்குக் கண்டிப்பா அதுக்கெல்லாம் நேரமே கிடையாது. அமெரிக்காவில இருந்து ரெண்டு பேரு ஒரு வாரத்துக்கு 'ப்ராஜெக்ட்' விஷயமா இங்க வராங்க. பாலாவுக்கு வேற இப்போ தான் சரியாயிட்டு இருக்கு. அப்படி இருக்கும் போது நான் கண்டிப்பா என் சொந்த விஷயத்துக்கு எல்லாம் நேரம் ஒதுக்க முடியாது. எனக்கு ஒரு மாசம் 'டைம்' கொடுங்க. அதுக்குள்ளே உங்களுக்கு ஒரு நல்ல முடிவாச் சொல்லறேன்,'' என்றான் தணிந்த குரலில்.

''அதெல்லாம் முடியாது. நிச்சயத்துக்கு நீ வராட்டி என்ன? நாங்க மட்டும் போய்ப் பேசி முடிவு பண்ணிட்டு வர்றோம். கல்யாணத்திற்கு மட்டும் வந்து அவ கழுத்துல தாலியைக் கட்டு... போதும்,'' என்றார் ஸ்ரீனிவாசனை முந்திக்கொண்ட ராஜேஸ்வரி.

அதுவரை அமைதியாக இருந்த ஸ்ரீனிவாசன், ''அவன் சொல்றதுலேயும் நியாயம் இருக்கு. சம்பந்திகிட்ட பேசி இவன் வேலை காரணமா நிச்சயத்தைத் தள்ளி வைக்கச் சொல்லலாம். இவன் கிட்ட சொல்லாம நாம இப்படி முடிவு பண்ணி இருக்கக் கூடாது. ஆனா, கௌதம், மறுபடியும் அடம்பிடிக்கக் கூடாது. சொல்லிட்டேன்,'' என்று அவனுக்காக விட்டுக் கொடுத்துப் பேசியவர், மிகக் கண்டிப்பான குரலில் முடித்தார்.

அவருக்கும் கௌதமிடம் கேட்காமல் இவ்வாறு முடிவு செய்தது உறுத்திக் கொண்டே தான் இருந்தது. அதுவரை இதைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தவர், கௌதம் இவ்வாறு கேட்டதும் தன் பிடிவாதத்தை விட்டுவிட்டு அவனுக்காகப் பேசவும் செய்தார். ஆனால், இவரின் இந்த முடிவு ராஜேஸ்வரிக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை. தன் கணவனுக்காக வேறு வழியில்லாமல் ஒன்றும் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

'ஒரு வழியாக இதற்காவது ஒத்துக் கொண்டாரே. இதுக்கு மேல பேசி இருக்கிறதையும் கெடுத்துக்க வேண்டாம்,'' என்று நினைத்தவன், ''சரிப்பா! கண்டிப்பா... 'தேங்க்ஸ்'! இரவு வந்து மிச்சத்தைப் பேசிக்கலாம்,'' என்று சொல்லி அலுவலகத்திற்குக் கிளம்பினான்.

வழியில் செல்லும் போதே மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று திட்டமிட்டவன் முதல் வேலையாகத் தீபியை அழைத்துத் தன் திட்டத்தைக் கூறி அவளை அவசர அவசரமாகக் கிளம்பி வர வேண்டாம், தேவைப் படும் பொழுது அவனே தெரிவிப்பதாகக் கூறினான். அதன் பின் வேலை அவனை அமுக்கி விட அதில் அமுங்கிப் போனான்.

அன்று மாலை வேலை முடிந்த பின், வர்ஷனாவைச் சந்திக்கவென்று அவள் வீட்டிற்கு, அவளிடம் முன்பின் அறிவிக்காமல் போய் நின்றான் கௌதம். 'காலிங் பெல்' சத்தத்தைக் கேட்ட வர்ஷனா யாரென்று யோசித்தவாறே கதவைத் திறந்தவள், 'உன்னைச் சத்தியமாய் இங்கே எதிர்பார்க்கவில்லை!' என்பதை அப்பட்டமாக முகத்தில் பிரதிபலித்தாள். அவளின் வாய் மரியாதைக்காக, ''வாங்க!'' என்றாலும், 'நீ ஏன் இப்போ இங்கே வந்தாய்? உனக்கு இங்கே என்ன வேலை?' என்ற கேள்விகள் தான் முகத்தில் தெரிந்தன. இதை எல்லாம் அவனும் அறியாம லில்லை.



அதற்காகத் திரும்பிப் போனால் காரியம் ஆக வேண்டாமா? முறுவலுடன் உள்ளே நுழைந்தவன், நட்சத்ராவைப் பார்த்து, ''எப்படி இருக்கீங்க குட்டிம்மா?'' என்று அவளைத் தூக்கிக் கொஞ்சியவாறே கேட்டான்.

கௌதமை ஏற்கெனவே அறிமுகமாகி இருந்ததால், அவளும் இவனைப் பார்த்த சந்தோசத்தில், அவனுடன் வாயாட ஆரம்பித்தாள். சிறிது நேரம் அவளுடன் விளையாடியவன், வர்ஷனாவை மறந்தும் கூட ஏறெடுத்துப் பார்க்கவில்லை. அவளும் நட்சத்ராவின் முன்னால் ஒன்றும் கேட்க முடியாமல் தவித்தவள், அவனுக்குக் குடிக்க ஏதாவது வேண்டுமா எனக் கேட்டுச் சமையலறையில் புகுந்து கொண்டாள். அவன் அங்கிருந்து நகர்வது போலத் தெரியவில்லை என்பதை உணர்ந்த வர்ஷனா நட்சத்ராவுக்குச் சாப்பிட்டுத் தூங்கும் நேரம் ஆகிவிட்டது என்று அவனிடம் குறிப்பாய் உணர்த்த முயன்றாள். அறியாதவர்களுக்கு உணர்த்தினால் புரிந்து கொள்வார்கள். ஆனால், அவள் சொல்வது புரிந்தும், புரியாமல், நடிப்பவனுக்கு எப்படிப் புரிய வைக்க முடியும்?

நட்சத்ராவுடன் விளையாடிபடியே, அவளுடன் சேர்ந்து இரவு உணவை முடித்து, நட்சத்ரா உறங்கும் வரை அங்கிருந்து கிளம்பாமல் இருந்தவனை வர்ஷனா கேள்வியுடன் எதிர் கொண்டாள்.

''கௌதம்! நீங்க என்ன விஷயமா இப்போ இங்க வந்தீங்க? ஏதாவது பேச வேண்டுமானால் 'போன்'ல கூப்பிட்டுப் பேச வேண்டியது தானே? எதுக்கு வீட்டுக்கு வந்தீங்க? நீங்க இப்படி தனியா அடிக்கடி வீட்டுக்கு

வர்றது எனக்கு என்னமோ சரின்னு படலை...'' என்றாள், குரலில் எரிச்சலைக் காட்டி.

நட்சத்ராவுடன் கொஞ்சிப் பேசி விளையாடியதால், அவளின் மழலை மொழியிலும், கொஞ்சும் சிரிப்பிலும், மனம் லேசானதைப் போல உணர்ந்தவன், வர்ஷனா சொன்னதைக் கேட்டுச் சிரித்துவிட்டு, ''நீ இப்போ சொன்னதைப் பெரியவங்க கேட்டா 'தமிழர்கள் விருந்தோம்பலுக்குப் பேர் போனவங்க'ன்னு சொன்னதை, 'தமிழர்கள் எரிந்து விழுதலுக்குப் பேர் போனவங்க'ன்னு மாத்திச் சொல்லுங்க!'' என்றான்.

''இப்போ உங்கள் விருந்தோம்பலுக்கு இங்கே என்ன குறை வந்துச்சாம்? வந்தீங்க, அதான் நல்லா சாப்பிட்டீங்களே. ஆனால். நான் கேட்ட கேள்விக்குப் பதிலைக் காணோமே?'' என்றாள் கடுப்பாக.

''சரி.. சரி.. நல்லா சாப்பிட்டேன். ஆபீஸ்ல இருந்து நேரா இங்க வரேன். பசிம்மா... அதுக்காக இப்படியா சொல்லிக் காண்பிப்பது!'' என்றவுடன், சிறிது இளகியவள், ''ஆனால், உன் கையால சமைச்சிக் கொடுத்ததைச் சாப்பிடக் கொடுத்து தான் வச்சிருக்கணும். பரவாயில்லை. நல்லாதான் சமைக்கிற.... பின்னாடி நான் கஷ்டப்பட நேராது!'' என்று இலகுவாகத் தொடர்ந்தவனைப் பார்த்து, முகத்தில் குடியேறிய கோபத்துடன், ''என்ன உளர்றீங்க?'' என்றாள்.

''நான் உளறலை. நமக்குக் கல்யாணம் நடந்ததுக்கு அப்புறம் நான் சாப்பாட்டுக்குக் கஷ்டப்படத் தேவையில்லை என்கிறதைத் தான் அப்படிச் சொன்னேன்,'' என்றான் அவன் அதே சிரிப்புடன்.

நெருப்புக் கங்கில் சாம்பிராணி போட்டுப் புகையை அதிகப் படுத்துவதைப் போல அவனின் சிரிப்பு



அவளின் கோபத்திற்குத் தூபம் போட்டது. ''நீங்க அதை விடறதா இல்லையா? நான்தான் அப்பவே சொல்லிட்டேனே. இது எல்லாம் ஒத்து வராதுன்னு. அப்ப என்ன சொன்னீங்க? 'ஃபிரெண்ட்ஸா' இருக்கலாம்ன்னுதானே. இப்போ எதுக்கு மறுபடியும் அதைப் பத்தி பேசி அனாவசியமா என்னை வந்து தொந்தரவு பண்ணறீங்க?''

''இப்பவும் நீ என்னோட 'ஃபிரெண்ட்' தான். யார் இல்லைன்னு சொன்னாங்க? உனக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுக்கலாம் என்றுதான் அன்று நீ மறுத்ததும் மறு வார்த்தை பேசாமப் போனேன். அதுவுமில்லாம உன் பேச்சுக்கு மதிப்புக் கொடுக்கணும்னு தான். அது மாதிரி நீயும் என் பேச்சுக்கு மதிப்புக் கொடுக்கணும்தானே? இப்போ சொல்லு... அன்று நடந்த பேச்சுக்கு அப்புறம் நீ என்னை எத்தனை முறை நினைச்சுப் பார்த்தேன்னு?''

'பெரிய நியாயஸ்தன்!' என்று மனதிற்குள் திட்டிய வாறே, ''உங்களை எதுக்கு நான் நினைச்சுப் பார்க்கணும்? 'ஃபிரெண்டா' இருக்கலாம்ன்னுதானே சொன்னீங்க. அதனால அதைப் பத்தி நான் அப்பவே மறந்து போயிட்டேன்!'' என்றாள்.

''பொய் சொல்லாத வர்ஷனா! இவ்வளவு நாள்ல ஒரு தடவை கூடவா என்னைப் பத்தி நீ நினைச்சுப் பார்க்கலை? ம்ம்ஹூம். நான் நம்ப மாட்டேன். சரி. அதை விடு. என்னோட கேள்விக்கு என்ன பதில்? எப்போ கல்யாணத்தை வச்சுக்கலாம்?'' என்று கேட்டான் கௌதம்.

''உங்களுக்கு என்ன தமிழ் புரியாதா? உங்ககிட்ட தமிழ்லதானே என்னோட மறுப்பைத் தெரிவிச்சேன். திரும்பத் திரும்ப வந்து அதையே கேட்கறீங்க. நீங்க வந்து தொந்தரவு செய்யறது பத்தாதுன்னு மதுவை வேற தூது அனுப்பறீங்களா? மது வந்து பேசினா நான் மனசு

மாறிடுவேனா?'' என்று கேட்டுக் கௌதமை ஆச்சர்யப் பட வைத்தாள்.

'என்னது? மது வந்து பேசினாளா? நான் ஊர்ல இல்லாதப்போ எதையோ பேசி இருக்கா போல!' என்று நினைத்துக் கொண்டு, 'இங்க பாரு வர்ஷனா, மதுவுக்கு நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்பட றேன்னு தெரியும். ஆனா, நான் வந்து எதையும் பேசச் சொல்லலை. போன தடவை இங்க வீட்டிற்கு வருவ தற்கு வேணா மது எனக்கு உதவி செஞ்சா. அவ்வளவு தான். அதுக்கப்புறம் நீங்க பேசறது எல்லாம் உங்களுக்கு இடையில இருக்கும் சொந்த விஷயம். அதைப் பத்தி நான் எதுவுமே கேட்கலை,'' என்றான் தெளிவாக.

''சரி! நீங்க சொல்லறதை நான் நம்பறேன். ஆனா, எனக்கு உங்களை என்னோட கணவனா நினைச்சுப் பார்க்க சுத்தமா பி... பிடிக்கலை. அதனால தயவு செய்து இங்கிருந்து கிளம்பறீங்களா?'' என்று கதவுப் பக்கம் கை காட்டினாள்.

அவன் கிளம்பாமல் அங்கேயே உட்கார்ந்திருப்பதைப் பார்த்தவள், ''நீங்க இப்படி அடிக்கடி வந்து தொந்தரவு பண்ணிட்டு இருந்தா அப்புறம் நான் இந்த ஊரை விட்டுக் கிளம்பிடுவேன்!'' என்று சொல்லி, அதுவரை சிரித்துக் கொண்டிருந்த கௌதமின் கோபத்துக்கு வார்த்தைகளால் தூபம் போட்டாள்.

''ஊரை விட்டுக் கிளம்பிடுவியா?'' என்று கோபத் துடன் எழுந்தவன், சுவரில் சாய்ந்தவாறு பேசிக் கொண் டிருந்தவள் அருகில் சென்று, தன் இரு கைகளையும் அவளுக்கு இருபுறம் சுவரில் பதித்து, அணை அமைத் தான். அதே சீற்றத்துடன், ''இங்க பாரு. இது மாதிரி



'ப்ளாக் மெயில்' பண்ணித் தப்பிக்கலாம் என நினைக் காதே. அது எப்பவுமே நடக்காது. இனி உன்னை என் பார் வையில இருந்து அவ்வளவு 'ஈஸி'யா விலக விட்டுடு வேன்னு நினைச்சியா? வர்ஷனா! நான் சொல்ல வர்றதைக் காது கொடுத்துப் பொறுமையா கேட்கவே மாட்டியா? எங்க வீட்ல எனக்குத் தெரியாம நிச்சயம் பண்ண ஏற்பாடு பண்ணிட்டு இருக்காங்க. நீ என்னடான்னா, என்னை இப்படி இம்சைப் படுத்தற!'' என்றான்.

''அவங்க உங்களுக்கு நல்லதுதானே பண்ணறாங்க. பேசாம உங்களுக்குப் பார்த்த பொண்ணையே கல்யாணம் பண்ணிக்கோங்க. நானா உங்களை இம்சைப் படுத்தறேன்? நீங்கதான் என்னைத் தொந்தரவு பண்ணிக்கிட்டு இருக் கீங்க. நடுவுல உண்மை தெரிஞ்சதுக்கு அப்புறம் தானே இப்படி வந்து பேசறீங்க. உண்மை தெரியாம இருந்திருந்தா, பேசாம அப்பா - அம்மா சொல்லற பொண்ணை சந்தோச மாக் கல்யாணம் பண்ணியிருப்பீங்கதானே?

''இப்போ கையைக் கொஞ்சம் எடுக்கறீங்களா? இப்படித் தனியா இருக்கற என் வீட்டுக்கு நீங்க அடிக்கடி வந்தா எல்லோரும் என்னைத்தான் பேசுவாங்க. உங்களை இல்லை. தெரிஞ்சுக்கோங்க. அதுதான் உங்களுக்கு வேணும்னா தாராளமாச் செய்யுங்க. ஆனா, ஒண்ணு மட்டும் சொல்லறேன். அது நட்சத்ராவோட வாழ்க்கையை யும் பாதிக்கும்!'' என்றாள் - அவனின் கைச்சிறையில் அகப்பட்டு வெளிவர முடியாமல் திணறியவாறே.

''நான் ஒண்ணும் அடிக்கடி இங்க வரலை. இதுதான் ரெண்டாவது தடவை. அதுவும் முதல் தடவை வந் தப்போ மதுவோட வந்தேன். அதனால யாரும் ஒண் ணும் தப்பா நினைக்க மாட்டாங்க. அப்புறம் 'போன்'ல

தானே அடிக்கடி பேசிக்கறேன்!'' என்று புள்ளி விவரங்களை அவளுக்குத் தந்தவன், ''ஏன் பாதிக்கணும்? நான் தான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொல்லறேனே. இங்க பாரு. நான் கல்யாணம் பண்ணினா அது மட்டுமாதான் இருக்கும். வேற எந்தப் பொண்ணையும் என்னால கல்யாணம் பண்ண முடியாது. நீ என்னைக் கல்யாணம் செய்யாவிட்டால் நான் வாழ்க்கை முழுவதும் இப்படியே தான் இருப்பேன்!'' என்றான் சற்றே உயர்த்திய குரலில்.

''நீங்க கல்யாணம் பண்ணாமலேயே இருங்க. யாரு வேண்டாம்ன்னு சொன்னது. இப்போ என்னை விடறீங்களா? எனக்கு மூச்சு முட்டுது.''

''எனக்கும்தான் வர்ஷனா மூச்சு முட்டுது. ஆனா, கல்யாணம் பண்ணாம சும்மா இருந்திருவேன்னு மட்டும் நினைக்காதே. உன் சம்மதம் கிடைக்கும்வரை தினமும் இங்க வருவேன். அது மட்டும் புரிஞ்சுக்கோ. சரி. உன்னோட முடிவைச் சொல்லறதுக்கு முன்னாடி, நான் சொல்லறதையாவது ஒரு தடவை கேளு.''

'''முதல்ல நீங்க கையை எடுங்க. அப்புறம் நீங்க சொல்லறதை நான் கேட்கிறேன்,'' என்றவளின் முகத்தில் இருந்த தவிப்பைப் பார்த்தவன் உடனே மனமும் முகமும் கனிந்து, கைகளைச் சுவரில் இருந்து விலக்கி, அவளை விடுவித்தான்.

அவனும், அவளிடமிருந்து நகர்ந்து, அங்கிருந்த சோபாவில் அமர்ந்து, அவனுக்கு அவள் மேல் காதல் தோன்றியதில் இருந்து ஒவ்வொன்றையும், கார்த்திக்கின் காதலைத் தவிர்த்துக் கரகரத்த குரலில் சொல்லி முடித்தான்.



அவளின் கண்களையே பார்த்துப் பேசிக் கொண்டிருந்தவன், ''நல்லா யோசிச்சுப் பாரு வர்ஷனா. உன்னை அடைய முடியாம நான் எப்படித் தவிச்சிருப்பேன்னு? உன்னை என்னோட மூச்சுக் காத்துல உணர்றேன். என்னோட நாடி, நரம்புல உணர்றேன். யாரைப் பார்த்தாலும் உன்னை மாதிரியேதான் எனக்குத் தெரியுது. என்னைப் போய் வேற பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லறியே? அப்படியே கல்யாணம் பண்ணிக்கிட்டாலும் நான் உன்னைத்தான் நினைச்சுட்டு இருப்பேன். அது உனக்குச் சம்மதமா இருக்குமா?

''இவ்வளவு நாளும், உன்னை மறந்துட்டேன். உனக்காக என்னோட உணர்வுகளை நான் அடக்கிக்கிட்டேன்னுதான் நினைச்சிருந்தேன். உன்னை ஊட்டியில மறுபடியும் பார்த்தப்போதான் எனக்குப் புரிஞ்சது. நான் என்னையே ஏமாத்திட்டு இருந்திருக்கிறேன்னு. ஆனாலும், அது தப்புன்னு நான் எனக்குள்ளேயே பலமுறை சொல்லி அடக்கிட்டேன். ஆனா, இப்போ உண்மை தெரிஞ்சதுக்கப்புறம் என்னால இனி உன்னை விட முடியாது!'' என்றவனை இடையிட்டு -

''முட்டாள்தனமா பேசாதீங்க கௌதம்! எனக்கு ஏற்கெனவே கல்யாணம் ஆகி ஒரு குழந்தையும் இருக்கா என்கிறதை மறந்துடாதீங்க. சும்மா வந்து காதல் கத்தரிக்காய்ன்னு பேசிட்டு... அதுவும் இல்லாம உங்களோட உணர்வு, காதல் எனச் சொல்லறீங்களே. என்னோட உணர்வுகளைப் புரிஞ்சிக்க மாட்டீங்களா? எனக்கும் உங்க மேல காதல் வர வேண்டாமா? காதலாம் காதல்!'' என்றாள் சினத்துடன்.

''நம்ம நாட்ல எல்லோரும் காதலிச்சுத் தான் கல்யாணம் பண்ணிக்கறாங்களா என்ன? அது மாதிரி நீ என்னைக்

கல்யாணம் பண்ணிக்கிட்டு அப்புறம் காதலி. நான் எவ்வளவு நாள் வேணா காத்திருக்கிறேன்.''

''அப்படின்னா நீங்க வாழ்க்கை முழுக்கக் காத்திருக்கணும்!'' என்றாள் பட்டென்று.

''பரவாயில்லை. எனக்கும் அதுதான் சந்தோசம். அப்படின்னா சம்மதம்தானே?'' என்றவனைப் பார்த்து, ''விடிய விடிய ராமாயணம் கேட்டுச் சீதைக்கு ராமன் சித்தப்பாவான்னு கேட்ட கதையா இருக்கு நீங்க கேட்கறது. எல்லாத்தையும் கேட்டுட்டு சம்மதம்மான்னு வேற கேட்கறீங்க?'' என்றாள் வர்ஷனா சிடுசிடுப்பாக.

''நீதானே சொன்ன... வாழ்க்கை முழுக்க காத்திருக்கணும்ன்னு. அப்படின்னா உனக்குச் சம்மதம்ன்னு தானே அர்த்தம்.'' என்று சொல்லிச் சிரித்தான் கௌதம்.

''கடவுளே! எதையும் எதையும் கோர்க்கறீங்க. நான் எதை நினைச்சுச் சொன்னாலும் நீங்க எல்லாத்தையும் உங்களுக்குச் சாதகமா எடுத்துக்கறீங்க. என்னைப் புரிஞ்சுக்கவே மாட்டீங்களா? ப்ளீஸ் கௌதம்! நான் என் வாழ்க்கையில நிம்மதியா இருக்கேன். தயவு செய்து என்னையும் என் பொண்ணையும் தொந்தரவு செய்யாதீங்க. இங்கிருந்து போயிடுங்க,'' என்று அவனைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டவள் கீழே முழங்காலிட்டு அமர்ந்து கைகளில் பதித்துக் கொண்டு குலுங்கி அழ ஆரம்பித்தாள்.

அவளைத் தொட்டு எழுப்ப நினைத்தவன், அவளையே சிறிது நேரம் உறுத்துப் பார்த்தான். ''சரி வர்ஷனா! உன் இஷ்டம். அழாதம்மா. நீ அழுதா என்னால தாங்க முடியலை. நான் கிளம்பறேன்,'' என்று விடுவிடுவென்று அங்கிருந்து வெளியேறினான்.



அவன் சென்று சிறிது நேரம் கழித்து, வர்ஷனாவின் கைபேசி அடிக்க. அதை எடுத்தவளிடம், ''வர்ஷனா! இனி நான் உன்னைத் தொந்தரவு பண்ணலை. அதற்காக என் மேல இருக்கிற கோபத்துல கதவைச் சாத்தாம விட்டுடாத. போய்க் கதவைப் பூட்டிக்கோ. சரியா?'' என்று அவளுக்கு ஞாபகப்படுத்திவிட்டு, ''அப்படியா பூட்டற துக்கு முன்னாடி வெளியில உனக்காக ஒண்ணு வச்சிருக்கேன். அதை எடுத்து வீட்டுக்குள்ளே வச்சுக்கோ. 'ப்ளீஸ்'!'' என்ற செய்தியைத் தெரிவித்தான்.

வீட்டிற்குச் செல்லும் வழியில் மதுவை அழைத்தவன், ''மது, எப்படிடா இருக்க? உடம்புக்கு எப்படி இருக்கு?'' என்று அக்கறையுடன் விசாரித்தான்.

''அண்ணா! உங்களை நான் நேத்தே கூப்பிட்டேன். நீங்க ஏன் போனை எடுக்கல? நான் நல்லாத் தான் இருக்கேன்!'' என்று பதிலளித்தாள்.

''நேத்துதானே பெங்களூருவில் இருந்து வந்தேன். 'ஆபீஸ்'ல 'பிஸி'யா இருந்ததுனால 'செல்லை சைலென்ட் மோடி'ல போட்டிருந்தேன். வீட்டுக்கு வந்து கூப்பிடலாம்ன்னு நினைச்சுப் பார்த்தா ரொம்ப நேரமாயிடுச்சுடா. அதனாலதான்....'' என்று தங்கையிடம் விளக்கமளித்தவனிடம், தியானைப் பற்றி சிறிது நேரம் பேசினான்.

அவள் கேள்விகளுக்கு விடையளித்தவன், ''மது! வர்ஷனாகிட்ட போய் என்ன சொன்ன?'' என்று கேட்டான்.

''அதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன்,'' என்று நேற்று தனக்கும் வர்ஷனாவுக்கும் நடந்த உரையாடலைப் பற்றிச் சொன்னாள்.

அதைக் கேட்டுச் சிரித்தவன், ''பரவாயில்லை மது! நீ கவலைப்படாம உன்னோட உடம்பைப் பார்த்துக்கோ.

வர்ஷனாவை இனி நானே வழிக்குக் கொண்டு வந்துடு வேன்!'' என்றவன், மேலும் சில தகவல்களைச் சொல்லி மதுவை ஆச்சரியத்தில் ஆழ்த்தினான்.

## 18

''உன் மனம் அறியாமல் நானும்
என் குணம் புரியாமல் நீயும்
இருப்பது போல வேடங்கள்
இனியும் எதற்காக?
உன்னுடன் கண்களால் பேசும்
என்னுடன் கனவில் சிரிக்கும்
நம் தவிப்புகள்
இனியும் எதற்காக?
உனக்காக நான்!
எனக்காக நீ!
இருவரும் காதலுடன்
வாழ்வோம் இனிதாக!''

பாலாவுக்கு உடைந்த எலும்புகள் எல்லாம் ஒன்று சேர ஆரம்பித்து வலியும் வெகுவாகக் குறைந்திருந்தது. அதனால் கௌதமுடன் சேர்ந்து தினமும் அலுவலகத் திற்குச் செல்ல ஆரம்பித்திருந்தான். அடுத்த வாரம் வெளியூரில் இருந்து வேலை விஷயமாக ஆட்கள் வருவ தனால் அலுவலகத்தில் அனைவரும் நேரம் காலம் பார்க் காமல் வேலை செய்து வந்தனர். அதைவிட அவனுக்குச் சந்தோசம் தரும் விஷயம். இப்பொழுதெல்லாம் தான்யா அவனிடம் சிரித்துப் பேசுகிறாள்... அதுவும் முக்கியமாகச் சுவாதி அருகில் இருந்தால்.



அன்றொரு நாள் சுவாதியுடன் அவன் வீட்டிற்கு வந்து சென்ற பின், தான்யாவிடம் இருந்து பலமுறை அவனுக்கு அழைப்பு வந்தது. ஆனால், வந்த அனைத்துமே அலுவல் சம்பந்தப்பட்டதாக இருந்தன. முன் போல் இல்லாமல் இதற்காகவாவது பேசுகிறாளே என்று பாலாவும் சந்தோச மடைந்தான். சுவாதி தான் தான்யாவின் மாற்றத்திற்குக் காரணம் என்று அறியாத பாலாவும் அடிக்கடி தன்னையே கிள்ளிப் பார்த்துக் கொண்டான். இது நிஜம் தானா என்று.

வழக்கம் போல அன்று மாலை அலுவலகத்தில் இருந்து வந்தவன் தொலைக்காட்சிப் பெட்டிக்கு உயிர் கொடுத்து அவன் உயிரை எடுத்துக் கொண்டிருந்தான். தான்யாவிற்குச் சொந்தமான உயிரை எப்படித் தொலைக் காட்சி எடுக்கலாம் என்று நினைத்தானோ என்னவோ, அவன் சிந்தனையைத் தான்யா பக்கம் திருப்பினான்.

'என்னோட காதலை அவளிடம் நேராகவே சொல்லி விட்டேன். எப்போதான் அதைப் புரிஞ்சுக்குவாளோ? சில சமயம் நல்லாப் பேசற மாதிரிதான் இருக்கு. ஆனா, சில சமயம் எதையோ நினைச்சு தயங்கறா. என்னன்னு கண்டுபிடிக்கணும்.

'நான் அவளோட 'டேபிள்'ல வச்ச அந்த 'ப்ளே டௌ' எடுத்து என்ன பண்ணினாள்ன்னு தெரியலை. அதைப் பத்தி ஒண்ணுமே என்கிட்ட மூச்சு விட மாட்டேங்கிறா. சரியான அழுத்தம்தான் அவளுக்கு. ஒரு வேளை நான் தான் வச்சேன்னு தெரியலையோ. ச்சே! அப்படியெல் லாம் இருக்காது. புரிந்து கொண்டுதான் சும்மா இருக் கிறாளா? இருக்கலம்... 'அட்லீஸ்ட்' இப்போ முன்ன மாதிரி இல்லாம நல்லாதான் பேசறா. பழகறா. பார்க்க லாம். இன்னும் கொஞ்ச நாளைக்கு விட்டுப் பிடிக்கலாம். இப்படியே போனா சீக்கிரமா வந்து என்கிட்ட தன்

காதலைச் சொல்லிவிடுவாள்!' என்று நினைத்துக் கற்பனையில் கோட்டை கட்டிக் கொண்டிருந்தவனைச் சந்தனாவின் தொலைபேசி அழைப்பு நிஜத்திற்கு அழைத்து வந்தது.

அதை எடுத்து, ''சொல்லு சந்தனா,'' என்றான்.

''நீங்க பேசறதைப் பார்த்தா, நீ எதுக்கு இப்போ போன் பண்ணி என் உயிரை எடுக்கிறேன்னு கேட்கிற மாதிரி இருக்கு. ஏதாவது முக்கியமான வேலையை 'டிஸ்டர்ப்' பண்ணிட்டேனா?'' என்று கேட்க -

''ஆமாம்! ரொம்ப முக்கியமான வேலையாதான் இருந்தேன். என்னோட உயிரை டி.வி. மட்டும்தான் எடுக்கலாம். நீ எப்படி அதுல பங்கு போட வரலாம்னு நினைச்சேன். அதான்...'' என்று பதிலளித்தான்.

அதைக் கேட்டுச் சிரித்தவள், அவன் உடல் நிலையைப் பற்றி விசாரித்து விட்டு, அவனைப் பார்க்க வீட்டிற்கு வருவதாகக் கூறினாள்.

பாலா, முன் போல் அனைவரையும் கிண்டல் செய்யவில்லை என்றாலும் நடுவில் இருந்ததை விட கலகலப்பாகப் பேச ஆரம்பித்திருந்தான். ஏற்கெனவே தன் நண்பன் கௌதமிற்காகத் தன் சோக கீதம் வாசிக்கும் திறனைக் கட்டிப் போட்டிருந்தான். இப்பொழுது மேலும் இரண்டு காரணங்கள் சேர, அவனின் முடிவும் வலுப்பெற்றது. முதல் காரணம், அவன் தந்தை. அவனுக்கு விபத்து நடந்ததில் இருந்தே அவர் கவலையுடன் இருப்பதைப் பார்த்து மனம் கலங்கியவன் அவனும் சோகத்தில் இருந்தால் வீணாகத் தன் தந்தையின் வருத்தத்தைத் தான் அதிகப்படுத்துவோம் என்று நினைத்தான். இரண்டாவது காரணம், தெரியாமல் செய்த பிழைக்காகத்



தன்னையே வருத்திக் கொள்ளும் சிறு பெண்ணான சந்தனாவின் கலக்கத்தைத் துடைக்க எண்ணி மிகக் கச்சிதமாக அனைத்தையும் செய்தான். வேறொரு பெண்ணின் மனதில் பெரிய கலக்கத்தை ஏற்படுத்தப் போவதை அறியாமல்.

தனக்குத் தெரிந்த ஒருவர் அடிபட்டிருப்பதாகக் கூறி, அவரைப் பார்க்கவும் அவரை அறிமுகப்படுத்தவும், தன் உடன் பிறந்தவளை அழைத்து வந்திருந்தாள் சந்தனா. பாலாவின் வீட்டின் முன் வண்டியை நிறுத்தியதும், ''சந்தனா! யார் வீடு இது, உனக்கு இவரை எப்படித் தெரியும்?'' என்று கேட்டாள் அவள் தமக்கை.

நடந்ததைச் சுருக்கமாகச் சொன்ன சந்தனா, ''உனக்கும், அப்பா - அம்மாவுக்கும் சொல்லலைன்னு கோவிச்சுக்காத. என்னோட செல்ல அக்கா இல்லை!'' என்று அவள் தலையில் ஆசையா முட்டினாள். பின், ''அது இல்லை அக்கா! சொன்னா நீங்க பயந்துடுவீங்க. அதுதான். அம்மாவும் அப்பாவும் இப்போதான் கொஞ்சம் நல்லா இருக்கிற மாதிரி இருக்கு!'' என்று அவள் கன்னத்தில் முத்தமிட்டாள்.

''இவ்வளவு நடந்திருக்கு. என்கிட்ட கூட மூச்சு விடலை. அப்படி என்ன அவசரம் வண்டி ஓட்டும் பொழுது? அதுவும் எங்களுக்குத் தெரியாம இரவல் வாங்கிட்டு போயிருக்க!'' என்று படபடவெனக் கேட்டாள்.

''இதற்குத்தான் சொல்லலை. கிளாஸுக்கு 'லேட்' ஆயிடுச்சு. அதனாலதான்,'' என்று பதிலளித்தாள்.

''உனக்கு லேட் ஆச்சு. சரி! ஆனா உன்னால பாரு, இப்போ அவருக்குத்தானே சிரமம்!'' என்றாள் கவலையாக.

''அக்கா! இது மாதிரி எல்லாம் நடந்தா அதுக்குப் பேரு 'ஆக்சிடெண்ட்'டாம். யாரும் பொறுப்பில்லையாம். அவங்களாலதான் இப்படி ஆயிடுச்சுன்னு கண்டிப்பா கவலைப்படக் கூடாதுன்னு சொல்லியிருக்கிறார் பாலா. அவரு ரொம்ப நல்ல 'டைப்' அக்கா. செம 'ஜாலி'யான ஆளு. அவர் பேசிட்டு இருந்தா கேட்டுட்டே இருக்கலாம் போல இருக்கும்!'' என்று கூடுதல் தகவல் வேறு தந்தாள்.

'சில வாரங்களாக சந்தனாவிடம் நல்ல மாற்றம் தெரிவதாக நினைத்தோமே. அதுக்கு இவர்தான் காரணமா? கடவுளே! இது எங்கே போய் முடியுமோ?'' என்று நினைத்துத் திகைத்தாள் அவள் தமக்கை. அவள் வாய் திறந்து பேசும் முன்னரே சந்தனா அவளை வீட்டிற்குள் இழுத்துச் சென்று பாலாவிடம் கதை அடிக்க ஆரம்பித்திருந்தாள்.

''ஜாக்ப்ரூட்! உங்களுக்கு ஒரு முக்கியமான ஆளை நான் அறிமுகப்படுத்தப் போறேன். இவங்கதான் 'திகிரேட்' சந்தானலக்ஷ்மியோட அக்கா தான்யலக்ஷ்மி!'' என்று அறிமுகப்படுத்தியவுடன், தான்யாவை அந்நேரம், அங்கே, அதுவும் சந்தனாவின் உடன் பிறப்பாக எதிர்பார்க்காததால் இனிமையாக அதிர்ந்தான் பாலா.

அவன் பதில் சொல்வதற்கு முன்பே, ''ஜாக்ப்ரூட்'டா?'' என்று தான்யா வாய் திறந்து கேட்க, சந்தனாவும், ''ஆமாம்! நான்தான் அவருக்கு அப்படி ஒரு பேரு வச்சேன். அவருக்கு ஒரு காலு உடைஞ்சது இல்லை, அதுதான் அவர் பேர்லே இருக்கிற ஒரு காலை எடுத்துட்டேன். ''ஸோ'' பாலா பலா ஆகிவிட்டார். அதுதான் 'ஜாக்ப்ரூட்.' எப்படி?'' என்று கூறிக் கண்ணடித்துச் சிரித்தாள்.



''சந்தனா! அவர் காலை உடைச்சிட்டு இவ்வளவு 'ஜாலி'யா சிரிச்சிட்டேவா அதைச் சொல்லுவே? அவருக்கு எவ்வளவு வலிச்சிருக்கும்!'' என்றாள் சிறு கண்டிப்புடனும் அக்கறையுடனும்.

''என்னோட பேர்ல கூடத்தான் நீங்க காலை மாத்திப் போட்டு என்னைச் சந்தனான்னு கூப்பிடறீங்க. நான் ஏதாவது சொன்னேனா? 'ஜாக்ப்ரூட்!' உங்களை இப்படி கூப்பிடறது பிடிக்கலையா?'' என்று பாலாவிடமே கேட்டாள் சந்தனா.

''சில பேர் மாதிரி என்னோட பேரைச் சொல்லக் கூட தயங்காம நீயா உன்னோட மூளையைக் கசக்கிப் பிழிஞ்சு 'சூப்பரா' ஒரு பேரைக் கண்டுபிடிச்சிருக்க. நீ என்னை அப்படியே கூப்பிடு. எனக்கு அதுதான் பிடிச்சிருக்கு!'' என்று தன்னவளுக்கு மறைமுகமாகச் செல்லமாகக் கொட்டு வைத்தவன், சந்தனா பதிலளிக்கும் முன்பே, ''அப்புறம் சந்தனா! எனக்கு உன்னோட அக்காவை முன்னாடியே தெரியும். இவங்களும் நானும் ஒரே 'ஆபீஸ்'லதான் வேலை செய்யறோம். ஆனா, உன்னோட அக்கான்னு இப்போ நீ சொன்னதுக்கு அப்புறம்தான் தெரியும்!'' என்றான்.

''என்னது? நீங்க ரெண்டு பேரும் ஒரே 'ஆபீஸ்'லயா வேலை செய்யறீங்க? நீங்க இதைப் பத்தி என்கிட்ட சொல்லவே இல்லை!'' என்று பாலாவிடம் உரிமையுடன் சண்டை போட்டாள் சந்தனா.

''நான் உன்கிட்ட சொல்லலையா? நேரம்தான். ஆனா. நீதான் என்கிட்ட கேட்கவே இல்லையே!'' என்றான் அவனும் விடாமல்.

''உங்க கூடப் பழகின இத்தனை நாள்ல உங்களைப் பத்தி ஒண்ணுமே தெரிஞ்சுக்காம விட்டுட்டேன்.

என்னோட தப்புத்தான். என்னை மன்னிச்சுடுங்க!'' என்று உடனே மன்னிப்பை வேண்டினாள் அவள்.

''சந்தனா! உனக்கு என்கிட்ட மன்னிப்பு கேட்கலைன்னா தூக்கம் வராதா என்ன? எப்பப் பாரு, இதையே சொல் லிட்டு. முதல்ல ரெண்டு பேரும் உட்காருங்க,'' என்றாள் எரிச்சலுடன்.

''சரி சரி! இனிமே சொல்லலை. இப்போ சொல்லுங்க. நீங்க என்னவா இருக்கீங்க - அக்கா வேலை செய்யற 'ஆபீஸ்'ல?'' என்றாள்.

''சந்தனா! அவர் தான் என்னோட 'பாஸ். இவரும் இன் னொருத்தரும் - பேரு கௌதம் - 'பார்ட்னர்ஸ்!'' என்றாள் தான்யா அவசரமாக.

''வாட்'? நீங்களும் கௌதமும் சேர்ந்துதான் அந்தக் 'கம்பெனி'யை நடத்தறீங்களா? ஏன் 'ஜாக்ப்ரூட்' இது தான் ஒண்ணா வேலை செய்யறதா உங்களுக்கு? நீங்க பெரிய ஆளுதான்!'' என்று பாலாவிடம் கிண்டலாகச் சொன்னாள்.

பாலா பதில் சொல்லாமல் ஒரு சிரிப்பை உதிர்க்க, ''அக்கா! இவர்கிட்ட பேசிட்டு இருந்தா இருக்கிற கவலை எல்லாம் மறைஞ்சிடுமே. 'ஆபீஸ்'ல கூட வேலை செய்ய ரொம்ப 'ஜாலி'யா இருக்கும் இல்லை. பேசாம உன்னோட வேலையை எனக்குக் கொடுத்துடு. நான் போய் உனக்குப் பதிலா வேலை செய்யறேன்!'' என்றாள்.

தன் தங்கைக்குத் தெரிந்த நபர் பாலா என்ற திகைப்பிலிருந்து வெளிவருவதற்கு அரும்பாடுபட்டுக் கொண்டிருந்தவள், தன் தங்கையின் மாற்றத்திற்குக் காரணமும் அதே பாலாதான் என்ற உண்மை புரிந்து கலங்கினாள். தன் கலக்கத்தை மனதில் போட்டுப்



பூட்டியவள், தங்கைக்காக முகத்தை இயல்பாக வைத்தபடி உட்கார்ந்து பாலாவுடன் பேசிக் கொண்டிருந்த தான்யா தன் தங்கை இவ்வாறு கேட்டதும் பதில் சொல்ல முடியாமல் திணறினாள்.

பாலாவோ, ''உனக்கு வேலைதானே? நானே கொடுக் கிறன். அதுக்காக உன்னோட அக்காவை எதுக்கு வேலைக்கு வர வேண்டாம்ன்னு சொல்லறே? ஆனா, நீ தான் இன்னும் படிப்பையே முடிக்கலையே!'' என்றான்.

''படிப்புதானே. அதெல்லாம் சீக்கிரமா முடிச்சிடலாம். அது சரி! நீங்க இவ்வளவு புத்திசாலியா இருக்கீங்களே, எப்படி என்னோட அக்காவை வேலைக்குத் தேர்ந்தெடுத் தீங்க?'' என்று தன் தமக்கையின் காலை வாரினாள் சந்தனா.

அவன் என்ன பதில் சொல்லப் போகிறான் என்று தான்யா படபடப்புடன் காத்திருக்க, பாலாவோ, ''உன் அளவுக்கு இல்லேன்னாலும் உன்னோட அக்காவும் கொஞ்சம் பரவாயில்லை. அவங்க வேலைல செம ''ஸ்மார்ட்!'' என்று நற்சான்றிதழ் வழங்கினான்.

ஆனால், அந்தப் பதிலும் தான்யாவிற்குத் திருப்தி அளிக்கவில்லை.

''அக்கா ஆபீஸ்ல எப்படி? ஒழுங்கா சொன்ன பேச்சுக் கேட்பாங்களா?'' மறுபடியும் தான்யாவை வம்பிற்கு இழுத்தவள், ''ஏன் கேட்டேன்னா, வீட்ல இவ சொன்ன பேச்சு தான் நாங்க கேட்கணும். ம்ம்ம்....என்ன பண்ணறது... ரெண்டு வருஷம் கொஞ்சம் முன்னாடி பிறந்துட்டாளே!'' என்று பொய்யாகச் சலித்துக் கொண்டாள்.

''ஆபீஸி'லேயும் அப்படித்தான். உன்னோட அக்கா எல்லாத்துலேயும் ரொம்ப 'ஸ்ட்ரிக்ட்'. நான் சொல்லி எல்லாம் எதையும் செய்ய வைக்க முடியாது!'' என்று இரு பொருள்படப் பதிலளித்தான் பாலா.

''என்னது? நீங்க சொன்னாலே கேட்க மாட்டாளா? நீங்கதானே அக்காவுக்கு 'பாஸ்'. சும்மா மிரட்டி வச்சு ஆட்டிப் படைக்க வேண்டாம்?'' என்று அவனிடம் கேட்டாள்.

'ம்ம்ம்.... இவளை நான் ஆட்டிப் படைக்கணுமா? இவள் என்னை ஆட்டிப் படைக்கறது பத்தாதா?' என்று நினைத்தவாறே தான்யாவைப் பார்த்தாள். அத்தனை நேரம் அவனையே பார்த்துக் கொண்டிருந்தவள், பாலா அவளை ஏறிட்டுப் பார்த்தவுடன் கண்களை அவன் மேலிருந்து அப்புறப்படுத்தித் தன் தங்கை மேல் பதித்தாள்.

இவர்களின் இந்த மௌன விளையாட்டைப் பற்றி அறியாத சந்தனாவும், ''என்னக்கா அப்படிப் பார்க்கிற? கொஞ்சமாவது உன் 'பாஸ்' சொல்லற பேச்சைக் கேட்கக் கூடாது?'' என்று போலியாக மிரட்டினாள்.

தங்கைக்குப் பதில் சொல்லத் தெரியாமல் முழித்துக் கொண்டிருந்த தான்யாவைப் பார்த்த பாலா, ''சந்தனா! இன்று யாரும் கிடைக்கலையா? ஏன் உன்னோட அக்காவை இப்படி மிரட்டிட்டு இருக்க? பாவம்! அவங்களைச் சும்மா விடு'', என்று சொன்னவுடன் தான் வேறு பேச்சிற்குத் தாவினாள்.

''அக்கா! இவர் அன்னக்கிகூட ஒண்ணு சொன்னார் பாரு, ம்ம்ம்... ஆ... என்னமோ அவர் சின்ன வயசுல இருந்து படிக்கறப்போ 'ரூல்ட் பேப்பர்', 'ரூல்ட் பேப்பர்'ன்னு (Ruled Paper) சொல்லிட்டுத் தான் இருக்காங்களாம். ஆனா, யாரு அந்த 'பேப்பரை' 'ரூல்' (Rule) பண்ணினாங்கன்னு சொல்லவே மாட்டேங்கிறாங்க. ஒரு வேளை சொல்லிக் கொடுத்தவங்களுக்கே தெரியலையோ



என்னவோ'ன்னு சொன்னார் பாரு... எனக்குச் சிரிப்புத் தாங்கலை!'' என்று பேசிக் கொண்டே போனாள் சந்தனா.

சந்தனா பாலாவுடன் இவ்வளவு இயல்பாகப் பேசியதைப் பார்த்த தான்யாவிற்கு ஏதேதோ தேவையில்லாத எண்ணங்கள் வலம் வரத் தொடங்கின. மறுநாள் முழுவதும் யோசித்து, இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று நினைத்து, அன்று மாலை பாலாவை அழைத்த தான்யா, ''உங்க கூட கொஞ்சம் தனியாப் பேசணும்,'' என்றாள்.

'இவ எதுக்கு இப்போ என்னைக் கூப்பிட்டு இருக்கா? ஒரு வேளை என்னைக் காதலிக்கறேன்னு சொல்லப் போறாளோ?' என்று யோசித்தவன், 'டேய் பாலா! ஆனாலும், உனக்கு ரொம்பவும் ஆசைதான். அடங்குடா!' என்று மனதிற்குள் அவனை அடக்கிக் கொண்டே, ''சொல்லுங்க. இப்போ நான் ஃப்ரீயாதான் இருக்கேன்,'' என்றான் சாதாரணக் குரலில்.

''அது வந்து நான் உங்களை நேர்ல பார்த்துப் பேசணும். இப்போ உங்க வீட்டுக்கு வரட்டுமா? ஒண்ணும் சிரமமில்லையே?'' என்று இழுத்தாள்.

'நேர்ல பார்த்துப் பேசணுமா?' என்று நினைத்தவன், ''சரி! வாங்க!'' என்று கூறிவிட்டுப் பேசியை வைத்தான்.

'எதைப் பத்தி நேர்ல பேசப்போறா?' என்ற தவிப்புடன் அவள் வரும்வரை ஒரு பரபரப்புடன் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

வீட்டிற்கு வந்த தான்யாவோ, பாலாவின் தந்தை அங்கே இருப்பார் என்பதைச் சற்றும் எதிர்பார்க்காதவள், ''ச்சே! இவர் இருப்பதை மறந்துட்டேனே', என்று நொந்து கொண்டாள்.

அவளுக்கு உதவும் விதமாகப் பாலாவின் தந்தையோ, "நீங்க ரெண்டு பேரும் பேசிட்டு இருங்க. என்ன, அலுவலக விஷயத்தைப் பத்தி பேசி என்னை அறுக்கப் போறீங்க. அதுக்கு முன்னாடி நான் கிளம்புறேன். எனக்கும் வெளில போய்க் கொஞ்ச தூரம் நடந்தா நல்லா இருக்கும். வரேன்", என்று கிளம்பிவிட்டார்.

அவர் கிளம்பியவுடன் நல்லம்மாள் சமையலறையில் இருக்கிறார் என்பதை உறுதி செய்து கொண்டபின், "நீ... நீங்க என்னோட தங்கை மனசுல எதையும் விதைக்கற துக்கு முன்னாடி அவளோட பழகறதை நிறுத்தறீங் களா?" என்று சொல்லிப் பாலாவைப் பார்த்தாள்.

அவள் சொன்னதைக் கேட்டு அவளை நம்பாமல் பார்த்தவன், "என்னைப் பத்தி நல்லதாவே நினைக்க மாட் டியா தான்யா? நான் அப்படி என்ன தான் பண்ணினேன்?" என்று கோபமாக அவன் இருக்கையில் இருந்து எழ, இப்பொழுதுதான் நடைமுறைக்குள் ஒன்றி வரும் அவன் காலோ அவனின் அவசரத்திற்கு ஈடு கொடுக்காமல் அவனைத் தடுமாற வைத்தது.

"பாலா! மெதுவா!" என்று பதறி அவசரமாக எழுந்து அவனைத் தாங்கிப் பிடித்தவள், அவனை உட்கார வைத்தாள். இதை முற்றிலும் எதிர்பாராத பாலா, அவளின் ஸ்பரிசத்தில் மெய் மறந்து உலகை உலா வரச் சென்றுவிட்டான்.

அவனை உட்கார வைத்தவள், அவன் குரலில் இருந்த வேதனையை உணர்ந்து, "மன்னிச்சுடுங்க! நான் உங்களைப் பத்தி தப்பா ஒண்ணும் நினைக்கலை. நீங்க சந்தனாவுக்கு நிறைய்ய உதவி செஞ்சிருக்கீங்க. அவள் இப்படிச் சிரிச்சுப் பேச மாட்டாளான்னு தினம் தினம்



ஏங்கி இருக்கேன். உங்க கூடப் பழக ஆரம்பிச்சதுக்கு அப்புறம்தான் அவள் நிறைய மாறியிருக்கா. அவளோட மாற்றம் எனக்குப் பிடிச்சிருக்கு. அதுக்கு நான் உங் களுக்கு நிறையக் கடமைப்பட்டிருக்கேன். ரொம்ப 'தேங்க்ஸ்.' ஆனா, சந்தனா சின்னப் பொண்ணு இல்லையா? நீங்க பேசறதைப் பார்த்து அவ மனசுல வீணா வேற ஆசையை வளர்த்துக்கக் கூடாதுன்னுதான்..." என்று இழுத்தாள்.

அவனின் பவனியைச் சீக்கிரமாக முடித்துக்கொண்டு வந்தவன், அவளின் பதிலைக் கேட்டுச் சிரித்தான். அவனிருந்த மகிழ்ச்சியில் அவளிடம் சிறிது விளையாட எண்ணி, "அதை நீங்க சந்தனாவிடமே சொல்லலாமே. எதுக்கு என்கிட்ட வந்து சொல்லறீங்க?" என்றான்.

"அது வந்து... அவகிட்ட சொல்லலாம்தான். ஆனா, அவள் இதை எப்படி எடுத்துக்குவான்னு தெரியலை. அது தான் உங்ககிட்ட சொல்லாம்ன்னு நினைச்சேன். நீங்க சொன்னா அவள் கண்டிப்பாக் கேட்பாள். இங்க பாருங்க... அவ பாட்டுக்கு மனசுல ஆசையை வளர்த்துக் கிட்டு அப்புறம் நிறைவேறலைன்னா, அவள் பாவம் இல்லையா? அது நிறைவேறாதுன்னு எனக்குத் தானே தெரியும்..." என்றாள் படபடப்பாக.

"நிறைவேறாதுன்னு உங்களுக்குத் தெரியுமா? எப்படி? யார் சொன்னாங்க?" என்றான் அவளைக் கூர்ந்து நோக்கியவாறே.

"உங்களுக்குத்தான் உங்க அப்பா பொண்ணு பார்த்து இருக்கிறாரே... அதுதான் சொன்னேன்!" என்றாள் நிதான மாக யோசித்து.

"பொண்ணு அவர்தானே பார்த்தார். நான் இல் லையே?" என்றான் அவனும் விடாமல்.

அவன் பதிலில் எரிச்சலுற்று, "உங்களுக்குச் சொன்னா புரியாதா? எத்தனை பேர் மனசுல இப்படி ஆசையைக் கிளப்புவீங்க? நீங்க தான் என்னை..." என்று ஆரம்பித்து, 'காதலிக்கறீங்களே' என்று எப்படி அவனிடமே சொல்வது என்று திணறியவள், "உங்ககிட்ட எனக்கு விளக்கம் எல்லாம் சொல்லத் தேவையில்லை. அவளோ இப்போ தான் ஒரு பெரிய அடியிலிருந்து வெளில வந்திருக்கா. தயவு செய்து அவளை மீண்டும் அழ வச்சிடாதீங்க. என்னால அதைப் பார்த்துட்டுச் சும்மா இருக்க முடியாது.. சொல்லிட்டேன். நான் வரேன். நல்லா யோசிங்க", என்று படபடவென்று கூறிவிட்டு, "அப்படியே உங்க காலைப் பத்திரமா பார்த்துக்கோங்க", என்று அக்கறையுடன் தெரிவித்துவிட்டு அங்கிருந்து அகன்றாள்.

அவள் வெளியேறியதும் மனம் விட்டுச் சிரித்த பாலா, "அட லூசே! இதைச் சொல்லறதுக்குத்தான் மெனக்கெட்டு இங்கே வந்தியா? இதை 'போனி'லேயே சொல்லி இருக்கலாமே? அதுவுமில்லாம நான்தான் சந்தனாவிடம் ஏற்கெனவே ஒரு பெண்ணைக் காதலிக்க றேன்னு சொல்லிட்டேனே. அவளும் இதுவரைக்கும் யாருன்னு கேட்டுக் கேட்டுச் சலிச்சுட்டா. நான்தான் உன்கிட்ட சம்மதம் வாங்கினதும் பதில் சொல்லறேன்னு சொல்லி இருக்கிறேன். பரவாயில்லை. நான் உன்னைக் காதலிக்கிறேன் அப்படின்னாவது உனக்குப் புரிஞ்சிடுச்சே. தனு! இது உன் தங்கை மேல இருக்கிற அக்கறையா? இல்லை, என் மேல இருக்கும் ஆசையா? கிட்ட நெருங்கி வர மாதிரி இருக்கே. சீக்கிரமா வா. நான் காத்திட்டு இருக்கேன்!" என்று நினைத்து மீண்டும் தன் உலகில் வலம் வரத் தொடங்கினான்.



அவன் மனதுக்குள் பேசிக் கொண்டிருக்க, அவன் கைபேசி 'தனியாகப் பேசாமல் என்னுடன் பேசு' என்றது. அவன் பேசியை எடுத்து, "ஹலோ! எப்பிடிம்மா இருக்க?" என்றான்.

"அண்ணா! நான் நல்லா இருக்கேன். நீங்க எப்படி இருக்கீங்க? எல்லாம் இப்போ இருக்க வேண்டிய இடத்துல ஒழுங்கா இருக்குதா? எல்லாம் 'கரெக்டா' ஒட்டிகிச்சா?" என்று அவன் எலும்பு முறிவைப் பற்றிக் கேட்டவள் வேறு யாருமில்லை, மதுவேதான்.

"மது! நல்லா இருக்கேன். நீதான் என்னை மறந் துட்டே. எவ்வளவு நாள் ஆச்சு நீ என்னைப் பார்க்க வந்து. சரி! உன்னால் அடிக்கடி வர முடியாததற்குச் சரியான காரணம் இருக்கு. ஆனா, அதற்காக 'போன்'ல கூட பேச மாட்டியா?" என்று அவளிடம் குறைப்பட்டுக் கொண் டான் பாலா.

"உங்களை எல்லாம் மறக்கலை. கொஞ்சம் அசதியா இருந்தது, அதுதான் வேற ஒண்ணும் இல்லை. 'டாக்டர்' கிட்ட வேற அடிக்கடி போயிட்டு இருக்கேன். அப்புறம் பகல்ல எனக்கு 'டைம்' இருக்கும் போது நீங்க 'ஆபீஸ்'ல 'பிஸி'யா இருப்பீங்க!" என்று சமாளிக்க முயன்றாள்.

"போன்'ல கூப்பிட்டுப் பேசறதுக்குக் கூட உனக்கு அசதியா இருந்ததா? நான் நம்ப மாட்டேன். நான் உன்னிடம் பேச மாட்டேன்!" என்று சிறு குழந்தை போல அடம் பிடித்தவனை நினைத்துச் சிரித்துக் கொண்டாள் மது.

"கோவிச்சுக்கிட்டீங்கன்னா எனக்கு என்ன வந்தது? தான்யா ஏன் உங்க மேல இவ்வளவு கோபத்துல இருக்

காங்கன்னு சொல்லறதுக்குக் கூப்பிட்டா, பேச மாட்டீங்களா? அப்ப சரி. நான் 'போனை' வைக்கிறேன்,'' என்று சற்று நேரம் அமைதி காத்தாள்.

அதற்குள் பாலா, ''மது...மது...! வச்சுடாத. நான் எங்க உன்னைப் பேச வேண்டாம் என்று சொன்னேன்? நான் தானே பேச மாட்டேன்னு சொன்னேன். நான் பேசலைன்னா என்ன? நீ பேசும்மா. நீ சொல்ல வந்ததைச் சொல்லு. என் காது திறந்துதான் இருக்கு!'' என்று அவளிடம் வழிந்தவாறே சமாளித்தான்.

அவன் சொன்னதைக் கேட்டவள் சிரித்து, ''நல்லா சமாளிக்கறீங்க. காரியம் ஆகணும் இல்லை!'' என்றவள், அதற்கு மேல் அவன் பொறுமையைச் சோதிக்காமல் அவள் தான்யாவுடன் சென்று பேசியதைப் பற்றிக் கூறினாள். அவள் சொல்லி முடிக்கும் வரை இடையிடாமல் கேட்டுக் கொண்டிருந்தவன் தான்யாவின் வலியை அவனுக்கு நடந்ததைப் போல உணர்ந்தான். ஒன்றும் சொல்லாமல் நீண்ட பெருமூச்சை அவன் வெளியிடவும், ''அண்ணா! நீங்க இப்படிக் கவலைப்பட்டு என்ன நடக்கப் போகுது? இனி என்ன பண்ணலாம் என்று யோசிங்க. அதுக்குத்தான் உங்ககிட்டச் சொன்னேன்,'' என்று அவனுக்குத் தைரியமூட்டினாள் மது.

''சும்மா இருக்காம நானும் அதே தப்பைப் பண்ணி அவளோட கோவத்தைத்தான் அதிகப்படுத்தி இருக்கேன் மது... ச்சே! அப்போ அவளோட மனசு எவ்வளவு பாடு பட்டிருக்கும். 'ஹோட்டல்'ல வச்சு அவள் என்னைத் திட்டினதோட விட்டதே பெருசு!'' என்று அவளிடம் புலம்ப ஆரம்பித்தான்.

''பாலாண்ணா! நானே தான்யா என்னை நம்பிச் சொன்ன உண்மையை உங்ககிட்ட சொல்லலாமா வேண்டாமான்னு யோசிச்சு, சரி ஆபத்துக்குப் பாவமில்லைன்னு நினைச்சு உங்க கிட்ட சொன்னா, இப்படிப் புலம்பறீங்க. நீங்க இப்படிப் புலம்புவீங்கன்னு தெரிஞ்சிருந்தா உங்ககிட்ட இதைப் பத்தி சொல்லி இருக்கவே மாட்டேன். தான்யாவோட நன்மதிப்பைப் பெற என்ன பண்ணலாம் என்று யோசிப்பீங்களா... அதை விட்டுட்டு...'' என்று சற்றுக் குரலை உயர்த்திச் சொன்னதும், ''சரிம்மா! நீ சொல்லற மாதிரி நான் யோசிக்கறேன். ரொம்ப தேங்க்ஸ் மது!'' என்று நடப்பிற்கு வந்து அவளிடம் தெரிவித்தான்.



பேசியை வைத்தவனுக்குத் தான்யா பட்ட துன்பங்களை நினைத்து மனது வலித்தது. அவள் மேலிருந்த காதல் மேலும் அதிகரித்து, நயாகரா நீர்வீழ்ச்சி போலப் பொங்கி வழிந்தது. அவளைக் காலம் முழுவதும் பூப் போல வைத்துத் தாங்க மனது பரபரத்தது. ஆனால், அவள் விட்டால்தானே? இத்தனை நாளும் விளங்காமல் இருந்த அனைத்தும் அவனுக்கு விளங்கியது.

தான்யாவின் கோபம், அவளின் கூட்டுக்குள் புகுந்து கொள்ளும் குணம், சந்தனாவைப் பற்றிய கவலை என்று அனைத்துமே தெள்ளத் தெளிவாக விளங்கியது. அவளை உடனே பார்க்க வேண்டும் போலத் தோன்றியது. ஆனால், அவளைப் பார்த்தால் தன் கட்டுப்பாட்டை இழந்து ஏதாவது செய்துவிடுவோம் என்று பயமாகவும் இருந்தது.

'சந்தனாவும் பாவம்தான். எத்தனை சின்னப் பெண். இவளைப் போய் இப்படிப் பண்ண அந்த ஆளுக்கு எப்படி மனசு வந்தது? இவனை எல்லாம் கொதிக்கற எண்ணெயில போட்டு வறுக்கணும்!' என்று சற்று

நேரம் அந்த முகம் தெரியாதவனை நினைத்துக் குமைந்து கொண்டிருந்தான்.

'முதலில் அப்பாகிட்ட தான்யாவைப் பத்தி சொல்லணும். சென்ற முறை ஊருக்குப் போன போதே சொல்லணும்னு நினைச்சுப் போனா, அதுக்குள்ளே அங்க குத்தகை விடற ஆளு தகராறு பண்ணினதுனால அதுக்கு அலைய வேண்டியதாப் போச்சு. இன்று கண்டிப்பா அப்பாவிடம் என்னோட காதலைப் பத்தி சொல்லி நேரா அவங்க வீட்ல போய்ப் பொண்ணு கேட்கச் சொல்ல வேண்டியது தான். இவள் சம்மதிப்பாள் என்று காத்திட்டு இருந்தா அப்புறம் கடைசிவரை காத்திட்டு இருக்க வேண்டியதுதான்.

'முதல்ல இவளைக் கல்யாணம் பண்ணிட்டு அப்புறம் என்னோட அன்பைப் புரிய வைக்க முயற்சி செய்யலாம். அதுதான் சரி. அப்பாவும் அவர் பார்த்திருக்கிற பொண்ணைப் பத்தி ஒண்ணும் மூச்சு விடலை. எனக்கு உடம்பு சரியாகட்டும்னு காத்திட்டு இருக்காரோ என்னவோ? இந்தத் தடவை நான் முந்திக்கணும்!' என்று யோசித்து, முடிவு செய்து கொண்டு அவன் தந்தை வரும் வரை காத்திருந்தான்.

'சந்தனாவுக்குத் தன்னால்தான் இப்படி ஆகிவிட்டதுன்னு நினைச்சு தனு இப்படிக் கஷ்டப்படறாளா? அது தான் சந்தனாவும் அக்கா மாதிரியே என்னோட விபத்துக்கு அவள் தான் காரணம்ன்னு நினைச்சு கஷ்டப்பட்டாளா? ரொம்ப நல்ல ஒற்றுமைதான்!' என்று நினைத்துச் சிரித்துக் கொண்டான்.

தான்யா சென்ற பின் வீட்டிற்கு வந்த பாலாவின் தந்தை வெங்கடேசன், ''பாலா! என்னப்பா அந்தப் பொண்ணு



தான்யா வீட்டுக்குக் கிளம்பிட்டாளா?'' என்றவாறே வந்தார்.

''ஆமாம்பா. கொஞ்ச நேரம் ஆச்சு.''

''சாப்பிட்டுட்டுப் போகச் சொல்லி இருக்கலாமே. சரி விடு! பாலா! உனக்கும் உடம்புக்கு இப்போ நல்லா தேறிடுச்சு. நான் ஊர்ல எல்லாத்தையும் போட்டது போட்டபடி வந்துட்டேன். போய் ஒரு ரெண்டு வாரம் அங்கிருந்து எல்லாத்தையும் ஒழுங்கு படுத்திட்டு வரேன். நீ என்னப்பா சொல்லற?'' என்றார்.

''அப்பா! என்கிட்டே எதுக்கு கேட்டுட்டு? உங்களுக்கு எது இஷ்டமோ அதைச் செய்யுங்கப்பா.''

''அதுக்கில்லைப்பா. நீ இப்போதான் கொஞ்சம் நல்லா இருக்கிற மாதிரி இருக்கு. உன்னை இங்க தனியா விட்டுட்டுப் போறதுக்கும் பயமா இருக்கு. அதான்....'' என்று இழுத்தார்.

''அப்பா! ஒண்ணும் பயப்படாதீங்க. இனிமேல் நான் ஒழுங்கா இருந்துக்குவேன். கௌதம்தான் என்னைத் தினமும் கூட்டிட்டுப் போறான். அதனால் நான் கார் ஓட்டுவதைப் பத்தி நீங்க கவலையேபடாதீங்க. அதான் நல்லம்மாளை இங்க விட்டுட்டுப் போறீங்களே, அவங்க என்னைப் பார்த்துக்குவாங்க!'' என்று தன் தந்தைக்குத் தைரியம் அளித்தான் பாலா.

''சரிப்பா! அப்படின்னா நான் நாளைக்கே கிளம்பறேன்,'' என்றவர், நல்லம்மாளிடம் இரவு உணவை எடுத்து வைக்குமாறு சொல்லிவிட்டு, ''நான் போய் ஊருக்குப் போறதுக்கு எல்லாத்தையும் எடுத்து வைக்கறேன்,'' என்று அவர் அறைக்குள் புகுந்து கொண்டார்.

இரவு உணவின் போது, நல்லம்மாள் பரிமாற, இருவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். நல்லம்மாள் முன்

எதையும் பேசாமல் அமைதியாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தவன், தன் தந்தையிடம் சொல்வதற்கு மனதிற்குள் ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தான்.

சாப்பிட்டு முடிந்தவுடன், அவருடனே அவரின் அறைக்குள் சென்று, ''அப்பா! உங்ககிட்ட ஒண்ணு சொல்லணும்,'' என்றான்.

அவர் பதில் சொல்லும் முன், அவர்களின் வீட்டின் 'காலிங் பெல்' அடிக்க, 'இந்நேரத்திற்கு யார் வந்திருப்பா?' என்று பாலா யோசிக்க, அவனின் தந்தையோ, ''எனக்குத் தெரிஞ்சவர் தான். ஊருக்குப் போறேன்னு சொன்னேனா, அவரும் வரேன்னு சொன்னார். அது தான். இன்று ராத்திரி இங்கேயே இருந்துட்டு நாங்க ரெண்டு பேரும் அதிகாலையில ஒண்ணாக் கிளம்பறோம்,'' என்று சொல்லி முன்னறைக்குச் சென்றார்.

அவரின் நண்பரைச் 'சுப்பிரமணியம்' என்று அறிமுகப் படுத்தியவர், அதன்பின் பாலா இருந்த பக்கம் பார்க்கக் கூட இல்லை. அப்புறம் எப்படி இவன் பேச நினைத்ததைப் பேச முடியும்? அவரின் நண்பர்தான் பாலாவிடம் காலைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தார். பாலாவும், 'சரி! இன்னும் ரெண்டு வாரத்துல வரேன்னு சொல்லி இருக்காரே. அப்போ வரும் போது பேசிக்கலாம்,' என்று மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டு, அவரிடம் பேசியவன் பின் தூக்கம் வருகிறது என்று உறங்கச் சென்றுவிட்டான். ஆனால், அவன் முடிவு செய்ததற்கு நேரெதிராக அவன் தந்தை முந்திக் கொண்டு வேறொரு முடிவை எடுத்திருந்தார்.

பாலாவிடம் பேசிவிட்டு வீட்டிற்குச் செல்லும் பேருந்தில் ஏறி உட்கார்ந்த தான்யாவிற்கு அருகில் வந்து அமர்ந்த நபர், ''இன்று ஒரே வெயில் இல்லை?'' என்று வினவ,



''ஆமாங்க! ஆனா, இப்போ கொஞ்சம் பரவாயில்லை!'' என்று பதிலளித்து அவரைப் பார்த்துச் சிரிக்க, இதழ் விரித்தவளின் புன்னகை அந்த வெயிலிலும் அப்படியே உறைந்தது. ''இங்க எப்படி?'' என்று திணறினாள்.

அந்த நபரும், ''உன்னோட கொஞ்சம் பேசணும். அது தான். பேசலாமா?'' என்று கேள்வி கேட்க, யோசனையுடன், அவளும் சரி என்று தலை ஆட்டிச் சம்மதித்தாள். ஆனால், அவர் பேசிய விஷயம்தான் அவளைத் திகைப்பில் ஆழ்த்தியது.

## 19

''பூக்களைக் கொடுத்து
நறுமணத்தைச் சுவாசிக்கக்
காத்திருக்கிறேன்!
தென்றலைக் கொடுத்து
நாதத்தைக் கேட்கத்
தவித்திருக்கிறேன்!
இதயத்தைக் கொடுத்து
வாழ்க்கையை யாசித்துத்
தவமிருக்கிறேன்!
விரைவில் வந்துன் காதலால்
என் காத்திருப்பை முறித்து
தவிப்பைத் துடைத்துத்
தவத்தைக் கலைத்து விடு!''

வர்ஷனாவைச் சந்தித்துவிட்டு வந்த பிறகு இரண்டு நாட்கள் பொறுத்தவன், மீண்டும் அவளின் கைபேசிக்கு அழைத்தான். ஆனால், அவன் பலமுறை அழைத்தும்

அவள் எடுக்காமல் போகவே, 'ரொம்பக் கோபத்துல இருக்காப்போல!' என்று சிரித்துக் கொண்டான். ஆனால், அவனின் முயற்சியை மட்டும் கைவிடவில்லை. ஒரு கட்டத்தில் அவனுக்குப் பயம் வந்துவிட, மதுவிடம் சொல்லி, அவளை அழைத்துப் பார்க்கச் சொன்னான். அவளையும் சிறிது நேரம் சோதித்தவள், சோதனை போதும் என்றுணர்ந்தாளோ என்னவோ, கடைசியில் பேசிக்கு உயிர் கொடுத்தாள்.

''வர்ஷனா! எப்படி இருக்கீங்க? பேசி மூனு நாள் ஆச்சேன்னு கூப்பிட்டேன். ரொம்ப நேரமா 'ட்ரை' பண்ணறேன். 'பிஸி'யா இருந்தீங்களா?'' என்று இயல்பாக வினவினாள்.

''சாரி மது! எனக்கு ரெண்டு நாளா உடம்பு சரியில்லை. நட்சத்ராவைப் பார்த்துக்கற அம்மா வேற ரெண்டு நாளா லீவு. வேலைக்குப் போகாம வீட்லதான் இருக்கேன். உடம்பு சரியில்லாம நட்சத்ராவையும் பார்த்துக்கிட்ட அசதியில கொஞ்சம் அசந்து தூங்கிட்டேன். அதுதான், நீ கூப்பிட்டப்போ எடுக்க முடியலை!'' என்று விளக்கினாள்.

''அப்படியா? நான்தான் உங்களைத் தொந்தரவு பண்ணிட்டேன். மன்னிச்சுடுங்க! ஆனா, நீங்க உடம்புக்கு முடியாத போது நட்சத்ராவையும் எப்படிப் பார்த்துக்குவீங்க? என்கிட்டே சொல்லி இருக்கலாமே? என்னை ஒரு நல்ல தோழியா நினைச்சிருந்தீங்கன்னா என்கிட்டே சொல்லி இருப்பீங்கதானே? உங்களுக்கு இன்னும் என் மேல கோபம் குறையலை இல்லை?'' என்று குறைப்பட்டுக் கொண்டாள் மது.

அதைக் கேட்டுப் பதறியவள், ''ச்சே ச்சே! அப்படியெல்லாம் இல்லை மது. உன்னை இந்த மாதிரி சமயத்துல



கஷ்டப்படுத்தக் கூடாதுன்னு தான் சொல்லலை. அதுவும் இப்படி உடம்புக்கு முடியாமப் போறது சகஜம் தானே. எப்பவும் என்னோட 'ஃபிரெண்ட்'கிட்ட நட்சத்ராவை விடுவேன். அவளும் இப்போ 'லீவு'ல வெளியூர் போயிருக்கா. ஆனா, நானே சமாளிச்சுக்குவேன். அதான் உன்னைத் தொந்தரவு செய்யலை!'' என்றாள் அவசரமாக.

அவளிடம் மேலும் சிறிது நேரம் பேசிவிட்டு வைத்தவுடன் தன் அண்ணனுக்கு அனைத்தையும் ஒலிபரப்பி விட்டாள். அவனும் அன்று மாலையே மீண்டும் முன் அறிவிப்பின்றி அவள் கதவைத் தட்டினான். அவனைப் பார்த்தவள் வாய் திறந்து பேசும் முன்னரே, ''வர்ஷனா! இப்போ ஒண்ணும் சொல்லாத. நான் எந்த விஷயத்தைப் பத்தியும் பேச வரலை. ஒரு நண்பன் தன் தோழிக்கு உடம்பு சரியில்லைன்னு கேள்விப்பட்டதும் பார்க்க வந்திருக்கான். அவ்வளவுதான்!'' என்று அவளிடம் கூறியவன், வீட்டினுள் நுழைந்தான்.

நுழைந்தவனின் கண்களில், அவன் இரண்டு நாட்களுக்கு முன் வீட்டின் வெளியில் வைத்துவிட்டுச் சென்ற ரோஜாப் பூக்கள் பட்டன. ஆனாலும், அவன் விழிகள் வீட்டிற்குள் வலம் வந்து அவன் பார்க்க நினைத்ததைக் காணாமல் வலியுடன் தவித்தன. இருந்தும் அதைப் பற்றி ஒன்றும் கேட்காமல் அவளிடம் அவன் வாங்கி வந்திருந்த பழங்களைக் கொடுத்துவிட்டு, ''உனக்கு என் மேல கோபம் இருந்திருந்தாலும் இந்த மாதிரி நிலைமையில கூட மதுகிட்ட கூப்பிட்டுச் சொல்லி இருக்கலாமே? அவசரத்துல உதவறதுக்குத்தானே 'ஃபிரெண்ட்ஸ்' இருக்காங்க. என் மேல இருக்கும் கோபத்துக்கு பாவம் மது என்ன பண்ணுவா?'' என்று

அவளுக்குச் செல்லமாகக் குட்டு வைத்தவன், ''சரி! அதை அப்புறம் பார்க்கலாம். 'டாக்டர்'கிட்ட போனியா? மாத்திரைகள் எல்லாம் ஒழுங்காச் சாப்பிட்டியா? முதல்ல இப்போ என்ன சாப்பிட்ட?'' என்று அவள் மேலிருந்த கரிசனத்தில் கேள்விகளை அடுக்கினான்.

ஏற்கெனவே உடலும் உள்ளமும் துவண்டிருந்தவளின் மனம், அவனின் கரிசனத்தில் மேலும் நெகிழ்ந்தது. ''டாக்டர்கிட்ட போனேன். இனிமேல்தான் சாப்பிடணும்!'' என்று கழிவிரக்கம் காரணமாகக் கண்கள் கலங்கியவாறே அவனின் கேள்விகளுக்குப் பதிலளித்தாள்.

ஒரு நொடி அவளைக் கண்களை இமைக்காமல் பார்த்த கௌதம், அவள் கண்கள் அவனுக்கு ஏதோ சேதியைச் சொல்ல, அவளை இழுத்து அணைத்து ஆறுதல் சொல்ல வேண்டும் என்று துடித்த மனதைக் கட்டுப்படுத்தியவாறே, அவளிடம் இருந்து கஷ்டப்பட்டுப் பார்வையை அகற்றினான். பின், நட்சத்ராவிடம் சென்றவன், ''நட்சத்ராவுக்கு ஒண்ணும் இல்லையே? அவள் நல்லாத் தானே இருக்கா?'' என்று அவளைத் தொட்டுப் பார்த்து உறுதிப்படுத்திய பின்னர், சமையலறைக்குள் புகுந்து அவளுக்கு உணவு எடுத்துக் கொண்டு வரச் சென்றான். அவன் உள்ளே சென்ற பின் தான் உணர்ந்தான், வர்ஷனா இரவுக்கு இன்னும் சமைக்கவில்லை என்று. 'ச்சே! சமைக்கற அளவுக்குக் கூட அவள்கிட்ட தெம்பு இல்லை போல!' என்று அவன் மனம் பாகாக உருகியது. கௌதம் இவ்வாறு சமையலறைக்குள் நுழைவான் என்று எதிர்பார்த்திராத வர்ஷனா, அவன் உள்ளே சென்றவுடன், அவனைப் பின் தொடர்ந்து அவளும் சென்றாள்.

அவள் இன்னும் சமைக்கவில்லை என்ற உண்மை அவனுக்குத் தெரிந்துவிட்டதே என்று நினைத்தவள்,



''நாங்க பார்த்துக்கறோம். உங்களுக்கு ஏன் சிரமம்?'' என்றாள்.

அவளைப் பார்த்து முறுவலித்தவன், ''இன்னைக்கு ஒரு நாள் என்னோட சமையலைச் சாப்பிடுங்க ரெண்டு பேரும். ஏதோ உன்னளவுக்கு இல்லாவிட்டாலும் சாப்பிடற மாதிரி இருக்கும்!'' என்றான் ஒரு முறுவலுடன்.

''இல்லை. நீங்க சிரமப்பட வேண்டாம். ந..நானே...ப.. பார்த்துக்கறேன்!'' என்று தடுமாறினாள்.

''பேசாம அம்மாவும் பொண்ணும் உட்கார்ந்துட்டு நான் செய்யறதைப் பாருங்க!'' என்றவன் இரண்டு நாற்காலிகளை இழுத்து வந்து அங்கே சமையலறையில் போட்டவன், நட்சத்ராவைத் தூக்கி அதில் உட்கார வைத்துவிட்டு, வர்ஷனாவிடம், ''இப்போ நீ அதில உட்காரலைன்னா, அப்புறம் நட்சத்ராவை உட்கார வச்ச மாதிரி உன்னையும் உட்கார வைக்க வேண்டி வரும்!'' என்று அவன் முடிக்கும் முன்னரே வர்ஷனா அதில் அமர்ந்திருந்தாள்.

அதன்பின் அவள் எந்தெந்தப் பொருள் எங்கே இருக்கிறது என்று அவனுக்குச் சொல்ல, அவனும் வர்ஷனாவுக்கெனச் சாதமும் ரசமும் வைத்தவன், அவனுக்கும் நட்சத்ராவுக்கும் சட்னி செய்து இட்லி ஊற்றினான். விரைவாக அனைத்தையும் செய்தவனை இமைக்காமல் பார்த்திருந்தாள் வர்ஷனா.

''உனக்கு எது சாப்பிடணும்ன்னு இருக்கோ, அதைச் சாப்பிடு. நாளைக்கும் சேர்த்துச் செஞ்சு வச்சிருக்கேன். மதியம் மட்டும் கொஞ்சம் 'அட்ஜஸ்ட்' பண்ணிக்கோ. நான் சாயந்திரம் வரும் போது வீட்ல இருந்து எடுத்து வருகிறேன்,'' என்றான்.

''வேண்டாம். நீங்க இப்போ செஞ்சதே பெரிய உதவி. நாளைக்கு நான் பார்த்துக்கறேன்,'' என்று அவனை மறுத்தாள் வர்ஷனா.

அவளின் மறுப்புக்கு ஒன்றும் சொல்லாமல், வர்ஷனாவுக்குத் தட்டில் உணவைப் போட்டுக் கொடுத்தவன், அவனும் நட்சத்ராவுடன் பேசியவாறே உண்டு முடித்தான். வர்ஷனாவுக்கு ஓய்வு தேவை என்ற காரணத்தினால் உணவை முடித்தவுடன், அதுவரை தொண்டைக்குள் அடைந்திருந்த கேள்வியை நட்சத்ராவிடம் கேட்டான்.

''நட்சத்ரா! இன்று என்கூட வர்றீங்களா? நம்ம வீட்டுக்குப் போயிட்டு நாளைக்கு வரலாம். அம்மா படுத்துத் தூங்கி நல்லா 'ரெஸ்ட்' எடுக்கட்டும்!'' என்றான்.

தன் தாயின் பதிலுக்காக அவளைப் பர்த்தவளை முந்திக் கொண்டு, ''அம்மா ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. போய் 'டிரஸ்' எடுத்துட்டு வாங்க... போகலாம்,'' என்று அவளிடம் தெரிவித்துவிட்டு, வர்ஷனாவிடம் திரும்பி, ''அவளும் உன்கூட இருந்து, அவளுக்கும் காய்ச்சல் வந்துச்சுன்னா சிரமம். அவளையும் ஏன் கஷ்டப்படுத்தணும்? அதுக்குத் தான் சொல்றேன். நீ சீக்கிரமா குணமானா என்னோட தொல்லையில் இருந்து சீக்கிரமாவே விடுபடலாம். இல்லேன்னா நான் தினமும் இங்க வந்து நிற்பேன். அப்புறம் உன் இஷ்டம்!'' என்று அவளை மடக்கினான்.

அவளுக்கும் அந்தப் பயம் மனதில் இருந்து கொண்டு தான் இருந்தது. இவளின் காய்ச்சல் நட்சத்ராவுக்கும் வந்துவிட்டால் அவளும் தன்னுடன் சேர்ந்து கஷ்டப்படுவாள் என்று. கௌதமின் இந்த வாதத்தை மறுக்க முடியாமல், ''சரி! ஒத்துக்கொள்கிறேன். ஆனா, அதற்காக



நீங்க வீணா வேற எந்தக் கற்பனையும் பண்ணிக்க வேண்டாம். ஒரு நண்பனிடம் இருந்து அவசியப்படும் பொழுது ஒரு உதவி வாங்கறேன். அவ்வளவுதான்!'' என்று அவனிடம் தெளிவாகத் தெரிவித்தாள்.

அதைக் கேட்டுச் சிரித்தவன், ''உடம்புக்கு முடியலைன்னாலும் கொஞ்சமும் விட்டுக் கொடுக்காதே!'' என்று சத்தமாக முணுமுணுத்தான். நட்சத்ரா 'பாக்' பண்ண முடியாமல் திண்டாடுவதைப் பார்த்து அவளுக்கு உதவி செய்யச் சென்றான். சற்று நேரத்தில் அவளுடன் கிளம்பி, ''நல்லாப் படுத்துத் தூங்கம்மா! நட்சத்ராவைப் பத்தின கவலை உனக்கு வேண்டாம். ரெண்டு நாள் கழிச்சுக் கூட்டிட்டு வரேன்,'' என்று அவளிடம் விடை பெற்றான் கௌதம்.

நட்சத்ராவை நேராகத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றவன், தன் அன்னையிடம், ''அம்மா! இவ என்னோட 'ஃபிரெண்டோ'ட பொண்ணு. பேரு நட்சத்ரா. ஒரு ரெண்டு நாள் இங்கதான் இருப்பா. 'ஃபிரண்ட்டு'க்கு கொஞ்சம் உடம்புக்கு முடியலை. அதுவும் இல்லாம பார்த்துக்க பெரியவங்க யாரும் வீட்ல இல்லை. எல்லோரும் வெளியூர் போயிருக்காங்க. அதான் இங்க நம்ம வீட்டுக்குக் கூட்டிட்டு வந்தேன்,'' என்றான்.

''அப்படியா? இவ அம்மா கூடவா இப்படி ஒரு சின்னப் பொண்ணை விட்டுட்டுப் போவா?'' என்று, தப்பாக யோசித்தவரைத் தடுக்க எண்ணி, ஏதோ சொல்ல வாயைத் திறந்தவன், பின் அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டான். ராஜேஸ்வரிக்குத் துறுதுறுவென்று இருக்கும் நட்சத்ராவைப் பார்த்ததும் மிகவும் பிடித்துப் போக, நட்சத்ராவும், கௌதம் அறிமுகப்படுத்தி வைத்ததால், ராஜேஸ்வரியுடன் நன்றாக ஒட்டிக் கொண்டாள்.

கௌதமின் தந்தை ஸ்ரீனிவாசன் அவனிடம் வந்து, ''கௌதம்! நான் சம்பந்தியிடம் பேசினேன்ப்பா. நிச்சயத்தைத் தள்ளி வைக்கறதைப் பத்தி நான் சொன்னவுடனே அவரும் புரிஞ்சுக்கிட்டாரு,'' என்று தெரிவித்தார்.

''தேங்க்ஸ் அப்பா! எங்களோட 'கிளைன்ட்ஸ்' வந்துட்டுப் போனதுக்கு அப்புறம் மிச்சத்தை நாம் ஒரு பத்து நாள் கழிச்சுப் பேசிக்கலாம்,'' என்றான் கவலை அகன்ற குரலில்.

அவரும் நட்சத்ரா அங்கிருப்பதனால் வேறொன்றும் பேச வேண்டாம் என்று முடிவு செய்து, ''சரிப்பா! நீ சொன்னபடியே செய்யலாம்,'' என்றார். அன்றிரவு, வெகு நாட்களுக்குப் பிறகு நிம்மதியாக உறங்கச் சென்றான் கௌதம். மறுநாள் வரப்போகும் பிரச்சனையை எதிர் கொள்ள வேண்டும் அல்லவா?

அவன் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்த அதே வேளையில், வர்ஷனா அவன் தந்த ரோஜா மலர்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பல வண்ணங்களில் பாதி விரிந்தும், விரியாமலும் அவளைப் பார்த்துக் கண் சிமிட்டிச் சிரித்துக் கொண்டிருந்தன. ஆறு விதமான வண்ணங்களில், இரண்டிரண்டாகச் சேர்த்துக் கட்டியவாறு ஒரு கூடைக்குள் இருந்த பூக்களைத்தான் இரண்டு நாட்களுக்கு முன் அவளின் வீட்டு வாசல் முன் வைத்து விட்டுச் சென்றிருந்தான் கௌதம். கூடவே வேறு ஒரு அட்டைப் பெட்டியும் இருந்தது. இரண்டையும் வீட்டிற்குள் எடுத்து வந்தவள், அந்த அட்டைப் பெட்டியின் மேல் இருந்த கவரைப் பிரித்து அதிலிருந்த கடிதத்தைப் படித்தாள். அதில், ஒவ்வொரு பூவின் வண்ணத்திற்கும் ஏற்றவாறு அவனின் மனதைத் திறந்து கொட்டியிருந்தான் கௌதம்.



அன்பை உள்ளே வைத்திருக்கும் வர்ஷனாவுக்கு,

இப்பூக்களை, ஒவ்வொன்றாக உன் கண்களால் அல்லாமல் மனதைக் கொண்டு உற்றுப் பார், என் மனது சொல்ல நினைக்கும் சேதி புரியும். நட்பைச் சொல்வதில் மஞ்சளுக்கு இணை வேறு எதுவுமில்லை. நான் இன்று மட்டுமல்லாமல் என்றுமே உன் நண்பன்தான் என்று சொல்ல விரும்புகிறேன். நீ எனக்கு அந்த இடத்தைத் தந்ததுக்கு நன்றி! ரோஸ் நிறம், நான் உன்னை ஆராதிக்கிறேன் என்று ரசனையுடன் பாடும். பவித்திரத்தைக் குறிக்கும் வெள்ளை நிறமானது உன்னை விட பவித்தரமாக எனக்கு இருக்காது. ஆரஞ்சு வண்ணம், நீதான் என்னுடைய உற்சாகம் என்பதைச் சொல்லிச் சிரிக்கும். ஊதா வண்ணம் என் காதலின் ஆழத்தைச் சொல்லும். சிகப்பு என்றால் என்னவென்று நான் சொல்லாமலேயே உனக்குத் தெரியும். அதை நான் நேரில்தான் சொல்லணும் என்று நினைத்திருக்கிறேன். விரைவில் அந்தச் சந்தர்ப்பத்தை எனக்குத் தருவாய் என நம்புகிறேன். இவ்வனைத்திலும் ஏன் முட்கள் இல்லை தெரியுமா? நான் உன்னைப் பார்த்தவுடன் காதலிக்க ஆரம்பித்துவிட்டேன் என்பதைச் சொல்லாமல் சொல்லும். ஒவ்வொரு வண்ணத்திலும் ஏன் இரண்டிரண்டாகத் தந்தேன் தெரியுமா? இரண்டு, இன்னுமா புரியவில்லை? என்னைக் கல்யாணம் செய்து கொள் என்று சொல்கிறேன். நண்பனாக ஏற்றிருக்கும் என்னை உன் அன்பனாக ஏற்றுக் கொள்ளும் வரை இப்பூக்கள் தினமும் உன்னைப் பார்த்துக் கொண்டேதான் இருக்கும்.

உன் முழுப் பெயரின் அர்த்தம், ராதை பிறந்த இடத்தைக் குறிக்கும். ஆனால், உன் பெயரின் பாதி, வர்ஷா என்றால் மழை என்று அர்த்தம். பெயரில் மழையை

வைத்துக் கொண்டு இன்னும் ஏன் என் மீது பொழியாமல் இருக்கிறாய்? என்னை உன் காதல் மழையில் நனைய விடாவிட்டாலும் பரவாயில்லை, உன் காதலின் சாரலி லாவது நனைய வை.

எதிர்பார்ப்புடன் கௌதம்!

அதன் கூடவே இருந்த அட்டைப் பெட்டியைத் திறந் தவள் அதிலிருந்த 'வின்ட் சைம்ஸ்' (wind chimes) பார்த்துப் புரியாமல், குழப்பத்துடன் கூடவே இருந்த வேறொரு கடிதத்தைப் பிரித்தாள். அவன் எழுதியிருந் ததைப் படித்துவிட்டு நீண்ட நேரம் அதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பெண்ணே,

இதை உன் வீட்டில் கட்டி வைத்து என் வரவிற்குக் கதவையும் திறந்து வை. தென்றலாக வருவேன், சுகமாய் வருடுவேன்! ஒவ்வொரு முறையும் நான் தீண்டும் பொழுது விதம் விதமாக எழும் இனிமையான சங்கீதம் போல நம் வாழ்க்கை முழுவதும் நீ எனக்குப் பரிசளிக்கக் காத்திருக்கேன். இந்த உலகில் தென்றல் உலவும் வரை நம் இனிமையும் தொடரும். மறவாதே, கதவைத் திறந்து வை!

கௌதம்.

அன்று கௌதம் வந்துவிட்டுச் சென்ற பின் நீண்ட நேரம் அதைப் பற்றி நினைத்துக் கொண்டே வர்ஷனா வும் உறங்கிவிட்டிருந்தாள்.

ஹர்ஷினிக்கு உள்ளமும் உடம்பும் கொழுந்து விட்டு எரிந்தது. 'பின்னே, கஷ்டப்பட்டு திட்டம் தீட்டி, கௌதம் வருவதற்குள் நிச்சயம் செய்யத் தினத்தைக் குறித்து வைத்தால், ஊரில் இருந்து சீக்கிரம் கிளம்பி வந்ததும்



இல்லாமல் நிச்சயத்தைத் தள்ளியும் வைத்துவிட்டானே.... அவன் தான் நிச்சயத்தைத் தள்ளி வைக்கச் சொன்னால் இந்த அப்பா எதுக்கு ஒத்துக்கணும்? முடியாதுன்னு சொல்ல வேண்டியது தானே? கொஞ்சமாவது பொண்ணு மேல அக்கறை இருக்கா?

'அவனும்தான் என்ன நினைச்சுட்டு இருக்கான்? வேலையைக் காரணம் காட்டித் தள்ளி வச்சுட்டோம்ன்னு மிதப்புல இருக்கானா? அவன் சொல்றதை மற்றவங்க வேணா நம்பலாம். நான் என்ன காதுல பூவச்சுட்டு, இவன் வந்து காது குத்த காத்திட்டு இருக்கிறதா நினைச் சுக்கிட்டானா? வரேன் இரு....' என்று நினைத்தவள், தன் அப்பாவிடம் இருந்து எந்த விஷயத்தையும் வாங்க முடியாது என்று முடிவுசெய்து, கௌதம் இல்லாத வேளையில் கௌதமின் வீட்டிற்குச் சென்றாள். அங்கே சென்று நட்சத்ராவைப் பார்த்ததும் கொதிப்படைந்தவள், நன்றாகத் திரியைத் தூண்டித் தீயைப் பற்றவைத்து விட்டுத்தான் வந்தாள்.

ஹர்ஷினியின் வரவை எதிர்பார்க்காத ராஜேஸ்வரி, வருங்கால மருமகள், அவர் அப்படித் தானே நினைத்துக் கொண்டிருக்கிறார், வந்தவுடன் அவருக்கு சந்தோசத்தின் அளவு பிடிபடவில்லை. அவளை இன்முகத்துடன் வரவேற்று உபசரித்தவரிடம் சிரித்துப் பேசியவள், நட்சத்ராவைச் சற்றும் அங்கு எதிர்பார்க்கவில்லை. ஒரு நொடி, 'ஒரு வேளை இவருக்கும் நட்சத்ரா யார்ன்னு தெரியுமோ? ஆனா, அப்படித் தெரிஞ்சிருந்தா, என்னை இப்படி சந்தோசமா வரவேற்று இருக்க மாட்டாரே!' என்று வேகமாக யோசித்தவள், ''இது வர்ஷனாவோட பொண்ணு தானே?'' என்று ஒன்றும் தெரியாமல் கேட்பது போலக்

கேட்டுவிட்டு, நட்சத்ராவிடம், ''ஹாய்......குட்டி!'' என்றாள்.

வர்ஷனா என்ற பெயரைக் கேட்டவுடன் அவர் மூளைக்குள் ஏதோ அபாயமணி அடிக்க, ''என்ன கேட்ட ஹர்ஷினி?'' என்று மறுபடியும் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்ள முயன்றார்.

அவர் முகத்திலிருந்த திகைப்பை வைத்தே, இவருக்கு ஒன்றும் தெரியாது என்ற விஷயத்தை ஊகித்தவள், மனதிற்குள், 'உனக்கு எவ்வளவு இருந்தா, அவளோட பொண்ணை வீட்டுக்கே கூட்டிட்டு வருவே? இருடா, உன்னைக் கல்யாணத்துக்கு அப்புறம் வச்சுக்கறேன்!' என்று கௌதமைத் திட்டியவள், ''ஓஹ்! உங்களுக்குத் தெரியாதா? இது கௌதம் கூடப் படிச்ச வர்ஷனாவோட பொண்ணு தானேன்னு கேட்டேன்?'' என்று வெகு சிரத்தை(?)யாகத் தெளிவுபடுத்தினாள்.

''அப்படியா? ஃபிரெண்டோட' பொண்ணுன்னு தெரியும். அது வர்ஷனா தான்னு தெரியாது!'' என்றவர், 'அந்தப் பொண்ணுக்கு ஒரு குழந்தை வேற இருக்கா? இவன் மனசுல என்னதான் நினைச்சுட்டு இருக்கான்? வரட்டும்.. வச்சிக்கிறேன்..' என்று மனதிற்குள் கௌதமைத் திட்டிக் கொண்டிருந்தார்.

அவரின் முகத்தில் இருந்தே அவரின் மனதைப் படித்து சந்தோஷமடைந்தவள், மேலும், ''இவளும் இவங்க அம்மாவும், அடிக்கடி மதுவைப் பார்க்க நம்ம வீட்டுக்குக் கூட வருவாங்களே!'' என்று அடுத்த அதிர்ச்சியை அவருக்குக் கொடுத்தாள்.

''என்னது, மதுவைப் பார்க்கவா? எதுக்கு?''

''யாருக்குத் தெரியும்? ஒரு வேளை அண்ணனோட 'ஃபிரெண்ட்' தங்கைக்கும் 'ஃபிரெண்டோ' என்னவோ?''



என்று, அவரிடம் போட்டுக் கொடுத்து, அவளுக்கு மது மேலிருந்த கோபத்தையும் தீர்த்துக் கொண்டாள்.

''சரிதான்!'' என்று சமாளித்தவரின் முகத்தில் நிரந்தரமாக ஒரு குழப்ப ரேகை குடி கொண்டதைப் பார்த்த ஹர்ஷினியின் மனம் குதியாட்டம் போட்டது. ஹர்ஷினிக்கு, முதலில் கௌதம் இவர்களிடம் வர்ஷனாவைப் பற்றிக் கூறிவிட்டானா என்று தெரிய வேண்டி இருந்தது. அப்படித் தெரிந்திருந்தால் இவர்களின் எண்ணம் பற்றியும் அறிய வேண்டி இருந்தது. இதுவரைக்கும் கிடைத்த பதில் ஹர்ஷினிக்கு உவப்பாகவே இருந்தது. கௌதம் வர்ஷனாவைப் பற்றிக் கூறினாலும், இவர்களுக்கு அதில் விருப்பமில்லை என்பதைப் புரிந்து கொண்டவள், வந்த விஷயத்தை வெற்றிகரமாக முடித்தகளிப்பில் அங்கிருந்து கிளம்பினாள்.

கிளம்புமுன், ''அத்தை! சீக்கிரமா இங்க நம்ம வீட்டுக்கு வரலாம்னு நினைச்சா. கௌதமிற்கு இப்படி வேலை வந்துடுச்சே? ம்ம்ம்... மாமா வந்தா சொல்லிடுங்க,'' என்று வேறு சலித்துக் கொண்டு விடைபெற்றாள்.

''இன்னும் கொஞ்ச நாள்தானே? சீக்கிரமாப் போயிடும்,'' என்று அவளுக்குச் சமாதானமாகச் சொல்லிச் சமாளித்து அனுப்பி வைத்தார்.

ஹர்ஷினி சென்றவுடன், நட்சத்ரா ராஜேஸ்வரியிடம், ''பாட்டி!'' என ஓடி வந்தாள். நட்சத்ரா யாரென்று தெரிந்தவுடன் அவருக்கு அவளிடம் ஒரு ஒதுக்கம் வந்தது. அவள் கேட்ட கேள்விக்கு இப்பொழுது ஒழுங்காகப் பதில் சொல்லாமல் மௌனமாக இருந்தார். நட்சத்ராவும் அவரை நச்சரிக்க ஆரம்பிக்க, அவளிடம் எரிந்து வேறு விழுந்தார். இத்தனை நேரம் நன்றாக இருந்தவர் இப்பொழுது ஏன்

இப்படிக் கோபமாக இருக்கிறார் என்பதை அறியாத நட்சத்ரா, அரண்டு, மிரண்டு நின்றாள். சரியாக அதே சமயம் வெளியில் சென்றிருந்த ஸ்ரீனிவாசன் வீட்டுக்குள் நுழைந்தார். வந்தவர், ராஜேஸ்வரியிடம் அவரின் செயலுக்குக் கடிந்தும் கொண்டார்.

''என்ன ராஜி இது? இப்படியா சின்னக் குழந்தை கிட்ட நடந்துக்கறது? அவ எவ்வளவு பயந்துட்டா பாரு!'' என்று அவரிடம் சொன்னவர், நட்சத்ராவைத் தன்னிடம் அழைத்து என்னவென்று விசாரித்தார். தனக்கு ஒரு துணை கிடைத்தவுடனே நடந்ததை மறந்தவள் போல அவரிடம் கேள்வி கேட்க ஆரம்பித்தாள். அவளுக்குச் சளைக்காமல் பதிலளித்தவர், சற்று நேரம் கழித்து அவர் மனைவியிடம், அவர் ஏன் அவ்வாறு நடந்து கொண்டார் என்று விசாரித்தார்.

இதற்காகவே காத்துக் கொண்டிருந்த ராஜேஸ்வரி, அனைத்தையும் கொட்டி முடித்தார். அதைக் கேட்ட ஸ்ரீனிவாசன், ''அவன் மேல இருக்கிற கோபத்துக்கு இந்தக் குழந்தை என்ன பண்ணும்? பாவம்! நீ செஞ்சது கொஞ்சமும் சரியில்லை!'' என்றவர், ''அவன் வரட்டும். அவனிடம் விசாரிக்கலாம். இப்போ எனக்குப் பசிக்குது. சாப்பாடு எடுத்து வை!'' என்று அத்துடன் முடித்துக் கொண்டார்.

ராஜேஸ்வரிக்கோ, மதுவுக்கு இது எதுவரை தெரியும் என்று அறிய வேண்டி இருந்தது. ஸ்ரீனிவாசன் சாப்பிடும் வரை காத்திருந்தவர், நட்சத்ராவை அவருடைய கண் காணிப்பில் விட்டுவிட்டு மதுவை அழைத்தார்.

''மது! உனக்கு வர்ஷனாப் பொண்ணை எப்படித் தெரியும்?'' என்று பட்டென்று கேட்டார்.



இதைக் கேட்ட மதுவோ அதிர்ந்து, 'இந்த அண்ணன் எல்லாத்தையும் சொல்லிட்டாரா? எனக்குத் தெரியும் என்கிறதையும் சொல்லிட்டாரா? இருக்காது. அப்படி இருந்தா அம்மா எதுக்கு என்னை விசாரிக்கறாங்க. சரி! எதோ சமாளிப்போம்!' என்று யோசித்தவள், ''வர்ஷனா, ஓஹ்...! அண்ணனோட 'கிளாஸ்மேட்'டா? அவங்களை அண்ணன் ஒரு தடவை அறிமுகப்படுத்தி வச்சாங்க. பார்க்கறப்போ அடிக்கடி பேசிப்போம். ஏன்மா?'' என்றாள்.

''உனக்கு அதைத் தவிர வேற ஒண்ணும் தெரியாதா? அவ எதுக்கு உங்க வீட்டுக்கு அடிக்கடி வரா?''

அதைக் கேட்டு அதிர்ந்தவள், 'அம்மாவுக்கு எப்படித் தெரியும்?' என்று எண்ணிக் கொண்டிருக்கையிலேயே, ''என்ன மது? பதிலைக் காணோம். அவளும், அவ பொண்ணு நட்சத்ராவும் அங்க அடிக்கடி எதுக்கு வராங்க? நீயும் இதற்கு உடந்தையா?'' என்று மறுபடியும் கேட்டார்.

அதற்குள் சுதாரித்துக் கொண்டவள், ''அம்மா! பார்த்துப் பழகி 'ஃபிரெண்ட்ஸ்' ஆயிட்டோம். நான் இப்போ கர்ப்பமா இருக்கறதுனால அவங்ககிட்ட நிறைய 'டிப்ஸ்' கேட்பேன். அவ்வளவுதான். 'ஃபிரெண்ட்ஸ்' வீட்டுக்கு வருவதற்கு எல்லாம் காரணம் இருக்குமா என்ன? ஆமா, எதுக்கு நான் உடந்தைன்னு கேட்கறீங்க? எனக்கு ஒண்ணும் புரியலை?'' என்று புரியாதவாறு கேட்டாள்.

''ஓஹ்! அதுவா? உன்னோட அண்ணனுக்கு ஏன் தான் புத்தி இப்படிப் போகுதோ?'' என்று ஹர்ஷினியுடன் நடக்கவிருந்த நிச்சயத்திலிருந்து, அவன் வர்ஷனாவைக் கல்யாணம் செய்து கொள்ளக் கேட்டதுவரை கூறியவர், ''அந்த ஹர்ஷினிப் பொண்ணு இதைக் கேள்விப்பட்டா, மனசு எவ்வளவு சங்கடப்படும்? ஹர்ஷினி

மனசுல ஆசையை விதைச்சிட்டு. இப்போ இவனை, பார்த்ததும் மனசு மாறிட்டான்!'' என்று புலம்பினார்.

''அம்மா! அண்ணன் அப்படி எல்லாம் பண்ண மாட்டார். அவரா வந்து உங்ககிட்ட ஹர்ஷினியைக் கல்யாணம் பண்ணிவையுங்கன்னு சொன்னாரா? நீங்களாத்தானே ஹர்ஷினி சொன்னான்னு முடிவு பண்ணினீங்க. இதுல அண்ணனோட தப்பு எங்கே?'' என்று பதிலளித்தவள், இதற்கு மேல் இனி இவரிடம் அண்ணனுக்குத் தெரியாமல் பேசுவது நல்லது இல்லை என்று யோசித்துப் பேச்சை மாற்றினாள். ''சரி. அதை விடுங்க! வர்ஷனா இங்க வீட்டுக்கு வந்தது உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்றாள், விடை தெரிந்து கொள்ளும் ஆர்வத்துடன்.

''ஹர்ஷினி இப்போ இங்க வந்திருந்தா. நட்சத்திராவை இங்க பார்த்துட்டு அவதான் சொன்னா. சரி..சரி.. நான் சொன்ன விஷயத்தைப் பத்தி மாப்பிள்ளைகிட்ட எதுவும் சொல்லாத!'' என்று ரகசியக் குரலில் சொன்னவர், ''சரி. மது! நாம அப்புறமாப் பேசலாம்,'' என்றவாறு தொலைபேசியை வைத்தார்.

'நட்சத்ரா நம்ம வீட்ல இருக்காளா? ஏன்?' என்று யோசித்த மது, தாயிடம் கேட்பதை விட அண்ணனிடம் கேட்பதே மேல் என்றுணர்ந்து, தன் அண்ணனை அழைத்தாள். மது அழைத்தவுடன் பேசியை எடுத்த கௌதம், ''மது! என்னம்மா இந்த நேரத்துல? நல்லா இருக்கறதானே?'' என்று அக்கறையுடன் விசாரித்தான்.

''நான் நல்லாதான் இருக்கேன். சரி, நீங்க இப்போ 'பிஸி'யா இருக்கீங்களா? இருந்தா நான் அப்புறம் அழைக்கிறேன்,'' என்றவளிடம், ''இல்ல. சொல்லுடா!'' என்றான்.



தன் தாய் அழைத்ததைப் பற்றிக் கூறியவள், ''நீங்க எப்போ அப்பா-அம்மாகிட்ட சொன்னீங்க? நீங்க என்கிட்டே அதைப் பத்தி ஒண்ணும் சொல்லலை?'' என்றாள் குறைப்பட்டுக் கொண்டு.

''மது! நீ இப்படி இருக்கும் போது உன்னைக் கஷ்டப்படுத்தக் கூடாதுன்னு தான் நான் சொல்லலை. என்னோட பிரச்சனையை நானே சமாளிக்கணும்ன்னு தான். உன்கிட்ட சொல்லக் கூடாதுன்னு இல்லை. அதுவும் இல்லாம வசந்த் வேற என்கிட்டே ஹர்ஷினியைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லிக் கொஞ்ச நாளைக்கு முன்னாடி கேட்டானே. அதான், நான் உன்கிட்ட ஏதாவது சொல்லி, நீ எனக்கும் வசந்துக்கும் நடுவுல மாட்டிட்டு முழிக்கக் கூடாதுன்னு தான்டா, மதுக்குட்டி. சொல்லலை,'' என்றான் அவசரம் அவசரமாக, தன் தங்கைக்குப் புரிய வைத்துவிடும் எண்ணத்தில்.

''ஐயோ! அண்ணா! அண்ணா! நான் வசந்த்கிட்ட உங்களோட காதலைப் பத்தியும் உங்களோட எண்ணத்தைப் பத்தியும் சொல்லியாச்சு. நீங்க பெங்களூருல இருந்து வந்தவுடனே, அவரே உங்ககிட்ட வந்து பேசணும்ன்னு சொன்னார். நீங்க ரெண்டு பேரும் வேலைல 'பிஸி'யா இருக்கறதுனால பேச முடியலைன்னு சொல்லிட்டு இருந்தார். ஆனா, இது என்ன புதுக் கதையா இருக்கு! ஹர்ஷினிக்கும் உங்களுக்கும் நிச்சயம் நடக்க ஏற்பாடு நடந்துக்கிட்டு இருக்கா? அதுவும் எங்களுக்குத் தெரியாம?''

''எல்லாம் ஹர்ஷினியோட வேலையாத்தான் இருக்கும். வசந்த்கிட்ட சொல்லி ஒண்ணும் நடக்கல என்றதும் உங்களுக்குக் கூடத் தெரியாம திட்டம் போட்டிருக்கா.

உனக்குத் தெரிஞ்சா நீ என்னிடம் சொல்லிடுவியே. நான் அன்று உன்கூட, உன்னோட வீட்ல வந்து பேசினப்போ ஹர்ஷினி அதைக் கேட்டிருக்கணும்ன்னு தோணுது மது. அவளோட காரை நான் வெளியில பார்த்தப்பவே எனக்குச் சந்தேகம் வந்திருக்கணும். சரி! இப்போ அதைப் பத்திப் பேசி ஒண்ணும் ஆகப் போறதில்லை. மேற்கொண்டு என்ன பண்ணலாம் என்பது பற்றி யோசிக்கலாம். நீ மனசைக் குழப்பிக்காத.''

''*சரிண்ணா! ஆனா, நட்சத்ராவை எதுக்கு அங்க அம்மாகிட்ட விட்டிருக்கீங்க?''*

''ஒஹ்! வர்ஷனாவுக்கு உடம்புக்குச் சரியாகிறவரைக்கும் அம்மாகிட்ட விடலாம் என நினைச்சேன். இப்போ அது தப்புன்னு புரியுது. நிச்சயம் தள்ளிப் போனதும், ஹர்ஷினி வேவு பார்க்கறதுக்குன்னே நம்ம வீட்டுக்குப் போயிருக்கான்னு நினைக்கிறேன். சாயந்திரம் வீட்டுக்குப் போனதுக்கு அப்புறம் தெரியும் என்ன நடக்கப் போகுதுன்னு. சரிம்மா! இப்போ வேலை முக்கியம். மிச்சத்தை அப்புறம் பார்க்கலாம். நீ கவலைப்படாத. சரியா?'' என்று தன் தங்கைக்கு விளக்கிவிட்டு அவளைக் கவலைப்பட வேண்டாம் என்று கூறிப் பேசியை வைத்தான்.

அன்றிரவு வீட்டுக்குச் சென்றவனை, அவன் பெற்றோர்கள் பிடித்துக் கொண்டார்கள். சாப்பிட்டவாறே, பிரச்சனை வெடிக்கும் என்று எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தவன், நட்சத்ராவை உறங்க வைத்துவிட்டு வந்த தாயின் முகத்தை நிமிர்ந்து பார்த்தான். அவன் தாயும் அதைப் பொய்யாக்காமல், ''நீ மனசுல என்ன தான் நினைச்சிட்டு இருக்க கௌதம்? எங்ககிட்ட வேலையைக் காரணம் காட்டி நிச்சயத்தைத் தள்ளி



வைக்கச் சொல்லிட்டு, அந்தப் பொண்ணு வீட்டுக்குத் தினமும் போயிட்டு இருக்கியா? அவளுக்கு ஒரு பொண்ணு இருக்குங்கறதை நீ சொல்லவே இல்லையே!'' என்று ஆரம்பித்தார்.

ஸ்ரீனிவாசனும், ''என்னப்பா கௌதம் இதெல்லாம்? நட்சத்ரா யாருன்னு ஏன் எங்ககிட்ட இருந்து மறைச்ச?'' என்றார்.

''அப்பா! நான் மறைக்கணும்னு மறைக்கலை. வர்ஷனாவுக்கு உடம்புக்கு முடியலை. கஷ்டப்படற அந்த நேரத்துல, ஒரு 'ஃபிரெண்ட்டு'க்கு உதவி செய்யறோம் எனத் தான் நினைச்சேனே தவிர வேற எந்த எண்ணமும் என் மனசுல இல்லை. கஷ்டப்படறவங்களுக்கு உதவி செய்யணும் என நீங்க கத்துக் கொடுத்ததைத்தான்ப்பா நான் கடைப்பிடிச்சேன். அதை ஏன் தப்புன்னு சொல்லறீங்க?'' என்று தன் தந்தை கத்துக் கொடுத்ததை முன்னிறுத்தி விளக்கினான். விஷயம் மதுவின் மூலம் முன்பே தெரிந்திருந்ததால், பலமுறை ஒத்திகை பார்த்து, யோசித்துப் பேசுவதனால் நிதானமாகவும் தெளிவாகவும் அவனால் பேச முடிந்தது.

அதைக் கேட்ட ஸ்ரீனிவாசன், ''நீ அந்தப் பொண்ணுக்கு உதவி செஞ்சதைப் பத்தி நான் இப்போ ஒண்ணும் சொல்லலை. ஆனா, நீ நட்சத்ரா யாரோட பொண்ணுன்னு எங்ககிட்ட சொல்லி இருக்கலாமே?'' என்று அவர் பிடியிலேயே இருந்தார்.

''அப்பா! நீங்களே நல்லா யோசிங்க. நேத்து நட்சத்ராவை நான் கொண்டு வந்து விட்டப்போ, அம்மா அவளை எப்படிக் கவனிச்சுக்கிட்டாங்க! இப்போ விஷயம் தெரிஞ்சதும் எப்படி ஒரு ஒதுக்கம் தெரியுதுன்னு பாருங்க.

அதனாலதான் சொல்லலை. நானும் வந்ததுல இருந்து யோசிச்சுப் பார்த்தேன். அம்மா ஏன் இப்படி வித்தியாசமா நடந்துக்கறாங்கன்னு. இப்போதானே எனக்குப் புரியுது. நட்சத்ரா சின்னக் குழந்தை. அவள்கிட்ட எப்படி நம்ம விருப்பு, வெறுப்பைக் காண்பிக்க முடியும்? அதனால தான்ப்பா சொல்லலை. ஆனா, உங்களுக்கு எப்படித் தெரிஞ்சது, நட்சத்ராவைப் பத்தி?'' என்று தெரியாததைப் போலக் கேட்டான்.

இந்தக் கேள்விக்கு ராஜேஸ்வரி, ''எப்படியோ தெரியும். யார் மூலமா தெரிஞ்சதுன்னு தெரிஞ்சு நீ என்ன பண்ணப்போற?'' என்று, எங்கே ஹர்ஷினிதான் சொன்னாள் என்று தெரிந்து இவன் கோபம் அவள் மேல் திரும்பி விடுமோ என்று பயந்து போய் அவ்வாறு கூறினார்.

அதைக் கேட்டுச் சிரித்தவன், 'ஹர்ஷினியைக் காட்டிக் கொடுக்க மனம் இடம் கொடுக்கலையா உங்களுக்கு!' என்று யோசித்து, ''ஒண்ணும் பண்ணப் போறதில்லை. ஆனா, வேலை வெட்டி இல்லாம யாரு வந்து உங்ககிட்ட மெனக்கெட்டு இந்த விஷயத்தைச் சொன்னாங்கன்னு யோசிச்சேன். அவ்வளவுதான்!'' என்று பதிலளித்தான்.

''உனக்கு வேண்டாத விஷயம் என்றால், வந்து சொன்னவங்களை வேலை இல்லாதவங்கன்னு சொல்லுவியா?'' என்று அவனுக்கு ஒரு குட்டு வைத்து விட்டு, ''இங்க பாரு கௌதம், நீ என்ன பண்ணுவியோ ஏது பண்ணுவியோ எங்களுக்குத் தெரியாது... இந்த வீட்டுக்கு ஹர்ஷினிதான் மருமகளா வரணும். வர்ஷனாவைக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு கேட்டப்போ, அவளுக்குக் கல்யாணம் மட்டும் தான் ஆயிருக்குன்னு நினைச்சேன். ஆனா, அவளுக்குக் கல்யாணம் நடந்து ஒரு குழந்தையும்



வேற இருக்கு. இந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணினா ஊர்ல இருக்கறவங்க என்ன பேசுவாங்கன்னு கொஞ்சமாவது யோசிச்சியா? இதெல்லாம் நமக்கு ஒத்து வராது. சொல்லிட்டேன். முதல்ல நாளைக்கு நட்சத்ராவைக் கொண்டு போய் அவளோட வீட்ல விட்டுட்டு, அதோட இந்த விஷயத்தையும் தலை முழுகிடு. இதுதான் என்னோட முடிவு!'' என்று தன் முடிவை அறிவித்தார் அவன் அன்னை.

''அம்மா! ஊர்ல இருக்கறவங்க ஆயிரம் பேசுவாங்க. அவங்களா வந்து எனக்காக என்னோட வாழ்க்கையை வாழப்போறாங்க. நான்தானே. அப்பா! நீங்களும் இதைக் கேட்டுட்டு சும்மா இருக்கீங்க?'' என்று தன் அன்னையிடம் ஆரம்பித்துத் தந்தையிடம் கேள்வியாக முடித்தான்.

''என்னை என்னப்பா செய்யச் சொல்ற? அம்மா சொன்ன முடிவு தான் என் முடிவும். இதற்கு மேல இதைப் பத்தி பேச ஒண்ணும் இல்லை. எனக்குத் தூக்கம் வருது. நான் போய்ப் படுக்கிறேன்,'' என்று அங்கிருந்து நகர்ந்தார் ஸ்ரீனிவாசன். அவரைப் பின்பற்றி ராஜேஸ்வரியும் அங்கிருந்து நகர்ந்தார்.

'ச்சே! சொல்ல வரதைக் கூட கேட்காம கிளம்பிட்டாங்க. எங்க நான் ஏதாவது சொல்லி அவங்க மனசை மாத்திடுவேன்னு பயந்து நிஜத்தைச் சந்திக்க முடியாம ஓடி ஒளியறாங்க. போங்க... போங்க... எவ்வளவு நாளைக்குன்னு பார்க்கலாம்!' என்று நினைத்தவன், மேற்கொண்டு செய்வதைப் பற்றி யோசித்து மதுவை அழைத்துத் தன் திட்டத்தைக் கூறினான்.

மறுநாள், சனிக்கிழமை மாலை வர்ஷனாவை அழைத்து நலம் விசாரித்துவிட்டுச் சிறிது நேரம் பேசிக்

கொண்டிருந்தவனிடம், ''கௌதம், நட்சத்ராவை இன்று கூட்டிட்டு வந்து விடுங்க. அவ இல்லாம எனக்கு போர் அடிக்குது. அதுவுமில்லாம என்னோட உடம்பு இப்போ குணம் ஆகிடுச்சு. நீங்க செஞ்ச இந்த உதவியே ரொம்ப அதிகம். ரொம்ப தேங்க்ஸ்!'' என்றாள்.

அவள் வேண்டும் என்றே பலமுறை நன்றி கூறித் தன்னை அன்னியப்படுத்துகிறாள் என்று புரிந்து கொண்ட கௌதம், அவள் கேட்டதற்கு மறுப்புத் தெரிவிக்காமல், ''சரி!'' என்று ஒற்றை வார்த்தையில் பதிலளித்தான். அவளிடம் கொடுத்த வாக்குப்படியே, நட்சத்ராவை அவள் வீட்டிற்கு அழைத்துச் சென்றவன், வர்ஷனா விடம் அவளைச் சேர்த்துவிட்டு, நட்சத்ராவிற்கு ஒரு முத்தத்தைக் கொடுத்துவிட்டு உடனே கிளம்பினான்.

உடம்பு சரியில்லாததால் உடல் தளர்ந்து இருந்தவள், கௌதமின் இந்த உதவியினால் மனம் இளகியும் இருந் தாள். அவன் கிளம்புவதைப் பார்த்த வர்ஷனா, ''வந்து.. ஏதாவது சாப்பிடறீங்களா? பசிக்கலையா? அட்லீஸ்ட் ஏதாவது குடிக்கறீங்களா?'' எனக் கேட்டாள். அவளின் உபசரிப்பை, ''வேலை இருக்கு!'' என்று மறுத்தவன், நட்சத்ராவுக்கு 'பய்' சொல்லிவிட்டு உடனே கிளம்பி விட்டான். திட்டமிட்டதைப் போல இன்னும் செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருக்கிறதே.

அவன் கீழே வந்தவுடன், அவனின் கைபேசி அடிக்க, அதை எடுத்து, ''சொல்லுங்க அங்கிள்!'' என்றான்.

''..........''

''அப்படியா? இதோ உடனே கிளம்பி வரேன்,'' என்று சந்தோசமாகக் கிளம்பினான்.



## 20

''முத்தங்களுடன்
வாழ்க்கை மொத்தத்தையும்
உன்னிடம் சமர்ப்பிக்கின்றேன்!
யுத்தம் ஏதும் செய்யாமல்
வாழ்வின் அந்தத்தையும்
என்னிடம் கொடுத்து விடு!
சத்தம் இல்லாமல்
வேடத்தைக் கலைத்து விடு!
உன்னுள் என்னைக்
கலக்க விடு!
புத்தம் புது உலகில்
நித்தமும் வாழ விடு!''

ஊருக்குச் சென்று நான்கு தினங்கள் கழித்துப் பாலாவை அழைத்த அவன் தந்தை, ''பாலா, என்னால இந்த வாரம் அங்க கோவைக்கு வர முடியாதுப்பா. பேசினபடி கடலை 'லோடு' வந்து சேரலை. அதனால கடலை எண்ணெய் அனுப்பறோம்ன்னு சொன்ன கடைகளுக்கு அனுப்ப முடியாது போல இருக்கு. அதைக் கொஞ்சம் பார்க்க வேண்டியிருக்குப்பா. அடுத்த வாரம் கண்டிப்பா வரேன்,'' என்றார்.

''அப்பா! இதுக்கெல்லாம் நீங்க ஏன் அலையறீங்க? வேற யாரையாவது அனுப்ப வேண்டியதுதானே!'' என்றான் தன் தந்தை மேல் இருக்கும் அக்கறையில்.

''நான் எங்கேயும் அலையலை. நான் கூட இருந்தா எல்லா வேலையும் சீக்கிரமா நடக்கும் அல்லவா?''

என்று அவனுக்குப் பதிலளித்தவர், ''பாலா! வேணா
ஒண்ணு பண்ணலாம். அடுத்த வாரம் உன்னோட
பிறந்த நாள் வருதே.. கடந்த எட்டு வருஷமா வெளியூர்ல
தானே கொண்டாடற. இந்தத் தடவை ஊருக்கு வந்து
எங்களோட சேர்ந்து கொண்டாடு. அதுவுமில்லாம,
உனக்கு அடிபட்டதிலிருந்து இங்க பண்ணையில
வேலை செய்யறவங்க உன்னைப் பார்க்கணும்ன்னு
கேட்டுட்டே இருக்காங்க. உன்னை அங்க வந்து பார்க்
கறதா வேற சொன்னங்கப்பா.

''உன் ஒருத்தனுக்காக அவங்களை எல்லாம் எதுக்கு
வீணா அலைய வைக்கணும்ன்னு நான்தான் வேண்டா
மெனச் சொல்லி நிறுத்தி வச்சிருக்கேன். அடுத்த வாரம்
நீ இங்க வந்தா உன் பிறந்த நாளைக் கொண்டாடின
மாதிரியும் ஆச்சு, இவங்க எல்லாம் உன்னைப் பார்த்த
மாதிரியும் இருக்கும். நான் 'ட்ரைவரை' அனுப்பி
வைக்கறேன். நீ அவரோட நம்ம பண்ணை வீட்டுக்கு
வந்திடு. நான் எல்லா ஏற்பாட்டையும் பண்ணிடறேன்.
என்னப்பா சொல்லற?'' என்று கேட்டார்.

''அப்பா! நான் 'டாக்டர்'கிட்ட கேட்டுட்டு இப்படி
'ட்ராவல்' பண்ணலாமான்னு உறுதிப்படுத்திட்டு அப்புறம்
சொல்லறேன்,'' என்றவனிடம், ''அதெல்லாம் நான்
ஊருக்குக் கிளம்பறதுக்கு முன்னாடியே விசாரிச்சுட்டேன்.
இல்லேன்னா உன்னை இப்படித் தனியா அங்க
விட்டுட்டு வருவேனா? அவர் சரின்னு சொல்லிட்டார். இங்க
பக்கத்துலதானே. அப்படின்னா உனக்குச் சம்மதமா?''
என்று ஆர்வமாக விசாரித்தார்.

''சரிப்பா! ஆனா, சனிக்கிழமைக்கு முன்னால என்
னால இங்கிருந்து நகர முடியாது. சனிக்கிழமை மத்தியானம்
வர்ற மாதிரி பார்க்கறேன். அப்போதான் எங்க 'கிளைண்ட்ஸ்'
கிளம்பறாங்க,'' என்றான்.



''ரொம்ப சந்தோசம்ப்பா! சனிக்கிழமையே கொண்டாட
லாம். மத்த ஏற்பாட்டை எல்லாம் நான் பார்த்துக்கறேன்.
நீ வந்துட்டு திரும்பும் போது வேணா உன்கூடவே நான்
வரேன். சரியா?'' என்று குதூகலத்துடன் பேசியை
வைத்தார்.

அடுத்த சனிக்கிழமை, கௌதமிடம் தெரிவித்துவிட்டு
மதியம் ஈரோடுக்குச் சென்ற பாலா, முதலில் தன் தந்தை
யிடம் தான்யாவைப் பற்றிக் கூறுவதற்கு முயன்றான்.
ஆனால், அவன் மேல் அன்பு கொண்ட அவர்களின்
பண்ணையாட்கள், உறவினர்கள் என்று அவன் சென்ற
திலிருந்தே அவனைப் பார்க்க வந்த வண்ணம் இருந்த
தினால் அவனால் தன் தந்தையிடம் தனியாகப் பேச
முடியாமல் தவித்துக் கொண்டிருந்தான்.

அவன் தந்தையோ, வருகிறவர்களை உபசரிக்க, மாலை
யில் நடக்கவிருக்கும் பாலாவின் பிறந்த நாள் விழாவுக்
கெனத் தயார்ப்படுத்த என்று அங்கிருந்த வேலையாட்
களுக்கு உத்தரவிட்டுச் சுழன்று கொண்டிருந்தார். பாலா
தான் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல்
மனதிற்குள் தவித்து, வெளியில் அவர்களுக்காகச்
சிரித்துப் பேசி என இரண்டையும் கன கச்சிதமாகச்
செய்து கொண்டிருந்தான்.

மாலை நேரம் நெருங்க, பாலாவை அவன் அறைக்குச்
சென்று சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டு வரச் சொன்
னார் அவன் தந்தை. அவனோ, ''அப்பா! உங்ககிட்ட
இப்போ பேசணும். கொஞ்சம் தனியா வர்றீங்களா?'' எனக்
கேட்டான்.

''இப்பவா? எனக்கு நிறைய வேலை இருக்குப்பா.
இன்று ராத்திரி பேசலாமே. எங்க போயிடப் போறோம்?
நீயும் அசதியா இருக்கிற. பயணம் செஞ்சு வந்தது வேற.

போய்க் கொஞ்ச நேரம் படுத்துட்டு அப்புறம் கிளம்பி வா,'' என்றவரிடம், ''இல்லப்பா! எனக்கு அசதியா இல்லை. பேசலாம், வாங்கப்பா'' என்று தயங்கினான்.

''சொல்றதைக் கேளு பாலா. உன்னோட முகத்தைப் பார்த்தாலே எனக்குத் தெரியுது - நீ எவ்வளவு அசதியா இருக்கேன்னு. அதுவுமில்லாம எல்லோரும் வர ஆரம் பிச்சிடுவாங்க. ஏன்பா இந்தப் பிடிவாதம்? போ...'' என்று கூறி விட்டு, அங்கு வந்து ஏதோ கேட்ட வேலைக்காரர் களுக்குப் பதிலளித்தவாறே நகர்ந்தார். பாலாவும் வேறு வழியில்லாமல் தன் அறைக்குச் சென்றான்.

சிறிது நேரம் படுக்கலாம் என்று படுத்தவன் அசதியில் நன்றாகவே உறங்கி விட்டான். அவனின் கைபேசியின் சத்தத்தில் தூக்கம் கலைந்து அதை எடுத்தவனிடம், ''பாலா, இன்னுமா தூங்கற? குளிச்சிட்டுக் கிளம்பி வாப்பா. எல்லோரும் வர ஆரம்பிச்சுட்டாங்க,'' என்றார்.

''அப்படியா? இதோ உடனே கிளம்பி வரேன்,'' என்று குளித்துக் கிளம்பிக் கீழே வந்தவன், சற்றும் எதிர்பார்க்காத வண்ணம் அங்கே கௌதமும் வசந்தும் நின்றிருப்பதைப் பார்த்து மகிழ்ச்சியுடன் அவர்களை வரவேற்று, அவர் களுடன் பேசிக் கொண்டிருந்தான்.

''நீங்க ரெண்டு பேரும் வர்றதா எங்கிட்ட சொல்லவே இல்லையே!'' என்று இருவரிடமும் பழைய பாலாவாகிக் கோபித்துக் கொண்டு சண்டை போட்டவன், ''ஏன்டா வசந்த்! உன்னோட ஆபீசை விட்டுட்டு வர எப்படி மனசு வந்தது?'' என்று வசந்த்தை வம்பிற்கும் இழுத்தான்.

''இது அநியாயம்! உன்னோட பிறந்த நாள் விழாவிற்கு நீ எங்களை அழைக்கக் கூட இல்லை. இதுல நாங்க வர்றதைப் பத்தி உன்கிட்ட சொல்லலையா? எங்களுக்கு



வேணும்டா!'' என்ற வசந்திடம், ''சாரிடா! அப்பா ஆசைப் பட்டார்ன்னு தான் இதற்கு ஒத்துக் கொண்டேன். இதற்காகவெல்லாம் உங்களை அங்கிருந்து வரச் சொல் லணுமான்னு தான் சொல்லலை. அதான். கோவிச்சுக் காதீங்க!'' என்றான் உடனே தணிந்து.

''பரவாயில்லை... உங்க அப்பாக்காவது எங்களை அழைக்கணும்ன்னு தோணிச்சே!'' என்ற அவனை விடாமல் சீண்டினான் வசந்த்.

அவனின் சீண்டலில் துணுக்குற்ற பாலா, ''நான் அழைச் சாத் தான் நீ வரணுமா? நாளைக்கு எனக்குப் பிறந்த நாள்ன்னு உனக்கு முன்னாடியே தெரியும் தானே? தெரிஞ்சு நீயே கிளம்பி வந்திருக்க வேண்டியது தானே?'' என்றான்.

அதை எதிர்பார்த்த வசந்தும், ''அப்பாடா! இப்பதான் பழைய பாலா திரும்பி வர்றான்!'' என்று கௌதமிடம், மெல் லிய குரலில் முணுமுணுத்தவன், பாலாவிடம், ''உனக்கு 'சர்ப்ரைஸ்' கொடுக்கலாம்ன்னு இவ்வளவு தூரம் மெனக்கெட்டு வந்தா சண்டை போடறியா?'' என்றான்.

''என்னது மெனக்கெட்டு வந்தியா? அப்படி ஒண்ணும் யாரும் எனக்காக மெனக்கெட்டு வர வேண்டாம். இப் போவே கிளம்பு!'' என்று வசந்திடம் முறுக்கிக் கொண் டவன், கௌதமைக் கைப்பிடித்து வேறு பக்கம் இழுத்துச் சென்றான்.

சிரித்தவாறே அவர்களைத் தொடர்ந்த வசந்த், ''சரி! அதுதான் வந்துட்டோமே. நீ சமைக்கலைன்னு நல்லாத் தெரியும். அதனால, வந்ததுக்கு தைரியமா சாப்பிட்டுட் டாவது கிளம்பறோம்'', என்றான்.

''ஆமா, இவ்வளவு பேசறியே, எனக்கு என்ன 'கிஃப்ட்' வாங்கிட்டு வந்த? நீ எல்லாம் ஒரு ஃபிரெண்டா?

மன்னிச்சிடுன்னு கேட்டதற்கு அப்புறமும் சண்டைக்கு வந்தா?'' என்று சண்டைக்கு நின்றான்.

''உனக்கு 'கிப்ஃட்' தானே? பொறுத்திருடா... உனக்குப் பிடிச்ச, நீ எதிர்பார்க்காத 'கிப்ஃட்' தான் உனக்கு இன்று கொடுக்கப் போகிறோம்!'' என்று பொடிவைத்துப் பேசினான். அவனின் பொடியில் தும்மல் கூட எழாமல் அவனுடன் சண்டை போடுவதிலேயே முனைப்பாக இருந்தான் பாலா. இப்படியே அவனை வம்பு செய்து கொண்டிருக்க, கௌதம் எப்பொழுதும் போல அவர்களை ஒரு சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான். பாலா எவ்வளவு மன்றாடியும் வசந்தின் வாயிலிருந்து வேறெதையும் வாங்க முடியவில்லை.

விழாவிற்கெனச் சில நண்பர்களையும் உறவினர்களையும் அழைத்திருந்தார் வெங்கடேசன். அழைத்தவர்களில் பலர் வந்து பாலாவிற்கு வாழ்த்துத் தெரிவித்து, அவனின் உடல் நலத்தைப் பற்றி விசாரித்தனர். அனைவரிடமும் அவன் பேச வழிவகுத்துக் கௌதமும் வசந்தும் ஒரு ஓரமாக ஒதுங்கிக் கொண்டனர்.

விழா சிறப்பாக நடைபெற, உணவு நேரமும் வந்தது. அனைவரும் ஒருவருக்கொருவர் அரட்டை அடித்துக் கொண்டு சாப்பிட்டு முடித்தனர். அந்த மகிழ்ச்சிகரமான தருணத்தில், வெங்கடேசன் பாலாவிடம் வந்து, ஒரு தம்பதியை அறிமுகப்படுத்தி, அவன் மனதில் நெருப்பை அள்ளிக் கொட்டினார்.

''பாலா! நான் உனக்கு ஒரு பொண்ணு பார்த்ததா சொன்னேன் இல்லை. இவங்கதான் நான் பார்த்த பொண்ணோட அம்மா கமலா, அப்பா சுப்ரமணியம். இவரைத் தான் ஏற்கெனவே பார்த்தியே!'' என்று முகமெல்லாம்



பூரிப்பில், அவர்களைப் பாலாவிடம் அறிமுகப்படுத்தி வைத்தவர், ''பொண்ணும் இங்க வந்திருக்கா. இங்க தானே எங்கோ இருந்தா?'' என்று கண்களால் துழாவி, அவளைக் காணாமல், ''இருப்பா, இன்னும் கொஞ்ச நேரத்துல உனக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறேன்'', என்றார். அவர்களும் பாலாவிடம் நன்றாகப் பேசிக்கொண்டிருக்க, இவன்தான் முகத்தை ஒரே சீராக வைக்கத் திண்டாடிவிட்டான்.

அடுத்துக் கிடைத்த, இல்லை... அவனாக ஏற்படுத்திக் கொண்ட தனிமையில், ''அப்பா! இவங்களை எதுக்கு இப்போ இங்க வரவச்சீங்க? நான்தான் கல்யாணம் வேண்டாம்ன்னு சொன்னேனே. நடக்காத ஒண்ணுக்கு எதுக்கு அவங்களுக்கு வாக்குக் கொடுத்து, பின்னாடி அவங்களையும் சங்கடப்படுத்தணும்? நான் சொல்றதைக் கேளுங்கப்பா'', என்றான் பாலா, அவன் தந்தையிடம்.

அவரோ, ''நான் முடிவு செஞ்சா செஞ்சதுதான். வீணாக எல்லாம் அவங்க கிட்ட வாக்குக் கொடுக்கலை. நிச்சயத்துக்கு நாள் குறிக்கறதுக்குத்தான் வரச் சொன்னேன். பொண்ணோட அம்மா உன்னை நேர்ல பார்க்கவே இல்லைன்னு சொன்னாங்க. அதான் இப்போ கூப்பிட்டா விழாவுக்கு வந்த மாதிரியும் ஆச்சு, உன்னைப் பார்த்த மாதிரியும் ஆச்சு!'' என்று கூறி, அவன் மனதில் தீக்கங்குகளைக் கூடை கூடையாக அள்ளிக் கொட்டினார்.

''அப்பா! என்ன சொல்றீங்க? நான்தான் எனக்கு இஷ்டம் இல்லைன்னு சொன்னேனே. என்கிட்டே கேட்காம எதுக்கு அவங்களை இப்போ வரச் சொன்னீங்க? நீங்க யார்கிட்டேயும் இதைப் பத்தி ஒண்ணும் சொல்லாதீங்க. நானே உங்ககிட்ட இதைப் பத்தி சொல்லலாம்னு தான் இருந்தேன். நான் வேற ஒரு பெண்ணை மனசார

விரும்பறேன்!'' என்றவனை அவசரமாக இடைமிட்டு,

''ஓஹ்! நீ ஒரு பெண்ணை மனசார விரும்பறியா? கல்யாணத்தைத் தடுத்து நிறுத்த இன்னொரு வழி கண்டுபிடிச்சிட்டியா? நீ சொல்றதை எல்லாம் இன்னும் நம்பிகிட்டு இருப்பேன்னு நினைச்சியா? நீ சொன்னதை இதுவரைக்கும் கேட்டது போதும்'', என்றார் அவன் தந்தை.

'ஐயோ! நான் சொன்னது எனக்கே திரும்பி வருதா?' என்று மானசீகமாகச் சுவரில் முட்டிக் கொண்டு, ''அப்பா...'' என்று அவன் தொடரும் முன்பே,

''இப்போ நான் சொல்லறதை நீ கேளு. இனிமேல் உன்னைத் தனியா விடறதுக்கு எனக்கு மனசு வரலை. நீ பண்ணின காரியத்துக்கு நான் எவ்வளவு துடிச்சுப் போயிட்டேன் தெரியுமா? அப்படி என்ன சிந்தனை கார் ஓட்டும் போது? உனக்குன்னு ஒரு துணை தேடிக் கொடுத்திட்டா அவ உன்னைப் பார்த்துக்குவா. எனக்கும் நிம்மதியா இருக்கும்!'' என்று இதுவரை மனதில் அடக்கி வைத்திருந்ததை அவனிடம் கொட்டினார்.

''அப்பா! என்னைப் புரிஞ்சுக்கோங்க. நிஜமாவே ஒரு பெண்ணை மனசார விரும்பறேன். உங்களுக்கும் அவளை நல்லாத் தெரியும்''.

''இங்க பாருப்பா! எல்லோர் முன்னாடியும் என்னை அவமானப்படுத்தாத. போ! மேலே உன்னோட அறையில, பொண்ணு உனக்காக வாங்கிட்டு வந்த புதுத் துணியை வச்சிருக்கேன். போய் மாத்திட்டு வா. அவ்வளவுதான்'', என்று சொல்லி, விடுவிடுவென அங்கிருந்து நகர்ந்தார்.

தன் தந்தையிடம் பேசி விளக்க முடியாமல் போகவே, கௌதமையும் வசந்தையும் கண்களால் அலசினான். அவர்கள் கண்களுக்கு அகப்படாமல் இருக்கவே,



கௌதமின் கைபேசிக்கு அழைத்தான். பதிலில்லாமல் போகவே, சலித்தவாறே வசந்தின் கைபேசிக்கு அழைத் தான். அங்கும் பதில் வராமல் போகவே, கோபத்துடன், 'கூப்பிட்டா எடுக்காம, இவங்களுக்கு எல்லாம் எதுக்கு போன்?' என்று அவர்களைத் திட்டியவாறே தன் அறைக் குச் சென்று ஒரு முடிவுடன் தான்யாவை அழைத்தான்.

அவளும் 'பேசியை' எடுக்காமல் அவனைச் சோதிக் கவே கோபத்தில் அவனின் கைபேசியைத் தூக்கிப் படுக் கையில் எறிந்தான். அதே சமயம் அவன் அறைக் கதவை யாரோ தட்டும் ஓசைகேட்டதும், 'இப்போ யார் இங்க?' என்று யோசித்தவாறே பதிலளிக்க வாயைத் திறப்பதற் குள், கதவைத் திறந்து கொண்டு வந்தவளைப் பார்த்து வாயடைத்துப் போனான் பாலா.

கையில், அன்று அவன் தந்தை அவனிடம் பார்க்கு மாறு கொடுத்த புகைப்படக் 'கவரை' ஏந்தியவாறு வந் தவள், ''அங்கிள் உங்க கிட்ட இதைக் கொடுத்துக் கீழே வரதுக்கு முன்னாடி இதைப் பிரிச்சிப் பார்க்கச் சொன் னார். அவர் சொல்றபடி கேட்டா எல்லாம் நல்லதா நடக் கும்ன்னு சொல்லச் சொன்னார்'', என்று, கையில் இருந்த கவரை அவன் மேஜையின் மேல் வைத்தவள், வேறு யாருமில்லை. சாட்சாத் தான்யாவேதான்.

அதைக் கேட்டவன், ''நீ எப்படி இங்க வந்த? உன்னை யாரு இங்க வரச் சொன்னது?'' என்றான் குழப்பத்துடன்.

''அங்கிள்தான் உங்க பிறந்த நாள் விழாவிற்கு அழைத்தார். அதனால தான் வந்தேன். மெனி மெனி ஹாப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் தே டே (Many many happy returns of the day)'', என்று அவனின் கேள்விக்குப் பதிலளித்துப் பின் வாழ்த்தியவளிடம்,

"சந்தோசம்! அது ஒண்ணுதான் இங்கே குறைச்சல்!" என்று சலித்தவன், "தான்யா! ஏன் என்னை இப்படி உயிரோட கொல்ற? என்னால முடியலை... மனசு வலிக்குது. சும்மா இருந்தவனோட மனசுல ஒரு பாறாங்கல்லை எறிஞ்சிட்டு இப்போ அதைப் பார்த்துச் சிரிச்சிட்டு இருக்கியா? உனக்கும் என்மேல காதல் இருக்குதுன்னு எனக்குத் தெரியும். நீ ஏன் தயங்கறேன்னும் எனக்குத் தெரியும். ஆனா, இன்னும் என் மேல உனக்கு நம்பிக்கை வரலை. அப்படித்தானே? நான் ரொம்பவெல்லாம் கெட்டவன் இல்லை. என்னை நம்புடா. 'ப்ளீஸ்'! இத்தனை நாள்ல ஒரே ஒரு தடவையாவது என்னை நம்புனியா இல்லையா? நான் அப்படி என்ன தப்புப் பண்ணினேன்?" என்று அவளிடம் நெருங்கினான்.

"நீங்க பெரிய தப்பு பண்ணிட்டீங்க. ஆனா..." என்று அவள் மேற்கொண்டு பேசும் முன்னரே, "ம்ஹூம்... நீ என்னை மன்னிக்கறதா இல்லை. அப்படித்தானே? பரவாயில்லை. ஆனா, நீ என்னை மன்னிச்சாலும், மன்னிக்கலைன்னாலும் என்னோட காதல் எப்போதுமே மாறாது. நீ இப்போ கேட்டாலும் சொல்லறேன். எப்போக் கேட்டாலும் சொல்லறேன், உன்னை.. உன்னை மட்டும் தான் நான் காதலிக்கறேன்," என்று பேசிக் கொண்டே போனவன் கடைசியில்,

"அதுதான் என்னை நம்பலையே, இப்போ எதுக்கு என்னோட அறைக்கு வந்த? நான் இன்னும் உயிரோட தான் இருக்கேனான்னு பார்க்க வந்தியா? கவலைப்படாதே. நான் உயிரோட தான் இருப்பேன். நான் என் கட்டுப் பாட்டை இழந்து உன்னை ஏதாவது செய்யறதுக்குள்ளே இங்கிருந்து கிளம்பறியா?" என்று அவளைத் துரத்தினான்.



"பாலா! ஏன் இப்படி பேசறீங்க?" என்று அவள் பதறியதைக் கவனிக்காமல், முதல் முறையாக இல்லை மூன்றாம் முறையாக அவன் பெயரைச் சொல்லி அழைத்ததையும், அவனிருந்த தவிப்பில், கருத்தில் கொள்ளாமல், "நீ முதல்ல இங்கிருந்து கிளம்பறியா?" என்று அவளைத் துரத்துவதிலேயே முனைப்பாக இருந்தான்.

அவன் சொன்னதற்குப் பதில் அளிக்காமல், அவர்களின் இடையே இருந்த தூரத்தைக் குறைத்தவள், பாலா எதிர்பார்க்காத காரியத்தைச் செய்தாள். அவன் அருகில் வந்தவள், அவன் அணிந்திருந்த சந்தன நிறச் சட்டையில் 'மார்க்கரை' வைத்து எதையோ எழுதினாள். 'நான் என்ன சொன்னேன். இவ என்ன பண்ணிக்கிட்டு இருக்கா? எதுக்கு என்னோட சட்டையில கிறுக்கிட்டு இருக்கா?" என்று குழம்பினான்.

இத்தனை நாட்களில் தன்னவளை இவ்வளவு அருகில் பார்க்காதவன், இன்று அவளின் அருகாமையில் மயங்கி நின்றதோடல்லாமல், அவன் மனமும், மூளையும் கிறுகிறுத்தும் போனது. அவளை அப்படியே அணைத்து முத்தமிட வேண்டும் என்று மனதில் தோன்றியதை, 'ஏற்கனவே ஒண்ணும் சொல்லிக்கற மாதிரி இல்லை. இதுல இது வேறயா?' என்று அவன் மனதையும் எண்ணத்தையும் மிகவும் கடினப்பட்டுத் தணிக்கை செய்தவன், "தான்யா! இங்கிருந்து உன்னைப் போகச் சொன்னேன். அதை விட்டுட்டு நீ என்ன பண்ணிட்டு இருக்கிற?" என்று கேட்டான். அவன் கேட்டது அவன் காதுகளுக்கு எட்டவில்லை. இருந்தும், அவனருகில் இருந்த தான்யாவிற்கு மிகத் துல்லியமாகக் கேட்டது.

அவன் கேட்டதுக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்பதைப் போல அவள் நிதானமாக எழுதி முடித்து

விட்டு, கைகளைக் கட்டிக்கொண்டு, அவனை முதல் முறையாகக் காதலுடன் பார்த்து முறுவலித்தாள். 'தான்யா! என்னைப் பார்த்துச் சிரிக்கிறாளா? நான் கனவு கினவு காண்கிறேனா?' என்று மயங்கி விழுந்து விடாத குறையாக, அவளின் இதழ்களின் விரிப்பில் மயங்கினான். பின் ஒரு உந்துதலில், அவள் எழுதியதைப் படிக்க முயற்சி செய்தவன் படிக்க முடியாமல் போகவே, உள்ளே பணியன் அணிந்திருந்த தைரியத்தில், அவளிருப்பதைச் சிறிதும் பொருட்படுத்தாமல் மளமளவென்று சட்டையைக் கழற்றி, அவள் எழுதியதைப் படித்தான். படித்தவன் இன்ப வெள்ளத்தில் தத்தளித்தான்.

''உசுரே போகுதே! உசுரே போகுதே, நீ இப்படி தவிக்கையில!

மாமன் கையில மனசைத் தாரேன் உண்மையிலே!

-வித் லவ், தான்யா!'' என்று எழுதியிருந்தாள்.

படித்தவன், நம்பாமல் அவளைப் பார்த்து, 'நிஜமாவா சொன்ன...' என்று அவனின் கனவு மெய் பெற்றிருந்தாலும் அதை நம்ப முடியாமல் திணறி, அவளிடம் கண்களால் வினவியவனுக்கு, அவளின் புன்னகையே பதில் அளித்துவிட, அவன் சட்டையை தான்யாவென்று பாவித்து, இறுக்கி அணைத்துக் கொண்டு, அவளை அவசரமாக நெருங்கினான். ''தனு! உனக்கு இப்போ என் மேல கோபம் இல்லையே? என்னை மன்னிச்சுடு கண்ணம்மா! நான் அப்போ ஏதோ தெரியாம பண்ணிட்டேன். இனிமேல் அ... அப்படி எல்லாம் சத்தியமா பண்ண மாட்டேன். என்னை ந... நம்பு!'' என்று எதைப் பேச வேண்டுமோ அதைப் பற்றிப் பேசாமல் அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருந்தான்.



அவள் அமைதியாக இருப்பதைப் பார்த்தவன், ''ஏன் கண்ணம்மா பேசமாட்டேங்கிற? என்மேல இன்னும் கோபமா?'' என்று அவன் அதிலேயே இருக்க, தான்யா தலையில் அடித்துக் கொண்டு, ''சொல்ல வேண்டியதை இன்னும் நீங்க சொல்லவே இல்லையே... அப்புறம் எப்படிப் பேசறது?'' என்றாள்.

அவள் சொன்னதைக் கேட்டுப் புருவத்தைச் சுருக்கி யோசித்தவன், புரிந்து கொண்டு, ''தனு! 'ஐ... லவ்... யு கண்ணம்மா.. எனக்கு எவ்வளவு சந்தோசமா இருக்கு தெரியுமா?'' என்று அவன் அதற்கு மேல் என்ன பேசியிருப்பானோ, ஆனால் அவனின் 'கைபேசி' அதற்குத் தடை விதித்தது. அதை எடுத்தனிடம், ''பாலா! இன்னுமா துணி மாத்திட்டு இருக்க? சீக்கிரமா வாப்பா... கீழே எல்லோரும் உன்னைத் தேடறாங்க...'' என்றார் அவன் தந்தை.

அவன் தந்தையிடம், ''அப்பா! நீங்க பார்த்த பொண்ணு பேரு என்னப்பா?'' என்று கேட்க, ''அப்பாடா! இப்பவாவது கேட்கணும்ன்னு தோணிச்சே. இப்போ பார்த்த பொண்ணா இல்லை முதல்ல பார்த்த பொண்ணா?'' என்று கேட்டு அவனை அதிர வைத்தார்.

''அப்பா?!'' என்று திகைத்தவனிடம், ''பொண்ணு பேரு தான்யலக்ஷ்மி. சீக்கிரமா கீழே வா'', என்று சிரித்தவாறே கூறிவிட்டு வைத்தார்.

அவன் தந்தை சொன்னதைக் கேட்டவன் ஆனந்தத்தில் திக்குமுக்காடிப் போக, அப்போதுதான் தான்யா அங்கிருந்து கதவு வரை நகர்ந்திருப்பதை உணர்ந்து, அவளருகில் அவசரமாகச் சென்றான்.

அவளோ, ''கீழே வர்றதுக்கு முன்னாடி பொண்ணை நல்லாப் பார்த்துட்டு வரச் சொன்னார் மாமா'', என்று

தன்னைச் சுட்டிக் காட்டியவள், "அதுவுமில்லாம அந்தக் 'கவரை'க் கண்டிப்பா பிரிச்சுப் பார்த்து உங்க முடிவைச் சொல்லச் சொன்னார்", என்றாள்.

அவளிடம் பேச வாயெடுக்கும் முன்னர், "சீக்கிரமா கீழே வாங்க. நாம் மிச்சத்தை அப்புறம் பேசலாம்", என்று அங்கிருந்து ஓட முயன்றவளைக் கைப்பிடித்து நிறுத்தினான்.

"தனு! எங்க ஓடற? வித் யுவர் பெர்மிசன் (With your Permission)... என்று அவள் வலது கையில் முத்தமிட்டான். அவனின் முதல் முத்தத்தில் தேகமெங்கும் சிலிர்க்க, நாணத்துடன் கையை இழுத்துக் கொண்டவளை இவன் காதலுடன் இழுத்து அணைத்துக் கொண்டான். சற்று நேரம் அவனின் பிடியில் நெகிழ்ந்திருந்தவள், சுற்றுப்புறம் உணர்ந்து அவனிடம் இருந்து விடுபட்டு நாணத்தின் துணையுடன் விலகி வெளியே ஓடிவிட்டாள்.

அவள் சென்றபின் அந்தக் 'கவரை'ப் பிரித்துப் பார்த்தவனின் புன்னகை தாமரைக்குப் போட்டியாக விரிந்தது. ஏனெனில் அதில் கல்யாணப் பத்திரிகை மாதிரி வைத்திருந்தார் அவன் தந்தை. அதன் பிறகு அவன் எவ்வளவு வேகமாகத் தன் உடையை மாற்ற முடியுமோ அவ்வளவு வேகமாக உடையை மாற்றிக் கொண்டு பரவசத்துடன் கீழிறங்கி வந்தான். எதிர்கொண்ட தந்தையிடம், "தேங்ஸ்ப்பா!" என்றான் நெகிழ்ந்த குரலில்.

அவரோ, "பொண்ணு பிடிக்கலைன்னா சொல்லுப்பா. இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போகலை. பொண்ணை மாத்திடலாம்", என்று அவனைச் சீண்டினார்.

"போங்கப்பா!" என்று அவன் சலுகையுடன் தன் தந்தையின் மீசையைத் திருகியவன், "ஆனா, உங்களுக்கு எப்படி...?" என்று இழுத்தான். "அதைப் பத்தி அப்பறம்



பேசலாம். முதல்ல வந்தவங்களைக் கவனிப்போம்", என்றவருடன் இணைந்து அனைவரும் குழுமி இருந்த இடத்திற்கு சந்தோசமாகச் சென்றான் பாலா.

அவன் கீழே வந்த சற்று நேரத்தில் அவனிடம் வந்த சந்தனா, "ஜாக்ப்ரூட்!' என்ன ஒரே 'ஹாப்பி'யா?" என்றாள்.

"சந்தனா! நீ எப்படி இங்க? எப்போ வந்த?" என்றான் ஆச்சர்யமாக.

"இது நல்லா இருக்கு. மது அக்காதான் உங்ககிட்ட எல்லாத்தையும் சொல்லிட்டாங்களே. இன்னுமா தெரியாத மாதிரி நடிப்பீங்க? என்னோட அக்காவுக்குக் கல்யாணம் பேச வந்தா நான் வராமலா? இதுக்குத் தான் இந்த 'லவ்' பண்ணறவங்களை நம்பவே கூடாது. நீங்க எனக்குத்தான் 'தேங்க்ஸ்' சொல்லணும். எவ்வளவு 'ப்ளான்னிங்' தெரியுமா?" என்று கண்களை உருட்டிக் கூறியவள், "நாங்க மதியமே வந்தாச்சு. உங்க கண்கள்ல படாம தப்பிக்கறதுக்குள்ள போதும் போதும்ன்னு ஆயிடுச்சு. ஆனா, இந்த விளையாட்டுக் கூட நல்லாத் தான் இருந்தது. உங்க முகத்தைப் பார்க்கணுமே, 'ப்ரைஸ்லெஸ்' (priceless)!" என்று சொல்லிச் சிரித்தாள்.

அவளின் பதிலைக் கேட்டு அவள் காதைப் பிடித்துத் திருக முயற்சிக்க, அவனிடம் இருந்து தப்பி, "இந்த விளையாட்டை எல்லாம் உங்க ஆளுகிட்ட வச்சுக்கோங்க!" என்றவள், "'ஜாக்ப்ரூட்'! உங்ககிட்ட ஒண்ணு கேட்கணும்ன்னு நினைச்சேன். கேட்கட்டுமா?" என்றாள் தயங்கி.

அவள் கேட்கப் போவது அவனைத் திணற வைக்கும் என்பதை அறியாமல், "கேளு! எதுக்கு இவ்வளவு தயக்கம்?" என்றான் சிரித்தவாறே.

''வந்து, 'ப்ளே-டௌ' வச்சு விளையாடற வயசா உங்களுக்கு?'' என்றாள் விஷமச் சிரிப்புடன்.

'''நான்... ப்ளே-டௌ' வச்சு...'' என்று திணறியவன், 'இந்த லூசு அதையும் போய்ச் சொல்லிட்டாளா?' என்று மனதிற்குள் தான்யாவைச் செல்லமாகத் திட்டியவாறே அவளைக் கண்களால் தேடினான்.

அவனின் திணறலைச் சிறிது நேரம் ரசித்தவள், ''ரொம்பத் திணறாதீங்க 'ஜாக்ப்ரூட்'. அந்த 'ப்ளே-டௌ' வச்சு தான் நீங்க தான்யாவை விரும்பறீங்கன்னு நான் கண்டுபிடிச்சேன். உங்களுக்கு அடிபட்டிருந்தப்போ நீங்க யாருன்னு எனக்குத் தெரியாது. அப்புறம் கூட உங்க பேரு மட்டும் தான் தெரியும். ஏதோ என்னால பாவம் உங்களுக்கு அடிபட்டிடுச்சுன்னு உங்களைப் பார்க்க வந்தேன். ஆனா, அப்படி அடிக்கடி உங்க வீட்டுக்கு வந்தப்போ, ஒரு நாள் என்கிட்ட உங்களுக்கு ஏதோ வேணும்ன்னு மேலே இருக்கிற உங்களோட அறையில இருந்து எடுத்துட்டு வரச் சொன்னீங்க. அப்போதான் இந்த 'ப்ளே-டௌ' என் கண்ணுல பட்டது. அதைப் பார்த்துச் சிரிச்சுக்கிட்டேன். பரவாயில்லையே அக்கா மாதிரி உங்களுக்கும் இதை வச்சு விளையாட ஆசைன்னு. ஏன்னா தான்யாவும் இது மாதிரி ஒரு 'டப்பா' வச்சு எதையோ செய்ய முயற்சி செஞ்சிட்டு இருப்பா. அப்போ வெல்லாம் எனக்கு ஒண்ணுமே தோணலை.

''ஆனா, அன்னைக்குத்தான், எங்கே நீங்க என்கிட்ட பழகறதை வச்சு நான் ஏதாவது தப்பா நினைச்சுக்கு வேன்னு, நீங்க ஒரு பொண்ணைக் காதலிக்கறதைப் பத்திச் சொன்னீங்க. நீங்க ஒரு 'ஜென்டில் மேன்' 'ஜாக் ப்ரூட்'! என்னோட மனசையும் பாதிக்காம அதே சமயம் உங்க மனசையும் என்கிட்டச் சொல்லி, இன்னும் பொண்ணு ஒத்துக் கொள்ளலைன்னும் சொன்னீங்க. நான் எவ்வளவோ கேட்டும் பேரு 'தனு' அப்படின்னு மட்டும் தான் உங்க வாயில இருந்து வாங்க முடிஞ்சது. நானும் கேட்டுட்டு உங்கள் காதல் கண்டிப்பா நிறை வேறும்ன்னு நினைச்சுக்கிட்டேன்.



''அப்புறம் தான் கௌதமோட தங்கை மதுவிடமிருந்து பேச்சு வாக்குல தெரிஞ்சது நீங்களும் கௌதம் அண்ண னும் சேர்ந்து ஒரு 'கம்பெனி' நடத்தறீங்க. அந்த 'கம் பெனி' பெயரைக் கேட்டவுடன்தான் தான்யா வேலை செய்யற இடமாச்சேன்னு நினைச்சேன். அக்கா வீட்ல கௌதம் அண்ணனைப் பத்தி நிறையச் சொல்லி இருக்கா. ஆனா, உங்களைப் பத்தி ஒண்ணுமே சொன்ன தில்லை. ஆரம்பத்துல, கௌதம் இன்னொருத்தரோட சேர்ந்து 'கம்பெனி' நடத்தறதாச் சொல்லி இருக்கா. அவ்வளவு தான். அதனால தான் உங்களைச் சந்திச்சவுடனே உங்க கம்பெனில தான் அக்கா வேலை செய்யறான்னு எனக்கு 'கிளிக்' ஆகலை.

''தான்யாவுக்கு ஒருத்தரைப் பிடிச்சிருந்தாலும் பிடிக் கலைன்னாலும் எங்க கிட்ட மறைக்காம எல்லாத்தையும் சொல்லிடுவா. ஆனா, உங்களைப் பத்தி மூச்சே விடலை. உங்களைப் பத்தின விவரம் எனக்குத் தெரிஞ்சதும், 'அக்கா எதுக்கு உங்களைப் பத்தி ஒண்ணுமே சொல்லலை'ன்னு யோசிச்சேன். அப்புறம் நீங்க சொன்னதை எல்லாம் வச்சு பார்த்தப்போ ஒரு வேளை நீங்க 'லவ்' பண்ணறது என் னோட அக்காவையா இருக்குமோன்னு ஒரு சந்தேகம்.

''அப்புறம் தான் மறுபடியும் உங்க அறையில இருக்கிற அந்த 'ப்ளே-டௌ'வைப் பார்த்தேன். ஆறு 'கலர்'ல ஒரு கலர் மட்டும் 'மிஸ்ஸிங்.' அந்த 'கலர்' எங்க அக்காகிட்ட

இருக்கிறதைப் பார்த்து என்னோட 'டவுட்'டை 'கிளியர்' பண்ணிக்கலாம்ன்னு அவள்கிட்ட போய் மெதுவா அந்த 'ப்ளே-டௌ' பத்தி விசாரிச்சேன். மழுப்பலாத் தான் பதில் சொன்னா. யாரோ 'ஃபிரெண்டோட' குழந்தை யோடதுன்னு. என்னமா உடான்ஸ். அதுக்கப்புறம்தான் அவளை 'நோட்' பண்ணிப் பார்த்தேன்.

''அவளுக்கும் ஒரே 'ஃபீலிங்ஸ்' தான். அந்த 'ப்ளே - டௌ' வச்சு எதையாவது செய்ய முயற்சி செய்வா. அப் புறம் என்ன நினைப்பாளோ மறுபடியும் மூடி வச்சுடுவா. இப்படி பல தடவை பண்ணினதை என் கண்ணால நான் பார்த்தேன்.

''அக்காவைக் காதலிக்கறது நீங்கதான்னு தெரிஞ்சதும் எனக்கு சந்தோசம் தாங்கலை. அதுவும் அக்காவுக்கும் உங்களை ரொம்பப் பிடிச்சிருக்குன்னு நினைக்கும் போது 'டபுள்' சந்தோசம். ஆனா, அவள் எதையோ நினைச்சு, குழம்பிக்கிறாள்ன்னு நினைச்சு உங்க கூட பேசக் கூட்டிட்டு வந்து உங்க கூட 'க்ளோஸா' இருக்கிற மாதிரி கொஞ்சம் 'பிட்' போட்டேன். அதுவும் நல்லாவே வேலை செஞ்சது. இப்போதான் புரிஞ்சது. அக்காவால தான் எனக்கு இப்படி ஆயிடுச்சு. அதனால, அவள் என்னோட வாழ்க்கையை நினைச்சுத்தான் இத்தனை நாள் குழப் பத்துல இருந்திருக்கான்னு...'' என்று சொல்லிச் சிரித்தாள்.

''உங்க வீட்டுக்கு நாங்க வந்துட்டுப் போன மறுநாளே அக்கா கிளம்பி உங்க வீட்டுக்கு வந்ததை நான் பார்த் தேன். உடனே நானும் கௌதமைக் கூப்பிட்டு எல்லா விஷயத்தையும் சொன்னேன். அப்புறம் நாங்க 'பிளான்' பண்ணி, எல்லாத்தையும் கனகச்சிதமா நடத்தினோம். அக்காவும் சம்மதம் சொல்லிட்டாங்க. என்னை நல்லா கவனிச்சுக்கோங்க. உங்கள் காதல் கை கூட நானும்



நிறையா உதவி செஞ்சிருக்கேனாக்கும். 'ஜாக்ருட்!' நீங்க ஒரு 'ஜென்டில் மேன்' அப்படின்னு நான் நல்ல விதமா 'சர்டிபிகேட்' தந்து அப்புறம்தான் எங்க வீட்ல ஒத்துக்கிட்டாங்க'', என்றாள்.

அவள் சொல்வதை ஒரு வார்த்தை பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தவன், ஆனந்தத்தில், ''தேங்க்ஸ் சந்தனா! உன்னைத்தானே? கவனிச்சுட்டா போச்சு. என்ன வேணும் சொல்லு?'' என்று கேட்டான்.

''ஒண்ணும் வேண்டாம். அந்த 'ப்ளே-டௌ' மட்டும் எனக்குத் தருவீங்களா? எனக்கு விளையாட வேணும்!'' என்றாள். பாலா அவளை அடிக்கக் கை ஓங்கியவுடன் அங்கிருந்து சிட்டாகப் பறந்து விட்டாள்.

விழா முடியும் வரை பாலா தன் நண்பர்களிடமும், உறவினர்களிடமும் பேசினாலும் அவன் கண்கள், இயற்கையின் படைப்பான(!), அவனுக்குச் சொந்தமான வளையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது. விழா இனிதே நடைபெற்ற சந்தோசத்தில் அனைவரும் மீண்டும் பாலாவுக்கு வாழ்த்துத் தெரிவித்துவிட்டு அங்கிருந்து ஒவ்வொருவராகக் கிளம்பினர். கௌதம், வசந்த், மற்றும் தான்யாவின் குடும்பம் அன்று இரவு அங்கேயே தங்கிக் கொண்டார்கள்.

பாலா, அவன் தந்தையிடம் பேசியதில் இருந்து புரிந்து கொண்டது, கௌதம் தான் இவ்வனைத்திற்கும் காரணம் என்று. பாலா ஒரு மாதத்திற்கென அமெரிக்கா சென் றிருந்த பொழுது. ஒரு நாள் வெங்கடேசன் ஒரு வேலை யாகக் கோவை வந்திருந்தவர், கௌதமை அவன் வீட்டில் சந்தித்து பாலாவைப் பற்றிக் கவலையுடன் பேசிக் கொண் டிருந்தார். அப்பொழுதுதான் அவர் அவனிடம், ''தம்பி

கௌதம்! நீ சொன்னதாலதான் அவன் தன் அம்மாவைப் பத்தி புரிஞ்சிக்கிட்டதா சொன்னான். அதே மாதிரி அவனுக்கு எடுத்துச் சொல்லி, அவனைக் கல்யாணத்திற்குச் சம்மதிக்க வைப்பா!'' என்றார்.

கௌதமும், அது தான் சமயம் என்று தான்யாவைப் பற்றிக் கூறி, அவரின் சம்மதத்தையும் வாங்கிவிட்டான். அதற்கு முதற்கட்டமாக, பாலாவும் அமெரிக்காவில் இருந்து திரும்பி வந்தவுடன், அவனுக்குப் பொண்ணு பார்த்திருப்பதாகக் கூறி அவனின் அலுவலகத்திற்கு வந்தார். அவர் வந்ததின் முக்கிய காரணம், தான்யாவைப் பார்ப்பதற்கும், அவளின் மனதில் என்ன இருக்கிறது என்று தெரிந்து கொள்வதற்கும்தான்.

தான்யாவை அவருக்கு மிகவும் பிடித்துவிட, இவர்கள் இருவரும், இதை ரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று திட்டம் தீட்டினர். நேரடியாகச் சென்று பெண் கேட்டு தான்யாவின் வீட்டில் மறுத்துவிட்டால் அதன்பின் ஒன்றும் செய்ய இயலாது. அதனால் முதலில் தான்யாவின் மனதில் என்ன இருக்கிறது என்று அறியும் வரை யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று முடிவு செய்திருந்தனர் கௌதமும், வெங்கடேசனும். அதுவுமில்லாமல் பாலாவிடம் சொல்லிவிட்டு ஏதாவது செய்ய, அதைத் தான்யா அறிய நேர்ந்தால் வீணாகப் பாலாவைத் தான் தப்பாக அர்த்தம் பண்ணிக் கொள்வாள் என்று எண்ணி, பாலாவிடமும் இதைப் பற்றித் தெரிவிக்க வேண்டாம் என்று நினைத்து அதை மறைத்தும் விட்டனர்.

இவ்வாறு, அடிக்கடி பாலா இல்லாத சமயத்தில் தான்யாவின் முன்னிலையில் பாலாவுக்குப் பார்க்காத ஆனால், பார்த்ததாகச் சொல்லும் பெண்ணைப் பற்றிப்



பேசித் தான்யாவை யோசிக்க வைக்கத்தான் முதலில் முடிவு செய்தனர். முதல் நாளே தான்யாவின் முகத்தில் இருந்த மாற்றத்தை வைத்து உண்மையை ஊகித்த வெங்கடேசன், பாலாவின் அருகாமையில், கூடிய விரைவில் தான்யாவின் மனம் மாறும் என்று நினைத்து சந்தோசமடைந்தார்.

அதற்கு ஏற்ப கௌதமும் தான்யாவைப் பாலாவின் கீழே வேலை செய்யுமாறு பார்த்துக் கொண்டான். ஆனால், இடையில் பாலாவுக்கு நடந்த இந்த விபத்து ஒருவரும் எதிர்பாராதது.

கடைசியில் தான்யாவும் மனம் மாறிச் சம்மதித்து விட்டாள். வெங்கடேசனும், கௌதமும்தான் தான்யாவின் பெற்றோர்களிடம் சென்று பேசினார்கள். அவர்களும் தங்கள் மகளின் வாழ்வில் பெரிய சந்தோசம் ஏற்படப் போகிறது என்று அறிந்ததும் மகிழ்ந்தார்கள்.

சந்தனாவும், தன்னால் பாலாவுக்கு நடந்த விபத்தைப் பற்றியும் அவனின் நல்ல குணத்தைப் பற்றியும் தன்னைப் பெற்றவர்களிடம் கூறி மிகவும் உதவி செய்தாள். அனைவரும் ஒத்துக் கொள்ளவே, இந்த சந்தோசத்தை உடனே பாலாவிடம் பகிர்ந்து கொள்ளத்தான் அவன் தந்தை நினைத்தார். ஆனால், தான்யா தான் இத்தனை நாட்கள் தனக்காகக் காத்திருக்கும் பாலாவுக்கு இந்த சந்தோசத்தை 'சர்ப்ரைஸாக' வாழ்க்கையில் இருவரும் மறக்க முடியாத ஒரு விழாவாகக் கொண்டாடலாம் என்று தன் விருப்பத்தைத் தெரிவித்தாள். அவன் தந்தையும் கௌதமும் அதை ஆமோதித்து அடுத்த வாரம் வரும் அவனின் பிறந்த நாள் பரிசாகக் கொடுக்கலாம் என்று சொல்லித் திட்டம் தீட்டி அனைவரையும் இங்கு வரவழைத்தனர்.

ஆனால், தான்யாவின் மனமாற்றத்தைப் பற்றி அவளிடம் தான் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று கூறி விட்டார் அவன் தந்தை.

தன் நண்பனிடம் பேசக் கிடைத்த முதல் சந்தர்ப்பத்திலேயே, தன் நன்றியைத் தெரிவித்தான் பாலா. கௌதமோ, ''பாலா! உன்கிட்ட முன்னாடியே சொன்னதுதான். எனக்கு இது மாதிரி செய்யறப்போ கார்த்திக் என்னோட இருக்கிற மாதிரி இருக்கு. அவன் எனக்குக் கத்துக் கொடுத்ததைத்தான் செஞ்சேன்!'' என்றான் நெகிழ்ச்சியுடன். பின், ''எங்களோட பேசறது இருக்கட்டும். நீ தான்யாகிட்ட போய் முதல்ல மனசு விட்டுப் பேசு,'' என்று அவனைத் தட்டிக் கொடுத்துவிட்டு அங்கிருந்து நகர்ந்தான். வசந்தோ அவனிடம், ''பாலா! உன்னோட 'கிப்ஃட்' எப்படி? புடிச்சிருந்ததா?'' என்று கண்ணடித்துக் கேட்டுவிட்டு, ஒரு சிரிப்பை பதிலாகப் பெற்றுக் கொண்டு, அவனும் கௌதமைப் பின் தொடர்ந்து சென்றான்.

பாலா ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த, தன் மனதிற்கு இனியவளுடனான தனித்திருக்கும் தருணம் கிட்டிய சந்தோஷத்தில், அங்கிருந்த தோட்டத்தில் அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தவளிடம் சென்றான். செல்லும் வழியில் அவனிடம் வந்த அவன் தந்தை, ''பாலா! ஏதோ பேசணும்ன்னு சொன்னியே, வாப்பா! இப்போ நான் சும்மாதான் இருக்கேன்,'' என்று கூறி அவனை வழிய வைத்தார்.

அவனைப் பார்த்துச் சிரித்தவர், ''இனி எங்க என்னோட நீ பேச நினைப்பே?'' என்றவாறே இடத்தைக் காலி செய்தார். பாலாவும் அவன் மனதிடம் போய்ச் சரணடைந்தான்.



## 21

''முகில்கள் கூடி
மழை பொழிந்தது!
அருவிகள் சிதறி
நதிகள் உருண்டது!
சொற்கள் பொடிந்து
மௌனம் பேசியது!
தயக்கங்கள் தொலைந்து
மயக்கங்கள் உண்டானது!
கனவுகள் மரித்து
நிஜங்கள் வாழ்ந்தன!''

''தனு! என்னால இன்னுமே நம்ப முடியலைடா. எல்லாமே கனவு மாதிரி இருக்குது. நீ எப்படி மனசு மாறின? உனக்குத்தான் என் மேல அவ்வளவு கோபம் இருந்ததே!'' என்று அவள் மனமாற்றத்தைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆவலில் அவளிடம் கேள்விகளைக் கொட்டினான் பாலா.

அவன் கேள்விகளில் இருந்த அவசரத்தையும், தவிப்பையும் உணர்ந்தவள், அவனின் தவிப்பை மட்டுப்படுத்த எண்ணி, ''என்ன பண்ணறது? ஒருத்தர் மாத்தி ஒருத்தர் உங்களுக்காகத் தூது வந்துகிட்டே இருந்தா, போனாப் போகுதுன்னு வேற வழியில்லாம சரின்னு சொல்லித் தானே ஆகணும்!'' என்றாள் முகத்தில் கசியும் குறும்புடன்.

''என்னது, தூது வந்தாங்களா? மது வந்தது எனக்குத் தெரியும். அப்புறம் யாரு வந்தது?'' என்றவன், அவள் பார்வையில் வந்த மாற்றத்தைக் கண்டு, எங்கே அவள் தப்பாகப் புரிந்து கொண்டாளோ என்ற பதட்டத்துடன்

''ஐயோ! மதுவை நான் அனுப்பலை. அவளாகத்தான் வந்தா. இந்த ஊருக்கு வர்றதுக்கு ஒரு வாரத்துக்கு முன்னாடி தான் உன்னைச் சந்தித்ததைப் பத்தியும் உனக்கு நடந்ததைப் பத்தியும் என்கிட்டே சொன்னாள்,'' என்றான் அவசரமாக.

அதைக் கேட்டுச் சிரித்தவள், ''எனக்குத் தெரியும். என்ன ஒரு பயம் உங்களுக்கு? நான் மாமா கிட்ட சரின்னு சொன்னதும் முதல்ல மதுவுக்குத்தான் கூப்பிட்டுப் பேசினேன். எங்க திட்டத்தைக் கேட்டதுமே, மதுவே என்கிட்டே எல்லாத்தையும் சொல்லிட்டா. தூது வந்த வேறொரு ஆள் என்னோட மாமா, அதாவது உங்களோட அப்பா!'' என்று கண்ணடித்துக் கூறினாள்.

''என்னது அப்பா உன்கிட்ட வந்து பேசினாரா? எப்போ? என்ன பேசினார்?'' என்றான் பரபரப்புடன்.

''போன சனிக்கிழமை உங்களைப் பார்த்துட்டு நான் வீட்டுக்குத் திரும்பிப் போகும் போது என்னோட வந்து பேசினார். இருங்க. உங்களுக்கு முதல்ல இருந்து எல்லாமே சொல்லறேன். நீங்க முதல்ல என்கிட்ட உங்களோட காதலைச் சொன்னப்போ நான் நம்பலை பாலா. நான்தான் அப்போ என்னோட மனசுக்கும் ஒரு திரை போட்டு, யாரையும் நம்பக்கூடாது அப்படிங்கற பிடிவாதத்துல இருந்தேனே. நீங்க 'யு.எஸ்.ல இருந்து திரும்பி வந்ததும், உங்களைப் பார்த்து நான் பயந்து தான் போயிட்டேன். எப்படி இருந்தவர், இப்படி நோயாளி மாதிரி திரும்பி வந்திருக்கீங்கன்னு மனசுக்குள்ள ரொம்பக் கவலைப்பட்டேன்.

''அதனாலதான் நீங்க திரும்பி வந்த அன்று உங்ககிட்ட வந்து பேசினேன். பேசிட்டுப் போனதுக்கு அப்புறம்,



ஒரு வேளை இதுதான் உங்களோட திட்டமோன்னு தோணிச்சு. உங்க மேல பரிதாபப்பட வைக்கணும்ன்னு தான் இப்படி எல்லாம் செய்யறீங்கன்னு நினைச்சு அதைக் கூட நான் தப்பாத்தான் எடுத்துக்கிட்டேன்!'' என்றவள், அவன் முகம் மாறுவதைக் கண்டு,

''சாரி பாலா! எனக்கு அப்போ அப்படித்தான் இருந்தது. அதனாலதான் அப்புறம் நீங்களா வந்து பேசினாலும் பட்டும் படாம பதில் சொல்லிட்டுப் போயிடுவேன்,'' என்றாள் வருத்தத்துடன்.

''தனு! அது உன்னோட நினைப்பாவே இருந்ததுனால, அதை மறக்கத்தான் அங்க 'யு.எஸ்'.ல வேலையில முழு மூச்சா இறங்கிட்டேன். அதனாலதான்...'' என்றான் அவளுக்கு விளக்கிவிட எண்ணி.

''உங்களைப் பத்தி நல்ல விதமா யோசிக்க ஆரம்பிச்சவுடனே எனக்கே அது புரிஞ்சுது!'' என்றாள் சிறு முறுவலுடன். பின் தொடர்ந்து, ''நீங்க வந்த கொஞ்ச நாட்களிலேயே மாமா நம்ம அலுவலகத்திற்கு வந்து, உங்களுக்குப் பொண்ணு பார்த்திருக்கிறதா சொன்னதுதான் உங்களுக்குத் தெரியுமே. அப்பவே, எனக்கு மனசுல குறுகுறுன்னு இருந்துச்சு. நீங்க என்ன பதில் சொல்வீங்கன்னு. ஆனா, அதை வெளிய காண்பிச்சுக்காம இருக்கப் போராட வேண்டிவந்தது. அப்போ கூட என்னோட மனசை நான் ஆராய்ச்சி பண்ணாம விட்டுட்டேன்.

''நீங்க மாமாவைக் கூட்டிட்டு உங்க அறைக்குப் போனதும், நீங்க என்ன முடிவு எடுத்தா எனக்கு என்ன வந்ததுன்னு நினைச்சுக்கிட்டேன். ஆனாலும், நீங்க மாமா கொடுத்த பொண்ணோட 'ஃபோட்டோ'வைப் பார்த்து

என்ன முடிவு பண்ணினீங்கன்னு தெரிஞ்சுக்க ஆர்வமா இருந்தது. அதனால் தான் மாமா சொன்னதா உங்ககிட்ட மறுபடியும் ஞாபகப்படுத்தினேன். ஆனா, நீங்கதான் பதிலே சொல்லாம இருந்தீங்க.

''அப்புறம் பார்த்தா அந்தக் 'கவரை' எடுத்துட்டுக் கிளம்பிட்டீங்க. அதுவும் நீங்க பொண்ணு பேரு தனுன்னு சொன்னவுடனே அது என்னோட பேர் தான்னு நான் யோசிக்கவே இல்லை. முதல்ல யாரும் என்னை அது வரை அப்படிக் கூப்பிட்டது இல்லை. அடுத்து நீங்க பண்ணறது எல்லாமே என் கண்ணுக்கும், மனசுக்கும் தப்புத் தப்பாதான் இருக்கும்ன்னு நினைச்சு உங்க மேல குற்றம் சுமத்தக் காரணங்கள் தேடி, அது உங்களுக்குப் பார்த்த பொண்ணோட பேருதான்னு நினைச்சுக்கிட்டேன்.

''அதை எல்லாம் நினைச்சு எனக்கு எரிச்சலா வந்தது ச்சே! எல்லோரையும் போலத்தான் நீங்களும்ன்னு நினைச்சுக்கிட்டேன். என்கிட்ட காதலைச் சொல்லிட்டு பொண்ணு பார்த்திருக்காங்கன்னு சொன்னவுடனே இப்படி உடனே கிளம்பிட்டீங்களேன்னு. நீங்க எடுத்துட்டு வந்த 'கவரை' இங்க ஊர்ல வந்து வச்சிட்டு வந்தீங்கன்னு, அப்புறம் மாமா சொல்லித்தான் தெரிஞ்சுக்கிட்டேன். உங்களுக்குக் கொடுத்த 'கவர்'ல மாமா எந்த 'ஃபோட்டோ'வும் வைக்காம, சும்மா வெறும் காகிதத்தை வச்சுக் கொடுத்ததா சொன்னார் பாருங்க. எனக்குச் சிரிப்புத் தாங்கலை. நீங்க பிரிச்சுப் பார்க்க மாட்டீங்கன்னு அவ்வளவு நம்பிக்கை!'' என்றாள் சிரிப்புடன்.

''அடப்பாவிங்களா! இத்தனை நடந்திருக்கு. எனக்கு ஒரு வார்த்தை கூட சொல்லாம விட்டுட்டீங்க!'' என்று பெருமையாகச் சலித்துக் கொண்டான்.



''எனக்குமே அப்ப தெரியாதே. என்னை நோட்டம் விடத்தான் மாமா அன்று அங்கு அலுவலகத்துக்கு வந்ததாச்சொன்னார். என்னோட முகத்தைப் பார்த்துட்டு, அதுல தெரிஞ்ச பதிலை வச்சுத்தான் மேலே முடிவு எடுக்கணும்ன்னு வந்திருக்கிறார். வந்தவர்க்கு என் முகத்திலிருந்து வேண்டிய பதில் கிடைச்சதும், மேற்கொண்டு ஆகவேண்டியதைப் பார்க்கக் கிளம்பிட்டார். இப்படி அடிக்கடி வந்து நீங்க இல்லாதப்போ என் முன்னாடி பேசறதுதான் அவரோட எண்ணம்.

''ஆனா, நடந்த இந்த விபத்து யாருமே எதிர்பார்க்காதது. உங்களுக்கு அடிபட்டிருக்குன்னு தெரிஞ்சதும், என் மனசு துடிச்சது. அப்பவும், நீங்க எனக்குத் தெரிஞ்சவர், என்னோட 'பாஸ்' அப்படிங்கறதுனாலதான் இப்படி உணர்றேன்னு நினைச்சேன். ஆனா, உங்களைப் பார்க்க வந்தப்போ சுவாதி பண்ணினது பார்த்து எனக்கு எரிச்சலா வந்தது. அவதான் பெரிய இவ மாதிரி உங்க கையில வந்து எதையோ எழுதறான்னா, நீங்களும் ஈஈஈன்னு பார்த்துட்டு, கையைக் காண்பிச்சிட்டு இருந்த தோடில்லாம, அதைச் சத்தமா படிச்சும் காண்பிச்சு, என்னோட வயிற்றெரிச்சலைக் கூட்டினீங்க.''

''ஹை...ஹை....ஹை..' என்று சிரித்தவன், ''அப்படியா விஷயம். நான் கூட,உனக்கு அப்பவும் என்னைப் பிடிக்கலையோன்னு நினைச்சேன்!'' என்றான் மனம் இலகுவாக.

''ரொம்பச் சந்தோசப்படாதீங்க! அப்பவும், என்னோட மனசைப் பத்தி ஆராய்ச்சி பண்ணாம, அந்தத் தப்பையும் உங்க தலை மேல் தான் ஏத்தினேன். நீங்க பெண்கள்ன்னா, எப்படி வாயைத் திறந்துட்டு ஜொள்ளு விடறீங்கன்னு நினைச்சு உங்களைத் திட்டி என்னோட கோபத்தைத்

தீர்த்துக்கிட்டேன். பார்க்கற பொண்ணுங்ககிட்டேயெல்லாம் இப்படித் தான் வழிவீங்கன்னு, நானா ஒரு அர்த்தம் பண்ணி என்னோட எரிச்சலை ஆத்திக்கிட்டேன். சாரி.. பாலா!'' என்றாள் குற்ற உணர்வுடன்.

அவளின் வருத்தத்தைத் துடைக்க எண்ணி, ''தனு! உனக்குத்தான் என்னைப் பத்தி அப்போ முழுசாத் தெரியாதே. அதுவுமில்லாம உனக்கு நடந்ததை வச்சு யாரையும் நம்பாம இருந்திருப்ப. இப்போ புரிஞ்சுக்கிட்டியே. எனக்கு அது போதும்!'' என்று அவள் கூறிய காரணங்களையே அவளிடம் திருப்பிப் படித்தான். பின், ''ஆனா, இதற்கு உனக்குக் கண்டிப்பா தண்டனை இருக்கு மறந்துடாத...'' என்றான் குறும்புடன் கண்ணடித்து.

அவனின் விஷமத்தைப் புரிந்து கொண்டவள், ''போங்க பாலா!'' என்று சிணுங்கினாள். தொடர்ந்து, ''ஆனா, நீங்க ஒரே ஒரு தடவை தான் என்கிட்டே உங்க காதலைப் பத்திச் சொன்னீங்க. அதுவும் கோபத்துல சொன்னது. அதுக்கப்புறம் ஒண்ணுமே சொல்லலை. அதனால, நான் என்ன முடிவுக்கு வர்றது? நான் 'மெயில்' அனுப்பி உங்களைக் காதலிக்க முடியாதுன்னு சொன்ன வுடனே அதைப் பத்தி ஒண்ணுமே சொல்லலை. 'யு.எஸ்.ல இருந்து வந்ததுக்கு அப்புறமும் உங்களோட செய்கைகள் எல்லாம் நீங்க என்னைக் காதலிக்கறதா சொல்லும்.

''ஆனா, நீங்க வாய் திறந்து ஒண்ணுமே சொல்லலையே. எனக்கும், என் வாழ்க்கையில நடந்ததை வச்சு யாரையும் நம்பவும் முடியலை. அதுவுமில்லாம மதுவைப் பத்தி தப்பாப் பேசி உங்களுக்கு என்னைப் பிடிக்காம போயி டுச்சோன்னு யோசிச்சேன். அடுத்து என்னாலதான் சந்தனாவுக்கு இப்படி ஆயிடுச்சுன்னு ஒரு தவிப்பு வேற.



நான் பாட்டுக்கு என் வாழ்க்கைன்னு சுயநலமா போயிட்டா அப்புறம் சந்தனாவை யாரு கவனிச்சுக்கறது? முதல்ல சந்தனாவுக்கு ஒரு நல்ல வாழ்க்கை ஏற்படுத்திக் கொடுத்துட்டுத்தான் என்னோடதைப் பத்தி யோசிக்க ணும்ன்னு நினைச்சிட்டு இருந்தேன்,'' என்றாள் அவ னுக்கு விளக்கமாக.

''அது.. அது...ஒரு தடவை சொன்னாலும், ஓராயிரம் தடவை சொன்னாலும்,என்னோட காதலை உன்கிட்ட சொல்லிட்டேன்னு நினைச்சேன் தனு. உன்னை அடிக்கடி தொந்தரவு பண்ணக் கூடாது. அப்படி அடிக்கடி தொந்தரவு பண்ணினா, அப்புறம் நீ அங்கிருந்து கிளம்பிடுவியோ என்கிற எண்ணத்திலதான் அமைதியா இருந்தேன். உன்னைத் தினமும் பார்த்துட்டு இருந்தாலே போதும்ன்னு அப்போ நினைச்சேன். ஆனா, நாளாக நாளாக என்னால அப்படி இருக்க முடியலை. தனு, சாரிடா! உன்னைப் போய்ப் பிடிக்காமப் போகுமா?'' என்றான் பாலா தவிப்புடன்.

''எனக்கே என்னோட மனசைப் புரிய வச்சது மதுவும் சந்தனாவும்தான். மது மேல தேவையில்லாம தப்பைச் சுமத்தி வேற பேசினது எனக்கு உறுத்திட்டே இருந்தது. அதனால்தான் மது வந்து என்கிட்ட பேசின பொழுது நல்லாப் பேசினேன். அவள் உங்களை மறுக்கறதுக்காகக் காரணத்தைக் கேட்டப்போ மறைக்காம உண்மையைச் சொல்லிட்டேன். முதல்ல மது என்கிட்டே வந்து பேசினப்போ எனக்கு ஆச்சர்யமா இருந்தது. உங்களை மாதிரி ஒரு ஆளுக்கு, ஒரு பெண், அதுவும் மது வந்து உங்க சார்பாப் பேசினது எனக்குள்ளே ஒரு மாற்றத்தைக் கொண்டு வர ஆரம்பிச்சது. அப்போதான் யோசிக்க ஆரம்பிச்சேன். அப்புறம்தான் நானா யோசிச்சுப் பார்த்து,

என்னோட மனசை நானே கேள்வி கேட்டேன்,'' என்று நிறுத்தினாள்.

''என்ன கேட்ட? இந்தப் பையன் காதலிக்கத் தகுந்தவனா, தேறுவானா தேற மாட்டானா, 'ஹான்ட்சம்'மா இருக்கானா இல்லையான்னா?'' என்றான் கேலியாக.

''ச்சே! ச்சே! அதில்லை. மது சொன்ன மாதிரி நீங்க 'ஜாலி'யாப் பேசினதை வச்சு உங்களைத் தப்பா அர்த்தம் பண்ணிக்கிட்டேனோன்னு. அப்புறம் எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கா இல்லையான்னு? அப்போ எனக்குப் பதில் சொல்லத் தெரியலை. ஆனா, உங்க வீட்டுக்கு சுவாதியுடன் வந்தப்போதான் எனக்கு ரொம்பத் தெளிவா புரிஞ்சது. எனக்கும் உங்களைப் பிடிச்சிருக்குன்னு. அதுவும் நீங்க போட்ட பாட்டு வேற நீங்க என்னைக் கேள்வி கேட்கிற மாதிரியே இருந்தது.''

அவளை இடையிட்டு, ''ஓஹ்..அதான் என் மேல கோப்பட்டியா?'' என்றான்.

''அதுக்கு இல்லை. முதலில் சுவாதி மேல கோபம். இவ்வளவு உரிமை எடுத்துக்கறான்னு எரிச்சல் வந்தது. அதைப் பார்த்து நீங்களும் ஒண்ணும் சொல்லாம இருக்கறீங்கன்னு உங்க மேலேயும் கோபம். அப்புறம் அதில் வந்த வரிகளைக் கேட்டு!'' என்று அவள் அந்த வரிகளை அவனுக்கு மறுபடியும் ஞாபகப்படுத்தினாள்.

அவளைக் காதலுடன் பார்த்தவன், ''அப்படியா? எனக்கு சுவாதி பண்ணினது எதுவுமே கண்ணுல படலையே. நான்தான் உன்னையே பார்த்துட்டு இருந்தேனே. அப்புறம் சொல்லு கண்ணம்மா...'' என்றான்.

''இப்படி நான் யோசிச்சு குழம்பிக்கிட்டு இருந்தப்போதான் சந்தனா என்னை உங்க வீட்டிற்குக் கூட்டிட்டு வந்தா.



சந்தனா எப்போ மறுபடியும் பழைய மாதிரி கலகலப்பா மாறுவான்னு ரொம்ப நாள் காத்திருந்தோம். அதே மாதிரி தான் அவளும் மாறினா. சந்தனாவை நினைச்சு சந்தோசமாகவும் இருந்தது. ஆனா, அவள் உங்களிடம் பழகறதைப் பார்த்து எனக்குப் பயமா இருந்தது. அன்று வீட்டிற்குப் போனதுக்கு அப்புறம் சந்தனா என்கிட்ட வந்து உங்களைப் பத்தின புராணம்தான் பாடிட்டு இருந்தா. அப்புறம் திடீர்னு, 'காதலைப் பத்தி என்னக்கா நினைக்கறே?'ன்னு கேட்டா,'' என்று அவனைப் பார்த்தாள்.

''என்னது சந்தனா அப்படிக் கேட்டாளா? அவள் யாரையாவது காதலிக்கிறாளா என்ன?'' என்றான் ஆச்சர்யமாக.

''அதெல்லாம் ஒண்ணும் இல்லை. சும்மா என்னை நோட்டம் விடத்தான். அவள் காதலைப் பத்தி பேச ஆரம்பிச்சவுடனே என்னோட மனசு தவிக்க ஆரம்பிச்சுடுங்க. எங்கே அவள் உங்களை விரும்பறான்னு சொல்லப் போறாளோன்னு நினைச்சேன். ஆனா, அவளோ, 'இல்லை, சும்மாதான் கேட்டே'ன்னு சொல்லிட்டுப் போயிட்டா. அதைக் கேட்டுப் பயந்து போய்த்தான் உங்களிடம் வந்து சந்தனா மனசுல எதையும் விதைக்கறதுக்கு முன்னாடி அவள் கூட பழகறதை நிறுத்தச் சொன்னேன்.

''அப்புறம் தான் தெரிஞ்சது வேணும்ன்னே என்கிட்ட விளையாடி இருக்கான்னு. நீங்க என்னை விரும்பறதைத் தெரிஞ்சிட்டுத்தான் என்னை உங்க வீட்டுக்குக் கூட்டிட்டு வந்திருக்கா. என் மனசுல நீங்க இருக்கறீங்க, ஆனா, அதை ஒத்துக்க மறுக்கிறதை அறிஞ்சதும், சந்தனாவுக்கு ஒரே சந்தோஷம். கௌதம் கிட்ட உடனே போய்ப் பேசியிருக்கா. அதுக்கப்புறம்தான் எல்லோரும் ஒண்ணு

சேர்ந்து திட்டம் போட்டு, மறுநாள் நான் உங்ககூட வந்து பேசிட்டு வந்தவுடனேயே என்னை மடக்கக் காத்திருந் தாங்க.

''அதுக்கு முதல் படியாதான் மாமா என்னை வந்து பார்த்து என்கிட்டே பேசினார். நான் அன்று உங்ககூட சந்தனாவைப் பத்தி பேசிட்டு வீட்டுக்குத் திரும்பிப் போகும்போது 'பஸ்'ல என் பக்கத்துல வந்து உட்கார்ந் துட்டு, நீங்க எப்படி என்னோட நினைப்புலேயே தேவ தாசு மாதிரி சுத்திட்டு இருக்கறதையும், நீங்க ரொம்ப மாறிட்டீங்கன்னும் கதை கதையா சொன்னார் மாமா!'' என்றவளைப் பார்த்து முறைத்து, அவள் காதைப் பிடித்துத் திருகினான் பாலா.

''நான் உன் நினைப்பாச் சுத்தினது உனக்குக் கதையா...? அப்பா நிஜமா நான் தேவதாசு மாதிரி சுத்தினேன்னு சொன்னாரா? இரு.. கல்யாணத்துக்கு அப்புறம் உன்னை வச்சுக்கறேன்!'' என்றவனைப் பார்த்துச் சிரித்தவள், ''இப்படி எல்லாம் மிரட்டினா, உங்களை எல்லாம் கல்யாணம் பண்ணிக்க முடியாது!'' என்று முறுக்கிக் கொண்டாள்.

உடனே, ''சொல்லுவ. சொல்லுவ. அப்புறம் உன் மேலே 'கேஸ்' போட்டுடுவேன். என்னைக் காதலிச்சிட்டுக் கல்யாணம் பண்ண மறுக்கறான்னு சொல்லி...'' என்றான் முகத்தைத் தீவிரமாக வைத்துக் கொண்டு.

''போடுவீங்க போடுவீங்க. உங்களுக்குச் சாட்சி சொல்ல யாரும் வர மாட்டாங்க!'' என்று ஒற்றை விரலைக் காட்டி மிரட்டினாள்.

''எனக்கு யாரும் சாட்சி சொல்ல வேண்டாம். நீயே உன் கையால என் சட்டையில எழுதின சாட்சி இருக்கே!'' என்றான்.



''பாலா! நீங்க செஞ்சாலும் செய்வீங்க. கௌதம் சொன் னார். நீங்க எப்படி 'டாக்டர்'கிட்ட கூட்டிட்டுப் போய் உங்களோட காதலை அவருக்குப் புரிய வச்சீங்கன்னு.''

''அதையும் சொல்லிட்டானா...சரி! நீ சொல்ல வந்ததைச் சொல்லாம எதை எதையோ பேசிட்டு இருக்க. அப்புறம் அப்பா வந்து என்ன சொன்னார்?'' என்றான் வழிந்தவாறே.

அவனைச் சிறிது நேரம் கண் கொட்டாமல் பார்த் தவள், தொடர்ந்தாள். ''மாமா உங்களை எதுக்குப் பிடிக் கலைன்னு கேட்டார். எனக்குப் பதில் சொல்லத் தெரியலை. நான் உங்களைப் பத்தி முதல்ல தப்பா நினைச்ச கார ணங்கள் எல்லாம் இருந்த இடம் தெரியாமப் போயிடுச்சு. நான் உங்களைப் பார்த்து எதுக்கும் பயப்பட வேண்டாம் என்று சொன்னார். அவரை நம்பித் தைரியமா உங்களைக் கல்யாணம் பண்ணிக்கலாம்ன்னு சொன்னார். ஏற்கெனவே குழம்பி இருந்த எனக்கு என்ன பண்றதுன்னு தெரியலை. அப்போ தான் அவர்கிட்ட லூசுத்தனமா ஒண்ணு சொன் னேன். அதுவே என்னைக் காட்டிக் கொடுத்திடுச்சு!'' என்று நிறுத்தினாள்.

''என்ன சொன்ன?'' என்றான் அவனும் தெரிந்து கொள்ளும் ஆர்வத்துடன்.

''அவர் ஒரே ஒரு தடவை தான்,அதுவும் கோபத்துல தான் என்னைக் காதலிக்கறதாச் சொன்னார். அதுக்கப்புறம் அதைப் பத்தியே அவர் என்கிட்டே பேசவேயில்லை. அப்படி இருக்கும் போது நானாப் போய் அவர்கிட்ட எப்படி இதைப் பத்தி பேசிச் சம்மதம்ன்னு சொல்லறதுன்னு சொல்லி மாட்டிக்கிட்டேன்!'' என்றவளை ஆசையுடன் தழுவின அவன் விழிகள். மேலும் தொடர்ந்த தான்யா,

''இதைக் கேட்ட மாமா உடனே சிரிக்க ஆரம்பிச் சுட்டார். அப்புறம்தான் எனக்கே நான் சொன்னது புரிஞ்சது. அதாவது, எனக்கும் உங்களைப் பிடிச்சிருக்கு. ஆனா, நானாப் போய் உங்ககிட்ட சொல்லறதுக்கு கூச்சப்பட்டுட்டு இருக்கேன்னு. அதுக்கப்புறம் அவரே வீட்ல வந்து அப்பா - அம்மாகிட்ட பேசறதாச் சொன்னார். அன்றே கௌதமிற்கு அழைச்சு விஷயத்தைச் சொல்லி எங்க வீட்லேயும் வந்து பேசி எல்லோரும் சம்மதிச்சுட் டாங்க.

''உடனே உங்களுக்குக் கூப்பிட்டுச் சொல்றதுக்குத் தான் மாமா துடிச்சார். ஆனா, என்னோட காதலை நேர்ல பார்த்துத்தான் உங்ககிட்ட சொல்லணும்ன்னு எனக்குத் தோணிச்சு. அதோட உங்க முகத்துல ஏற்படற சந்தோசத் தையும் பார்க்க வேண்டுமென்று ஆசையா இருந்தது. அதனாலதான் நான் உங்களுக்கு 'சர்ப்ரைஸா' இருக்கட் டும்ன்னு சொன்னேன். உடனே, உங்களோட பிறந்த நாளைக் கொண்டாட வர மாதிரி திட்டம் போட்டோம். எப்படி நம் 'பிளான்?' என்று அவள் தன்னையே தட்டிக் கொடுத்துக் கொண்டாள்.

''தனு, உன்னைத் தட்டிக் கொடுக்கணும்ன்னா என்கிட்ட சொல்லு. நான் உன்னை நல்லாத் தட்டிக் கொடுக்கிறேன். நீயே உன்னைத் தட்டிக்கிட்டா அது பலமா இருக்காது!'' என்று அவள் கைகளைப் பற்றிக் கொண்டவன், ''என்னோட சந்தோசத்தை மட்டும் பார்க்க ஆசையா இருந்ததா இல்லை அந்த சந்தோசத் துல நான் உனக்குக் கொடுக்கும் பரிசையும் வாங்க ணும்ன்னு ஆசை இருந்துதா?'' என்று அவளைச் சீண்டி னான்.



''உங்களுக்கு நினைப்புத்தான்!'' என்று அவனின் கேள்விக்கு ஒரே வரியில் பதில் அளித்து, கையை அவனிடம் இருந்து உருவியவள், ''மாமாவும், என்னோட அப்பாவை ஈரோடுக்கு வந்து அக்கம் பக்கம் விசாரிக்கச் சொன்னார். அப்பா எவ்வளவோ மறுத்தும் கையோட மறுநாள் ஈரோடுக்குக் கூட்டிட்டுப் போனார்,'' என்று பேச்சை மாற்றினாள்.

பாலாவிற்கு இப்பொழுது எல்லாமே விளங்கியது. அன்று அவன் தன் தந்தையிடம் தான்யாவைப் பற்றிப் பேச நினைக்கும் பொழுது, அவர் வேண்டும் என்றே பேச முடியாதது போலச் செய்திருக்கிறார் என்று.

''போன வாரம் முழுவதும் எனக்கு ஆபீஸ்ல நிலை கொள்ளலை. ஆனா, நல்லவேளை. நீங்க 'பிஸி'யா இருந் ததுனால என்னைச் சரியா கவனிக்கலை. கவனிச்சிருந் தீங்கன்னா அப்பவே ஏதாவது உங்களுக்குப் புரிஞ்சிருக் கும்!'' என்றாள் தான்யா மெல்லிய குரலில்.

உடனே, ''ஆனா, பாலா! உங்களுக்கு நடந்த இந்த விபத்து யாருமே எதிர்பார்க்காதது. ரொம்ப வலிச்சிருக் கும் இல்லை உங்களுக்கு?'' என்று அவன் கையை இதமாக வருடிக் கொடுத்துக் கண் கலங்கினாள்.

''கண்ணம்மா! அதுதான் எல்லாம் சரியாயிடுச்சே. அழாத. நடந்தது எல்லாமே நல்லதுக்குத்தான்னு நினைச் சுக்குவோம்!'' என்று அவள் கண்களைத் துடைத்துவிட் டவன், அவன் இதழ்களையும் அங்கே மென்மையாக அழுத்தினான்.

அவனிடமிருந்து நாணத்துடன் விலகியவள், ''உங்களை இவ்வளவு நாள் தவிக்க வச்சதுக்கு என்னை மன்னிச் சுடுங்க பாலா!'' என்றாள் கண்களை அவன் முகத்தில்

இருந்து தாழ்த்தியவாறே. அதன்பின், சொல்ல வேண்டிய தெல்லாம் சொல்லியாகிவிட்டது என்று அவள் அதரங்கள் ஓய்வு பெற்றன.

''ம்ம்ஹூம்... நீ இப்படி வெட்கப்பட்டின்னா எப்படி? எனக்கு நல்லா பதிலுக்கு பதில் கொடுக்கற என்னோட தனுதான் வேணும்!'' என்று அவளைச் சீண்டினான். அதற்குப் பலனில்லாமல் போகவே, ''கண்ணம்மா! எனக்கு இப்போதான் புரியுது. நீ ஏன் உன்னோட சம்மதத்தை வாயில சொல்லாம என்னோட சட்டையில வந்து கிறுக்கிச் சொன்னேன்னு. சுவாதி மேல இருந்த பொறாமையிலே தானே? வீணா என்னோட சட்டை இப்போ பாழாப் போச்சே!'' என்று பொய்யாக அலுத்துக்கொண்டான்.

அதற்கும் அவள் ஒன்றும் பேசாமல் இருக்கவே, ''அது சரி! எனக்குப் பதில் சொல்றதுக்கு நீ ஏன் சொந்தமா யோசிச்சு வந்து எழுதாம, வைரமுத்துவோட பாட்டைத் திருடி அதை அப்படியே மாத்தி எழுதின? அவர் பார்த்தார்னா பாவம் நொந்துடுவார்!'' என்று அவளை மேலும் வம்புக்கு இழுத்தான்.

உடனே தான்யா, ''நானாவது ரெண்டு வரிதான் அவர்கிட்ட இருந்து திருடினேன். நீங்க என்னடான்னா, முழுப்பாட்டையும் இல்ல திருடி எனக்காகப் போட்டுக் காண்பிச்சீங்க. அதுவுமில்லாம உங்க சட்டையைப் பத்தி ரொம்பவும் கவலைப்படாதீங்க. அதுதான் அதுக்குப் பதிலா வேற புதுச்சட்டை வாங்கித் தந்துட்டேனே. இல்லாட்டி கொடுங்க, நான் துவைச்சுக் கொடுக்கிறேன்,'' என்றாள் அவசரமாக.

அதைக் கேட்டவன், ''அப்படி வா வழிக்கு. ஆனா, நீ என்னை அலுவலகத்துல திட்டிட்டுப் போனியே.



அன்றே எனக்கு உன்னைப் பத்தி ஒரு கவிதை மனசுல தோணிச்சே!'' என்று அவன் அன்று நினைத்ததைப் பற்றி அவளிடம் கூறினான்.

அவனைக் காதலுடன் பார்த்தவளிடம், அவன் பையிலிருந்து ஒரு சிறிய புத்தகத்தை எடுத்துத் தந்தான். அதை வாங்கிப் புரட்டியவள், பக்கத்திற்கு ஒரு வரி என்று வேறு மொழிகளில் எழுதியிருந்ததைப் படித்து அர்த்தம் புரியாமல் அவனைப் பார்த்தாள். அவன் ஒன்றும் சொல்லாமல் அவளையே பார்த்துக் கொண்டிருக்க, ''பாலா! என்னதிது? எந்த மொழி இது? எனக்கு ஒண்ணும் புரியலை. இதுக்கு அர்த்தம் என்னன்னு சொல்லுங்க,'' என்றாள்.

அவன் பையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து அவளிடம் நீட்டியவாறே ''வில் யூ மேரி மீ?'' என்றான்.

'என்னைக் கல்யாணம் செய்து கொள்வாயா?' என்பது தான் பல மொழிகளில் எழுதி இருந்தது. கடைசிப் பக்கத்தில் ஆங்கிலத்தில் எழுதி இருந்ததை அகற்றிவிட்டுத் தான் அவளிடம் தந்திருந்தான். அதைக் கேட்டவளின் முகம் குழப்பத்தில் இருந்து மலர்ச்சிக்குத் தாவ, சந்தோசமாகத் தலையை ஆட்டிப் பின் நாணத்துடன் குனிந்து கொண்டாள்.

அவள் மௌனமாக இருப்பதைப் பார்த்து, அவளை இயல்பு நிலைக்கு மாற்ற எண்ணி வேறு விஷயங்களைப் பற்றிப் பேசினான்.

''தனு! நான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி தெரியுமா? நான் எது கேட்டாலும் செய்து கொடுக்கிற அன்பான அப்பா, என்னோட சந்தோசத்துக்காக மெனக்கெடற 'ஃபிரெண்ட்ஸ்', கூடப் பிறக்காத ரெண்டு தங்கைகள். எல்லோரும் எனக்காக எவ்வளவு பண்ணியிருக்காங்க!'' என்றான் உணர்ச்சி வசப்பட்டு.

''ரெண்டு தங்கைகளா? மது சரி. உங்க இன்னொரு தங்கை...?'' என்று புரியாமல் இழுத்தாள்.

''இப்போ சந்தனாவும் எனக்கு ஒரு தங்கைதானே!'' என்ற பதிலளித்தவனுக்குத் தான்யா ஒரு நன்றிப் பார்வையைப் பரிசளித்தாள்.

ஒரு முறுவலுடன், ''இப்போ நீயும் எனக்குக் கிடைச்சிட்ட. எனக்கு இனி வாழ்க்கையில என்ன வேணும் சொல்லு. 'தேங்க்ஸ்' கண்ணம்மா! நீ என்ன கேட்டாலும் நான் கொடுக்கிறேன். உன்னோட சந்தோஷம்தான் எனக்கு முக்கியம்!'' என்றான்.

''நீங்க எனக்குக் கிடைச்சதே போதும் பாலா!'' என்று காதலுடன் அவனிடம் சொன்னவள், ''அது சரி. உங்ககிட்ட ஒண்ணு கேட்கணும்ன்னு நினைச்சேன். நாங்க போட்ட 'பிளான்'தான் உங்களுக்குத் தெரியாதே. அப்புறம் எப்படி இந்த 'புக்'? கூடவே வச்சு சுத்திட்டு இருந்தீங்களா?'' என்று அவன் சற்று முன் அவளிடம் கொடுத்த புத்தகத்தைப் பற்றி கேட்டாள்.

பாலா பதில் சொல்வதற்குள், ''தான்யா ஒத்து வர மாட்டான்னு நினைச்சு வேற யாருக்காவது கொடுக்க லாம்ன்னு கையோட எடுத்துட்டு வந்தீங்களோ? அப்படி எல்லாம் உங்களைத் தப்பிக்க விட்டுடுவேனா?'' என்று அவனை வம்பிற்கு இழுத்தாள்.

''ஓஹ்...அதுவா? இந்த 'புக்கை' நான் உனக்குக் கொடுக்கறதுக்குத் தான் யு.எஸ்.ல வாங்கினேன். எப்படிக் கொடுக்கறதுன்னு தான் யோசிச்சிட்டு இருந்தேன். நல்லவேளை! என்னோட 'கம்ப்யூட்டர் பாக்'ல வச்சிருந்தேன். அதனால தான் உன்கிட்ட இப்போ கொடுக்க முடிஞ்சது. உன்னை விட்டுட்டு வேற யாருக்கு கண்ணம்மா நான் கொடுப்பேன்? உனக்கு நான் நிறைய 'கிஃப்ட்' வாங்கி வச்சிருக்கேன். எல்லாம் அங்கே கோவையில இருக்கு. அங்கே போனதுக்கு அப்புறம் தருகிறேன்,'' என்றான்.



''பாலா! ஒரு நிமிஷம். நானும் உங்களுக்கு ஒண்ணு வச்சிருக்கேன்,'' என்று அவள் கைப்பையில் இருந்து ஒன்றை எடுத்து அவனிடம் கொடுத்தாள்... அவன் தந்த 'ப்ளே-டௌ'வினால் ஒரு இதயத்தைச் செய்திருந்தாள்.

''பாலா! இப்படித்தான் என்னால உங்களை மாத்த முடிஞ்சது. என்னோட இதயமா...'' என்றாள் பூரிப்புடன். பின், ''பாலா! நீங்க முதல்ல இருந்த மாதிரி நல்லா கலகலப்பா இருக்கணும்! நீங்க பண்ண அட்டகாசத்தைப் பத்தி எல்லாம் கௌதம் சொன்னார். இனிமேலும் நீங்க அப்படித்தான் இருக்கணும்,'' என்றாள்.

''நீதான் எனக்குக் கிடைச்சிட்டியே. இனி எனக்கு என்ன கவலை. இனி நம்மளோட அட்டகாசத்தைப் பார்த்து நீ அசந்து போகப் போற!'' என்று அவளை நெருங்கினான்.

இப்படியே விட்டால் அவர்கள் விடிய விடியப் பேசிக் கொண்டிருப்பார்கள் என்பதை உணர்ந்த மற்றவர்கள், அவர்களை வீட்டின் உள்ளே அழைத்தனர். ''தமிழ் மொழி, எங்க கிட்ட வந்து அழுதுச்சு. விட்டா, இவங்க பேசிக்கிட்டே இருப்பாங்க. எனக்கு அசதியா இருக்கு. அதுனால என்னை வந்து காப்பாத்துங்க!' என முறையிட்டது... அதான், காப்பாத்திவிடலாம்னு வந்தேன்!'' என்று சத்தமாகப் பேசியவாறே இவர்களிடம் வந்தான் வசந்த். பதிலுக்குப் பாலாவிடம் இருந்து வயிற்றில் ஒரு குத்துடன், ''வந்துட்டான் கரடி!'' என்று வசவும் வாங்கிய பின் தான் நிம்மதியடைந்தான் வசந்த்.

பாலாவும், தான்யாவும் தங்களின் காதலை மற்றவரிடம் பரிமாறிக் கொண்டதில் மனம் நிறைந்து சந்தோசமாக வீட்டினுள் சென்றனர்.

அதன்பிறகு நண்பர்கள் மூவரும் வெகு நாட்களுக்குப் பிறகு கிடைத்த தனிமையில், சந்தோசத்தில் அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள். கௌதம், வர்ஷனாவின் விஷயத்தில் எடுக்கும் முயற்சிகளைப் பற்றி அவர்களிடம் தெரிவித்தான். இவர்கள் நேரம் காலம் அறியாமல் பேசிக் கொண்டே இருக்க, நள்ளிரவு பன்னிரண்டு மணியாகவும், பாலாவின் கைபேசி அடிக்கவும் சரியாக இருந்தது. தான்யாவின் எண்ணைப் பார்த்தவன் நண்பர்கள் இருவரையும் பார்த்து அசடு வழிந்தவாறே அங்கிருந்து நகர்ந்தான்.

அவனுக்குப் பிறந்த நாள் வாழ்த்துக் கூறுவதற்காக அழைத்த தான்யாவைக் காலையில் சேவல் கூவும் வரை அவன் விடவில்லை. அதுவரை என்ன பேசினார்கள், என்ன கேட்டார்கள் என்று தெரியாமலேயே, காதலர்களுக்கே உரிய இலக்கணத்தில் இருந்து பிறழாமல் அதை இனிதே நிறைவேற்றிக் கொண்டிருந்தனர்.

இன்னும் இரண்டு வாரங்களில் நிச்சயத்தை வைத்து, அதற்கு அடுத்து இரண்டு வாரம் கழித்து வரும் முகூர்த்தத்தில் திருமணத்தை வைத்துக் கொள்ளலாம் என்று ஏற்கெனவே முடிவு செய்திருந்தனர். அதனால் பாலாவின் தந்தைக்குக் கல்யாண வேலைகளைக் கவனிக்க வேண்டி இருப்பதால் அவர் ஊரிலேயே இருந்து கொள்வதாகக் கூற, பாலாவை அழைத்துக் கொண்டு மற்ற அனைவரும் மகிழ்ச்சியாக, மறுநாள் மதியம் கோவை திரும்பினர்.



## 22

''கனவுகள் பல கண்டேன்
அர்த்தம் புரியாமல் துவண்டேன்
உந்தன் மன அகராதியை
இரவல் தொடு
வாசித்து அர்த்தம்
கண்டு எழுதுகிறேன்!''

கோவை வரும் வழியில் கிடைத்தது சந்தர்ப்பம் என்று வசந்த், பாலாவின் வீர தீரச் செயல்களை எல்லாம் எடுத்து விட, மற்றவர்கள் அனைவரும் அதைக் கேட்டுக் கொண்டு வர, பாலாவும் தான்யாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கண்களால் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டு வந்தனர்.

''பாலா! ஏன் ரொம்ப அமைதியா வர்ற? நீ அப்படி எல்லாம் இல்லைன்னு இவங்களுக்கு எல்லாம் தெரிய வேண்டாமா? உன்னோட அருமையை நானே சொல்லிட்டு வந்தா எப்படி? அப்படியே அவங்களுக்கு 'லைவ் டெமோ' (live demo) ஒண்ணு காட்டறது!'' என்று வசந்த் அவனைச் சீண்டினான்.

வசந்த்திற்கு ஒத்து ஊதும் விதமாக, ''நான் மட்டும் தான் நிறையத் தடவை பார்த்திருக்கேன். அக்காவுக்கும், அப்பா-அம்மாவுக்கும் உங்க திறமையைக் காண்பிங்க 'ஜாக்ப்ரூட்'!'' என்று அவனை உசுப்பினாள் சந்தனா.

அவளின் தந்தை, ''சும்மா இரும்மா! அவரை ஏன் வம்புக்கு இழுக்கற?'' என்று தன் இளைய மகளைக் கண்டித்தார்.

''அப்பா! உங்களுக்கு இவரைப் பத்தித் தெரியாது. இவர் வாயைத் திறந்தா அப்புறம் இவரைத்தான் சும்மா இருக்கச் சொல்லிக் கெஞ்சுவீங்க!'' என்றாள்.

கண்களால் தான்யாவிடம் பேசிக் கொண்டிருந்த பாலா, பேச்சுத் திறனை உதட்டிற்குப் புலம் பெயர்த்து வாய் திறந்தான்.

''சரி! நான் கேட்கறதுக்குப் பதில் சொல்லு. ஒரு குட்டிப் பையன் மருந்து வச்சிருக்கிற 'கப்போர்டு'க்குப் பக்கம் மட்டும் நடந்து போகும் போது மெதுவா சத்தம் இல்லாம நுனிக் கால்ல நடந்து போவான். ஏன்னு தெரியுமா?'' என்று கேட்டான்.

அனைவரும் பதில் தெரியாமல் முழித்துக் கொண்டிருக்க, சந்தனா மட்டும் ஏதோ ஒரு பதில் சொல்ல, பாலாவும் 'இல்லை', 'இல்லை', என்று தலையாட்டிக் கொண்டிருந்தான்.

''கண்டுபிடிக்க முடியலையா?'' என்றவன், ''ஏன்னா, அவனோட அம்மா அவன்கிட்ட அந்த 'கப்-போர்ட்'ல 'ஸ்லீபிங்-பில்ஸ்' (sleeping pills) இருக்கு. அதனால அதைத் திறக்கக் கூடாதுன்னு சொல்லி இருப்பாங்க. இவனும் அதை 'டிஸ்டர்ப்' பண்ணக் கூடாதுன்னு நினைச்சு அப்படி சத்தம் போடாம மெதுவாப் போவான்!'' என்று பதிலளித்தான்.

அவன் சொன்னதைக் கேட்டு அனைவரும் சிரிக்க, ''ஐயோ ஜாக்ப்ரூட்! பாவம் என்னோட அக்கா. உங்களோட நிஜமான குணம் தெரியாம உங்களைக் கல்யாணம் பண்ணச் சம்மதிச்சுட்டா. வாழ்க்கை பூரா உங்களோட கொடுமையைத் தாங்கணுமா?'' என்று போலியாகச் சலித்துக் கொண்டாள். பின், ''அக்கா! இப்பவும் உன்னோட முடிவுல உறுதியா இருக்கியா?'' என்று தான்யாவையும் வம்பிற்கு இழுத்தாள். தான்யா ஒன்றும் பேசாமல் பாலாவைப் பார்த்துச் சிரித்தாள்.



அவளின் தந்தையோ, ''எம்மா! நீ தானே சும்மா இருந்தவரோட வாயைக் கிளறின. இப்போ இப்படிச் சொல்லறியா?'' என்று தன் மாப்பிள்ளைக்கு ஆதரவளித்தார்.

''நீ இப்போவாவது நம்மளோட அருமையைப் புரிஞ்சுக்கோ. பாரு, எல்லோரும் என்னோட பக்கம்தான் இருக்காங்க. பேசாம நீயும் என்னோட கட்சியில சேர்ந்திடு. இல்லைன்னா உன் பாடு திண்டாட்டம்தான்!'' என்று சந்தனாவிடம் மிரட்டினான் பாலா.

''வேற வழி. என்ன பண்ணறது? எங்க வீட்டுக்கு மாப்பிள்ளையா வேற ஆகப் போறீங்களே. பிடிக்கலைன்னாலும் சோப்பு போடத்தானே வேணும்?'' என்று பெருமூச்சு விட்டாள்.

''அது...'' என்றவன், ''சரி இதைக் கேளுங்க. 'ஸ்கூல்ல' 'கிளாஸ்' எடுக்கும் போது, டீச்சர் ஒரு பையனிடம், 'இங்கிலீஷ் சேனல்' எங்கே இருக்கு?'ன்னு கேட்டிருக்கார். அதற்கு அவன், 'எனக்குத் தெரியாது. எங்க வீட்டு 'டீ.வி.'ல அந்த சேனல் எடுக்காது'ன்னு சொல்லி இருக்கிறான்!'' என்று பாலா சொல்ல, மற்ற அனைவரும் சிரிக்க, என அவர்களின் பயணம் கலகலப்பாகக் கழிய, விரைவிலேயே கோவை வந்தடைந்தனர்.

கோவை வந்தவுடன் பாலாவின் நலனைக் கருத்தில் கொண்டு அவனை முதலில் இறக்கி விட்டான் வசந்த். அவனுடனே கௌதமும் இறங்கிக் கொள்ள, தான்யாவின் குடும்பம் அவர்களிடம் விடைபெற்றது. வசந்த் அவர்களை இறக்கி விட்டுவிட்டு வருவதாகச் சொல்லிச் சென்றான்.

அவர்கள் சென்றவுடன், வீட்டினுள் வந்த பாலா, கௌதமின் தோளை அணைத்து, ''கௌதம்! நீ எனக்கு

என்னவெல்லாம் பண்ணி இருக்க தெரியுமா? ரொம்ப 'தேங்க்ஸ்'டா!'' என்று கூறி அவனை விடுவித்தான்.

''பாலா! சும்மா சும்மா எதுக்கு 'தேங்க்ஸ்' சொல்லிட்டு இருக்க. சும்மா இருடா. உன்னை இவ்வளவு சந்தோசமாப் பார்க்க எவ்வளவு நல்லா இருக்கு, தெரியுமா. நீ எப்போதும் இப்படியேதான் இருக்கணும்!'' என்றான் கௌதம் உள்ளார்ந்த மகிழ்ச்சியுடன்.

''கௌதம்! நீ எனக்கு இவ்வளவு செஞ்சிருக்க. ஆனா, நான்தான் உன்னோட காதலுக்கு ஒண்ணுமே செய்யலை!'' என்றான் வருத்தமாக.

''பாலா! உனக்கு நான் எதையும் கைம்மாறு எதிர்பார்த்துச் செய்யலை. எனக்கு ஏமாற்றங்களைத் தாங்கிக்கிற பக்குவம் நிறைய இருக்கு. ஆனா, உனக்கு அப்படி இல்லைன்னு உன்னோட பழகின இத்தனை வருஷத்துல தெரியாம இருக்குமா? அதுதான் எவ்வளவு சீக்கிரம் உன்னைத் தான்யாவோட சேர்த்து வைக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் சேர்த்து வைக்க முயற்சி செஞ்சேன். எல்லோரும் உதவி செஞ்சதுனால சீக்கிரமா நல்லபடியா முடிஞ்சிடுச்சு. நீ என்னோட காதலுக்கு எதுவும் பண்ணலையா? என்னோட கடந்த காலத்தைப் பத்தி தெரிஞ்சதும் நீ உன்னோட கவலையை எல்லாம் மறைச்சு, எனக்காக 'ஜோக்' அடிக்க முயற்சி பண்ணினது எனக்குத் தெரியாதுன்னு நினைச்சியா? அதுவே பெரிய உதவி இல்லையா பாலா?

''என்னைப் பத்தி ஒண்ணும் கவலைப்படாத. கூடிய சீக்கிரமா ஒரு நல்ல முடிவு சொல்லறேன். நான் தான் நேரடியா வர்ஷனாகிட்டப் போய் என்னோட விருப்பத்தைச் சொல்லிட்டேனே. அவளும் சீக்கிரமா எனக்குச் சம்மதம் சொல்லுவா. இன்று மறுபடியும் போய் அவளைப் பார்க்கப் போறேன். அதுவுமில்லாம நீதான் இப்படி அடிபட்டுப் படுத்திட்டியே. அப்போ உன்னால என்ன செய்ய முடியும்? உதவி தேவைப்படும் பொழுது நானே உன்கிட்ட கேட்கிறேன். இப்போ இல்லைன்னா வேற எப்பவாவது உனக்கு வேற யாருக்காவது உதவி செய்யச் சந்தர்ப்பம் கிடைக்கும். அப்போ பார்த்துக்கோ!'' என்று தன் நண்பனைச் சமாதானப்படுத்தும் விதமாகப் பதிலளித்தான் கௌதம்.



''கௌதம்! நீ என்னதான் சொல்லு. நான் உனக்கு 'தேங்க்ஸ்' சொல்லியே தீருவேன். ரொம்பத் 'தேங்க்ஸ்'டா!'' என்றான் மறுபடியும்.

தான்யாவின் குடும்பத்தை இறக்கிவிட்டு விரைவாகத் திரும்பிய வசந்த், பாலா சொன்னதைக் கேட்டவாறே வீட்டினுள் வந்தவன், ''சும்மா 'தேங்க்ஸ்' சொல்லி முடிக்கலாம் எனப் பார்க்கறியா? அதெல்லாம் ஒத்துக் கொள்ள மாட்டோம்!'' என்றான்.

''நீ சொல்லறது ரொம்ப 'கரெக்ட்'! உங்களுக்கு ஒரு வார்த்தையில நன்றி சொல்லிட்டு பேசாம இருக்கறதுக்கு நான் ஒண்ணும் நன்றி கெட்டவன் இல்லை. அப்படி இருக்க எனக்கு மனசு கேட்கலை. அதனால, அடுத்த வாரம் உங்களுக்காக 'ஸ்பெஷலா' நான் வெஜ் சமைச்சு என்னோட நன்றியைத் தெரிவிச்சுக்கறேன்!'' என்றான் பாலா.

''என்னது? நீ 'வெஜ்ஜே' ஒழுங்காச் சமைக்க மாட்ட. இதுல 'நான்-வெஜ்' வேறயா? நான் வரலைடா சாமி இந்த விளையாட்டுக்கு!'' என்றான் கலவரத்துடன் வசந்த்.

''நானும் அதுதான் சொன்னேன். நான்-வெஜ் சமைச்சி வைக்கறேன்னு'' என்றான் முகத்தைத் தீவிரமாக வைத்துக் கொண்டு.

வசந்த் கௌதமைப் பார்க்க, அவனும் வசந்தைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான். பின் இருவரும் பாலாவைப் பார்த்து, ''என்னடா உளர்ற?'' என்றனர்.

''நான்... 'வெஜ்...' சமைச்சு வைக்கறேன்னு தெளிவாத் தானே சொன்னேன். உங்களுக்கு ஏன் இந்தக் குழப்பம்?'' என்று இடைவெளி விட்டுச் சொன்னவுடன் தான் அவன் சொன்னது புரிந்தது.

''ஏன்டா, கார்ல உன் வாயில இருந்து வார்த்தைகளைப் பிடுங்க என்ன பாடுபட்டோம். இப்போ உன்னோட கவலைகள் எல்லாம் தீர்ந்து போச்சு. அதுவும் தான்யா இங்க இல்லை என்றதும் மறுபடியும் எங்க உயிரை வாங்க ஆரம்பிச்சிட்டியா?'' என்றான் வசந்த்.

''அதுதான் நீங்க என்னோட கவலையை எல்லாம் தீர்த்து வச்சுட்டீங்களே. என்னோட கவலையைத் தீர்த்து வச்ச உங்களுக்குத்தான் இனிமேல் என்னோட சேவை எல்லாம்!'' என்று கண்ணடித்தான் பாலா.

''வேண்டாம்டா சாமி! நான் கிளம்பறேன். கௌதம், வர்றியா, உன்னை வீட்ல விட்டுட்டுப் போறேன்,'' என்று கௌதமை அழைத்தான்.

''இதோ கிளம்பறேன். பாலா! உன்கிட்ட ஒண்ணு கேட்கணும்னு இருந்தேன். உன்னோட அத்தைகள் என்னடா ஆனாங்க? உன்னை ஒண்ணும் தொந்தரவு செய்யலையா?'' என்று கேட்டான் பாலாவிடம்.

''அத்தைகள்தானே. எனக்கு 'ஆக்சிடென்ட்' ஆனப்போ இங்க வந்திருந்தாங்க இல்லை, அப்போ சின்னதா ஒரு 'பிட்' போட்டேன். பயந்துட்டாங்கன்னு நினைக்கறேன்,'' என்றான்.

''என்னடா சொன்ன?'' என்றனர் நண்பர்கள் இருவரும்.



''அதுவா, சும்மா 'போன்'ல 'டாக்டர்'கிட்ட பேசற மாதிரி, இந்த விபத்துனால என்னால கல்யாணம் பண்ணிக் குடும்பம் நடத்த முடியாதுன்னு சொன்னேன். அப்புறம், 'யார்கிட்டேயும் சொல்ல வேண்டாம் டாக்டர். அப்பாவுக்குத் தெரிஞ்சா ரொம்பக் கவலைப்படுவார்!' அப்படின்னு கொஞ்சமா நடிச்சேன். நான் பேசினதைக் கேட்டு நம்பி, மறுநாளே ஊரை விட்டு ஓடினவங்கதான், இதுவரைக்கும் திரும்பி வரலை!'' என்று சிரித்தான்.

''ஏன்டா! இப்போ கல்யாணத்தைப் பத்திக் கேள்விப் பட்டு அவங்க வந்து தேவையில்லாம வீணா பிரச்சனை பண்ணினா என்னடா பண்ணுவ?'' என்றான் கௌதம்.

''நான் ஏற்கெனவே தான்யாவோட அப்பாகிட்ட இதைப் பத்தி பேசிட்டேன். அவங்க வந்து பிரச்சனை பண்ணினா யார் கேட்பாங்க? அதுவும் அவங்க குணம் தெரிஞ்சவங்க யாரும் அவங்க சொல்லறதை நம்பப் போறதில்லை. அப்புறம் என்ன பயம்?'' என்று சிரித்தான்.

''அப்படின்னா சரி! சரி பாலா! நாங்க கிளம்பறோம். நாளைக்குப் பார்க்கலாம். படுத்து நல்லா 'ரெஸ்ட்' எடு!'' என்று கிளம்பினர்.

அவர்கள் கிளம்பும் முன், பாலா வசந்திடம், ''வசந்த்! மீன் 'வெஜ்'ஜா இல்லை 'நான்-வெஜ்'ஜா?'' என்று கேட்டான்.

''ஏன்டா மீன் 'நான்-வெஜ்'தான். திடீர்னு இதுல என்ன சந்தேகம் உனக்கு?'' என்று குழப்பத்துடன் அவனைப் பார்த்தான்.

பாலா ஏதோ கடிக்கப் போகிறான் என்று புரிந்துகொண்ட கௌதம் பேசாமல் இருக்க, பாலா, ''மீன், நான்-வெஜ்'ஜூனா, அப்போ விண்மீன் 'நான்-வெஜ்'ஜா? என்று கேட்டு, வசந்தை அங்கிருந்து ஓட வைத்தான்.

கௌதமின் வீட்டிற்குச் செல்லும் வழியில், வசந்த் கௌதமிடம், "கௌதம்! ரொம்ப தேங்க்ஸ்! ஹர்ஷினி இது மாதிரி ஒரு குழப்பம் பண்ணி வைப்பான்னு நான் நினைக்கலை. ஆனால், எங்கே ஹர்ஷினியை யாராவது தப்பா நினைச்சுக்குவாங்கன்னு நீ அதைப் பத்தி வெளியிலே யார்கிட்டேயும் சொல்லலைன்னு எனக்குத் தெரியும். உன்னோட நல்ல மனசு யாருக்கும் வராதுடா. நீ அப்பாகிட்ட வந்து பேசினதை எல்லாம் அவர் என்கிட்ட சொன்னார்," என்று நிறுத்தினான்.

"அப்பா சொன்னாரா? எனக்கு வேற என்ன பண்ணறதுன்னு தெரியலை வசந்த்! அதுதான் நேரா 'அங்கிளை'க் கூப்பிட்டுப் பேசினேன்," என்றான்.

"நீ பண்ணினது சரிதான் கௌதம். கூடிய சீக்கிரம் வர்ஷனா உனக்குச் சம்மதம் சொல்லுவாங்க. உனக்கு ஏதாவது உதவி தேவைன்னா என்கிட்ட கண்டிப்பா சொல்லு," என்று கௌதமிடம் சொல்லி அவனை அவன் வீட்டில் இறக்கிவிட்டுச் சென்றான்.

வீட்டுக்குச் சென்ற கௌதம் தன் பெற்றோர்களிடம் பாலாவின் திருமணம் பற்றிச் சிறிது நேரம் பேசிவிட்டு தன் அறைக்கு ஓய்வெடுக்கச் சென்றான். அப்பொழுது, சென்ற ஞாயிறு அன்று வசந்தின் தந்தை, தேவராஜனை அழைத்துப் பேசியதை நினைவு கூர்ந்தான்.

அவரை அழைத்தவன், "அங்கிள்! உங்க கிட்ட கொஞ்சம் தனியாப் பேசணும். வீட்ல வச்சு என்னால பேச முடியாது. கொஞ்சம் வெளில வர முடியுமாங்க 'அங்கிள்'?" என்றான்.

அவரும் சம்மதிக்க, அவர் வந்தவுடன், "சொல்லுப்பா! என்ன விஷயமா வரச் சொன்ன?" என்று நேரடியாக விஷயத்திற்கு வந்தார்.



"வசந்த் மட்டும்தான் உங்கள் மகனா? நானும் உங்க மகன்தானே?" என்று பீடிகையுடன் ஆரம்பித்தான்.

"ஆமா! கண்டிப்பா. உன்னை மாதிரி ஒரு மகன் கிடைக்கக் கொடுத்து வச்சிருக்கணும்!" என்றார்.

"உங்க மகன் வசந்தோட காதலை நிறைவேத்தின நீங்கதான் என்னோட காதலையும் புரிஞ்சுக்குவீங்கன்னு நினைச்சு உங்களோட இப்போ பேச வந்தேன். நான் 'காலேஜ்' படிக்கறப்போ இருந்தே வர்ஷனான்னு ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். ஆனா, தவிர்க்க முடியாத சில காரணங்களால் அது நிறைவேறாமப் போயிடுச்சு. ஆனா, இப்போ அவளைத்தான் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறேன்!" என்று வர்ஷனாவைப் பற்றிச் சுருக்கமாகக் கூறியவன், 'தெரிஞ்சோ தெரியாமலோ ஹர்ஷினி மனசுல நான் ஆசையை விதைக்கக் காரணமாயிட்டேன். ஆனா, ஹர்ஷினியை நான் அந்த மாதிரி ஒரு நாள் கூட நினைச்சுப் பார்த்ததில்லை அங்கிள். என்னை மன்னிச்சுடுங்க!'" என்றான்.

அவன் சொன்னதைக் கேட்டவர் சிறிது நேரம் யோசனையுடன் அமர்ந்திருந்தார். சொல்ல நினைத்ததைச் சொல்லியாகிவிட்டது. இனி அவரே பேசட்டும் என்று அமைதி காத்தான் கௌதம்.

"கௌதம்! நீ தான்ப்பா என்னை மன்னிக்கணும். நீ பேசணும்ன்னு கூப்பிட்டப்பவே இது மாதிரி ஏதோ ஒண்ணுன்னு தான் நினைச்சு வந்தேன். உன்னோட மனசைப் பத்தி தெரிஞ்சுக்காம என்னோட மகள் சொன்னான்னு ஒரே காரணத்துக்காகப் போய் உன்னோட அப்பா - அம்மாகிட்டப் பேசி ஒரு சிக்கலை உண்டு பண்ணிட்டு வந்தது என்னோட தப்புதான்!" என்றார்.

"ஐயோ 'அங்கிள்'! நீங்க ஒரு தப்பும் பண்ணலை. ஏதோ சரியாப் புரிஞ்சுக்காம இப்படி எல்லாம் நடந்திடுச்சு!" என்று பதறினான்.

"கௌதம்! உன்னோட நல்ல மனசு யாருக்கும் வராது. இதே வேற யாராவது இருந்தா நேராப் போய் ஹர்ஷினி கிட்டேயே சண்டை போட்டிருப்பாங்க. ஆனா, நீ அப்படிப் பண்ணாம நேரா என்கிட்ட வந்து பேசறியே. அதுல இருந்தே உன்னோட நல்ல மனசு புரியுதுப்பா. நீ எங்க வீட்டுக்கு மருமகனா வந்தா ரொம்ப சந்தோசப் பட்டிருப்போம். அது நாங்க செஞ்ச அதிர்ஷ்டம். ஆனா, நீ மகனாவே வர்றேன்னு சொல்லற. ரொம்ப, ரொம்ப சந்தோசம்ப்பா. என்னோட ஆதரவு உனக்குக் கண்டிப்பா உண்டு. இனி ஹர்ஷினி பத்தி ஒண்ணும் கவலைப் படாத!" என்று அவனுக்குத் தைரியமளித்தவர், "நான் வேணா வந்து உன்னோட அம்மா-அப்பாகிட்ட பேசட்டுமா?" என்று அவனிடம் கேட்டார்.

"ரொம்ப தேங்க்ஸ் அங்கிள்! அப்பா-அம்மாகிட்ட நானே பேசிச் சம்மதிக்க வைக்கறேன். முடியலைன்னா உங்ககிட்ட கட்டாயம் வந்து கேட்கிறேன். ரொம்ப 'தேங்க்ஸ்' அங்கிள் என்னைப் புரிஞ்சுக்கிட்டதுக்கு!" என்று கிளம்பினான்.

கடந்த வாரம் நடந்ததைப் பற்றிய நினைவுகளில் இருந்து வெளிவந்தவன், சிறிது ஓய்வு எடுத்துவிட்டு, மாலையில் ஒரு முக்கியமான வேலை இருக்கிறதென்று தன் பெற்றோர்களிடம் தெரிவித்து, வர்ஷனாவைப் பார்க்கச் சென்றான். கடந்த ஒரு வாரமாக அவன் அழைப் பையோ இல்லை வரவையோ எதிர்பார்த்துக் (?!) கொண்டிருந்தவள், 'கௌதம் ஏன் வரவில்லை?' என்று யோசிக்க ஆரம்பித்திருந்தாள். 'ஒரு வேளை அவருக்கு



ஏதாவது உடம்புக்கு சரியில்லாமப் போயிடுச்சோ?' என்றும் வருத்தப்பட்டாள். 'மதுவை அழைத்துப் பேசலாம்தான். ஆனால் அவளிடம் எப்படி அவள் அண்ணனைப் பத்தி விசாரிப்பது?' என்று நினைத்து அடக்கிக் கொண்டாள். மனதில் ஓரத்தில் மட்டும் இந்தக் கவலை அவளை அரித்துக் கொண்டேதான் இருந்தது.

கௌதம், ஞாயிறு மாலை அவள் வீட்டிற்குச் சென்ற வுடன், இன்முகத்துடன் வரவேற்றவளை ஊடுருவிப் பார்த்தான். அதைச் சமாளிக்கும் பொருட்டு, "வாங்க! நட்சத்ராதான் உங்களைக் கேட்டுட்டே இருந்தாள்!" என்று நான் ஒன்றும் உன் வரவை சந்தோசமாக எதிர்பார்க்க வில்லை, மற்றும் உனக்காக நான் காத்திருக்கவில்லை என்ற செய்தியைத் தாங்கி அவனுக்குச் சொன்னாள்.

"உனக்கு இப்போ உடம்புக்கு எப்படி இருக்கு? சாரி! அதுக்கப்புறம் என்னால வர முடியலை. நிறைய வேலை இருந்தது. 'கிளைன்ட்ஸ்' (clients) வந்திருந்தாங்க. அது தான்." என்று அவன் வர முடியாததற்கு அவளிடம் மன்னிப்பு வேண்டினான்.

"உங்களுக்கு ஆயிரம் வேலை இருக்கும். சும்மா சும்மா, நீங்க வந்து என்னைப் பார்த்துக்கணும்ன்னு ஒண்ணும் இல்லையே. நான் இப்போ பரவாயில்லை. நீங்க நட்சத்ராவைக் கொண்டு வந்து விட்டதுக்கு அப்புறம் அந்தத் திங்கக்கிழமையே நான் 'ஆபீஸ்'க்குப் போக ஆரம்பித்துவிட்டேன். உங்கள் உதவிக்கு நன்றி!" என்று பட்டும் படாமல் பேசினாள்.

அவள் பேசுவதைக் காதில் வாங்கினாலும் கண்கள் அலைபாய்ந்து நட்சத்ராவைத் தேடி அவளைக் காணாமல், "ஆமா, நட்சத்ரா எங்க ஆளையே காணோம்?" என்றான்.

''பக்கத்து வீட்ல, ஊரில இருந்து நிறையக் குழந்தைங்க வந்திருக்காங்க. அவர்களோட விளையாடப் போயிருக்கிறா. இருங்க. நான் போய்க் கூட்டிட்டு வரேன். உங்களைப் பார்த்தா சந்தோசப்படுவா!'' என்று கதவை நோக்கி நடந்தாள். அவள் செல்லும் வழியை மறித்தவன், ''நான் நட்சத்ராவைக் கிளம்பறதுக்கு முன்னாடி பார்த்துப் பேசிக்கறேன். எனக்கு முதல்ல உன்னோட பேசணும். போய் உட்கார்!'' என்றான் அதிகாரமாக.

'ரொம்பத்தான்' என்று நினைத்தவள், ''நீங்க என்கிட்ட பேச வேண்டியது எல்லாம் பேசியாச்சு. அதுக்கு நான் பதிலும் சொல்லியாச்சு. நீங்க வழி விட்டீங்கன்னா, நான் போய் நட்சத்ராவைக் கூட்டிட்டு வரேன்,'' என்று கௌதமைச் சுற்றிக் கொண்டு போக முனைந்தாள்.

''வர்ஷனா! சொன்ன பேச்சு கேட்கவே மாட்டியா? என் பாடு திண்டாட்டம்தான். நட்சத்ரா இங்க இருந்தா நான் பேச நினைச்சு வந்தது பேச முடியாமப் போயிடும். ப்ளீஸ்... ஒரு அரை மணி நேரம். அப்படிப் போய்க் கூட்டிட்டுத்தான் வருவேன்னா, போ.. போய்க் கூட்டிட்டு வா. அவள் தூங்குகிற வரைக்கும் காத்திருந்து பேசிட்டு, அப்புறமாக் கிளம்பறேன்,'' என்று முடித்தான்.

அவன் குரலில் தெரிந்த உறுதியை உணர்ந்தவள், 'இவன் செய்தாலும் செய்வான்' என்று எண்ணினாள். ''சொல்லுங்க. நீங்க என்னைக் கல்யாணம் பண்ணிக்கறதைத் தீவிர வேற எது வேணாலும் பேசுங்க!'' என்றாள்.

''அதைத் தவிர நான் வேறு என்ன பேசப் போகிறேன்? நீ பெரிய் ஐ.நா. சபைத் தலைவர்.. நான் உன்கிட்ட உலக சமாதானத்தைப் பத்தி பேச. உன்னிடமே என்னால சமாதானத்துக்கு வர முடியலை!'' என்று கிண்டலாகக் கூறி, அவள் மேல் ஒரு பார்வையை வீசி விட்டு, நிதானமாக நடந்து போய்க் கதவைச் சாத்தினான். அவனின் செயலைப் பார்த்து ''என்ன பண்ணறீங்க? இப்போ எதுக்குக் கதவைத் தாழ் போட்டீங்க? திறங்க!'' என்று பதறினாள். இத்தனை நாட்களும், குழந்தைதான் என்றாலும் நட்சத்ரா தங்களுடன் இருந்தது ஒரு பாதுகாப்பு. தேவையில்லாமல் மற்றவர்கள் வாயில் விழ வேண்டாம் என்று நினைத்திருந்தாள். ஆனால், இப்பொழுது நட்சத்ரா இல்லாத வேளையில், கௌதமின் செயல் அவளைப் பதற வைத்தது.

''ஒண்ணும் ஆகாது. எதுக்கு இப்படி பதர்ற? என் மேல அவ்வளவுதான் உனக்கு நம்பிக்கையா? அப்படின்னா, அதை நான் ஏன் பொய்யாக்கணும்?'' என்றவாறே அடி மீது அடி வைத்து, அவளருகே சென்றான். அவன் செய்கையைப் பார்த்து அதிர்ந்தவள், ''கௌதம்.. இப்... இப்போ என்ன பண்ணப் போறீங்க? எதுக்கு என்கிட்ட வர்றீங்க? 'ப்ளீஸ்' போயிடுங்க!'' என்றவாறே, அவளும் பின்னால் நகர்ந்தாள். நிறையத் தூரம் நீண்டு கொண்டே போக, இது என்ன காட்டுப் பாதையா இல்லை ஊர் போய்ச் சேராத ஒற்றையடிப் பாதையா? சின்ன அறைதானே? ஒரு முடிவுக்கு வரத்தானே வேண்டும். நகர்ந்து கொண்டிருந்தவள், அவ்வாறே சுவரை முட்டி நின்றாள்.

அவளைப் பார்த்து முன்னேறிக் கொண்டிருந்தவன், ''மாட்டிக்கிட்டியா? இப்போ என்ன பண்ணப்போற?'' என்று சிரித்தான்.

''கௌதம்..ப்..'ப்ளீஸ்...' நான் சொல்றதைக் கேளுங்க. இல்லாட்டி நான் கூச்சல் போட்டு ஊரைக் கூட்டுவேன்.''

"அவ்வளவுதானே. கூப்பிடு!" என்றுசொல்லி விட்டு, அவன் மிகவும் அருகில் நெருங்கி நின்றான். அவனின் நெருக்கத்தைத் தாங்கமுடியாமல், "கௌதம்! 'ப்ளீஸ்' போங்க. நீங்க இப்படிப் பண்ணினா அப்புறம் என்னோட மதிப்பில இருந்து தாழ்ந்து போயிடுவீங்க!" என்றவளை, அன்று போல் இரு புறமும் சுவரில் கைகள் போட்டு அரண் அமைத்தான். அமைத்தவன், "உன்னோட மதிப்பில் நான் உயர்ந்து நின்று என்ன பண்ணப்போறேன்? சொல்லு. ம்ம்ம்...." என்றான் அவள் கண்களைப் பார்த்து.

அவள் பதில் சொல்ல முடியாமல் முழித்துக் கொண்டிருக்கும் போதே, அவன், அவள் முகம் நோக்கிக் குனிந்தான். அவனின் செய்கையைப் பார்க்க இயலாதவளாக, அவள் கண்களை இறுக மூடியவாறே, "கௌதம்... வே... வேண்டாம்.. உங்கள் மேல எவ்வளவு நல்ல எண்ணம் வச்சிருந்தேன். நீ.... நீங்களே அதைக் கெடுத்துக்காதீங்க..ப்.. 'ப்ளீஸ்' இப்படிப் பண்ணாதீங்க. உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன்... எனக்குக் கல்யாணமாகி ஒரு குழந்தையும் இருக்கு. அப்பவும் நீங்க கேட்கலைன்னா, நீ.. நீங்க எவ்வளவு மோசமான ஆளா இருப்பீங்க. உங்க மனசு எல்லாம் குப்பை...ச்சே!" என்று கெஞ்சலில் ஆரம்பித்து மிரட்டலில் முடித்தாள். அவனின் மூச்சுக் காற்றில் இருந்த வெப்பம், அவளின் கெஞ்சலும், மிரட்டலும் பலனளிக்கவில்லை என்பதைப் பறைசாற்றியது. கோபம் கொந்தளிக்க....

"ச்சே! நான் இவ்வளவு சொல்லியும் கேட்காம, உங்களோட ஆசை மட்டும்தான் முக்கியமா போச்சு இல்லை. உங்களோட ஆசைக்காக நீங்க அதை எப்படியும் அடைஞ்சே தீருவேன்னு நினைக்கிற உங்களுக்கு என்னோட மனசைப் பத்தி என்ன தெரியும்? அதைப்



பத்தி கொஞ்சமாவது நினைச்சுப் பார்த்தீங்களா? நீங்க இவ்வளவு மோசமானவரா இருப்பீங்கன்னு நான் சத்தியமா நினைச்சுப் பார்க்கலை. இப்படின்னு தெரிஞ்சிருந்தா உங்களை நான் என் மனசுல நினைச்சிருக்கவே..." என்று பட்டென்று நிறுத்தியவள், கண்களையும் திறந்து பார்த்தாள்.

கௌதம் அவளிடம் இருந்து விலகி, கைகளைக் கட்டிக் கொண்டு சிரித்தவாறு நின்று கொண்டிருந்தான். "ம்ம்ம்... மேலே சொல்லு... என்னை மனசுல நினைச்சிருக்க மாட்டியா? இன்னும் எவ்வளவு நாளைக்கு என் கிட்ட மறைக்கிறதா இருந்த வர்ஷனா?" என்று நேராக விஷயத்திற்கு வந்தான்.

அவள் பதிலளிக்காமல் வாயடைத்து இருப்பதைப் பார்த்தவன், அங்கிருந்த சோபாவில் அமர்ந்து கொண்டு, "சாரி'ம்மா! உன் வாயில இருந்து உண்மையை வரவைக்க இப்படி நடந்துக்க வேண்டியதாப் போச்சு. இன்னும் எதுக்கு மறைக்கிற வர்ஷனா? உனக்கு என்னைப் பிடிச்சிருக்குன்னு எனக்குத் தெரியும். அதே மாதிரி நீ எதுக்கு தயங்குறேன்னும் எனக்குத் தெரியும். சரி, முதல்ல எனக்கு எப்படித் தெரிஞ்சதுன்னு சொல்லிடறேன். அப்புறமாவது உன்னால உண்மையைச் சொல்ல முடியுதான்னு பார்க்கலாம்!" என்றான்.

"உனக்கு ஞாபகம் இருக்கா? ரெண்டு வாரத்துக்கு முன்னாடி உன்கிட்ட நான் வந்து என்னோட காதலைப் பத்தி சொன்னப்போ, நான் உன் முகத்தையே பார்த்துக்கிட்டு இருந்தேன். நான் என்னோட காதலைப் பத்தி சொன்னதைக் கேட்டு, உன் முகத்துல ஒரு அதிர்ச்சியோ இல்லை வியப்போ, ரெண்டுல ஏதோ ஒண்ணை நான் எதிர்பார்த்துக் காத்திருக்க, நீ ரெண்டையுமே என்கிட்டே

காண்பிக்கலை. அது ஏன்னு எனக்குப் புரியவும் இல்லை. அப்புறம் நீ கடைசியில குலுங்கி அழுதப்போ, எனக்கு மனசுக்குக் கஷ்டமா இருந்தது. அதுதான் நீ போன்னு சொன்னவுடனே, ரெண்டு நாள் கழிச்சு வந்து பேசலாம் என நினைச்சுக் கிளம்பிட்டேன்.

''ஆனா, கிளம்பிக் கீழே போன பின்தான் எனக்கு ஞாபகம் வந்தது. என் மேல இருக்கிற கோபத்துல நீ கதவைப்பூட்டாம இருந்திடுவியோன்னு. இரவு நேரம் வேற. அதை உன்கிட்ட ஞாபகப்படுத்தலாம் என உடனே மேல வந்தா, நீ இன்னமும் அழுதிட்டே தான் இருந்த. நான் வந்தது கூடத் தெரியாம நீ புலம்பிகிட்டிருந்த. அதுக்கு முன்னாடி நீ என்ன சொல்லிட்டு இருந்தியோ எனக்குத் தெரியாது. ஆனா, கடைசில நீ சொன்னதை எல்லாம் கேட்டேன்,'' என்று நிறுத்தி அவளைப் பார்த்தான்.

அவள் கண்கள், இவன் கண்டுபிடித்து விட்டானே என்று கலங்கிக் கசிய ஆரம்பித்தன. அதைப் பார்த்து இவன் மனதும் கலங்கியது. ஆனால், பேசியாக வேண்டுமே! இல்லை என்றால், இது நீண்டு கொண்டேதான் இருக்கும் என்று எண்ணியவனாக, மனதைக் கட்டுபடுத்திக்கொண்டு, ''நீ என்ன சொன்னேன்னு உனக்கு ஞாபகம் இருக்கா? 'ஏன் கௌதம் நீங்களும் என்னை இப்படிப் படுத்தறீங்க? உங்களைப் பத்தி நினைக்காம இருக்க நான் என் மனசோட போராடவே முடியாமத் தவிக்கறேன். இதுல நீங்க வேற தினமும் வந்து என்னைத் தொல்லைப்படுத்தினா நான் என்ன பண்ணுவேன்?'ன்னு. நீ வாய்விட்டுப் புலம்பினதை, என்னோட ரெண்டு காதுலேயும் கேட்டு, அப்படியே வானத்துல பறக்க ஆரம்பிச்சேன்.



''நான் கேட்டுட்டேன்னு உனக்குத் தெரிஞ்சா, நீ மேலும் சங்கடப்படுவேன்னு தான் சத்தம் போடாமத் திரும்பிப் போனேன். ஆனா, சும்மா இருக்கப் பிடிக்கலை. அதுதான் உனக்குப் பிடிச்ச பூக்களை வாங்கி விட்டுக்கு முன்னாடி வந்து வச்சுட்டு, உன்னோட 'செல்'லுல கூப்பிட்டு கதவைத் தாழ் போட்டுக்கச் சொல்லி ஞாபகப் படுத்தினேன்.

''நீ சொன்னதைக் கேட்ட என் மனசுக்கு, சந்தோசத் தோட எல்லை பிடிபடவே இல்லை. அப்பறம்தான் யோசிச்சுப் பார்த்தேன். உனக்கு, நான் விரும்பினது முன்பே தெரிஞ்சிருக்குதுன்னு. அதனாலதான் நீ சிரமப்பட்டு, உன் வாழ்க்கையில நடந்ததை என்கிட்டே இருந்து ஒவ்வொரு முறையும் மறைக்க முயற்சி செஞ்சிருக்கேன்னு. அதுவுமில்லாம, உன்னோட மனசுல எனக்கும் இடம் இருக்கு. ஆனா, உனக்கு நடந்த விஷயங்களை நினைச்சு என்னை நீ விரட்டறேன்னு புரிஞ்சுகிட்டேன். என்ன சரிதானா?'' என்று விளக்கி விட்டு, அவளிடம் கேட்டான்.

அவன் சொன்னதைக் கேட்டு அவனுக்கு உண்மை தெரிந்துவிட்டதே என்று சோர்ந்து போய் அப்படியே அங்கே தரையில் கால்களைக் கட்டிக்கொண்டு அமர்ந்தாள்.

''அதுவுமில்லாம உனக்கு உடம்பு முடியாம இருந்தப்போ வந்தேனே, அப்போ என்னோட பெயரைப் பல முறை எழுதி, இல்லை கிறுக்கி வச்சிருந்த 'பேப்பரை'யும் நான் பார்த்தேன். அது நீ தெரிஞ்சு செஞ்சதா.. இல்லை.. தெரியாம செஞ்சதான்னு எனக்குத் தெரியாது. ஆனா, உன்னோட மனசுல நான் இருக்கறேன்னு புரியறதுக்கு இது போதாதா? இதுக்கு மேலே என்ன

பிடிவாதம்? இப்போ சொல்லு...'' என்று அவளைப் பேச வைக்க முயற்சித்தான் கௌதம்.

சிறிது நேரம் அமைதியாக இருந்த வர்ஷனா, இனி மறைத்து ஒரு பலனும் இல்லை; அப்படியே மறைக்க முயன்றாலும் இவன் விடப்போவதில்லை என்று புரிந்து கொண்டு பேச ஆரம்பித்தாள்.

''ஆமா! எனக்குத் தெரியும். நீங்க என்னை விரும்பினது எனக்கு முன்னாடியே தெரியும். கார்த்திக் ஊருக்குப் போறதுக்கு முன்னாடி என்ன நினைச்சானோ, என்கிட்டே வந்து நீங்க என்னை விரும்பறதைப் பத்தி, அப்புறம் நான் பணக்காரப் பொண்ணுன்னு தெரிஞ்சு தயங்கினதைப் பத்தி எல்லாம் சொன்னான். நீங்க வரைஞ்ச என்னோட படத்தைக் கொண்டு வந்து என்கிட்டே கொடுத்தான். ஆனா, கார்த்திக் சொன்னதை என்னோட அண்ணனும் கேட்டு, அதனாலதான் அவசர அவசரமா என்னோட கல்யாணத்தை முடிவு பண்ணிட்டார். அதுக்கப்புறம் நடந்ததுதான் உங்களுக்குத் தெரியுமே!'' என்று கூறி அவனை அதிர்ச்சிக்குள்ளாக்கினாள்.

''என்னது, கார்த்திக் உன்கிட்ட வந்து சொன்னானா?'' என்று நண்பனின் நினைவில் கலங்கினான். 'கார்த்திக், உன்னோட நட்புக் கிடைக்க நான் என்ன பண்ணி இருக்கேன் கார்த்திக்? நீ காதலிச்ச பொண்ணுகிட்டேயே போய் நான் காதலிக்கிற விஷயத்தைச் சொல்ல உன்னால எப்படிடா முடிஞ்சது? யார் கண் பட்டதோ, நீ இப்படி என்னை நடுவுல விட்டுட்டுப் போயிட்ட?' என்று அவன் மனம் நண்பனை நினைத்து மௌனமாகப் புலம்பியது.



## 23

''வாழ்க்கைத் தீவில் தனித்து
வழி தெரியாமல் விழிக்கிறேன்!
உன் உயிருடன் சேர்ந்து
காதல் சுவாசத்தை நிரப்பி
விவாக மயக்கத்தில் தவழ்ந்து
குடும்பப் பிணைப்பில் இணைந்து
வாழ வழி தேடுகிறேன்!
வழித்துணையாக வருவாயா கண்மணி?''

கார்த்திக், அவன் காதலைத் தன்னிடம் தெரிவித்து விட்டான் என்ற உண்மையை அறிந்தவுடன், தன் நண்பனின் நினைவில் கௌதம் கலங்கி, வாடுவதை உணர்ந்த வர்ஷனாவே அதைத் தாங்க முடியாமல் பேச்சைத் தொடர்ந்தாள்.

''சாரி கௌதம்! கார்த்திக்கைப் பத்திப் பேசி உங்களைக் கஷ்டப்படுத்திட்டேன். நம்ம 'காலேஜ் லைப்'ல அவனால எவ்வளவு சந்தோசமா, கலகலப்பா இருந்தோம். ஆனா, கடைசியில இப்படி ஆயிடுச்சு. கார்த்திக்கோட இழப்பு எல்லோருக்குமே ஒரு பெரிய அடி. உங்களைப் பத்தி கார்த்திக் என்கிட்ட சொன்னதைக் கேட்ட என்னோட அண்ணன், தன்னோட இருப்பிடத்தை உடனே சென்னைக்கு மாத்திட்டார். என்னையும் 'ஹாஸ்டல்'ல இருந்து காலி செய்யச் சொல்லி அவரோட தங்க வச்சிட்டார்.

''அப்போ அதை எல்லாம் நீங்க உணர்கிற நிலைமையில இல்லைன்னு எனக்குத் தெரியும். அதே மாதிரி அந்தச் சமயத்துல எனக்கும் உங்ககிட்ட இதைப் பத்தி

பேச முடியலை. ஒரு நாள் அண்ணன் என்கிட்ட வந்து, 'என்னமோ பெரிசாச் சொன்ன; அவனைப் பத்தி. இப்போ பாரு, நான் சொன்ன மாதிரி தானே அவனும் உன்னைக் காதலிக்கிறான். பணக்காரப் பொண்ணுங்கிறதுனால விட முடியலை போல. அதுவும் நேரடியா உன்கிட்ட வந்து சொல்லாம வேற ஒருத்தனைத் தூது அனுப்பறான். இதைத் தான் நான் அன்றே சொன்னேன். இங்கு பாரு, நான் உனக்கு மாப்பிள்ளை பார்த்தாச்சு. நீ எனக்குக் கொடுத்த வாக்கு ஞாபகம் இருக்கட்டும். மீறி ஏதாவது பண்ணின, நடக்கறதே வேற'ன்னு மிரட்டிட்டுப் போனார்.

''அப்போ தான் எனக்குத் தெரிஞ்சது. கார்த்திக் சொன்னதை இவரும் கேட்டுட்டார்ன்னு. அப்புறம் தான் அவர் அவசர அவசரமா என்னோட கல்யாணத்தை முடிவு செஞ்சார். அதோட உங்களுக்கும் பத்திரிகை அனுப்பி வச்சார். 'உன்னால என்ன பண்ண முடியும்?' அப்படிங்கற அகங்காரத்துல. முதலிலேயே, என்னோட அண்ணன் உங்களைத் திட்டினது வேற என் மனசுக்குக் கஷ்டமா இருந்தது. அப்புறம் அவர் உங்களை ஏதாவது செஞ்சிடுவாரோ அப்படிங்கற பயத்துல நான் பேசாம அவர் சொன்ன மாதிரியே கல்யாணம் செஞ்சுக்கிட்டேன்!'' என்றாள் கண்கள் கலங்கியவாறே.

''அப்படின்னா. உனக்கும் என்னை அப்பவே பிடிச்சிருந்ததா?'' எனக் கேட்டான், விடை தெரிந்துகொள்ளும் ஆர்வத்துடன்.

அவன் கேள்விக்குப் பதிலளிக்காமல் அமைதியாக இருந்தவளைப் பார்த்து முகமெல்லாம் மலர்ச்சியுடன், ''வர்ஷனா! உனக்கு என்னைப் பிடிச்சிருந்ததுதானே? உன்னோட அமைதியே எனக்கு அதைச் சொல்லுது!''



என்று அவன் முதலில் கேட்ட கேள்வியையே அவசரமாகப் பதிலாக மாற்ற முயன்றான்.

''எனக்குச் சொல்லத் தெரியலை. ஒரு சலனம் இருக்கத்தான் செய்தது. ஆனால், என்னோட அண்ணனை நினைச்சுப் பயமா இருந்தது. அவரோட குணம் எனக்கு நல்லாத் தெரியுமே. அவருக்கு வேணும்ன்னு நினைக்கறதை எப்படியும் நடத்தி முடிச்சுடுவார். அவர் நினைச்சது நடக்கலைன்னா, அதுக்குக் காரணமானவங்களை முன்னேறவே விட மாட்டார். என்னைக் காதலிச்ச பாவத்துக்கு நீங்கள் ஏன் கஷ்டப்படணும்ன்னு, அதுக்கு மேல உங்களைப் பிடிச்சிருக்கா இல்லையான்னு யோசிச்சு, ஆராய்ச்சி பண்ணாம விட்டுட்டேன்.''

அவள் சொல்வதையே கண் சிமிட்டாமல் கேட்டுக் கொண்டிருந்தவன், அவளருகில் சென்று அவனும் தரையில் அமர்ந்து கொண்டான். ''வர்ஷனா! உண்மையைச் சொல்லு. உனக்கு என் மேல இருந்த நம்பிக்கையிலதானே, உனக்கு நடந்த விஷயத்தைப் பத்தி என்கிட்டே சொல்லாம மறைக்க முயற்சி செஞ்ச? எங்கே எனக்கு உண்மை தெரிஞ்சா நான் இந்த முடிவுதான் எடுப்பேன்னு நீ நினைச்சதானே? உனக்கு என்னோட காதல் மேல அவ்வளவு நம்பிக்கை. நீ என் காதல் மேல் இவ்வளவு நம்பிக்கை வச்சதுக்கு ரொம்ப 'தேங்கஸ்'. உனக்கும் என் மேல ஆசை இருக்கு தானே?'' என்று ஆவலாகக் கேள்விகளை அடுக்கினான் கண்களில் கசியும் காதலுடன்.

அவன் முகத்தை ஏறிட்டுப் பார்க்காமல், ''ஆசை எல்லாம் ஒண்ணும் இல்லை...சும்மா வெறும் ச...சலனம் மட்டும்தான்...'' என்றாள் அவசரமாக.

அதைக் கேட்டுச் சிரித்தவன், ''ஏதோ ஒன்னு. அது இப்போ முக்கியம் இல்லை. உனக்கு என் மேல ஆசை இருக்கு. ஆனா...'' என்று அவன் தொடரும் முன், வர்ஷனா ஏதோ பேச முயல, ''சரி! சரி! உனக்கு என் மேல சலனம் இருந்தது. ஆனா, ஊர்ல எல்லோரும் என்ன சொல்லுவாங்கன்னு நீ தயங்கற. அதானே? ஊரில இருக்கிறவங்க இன்று ஆயிரம் பேசுவாங்க. அப்புறம் நாளைக்கு வேற ஒரு விஷயம் கிடைச்சதுன்னா நம்மை மறந்துடுவாங்க உனக்கு நான் சொல்லத் தேவையே இல்லை. நட்சத்ராவை நான் இப்பவே என்னோட மகளாத் தான் நினைக்கிறேன். 'ப்ளீஸ்'ம்மா... இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக்கோ. சீக்கிரமா நாம கல்யாணம் பண்ணிக்கலாம். இத்தனை நாள் நாம பிரிஞ்சிருந்ததே போதும்!'' என்று அவளுக்குப் புரிய வைத்துவிடும் முயற்சியில் இறங்கினான்.

திடீரென்று, ''ஒருவேளை உன்னோட அண்ணனை நினைச்சுப் பயப்படறியா? நான் வந்து அவரோட பேசுறேன்!'' என்றான்.

அதைக் கேட்டு விரக்தியுடன் சிரித்தவள், ''ம்ஹ்ம்.. தங்கையோட சொத்து எல்லாம் கரைஞ்சதும், அவருக்கு தங்கை மேல இருக்கும் பாசமும் கரைஞ்சிருக்கும்!'' என்றாள்.

''என்ன சொல்லற? சொத்தெல்லாம் கரைஞ்சிடுச்சா! ஆனா, எப்படி?'' என்றவன், பின் அவசரமாக, ''இதுக்கும் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொன்னதுக்கும் சம்பந்தமில்லை. உனக்குச் சொல்ல இஷ்டமில்லாட்டி எதுவும் சொல்ல வேண்டாம்...'' என்று முடிக்க முடியாமல் தடுமாறினான்.



''எனக்குக் கல்யாணம் செய்து வைக்கும் போது, அவரை மாதிரியே ஒருத்தரைத்தான் மாப்பிள்ளையாப் பிடிச்சார். சென்னையில பெரிய பணக்காரக் குடும்பம். இவருக்கும் தொழில்ல அவர்களால் ஆதாயம் அப்படின்னு அவரும் என்னை நல்லாதான் வச்சுக்கிட்டார். ஆனா, அவரும் அண்ணன் மாதிரியே எப்பவும் பணத்தைப் பார்த்துத்தான் ஓடிட்டு இருந்தார். 'பார்ட்டி'க்குப் போகும் போது எப்பவாவது குடிப்பார். அதே மாதிரி அன்றும் குடிச்சுட்டு வண்டி ஓட்டிட்டு வந்து 'கண்ட்ரோல்' இல்லாம ஆக்சிடெண்ட் ஆயிடுச்சு.

''நட்சத்ரா பிறக்கறதுக்கு முன்னாடி அவரும் போய்ச் சேர்ந்துட்டார். அவரோட பெற்றோர்களும், ஊரும் ஒன்னு சேர்ந்து இப்படி நடந்ததற்கு நான்தான் காரணம்ன்னு என்னைத்தான் திட்டினாங்க. நான் என்ன பண்ணினேன்?'' என்றாள் விழிகள் ததும்ப.

''சாரி வர்ஷனா! நீ ஒன்னும் பண்ணலைடா. உன்னோட ரணங்களை மறுபடியும் நான் கிளறி விட்டுட்டேன். வேண்டாம். உனக்குக் கஷ்டத்தைக் கொடுக்கும் எதையும் நான் செய்ய விரும்பலை. இதுக்கு மேல நீ எதையும் சொல்ல வேண்டாம். உனக்கு முன்னாடி என்ன நடந்திருந்தாலும் நான் என்னோட முடிவுல இருந்து மாறப்போறதில்லை. அதனால கல்யாணத்துக்குச் சம்மதம் சொல்லிடு,'' என்றான் கௌதம்.

அவன் சொன்னதைக் கேட்டு, ''எனக்குக் கஷ்டத்தைக் கொடுக்கற எதையும் செய்ய மாட்டேன்னு சொன்னீங்க இல்லை. அப்போ இந்தக் கல்யாணம் பண்ணிக்கற பேச்சை விடுங்க'' என்றாள்.

அதைக் கேட்டு, ''என்னைக் கல்யாணம் பண்ணிக்கறது உனக்கு அவ்வளவு கஷ்டம் கொடுக்கற விஷயமா

என்ன?'' என்று சிரித்தவன், ''என்னை மடக்கிட்டதா நினைச்சுட்டியா? உனக்குக் கஷ்டமா இருந்தாலும் பர வாயில்லை. மேலே சொல்லு.'' என்றான் பிடிவாதமாக.

அவனின் இந்தப் பிடிவாதத்தைப் பார்த்துப் பெருமூச்சு விட்டவள், ''இத்தனை நாள்ல என்னோட மனசு இதுக் கெல்லாம் பழகிடுச்சு கௌதம். நட்சத்ரா பிறந்தப்போ கூட என்னோட 'ஹாஸ்பிடல்'ல இருக்கறதுக்கு யாரும் இல்லை. என்னோட அம்மா- அப்பா இல்லைன்னு ஏங்கி இருக்கேன்தான். ஆனா, அப்போதான் முதல் முதலா ரொம்பவும் 'மிஸ்' பண்ணினேன். அவங்க இருந்திருந்தா என்னை இப்படி எல்லாம் கஷ்டப்பட வச்சிருப்பாங்களா?'' என்றாள்.

அவள் பட்ட துன்பங்கள் அனைத்தும் அவனின் கண் முன் விரிந்து அவனை அல்லல்பட வைத்தன. அக்கணமே அவளின் துயரைத் துடைக்கத் துடித்தான். கௌதம் ஏதோ சொல்ல முயல்வதைப் பார்க்காத வர்ஷனா மேலே தொடர்ந்தாள்.

''அவரோட பெற்றோர்களும் இங்க இருக்கப் பிடிக் கலைன்னு, அமெரிக்காவிற்கு அவங்க பொண்ணுகிட்டப் போயிட்டாங்க. நானும் பிடிவாதமா அவங்க கிளம்பிப் போனதைப் பத்தி அண்ணன் கிட்ட சொல்லலை. எனக்கு உன்னோட தயவு தேவையில்லை என்கிற 'ஈகோ'வா கூட இருக்கலாம். என்னோட இருட்டான வாழ்க்கையில எனக்காகவே வந்த ஒளிதான் என்னோட நட்சத்ரா. அதனால அவளுக்கு நட்சத்ரான்னு பேரு வச்சேன். நட்சத்ரா பிறந்து கொஞ்ச நாள் கழிச்சு நான் ஒருவழியா எழுந்து வந்து பார்த்தா, அப்புறம்தான் தெரிஞ்சது. அவர் இல்லாததினால தொழிலை யாரும் கவனிக்காமல் பணத்தைச் சுருட்டினதுனால பெரும் நஷ்டம்ன்னு.



''இங்க இருந்தா வாங்கின கட்னை எல்லாம் அடைக்க வேண்டி வரும்னு தான் சொல்லாம, கொள்ளாம என்னைத் தனியா விட்டுட்டு என்னோட அத்தையும், மாமாவும் கிளம்பிட்டாங்கன்னு அப்புறம்தான் எனக்குப் புரிஞ்சது.

''என்னோட பேர்ல இருந்த சொத்தையெல்லாம் வச்சு எல்லாத்தையும் சரி பண்ணிட்டு, மிச்சம் இருந்த சொத்தை யும் என்னோட அண்ணன் கிட்டயே கொடுத்துட்டு, அவரை இனிமேல் என்னைப் பார்க்க வர வேண் டாம்ன்னு சொல்லிட்டேன். இந்தப் பணம் இருந்ததால தானே இவ்வளவு வலிகளும் வேதனைகளும். என்னை மாதிரியே என்னோட பொண்ணுக்கும் ஒரு நிலைமை வரக்கூடாதுன்னு நினைச்சேன்.

''ஒண்ணும் இல்லாத தங்கையை எப்படி என்னோட அண்ணனுக்குப் பிடிக்கும்? நீங்க என்னை ஊட்டில பார்த்தீங்களே, அப்போக் கூட என் பேர்லயும், அவரோட பேர்லயும் இருக்கிற வீட்டை அவர் பேருக்கு மாத்தறக்குத் தான் அங்க போனேன். எனக்கு உதவி செய்யறதாச் சொல்லி, அதுக்கு ஒரு சப்பைக் கட்டு வேற. அதுக்குப் பணம் கொடுக்கிறதாச் சொன்னார். நான் கூட முதல்ல வேண்டாம்னு சொல்லலாம் என நினைச்சேன். ஆனா, நட்சத்ராவுக்காக அதை வாங்கி அவள் பேர்ல 'பேங்க்'ல போட்டுட்டேன்!'' என்று அவள் வாழ்க்கையில் கடந்த ஆறு வருடமாக அனுபவித்தவற்றைச் சுருக்கமாகச் சொல்லி முடித்தாள்.

அவளை அணைத்து, 'உனக்காக எப்பொழுதும் நான் இருக்கிறேன்!' என்று சொல்லத் துடித்தவன், இன்னும் பேச வேண்டியது இருக்கிறது என்று தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டான்.

''கௌதம்! நீங்க என்னை விரும்பினதை நான் யார்கிட்டேயும் சொல்லலை. ஜென்னிக்குக் கூடத் தெரியாது. ஆனா, ஜென்னிகிட்ட என்னோட கணவர் இறந்த விஷயத்தைப் பத்தி யார்கிட்டேயும் சொல்ல வேண்டாம் எனக் கேட்டுக்கிட்டேன். அவளும் இது வரைக்கும் அதைக் காப்பாத்திட்டுத்தான் இருக்கா.

''அங்க சென்னையில எல்லா பிரச்சனையும் தீர்ந்ததுக்கு அப்பறம் அங்க இருக்கப் பிடிக்காம, இங்க கோவைக்கு வேலை தேடி வந்துட்டேன். இப்போ நிம்மதியா இருக்கேன். உங்களைப் பத்தியும் நான் யார்கிட்டேயும் அதுக்கப்புறம் விசாரிக்கலை. நீங்க வேலை கிடைச்சு பெங்களூரு போயிருப்பீங்க, எங்கேயோ ஒரு மூலைல சந்தோசமா இருப்பீங்க, அப்படிங்கற நம்பிக்கையில இருந்தேன்.

''நீங்களும் வாழ்க்கையில செட்டில் ஆயிருப்பீங்கன்னு தான் நினைச்சேன். உங்களை ஊட்டியில பார்த்தது எனக்கு அதிர்ச்சிதான். ஆனா, அப்போ உங்ககிட்ட உண்மையைச் சொல்ல என்னால முடியலை. உங்களோட பரிதாபப் பார்வையை என்னால தாங்கிக்க முடியும் என்று எனக்குத் தோணலை. அதுவும் உங்களுக்கு இன்னும் கல்யாணம் ஆகலைன்னு தெரிஞ்சு ரொம்பவே தயங்கினேன். அதனால தான் நான் கோவையிலே இருந்தும் மதுவோட கல்யாணத்துக்குக் கூட வரலை. உங்களுக்கு என்னை விட ஒரு நல்ல பொண்ணு கிடைப்பா. 'யூ டிஸர்வ் சம்ஒன் மச் பெட்டர் தேன் மீ' (you deserve someone much better than me) 'ப்ளீஸ்' புரிஞ்சுக்கோங்க.

''உங்களுக்குக் கல்யாணம் ஆகாம இருந்ததுனால, நீங்க உண்மை தெரிஞ்சா, இந்த முடிவுதான் எடுப்பீங்கன்னு நான் நினைச்சேன். உங்களுக்கு எப்படியோ



உண்மை தெரிஞ்சு, நான் நினைச்ச மாதிரியே தான் என்கிட்டே வந்து பேசினீங்க. நடைமுறைக்கு இது ஒத்து வருமான்னு கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க. இப்போ அவசரத்துல உணர்ச்சிவசப்பட்டு முடிவு எடுத்துட்டு அப்புறம் பின்னாடி கஷ்டப்படக்கூடாது. உங்க மேல நம்பிக்கை இல்லாம இல்லை. ஆனா, ஏதாவது ஒரு சூழ்நிலையில நீங்க என்னோட கடந்த கால வாழ்க்கையைப் பத்தி வாய் விட்டுடீங்கன்னா? நட்சத்ராவை ஏதாவது சொல்லிட்டா? அப்புறம் என்னால அதைத் தாங்க முடியாது. நீங்க இப்போ என்னோட மனசுல எப்படி உயர்வா இருக்கீங்களோ, அதே மாதிரி கடைசி வரைக்கும் இருக்கணும். நாம் கடைசி வரைக்கும் 'ஃபிரெண்ட்ஸா'வே இருப்போம். போய் உங்க அம்மா சொல்லற பொண்ணை, ஹர்ஷினிதானே? அவங்களையே கல்யாணம் பண்ணிக் கோங்க. நான்தான் அவங்களைப் பார்த்தேனே. அவங்களும் உங்களுக்குப் பொருத்தமா அழகா இருக்காங்க!'' என்று முடித்தாள் வர்ஷனா.

அவள் கூறுவதை இடையிடாமல் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த கௌதம், ''வர்ஷனா! எனக்கு ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் பதில் சொல்லு. தமிழ்நாட்டுல இத்தனை இடங்கள் இருக்கிறப்போ நீ ஏன் இங்க கோவைக்கு வேலை தேடி வந்தே?'' என்றான்.

''அது..அது.. எனக்குத் தெரிஞ்சவங்க இங்க இருந்தாங்க. அதனாலதான்...'' என்று தடுமாறினாள்.

''உனக்குத் தெரிஞ்சவங்க யாரு? நான்தானே!'' என்றான் கேலியாக.

''இல்லை. என்னோட 'ஃபிரெண்ட்' இங்க இருந்தா. அதான் இங்க வந்தேன். இங்கதான் எனக்கு வேலை கிடைச்சது.''

''சரி! இந்தச் சாக்குச் சொல்றதை எல்லாம் விட்டுட்டு உண்மையைச் சொல்லு. உனக்குத் தெரிஞ்சவங்க யாரும் இங்க இல்லைன்னு எனக்குத் தெரியும். உன்னோட 'ஃபிரெண்ட்ஸ்' எல்லோரும் நீ வேலைக்குச் சேர்ந்ததுக்கு அப்புறம் அறிமுகமானவங்கன்னும் எனக்குத் தெரியும். உன்னோட 'ப்ராஜெக்ட் மேனேஜர்' மனோஜ்,எனக்குத் தெரிஞ்சவர்தான். அவர் மூலமா உன்னைப் பத்தின எல்லா விஷயமும் எனக்குத் தெரியும்!'' என்று அவளைப் பார்த்தான்.

அவன் சொன்னதைக் கேட்டுப் பதறியவள், ''ஏன் கௌதம் வேலை செய்யற இடத்துல என்னைப் பத்தி இப்படி எல்லாம் போய் விசாரிக்கறீங்க? என்னை நிம்மதியா இருக்க விட மாட்டீங்களா?'' என்றாள் கோபமாக.

''நான் நேரடியா உன்னைப் பத்தி அவர்கிட்ட விசாரிக்கலை. என்னோட 'ஃபிரெண்ட்' நிரஞ்சனியோட 'ஹஸ்பெண்ட்'தான் அவர். நான் நிரஞ்சனி மூலமாத்தான் உன்னைப் பத்தி விசாரிச்சேன். அவளும் எனக்காக என்ன விஷயம்ன்னு கேட்காம உதவி செஞ்சா. நீ நினைக்கிற மாதிரி எல்லாம் இல்லை. சரி. இப்போ நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லு!'' என்றான்.

அவனின் கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியாமல் சிறிது நேரம் யோசித்துக் கொண்டிருந்தவள், ''எனக்குத் தெரியலை கௌதம். இத்தனை ஊர்ல கோவைக்கு ஏன் வந்தேன்னு...'' என்றாள்.

''எனக்குப் புரிஞ்சதும்மா. நீயும் என்னை விரும்பறதை ஏன் என்கிட்ட இவ்வளவு கஷ்டப்பட்டு மறைக்க முயற்சி பண்ணற?''

''ஒத்துக்கறேன். ஆனா, அது விருப்பம் இல்லை. வெறும் ஆசைதான்!'' என்றவளைப் பரிதாபமாகப்



பார்த்தான் கௌதம். 'சலனம் இப்போ ஆசையா மாறி டுச்சா?' என்று மனதுக்குள் நினைத்துச் சிரித்துக் கொண்டான்.

அவன் மனதில் பேசிக் கொண்டிருப்பதை உணராத வர்ஷனாவோ பேச்சைத் தொடர்ந்தாள். ''என்னோட வாழ்க்கையில ஒரே ஒரு தடவை உங்களைப் பார்க்க ணும்ன்னு நினைச்சேன். ஏன்னு தெரியலை. இது உங்க சொந்த ஊர்ன்னு தெரிஞ்சுதான் இங்க வந்தேன். எப்பவாவது ஒரு தடவை உங்களைப் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்கும் என்கிற எண்ணத்துல...'' என்று சொன்ன வளின் கண்களில் இருந்து கண்ணீர் கட்டுக்கடங்காமல் வழிந்தது.

அவளின் கண்ணீரைத் துடைக்க முயன்றவனின் தோளில் அவள் முகம் புதைத்தாள். ஒரு கணம் தடு மாறியவன், சுதாரித்து அவளின் தலையை மெதுவாக வருடிக் கொடுத்தான். ''வர்ஷனா! போதும். இதுக்கு மேல அழாதே! எனக்கு இந்த ஒரு செயல் போதும். நீ சொல்லாத பல கோடி வார்த்தைகளோட அர்த்தம் இந்த ஒரு செயல்ல புரிஞ்சிடுச்சு!'' என்று குனிந்து அவள் காதருகில் கிசுகிசுத் தவன், அவள் முகம் நிமிர்த்தி அவள் நெற்றியில் முத்த மிட நினைக்க, அவனிடமிருந்து சரேலென்று விலகினாள்.

''போதும் கௌதம்! என்னை விடுங்க. எனக்கே என் னோட செயல் ரொம்பவுமே சுயநலமாப் படுது. முதல்ல எனக்கு உங்க மேல சலனம் இருந்தும் என் அண்ணனை எதிர்த்துப் போராடப் பயந்துட்டு அமைதியா இருந்தேனே. அவருக்குப் பயந்துட்டு அப்போ எதிர்த்துப் போராடாம வேற ஒருத்தரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். இப்போ யாருமே இல்லாம தனியா இருக்கிற இந்த

நிலைமையில உங்களைக் கல்யாணம் பண்ணிகிட்டா, எனக்கு வேற வழியில்லாம இருக்கறதுனலா, என்னோட சுயநலத்துக்காக உங்களைக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு நீங்க நினைச்சிடக் கூடாது. நான் ஒரு சுயநலவாதின்னு நீங்க என்னைத் தப்பா நினைச்சுட்டா என்னால தாங்க முடியாது. உங்க நினைப்புல இருந்து நான் தாழ்ந்து போறதை விரும்பலை. அதான், எனக்கு மனசுல ஆசை இருந்தும் நீங்க சொல்றதுக்கு நான் தலையை ஆட்டிச் சம்மதிக்க மாட்டேன்!'' என்றாள் உறுதியுடன்.

அவள் சொல்வதை இடையிடாமல் ஒரு சிரிப்புடன் கேட்டுக் கொண்டிருந்தவன், ''தலையை ஆட்டி எல்லாம் சம்மதிக்க வேண்டாம். அப்போ மாதிரி என் தோள்ல சாஞ்சுக்கிட்டாலே போதும். நான் புரிஞ்சுக்குவேன்!'' என்றான் முறுவலித்தவாறே. அவன் சொல்வதைப் புரியாமல் பார்த்தவளிடம், ''நீ தானே தலையை ஆட்டிச் சம்மதிக்க முடியாதுன்னு சொன்ன. உனக்கு அந்தக் கஷ்டத்தை எல்லாம் நான் தர மாட்டேன். அதான்...'' என்று அவளைப் பார்த்துக் கண்ணடித்துக் கூறினான்.

அவன் சொன்னதைக் கேட்டு வாயில் வந்த முறுவலை அடக்கியவாறே, ''கௌதம்! போதும் விளையாட்டு. நான் சொல்றதைக் கேளுங்க. நீங்க ஹர்ஷினியைக் கல்யாணம் பண்ணிக்கறதுதான் எல்லோருக்கும் நல்லது. சொல்லிட்டேன். உங்களுக்கு அமையற இந்த நல்வாழ்க்கையைக் கெடுக்க நான் விரும்பலை!'' என்றாள்.

''முடியாதே. நான் ஹர்ஷினியோட அப்பாகிட்டப் போய் உன்னைப் பத்தி பேசி, ஹர்ஷினியைக் கல்யாணம் செய்துக்க முடியாதுன்னு முடிவாச் சொல்லிட்டேனே.



அவரும் புரிஞ்சுக்கிட்டார். அவருக்கு ரொம்ப சந்தோசம். உன்னைப் பார்க்கணும்ன்னு துடிச்சிட்டு இருக்கார்!'' என்று அவள் விழிகளுக்கு வேலை கொடுத்தான். அது தான், அவன் சொன்னதைக் கேட்டு, நம்பாமல் அவள் கண்களை விரித்துப் பார்க்கும் வேலையைத்தான்.

''நிஜமாத்தான் சொல்றேன். நான் எடுத்த முடிவுல உறுதியாத்தான் இருக்கேன். வாழ்க்கையில நான் ஒரு தரம் பண்ணிய தப்பை இன்னொரு தரம் பண்ண மாட்டேன்!'' என்றவனைப் புரியாமல் பார்க்க, ''அதான், உன் மனசு கஷ்டப்படக்கூடாதுன்னு எல்லாத்தையும் பார்த்துப் பார்த்துப் பண்ணி, உன்னைக் கை நழுவ விட்டதை. இப்போ நீ கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை. கல்யாணத்துக்கு அப்புறம் உன்னை நான் கஷ்டப் படுத்தாமல் நல்லா வச்சுக்கறேன். சரியா?'' என்றான் உல்லாசமாக.

அவனுக்குத்தான் மனதில் இருக்கும் கவலை எல்லாம் வடிந்து விட்டதே. இனிப் பெற்றோர்களை மட்டும்தானே அவன் வழிக்குக் கொண்டு வர வேண்டும். அதை இனி மெதுவாகப் பார்க்கலாம். ஹர்ஷினியோட ஆட்டம் தான் ஆட்டம் கண்டுவிட்டதே. ஹர்ஷினியோட அப்பாவாகப் போய், இனி அப்பா-அம்மாகிட்ட தன் கல்யாணத்தைப் பத்தி பேசமாட்டார். இவங்களும், அவர் வாய் திறக்கற வரைக்கும் பேசாமத்தான் இருப்பாங்க. அதுக்குள்ளே அவங்க மனசை மாத்திவிடலாமே.

''இல்லை கௌதம்! உங்க அம்மா-அப்பாவோட மனசைப் பத்தி நினைச்சுப் பார்த்தீங்களா? இது...'' என்று அவள் முடிக்கும் முன்பே, ''அட! நானும் அவங்க மனசைப் பத்திதான் நினைச்சுட்டு இருந்தேன். நமக்கு என்ன ஒரு ஒற்றுமை. இதுவே ஒரு நல்ல பொருத்தம்

தானே. மனப் பொருத்தம்தானே முக்கியம் கல்யாணத் துல!'' என்றான் கௌதம்.

''நான் அதைச் சொல்லலை. நீங்க ஏன் நான் சொல் லறது எல்லாத்தையும் தப்புத் தப்பாக அர்த்தம் பண்ணிக் கறீங்க?''

''இங்க பாரும்மா! நீ சம்மதிச்சாலும் சம்மதிக்காட்டி யும், நான் உன்னை மட்டும்தான் கல்யாணம் பண்ணு வேன். இல்லாட்டி நான் கல்யாணமே பண்ணிக்காம இப்படியே இருந்துடுவேன். அந்த முடிவுல மட்டும் எந்த மாற்றமும் இல்லை. சரி! உன்னோட சம்மதத்தைப் பத்தி அப்புறம் பார்க்கலாம். நான் கூடிய சீக்கிரம் என்னோட பெற்றோர்கள்கிட்ட சம்மதம் வாங்கிடுவேன். அவங்க சம்மதிச்சா உனக்குச் சரிதானே?''

''அப்படின்னா அவங்க ஒத்துக்க மாட்டாங்கதானே?'' என்று அவள் கேட்ட கேள்விக்குப் பதிலாக இவன் ஒரு கேள்வி கேட்டான்.

''வர்ஷனா! அவங்க ஒரு சராசரி அப்பா-அம்மா மாதிரிதானே யோசிப்பாங்க. அவங்களும் இதற்கு ஒத் துக்குவாங்க. நான் போய் அவங்ககிட்ட பேசறதுக்குள்ள, ஹர்ஷினி போய் எல்லாத்தையும் கெடுத்து வச்சுட்டா. அதுதான் அவங்க குழம்பித் தடுமாறுறாங்க. கொஞ்சம் 'டைம்' கொடும்மா!'' என்றான் தன் பொற்றோர்களையும் விட்டுக் கொடுக்காமல்.

''என்னோட பெற்றோர்கள்கிட்ட சம்மதம் வாங்கினா உனக்குச் சரிதானே?நான் அவங்ககிட்ட பேசறதைப் பார்த்துக்கறேன். நீ அதைப் பத்தி எல்லாம் கவலைப் படாம என்னைப் பத்தி மட்டும் நினைச்சுட்டு, என்னைக் காதலிக்க முயற்சி பண்ணிட்டு இரு. சரியா?'' என்று



திலிருந்து எழுந்தவன், ''உன்னோட பேசிப் பேசி எனக்கு 'போர்' அடிக்குது. நீயும் பேசறதைத் தவிர வேற எதையும் பண்ண விட மாட்ட. அதனால இப்போ போய் நட்சத் ராவைக் கூட்டிட்டு வர்றியா? நான் அவளோட பேசி, கொஞ்சி, விளையாடணும்!'' என்று 'கொஞ்சி' என்பதில் அழுத்தம் கொடுத்து முடித்தான்.

உண்மை தெரியாத போதே இவனிடம் பேசிச் சமாளிக்க முடியாதபோது, இப்போ உண்மை தெரிந்த பின் இவனிடம் பேசி இனிப் பலன் இல்லை என்று உணர்ந்தவள், அவன் சொன்னதைத் தட்டாமல் அச்சுப் பிசகாமல் செய்து முடித்தாள்.

நட்சத்ராவுடன் சிறிது நேரம் கொஞ்சி விளையாடி யவன், இரு பெண்களிடமும் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினான். செல்லும் வழியில் தன் தங்கையைக் கைபேசியில் அழைத்து, ''மது! நான் அன்று உன்கிட்ட சொன்னதுபோல வர்ஷனாவுக்கு நான் காதலிச்ச விஷயம் முன்னாடியே தெரிஞ்சிருக்கு. கார்த்திக்தான் சொல்லி யிருக்கான்!'' என்று ஆரம்பித்துச் சுருக்கமாக வேண்டியதை மட்டும் தெரிவித்து, மேற்கொண்டு செய்ய நினைப்பதைப் பற்றிக் கூறினான்.

இரண்டு நாட்கள் கழித்து வேலையாயிருந்த வர்ஷ னாவின் வீட்டுக் கதவை யாரோ தட்ட, வந்து திறந்து பார்த்தவள், திகைத்தாள். ஏனென்றால் அங்கு கௌதமுடன் அவள் அண்ணன் தினகர் நின்று கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்த வர்ஷனா, ''இப்போ உங்களை இங்க யாரு வரச் சொன்னது? நீங்க என் வாழ்க்கையில வராம இருந்தா நான் நிம்மதியா இருப்பேன். இப்போ கிளம்பறீங்களா?'' என்று படபடவென்று பொரிந்தாள்.

அவள் சொன்னதைக் கேட்ட தினகர் பரிதாபமாகக் கௌதமைப் பார்க்க, அவன், ''வர்ஷனா! என்னம்மா இது? வீட்டுக்கு வந்தவங்களை இப்படியா வெளியில நிக்க வச்சுப் பேசுவ. அதுவும் எல்லோரும் வந்து போயிட்டு இருக்கிற இடத்துல. முதல்ல அவரை உள்ள கூப்பிடு!'' என்று கண்டித்தான்.

தன் அண்ணன் கௌதமைக் கல்லூரி வளாகத்தில் அனைவரின் முன் திட்டியது தேவையில்லாமல் நினைவில் வந்து போனது அவளுக்கு. தன் அண்ணனை வாய்விட்டு அழைக்க முடியாமல், அழைக்கப் பிடிக்காமல், கௌதம் சொன்னதற்காக ஒன்றும் பேசாமல் உள்ளே சென்றாள். கௌதமைத் தொடர்ந்து உள்ளே வந்த தினகர் குற்றக் குறுகுறுப்புடன் உட்காராமல் நின்று கொண்டிருந்தான். கௌதம் உள்ளே வந்தவுடன் அவனிடம் ஓடி வந்த நட்சத்ரா, தினகரைப் பார்த்து, ''யார் இவங்க?'' என்று அவனிடம் கேட்டாள்.

''உன்னோட மாமா. அவங்களை மாமான்னு கூப்பிடுங்க!'' என்று பதிலளித்தவன், ''கொஞ்ச நாளைக்கு முன்னாடி ஊட்டியில பார்த்தீங்களே, அதுக்குள்ளே மறந்திட்டீங்களா?'' என்று ஞாபகப்படுத்த முயன்றான்.

அவளுக்குத் தினகரை அடையாளம் தெரியவில்லை என்றாலும் அவளின் ஞாபகத் திறனைக் குறை கூறுவதை ரசிக்காதவள், ''ஓஹ்..ஞாபகம் இருக்கு!'' என்று பதிலளித்துத் தினகரைப் பார்த்துச் சிரித்தாள். கௌதம், தினகரிடம் கண் காட்ட, அவனும் சிறிது நேரம் நட்சத்ராவிடம் பேசிக் கொண்டிருந்தான்.

ஒன்றும் பேசாமல் அமைதியாக இருந்த வர்ஷனாவிடம், கௌதம், ''வர்ஷனா! நீ நினைக்கிற மாதிரி உன்



அண்ணா உன்னோட வீட்டை எல்லாம் அவர் பேருக்கு மாத்தி எழுதலை. உன் பேர்ல அவர் வாங்கின சொத்துக்காகத்தான் உன்கிட்ட பொய் சொல்லி உன்னை வரச் சொல்லியிருக்கிறார். சும்மா பணம் கொடுத்தா நீ வாங்க மாட்டேன்னு நினைச்சுத்தான் அப்படிச் சொல்லியிருக்கிறார். நீ அவர் மேல இருக்கிற கோபத்துல பத்திரத்தைப் படிச்சுக் கூடப் பார்க்காம கையெழுத்து போட்டிருக்க. அவர் உனக்காகத்தான் இன்னும் கல்யாணமே பண்ணிக்காம இருக்கிறாரு. உனக்கு ஒரு நல்ல வாழ்க்கைய அமைச்சிக் கொடுக்கற வரைக்கும் அவருக்கு மனசு குறுகுறுத்துட்டுதான் இருக்கும். பாவம்மா அவர்!'' என்றான்.

''இதெல்லாம் உங்க வேலையா கௌதம்? எதுக்கு இப்போ அவரை இங்க வரவழைச்சிங்க? அவர் சொன்னதை இதுவரைக்கும் நான் கேட்டது போதும்!'' என்றாள் வர்ஷனா நிதானமாகவே.

''ஆமாம்! அன்று நீ நட்சத்ராவைக் கூப்பிட வெளிய போனியே, அப்போ உன் அண்ணனோட 'நம்பரை' உன் 'செல்'ல இருந்து எடுத்துகிட்டேன். நான்தான் அவரோட பேசி இங்க வர வச்சேன். அவர் கூடப் பேசினப்போதான் நீ அவரைப்பத்தி தப்பவே நினைச்சுட்டு இருக்கிறது தெரிஞ்சது எனக்கு!'' என்று நிறுத்தினான்.

அவளிடம் இருந்து ஒரு பதிலும் கிடைக்கவில்லை என்று புரிந்து, அவனே தொடர்ந்தான். ''அப்புறம் இன்னொன்னு தெரியுமா? நாம 'காலேஜ்'ல படிச்சப்போ உனக்கு ஒரு கனவு இருக்குன்னு சொல்லுவியே, பெண்களுக்குக் கணினிப் பயிற்சி கொடுத்து அவங்க முன்னேற்றத்துக்காக உதவி செய்யப் போறதா, நீ அதை

எந்தளவுக்கு முயற்சி செஞ்சேன்னு எனக்குத் தெரியாது. ஆனா, உனக்காக, உன்னோட ஆசையை உன் அண்ணன் அங்க ஊட்டியில இருக்கும் மலைவாழ் பெண்களுக்குச் செஞ்சிட்டு இருக்கிறார்'', என்றவுடன், தன் அண்ணனை நம்பாமல் பார்த்தாள்.

''எந்த விஷயமும் பேசாம இருந்தா பூதாகரமாத்தான் தெரியும். நீங்க ரெண்டு பேரும் மனசு விட்டுப் பேசுங்க. நான் நட்சத்ராவை வெளில கூட்டிட்டுப் போறேன்.'' என்று அவர்களுக்குத் தனிமை கொடுத்து விலகினான்.

கௌதம் சென்றவுடன் இருவரும் சற்று நேரம் ஒன்றும் பேசாமல் அமைதி காத்துவிட்டுப்பிறகு, ஒரே சமயத்தில் வாயைத் திறந்தனர். ''உட்காருங்க!'' என்று வர்ஷனா விருந்தோம்பலில் இறங்க, ''என்னை மன்னிச்சுடு வர்ஷ்!'' என்று தினகர் அவளிடம் மன்னிப்பு வேண்டினான்.

தன் அண்ணனிடம் இருந்து இந்த அழைப்பைக் கடைசியாகத் தன் பெற்றோர்கள் இருக்கும் பொழுது கேட்டது தான். அதன் பின் கேட்டதேயில்லை. இன்று அதை மறுபடியும் கேட்டதும், உள்ளுக்குள்ளே ஏதோ ஒரு சுமை நீங்குவது போல உணர்ந்தாள்.

தினகர், அங்கிருந்த 'சோஃபா'வில் அமர்ந்தவாறே, ''வர்ஷ்! நீ பட்ட துன்பங்களுக்கு மன்னிச்சிடு அப்படிங்கற ஒரு வார்த்தையில நான் கேட்டது போதாது தான். ஆனா, நான் சொல்லறதை ஒரு தடவை கேளு.'' என்றான்.

பதில் சொல்லாமல் இருந்தவளின் அமைதியையே பதிலாக எடுத்துக் கொண்டவன், தொடர்ந்தான். ''நீ ஏன்மா என்னைத் தப்பாகவே நினைச்சுக்கிட்டு இருக்கே?



நான் உன்னோட நல்லதுக்கு, நீ நல்லா இருக்கணும்ன்னு தானே அப்படிச் செய்தேன். அம்மா-அப்பா போன பிறகு நம்ம பணத்துக்காக எத்தனை பேர் நம்மை ஏமாத்த முயற்சி செஞ்சாங்கன்னு உனக்குத் தெரியுமா? நானாவது பரவாயில்லை எப்படியாவது சமாளிச்சுடுவேன்னு நினைச்சேன். ஆனா, நீ ரொம்ப சின்னப் பொண்ணா வேற இருந்த. உன்னைப் பாதுகாக்கிறது என்னோட கடமைன்னு நினைச்சு, என்னோட பாசத்தைச் சரியான விதத்துல காட்டாம எப்பவுமே ஒரு கண்டிப்போடவே இருந்துட்டேன். யாராவது உன்னை ஏமாத்திடுவாங்களோ அப்படிங்கற பயத்துல உன்னோட மனசைப் பார்க்காம விட்டுட்டேன். பெண்களோட மனசு பூ மாதிரின்னு எனக்கு அப்போ புரியாமப் போயிடுச்சு.

''நான் அது மாதிரி இருந்தா உனக்கு நல்லது பண்ணறேன்னு நினைச்சேன். ஆனா, அதையே காரணமா வச்சு நீ என்னை விட்டு விலக ஆரம்பிச்சிருக்க. அது எல்லாம் எனக்கு அப்போ புரியலை. ஆனா, நீ இவ்வளவு நடந்துக்கு அப்புறமும் இந்த அண்ணனை விட்டு ஒதுங்கியே இருந்த பாரு. அதுதான் என்னால தாங்க முடியலை. நான் எவ்வளவு சொல்லியும் கேட்காம பிடிவாதமா இங்கிருந்துட்டு என்னைப் பார்க்க வர மறுத்திட்ட. என்னையும் இங்க வந்து பார்க்க விட மாட்டேன்னுட்ட. ஊட்டிக்கு வந்தப்போ கூட யாரோ மாதிரி 'ஹோட்டல்'ல ரூம் எடுத்துத் தங்கின.

''நீ என்கிட்ட பேசாத போதெல்லாம் உன்னாலதான் எனக்கு இப்படி ஒரு நிலைமைன்னு நீ சொல்லாமச் சொல்லற மாதிரி இருக்கும்மா. ஊரில இருக்கறவங்க எல்லாம் 'போய்த் தங்கச்சிக்குப் பார்த்துப், பார்த்துக் கல்யாணம் பண்ணி வச்சான் பாரு இப்படி'ன்னு என்னைத்

திட்டும்போது கூட எனக்கு வலிக்கலை. ஆனா, நீயும் என்னைத் தப்பா நினைச்சு, என்னிடம் பேசாம இருந்தது தான் எனக்கு ரொம்பவுமே வலிச்சது. இன்னும் வலிக்குது. உனக்கு நல்லது பண்ணணும்ன்னு தான் நினைச்சேன். இது மாதிரி எல்லாம் நடக்கும் என்று நான் சத்தியமா நினைக்கலை. என்னை நம்பும்மா.

"நீ நினைக்கிற மாதிரி எல்லாம் நான் கெட்டவன் இல்லை. தொழில்ல போட்டின்னு வந்தா அப்படி இருப்பேன். அதுவும் என்னை ஏமாத்த முயன்றவர்களை மட்டும் தான். நான் செஞ்சது சரின்னு சொல்லலை. ஆனா, அதுக்காக தங்கையோட வாழ்க்கையிலேயும் விளையாடுவேன்னு நினைச்சியா? கௌதம் உன்னை விரும்பறார்னு தெரிஞ்சதும், அவரும் உன்னை உன் பணத்துக்காகத் தான் ஏமாத்த நினைக்கிறார்ன்னு நினைச்சுத்தான் அவசர அவசரமா கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணினேன். ஆனா, இப்படி ஆகும்னு நான் சத்தியமா நினைக்கலை. என்னை மன்னிச்சுடு! எனக்கு உன்னை விட்டா யார் இருக்கா, சொல்லு?" என்று கண்கள் கலங்கியவாறே, கரகரத்த குரலில் முடித்தான்.

தன் அண்ணன் இதுவரை எதற்கும் அழுது பார்க்காத வர்ஷனா, ஏற்கெனவே 'வர்ஷ்' என்ற அழைப்பில் நெகிழ்ந்திருந்தவள், சிறிது அசைந்து கொடுத்தாள். மெல்லிய குரலில், "அண்ணா, அழாதீங்க! நான் உங்களை தப்பா நினைக்கலை. நடந்ததுக்கு எல்லாம் நீங்க எப்படி காரணமாக முடியும்? நான் ஏதோ தெரியாம உங்களை தப்பா நினைச்சுகிட்டேன். நான் இருக்கேன் உங்களுக்கு!" என்றாள். அதன் பிறகு அண்ணனும் தங்கையும் பேச வேண்டியதைப் பேசி மனம் தெளிந்தார்கள்.



சில மணி நேரம் கழித்து வந்த கௌதம், அண்ணனும் தங்கையும் சகஜமாகப் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து நிம்மதியடைந்தான். தினகரும், கௌதமிற்குப் பலமுறை நன்றி கூற, அவர்களிடம் இருந்து விடை பெற்றான் கௌதம். கிளம்புவதற்கு முன் வர்ஷனாவிடம், "வர்ஷனா! ஒரு நிமிஷம் கொஞ்சம் வெளில வர முடியுமா?" என்று கேட்க, அவளும் கௌதமின் கார் வரை உடன் சென்றாள்.

'வர்ஷனா! நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கறதை நான் சுயநலமான முடிவுன்னு இப்பவும் நினைக்கலை. இனி எப்பவும் நினைக்கமாட்டேன். இப்போ சொல்லு. என்னைக் கல்யாணம் பண்ணிக்கறது, உனக்கு வேற வழியில்லாம, உன்னோட சுயநலத்துக்காக எடுக்கற முடிவா இருக்காதுன்னு நீ நினைக்கற இல்லை?" என்று கேட்டான்.

தனக்காக இவன் ஏன் இத்தனை மெனக் கெடுகிறான் என்று இருந்தது அவளுக்கு. அவள் தன் எண்ணங்களில் கூடத் தவிப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை என்று புரிந்தது. அதனால்தான் தன் அண்ணனை அழைத்து வந்து பேச வைத்தான் என்று விளங்கியது. இவ்வனைத்திலுமே அவனின் காதல் மட்டுமே தெரிந்தது.

ஒரு புன்னகையுடன், "அம்மா-அப்பாகிட்ட முதல்ல பேசிச் சம்மதம் வாங்குங்க!" என்று முதல் முறையாக, மறைமுகமாகவேனும் அவனுக்குத் தன் சம்மதத்தைத் தெரிவித்தாள்.

"தேங்க்ஸ்டா!" என்று சொல்லி, விசிலடித்தவாறே அங்கிருந்து கிளம்பினான் கௌதம்.

24

''பெண்ணே,
நீ முள்ளாகத் தைத்ததால்
உன்னை ரோஜாவென்றேன்
உன் மலர்ச்சியை நுகராமல்!
நீ இருளாக மறைத்ததால்
உன்னை நிலவென்றேன்
உன் வெண்மையை அறியாமல்!
நீ புயலாகச் சீறியதால்
உன்னைக் காற்றென்றேன்
உன் வருடலை உணராமல்!
நீ கடினமாக இறுகியதால்
உன்னைக் கல்லென்றேன்
உன்னில் ஈரம் இருப்பதை அறியாமல்!
என்னிடம் காதலுடன் வந்தாய்!''

வர்ஷனாவிடம் இருந்து சம்மதம் கிடைத்தபின்னும் கௌதமினால் முழுவதும் சந்தோஷத்தில் திளைத்துக் கனவு கண்டுகொண்டு இருக்க முடியவில்லை. இனித் தன்னைப் பெற்றவர்களை எப்படி ஒத்துக் கொள்ள வைப்பது என்று யோசித்து மண்டையைப் பிய்த்துக் கொண்டிருந்தான். அவ்வாறு அவன் திண்டாடிக் கொண் டிருந்த பொழுது, அவனுக்கு, அவர் அறியாமலேயே உத்விக்கரம் நீட்டினார் அவனின் பெரியம்மா, அதாவது ராஜேஸ்வரியின் தமக்கை.

கௌதமின் பெரியம்மா, தன் மகள் ஜனனியின் திருமணம் முடிவான விஷயத்தைப் பற்றிப் பகிர்ந்து



கொள்ளவென, மகிழ்ச்சியுடன் மதுரையில் இருந்து கிளம்பி வந்திருந்தார். திருமண நாள் நெருங்கினால் வேலைப் பளுவினால், வர இயலாமல் போய்விட்டால் என்ன செய்வது என்றும், கோவையில் துணி, நகைகள் என்று வாங்கவும், ஜனனியை அழைத்துக் கொண்டு இங்கே வந்திருந்தார்.

ஜனனிக்குப் பல வருடங்களாகக் கல்யாணத்திற்கு மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஏதோ ஒரு விதத்தில் அதற்குத் தடங்கல் ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. ஒரு முறை மாப்பிள்ளை வந்த வண்டி விபத் துக்குள் ஆகிவிட்டதனால், குடித்துவிட்டு வண்டியை ஓட்டிய ஓட்டுனரை விட்டுவிட்டுப் பெண் ராசியில்லை என்றனர். மற்றுமொரு முறை, இவளைப் பார்த்துவிட்டுச் சென்ற மாப்பிள்ளைக்கு, அமெரிக்காவில் நடந்த வேலைக் குறைப்பில், வேலை போய்விட, உலக நடப்பைப் பற்றி புரிந்து கொள்ளாமல், அதற்கும் இவள்தான் பலிகடா ஆனாள். அதனால், அனைவரும், அவள் ராசியில்லா தவள் என்று முத்திரை குத்தி அவளை நிராகரித்து வந்தனர்.

ஊர் வாயும் சும்மா இல்லாமல் அதை ஊதி ஊதிப் பெரிதுபடுத்தி, இப்பொழுது அவளுக்கு இருபத்தெட்டு வயதாகி இருந்தது. இக்காரணத்தினால் குடும்பத்தில் அனைவரும் கவலையுடன் இருந்தனர். இத்தனை நாட்களுக்குப் பிறகு, இப்பொழுதுதான் அவளுக்குக் கல்யாணம் முடிவாகி இருக்கின்றது. ஏற்கெனவே கல்யாணம் முடிவான விஷயம் தெரிந்திருந்தாலும், கௌதமின் குடும் பத்தாருக்கு மற்றப்படி முழு விவரம் எதுவும் தெரியாது.

ஜனனியைப் பற்றியும் அவள் கல்யாணத்தைப் பற்றியும், ஒரு நாள் மாலை வேளையில் பேசிக் கொண்டிருக்கும் பொழுது, ராஜேஸ்வரி,தன் தமக்கையிடம், ''ஆமாம்

அக்கா! கேட்கணும்ன்னு நினைச்சேன். மாப்பிள்ளை வீட்ல எல்லோரும் எப்படி? ஜாதகம் அது இதுன்னு ஏதாவது சொன்னாங்களா? எதுக்கு இவ்வளவு நாள் கல்யாணம் ஆகலைன்னு கேட்டாங்களா? அக்கம் பக்கம் இருக்கிறவங்க சும்மா இருந்தாங்களா? நீங்க என்ன சொன்னீங்க?'' என்று பதில் தெரிந்து கொள்ளும் ஆவலில், பல கேள்விகளை அடுக்கினார். அவர் பேசும்பொழுது, கௌதம், ஜனனி, மற்றும் ஸ்ரீனிவாசன் ஆகிய மூவரும் அருகில் உட்கார்ந்து, இவர்களின் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

அவர் தமக்கையும், ''அவங்க வீட்ல எல்லா விஷயமும் தெரிஞ்சுதான் வந்து பொண்ணு கேட்டாங்க. மாப்பிள்ளை வீட்ல இதுல எல்லாம் நம்பிக்கை இல்லைன்னுட்டாங்க. மாப்பிள்ளைக்கு நம்ம ஜனனியை எங்கோ பார்த்து ரொம்பப் பிடிச்சுப் போச்சாம். அவர் வீட்லேயும், சும்மா ஜாதகம், ராசியில்லாதவ, தோஷம்ன்னு சொல்லித் தட்டிக் கழிக்க விரும்பலைன்னு நேரடியாவே சொல்லிட்டாங்க. அதான் உடனே கல்யாணத்தையும் முடிவு பண்ணிட்டாங்க. எங்க இவளுக்குக் கல்யாணமே ஆகாதோன்னு கவலைப் பட்டுட்டு இருந்தோம். இப்போ தான் அந்த ஆண்டவன் கண்ணைத் திறந்திருக்கான். இப்போ தான் எங்களுக்கும் நிம்மதி!'' என்று மனப்பாரம் இறங்கிய குரலில் பதிலளித்தார்.

''ஆமா! ஆமா! ஜனனிக்கு எங்க எல்லாம் தேடினோம்? கடைசியில இப்போ தான் நல்லபடியா அமைஞ்சிருக்கு. ஜாதகம் பார்க்க வேண்டியதுதான், நம்ப வேண்டியது தான். அதுக்காக இப்படியா இருக்கறது? சும்மா, தொட்டதுக்கு எல்லாம் பார்த்துட்டு, நடந்த தப்புக்கு எல்லாம் பொண்ணு ராசியில்லை. அவள் ஜாதகம் சரியில்லைன்னு...'' என்று அவர் சொல்லும் பொழுது, ஒரு கூரிய பார்வையைத் தன் தாயிடம் வீசினான் கௌதம்.



அவரோ, அவன் பார்வையின் கூர்மையை அறியாமல், ''அதுவுமில்லாம, பொண்ணு பார்க்க வரப்போ, குடிகார ஆளை வண்டி ஓட்டச் சொல்லறது, அப்புறம் விபதது நடந்ததும், அதுக்கும் பொண்ணுதான் காரணம்ன்னு கதை கட்டறது. இந்த ஊரும் அதை நம்பி, அந்தக் கதையை எல்லோர்கிட்டேயும் பரப்பிடறாங்க. இவங்களுக்கு வேற வேலையே இல்லை. மத்தவங்க வீட்ல என்ன நடக்கும்ன்னு காத்திட்டு இருப்பாங்க போல! அதை நம்பறதுக்கும் ஆளுங்க இருக்காங்களே, அவங்களைச் சொல்லணும்!'' என்று அங்கலாய்த்தார்.

பின், ''ஏம்ப்பா கௌதம்! அந்த மாப்பிள்ளை வீட்ல எல்லோருக்கும் ரொம்ப நல்ல மனசு இல்லை. இந்தக் காலத்துல இப்படியும் இருக்காங்களே. மாப்பிள்ளை மகாராசனா இருக்கட்டும்!'' என்று பார்த்திராத அந்த மாப்பிள்ளையை சந்தோசமாக வாழ்த்திக் கொண்டிருந்தார்.

தன் தாய் சொன்னதைக் கேட்டு, அதை ஆமோதிப்பதற்காகத் தலையை ஆட்டி வைத்தவன், ''நம்ம ஜனனி மட்டும் என்னவாம்?'' என்று பதிலளித்தான். ஆனால், அதன் கூடவே பயணித்த அவனின் கூரிய பார்வையை ராஜேஸ்வரி கவனிக்கவில்லை. அதைக் கவனித்த ஸ்ரீனிவாசனோ ஒன்றும் பேசாமல் ஏதோ யோசனையில் ஆழ்ந்தார்.

கௌதமின் பெரியம்மா, மேலும் இரண்டு தினங்கள் அங்கிருந்து கல்யாணத்திற்கு என வாங்க நினைத்ததை எல்லாம் வாங்கிக் கொண்டு, அனைவரையும் திருமணத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்துவிட்டு மதுரைக்குக் கிளம்பினார்.

அவன் பெரியம்மா கிளம்பிச் செல்லும்வரை பொறுமையுடன் காத்திருந்தவன், தன் பெற்றோர்களிடம் சென்று, ''ஜனனியோட நல்ல மனசுக்கு எல்லாம் நல்லபடியா முடிஞ்சது இல்லைம்மா?'' என்று ஆரம்பித்தான்.

அவனின் பேச்சு செல்லப் போகும் திசையைப் பற்றி ஆராய்ச்சி செய்யாமல், அவன் அன்னையும், ''ஆமாம்ப்பா! கல்யாணத்துக்கு ஒரு வாரம், பத்து நாளுக்கு முன்னாடியே என்னை வரச் சொன்னாங்க. அதுக்குள்ள உனக்கு ஒரு நல்லது பண்ணிட்டா, நானும் நிம்மதியா மருமகள் கையில எல்லாத்தையும் ஒப்படைச்சிட்டு சந்தோசமா கிளம்பிப் போவேன்'', என்று தாமாகவே கௌதமிற்கு எடுத்துக் கொடுத்தார்.

''நல்ல முடிவுதானே சீக்கிரமா சொல்லிடலாம். ஆமாம், ஜனனிக்குப் பார்த்திருக்கும் மாப்பிள்ளை வீட்ல அவங்க நம்ம ஜனனியைப் பார்த்து மட்டும்தானே கல்யாணம் பண்ணிக்கப் போறாங்க. ஜாதகத்தை இல்லையே?'' என்று கேட்டான்.

அவனின் உள்நோக்குப் புரியாமல், ''ஆமாம்ப்பா! எவ்வளவு நாளா பார்த்திட்டு இருக்கோம். இப்போதான் நல்ல காலம் வந்திருக்கு அவளுக்கு. அவங்க ரொம்ப நல்லவங்க போல!'' என்று சந்தோசமாகப் பதிலளித்தார் ராஜேஸ்வரி.

''அப்போ நீங்க மட்டும் ஏன்மா, பொண்ணு ராசியில்லைன்னு காரணம் காட்டி வர்ஷனாவைத் தட்டிக் கழிக்கறீங்க? நீங்க நல்லவங்க இல்லையா? அவளைக் கல்யாணம் பண்ண நினைக்கும் நான் நல்லவன் இல்லையா? முகம் தெரியாத ஆளை மகராசனா இருக்கட்டும்ன்னு வாழ்த்தறீங்க. முகம் தெரிஞ்ச உங்க பையனை மட்டும் ஏன்மா அப்படி நீங்க வாழ்த்தக் கூடாது? அதுவுமில்லாம, ஊர்ல ஆயிரம் கதை பேசுவாங்கதான். அதை எல்லாம் நீங்க நம்பணுமா? அப்பா, நீங்க என்ன நினைக்கறீங்க?'' என்று பட்டென்று கேட்டான்.

அவன் கேள்விகளில் இருந்த உண்மையை உணர்ந்த அவன் அன்னை, பேச்சு வராமல் அவனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.



''என்னம்மா பார்க்கறீங்க? வர்ஷனாவைக் கல்யாணம் பண்ணினா ஊர்ல என்ன பேசுவாங்கன்னு நீங்க கேட்டது தான். ஊர்ல சொல்லறதை நம்பறதுக்கும் ஆளுங்க இருக்காங்களேன்னு நீங்களே சொன்னீங்களே. கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க. ஊர்ல இருக்கறவங்களா வந்து நம்ம வீட்ல இருந்து தினம் தினம் நம்ம கூட வாழப் போறாங்க?'' என்று, அவர் தன் தமக்கையிடம் சொன்ன வார்த்தைகளையே திருப்பிப்படித்து, கேள்விகள் கேட்டு, அவரைத் திகைக்கச் செய்தான்.

''ஏம்பா! அதுவும் இதுவும் ஒண்ணா? ஊர்ல இருக்கறவங்கன்னு சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன். வர்ஷனாவுக்கு ஏற்கெனவே கல்யாணம் ஆகி ஒரு குழந்தையும் இருக்கு . நீ என்ன பேசறேன்னு யோசிச்சுப் பேசறியா?'' என்றார் திகைப்பைச் சரி செய்தவாறே.

''அம்மா! அதுதான் இப்போ உங்களுக்குப் பெரிய விஷயமா படுதா? அதைப் பத்தி கவலைப்பட வேண்டியது - கல்யாணம் பண்ணி, அவளோட குடும்பம் நடத்த வேண்டிய நான். எனக்கே அதுல ஒரு பிரச்சனையும் இல்லாத போது, நீங்க ஏன் இவ்வளவு தயங்கறீங்க? நடந்ததுக்கு எல்லாம் வர்ஷனா எப்படிப் பொறுப்பாக முடியும்? உங்க பொண்ணுக்குன்னு வரும் போது ஒரு மாதிரி யோசிக்கறீங்களே, வர்ஷானாவும் ஒரு பொண்ணு தானேன்னு யோசிச்சுப் பாருங்க. 'ப்ளீஸ்'ம்மா. முதல்ல நீங்க சம்மதிச்ச அதே பொண்ணுதான் இந்த வர்ஷனா. இப்போ மட்டும் சூழ்நிலையைக் காரணம் காட்டி வேண்டாம்ன்னு சொல்லறீங்க. அப்போ முதல்ல நீங்க சம்மதிச்சது வர்ஷனாவை இல்லையா? வெறும் சூழ்நிலையையா? அப்போ அதுல அன்பு எங்கிருக்கும்மா? நீங்க எதை நினைச்சுக் குழம்பறீங்கன்னு எனக்குக் குழப்பமா இருக்கு.

அதுவுமில்லாம, நான் வர்ஷனாவை சந்தோசமா வச்சுக்குவேனான்னு எனக்கு என் மேல இருக்கிற நம்பிக்கையை விட, எனக்கு உங்க மேல இருக்கிற நம்பிக்கை ஜாஸ்தி. இதுக்கு மேல என்ன சொல்லி உங்களுக்குப் புரிய வைக்கறதுன்னு எனக்குத் தெரியலை. யோசிங்க, முடிவு உங்க கையில தான் இருக்கு'', என்றவன், அதற்கு மேல் அங்கு நிற்காமல், அவர்களுக்கு யோசிக்கத் தனிமை கொடுத்து விலகிச் சென்றான். ஏற்கெனவே யோசிக்க ஆரம்பித்திருந்த ஸ்ரீனிவாசனும், அவன் சொல்வதை இடைவிடாமல் கேட்டுக் கொண்டிருந்தார். கௌதமின் கேள்விகளில் இருந்த நியாயத்தை உணர்ந்து அமைதி காத்தார்.

''என்னங்க! நாம இவனோட நல்லதுக்குத்தானே சொல்லறோம். ஆனா, இவன் இப்படிச் சொல்லிட்டுப் போறான்'', என்று எரிச்சலுடன் தன் புலம்பலைத் தன் கணவனிடம் ஆரம்பித்தார். ஆனால், அவர் நினைத்ததற்குப் புறம்பாக அவரின் குரல் தேய்ந்துதான் ஒலித்தது.

சீனிவாசனோ, ''அவன் சொல்லறதுலேயும் நியாயம் இருக்கும்மா. கொஞ்சம் யோசிப்போம்'', என்று ஒரே வரியில் முடித்துவிட்டார்.

அதற்கடுத்து வந்த நாட்களில், கௌதமும் தீபியை அழைத்து, வர்ஷனாவின் அரை குறைச் சம்மதத்தைப் பற்றியும், தன் தாயிடம் சொன்னதைப் பற்றியும் தெரிவிக்க, அவளும் இதுதான் தக்க தருணம் என்று உணர்ந்து, குழந்தைகளுடன் பெங்களூருவில் இருந்து வந்து, ஏற்கெனவே இளக ஆரம்பித்திருந்த தன் அத்தை - மாமாவின் மனதை மேலும் இளக்கினாள்.

''அத்தை! இப்போதான் கௌதம் எல்லாம் சொன்னான்'', என்று அப்பொழுதுதான் அவளுக்கு விஷயம் தெரியும் என்பது போலப் பேச்சை ஆரம்பித்தாள்.



''எதுக்கு இவ்வளவு யோசிக்கறீங்க மாமா? கௌதமிற்குப் பிடிச்சிருந்தா அவன் இஷ்டத்துக்கு விட்டுடுங்க. அம்மா-அப்பா இல்லாம வர்ஷனா இத்தனை வருஷம் கஷ்டப்பட்டது போதும், அத்தை. அவளோட அண்ணன் அவசரப்பட்டு ஒரு தப்புப் பண்ணாம இருந்திருந்தா இந்நேரம் வர்ஷனா கௌதமைத்தானே கல்யாணம் பண்ணி இருப்பா. அப்போ நீங்களும் சம்மதிச்சீங்க தானே. வர்ஷனா நினைச்சிருந்தா அப்பவே தன் அண்ணனை எதிர்த்து வந்து நம்ம கௌதமைக் கல்யாணம் பண்ணி இருக்கலாம்தானே. ஆனா, அவளோட அண்ணன் சொன்னதுக்கு மறுபேச்சுப் பேசாம, அவரை நோகடிக்காம நடந்துக்கிட்டா. இப்படி அன்பா இருக்கிற அவள் மேல நாமளும் அன்பு செலுத்த முயற்சி செய்யலாமே!'' என்று அவளுக்குத் தெரிந்த விஷயத்தைத் தன் அத்தை, மாமாவுக்குத் தகுந்த வகையில் மாற்றிக் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துச் சொன்னாள்.

''வர்ஷனா அன்புக்காகவும், நல்ல உறவுகளுக்காகவும் ஏங்கிக் கொண்டிருக்கும், என்னை மாதிரி, மது மாதிரி, ஒரு சராசரிப் பெண்தான். அத்தை, வர்ஷனாவை நாம ஒரு குடும்பமா இருந்து வரவேற்கறது எத்தனை சந்தோசமான விஷயம். அதுக்குப் போய் எதுக்கு இவ்வளவு தயக்கம்? நாங்க சந்தோசமா இருக்கணும்ன்னு நினைக்கற நீங்க ஏன் வர்ஷனாவைப் பத்தி யோசிச்சுப் பார்க்க மாட்டேங்கறீங்க? சரின்னு சொல்லுங்க அத்தை. கௌதம் இத்தனை வருஷமா எவ்வளவு ரணத்தையும் மனசுல வச்சுக்கிட்டு உங்களுக்காக, மற்றவங்களுக்காகச் சிரிச்சுப் பேசிட்டு இருக்கான். அவனைக் கொஞ்சமே கொஞ்சம் புரிஞ்சுக்கோங்க மாமா!'' என்று இருவரையும் பேசிப் பேசியே கரைத்தாள்.

''நீ சொல்லறது எல்லாம் சரிதான் தீபி. ஆனா, ஹர்ஷினியைப் பிடிச்சிருக்குன்னு நாங்க வாக்குக் கொடுத்துட்டோமே. அவங்ககிட்ட போய் இப்போ என்னன்னு சொல்லறது?'' என்றார் ராஜேஸ்வரி, அதுதான் மிகப் பெரிய விஷயம் போல.

''அவ்வளவுதானே. நாம சொன்னா அவங்க புரிஞ்சிக்க மாட்டாங்களா என்ன? பேசிப் பார்த்தாதானே தெரியும் அத்தை. முதல்ல மதுகிட்ட பேசலாம். அப்புறம் வசந்தும் கௌதமோட 'ஃபிரெண்ட்' தானே. அவரும் புரிஞ்சிப்பார். இது எல்லாம் ஒரு பெரிய விஷயமா? கவலையேபடாதீங்க!'' என்று தன் அத்தைக்குத் தைரியம் அளித்தாள்.

தாமதித்துச் செயல்பட்டால் தன் அத்தையும், மாமாவும் மறுபடியும் வேறு மாதிரி யோசிக்க ஆரம்பித்து விடுவார்கள் என்று உணர்ந்த தீபி, விஷயத்தை மின்னலை விட மிக விரைவாக மதுவின் காதுக்கு அனுப்பினாள். அன்று மாலையே, மதுவும், தன் மாமனாருடன் வந்து, அவள் பெற்றோர்களிடம் பேசினாள்.

தேவராஜனும், அவர்களிடம், ''சம்பந்தி! இதுல யோசிக்கறதுக்கு என்ன இருக்கு? நான் தப்பா நினைச்சுக்குவேன்னு நீங்க தயங்கவே வேண்டாம். ஹர்ஷினிக்குக் கௌதமைப் பிடிச்சிருந்தது உண்மைதான். ஆனால், கௌதமிற்கு வர்ஷனாவைத்தானே பிடிச்சிருக்கு? பிடிக்காதவங்களைக் கல்யாணம் பண்ணி வச்சு என்ன சாதிக்கப் போறோம்? பார்க்கப் போனா வர்ஷனாவும் எனக்கு ஒரு பொண்ணு மாதிரிதானே. அவங்க வாழப் போறது ஒரு வாழ்க்கை. அதை அவங்க விருப்பத்துக்கு வாழ விடுங்க!'' என்று நேரடியாகப் பேசி, ஹர்ஷினி பற்றிய பிரச்சனைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார்.



தேவராஜனே நேரில் வந்து இதைப் பற்றிப் பேசவும், மனதில் உறுத்திக் கொண்டிருந்த விஷயமும் விடை பெற்றுச் செல்ல, தயங்கிக் கொண்டிருந்த ஸ்ரீனிவாசன் தயக்கத்தை உடைத்தெறிந்தார். அதற்கு மேல் ராஜேஸ்வரியினாலும் தாக்குப் பிடிக்க முடியாமல் கௌதமிற்குத் தன் சம்மதத்தைத் தெரிவித்தார்.

அன்று வேலை முடிந்து வீட்டிற்கு வந்த கௌதமிடம், தன் முப்பது பல்லையும் காட்டி வரவேற்றாள் தீபி. அவளின் செயலோடு, மது மற்றும் தேவராஜனின் வருகை, கௌதமிற்குத் தன் பெற்றவர்களின் சம்மதத்தை உணர்த்தி, சிரிப்பை வரவழைத்தாலும், அவர்களின் வாயிலிருந்து கேட்கும் வரை அவனின் நெஞ்சம் தடக் தடக் என்றுதான் அடித்துக் கொண்டிருந்தது.

''வாங்க! வாங்க! மாப்பிள்ளை சார்! அத்தை கூடப் பேசிப் பேசியே எனக்குத் தொண்டைத் தண்ணி வத்திப் போச்சு. அதனால எனக்கு ஐஸ் கிரீம், 'ஜூஸ்' இது மாதிரி எல்லாம் வாங்கிக் கொடுத்து என்னோட தொண்டையைச் சரி பண்ணுங்க'', என்று அவர்களுக்கு வேலை வைக்காமலேயே, அவனைக் கிண்டல் செய்து விஷயத்தைப் போட்டு உடைத்தாள்.

ஆனாலும், அவன் நம்பாமல் தன் பெற்றோர்களைப் பார்க்க, அவன் அன்னை, ''கௌதம்! இந்தப் புதன்கிழமை உனக்கு ஏதாவது வேலை இருக்கா? நாம போய் வர்ஷனாகிட்ட பேசிக் கல்யாணத்தை முடிவு பண்ணிட்டு வரலாம்'', என்று அவன் மனதில் சாமரத்தை விசிறினார்.

''அம்மா! ரொம்ப தேங்க்ஸ் என்னை புரிஞ்சுக்கிட்டதுக்கு!'' என்று தன் அன்னையிடம் சொன்னவன், தன் தந்தையைப் பார்த்து, ''அப்பா!'' என்றான் பேச்சு வராமல். அவர்களின் சம்மதத்தைப் பெற்ற கௌதமின் மகிழ்ச்சியை அளவிட முடியவில்லை.

''வர்ஷனாவோட அண்ணனைக் கூப்பிட்டுச் சொல் லிடுப்பா. அவர் இங்கதான் இருக்காரா?'' என்று கேட்டார்.

''ஆமாம்ப்பா! சொல்லிடறேன்'', என்று பதிலளித்து, அங்கிருந்து நகர்ந்து உடனே தினகரை அழைத்து சந் தோசமாக விஷயத்தைப் பகிர்ந்து கொண்டான் கௌதம்.

''கௌதம்! ரொம்பத் தேங்க்ஸ்! உங்களை நான் அப்போ ரொம்பவும் தப்பாப் பேசிட்டேன். என்னை மன்னிச் சிடுங்க. உங்களை மறுபடியும் 'கான்டேக்ட்' பண்ண நினைச்சேன். ஆனா, என்னையும் என் தங்கையையும் நீங்க தப்பா நினைச்சுடக் கூடாதுன்னு தான் பண் ணலை'', என்று தன்னிலை விளக்கம் அளித்தான் தினகர்.

'தினகர்! நான் உங்களை விடச் சின்னவன். அதனால நீங்க என்னை வா, போ என்றே கூப்பிடுங்க. இந்த மரியாதை எல்லாம் வேண்டாம். நடந்ததைப் பத்தி பேசி 'டைம்' 'வேஸ்ட்' பண்ண வேண்டாமே. இனி நடக்கப் போறதைப் பத்தி பேசலாம்'', என்று சொன்னவன், சிறிது நேரம் அதைப் பற்றிப் பேசிவிட்டு வைத்தான்.

தன் தந்தையிடம் சென்று அவன் பேசியதைப் பற்றிக் கூற, ''கௌதம்! வேலை முடிஞ்சதும் என்னை மறந்துட் டியே. நான் கேட்டது என்ன ஆச்சு?'' என்று அவனை உசுப்பினாள் தீபி. அவனும், அப்பொழுதே மது, தீபி மற்றும் அவள் குழந்தைகளை வெளியில் அழைத்துச் சென்றான். மது வசந்துக்குத் தகவல் தெரிவிக்க, அவனும் பாலாவை அழைத்துக் கொண்டு வருவதாகத் தெரிவித்தான்.

கௌதமின் பெற்றோர்கள் சம்மதம் கிடைத்தவுடன், புதனன்று மாலை, முதலில் வர்ஷனாவிடம் சென்று பேசி அவளின் தயக்கத்தை உடைக்க எண்ணிய மது, வெகு விரைவிலேயே கிளம்பித் தன் அன்னையையும், தீபியை யும் அழைத்துக் கொண்டு வர்ஷனாவின் வீட்டிற்குச்



சென்றாள். தன் அண்ணனும், தந்தையும் மெதுவாக வந்து சேரட்டும் என்று நினைத்திருந்தாள். மதுவிடம் இருந்தும், தீபியுடன் இருந்தும் வர்ஷனாவைப் பற்றிய விவரங்கள் தெரிந்து கொண்ட ராஜேஸ்வரி, வர்ஷனாவைப் பார்த்தவுடன் அவருக்கு, அவள் பட்ட துன்பங்கள் நினை வுக்கு வர, இனி அவளையும் மதுவைப் போலப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்தார்.

சில வாரங்களுக்கு முன் நட்சத்ராவைத் திட்டியதற்கும் சேர்த்து இன்று நட்சத்ராவுடன் அன்பாக ஒட்டிக் கொண்டார். அவர் திட்டியதையே மறந்திருந்த நட்சத்ரா, வீடு நிறைய ஆட்கள் இருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியில் தீபியின் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந் தாள். கௌதமும் வந்து சேர, அனைவரும் கூட கல் யாணத்தைப் பற்றிப் பேசி முடிவெடுத்தார்கள்.

அடுத்த வாரத்தில், ஒரு நாள் மிக எளிதாகக் கோவிலில் வைத்துக் கொள்ளலாம் என்று கௌதம் முடிவாகச் சொல்லிவிட, அனைவரும் வர்ஷனாவின் மனநிலை மையைக் கருத்தில் கொண்டு ''சரி'', என்றனர்.

கௌதமின் கல்யாணத்தைப் பற்றி அறிந்த வசந்தும், பாலாவும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். பாலா மகிழ்ச் சியைக் காட்டினாலும் கௌதமிடம் சண்டைக்கு நின்றான்.

''கௌதம், நீ எல்லாம் ஒரு 'ஃபிரெண்டா? இத்தனை நல்ல நாட்களை முன்னாடி வச்சுக்கிட்டு, எனக்கு மட்டும் ஏன்டா ஒரு மாசம் கழிச்சு கல்யாணத்தை முடிவு செஞ்ச? இப்போ அவதிப் படறது யாரு?'' என்று போலியாகச் சலித்துக் கொண்டான்.

''அடப்பாவி! அன்றைக்கு என்னமோ, உங்களை மாதிரி 'ஃபிரெண்ட்ஸ்' கிடைக்கக் கொடுத்து வச்சிருக் கணும்னு 'டயலாக்' எல்லாம் பேசின. அதுக்குள்ள என்ன

ஆச்சு?'' என்று அவன் முதுகில் இரண்டு வைத்தான் வசந்த்.

''உனக்கு என்னடா கல்யாணம பண்ணி சந்தோசமாகக் குடும்பம் நடத்திட்டு இருக்க. இவனும் சீக்கிரமா கல்யாணம் பண்ணிக்குவான். நான் மட்டும் இன்னும் ரெண்டு வாரம் காத்திருக்கணுமாக்கும். அவனவன் அவஸ்தை அவனவனுக்குத்தான் தெரியும்!'' என்றான் கண்களில் சிரிப்புடன். வசந்திடம் இருந்து நல்ல விதமாகக் கவனிப்பைப் பெற்ற பின் தான் பாலா அடங்கினான். இவர்களின் பேச்சில் கௌதம் கலந்து கொண்டான் என்றா நினைத்தீர்கள்?

கௌதமிற்கும் வர்ஷனாவிற்கும் நடக்கவிருக்கும் திருமணத்தைப் பற்றி அறிந்த வசந்தின் அண்ணனும் அண்ணியும் வாழ்த்துத் தெரிவித்தனர். உண்மை அறிந்த ஹர்ஷினி தான் மிகவும் ஆவேசம் கொண்டாள்.

''எனக்குக் கல்யாணம் பேசிட்டு வாங்கன்னு சொன்னா, யாரோ ஒரு பொண்ணுக்காகப் போய்ச் சம்பந்தம் பேசிட்டு வந்திருக்கீங்க. உங்களுக்குக் கொஞ்சமாவது உங்க பொண்ணு மேல அக்கறை இருக்கா? நான் எப்படிப் போனா என்னன்னு நீங்களும் நினைக்கறீங்க. வசந்தும் அப்படித்தான் நினைக்கிறான்!'' என்று கொதித்தாள்.

அவள் பேசியதைக் கேட்ட அவள் பெற்றோர்கள், அவள் கௌதமின் விருப்பம் இல்லாமல் நிச்சயத்திற்கு ஏற்பாடு பண்ணினதைக் கண்டித்து, நன்றாகத் திட்டி, அவளை அடக்கி வைத்தனர்.

''உன் மேல அக்கறை இல்லாமத்தான், நீயும் கௌதமும் விரும்பறீங்கன்னு சொன்னவுடனே போய் அவங்ககிட்ட பேசிட்டு வந்தேன். என் பொண்ணு இப்படி எல்லாம் குறுக்கு வழியில யோசிக்க மாட்டா, பொய் சொல்ல



மாட்டான்னு நான் எவ்வளவு நம்பிக்கை வச்சிருந்தேன்? ஏம்மா! உன்னை நல்லா செல்லம் கொடுத்து வளர்த்ததுக்கு எங்களை நல்லா தலை குனிய வச்சுட்ட. உனக்கு நாங்க ஏதாவது குறை வச்சோமா? ஏன் பொய் சொல்லிக் கௌதமோட இஷ்டம் இல்லாம இப்படி எல்லாம் பண்ணின?

''நம்மைப் பத்தி சம்பந்தி வீட்ல என்ன நினைப்பாங்க? கொஞ்சமாவது யோசிச்சியா? இதே வேற யாராவதா இருந்தா உன்னைப் பத்தி ஊர் முழுக்கச் சொல்லி வச்சிருப்பாங்க. கௌதமா இருக்கப் போய் என்கிட்ட நேரடியா வந்து பேசிட்டுப் போனான். அவனைப் பார்த்தாவது கத்துக்கோ. உனக்கு ஒண்ணு வேணும்ன்னா, இப்படியா மத்தவங்க மனசுன்னு கூடப் பார்க்காம இருப்பே. ச்சே! உன்னை என் பொண்ணுன்னு சொல்லிக்கவே வெட்கமா இருக்கு!'' என்று பொரிந்தார் தேவராஜன்.

தேவராஜனுடன் சேர்ந்து பூரணியும், ''ஹர்ஷினி! நீ இப்படி நடந்துக்குவேன்னு நான் கொஞ்சம் கூட நினைக்கலை. மது நம்மைப் பத்தி என்ன நினைப்பான்னு கூடவா நீ யோசிக்கலை. நீ பண்ணினது கொஞ்சமும் சரியில்லை!'' என்று அவர் பங்கிற்குப் பொரிய, ஹர்ஷினி மிரண்டு போனாள்.

இதுவரை அவள் தந்தை திட்டியுள்ளார்தான். ஆனால், அவளை இவ்வளவு மோசமாக, தன் பெண் என்று நினைக்கவே வெட்கமாக இருப்பதாகக் கடிந்து கொண்டதைக் கேட்ட ஹர்ஷினிக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது. தன் தாய் இதுவரை அவளை 'ஹனி' என்றுதான் அழைத்திருக்கிறார். இன்று ஹர்ஷினி என்று அவளை அழைத்தது அவளுக்குப் பொறுக்கவில்லை. இது போதாதென்று, அவள் சின்ன அண்ணனும்

அவளைக் கடிந்து, இவளின் கோபத்தை அதிகரித்தான். அதே கோபத்துடனும், கழிவிரக்கத்துடனும் அடுத்துக் கிடைத்த சந்தர்ப்பத்தில் கௌதமின் அலுவலகத்திற்கு வந்து அவனிடம் அவள் கேட்க நினைத்ததைக் கேட்டாள் ஹர்ஷினி.

ஹர்ஷினியைப் பார்த்து ஆச்சரியமடைந்த கௌதம், ''ஹர்ஷினி! வா. உட்கார்'', என்றான் நிதானமாக.

'இவனுக்கு மட்டும் எப்படி இப்படி எல்லாம் நடந்து கொள்ள முடிகிறது', என்று நினைத்துக் கொண்டவள், அவன் உட்காரச் சொன்னதைக் காதிலேயே போட்டுக் கொள்ளாமல், ''கௌதம்! என்கிட்டே இல்லாதது எது வர்ஷனாகிட்ட இருக்குன்னு அவளைக் கல்யாணம் பண்ணப் போறீங்க?'' என்று அவனிடம் கேட்டாள்.

''முதல்ல நான் கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்லு. என்னை எதனால உனக்கு ரொம்பப் பிடிச்சது?'' என்றான்.

''இதென்ன கேள்வி? பார்க்க நல்லா இருக்கீங்க. நல்லாப் படிச்சிருக்கீங்க. திறமையா 'பிசினஸ்' பண்ணறீங்க. நீங்க சிரிச்சா அழகா இருக்கும்ன்னு என் 'ஃபிரெண்ட்ஸ்' எல்லோரும் என்கிட்ட சொன்னாங்க. உங்களைப் பார்த்து என்னோட 'ஃபிரெண்ட்ஸ்' எல்லோரும் உங்களை மாதிரி ஒருத்தர் கிடைக்கக் கொடுத்து வச்சிருக்கணும்ன்னு சொன்னாங்க. இதுக்கு மேல என்ன காரணம் வேணும்?'' என்றாள் படபடப்பாக.

அதைக் கேட்டுச் சிரித்தவன், ''இத்தனை சொன்ன நீ, உன் மனசைப் பத்தி ஒரு தடவையாவது சொன்னியா? உன் மனசுல நான் இல்லைன்னு இப்பவாவது புரிஞ்சுக்கோ. நீ கேட்டியே என்கிட்ட ஒரு கேள்வி, அதுக்குப் பதில் சொல்றேன். கேட்டுக்கோ. உன்கிட்ட இல்லாத



எது வர்ஷனா கிட்ட இருக்குன்னு கேட்டியே. என்னோட மனசு... என் மனசு அவகிட்டதான் இருந்தது. இப்பவும் இருக்கு. இனிமேலும் இருக்கும் ஹர்ஷினி. அதனாலதான்'', என்று மிகத் தெளிவாகப் பதிலளித்தான்.

அவனை விரக்தியாகப் பார்த்தவள், ''சரி! அதை விடுங்க. என்னோட மனசுல நீங்க இல்லைன்னு வச்சுக்கோங்க. ஆனா, வர்ஷனா உங்க வாழ்க்கையில மறுபடியும் வந்திருக்காம இருந்திருந்தா நீங்க என்னைக் கல்யாணம் பண்ணி இருப்பீங்களா?'' என்று கேட்டவளைப் பாவமாகப் பார்த்தவன், சற்று நேரம் மௌனமாக இருந்தான். பின் வாயைத் திறந்து ஏதோ சொல்ல நினைக்க, ஹர்ஷினியோ, ''போதும்! எனக்கு உங்க மௌனத்துலேயே பதில் கிடைச்சிடுச்சு. நீங்க ஒண்ணும் சொல்ல வேண்டாம். ஆனா ஏன்?'' என்றாள் கண்களில் கண்ணீருடன்.

''ஹர்ஷினி! எனக்கு உன்னைப் பார்க்கும் போதெல்லாம்...'' என்று அவன் முடிக்கும் முன், ''என்ன சொல்லப் போறீங்க? ஒரு தங்கையைப் பார்க்கற மாதிரி இருக்குன்னு எல்லோரும் சொல்லறதைச் சொல்லப் போறீங்க. அவ்வளவுதானே!'' என்றாள் இடையிட்டு.

அவனோ, ''இல்லை. எனக்கு உன்னைப் பார்க்கும் போதெல்லாம் நட்சத்ரா பிடிவாதமா இருக்கும் போது அவள் மேல என்ன உணர்வு தோணுமோ அதே உணர்வு தான் தோணும்!'' என்று அவள் வாயை அடைத்தான்.

தன்னை இவன் ஒரு பெண்ணாகக் கூடக் கருதவில்லை. இன்னும் ஒரு சிறு குழந்தையாகத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறான் என்ற எண்ணமே அவளுக்கு அழுகையை வரவழைத்தது. அவனை ஒரு அடிபட்ட பார்வையுடன் பார்த்தவள், ''இனிமேல் என் கண்ணுல படாதீங்க.

ஐ ஹேட் யூ (I hate you)!'' என்று சொல்லிக் கண்கள் கலங்கியவாறே அங்கிருந்து வெளியேறினாள்.

இவள் பெற்றோர்கள் ஹர்ஷினி செய்ததை நேரடியாகச் சுட்டிக் காட்டினர் என்றால், இவள் அண்ணனும் கௌதமும் அதையே மறைமுகமாகச் சுட்டிக் காட்டினர். ஆனால், இரண்டிலுமே ஒரே அர்த்தம்தான் பொதிந்திருந்தது. ''நீ தவறு செய்துவிட்டாய் பெண்ணே!'' என்று. ஹர்ஷினி இனி யோசிக்க ஆரம்பித்துவிடுவாள். இவளுக்கென ஒருவன் வருவான். இனி அவன் இவளைப் பார்த்துக் கொள்வான்.

**25**

''இதழ்களால் சிரித்த என்னை
எண்ணங்களால் சிரிக்க வைத்தாய்!
வார்த்தைகளால் பேசிய என்னை
மனதால் பேசச் செய்தாய்!
உன் காதலை எனக்குள் பரிமாறி
சந்தோசத்தை நுகர வைத்தாய்
மகிழ்ச்சியைப் பருக வைத்தாய்
இன்பத்தைச் சுவைக்க வைத்தாய்!''

கௌதமின் திருமணத்திற்கென டெல்லியிலிருந்து கார்த்திக்கின் தந்தையும், தங்கை குடும்பத்தினரும் இரண்டு நாட்கள் முன்னரே வந்திருந்தனர். கௌதமிற்கு, சுவர்ணாவின் மகன் கார்த்திக்கைக் கண்டவுடன் தன் நண்பன் கார்த்திக்கைப் பார்ப்பதைப் போலவே உணர்ந் தான். கோவை வந்ததிலிருந்து கார்த்திக்கின் குறும்பை ரசித்துக் கொண்டிருந்த கௌதமும், அவன் கோவையில் இருந்து கிளம்பும் வரை அவனை விட்டு நகர



விடவில்லை. ஆனால், கார்த்திக்கிற்கு விளையாட வெனத் தன் தங்கை தவிர்த்து, மேலும் புது முகங்களான நட்சத்ரா மற்றும் தீபியின் குழந்தைகள் கிடைக்க, கௌதமை விட்டு விலகி ஓடிவிட்டான்.

கௌதமின் வீட்டில், சுவர்ணா கௌதமிடம், ''அண்ணா! இவன் பார்க்கறதுக்குமட்டுமா கார்த்திக் அண்ணா மாதிரி இருக்கான்? செய்யற ஒவ்வொண்ணும் கார்த்திக்கை மிஞ்சுவான் போல. ஒரு தடவை 'ஸ்கூல்'ல மதிய நேரம் எல்லாரையும் தூங்கச் சொன்னப்போ, இவன் மட்டும் தூங்காம, பக்கத்துல படுத்திருந்த பொண்ணு மூஞ்சியில 'சாக்' தூளை வச்சு மீசை வரைஞ்சு வச்சிருக்கான். தூங்கி எழுந்த பிறகு, மத்தவங்க எல்லோரும் சேர்ந்து அந்தப் பொண்ணைப் பார்த்துச் சிரிச்சிருக்காங்க. அதைப் பார்த்து அந்தப் பொண்ணுக்கு ஒரே அழுகை. அப்புறம் நாங்க போய் 'கிளாஸ் மிஸ்' கிட்ட பேசிட்டு வந்தோம். எங்கிருந்து தான் இவனுக்கு இப்படி எல்லாம் தோணுதோ!'' என்றாள்.

மேலும், ''அதுவில்லாம, ஒரு தடவை அப்பா தூங்கிட்டு இருந்தப்போ அவரோட சட்டைக்குள்ள 'ஐஸ்' கட்டியை எடுத்துப் போட்டு வச்சுட்டு நல்ல பிள்ளை மாதிரி வந்துட்டான். தூங்கிட்டு இருந்த அப்பா என்னடா இது ஈரமா இருக்குதேன்னு முழிச்சுப் பார்த்திருக்கார். அப்போதான் அவருக்கு உண்மை தெரிஞ்சிருக்கு. இவனுக்குக் கார்த்திக்ன்னு பேரு வச்சாலும் வச்சேன். கார்த்திக் அண்ணன் மாதிரியே பண்ணிட்டு இருக்கான்!'' என்று தொடர்ந்தாள். அவள் குறைப்பட்டுக் கொள்வதைப் போலக் கூறினாலும், அவளின் குரலில் கார்த்திக்கின் பிரிவின் வேதனைதான் மேலோங்கி நின்றது.

சுவர்ணா தன் மகன் செய்யும் குறும்புகளைச் சொல்லச் சொல்ல, கௌதமிற்குத் தன் நண்பன் கார்த்திக்கின்

குறும்புகளைப் பார்ப்பதைப் போலவே இருக்க, அவன் கண்களில் நீரை வரவழைத்தது. கடினப்பட்டு அதை அடக்கியவன், வேறு விஷயங்களைப் பற்றிப் பேசி அவளையும் திசை திருப்பினான்.சுவர்ணாவிடம் பேசிக் கொண்டே கண்களைச் சுழல விட்டவனின் பார்வை ஒரு இடத்தில் நிலைகுத்தி நின்றது. ஏனெனில், தீபியின் மகன்கள் ஆதிக், வேதாந்த், சுவர்ணாவின் செல்வங்கள், கார்த்திக், தியா மற்றும் கௌதமின் மகள் நட்சத்ரா விளையாடிக் கொண்டிருந்த இடத்தில் பாலா அவர்களிடம் அமர்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்தான்.

அதைப் பார்த்த கௌதம், 'ஐயோ! பாவம்!'' என்று நினைத்துக் கொண்டு, ''சுவர்ணா! என் கூட வாம்மா! பாலா ஏதோ சின்னப் பசங்களைக் கடிச்சிட்டு இருக்கான் போல. போய் அவங்களைக் காப்பாத்திட்டு வரலாம்!'' என்று அங்கிருந்து விரைந்தோட, அவனைத் தொடர்ந்து சுவர்ணாவும் சென்றாள். அவர்கள் பாலாவிடம் நெருங்கிய நேரம்.

''ஒரு 'இடியட்'க்கு 'ஐஸ்' ரெண்டும் போச்சுன்னா அவன் எப்படி இருப்பான், சொல்லுங்க பார்க்கலாம்?'' என்று அவன் கடிக்கும் திறனை, இலை போட்டுச் சிறுவர்களுக்குப் பரிமாறிக் கொண்டிருந்தான்.

பாலாவை அனைத்துக் குழந்தைகளுக்கும் பிடித்துவிட, அவர்கள் பாலாவை விட்டு நகரவில்லை. அதிலும் தீபியின் மகன்கள் ஆதிக், மற்றும் வேதாந்த் அவனை விடவேயில்லை. லீவு முடிந்து பள்ளிக்குத் திரும்பச் சென்று அவர்கள் கற்றுக் கொண்டதை எல்லாம் மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டும் அல்லவா? அதனால் இப்பொழுது கற்றுக் கொள்ளும் படலத்தில் சந்தோசமாக ஈடுபட்டு இருந்தனர்.



பாலா கேட்டதற்குப் பதில் தெரியாமல் அவர்கள் முழிக்க, நட்சத்ராவும், அவள் வயதையொத்த சுவர்ணாவின் மகள் தியாவும், ஆண்கள் பேசுவதை ரசிக்காமல், அவர்கள் பேசுவது முதலில் புரியாமல், எங்களுக்கென்ன என்று அவர்களுக்குள் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தனர்.

''இடியட்'க்கு ரெண்டு 'ஐஸ்'ஸும் (I|s)போயிடுச்சுன்னா வெறும் 'டாட்டா(dot) இருப்பான்!'' என்று பாலா பதிலுரைக்க, ''சூப்பர் அங்கிள்'! என்றான் ஆதிக்.

''ஓ.கே. இன்னொன்னு. 'இஃப் என் எலிபண்ட் சிட்ஸ் ஆன் எ சேர், வாட் இஸ் த டைம் நவ்? (If an elephant sits on a chair what|s the time now)?'' என்று அவர்களுக்குத் தெரிந்ததையே கேட்டான். பின்னே, அவர்களுக்கு விடை தெரியாத கேள்விகளைக் கேட்டு, அவர்களும் விடை தெரியவில்லை என்று சொல்ல முடியாமல் அவர்களை போர் அடிக்க வைத்து, அவனை விட்டுச் சென்று விட்டால், பின் அவனுக்குக் கிடைத்த ரசிகர்களை எப்படித் தக்க வைத்துக் கொள்வது?

''எங்களுக்குத் தெரியுமே. 'இட்ஸ் டைம் டு பை அனதர் சேர் (It|s time to buy another chair)!'' என்று அவசரமாக வேதாந்த் கூறினான்.

அவர்களின் பேச்சைக் கேட்டுச் சிரித்த சுவர்ணா, பாலாவிடம், ''சும்மாவே கார்த்திக்கிற்குப் பேசத் தெரியாது. இதுல நீங்க வேற 'ட்ரெய்னிங்' கொடுக்கறீங்களா? எங்களை எல்லாம் பார்த்தா பாவமா இல்லை?'' என்றாள் பரிதாபமாக.

பாலாவைப் பார்த்து, கண்களாலேயே நன்றியுரைத்த கௌதம், சுவர்ணாவின் எண்ணங்களைத் திசை திருப்பி விட்டதில் மகிழ்ந்து பாலாவிடம் கவனத்தைத் திருப்பினான்.

நண்பனின் செய்தியைப் புரிந்து கொண்ட பாலா, சிறுவர்களை விளையாட அனுப்பிவிட்டு, சுவர்ணா விடம், ''சரி! நான் அவங்களுக்குச் சொல்லிக் கொடுக் கலை. எங்க நான் கேட்கறதுக்கு நீங்க பதில் சொல்லுங்க பார்க்கலாம்?'' என்று சவால் விட்டான்.

அவன் பேசிக் கொண்டிருந்த பொழுதே வசந்த் வந்து சேர, பாலா அழகாகத் தன் திறமைகளை மேடையேற்றிக் கொண்டிருந்தான்.

''கம்ப்யூட்டரு'க்குப் பிடிச்ச 'டான்ஸ்' எது சொல் லுங்க?'' என்று சுவர்ணாவிடம் கேட்க, வசந்த், ''டிஸ்கோ (disco)!'' என்றான் உடனே.

''ஏன்டா! உன்கிட்ட யாராவது கேட்டாங்களா? நான் இவங்ககிட்ட தானே கேட்டேன். இனி வாயைத் திறந்த, பாரு'', என்று வசந்தை மிரட்டியவன், திரும்பி சுவர்ணா விடம், ''ஒரு குட்டிப் பையன்'ப்ளேன்'ல போகும் போது படிச்சிட்டே போனானாம். ஏன்னு தெரியுமா?'' என்றான்.

சுவர்ணா விடை தெரியாமல் பரிதாபமாகக் கௌதமைப் பார்க்க, அவன் சிரித்துக் கொண்டு பாலாவைப் பார்க்க, வசந்தும் வாய் திறக்காமல் அமைதியாக இருந்தான்.

''என்ன வசந்த்! உனக்கும் பதில் தெரியலையா? சரி! நானே சொல்லறேன். அந்தக் குட்டிப் பையனுக்கு அப்பவே 'ஹையர் எஜுகேசன் (higher Education) படிக்கணும்ன்னு ஆசையா இருந்தது. அதுதான்'', என்று கூறிச் சிரித் தான்.

அவனின் தாக்குதலில் நிலை குலைந்த சுவர்ணா, ''ஐயோ! ஆளை விடுங்க. நான் கிளம்பறேன்'', என்று அங்கிருந்து ஓடினாள். வசந்தோ, ''என்னைத்தான் வாயே திறக்க வேண்டாம்ன்னு சொன்னியே, அது தான் பேசாம இருந்தேன்'', என்று சமாளித்தான்.



''இல்லைன்னா உடனே பதில் சொல்லி இருப்பி யாக்கும்!'' என்று சண்டைக்கு நின்றான். அவர்கள் சண்டை போட்டுக் கொண்டிருக்கும் பொழுதே, கௌதமின் திருமணத்திற்கென அவன் நண்பர்கள் தியானும், வரு ணும் வந்து சேர, அவர்களை இன்முகத்துடன் வரவேற்ற கௌதம், பாலாவின் கடியில் இருந்து தப்பி அவர்களின் பால் பேச்சைத் திருப்பினான்.

தியான் தன் மனைவி கீதாவையும் உடன் அழைத்து வந்திருந்தான். அவள் உட்கொள்ளும் மாத்திரைகளும் மெதுவாக வேலை செய்ய, கீதா சிறிது இயல்பு நிலைக்குத் திரும்ப ஆரம்பித்திருந்தாள். அவளைப் பற்றி அறிந்து கொண்ட மது, அவளிடம் நன்றாகப் பேசிப் பழகி, கல் யாணத்தில் உதவிக்கு என்று அவளை வேலையில் ஈடு படுத்தி அவளின் கூச்சத்தைப் போக்கி விட்டிருந்தாள்.

திருமணத்திற்கு முன் தினம் நண்பர்கள் அனைவரும் ஒன்று கூடிக் கௌதமின் வீட்டில் பேசிக் கொண்டிருந் தனர். நண்பர்கள் பேசிக் கொண்டிருக்கும் பொழுது, பாலா வுக்குத் தன்னவளிடமிருந்து அழைப்பு வர, அவர்களிட மிருந்து வழிந்தவாறே விலகிச் சென்றான்.

கௌதம், தியானிடம் கீதாவைப் பத்தி விசாரிக்க, அவனும், ''கீதா இப்போவெல்லாம் ரொம்ப மாறிட்டா. அவளுக்கு என் மேல நம்பிக்கை வர ஆரம்பிச்சிருக்கு. இன்னும் மாத்திரைகள் சாப்பிட்டுத்தான் இருக்கா. ஆனா, நல்ல முன்னேற்றம் தெரியுது. அவங்க பாட்டிக்கு இருந் ததை, கீதாவோட அப்பாவுக்குச் சொல்லாம அவளோட அம்மாவைக் கல்யாணம் பண்ணி வச்சிட்டாங்க. அதுவும் அவளோட பாட்டிக்கு வறுமை காரணமா, குடும்ப பாரத்தைச் சுமக்க முடியாம கஷ்டப்பட்டிருக்காங்க போல, அதனால வந்த மன உளைச்சல்தான் அதுவும். இதைப்

பத்தி எல்லாம் கீதாவோட அப்பாவுக்குத் தெரிய வந்ததிலிருந்து, அதைப் பெருசுபடுத்தி, கீதாவோட அம்மா கூட தினமும் சண்டை போட்டுட்டு இருந்திருக்கிறார்.

"எங்க கீதாவோட அம்மாவும், கீதாவும் அவள் பாட்டி மாதிரி ஆகிவிடுவாங்களோன்னு ரெண்டு பேரையும் திட்டியிருக்கிறார். சின்ன வயசுல இருந்தே இதைப் பார்த்து, கேட்டு, வளர்ந்த கீதாவுக்கு, அதை மனசுல வச்சுக்கிட்டு வெளியில சொல்ல முடியாமதான் இப்படி ஆயிருக்கு. சும்மாவா சொல்லறாங்க, நம்ம பெரியவங்க, சண்டையைக் குழந்தைங்க முன்னாடி போடக் கூடாதுன்னு. விஷயம் தெரிஞ்ச பின்னாடியும், சும்மா ஏதோ ஒரு 'டாக்டர்'கிட்ட கூட்டிட்டுப் போய் அவர் எழுதிக் கொடுத்த மாத்திரையை வாங்கி முழுங்க வச்சு, கல்யாணமும் பண்ணி வச்சுட்டாங்க. கீதாவுக்கு இப்படி ஆனதும், அதுக்கும் சேர்த்து வச்சு கீதாவோட அம்மாவுக்கு ஒரே திட்டுதானாம். கீதாவும் அவளுக்கு இருக்கிற மன உளைச்சலைக் கொட்ட இடம் கிடைக்காமத்தான் இப்படி ஆயிருக்கா. இப்போ எவ்வளவோ பரவாயில்லை. நல்ல முன்னேற்றம் தெரியுது!" என்றான்.

கௌதம் அவன் கைகளைப் பற்றிக் கொண்டு, அவனை ஆறுதல் படுத்தினான். தியானோ, "எனக்கு இப்போ எந்தக் கவலையும் இல்லை கௌதம். நான் சந்தோசமா இருக்கேன். கீதாவும் நல்லா சந்தோசமா இருக்கா. அவள் என்கிட்ட நிறையப் பேச ஆரம்பிச்சிருக்கா. என்னோட கதை பேசறது இருக்கட்டும். உனக்கு நாளைக்குக் கல்யாணம். அதைப் பத்திப் பேசறதை விட்டுட்டு.... சொல்லு... உன்னோட முழுக் காதல் கதையையும் சொல்லு", என்றான்.



முன்பே அவர்களுக்கு ஓரளவு விசயத்தைத் தெரியப் படுத்தித் தான் இருந்தான் கௌதம். ஆனால் முழு விவரத்தையும் கூறவில்லை.. அதனால்தான் தியான் அவனிடம் அவ்வாறு கேட்டான். அவன் கேட்டதும் அனைத்தையும் சுருக்கமாகச் சொல்லி முடித்த கௌதம், தியானிடமும், வருணிடமும் இத்தனை நாட்கள் வர்ஷனாவைப் பற்றித் தெரிவிக்காததற்கு மன்னிப்பை வேண்டினான்.

"வர்ஷனாவைப் பத்தி படிக்கும் போதே உங்ககிட்ட சொல்லலைன்னு நீங்க ரெண்டு பேரும் என்னைத் தப்பா நினைச்சுக்காதீங்க. இவ்வளவு நாள் கழிச்சு சொல்லறதுக்கும் என்னை மன்னிச்சிடுங்க!" என்றான் கௌதம், வருணிடமும், தியானிடமும்.

அதைக் கேட்ட தியான், "கௌதம்! இதுல தப்பா நினைக்க என்ன இருக்குது? ஏதோ ஒரு காரணமாத் தானே எங்ககிட்ட சொல்லலை. உன்னோட சந்தர்ப்ப சூழ்நிலை அப்படி!" என்றான்.

வருண் தொடர்ந்து, "ஆமா! ஃபிரெண்ட்ஸ்'ன்னா நீ ஏதோ ஒரு காரணத்துக்காகத்தான் சொல்லலைன்னு புரிஞ்சிக்கணும். அதை விட்டுட்டு தப்பா நினைச்சு சண்டை போடறதுன்னா அப்புறம் நம்ம நட்புக்கே அர்த்தம் இல்லையே கௌதம். நீ அந்த நேரத்துல என்ன பண்ணணுன்னு நினைச்சியோ அது 'கரெக்ட்'தான்", என்றான்.

"தேங்க்ஸ்! நீங்க ரெண்டு பேரும் என்னைப் புரிஞ்சுக் கிட்டதற்கு. எனக்கு இப்போத் தான் நிம்மதியா இருக்கு!" என்றவனை இருவரும் நட்புடன் பார்த்தனர்.

இவர்கள் பேசுவதை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த வசந்திற்கோ, குற்ற மனப்பான்மை தலை

தூக்கியது. 'ச்சே! அவங்க ரெண்டு பேரும் சொல்லற மாதிரி, நான் ஒரு நல்ல நண்பனா நடந்துக்கலையே. சந்தர்ப்ப சூழ்நிலை காரணமா, ஒண்ணும் விசாரிக்காம, நடந்ததை எல்லாம் வச்சு கௌதம் கிட்ட ஒரு வார்த்தை கூடக் கேட்காம அவனைத் தப்பா நினைச்சுட்டோமே!' என்று வருந்தினான்.

கிடைத்த தனிமையில் அவன் கௌதமிடம் சென்று மன்னிப்பையும் வேண்டினான். கௌதமோ, அவனைப் புரியாமல் பார்த்து, ''இப்போ எதுக்கு நீ வந்து என்கிட்டே மன்னிப்புக் கேட்டுட்டு இருக்க? எனக்குப் புரியலை'', என்றான்.

''அது ......வந்து.... நீயும் மதுவும் இவ்வளவு ஒற்றுமையா இருக்கறதைப் பார்த்து, மதுவுக்கு என்னை விட உன் மேலதான் அக்கறைன்னு நான் அர்த்தம் பண்ணிகிட்டேன். உங்களுக்கு நடுவுல இருக்கிற பாசத்துல, கொஞ்சம் தடுமாறி உன்னையும் மதுவையும் தப்பா நினைச்சுக்கிட்டேன்.

''ஒரு நண்பனா மது மேலேயும். ஒரு கணவனா உன் மேலேயும் கொஞ்சம் பொறாமை வந்துடுச்சு. அதை வேற விதத்துல திருப்பி சில விஷயங்களை மட்டும் வச்சு ஆராய்ச்சி பண்ணாம, உன்னையும் மதுவையும் தப்பா நினைச்சிட்டேன். என்னை மன்னிச்சிடுடா... ஆனா என்னால இதுக்கு மேல முழு விவரத்தையும் சொல்ல முடியாது. உன்னைத் தப்பா நினைச்சதுக்கு நான் பட வேண்டியது எல்லாம் மதுகிட்ட பட்டுட்டேன். 'ப்ளீஸ்' கௌதம்.... என்னை மன்னிச்சிடு...'' என்றான் கரகரத்த குரலில்.

''நீ லூசாடா! என்னை மனசுக்குள்ள திட்டினதுக்கு எல்லாம் என்கிட்டே வந்து மன்னிப்புக் கேட்கறியா? உன்னை என்ன பண்ணலாம்? போடா.... வந்துட்டான்



பெரிய இவன் மாதிரி...'' என்றவன், திடீரென்று, ''அச்சச்சோ! நீ பெரிய அறிவாளின்னு நினைச்சுத் தானே மதுவை உனக்குக் கட்டிக் கொடுத்தோம். இப்போ வந்து அப்படியெல்லாம் இல்லைன்னு தெளிவா நிரூபிக்கறியே? இப்படி ஏமாந்துட்டோமே!'' என்று அவனைச் சகஜ நிலைக்குத் திருப்பிக் கொண்டு வர கௌதம் அவ்வாறு சொன்னான்.

அவனின் முயற்சி அறிந்து வசந்தும் அவனுக்கு ஈடு கொடுத்தான். ''நண்பனைப் பார்த்தே நான் 'அலெர்ட்' ஆகி இருக்கணும். பத்தாததற்கு அவன் தங்கையை வேற கட்டிக்கிட்டு நான் படும் அவஸ்தை இருக்கே...'' என்று அவன் இழுத்த வேளையில்,

''எப்படி... எப்படி? நீங்க அவஸ்தைப் படறீங்களா? அப்படின்னா அண்ணா, நாளைக்குக் கல்யாணம் முடிஞ்சு நேரா இங்க நம்ம வீட்டுக்கே வந்துடறேன். பாவம், அவருக்கு நான் ஏன் அவஸ்தையைக் கொடுக்கணும்?'' என்றவாறே வந்து சேர்ந்தாள் வசந்தின் ஆருயிர்த் துணைவி.

'எதைக் கேட்கணுமோ அதைக் கேட்டுடாத 'கரெக்டா' வந்து தப்பா எல்லாத்தையும் கேட்டுடு...' என்று அசடு வழிந்தான் வசந்த்.

''சரி! சரி! பேசினது போதும். போய்ச் சாப்பிட்டுட்டு சீக்கிரமா போய்ப் படுங்க. நாளைக்கு நேரத்துல எழுந்திருக்கணும்''. என்று அவர்களை விரட்டினாள் மது.

வீடு நிறையக் குழந்தைகளைப் பார்த்த கீதாவோ தன் கவலைகளை எல்லாம் மறந்து அவர்களுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள். அவர்களுடன் தானும் ஒரு சிறு குழந்தையாக மாறி, ஆவலுடன், அவர்களுடன்

விளையாடிக் கொண்டிருந்தாள். நட்சத்ராவைத் துரத்திக் கொண்டு சென்ற கீதாவைத் துரத்திய தியானின் கண்கள் ஏதோ ஒரு புதுச் சேதியைப் படித்து, அவனைச் சிந்திக்க வைத்தது. அந்தச் சிந்தனை அவனுக்கு உயிர்வரை இனித்தது.

அன்றிரவு, வருணும், தியானும் பாலாவின் வீட்டில் தங்கிக் கொள்ள, மது, கீதாவுடன் சேர்ந்து தன் அண்ணி வர்ஷனாவை அழைத்துக் கொண்டு தன் வீட்டிற்குச் சென்றாள். வசந்த் பிடிவாதம் பிடித்து கௌதமுடன் தான் தங்குவேன் என்று அங்கேயே தங்கிக் கொண்டான்.

கௌதமின் அறைக்குள் சென்றவுடன், வசந்த் மீண்டும், ''டேய் கௌதம்! என்னை நிஜமா மன்னிச்சுட்டியா?'' என்றான்.

''வசந்த்! ஏன்டா இப்படி லூசு மாதிரிப் பேசற? இங்க பாரு. சரியாச் சொல்லணும்னா, உனக்கும் மதுவுக்கும் வந்த 'மிஸ்-அண்டர்ஸ்டாண்டிங்', அவள் 'ப்ரெக்னண்ட்'ன்னு தெரிஞ்சு, இங்க வீட்டுக்கு வரதுக்கு முன்னாடி நடந்திருக்கும்ன்னு நினைக்கறேன். வீட்டிற்கு வந்த மது என் கிட்ட ஒண்ணும் சொல்லலை. ஆனா, யார் யாரோ முகத்தை வச்சு, சிரிப்பை வச்சு, பேசறதை வச்சு, அவங்க மனசைப் புரிஞ்சுக்கற எனக்கு என்னோட தங்கையைப் புரிஞ்சிக்க முடியாதா? அதனாலதான் அவள் இங்க வந்தப்போ என்னைப் பத்தி, எனக்காகப் பேசற மாதிரி பேசினேன்.

''நீ எப்பவுமே இப்படித்தான். முதல்ல எதையும் யோசிக்காம பேசிடுவ. அப்புறம்தான் விஷயத்தை ஆராய்ச்சி பண்ணிப் புரிஞ்சுக்குவேன்னு சொன்னேன். மதுவுக்கும் உன்னைப் பத்தி புரிஞ்சிருக்கும். அதுனால தான் என்கிட்ட கூட ஒண்ணும் சொல்லலை. என்





தங்கை எவ்வளவு வளர்ந்துட்டான்னு நினைச்சு நான் பெருமை கூடப் பட்டுக்கிட்டேன். உங்க குடும்ப விஷயத்துல நான் தலையிடறது தப்பு இல்லையா? அதுதான் நேரடியாகக் கேட்காம அப்படி மறைமுகமா அவனுக்குச் சொன்னேன். அப்புறம் கொஞ்ச நாள்ல சரியாயிட்டா. அதனாலதான் மதுகிட்ட, ஹர்ஷினி இப்படி எனக்குத் தெரியாம நிச்சயம் பண்ண ஏற்பாடு பண்ணினதைக் கூட சொல்ல வேண்டாமென்று நினைச்சேன்'', என்று வசந்தைப் பார்த்தான்.

''கௌதம்! நீ என்னை ரொம்பவுமே நல்லாப் புரிஞ்சு வச்சிருக்க. தேங்க்ஸ்டா!'' என்று அவன் தோளோடு அணைத்து விடுவித்தான். பின் நண்பர்கள் எதையோ பேசிக் கொண்டே உறக்கத்தைத் தழுவினார்கள்.

மறுநாள் காலை கௌதமின் சொந்தம், மற்றும் நண்பர்களுக்குப் பரபரப்பாக விடிந்தது. அனைவரும் கிளம்பிக் கோவிலுக்குச் சென்று நடக்க வேண்டிய வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தனர். பாலாவுடன் கோவிலுக்குச் சென்ற வருண் அங்கு நடமாடிக் கொண்டிருந்த ஒரு பெண்ணை விழி அகலாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

வருணின் விழிகள் நடை பயின்று கொண்டிருந்த தைப் பார்த்த பாலா, அவனிடம் சென்று, ''என்னடா பண்ணிட்டு இருக்க?'' என்றான் கோபமாக.

''ஒண்ணுமில்லை. சும்மாதான் அந்தச் சிலையைப் பார்த்துட்டு இருந்தேன்!'' என்று கதை கட்டினானோ இல்லை உண்மையைச் சொன்னானோ, அவனுக்கே வெளிச்சம்.

''பொய் சொல்லாத. உண்மையைச் சொல்லு. என்ன பண்ணிட்டு இருந்த?'' என்றான் பாலா, மறுபடியும்.

''சரி பாலா! உன்கிட்ட சொல்ல என்ன. அது வந்து ஒரு பொண்ணைத்தான் பார்த்துட்டு இருந்தேன். அவ்வளவு அழகா இருக்கா!'' என்றான் கண்கள் விரிய.

''அந்தப் பொண்ணு யாருன்னு தெரியுமா?'' என்று கேட்டவனிடம், அவனின் மாற்றத்தைப் பற்றி அறியாத வருணும், ஒரு பெண்ணைக் கை காண்பித்தான்.

''நீ அவளைத்தான் பார்த்துட்டு இருக்கேன்னு எனக்குத் தெரியும். என்கிட்டேயே தைரியமா வேற சொல்லறியா? ஏன்டா, சும்மாவே இருக்க மாட்டீங்களா? இது மாதிரி கல்யாணத்துக்கு வந்து பொண்ணுங்களை சைட் அடிப்பீங்களா? அவங்களை நிம்மதியா இருக்கவே விட மாட்டீங்களா? அதுவும் கோவிலுக்கு வந்து...'' என்று ஒரு பாடமே நடத்த, வருண், 'இவனுக்கு என்னவாகி விட்டது?' என்று திகைத்து விழித்தான்.

''என்னடா முழிக்கற? அது யாரு தெரியுமா? தான்யா வோட தங்கச்சி சந்தனா!'' என்றான்.

'பேரு சந்தனாவா', என்று மனதிற்குள் துள்ளிய வருண், பாலா அவனையே பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதை உணர்ந்து, அவனைப் பாவமாகப் பார்த்தான்.

''சரி சரி! இந்த ஒரு தடவை விட்டுடறேன். போய் ஒழுங்கா இரு!'' என்று மிரட்டி அனுப்பி வைத்தான்.

கௌதமிற்கும், வர்ஷனாவிற்கும் கோவிலில், முக்கியமான உறவினர்களை மட்டும் அழைத்து, எளிமையான முறையில் திருமணம் நடந்தேறியது. ஸ்ரீனிவாசனும், ராஜேஸ்வரியும் முகமெல்லாம் பூரிப்பில் வந்தவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். தேவராஜன். தன் குடும்பத்தினர் அனைவருடனும் வந்திருந்தார். ஆம். ஹர்ஷினியும் வந்திருந்தாள்! ஆனால், அவள் கௌதம்



இருந்த திசையைக் கூடப் பார்க்கவில்லை. கோவிலில் அவள் மட்டும் தனியாகச் சுற்றிக் கொண்டிருந்தாள். விஷயம் அறிந்தவர்கள் அவளை ஏன் என்று கேட்கவில்லை. விஷயம் அறியாதவர்கள் கடவுளைத் தரிசிக்கிறாள் என்று எண்ணி அவளைத் தொல்லைப் படுத்தவில்லை.

திருமணம் முடிந்து, கௌதமின் முகத்தில் இருந்த நிம்மதி கலந்த மகிழ்ச்சியைப் பார்த்து, மதுவும் அவள் நண்பர்களும் திருப்தியடைந்தனர். பல வருடங்களாகக் காத்திருந்து நிறைவேறிய காதல் அல்லவா? நிரஞ்சனியும், அவள் கணவன் மனோஜும் வந்து அவர்கள் இருவரையும் வாழ்த்தி விட்டுச் சென்றார்கள்.

மதியம், அனைவரையும் ஒரு உணவகத்திற்கு அழைத்துச் சென்ற தினகர், உணவை முடித்துக் கொண்டு, அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு, அப்பொழுதே ஊட்டிக்குக் கிளம்பி விட்டான். மாலையில், பெரும்பாலானோர் அவரவர் ஊர்களுக்குக் கிளம்ப, மது, தீபியின் குழந்தைகளையும், நட்சத்ராவையும் தன்னுடன் வைத்துக் கொண்டாள். கௌதம், பலமுறை அழைத்தும், நட்சத்ரா தன் புதிய தோழர் - தோழியர் பட்டாளத்தை விட்டு வரவில்லை.

கௌதமும், வர்ஷனாவும், அவள் குடியிருக்கும் அபார்ட்மெண்டுக்குச் சென்றனர். அவள் வீட்டின் உள்ளே கதவிற்கு அருகில், கௌதம் அன்று அவளிடம் விட்டுச் சென்ற 'வின்ட் சைம்ஸ்' மாட்டி வைத்திருந்ததைக் கவனித்தவன் தனக்குள்ளே சிரித்துக் கொண்டான். இவர்கள் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்ற பொழுது, இவர்களுடன் சென்ற தென்றல் அதைத் தாலாட்டி இசைத்தது. அந்த ரம்மியமான தருணத்தை இருவருமே ரசித்தனர். வர்ஷனா, ஏதோ ஒரு

எதிர்பார்ப்புடன் கௌதமைப் பார்க்க, அவனோ, ஒன்றுமே பேசாமல், மௌனத்துடன் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருந்தான்.

வர்ஷனாவுக்காக இரவு அறையில் காத்துக் கொண்டிருந்தவன், அவள் அறைக்குள் வந்த பின்பும், ஒன்றும் பேசாமல் அமைதியாக அவளைப் பார்த்தான்.

அவனின் மௌனத்தைப் பார்த்த வர்ஷனாவே, ''கௌதம்! உங்க கிட்ட ஒண்ணு கேட்கணும்'', என்று தொடங்க, கௌதமும் அதே சமயத்தில் அவளிடம், ''வர்ஷனா, நான் உன்கிட்ட ஒண்ணு சொல்லணும்'', என்று ஆரம்பித்தான்.

அவள் சொன்னதைக் கேட்டவன், ''நீ முதல்ல கேளு. நான் அப்புறம் சொல்றேன்'', என்று அவளைப் பேச விட்டான்.

''அது வந்து கல்யாணத்துக்குச் சம்மதம் வாங்கறதுக்கு முன்னாடி அடிக்கடி வந்து என்கிட்ட பேசினீங்க. அப்புறம் கல்யாணம் முடிவான பிறகு சரியாவே நீங்க பேசலையே. ஏன்? உங்களுக்கு உடனே சம்மதம் சொல்லலைன்னு என் மேல ஏதாவது கோபமா? இல்லை, நான் ஏதாவது தப்பு செஞ்சுட்டேனா?'' என்று அதுவரை உறுத்திக் கொண்டிருந்ததைக் கேட்டாள்.

அவள் சொன்னதைக் கேட்டுச் சிரித்தவன், ''உன் மேல நான் எதுக்குக் கோபப்படப் போறேன்டா? முதல்ல உன் மேல எனக்குக் கோபம் வருமா, சொல்லு? நீ எனக்குக் கிடைச்சது எவ்வளவு பெரிய விஷயம்!'' என்று அவள் கேட்டதற்குப் பதிலளித்தான்.

பின், ''அது வந்து.... எனக்கு மனசுக்குள்ள ஒண்ணு அரிச்சிட்டு இருக்கு. நம்ம வாழ்கையைத் தொடங்குற



இந்த நேரத்துல உன்கிட்ட ஒரு உண்மையைச் சொல்லணும்ன்னு நினைக்கிறேன். முன்னாடியே நான் என் இதைச் சொல்லலைன்னா, அது... ஏற்கெனவே உன்னோட சம்மதத்தை வாங்கப் பெரும்பாடா இருந்தது. இதுல இந்த விஷயம் தெரிஞ்சிருந்தா, மேலும் உன்னையே குழப்பி, எங்க இதுக்கு நீ ஒத்துக்க மாட்டாயோ என்கிற பயத்துலதான் நான் சொல்லலை. தப்பா நினைச்சுக்காத... ப்ளீஸ்...'' என்று பீடிகையுடன் ஆரம்பித்தான்.

முதலிரவு அறைக்குள் பேசும் வசனம் இல்லை தான் என்றாலும் பேசி ஆக வேண்டுமே, என்று இருந்தது அவனுக்கு. பின்னால் அவளுக்கு வேறு யார் மூலமாகத் தெரிவதை விட, இவன் சொல்லி விடுவது தானே நியாயம்!

அவனைப் புரியாமல் ஏறிட்டவளிடம், ''வந்து... வந்து... நாம காலேஜ் படிக்கும் போது, கார்த்திக்கும் உன்னை விரும்பியிருக்கிறான். ஆனா, அதைப் பத்தி எனக்குக் கடைசியிலதான் தெரிய வந்தது'', என்று அவன் எப்படி கார்த்திக்கின் காதலைப் பற்றி அறிந்து கொண்டான் என்பதைச் சுருக்கமாக அவளிடம் விளக்கினான்.

அதைக் கேட்டவள், ''கார்த்திக்கா? என்னையா? என்னால நம்ப முடியலை கௌதம். அவன் எனக்கு எப்பவுமே ஒரு நல்ல நண்பன். நண்பனா அறிமுகமானான்... கடைசி வரைக்கும் அப்படியேதான் இருக்கான்!'' என்று தன் கணவனின் மனதில் மலர்களைத் தூவினாள்.

அவன் மனதின் பாரம் குறைந்தவனாக, நிம்மதியுடன் ஒரு பெருமூச்சை இழுத்து வெளியிட்டான். பின், ''வரு! இதை நினைச்சு நீ எடுக்கற முடிவுல குழப்பிக்கக் கூடாதுன்னு தான் முன்னாடியே உன்கிட்ட சொல்லலைம்மா. தப்பா நினைச்சுக்காத!'' என்றான் சங்கடமான குரலில்.

அவனின் குரலில் இருந்த சங்கடத்தை உணர்ந்தவள், ''கௌதம்! இதுல உங்களைத் தப்பா நினைக்க என்ன இருக்குது? ஆனா, நீங்க முன்னாடி சொல்லி இருந்தாலும், நான் முடிவு எடுக்கறதுல எந்தக் குழப்பமும், தடுமாற்றமும் இல்லாம தான் இருந்திருப்பேன். கார்த்திக்கை, எப்பவுமே உங்களை நினைச்ச மாதிரி, அப்போ ஒரு நாளும் நான் நினைச்சுப் பார்த்ததே இல்லையே!'' என்று தெளிவாகச் சொல்லி, அவனிடம் அழகாக மாட்டிக் கொண்டாள்.

''வரு! இப்பவாவது உண்மையைச் சொல்லு. அப்படின்னா, படிக்கும் போதே, உனக்கும் என் மேல காதல் இருந்ததுதானே? வெறும் சலனம் என்று சொல்லி என்னை ஏமாத்தப் பார்த்தியே?'' என்று அவளைக் கேள்வியினால் சிறைப் படுத்தினான்.

அவள் மாட்டிக் கொண்டாள் என்றுணர்ந்து ஒன்றும் பேசாமல் இருந்தவளை, ''ப்ளீஸ்டா! சொல்லு...'' என்று ஊக்கப்படுத்தினான் கௌதம்.

''அது.... அது வந்து...'' என்று திணறி முகம் சிவந்தவள், ''எனக்குச் சரியாத் தெரியலை கௌதம். உங்களைப் பார்க்கும் போதெல்லாம் என் மனசுல ஒரு சந்தோசம் ஊற்றெடுக்கும். உங்ககிட்ட பேசும்போது படபடப்பா இருக்கும். அதுக்காகவே, வேற எந்த விஷயத்தைப் பத்தியும் பேசாம, எப்பவுமே பாடம் சம்பந்தமா மட்டும் தான் பேசுவேன். அப்படியாவது என்னோட எண்ணங்களுக்குத் தடை போட முடியுமான்னு தான்'', என்றாள், 'இனி உண்மையை மறைத்து என்ன பயன்?' என்று நினைத்து.

அதை மெல்லிய நகையுடன் கேட்டவன், அவனும், படிக்கும் காலத்தில் அவள் படிப்பைப் பற்றிப் பேசும்



பொழுதெல்லாம் அவளை மனதிற்குள் நிந்தனை செய்ததைப் பற்றி ஆசையோடு பகிர்ந்து கொண்டான்.

''இப்படிக் காதலை மனசுக்குள்ள வச்சுக்கிட்டு இவ்வளவு நாளா என்னை ஏமாத்திட்டு இருந்தியே வரு! இது நியாயமா?'' என்றான் ஆயாசத்துடன்.

''கௌதம்! நம்ம 'காலேஜ்' 'கிரௌண்ட்'ல நடந்து போகும் போது, நீங்க என்னை 'பால்'ல இருந்து அடிபடாம இருக்க கைப்பிடிச்சு உங்க பக்கம் இழுத்தீங்களே, ஞாபகம் இருக்கா? அப்பவே உங்களை விட்டு நகர என்னால முடியலை. என் கையையும் உங்ககிட்ட இருந்து எடுத்துக்க எனக்கு மனசு வரலை. ஆனா கௌதம், அண்ணன் வந்து உங்களைத் திட்டினதும்தான் என்னோட மாய உலகிலிருந்து வெளி வந்தேன். நம்ம வாழ்க்கை என்கிறது 'காலேஜ் கேம்பஸ்' தவிர வெளியிலேயும் இருக்கு என்கிறதை அப்போ தான் உணர்ந்தேன். என்னோட ஆசைக்காக, சுயநலத்துக்காக, என் அண்ணனிடம் உங்களைப் பலிகடா ஆக்க வேண்டாம்ன்னு நினைச்சேன். அதுவும் அப்போ உங்களுக்கு என் மேல காதல் இருக்கான்னு கூடத் தெரியாதே. அப்படி இருக்கும் போது சம்பந்தமே இல்லாத எனக்காக நீங்க ஏன் அவதிப்படணும்ன்னு நான் என்னையே கட்டுப்படுத்திக்கிட்டேன்.

''அப்புறம், இது வெறும் சலனம் மட்டுமே, கொஞ்ச நாளானா சரியாயிடும்ன்னு, நானே பலமுறை என் மனசுக்குச் சொல்லிகிட்டுத் தான், இனிமேல் பேச வேண்டாம்ன்னு வந்து உங்ககிட்டச் சொன்னேன். கடைசியில தான் உங்க விருப்பம் தெரிஞ்சது. ஆனா, அப்போ நீங்க இருந்த சூழ்நிலையில என்னால உங்க கிட்ட வந்து பேச முடியலை. அதோட, என்னோட அண்ணனை

எதிர்க்கவும் எனக்கு அப்போ தைரியமில்லை. அப்புறம் தான் என்னென்னவோ நடந்திருச்சு!'' என்றாள் கண்ணீருடன் வர்ஷனா.

அவள் சொன்னதைக் கேட்டவன், அவளை நம்பாமல் பார்த்தான். அவளின் கண்ணீரைத் துடைத்தவன், அவளைத் தன் மார்பில் சாய்த்துக் கொண்டு, அவளின் தலையை வருடிக் கொடுத்து, ''நான் வந்து உன்னைக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு கேட்கும் போதே சரி சொல்லி இருக்கலாமே. எத்தனை நாட்கள் வீணாப் போச்சு பாரு. வரு! அழாதம்மா! எனக்குக் கஷ்டமா இருக்கு. இனிமேல் நீ எதுக்குமே அழக் கூடாது!'' என்றான்.

அவனிடமிருந்து அவசரமாக விலகியவள், ''சாரி! கௌதம். இனிமேல் அழ மாட்டேன். உங்களைக் கஷ்டப் படுத்தற எதையும் நான் செய்ய மாட்டேன்!'' என்று அவளே கண்களைத் துடைத்துக் கொண்டு அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

''வர்ஷனா! நமக்கு என்ன ஒரு ஒற்றுமை பார்த்தியா? உன்னைக் கஷ்டப்படுத்தக் கூடாதுன்னு நானும், என்னைக் கஷ்டப்படுத்தக் கூடாதுன்னு நீயும்ன்னு, நாம ரெண்டு பேரும் ஒரே விஷயத்தை நினைச்சு, நம்ம காதலை ஒருத்தருக்கு ஒருத்தர் பகிர்ந்துக்காம விட்டுட் டோம்!'' என்று வர்ஷனாவின் அண்ணன் வந்து சத்தம் போட்டுவிட்டுச் சென்றபின், அவன் கார்த்திக்கிடம் நடத்தின உரையாடலைப் பகிர்ந்து கொண்டான்.

''வர்ஷனா! நான் இப்போ எவ்வளவோ சந்தோசமா இருக்கேன் தெரியுமா? என்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிச்சதுக்கு 'தேங்க்ஸ்'ம்மா....'', என்று அவளைத் தன்னருகில் இழுத்துப் பரவசத்துடன் அணைத்துக் கொண்டான். அவனின் அணைப்பின் இறுக்கத்தில் அவன் பல



வருடங்கள் காத்திருந்த தவிப்புத் தெரிந்தது. அவர்களின் அணைப்பில் இருவரும் பல வருடங்களாகப் பட்ட வலிகளும், வேதனைகளும் கரைந்து கொண்டிருந்தன.

சற்று நேரம் கழித்து, வர்ஷனா மெதுவாக வாயைத் திறந்தாள். ''அது சரி... நீங்க இன்னுமே அத்தை மாமாவை எப்படிச் சம்மதிக்க வச்சீங்கன்னு எனக்குச் சொல்லவே இல்லை?'' என்றாள் திடீரென்று.

''ஸ்ஸ்ஸ்.... இப்படி நம்ம தனிமையைக் கேள்வி - பதிலிலேயே கழிக்கலாம்ன்னு முடிவு பண்ணிட்டியா? இப்போ ரொம்ப முக்கியம் பாரு'', என்று சலித்துக் கொண்டவன், ''நீ மாசற்றவள்ன்னு உன்னைப்பத்தி புரிஞ்சுக்கிட்டாங்க. உன்னோட நல்ல மனசைத் தெரிஞ்சுக்கிட்டாங்க. அவ்வளவுதான்!'' என்று அவள் காதருகில் கிசுகிசுக்கவும் மறக்கவில்லை.

''ஆனா, நான் என்ன பண்ணி..?'' என்று வாய் திறந்தவளை, ''பேசு பேசுன்னு வந்து கெஞ்சினப்போ பேசாத. இப்போ பேச வேண்டாம்ன்னு சொல்லச் சொல்ல பேசறியா? பேசற டைம் முடிஞ்சு போச்சு. இது அமைதியா இருக்கிற நேரம்!'' என்று அவளை அவன் அதுக்கு மேல பேசவிடாமல், தன் முதல் முத்திரையை அவள் செவ்விதழ்களில் பதித்துப் பத்திரமாக அவள் மனப் பெட்டகத்தில் சேர்ப்பித்தான்.

* * *

கௌதமின் திருமணம் நடந்த வாரத்தில், பாலாவின் நிச்சயமும் நடந்து, அவன் ஆவலுடன் காத்துக் கொண்டிருந்த அவன் திருமணமும், குறித்த நாளில் சுற்றமும் நட்பும் சூழச் சிறப்பாக நடந்தேறியது.

பாலாவின் தந்தை வெங்கடேசன் அனைவரையும் மலர்ந்த முகத்துடன் வரவேற்றுக் கொண்டிருந்தார்.

தியானால் அடிக்கடி அலுவலகத்தில் விடுமுறை எடுக்க இயலாததனால், தன்னால் வர இயலாது என்று தெரிவித்திருந்தான். பாலாவும், கீதாவின் நலனையும், அவனின் சூழ்நிலையையும் புரிந்து கொண்டு சரி என்றான். ஆனால், இரண்டே வாரத்தில் மறுபடியும் பெங்களூருவில் இருந்து அவன் கல்யாணத்திற்கெனக் கோவைக்கு வந்த வருணைப் பார்த்து ஆச்சர்யப்பட்டுத் தான் போனான் பாலா. 'போன வாரம்தானே வந்துட்டுப் போனான். அதுக்குள்ளே என்னோட கல்யாணத்துக்கு வந்திருக்கானா? இல்லை. இவன் வேற எதுக்கோ வந்திருக்கான். இவன் கிட்ட பேசணும்', என்று நினைத்துக் கொண்டான்.

வசந்தோ, பாலாவைக் கிண்டல் செய்து, ஒரு வழிப்படுத்திவிட்டான். அவனிடம் வேண்டும் என்றே, ''பாலா! அது தான் தாலி கட்டி முடிச்சிட்டியே. இப்போ நீ வெட்டியாத்தானே மணவரையில உட்கார்ந்திருக்க? எனக்கு 'போர்' அடிக்குது. வா.. புதுசா வந்திருக்கும் அஜித் படத்துக்குப் போகலாம்'', என்று பாலா அவன் கல்யாணத்தில் செய்ததை மனதில் வைத்திருந்து சந்தோசமாகப் பழி தீர்த்துக் கொண்டான். நண்பர்கள் அனைவரும் சிரிக்க, புரியாமல் விழித்த தான்யாவுக்குப் பாலா விளக்கினான்.

அத்தோடு விட்டிருந்தால் அவன் வசந்த் அல்லவே. ஒரு அழகிய வர்ணத் தாள் சுற்றிய ஒரு பரிசுப் பொருளைக் கொண்டு வந்து அவனிடம் வசந்த் நீட்டினான். அதை வாங்கிய பாலா, ''வசந்த்! இதெல்லாம் எதுக்குடா?'' என்றான். அதில், வசந்த், கௌதம், வருண், தியான் என்று கையொப்பமிட்டு இருந்ததைப் பார்த்த பாலா, கௌதமிடம், ''என்ன இது?'' என்றான்.



''''எனக்கும் இதுக்கும் சம்பந்தம் இல்லை'', என்று சிரித்தான் கௌதம். பாலா, வருணைப் பார்க்க, அவனும் கௌதமைப் போலவே அமைதியாக நின்று கொண்டிருந்தான்.

வசந்த்! ''பாலா! இது உனக்கு ரொம்ப 'யூஸ்புல்லா' இருக்கும். உனக்கு இருக்கோ இல்லையோ, தான்யாவைக் கண்டிப்பா காப்பாத்தும். அவங்க எங்களுக்கு 'தேங்க்ஸ்' சொல்லுவாங்க. முதல்ல பிரிச்சுப் பாரு'', என்றான் பூடகமாக.

வசந்தின் குரலில் இருந்த ஆர்வம் அவனையும் தொற்றிக் கொள்ள, அதைப் பிரித்துப் பார்த்தவன், என்ன சொல்வது என்று தெரியாமல் வசந்தைப் பார்த்து முறைத்தான். அப்பொழுது, அங்கே வந்த மதுவும், சந்தனாவும் அதைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

''ஜாக்ப்ரூட்! ரொம்ப நல்ல 'கிஃப்ட்'. தேங்க் காட்'.. என்னோட அக்கா தப்பிச்சா!'' என்று அவள் பங்கிற்கு வார, தான்யாவும் அவர்களுடன் சேர்ந்து கொண்டு சத்தமில்லாமல் முறுவலிக்க, பாலா உசுப்பிவிடப்பட்டான்.

''டேய்! என்னோட் மானத்தை எவ்வளவு நாளா இப்படி வாங்கணும்ன்னு 'பிளான்' பண்ணிட்டு இருந்தீங்க? இதை 'வீடியோ'ல வேற ரெகார்ட்' பண்ணி வச்சு, உங்களை எல்லாம்... இருங்க அப்புறம் வச்சுக்கறேன்'', என்றான் தன் நண்பர்களிடம், பலமாக ஒலித்த, மெலிதாக இழையோடிய கோபக் குரலில். பின், தான்யாவிடம், ''இவங்க கூட சேர்ந்துட்டு நீயும் என்னைப் பார்த்துச் சிரிக்கிறியா. இரு, இரு உன்னை இன்னைக்கு 'நைட்' வச்சுக்கறேன்!'' என்றான், பலத்த காதல் கசியும், மெல்லிய ரகசியக் குரலில்.

அவன் கோபத்தைக் கிளறிய அந்தப் பரிசுப் பொருள், ''வெஜிடேரியன் குக்கிங் ஃபார் டம்மீஸ் (vegetarian cooking for Dummies) என்ற சமையல் குறிப்பு அடங்கிய புத்தகம் தான் அது. இதற்குப் பாலா கொதித்தது நியாயம் தானே?

வழக்கமான கலாட்டாக்களுக்குப் பஞ்சம் இல்லாமல் கல்யாண மண்டபமே களை கட்டியிருந்தது. ஒருவரைத் தவிர. தப்பு, தப்பு... மூன்று நபர்களைத் தவிர. முதல் இரண்டு பேர், பாலாவின் பாசமிகு அத்தைகள். எப்படியும் பாலாவின் மனதைக் கவர்ந்து, அவனை வீட்டின் மருமகன் ஆக்கிவிடலாம் என்று திட்டமிட்டு இருந்தது, இப்படி பாலா பொய் சொல்லி அதை நடக்க விடாமல் செய்ததால், முகத்தைத் தொங்கப் போட்டவாறே கல்யாணத்திற்கு வந்தனர். பல வருடங்களாகப் பேசாத தன் அண்ணன் இப்பொழுதாவது பேசினாரே என்று கல்யாணத்துக்கு வர இஷ்டமில்லை என்றாலும் வந்தனர்.

மூன்றாவது நபர், 'பாலா... பாலா' என்று உயிரை விட்டுக் கொண்டிருந்த சுவாதி அல்லாமல் வேறு யாராக இருக்க முடியும்?. விஷயத்தைக் கேள்விப்பட்ட உடனே, தான்யாவைத் துளைத்து எடுத்துவிட்டாள்.

''இது எப்படி நடந்தது? நான்தானே அவருக்காக உருகினேன். நீ அவர்கிட்ட ஒரு தடவை கூடச் சிரிச்சுப் பேசிப் பார்த்ததில்லையே? எப்பவுமே உர்ன்னு இருப்பியே? எப்படி நடந்தது இது? ஒரு வேளை நான் என் வெட்கத்தை விட்டு, என்னோட ஆசையை அப்பட்டமா அவர்கிட்ட காட்டினதுனால என்னைப் பிடிக்காமப் போயிடுச்சோ?'' என்று தான்யாவைக் குடைந்து நொங்கெடுத்து விட்டாள். தான்யாவோ, ஒரு சிரிப்பை மட்டும் பதிலாக அவளுக்குத் தந்து, பதில் சொல்லாமல் நழுவினாள்.



பாலா, கிடைத்த சந்தர்ப்பத்தில், அவன் நினைத்ததை வருணிடம் சென்று நேரடியாகவே கேட்டான். வருணும்,''பாலா! சொன்னா தப்பா எடுத்துக்காத. நான் கடந்த ரெண்டு வாரமா சந்தனாவைப் பத்தி நினைக்காத நாளேயில்லை.ஐம் இன் லவ் வித் ஹெர்(I am in love with her). என்னோட வீட்ல எந்தப் பிரச்சனையும் இல்லை. 'ப்ளீஸ்டா. நீ தான் பெரியவங்க கிட்ட எடுத்துச் சொல்லி எனக்கு உதவணும்!'' என்றான்.

அவன் சொன்னதைக் கேட்ட பாலாவிற்கு, கௌதம் அவனைச் சமாதனப்படுத்தவெனச் சொன்ன, 'இப்போ இல்லைன்னா வேற எப்பவாவது உனக்கு வேற யாருக் காவது உதவி செய்யச் சந்தர்ப்பம் கிடைக்கும். அப்போ பார்த்துக்கோ', என்ற வாக்கியம்தான் அவன் காதில் ஒலித்தது.

வருணைப் பார்த்துப் புன்னகைத்தவன், ''நீ உன்னோட காதல்ல உறுதியா இருக்கியா? அப்படி இருந்தா நானே உனக்காகப் பேசறேன்'', என்று அவனுக்கு நல்வாக்கு அளித்து அவனை மகிழ்ச்சியுறச் செய்தான்.

* * *

கனவுகள் அனைத்தும் நிஜமான பரவசத்துடன் அவனுடைய தனுவுக்காகத் தன் அறையில் காத்திருந்த பாலாவை, அதிக நேரம் காக்க வைக்காமல் வந்து சேர்ந்தாள் தான்யா. அவளைப் பார்த்தவனுக்கு வாயிலிருந்து ஒரு வார்த்தை கூட வெளிவராமல் ஊமையாகி நின்றான். அவளருகில் சென்றவன், அவள் முகத்தை நிமிர்த்தி, அவள் கண்களையே பார்த்து கொண்டிருந்தவனின் செயலைப் பார்த்து வெட்கப்பட்ட தான்யா, தலையைத் தாழ்த்தி, அவனைப் பார்ப்பதைத் தவிர்க்க முயன்றாள். ஆனால், அவனின் பிடியில் சிக்கியிருந்த அவளின்

தாடை அவள் சொல் பேச்சுக் கேட்காமல் சண்டித்தனம் செய்தது.

அவளின் கண்களின் வழியே இவள் மனதைப் படிக்க முனைந்தவன் தோற்றுப் போய், அவளிடமே சரணடைந்தான். ''கண்ணம்மா! உண்மையைச் சொல்லு. உனக்கு என்னைப் பிடிச்சுத்தானே கல்யாணம் செஞ்சுகிட்ட? எல்லோரும் சொன்னாங்கன்னு ஒண்ணும் நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கலையே?'' என்றான் ஏக்கத்துடன்.

''எ..ஏன்? உங்களைப் பிடிச்சுத்தான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்'', என்றாள், அவள் கண்களை அவன் மீது பதித்து. அவன் ஒன்றும் சொல்லாமல் அமைதியாக அவளையே பார்க்க, ''இது என்ன கேள்வி? பிடிக்காமத் தான் கல்யாணம் பண்ணிக்குவாங்களா? கேள்வி கேட்கறதைப் பாருங்க. அதுவும் கல்யாணம் முடிஞ்சதுக்கு அப்புறம். ஏன்? கல்யாணம் பண்ணிட்டு கேட்டாத்தானே என்னால தப்பிக்க முடியாது? அதுக்குத் தானே இப்போ கேட்கறீங்க. கரெக்ட் தானே? பயங்கரமான ஆளு நீங்க பாலா!'' என்று அவனைச் சிரிக்க வைக்க முயன்றாள்.

''இல்ல... நீ இதுவரைக்கும் நான் கேட்கணும்ன்னு நினைச்சதை வாய் திறந்து சொல்லவேயில்லையே.... அதான் கேட்டேன்'', என்றான் ஏமாற்றத்துடன்.

''நான் என்ன சொல்ல...'' என்று வாய் திறந்தவள், பின் புரிந்து கொண்டு, ''இதுக்குதானா? ஐ லவ் யு பாலா! போதுமா?'' என்றாள் வெட்கத்துடன்.

''ம்ம்ம்ஹூம், கன்னத்துல ஒண்ணு குடுத்து சொன்னாத்தான் நம்புவேன்'', என்றவுடன், கையைக் கொண்டு செல்லமாக அவன் கன்னத்தில் தட்டி, ''ஐ.லவ்,யு பாலா! இது போதுமா?'' என்று சொன்னவள், அவன் கைகளில் சிக்காமல் விலகி ஓடினாள்.



''இரு வரேன்'', என்றவன், அவளைத் தூக்க, சற்று நேரம் இருவரும் கட்டிலறையை விளையாட்டுத் திடல் ஆக்கி, யார் தோற்றார்கள், யார் ஜெயித்தார்கள் என்பதைப் பற்றிக் கவலை இல்லாமல் கபடி விளையாடினர்.

கடைசியில் அவனின் ஆளுகைக்குள் விரும்பியே கட்டுப்பட்டவள், ''பாலா! ரொம்ப தேங்க்ஸ். ஆறு மாசத்துக்கு முன்னாடி கூட நான் என்னோட வாழ்க்கையில இப்படிச் சிரிப்பேன்னு நினைக்கலை. அதுவும், அப்பா - அம்மாவும், சந்தனாவும் ரொம்ப சந்தோசமா இருக்காங்க. சந்தனாவை எப்போ இப்படி மறுபடியும் பார்ப்பேன்னு ரொம்ப ஏங்கினேன் தெரியுமா?'' என்றாள் கண்கள் கலங்கியவாறே.

''கண்ணம்மா! சந்தனாவைப் பத்தி கவலையேபடாத. அவள் உனக்கு மட்டுமல்ல, எனக்கும் ஒரு தங்கச்சி தான்னு முன்னமே சொல்லி இருக்கேனே. அவளோட சந்தோசத்துக்கு நான் பொறுப்பு. சந்தனாவே என்கிட்ட வந்து ஒண்ணு கேட்டா. அதுக்கு நானும் சரின்னு சொல்லிட்டேன். அவளுக்கு விருப்பம் இருந்தா நாம் ஏன் அதைத் தடுக்கணும்?'' என்றான்.

''என்ன கேட்டா?''

''சந்தனாவுக்கு கொஞ்ச நாள் அப்பா கூடப் போய் ஈரோட்ல பண்ணையில இருக்கணும்ன்னு ஆசையா இருக்குன்னு சொன்னா. அப்பாகிட்டேயும் நான் பேசிட்டேன். அவருக்கு இதை விட வேற சந்தோசம் ஒண்ணும் இல்லைன்னுட்டார். அவர் சந்தனாவைத் தன் மகள் மாதிரி பார்த்துக்குவார். கிராமத்துச் சூழ்நிலையிலே கொஞ்சம் சுதந்திரமா இருப்பா இல்லையா? அங்க இருக்கிற பச்சைப் பசேல் புல்வெளி, மலர்த்தோட்டம், கிராமத்து மக்கள்ன்னு பார்த்தா அவளுக்கு மனசுக்கு இதமா

இருக்கும். அதனால் கொஞ்ச நாளைக்கு அப்பா கூட இருக்கட்டும். அவள் அங்க இருந்தா நாமும் அப்பாவைப் பத்திக் கவலை இல்லாம இருக்கலாம்.நீ என்ன நினைக்கிற?'' அவனை ஆசையாய்ப் பார்த்தவள், ''எனக்காக எவ்வளவு யோசிச்சுச் செய்யறீங்க. ரொம்ப 'தேங்க்ஸ்!'' என்றாள்.

பாலாவும், 'அப்போ தானே அவளோட மனசு நல்லபடியா மாறி, நம்மளை மாதிரி கல்யாணம், குடும்பம்ன்னு ஆசை வரும்'', என்றான் ஒரு சிரிப்புடன். அவனைப் புரியாமல் பார்த்தவளிடம், வருண் சொன்னதைத் தெரிவித்தான்.

பாலா, தனக்காகவும், தன் தங்கைக்காகவும் பார்த்துப் பார்த்துச் செய்வதைப் பார்த்து மனம் உருகினாள் தான்யா. அவன் கன்னத்தில் முன்பு கேட்ட ஒன்றைப் பல மடங்கு பெருக்கிக் கொடுத்தாள். அவளின் அன்பில் கிறங்கியவன், அவளையும் அவன் அன்பினால் கிறங்க வைத்தான்.

அவள் முகத்தைக் கையில் ஏந்தி, அவள் கன்னத்தின் மேல் இருந்த தழும்பில் மென்மையாக இதழ் பதித்தான்.

''கண்ணம்மா! உன்னை முதல்ல பார்த்தப்போ உன்னோட கண்ணை 'பல்பு' கண்ணுன்னு சொன்னேனே, அது உண்மைதான். அந்த ஒளியிலதான் என்னையே நான் கண்டுபிடிச்சேன்.அப்புறம் திறக்காத 'பர்ஸ்' மாதிரி வாயின்னு வேற சொன்னேன் இல்லையா? அந்த பொக்கிஷத்தைத் திறக்கத்தானே நான் இருக்கேன்!'' என்றவாறே அவள் இதழ்களில் அவனுக்கே உரித்தான பொக்கிஷத்தைத் தடையில்லாமல் எடுக்க ஆரம்பித்தான்.



இவர்களின் வாழ்வில் காதலின் சாரல் அடித்துக் கொண்டேதான் இருக்கும்....

## 26

''மகிழ்ச்சியைத் தீண்டின கண்கள்
இன்பத்தை மீட்டியது நெஞ்சம்
ஆனந்தத்தை ஈட்டியது சிந்தனை
என் வாழ்க்கை ஈன்றெடுத்தது
என்னுள்ளே உறங்கிக் கிடந்த சந்தோசத்தை!''

இரண்டு வருடங்கள் உருண்டோட, மேட்டுப்பாளையத்திலிருந்து ஊட்டிக்குச் செல்லும் மலைப்பாதையில் ஒரு மினி வேன் மிதமான வேகத்தில் உருண்டு ஏறிக் கொண்டிருந்தது. பர்லியார் அருகில் வர வர, அவ்வண்டியின் வேகம் குறைந்து கடைசியில் அங்கிருந்த ஒரு கடையின் அருகில் இளைப்பாறியது.

வண்டியிலிருந்து ஓட்டுனர் இறங்கித் தேநீர் குடிக்கச் செல்ல, மற்றவர்கள் ஒவ்வொருவராகக் கீழே இறங்கினர்.

பெரும்பாலானோர் நமக்கு ஏற்கெனவே அறிமுகமானவர்கள்தான். இரண்டரை வருடங்களுக்கு முன் நண்பர்கள் மட்டுமே மேற்கொண்ட ஊட்டிப் பயணத்தை, தற்பொழுது நண்பர்கள் ஐவரும் தத்தம் குடும்பத்துடன் சேர்ந்து மேற்கொண்டிருந்தனர்.

வசந்த், மதுவுக்கு அழகான ஒரு பெண் குழந்தை பிறந்து, 'இதயா' என்று பெயர் சூட்டி அவள் வளர்ந்து, இப்பொழுது அவளுக்கு ஒன்றரை வருடங்கள் ஆகின்றன. வசந்தைப் போல துறுதுறு என்றும், மதுவைப் போல உருவத்தையும் கொண்டு அனைவரையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தாள்.

பாலாவுக்கும், தான்யாவுக்கும் அவர்களின் இல்லறத்தை நல்லறமென எடுத்துக் காட்டும் வகையில் பாலாவைப் போலவே ஒரு மகன் பிறந்தான்!(சிபி) அவனுக்குத் தற்பொழுது ஒரு வருடம் ஆகிறது. அவன் பாலாவைப் போல உருவம் கொண்டிருந்தாலும், அவனின் குணாதிசயங்கள் அவன் தந்தையைப் போலவா, அல்லது, அன்னையைப் போலவா என்று காலம்தான் அதற்குப் பதில் சொல்லும். வேலை, நிலம், பண்ணை, என ஓடிக் கொண்டிருந்த வெங்கடேசன், பேரன் பிறந்தவுடன், இத்தனை நாட்களும் கொண்டிருந்த பிடிவாதத்தை விட்டுவிட்டு, ஈரோட்டிலிருந்து தன் இருப்பிடத்தைக் கோவைக்கு மாற்றி, தற்சமயம் பேரனின் பின்னால் ஓடிக் கொண்டிருக்கிறார்.

தியானின் பெற்றோர்களும், தங்கள் மகனின் முடிவை ஆரம்பத்தில் எதிர்த்தாலும், அவனின் உறுதியைக் கண்டு, அவனின் முடிவிற்கு உறுதுணை அளிக்கும் விதத்தில், அவர்களின் இருப்பிடத்தைப் பெங்களூருக்கு மாற்றிக் கொண்டனர். ஆரம்பத்தில் நடந்ததை எல்லாம் மறந்து, கீதாவைத் தங்களின் மகள் போலப் பார்த்துக் கொண்டனர். கீதாவும், தியானும் அவர்களின் தனிமை வாழ்க்கையிலிருந்து விடுபட, அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்க மருத்துவரிடம் ஆலோசனை கேட்டு அதற்குத் தயாராகிக் கொண்டிருந்தனர்.

எட்டு மாதங்களுக்கு முன்தான் வருணுக்கும், சந்தனாவுக்கும் பெரியவர்கள் சம்மதத்துடன் திருமணம் சிறப்பாக நடந்தது. அந்தப் பெருமை அனைத்தும் பாலாவையே சேரும். தன் அக்கா கணவன் சொன்னதைத் தட்டாமல், வருணைப் பற்றி இவளிடம் கேட்டவுடன், 'நீங்க எது சொன்னாலும் சரி', என்றாள். ஆனால்,



படித்துக் கொண்டிருப்பதை முடித்த பின்தான் திருமணம் என்பதில் உறுதியாக இருந்தாள். அதன்படியே படித்து முடிக்கும் வரை வருணும் ஆசையுடன் காத்திருந்து அவள் கரம் பிடித்தான். அன்று பிடித்ததை இன்றுவரை விடவில்லை!

கௌதமும், வர்ஷனாவும் நட்சத்ராவிற்கென ஒரு அருமையான தம்பியைப் பரிசாகக் கொடுத்தார்கள். அவன் பிறந்து, அவனுக்கு நிரஞ்சன் என்று பெயர் சூட்டி, நான்கு மாதங்கள் ஆகின்றன. கௌதமின் திருமணம் முடிந்து சில மாதங்கள் கழிந்தவுடன், வர்ஷனாவும், கௌதமும் பொறுப்பெடுத்துத் தினகருக்கு ஒரு நல்ல பெண்ணைப் பார்த்துத் திருமணம் செய்து வைத்தனர். தினனகருக்கு ஒரு பெண் குழந்தை(ஆர்த்திகா) பிறந்து ஒரு வருடமாகிறது. இப்பொழுது, இவர்கள் தினகரின் வீட்டை நோக்கித்தான் சென்று கொண்டிருந்தனர்.

பார்லியாரில் சிறிது நேரம் ஓய்வெடுத்து, நேநீர் பருகி, அயர்வைச் சிறிது துரத்திவிட்டு, தங்களின் பயணத்தை உல்லாசமாகத் தொடர்ந்தனர். அவர்களின் வண்டியிலிருந்து ஒரே கூச்சலும், சத்தமும் குதூகலத்துடன் வந்து கொண்டுதான் இருந்தது. என்னதான் பாலா பொறுப்பான கணவனாக, அன்பான தந்தையாக மாறினாலும், பலரையும் அலற வைக்கும், அவனின் வியக்கத்தக்க கடிக்கும் திறனில் இருந்து சிறிதும் பிறழாமல் பார்த்துக் கொண்டான்.

''இங்கிலீஷ் லெட்டர்ஸ்'ல சூடான லெட்டர் எது தெரியுமா? 'பி'(b) ஏன்னா, அதுதான் 'ஆயில்'லை (oil) 'பாயில்' (Boil) ஆக்கும்!'' என்று கடித்துக் குதறித் துப்பிக் கொண்டிருந்தான்.

"அண்ணா! கல்யாணம் ஆன பின்னாடி உங்களுக்குப் பொறுப்பு வந்துடுச்சுன்னு பார்த்தா, இன்னும் அப்ப டியேதான் இருக்கீங்க!" என்று பாலாவிடம் சொன்ன மது,. "என்ன தான்யா, இதையெல்லாம் கண்டிக்கறது இல்லையா?" என்று அவன் மனைவியிடம் கேட்டாள்.

"ச்சே!ச்சே! என்னோட தனு அப்படியெல்லாம் என்னை மிரட்ட மாட்டா!" என்று அவன் பெருமையுடன் வழிய, தான்யாவோ, "இல்லை மது, இப்பவாவது வெளில உங்ககிட்ட தான் கடிக்கிறாரு. நான் கண்டிக்கப் போய், 'நீ தானே மத்தவங்களைக் கடிக்காதேன்னு சொன்ன. அதனால தான் உன்னை வந்து கடிக்கிறே'ன்னு என் கிட்டேயே தன்னோட வேலையைக் காண்பிக்க ஆரம் பிச்சுடுவார். அதுவுமில்லாம, நான் இவரோட காலையில இருந்து ஆபீஸ்ல வேற ஒண்ணா வேலை பார்க்கணும். என்னைப் பார்த்தா பாவமா இல்லையா?" என்று சொல்லிப் பாலாவை முறைக்க வைத்தாள்.

"அப்படிச் சொல்லுக்கா!" என்று தன் அக்காவை உசுப்பேத்தினாள் அருமைத் தங்கை சந்தனா.

"மது! நீ என்னோட தங்கச்சி, என் கட்சின்னு நினைச் சேன். இப்படிக் கவுத்திட்டியே?" என்று சோகத்தைக் கூட்டி, வார்த்தைகளில் விளையாட ஆரம்பித்தான்.

"தனு! எப்படி, எப்படி? என்னோட காலையிலிருந்து வேலை செய்யணுமா? தனும்மா! இன்னைக்கு 'நைட்' நான் சமைக்கறதுதான் உனக்கு 'மெனு'ம்மா!" என்று சொல்லி அனைவரையும் சிரிக்க வைத்துக் கொண்டிருந் தான்.

நட்சத்ராவை அருகில் உட்கார வைத்துக் கொண்ட கௌதம், உள்ளே ஒரு வானரம் செய்யும் சேட்டையை



மகளிடம் காண்பிக்காமல், அவர்கள் செல்லும் வழியில், சாலையின் இரு புறமும் குறும்புகள் செய்து கொண் டிருந்த வானரக் கூட்டங்களைக் காட்டிக் கொண்டிருந் தான். நட்சத்ரா, தொட்டதற்கெல்லாம் தன் தாயை விட தன் தந்தையையே அதிகம் நாடினாள். அதை மிகவும் விரும்பியே ஏற்றான் அந்தத் தந்தை. அந்த ஒற்றை நட்சத்திரத்தின் செயல் அவனுக்கு விண்வெளியையே கையில் தந்த பரவசத்தை ஏற்படுத்தியது.

இப்படியே பேசிச் சிரித்துக் கொண்டு, ஊட்டிக்கு. ஓய்ந்து களைத்துப் போய் வந்தவர்களை இனிய, மலர்ச்சியுடன் வரவேற்றான் தினகர். அவர்கள் தங்கள் பயணம் முடியும் வரை அங்கேதான் இருக்க வேண்டும் என்று உத்தரவும் இட்டுவிட்டான். அனைவரும் அவன் வீட்டில் தங்கிக் கொள்ள, அங்கிருந்த வேலையாட்கள் அவர்களை நன்கு கவனித்துக் கொண்டனர்.

அன்று முழுவதும் மற்றவர்கள் ஓய்வெடுக்க, வர்ஷனா மட்டும் தன் அண்ணனுடன் சென்று, அவன் மலைவாழ் பெண்களுக்காக மேற்கொண்டிருந்த பணியைப் பார்த்து விட்டு வந்தாள்.

மறுநாளில் இருந்து ஊர் சுற்றக் கிளம்பி விட்டது நண்பர் பட்டாளம். தினகரைப் பலமுறை வற்புறுத்தியும் அவன் நண்பர்களின் தனிமையைக் கலைக்க விரும்ப வில்லை என்று சொல்லிவிட்டான். அதற்கு மேல் அவனை வர்ஷனாவும், கௌதமும் வற்புறுத்தவில்லை.

ஏற்கெனவே பலமுறை வந்த இடம்தான் என்றாலும், ஒவ்வொரு முறையும் மனதில் ஊற்றெடுக்கும் இன்பத்தை, அதுவும் மனதிற்குப் பிடித்தவர்களுடன் செல்லும் பொழுது இரட்டிப்பாவதை விடுவதற்கு யாருக்குத்தான் மனம் வரும்?

பகலெல்லாம் வெளியில் சுற்றுவதும், இரவு வீட்டில் அரட்டை அடித்துக் கொண்டும் மிக சந்தோசமாகப் பொழுதைக் கழித்து வந்தனர். ஒரு நாள் பகலில் சிறுவர் பூங்காவில் சுற்றிக் கொண்டிருந்த பொழுது, பாலா தான்யாவிடம் ஏதோ சிரித்துப் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்த வசந்த், அவனிடம், ''பாலா! இப்படிப் பேசி 'டைம் வேஸ்ட்' பண்ணறதை விட்டுட்டு வாடா. நாம போய் இயற்கையை ரசிக்கலாம். அதாவது இயற்கையோட படைப்பான பெண்களைப் பார்த்து ரசிக்கலாம். பாரு எல்லோரும் எவ்வளவு 'கலர் கலரா', அழகா இருக்காங்கன்னு!'' என்று வம்பிற்கு இழுத்தான்.

அதைக் கேட்டவன், ''ஏன்டா! கல்யாணம் ஆன என்னைப் பார்த்துப் பேசற பேச்சா இது? உனக்கும் கல்யாணம் ஆயிடுச்சுன்னு கொஞ்சமாவது இருக்கா. அதுவும் ஒரு குழந்தைக்கு அப்பாவா இருந்துட்டு!'' என்று எரிந்து விழுந்தான்.

''ஏன்டா, 'உனக்குக் கல்யாணம் ஆனதாலே நான் பொண்ணுங்களைப் பார்க்கக் கூடாதா இல்லை கல்யாணம் ஆனவங்க தான் பொண்ணுங்களைப் பார்க்கக் கூடாதா?'ன்னு யாரோ சொன்னதா எனக்கு ஞாபகம்!'' என்று இழுத்து, பாலா இரண்டரை வருடங்களுக்கு முன் சொன்ன வார்த்தைகளையே திருப்பிப் படித்து அவனைச் சீண்டினான்.

அதைக் கேட்ட தான்யா, வசந்திடம், ''யார் வசந்த இந்த மாதிரி தத்துவங்களை எல்லாம் சொன்னது?'' என்று கேட்டவுடன், பாலாவின் முகம் சுருங்கியதைப் பார்த்த கௌதம், வசந்தைக் கண்களால் கடிந்து கொண்டான். இவர்களின் நாடகத்தைப் பார்த்த தான்யா, யார் அவ்வாறு சொல்லி இருப்பார்கள் என்று புரிந்து



கொண்டு தன் கணவன் அருகில் சென்று அவன் கைப் பிடித்துக் கொண்டு, ''ஆனா.., யார் சொன்னா என்ன? அப்படிச் சொல்லறதுல என்ன தப்பு இருக்கு? அழகை எங்கிருந்தாலும் ரசிச்சுப் பாராட்டணும். ரசிக்கறதுக்குத் தானே அழகு. இல்லையா பாலா?'' என்று அவன் என்றோ சொன்னதுக்கு இன்று ஒத்து ஊதினாள் அவன் ஆசை மனைவி.

விஷயம் அறிந்த மது, வருண், தியான், மற்றும் சந்தனா, ''ஓஹ்ஹோ,'' என்று அதற்கும் பாலாவை வம்புக்கு இழுத்தனர். கீதா இவர்களின் உரையாடலைக் கேட்டுச் சிரித்தாலும், நட்சத்ரா, இதயா மற்றும் சிபியுடன் விளையாடிக் கொண்டிருந்தாள்.

''இப்போ என்ன பண்ணுவீங்க? இனி உங்களால என்னை மிரட்ட முடியாது. என்னை நல்லாப் புரிஞ்சு வச்சிருக்கா என்னோட தனு!'' என்றான் பாலா, அனைவரிடமும் பெருமையாக. பின், ''எல்லாம் காரியம் ஆகிற வரைக்கும்தான் எனக்கு 'ஐஸ்' வைப்ப இல்லையா? ரொம்ப பேசின, அப்புறம் சந்தனாவைப் பெங்களூருக்கு விட மாட்டேன்!'' என்று வருணை மிரட்டினான்.

சந்தனாவோ, ''என்னை எதுக்கு விட மாட்டீங்க? நீங்க மட்டும் உங்க மனைவியோட சந்தோசமா இருக்கணும்... நாங்க மட்டும் பிரிஞ்சு இருக்கணுமா?'' என்று காதல் மனைவியாகச் சிலிர்த்து எழுந்தாள்.

அவளின் காதைப் பிடித்துத் திருகியவன், ''எல்லாம் என் நேரம். கல்யாணத்துக்கு முன்னாடி 'நீங்க என்ன சொன்னாலும் எனக்குச் சரி'ன்னு சொன்னது என்ன? இப்போ பேசறது என்ன? ரொம்பப் பேசின உன்னை இங்க இருந்து உருட்டி விட்டுடுவேன்!'' என்று அவளையும் விட்டு வைக்காமல் மிரட்டினான்.

வசந்தோ, ''எப்படி?'லைசென்ஸ்' வாங்கும் போது காரை உருட்டி விட்டியே, அது மாதிரியா?'' என்றான் விடாமல்.

அதுவரை அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்த தான்யா, வாயைத் திறந்தாள். ''வசந்த்! நீங்க நினைக்கிற மாதிரி எல்லாம் இப்போ பாலா இல்லை. இப்போவெல்லாம் ரொம்ப நல்லா கார் ஓட்டறார்!'' என்று நற்சான்றிதழ் கொடுத்துப் பாலாவைப் பார்க்க,

அவனோ, ''நல்லாப் புரியற மாதிரி எடுத்துச் சொல்லு நம்ம திறமையை அவங்ககிட்ட,'' என்றான் பெருமையாக.

அவன் சொன்னதைக் கேட்டு ஒரு விஷமச் சிரிப்புடன், ''இல்லைன்னா எப்படி என்கிட்ட படம் போட முடியும்? சொல்லுங்க வசந்த்?'' என்று அவள் பங்கிற்குப் பாலாவின் காலை வாரினாள் தான்யா.

தான்யா சொன்னதைக் கேட்டு மற்றவர்கள் சிரிக்க, பாலா அவளைத் துரத்த, அவளோ அவன் கைகளில் சிக்காமல் ஓட, பாலா தான் அவன் மகனின் கையில் சிக்கிக் கொண்டான். அவன் தந்தையின் காலைக் கட்டிக் கொண்டு, ''அவுத் .., அவுத்...'' என்றான் குதித்துக் கொண்டே. அதைப் பார்த்த அனைவரும் சிரிக்க, தன் மகனை எடுத்து ஆசையாக அணைத்துக் கொண்டு, அவன் கன்னத்தில் முத்தமிட்டான் பாலா.

இவ்வாறு ஒருவரை ஒருவர் வாரிக் கொண்டும், ஒருவரை ஒருவர் தாங்கிக் கொண்டும், அவர்கள் தங்கள் நேரத்தை உல்லாசமாகக் கழித்தனர்.

ஒரு நாள் இரவு. வர்ஷனாவின் மகன், நிரஞ்சன் உறங்க, நட்சத்ரா, ஒரே சமயத்தில் தன் தம்பிக்குப் பாதுகாப்பு அரண் அமைத்துக் கொண்டும், இதயா மற்றும் சிபியுடனும் விளையாடிக் கொண்டும் இருந்தாள். பெரியவர்கள், ஆண்களும் பெண்களுமாக இரு



குழுக்கள் அமைத்து 'பிக்ஷனரி (Pictionary) விளையாடிக் கொண்டிருந்தார்கள். அதில் ஒருவருக்குக் கொடுக்கும் வார்த்தையை, தங்களின் அணியில் இருக்கும் மற்றவர்களுக்கு வரைந்து காண்பிக்கவேண்டும். அவர்கள் வரைவதை வைத்து அது என்னவென்று மற்றவர்கள் கொடுத்திருக்கும் நேரத்திற்குள் கண்டுபிடிக்க வேண்டும்.

பாலாவின் முறை வந்தபொழுது, அவன் வரைய ஆரம்பிக்க, மற்ற நால்வரும் அவன் வரைவதைக் கண்டுபிடிக்க முயன்றனர்.

'முகம்', 'காது', 'மிருகம்', 'மான்' என்று அவன் வரைவதை வைத்து ஒவ்வொருத்தரும், ஒவ்வொன்றையும் சொல்லிக் கொண்டிருக்க, அவர்களின் நேரமும் முடிந்தது. அவன் வரைவதைக் கண்டுபிடிக்க முடியாமல் போகவே,

''போங்கடா! உங்களுக்குப் போய் வரைஞ்சு காண்பிச்சேனே. எதையாவது ஒழுங்காக் கண்டுபிடிக்கறீங்களா?'' என்று சலித்துக் கொண்டான் பாலா. பெண்ள் அணியினர், இவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தனர்.

''சரி! அப்படி என்னதான் வரைஞ்ச?'' என்றான் வருண் தெரிந்து கொள்ளும் ஆவலில்.

'நாய்', என்றவனை, ''நிஜமா நாய் வரைஞ்சியா? முகத்துக்கு முன்னாடி அது குரைக்கிற மாதிரி 'ஹிண்ட்' கொடுத்திருந்தா நாங்க கண்டுபிடிச்சிருப்போமே? இல்லாட்டி வாலை ஆட்டுற மாதிரியாவது 'ஹிண்ட்' கொடுத்திருக்கலாமே?'' என்று ஆளுக்கொன்றாய்ச் சொன்னார்கள்.

''நான் தான் நாலு காலு வரைஞ்சேனே. அதை வச்சு கண்டுபிடிக்கக் கூடாது?'' என்று பதிலளித்தவனைப் பார்த்து முறைத்தவர்கள், ''எங்களுக்குத் தெரிஞ்சு எல்லா மிருகங்களுக்கும் நாலு கால்தான் இருக்கும்!'' என்றனர் ஒரு சேர.

"அப்படின்னா எனக்குத் தெரிஞ்சு எல்லா மிருகங் களுக்கும் ஒரு வால்தான் இருக்கும்!" என்ற அவனின் பதிலில் வெகுண்ட வசந்த், "டேய்! ஏன்டா எங்களை இப்படி இம்சைப் படுத்தற? அடுத்த தடவையாவது ஒழுங்கா வரைடா. இல்லாட்டி உன்னை என்ன பண்ணறேன் பாரு!" என்று அவனை அதட்டினான்.

"அடுத்த தடவையாவது ஒழுங்காக் கண்டுப்பிடிங்க... நானும் என்னோட திறமையைக் கஷ்டப்பட்டு வெளில கொண்டு வந்தா.... ம்ம்ம்... கழுதைகளுக்குத் தெரியுமா கற்பூர வாசனை!" என்று அங்கு விளையாடிக் கொண் டிருந்த குழந்தைகளுக்குக் கேட்காத வண்ணம் முணு முணுத்தான். அவனின் முதுகில் ஆளுக்கு ஒன்றைப் பலமாக கொடுத்துவிட்டுத் தான் மறுபடியும் மும்முரமாக விளையாட ஆரம்பித்தனர். மேலும் நான்கு சுற்றுகள் முடிந்து, பாலாவின் முறை வரும் பொழுது, "ஒழுங்கா வரைஞ்சு நம்ம மானத்தைக் காப்பாத்துடா!" என்றான் தியான்.

அவனும் 'ஸ்டைலா'க பென்சிலை எடுத்து, கை தேர்ந்த ஓவியன் போல வரைய ஆரம்பித்தான்! இவர்களும் அவன் வரைவதைப் பார்த்து, "ஆள், ஆண், பெண்", என்று ஒவ்வொன்றாக ஊகித்துக் கொண்டிருந்தனர். அவன் வரைவதைக் கண்டுபிடிக்கத் திணறி, கடைசி யில் நேரம் முடிய ஒரு நொடிக்கு முன், "ஒசாமா பின் - லேடன்!" என்று அனைவரும் ஒரே சமயத்தில் கத்தினர். அதைக் கேட்டுப் பெண்கள் அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

நண்பர்கள் நான்கு பேரும் பாலாவைப் பார்க்க, "ஏன்டா உங்களால 'சான்ட்டா கிளாஸ் (Santa claus) கூட கண்டுபிடிக்க முடியலையா. ச்சே! இப்படிச் சொதப்பிட் டீங்களே. உங்களால இப்போ நாம தோத்துப்



போயிட்டோம் பாருங்க!" என்றான் முகத்தை அப்பாவி யாக வைத்துக் கொண்டு.

"பாலா! உன் மனசைத் தொட்டுச் சொல்லு. நீ வரஞ்சதைப் பார்த்தா நிஜமாவே 'சான்ட்டா கிளாஸ்' மாதிரியா இருக்கு?" எனக் கேட்ட வசந்திடம், "நான் தான் கரெக்டா தாடி எல்லாம் போட்டு இருக்கேன் இல்லை. அதை வச்சுக் கூட கண்டுபிடிக்க மாட்டீங்களா?" என்றான்.

"திருப்பதிக்குப் போய் மொட்டை போட்டவனைத் தேடற கதையா இருக்கு நீ சொல்லறது. எந்த ஊருல 'சான்ட்டா' இப்படி ஒல்லியா இருக்கிறாரு? உன்னை இனிமேல் எங்க அணியில் இருந்து தள்ளி வைக்கிறோம்!" என்றான் வசந்த்.

"உங்களுக்குக் கண்டுபிடிக்க முடியலைன்னா. அதுக்கு நான் என்ன பண்ணுவேன்?" என்று அவனும் பதிலுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது, அங்கே விளையாடிக் கொண்டிருந்த பாலாவின் மகனோ, தன் தந்தையின் மடியில் வந்து அமர்ந்து கொண்டு, "ப்பா.. ப்பா.. பூச்சாண்டி.." என்று அவன் வரைந்து வைத்திருந்த படத்தைச் சுட்டிக் காண்பித்து, அவன் அதுவரை நட்சத்ரா மற்றும் இதயாவிடம் விளையாடிக் கொண்டிருக்கும்பொழுது கற்ற வார்த்தையைச் சொன் னான். அதைக் கேட்ட மற்றவர்கள் விழுந்து விழுந்து சிரிக்க, பாலாவோ அசடு வழிய முழித்துக் கொண் டிருந்தான்.

யாரும் சிரிப்பை நிறுத்துவது போலத்தெரியவில்லை என்பதை உணர்ந்தவன், "டேய் கண்ணா! நீயும் உன் அம்மா மாதிரியே என்னை நேரம் காலம் தெரியாமல் காலை வாருறியே? நீ தனியா என்கிட்டே வருவ

இல்லை. வா... வா... அப்போ வச்சுக்கறேன்'', என்று அவனைச் செல்லமாகக் கொஞ்சினான். அவனோ, அவனைப் பார்த்து, 'ஈ...ஈ....ஈ' என்று பொக்கை வாயைத் திறந்து சிரித்தான்.

அவனிடமிருந்து திசையைத் திருப்பும் வண்ணம், பாலா நட்சத்ராவை அழைத்து, 'ரைம்ஸ்' சொல்லச் சொல்லி, சூடாக அவனுக்கே ஆப்பை வாங்கிக் கொண்டான்.

''ஸ்டார்', இங்க வாம்மா. வந்து எங்களுக்கு எல்லாம் ஒரு 'ரைம்' சொல்லு'', என்றான் நட்சத்ராவிடம். அவளும், சிறிதும் யோசிக்காமல்,

"Twinkle. twinkle traffic light.
Round the corner shining bright/
Red means stop.
Green means go.
Yellow means very. very slow/
Twinkle. twinkle traffic light.
Round the corner shining bright!"

என்று அழகாகப் பாடினாள். அவள் பாடி முடித்ததும் அனைவரும் கை தட்ட, பாலாவின் மகனும் சேர்ந்து கைதட்டிக் கொண்டிருந்தான்.

'அப்பாடா!' என்று மனதிற்குள் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்த பாலாவை விடுவேனா என்று, ''பாலா! உனக்காகவே தான் ஏதோ பாடறா நட்சத்ரா. நல்லா கேட்டுக்கோ. உபயோகப்படும்!'' என்று அவன் மனதிற்குள் சந்தோசப்பட்டுக் கொண்டிருந்ததை உடனே அழித்தான் வசந்த்.

''ஸ்டார், எத்தனை 'ரைம்ஸ்' தெரியும் உனக்கு? இதைப் பாடி என்னோட மானத்தை இப்படி வாங்குவியா?''



என்று முணுமுணுத்தவன், பின் கௌதமிடம், ''ஏன்டா! இதெல்லாம் உன்னோட 'ட்ரைனிங்'கா?'' என்றான்.

எப்பொழுதும் போலவே கௌதம் ஒரு சிரிப்பை உதிர்க்க, வர்ஷனா தான், ''அதெல்லாம் நாங்க 'ட்ரைனிங்' எல்லாம் கொடுக்கத் தேவையே இல்லாம அவனே உங்களைப் பார்த்துக் கத்துக்கிட்டா!'' என்றாள்.

அனைவரையும் கலகலவென்று பேச வைத்த பாலா, வர்ஷனாவையும் விட்டு வைக்கவில்லை. கடந்த இரண்டு வருடங்களில், எண்ணி எண்ணிப் பேசிக் கொண்டிருந்த வர்ஷனாவை, விரல் விட்டு எண்ணாமல் பேசுவதற்குப் பயிற்சி அளித்திருந்தான்.

''உன்னைப் பேச வச்சு நானே எனக்கு ஆப்பு வாங்கிக்கிறேனே!'' என்று தன் உணர்வுகளைக் கொட்டிக் கொண்டிருந்தான் பாலா.

இப்படியே பொழுது இனிமையாகக் கழிய, மறுநாள் மதியம் உணவருந்திய பின், அனைவரும் உயிரியல் பூங்காவிற்குச் சென்றனர். மறுநாள், ஊருக்குத் திரும்ப இருப்பதால், மிச்சம் மீதி வைத்த சண்டைகளையும், வம்பு வளர்ப்பதையும் போட்டும், செய்தும் இனிதே முடித்தனர். கிளம்புவதற்கு முன், அனைவரும் 'போஸ்' கொடுக்க, அனைவரையும் புகைப்படம் எடுத்துத் தள்ளிக் கொண்டிருந்தான் பாலா.

பாலாவையும் சேர்த்துப் புகைப்படம் எடுக்கவேண்டி அவர்களுக்கு அருகில் வந்த ஒருவரிடம் புகைப்படம் எடுத்துத் தருமாறு கேட்டுக் கொண்டான் பாலா. அவரும், இவர்களைப் பல இடங்களில், பல விதமாகப் படம் எடுத்துக் கொடுத்தவர், இறுதியாக அவர்களிடம் தன் கூலியைக் கேட்டார்.

புரியாமல் விழித்தவர்களிடம், சிரித்துக் கொண்டே, ''வேற ஒண்ணுமில்லை. நான் ஒரு பத்திரிகைல வேலை செய்யறேன்'', என்று பத்திரிகை பெயரைக் கூறியவர், ''இளைஞர்களைப் பத்தி, அவர்களின் 'ஜாலி'யான 'லைஃப்' பத்தி, ஒரு 'ஆர்டிகல்' எழுதத்தான் இங்க வந்தேன். முதல்ல 'காலேஜ் ஸ்டூடண்ட்சை' 'அப்சர்வ்' பண்ணி அதை வச்சு எழுதலாம்னு தான் இங்க ஊட்டிக்கு வந்தேன். ஆனா, உங்களைப் பார்த்ததுக்கு அப்புறம், உங்க செல்லச் சண்டைகளையும், மனம் கொள்ளும் குதூகலத்தையும் பார்த்து, கல்யாணம் ஆகியும், உங்கள் நட்பையும் விடாமல், எல்லோரும் ஒண்ணா வந்திருக்கிறதைப் பார்க்கறப்போ, உங்ககிட்ட சின்னதா ஒரு பேட்டி எடுத்து, பேட்டியைப் போட்டு, என்னோட 'ஆர்டிகல்' எழுதலாம் என என்னோட முடிவை மாத்திட்டேன். அது தான் உங்க பேட்டியை என்னோட கூலியா தாங்க'', என்று சிரித்தவாறே தெளிவுபடுத்தினார்.

''ஓஹ்... அதனால என்ன? நீங்க என்ன கேட்கணும்னாலும் கேளுங்க'', என்று அனைவரும் ஓர் இடத்தில் அமர்ந்தனர்.

அவர் கேட்ட பல கேள்விகளுக்குச் சலிக்காமல், அலுக்காமல் பதில் அளித்தனர் - நண்பர்களும் அவர்களின் துணைவியரும். அவர் கேட்ட கேள்விகளில் முக்கியமானவற்றை மட்டும் உங்கள் பார்வைக்கு வைக்கிறேன்.

''ஃப்ரெண்ட்ஸா நீங்க வந்ததுனால முதல்ல நட்பை பத்தி கேட்கிறேன். நட்பைப் பத்தி என்ன நினைக்கறீங்க?'' எனவும் பாலாவும், தியானும் போட்டி போட்டுக் கொண்டு பதிலளித்தனர்.



''நட்பு இல்லாட்டி நான் இந்த அளவுக்கு சந்தோசமா இருப்பேனான்னு எனக்குத் தெரியலை. அதுவும், என்கிட்ட இருந்து ஒரு கைம்மாறும் எதிர்பார்க்காம உதவி செஞ்ச என்னோட நண்பனுக்கு நான் ரொம்பக் கடமைப்பட்டிருக்கிறேன்!'' என்று பாலா கௌதமைப் பார்த்தான்.

''எனக்கு உதவி தேவைன்னு நான் நினைக்கறதுக்கு முன்னாடி வந்து நிற்பாங்க என்னோட நண்பர்கள். எல்லோர் வாழ்க்கையிலும் உண்மையான நட்புக் கிடைச்சா அவங்க வாழ்க்கை முழுவதும் சந்தோசமா இருக்கலாம். எந்தப் பிரச்சனையையும் துணிந்து நின்னு சமாளிக்கலாம். அதிலும் நான் என் நண்பன் கௌதமைப் பத்தி என்னன்னு சொல்லறது!'' என்றான் தியான் அவன் பங்கிற்கு.

கௌதம், ''நட்புங்கறது, எதிர்பார்ப்பில்லாம, சுயநலமில்லாததா இருக்கணும்ன்னு, எனக்கு என் நண்பன் கார்த்திக், எனக்காக வாழ்ந்து புரிய வச்சான்!'' என்றான்.

அவரின் மற்றுமொரு கேள்வி, ''பெண்களைப் பத்தி என்ன நினைக்கறீங்க?''

''பெண்கள்! நேசிக்கப்பட வேண்டியவங்க! மதிக்கப்பட வேண்டியவங்க... மிதிக்கப் பட வேண்டியவங்க இல்லை.... அவங்க இல்லாட்டி நம்ம வாழ்க்கை, நாம உருவானதோட நின்றிருக்கும். ஒரு உயிர் உருவாக மட்டும் தான் ஆண்கள் காரணமா இருக்காங்க. ஆனா, பெண்கள், அந்த உயிர் உருவாக மட்டும் காரணம் இல்லை. அந்த உயிரை ஒரு முழு மனிதனா உருவாக்கவும் செய்யறாங்க. பெண்கள் பல வழிகளில் பல பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டி இருக்கு. அவங்களுக்குத் தோள் கொடுக்

கறதை விட்டுட்டு, தேள் மாதிரி கொட்டக் கூடாது!'' என்றான் வருண். சந்தனாவின் கையைத் தன் கைக்குள் வைத்துக் கொண்டு. அவன் சொன்னதைக் கேட்ட மற்ற அனைவரும் வருணை நன்றியுடன் பார்த்தனர்.

''பெண்கள் படும் பிரச்சனைகளை எங்களால புரிஞ்சுக்க முடிஞ்சது. எங்களைச் சுத்தி இருக்கிறவங்க பெண்களை மதிக்கறதுனால கூட எங்களோட எண்ணம் அப்படி வளர்ந்திருக்கலாம். அப்பாவா,அண்ணனா, தோழனா, தம்பியா, காதலனா, கணவனா, யாரா இருந்தாலும், முதல்ல, பெண்கள் கிட்ட மனம் திறந்து பேசணும். அப்போதான் அவர்கள் படும் அவஸ்தையை நம்மால் புரிந்து கொள்ள முடியும்'', என்றான் தியான் - தன் மனைவியைக் கண்களால் அணைத்தவாறே.

''நீங்க கல்யாணத்துக்கு அப்புறம் உங்கள் துணைக்காக மாற்றின விஷயங்கள்?''

''நான் என்னோட அவசரத்தனத்தையும், யோசிக்காமல் அவசரப்பட்டுப் பேசி மனத்தைச் சங்கடப்படுத்துவதையும் விட்டுவிட்டேன்'', என்றான் வசந்த் அவசரமாக. அனைவரும் அவன் அவசரமாகச் சொன்ன பதிலைக் கேட்டுச் சிரிக்க, ''அது என் துணைகிட்டன்னு தானே அவர் கேட்டார். அதுவுமில்லாம இப்போ நான் யாரோட மனசையும் கஷ்டப்படுத்தலையே!'' என்றான் அசடு வழிய.

''தியாகத்தில் சிறந்த தியாகம் எது?''

''என் நண்பனின் தியாகம். என் காதலுக்காக அவன் தன் காதலைத் தியாகம் செய்தான்!'' என்றான் கௌதம்.

''என் கணவனின் தியாகம். அவர் எனக்காக, என் நன்மைக்காகத் தன் வாழ்க்கையைப் பணயம் வைத்தவர்!'' என்றாள் கீதா.



''என் தந்தையின் தியாகம். தன் வாழ்க்கையை என்னோட அம்மா போனதுக்கு அப்புறம் எனக்காகவே, என்னோட சந்தோசத்துக்காகவே வாழ்ந்தார், வாழ்ந்துட்டு இருக்கிறார்'', என்றான் பாலா.

''என் அக்காவின் தியாகம். எனக்காகத் தன் காதலைக் கூட உணராமல், என் சந்தோசத்துக்காக மட்டும் வாழ்ந்த என் அக்கா'', என்றாள் சந்தனா.

''என்னோட தாயின் தியாகம். வேலையில்லாம, அப்பா கஷ்டப்பட்ட போதும் சரி. எங்களுக்குன்னு ஒரு பிரச்சனைன்னு ஒண்ணு வந்த போதும் சரி,அவங்க அன்பு சிறிதும் மாறாம, தான் கஷ்டப்பட்டாலும், எங்களின் நலனுக்காக மட்டும் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கும் என்னோட, அம்மாவின் தியாகம்!'' என்றாள் தான்யா.

இவ்வாறு ஒவ்வொருவரும் நண்பனையோ, கணவனையோ, கூடப் பிறந்தவர்களையோ அல்லது பெற்றவர்களையோ சொல்லிக் கொண்டிருந்தனர்.

இவர்கள் பேசுவதைக் கவனித்துக் கொண்டிருந்த மது பத்திரிகை நிருபர் வேறு கேள்விக்குத் தாவும் முன், குறும்புடன், ''நான் என்னோட கணவன் மற்றும் என் அண்ணனோட தியாகத்தைத்தான் பெருசா சொல்வேன். ஏன்னா அவங்க தானே தன் நண்பனால நாலு வருஷமா சாப்பாட்டையே தியாகம் செஞ்சிருக்காங்க. அதுவும் நாடு விட்டு நாடு போய்!'' என்று பாலாவைப் பார்த்தாள்.

அவள் சொன்னதைக் கேட்டு அனைவரும் சிரிக்க, ''இப்போ ரொம்ப முக்கியம். உன்னோட அண்ணனோட பெருமையையும், கணவனோட பெருமையையும் சொல்லணும்ன்னு. அவர் உன்கிட்ட கேட்டாரா?'' என்று

சண்டை போட்ட பின்தான் அடுத்த கேள்வியைக் கேட்க விட்டான் பாலா.

''கடைசியா ஒரு கேள்வி. எல்லோர்கிட்டேயும் கேட்கும் கேள்விதான் இது. காதலைப் பத்தி உங்கள் கருத்து?''

காதலைப் பற்றி ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு கருத்துச் சொல்ல, கௌதம், ''மழைச் சாரல் வந்து மண்ணின் வாசத்தை எழுப்பி, நம்ம மனசுல ஒரு இனம் புரியாத உணர்வை நிரப்புமே! மீண்டும் மீண்டும் அதை அனுபவிக்க மனசு துடிக்குமே! அது மாதிரிதான் காதலும். அதை அனுபவிக்க விரும்பாதவங்க யாரும் இருப்பாங்களா? கல்யாணத்துக்கு முன்னாடி காதலிச்சாலும் சரி, பின்னாடி காதலிச்சாலும் சரி, அந்தக் காதலின் சாரலிலே நனைஞ்சவங்களும், அப்படித்தான் இந்த ஏகாந்தத்தை மனசுல உணர்வாங்க. எப்போதும் உணரணும்ன்னு விரும்புவாங்க. ஆனால், அந்தக் காதலைக் கண்டுபிடிச்சுப் போய் அதை அடைவதில் தான் வாழ்க்கையின் சுவாரசியமே அடங்கி இருக்கு. உங்களுக்கு எல்லாம் உங்களோட காதல் கிடைச்ச மாதிரி, எனக்கும் என்னோட வரு கிடைச்சா. உண்மையான காதல் எப்பவுமே ஜெயிக்கும்!'' என்று வர்ஷனாவைப் பார்த்துக் கொண்டே முடிக்க, ஒருவரும் ஒன்றும் பேசாமல் அவன் சொன்னதை ஆமோதித்தனர்.

சில வாரங்கள் கழித்து அந்தக் கட்டுரை, 'நண்பர்களின் வாழ்க்கைப் பாக்களும், பக்கங்களும்' என்ற தலைப்பில் வெளி வந்தது.

காதலின் சாரலில் அனைவரும் வாழ்க்கை முழுவதும் இன்பமாக நனைந்தனர்!

*



# காதலின் சாரலிலே

திருமதி லாவண்யா

முதல் தரமான குடும்ப நாவல்